சரஸ்வதி சந்திரன்



11964

குஜராத்தி நாவல்

சரஸ்வதி சந்திரன்

சரஸ்வதி சந்திரன்

குஜராத்தி நாவல்

கோவர்த்தனராம் மாதவராம் திரிபாடி

சுருக்கம்:
உபேந்திர பாண்ட்யா

தமிழாக்கம்:
டி. கே. ஜயராமன்

சாகித்திய அக்காதெமிக்காக
கலைமகள் காரியாலயம்
சென்னை

Saraswatichandram (Gujarati novel) by Govardhanaram Madhavaram Tripathi. Abridged by Upendra Pandya. Translated into Tamil by T. K. Jayaraman. Published by the Kalaimagal office, Madras-4 on behalf of Sahitya Akademi, New Delhi 1967. Price Rs. 5-00

© சாகித்திய அக்காதெமி, புது தில்லி

முதல் பதிப்பு: 1967

சாகித்திய அக்காதெமிக்காக
வெளியிடுவோர்:
கலைமகள் காரியாலயம்
சென்னை-4

Also available at:
Sahitya Akademi, Rabindra Bhavan, New Delhi
Regional Office, Madras-34
Regional office, Calcutta-29

விலை ரூ. 5-00

அச்சிட்டோர்:
எம். எல். ஜே. பிரெஸ் பிரைவேட் லிட். சென்னை-4

அறிமுகம்

"சரஸ்வதி சந்திரன்" குஜராத்தி மொழியில் பெருமை மிக்கதோர் படைப்பாகும். கி. பி. 1885-ஆம் ஆண்டு வாக்கில் பாரத நாட்டிலும் குஜராத்தி மொழி வழங்கும் பிரதேசத்திலும் வழங்கிய அரசியல், பொருளாதார, கலாசாரச் சூழ்நிலையைத் தெள்ளெனப் படம் பிடித்துக் காட்டுகிறது. பாரத நாட்டின் சின்னஞ் சிறு சுதேச சம்ஸ்தானங்கள், அவைகளை அடிமைப்படுத்திப் பிரிட்டிஷ் அரசாங்கம் தனது அமலுக்குக் கொண்டு வந்த முறை, அதனால் மக்களிடை எழுந்த கசப்பு உணர்ச்சி, பாமரர்களிடையே இருந்த அஞ்ஞானம் ஆகியவற்றை இந்த நாவல் நமக்குத் தெரிவிக்கிறது. அறியாமை, வறுமை இரண்டிற்கும் நடுவிலே சிக்கி, அதிகாரவர்க்கத்தின் கைகளிலே வாடி அல்லலுற்ற நாட்கள் அவை. சிதைந்துபோன குடும்ப வாழ்வு, ஆங்கில அறிவால் புராதன எண்ணங்களும் கொள்கைகளும் மடிந்த முறை, புதிய சிந்தனைகளும் நோக்கங்களும் எழுந்தவிதம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது இந்த நூல். புதிய சமூகத்தில் பெண்கள் - கல்வியின் இன்றியமையாத தேவை, அவர்கள் சமூகத்தின் உண்மையான, முழுமையான முன்னேற்றத்திற்குச் செய்யப்போகும் தொண்டு ஆகியவற்றையும் விளக்குகிறது இந்த நூல். புதிதாக வளர்ந்த விஞ்ஞானமும் மேன்மைக் கலைகளும் பாரத நாட்டு இளைஞர்களிடையே மூட்டிய விழிப்பும், மேலைநாட்டு நாகரிகத்தால் மூண்ட புத்தம் புதிய உணர்வும் இந்நாட்டு முன்னேற்றத்திற்கு எவ்வாறு உற்சாகம் தந்தன என்பதையும் இந்த நூல் அறிவிக்கிறது. பாரத நாட்டு வளர்ச்சி வெறும் முயற்சி மட்டுமல்ல, அது மகத்தானதோர் யக்ஞம் என்பதையும், அந்த வேள்வித் தீயில் குமுதசுந்தரியும், சரஸ்வதி சந்திரனும், குஸுமசுந்தரியும் ஆகுதி வழங்கினார்கள் என்பதையும், நாட்டு முன்னேற்றத்துக்காக அறிஞர்களும் செல்வர்களும் ஒருங்கே வந்து வசிக்க, சரஸ்வதி சந்திரன் அமைத்த கல்யாண கிராமம் என்னும் திட்டத்தையும், துறவிகள் விளைவித்த தூய்மை திகழும் முன்னேற்றச் செயல்களையும் இந்த நாவல் விவரிக்கிறது. நாவலின் மையம் நாட்டின் முன்னேற்றந்தான். அதைச் சுற்றிச் சுற்றித்தான் சம்பவங்கள் நிகழ்கின்றன. பாத்திரங்கள் வளர்கின்றன. சரஸ்வதி சந்திரனின் வைராக்கிய உணர்விலும் கலங்கிய சித்தத்திலும் ஒரே மூலத்தைக் காண்கிறோம்: நூலாசிரியரின் உலக நோக்கும், மக்களின் நலமே அவரது கொள்கை என்பதும் வெளிப்படுகின்றன.

சரஸ்வதி சந்திரனின் பெருமை மகத்தான வாழ்வைக் காண வேண்டும் என்ற நோக்கத்தில் மட்டுமல்ல, அதைப் படைக்க வேண்டும் என்ற செயல்திறனிலும் அடங்கியிருக்கிறது. நாவலில்

வரும் பாத்திரங்களின் குணசித்திரங்கள் அப்பழுக்கற்ற முறையில் படைக்கப்பட்டுள்ளன என்று கூறவேண்டும் என்பது என் நோக்கமல்ல. நூலாசிரியர் அழகுள்ள பாத்திரங்களுடன் சக்திவாய்ந்த பாத்திரங்களையும் படைக்கும் வன்மை வாய்ந்தவர். ஆயினும் அழகு என்பதுமட்டும் அவரது நோக்கமல்ல; அதையே அவர் பிரதானமாகக் கருதவில்லை. ஆகவேதான் 'சரஸ்வதி சந்திர'னின் முதல் பாகத்தில் முன்னுரையாக எழுதுகிறார்: ''அழகு என்பது பெண்களுக்கு விருப்பமாக இருப்பது போல நாவலாசிரியர்களுக்கும் நோக்கமாக இருப்பது உண்மைதான். அழகை அடைய ஒரு படி அல்ல, பல படிகள் ஏற வேண்டும். அப்படிச் செய்ய வேண்டிய முயற்சிகளில் ஏதேனும் ஒன்றில் தவறிப்போனால் மேலே முயல்வது கடினம். அதுமட்டுமல்ல; தீங்கும் விளைய நேரிடும்.'' மாயை எனும் வெளிப்புற ஓட்டினைச் சிதைத்த பின்னரே வித்தின் கரு தழைத்து, குலைவிட்டுக் காயாகிக் கனிந்துவிடுகிறது. அதுவே ஆசிரியரின் எண்ணம், சங்கல்பம் எனலாம்.

இதோ, இது வெறும் கதைச் சுருக்கம் மட்டுமல்ல; நூலாசிரியரின் கருத்துக்களையும் இயன்றவரையில் கதையம்சத்துடன் தர முயன்றிருக்கிறேன். ஆகவே, சிற்சில இடங்களில் கதையின் ஓட்டம் பாதிக்கப்பட்டு ரசம் குன்றியதாகத் தோன்றலாம். மூலத்தில் இது நான்கு பாகங்கள் கொண்ட நாவல்; இரண்டாயிரம் பக்கங்கள் ஓடிய நாவல். ஆசிரியர் பெருத்த சுதந்தரத்துடன் மனக்குதிரையை ஓட்டிவிட்டிருக்கிறார். பிரம்மாண்டமான திரையொன்றில் தமது இச்சைப்படி வண்ணங்களை வாரி வடிவங்களை உருவாக்கியிருக்கிறார். மகத்தானதொரு வனபூமி இது. இதிலே பெருஞ்செடி கொடிகள்; மாபெரும் மலைச் சிகரங்கள், எண்ணக் கணக்கற்ற ஓடைகள், சுனைகள், சலசலத்து அவை எழுப்பும் இனிய ஓசை, அமைதியே உருவாய் விரிந்து தோன்றும் பசுமைப் புல்வெளி, இலைகளினூடே மறைந்து மறைந்து ஒளிவிடும் கதிரவனின் இளங்கதிர்கள்—'சரஸ்வதி சந்திரன்' எனும் படைப்பிலே இத்துணை அழகும் நளினமும்! இந்தப் படைப்பின் உள்ளர்த்தத்தையும் உணர்ந்து கொண்டால் அழகும் நளினமும் பன்முறை பெருகிவிடுகின்றன.

இந்தச் சுருக்கத்தில் மூல ஆசிரியரின் கதை கூறும் முறையையும் சொல் வடிவங்களையும் முயன்ற மட்டிலும் அப்படியே தந்திருக்கிறேன். சிற்சில இடங்களில் சம்பவங்களின் கிரமத்தை மீறி வேறுபட்டுத் தந்திருக்கிறேன். சுருக்கத்தில் சில வேளைகளில் இது இன்றியமையாததாகத் தோன்றுகிறது. ஆனாலும் இயன்ற அளவு என்னுடைய சுதந்தரத்தைக் கட்டுப்படுத்தியிருக்கிறேன்.

இறுதியில், இந்த என் முயற்சியில் ஆலோசனையும் உற்சாகமும் தந்து ஊக்குவித்த என் இலக்கிய நண்பர்களுக்கும் சாகித்திய அக்காதமியாருக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். எனது ஆசிரியர் ஸ்ரீ உமாசங்கர் ஜோஷி 'சரஸ்வதி சந்திரன்' நாவலை ஆழ்ந்து படித்து அற்புதமான முன்னுரை ஒன்று வழங்கியிருக்கிறார். அவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜ்கோட்
14-3-'60

உபேந்திர பண்டியா

முன்னுரை

'சரஸ்வதி சந்திரன்' குஜராத்தி மொழியில் ஓர் ஒப்பற்ற படைப்பாகும். அதனது சுருக்கமே இது. இதற்கு முன்னால் இதே நண்பர் எளிதான சுருக்கமொன்றையும் வெளியிட்டிருக்கிறார்.[1]

குஜராத்தியின் நவீன இலக்கிய பரம்பரையில் கற்றறிந்த வாசகர்களிடையே பெரும் விழிப்பு மூட்டிய நூல் 'சரஸ்வதி சந்திரனே' யாகும். நவீன காலத்தில் குஜராத்தியரிடையே கலாசார உணர் வெழுப்பிப் பெருமையுணரச் செய்த மகாபுருஷர்களில், காந்தியடிகளுக்கு முன்னால் பெரும் பங்காற்றியவர் நூலாசிரியர் ஸ்ரீ கோவர்த்தனராம் திரிபாடியே.

'சரஸ்வதி சந்திர'னின் முதல் பாகம் கி. பி 1887-இல் வெளிவந்தது. வெளிவந்த மாத்திரத்தில் குஜராத்தி வாசகர்களின் மனத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. உள்ளத்தைப் பிழிய வைக்கும் சோகம் கரைபுரண் டோடிக் கதை ஓட்டத்தைத் தடுத்து வாசகர்களிடையே விம்மலை வெடித் தெழச் செய்து அவர்களுடைய உள்ளங்களையெல்லாம் தொட்டு விட்டது. ஆசிரியர் கதையை முழுதும் எழுதி முடிக்கப் பதினைன்கு ஆண்டுகள் எடுத்துக்கொண்டார், வாசகர்களும் சளைக்கவில்லை: விடாமல் படித்து வந்தார்கள். தத்தம் இல்லங்களில் தம் குழந்தைகளுக்குக் கதாநாயகி குமுதசுந்தரியின் பெயரையும், அவள் சகோதரி குஸுமசுந்தரியின் பெயரையும் இட்டழைத்தார்கள். பெயர்கள் அவ்வளவு தூரம் பிரபல மாயின. தமது படைப்பால் கோவர்த்தனராம் குஜராத்தைக் கொள்ளை கொண்டார்; வாசக சமூகம் அவருக்கு அடிமையானது. ஒவ்வொரு பாகமும் வெளிவந்த மாத்திரத்தில் அவரது பேரும் புகழும் படிப்படி யாக உயர்ந்து உச்சத்தை அடைந்தன.

பாரத நாட்டு மறுமலர்ச்சி யுகத்தின் பிரதிபலிப்புத்தான் கோவர்த்தனராம். புதிதாக நிறுவப்பட்ட பம்பாய்ப் பல்கலைக் கழகத் தின் படைப்பு அவர்; மேலைநாட்டு நாகரிகம் அவரது உள்ளத்திலே படிந்து புதிய எண்ணங்களை உருவாக்கி யிருந்தது. மேனாட்டு உயர் பண்புகளுடன், விஞ்ஞான உணர்வும் அவர் அடைந்திருந்தார். அந்த நாடுகளிலே பெண் கல்வியும் பெண்டிர்க்களிக்கப்பட்ட மதிப்பும் அவரைக் கவர்ந்திருந்தன. பெருமைமிக்க பழம் பெரும் பாரதப் பண் பாட்டுடன் புத்தம் புதிய உயிரளிக்கும் மேனாட்டு நாகரிகமும் கலந்து, புதிய சமுதாயத்தை உருவாக்கப் பல்கலைக் கழகத்தினின்று வெளிவந்த

---

1. என். எம். திரிபாடி அண்ட் கம்பெனியாரால் 1951-இல் வெளியிடப்பட்டது.

பட்டதாரிகளில் தலை சிறந்தவர் கோவர்த்தனராம். பத்தொன்பதாம் நூற்றுண்டிலே ஐரோப்பிய நாடுகளிலே தோன்றிய பெருநோக்கும் (லிபரலிஸம்) மனித மாண்பும் பாரதநாட்டு இளைஞர்களைக் கவர்ந்தன. பழம் பாண்பாட்டுடன் அந்தச் சிந்தனைகளும் கலந்து தலைமுறை தலைமுறையாகப் பெருகிவரும் ஆன்ம தாகத்தைத் தணிக்க முயன்று வெற்றி கண்டார் கோவர்த்தனராம். பத்தொன்பதாம் நூற்றுண்டுச் சிந்தனைகள், வாழையடி வாழையாய் வந்த உயர் நோக்கங்கள் யாவற்றையும் இலக்கிய உருவிலே தமது தலைமுறைக்குப் படைத்துத் தந்தார். குஜராத்தி மொழியில் கி. பி. 1887, 1893, 1898, 1901-ஆம் ஆண்டுகளிலே வெளிவந்த 'சரஸ்வதி சந்திரன்' நாவலின் நான்கு பாகங்கள் மறு மலர்ச்சியுகத்தில் ஒளிரும் ஒப்பற்ற கிரந்த மணிகள்.

'சரஸ்வதி சந்திரன்' நாவலின் முதல் பாகம் வெளிவந்தபோது நூலாசிரியரின் வயது முப்பத்திரண்டு. இளைஞராக இருந்தாலும் அறிவிலும் ஆன்ம வளர்ச்சியிலும் மிகுந்த முதிர்ச்சியுற்றவராக இருந்தார்; எழுத்தாள்வதே தமது மேலான எண்ணமாகக் கொண்டிருந்தார். இருபதாம் வயதில் கொண்ட சங்கல்பம் இதுவே: 'வக்கீல் தொழிலில் தனித்தியங்கிப் பொருள் குவித்து நாற்பதாம் வயதில் தொழிலினின்று விலகவேண்டும்; எஞ்சியிருக்கும் வாழ்வை - நேரத்தை - நாட்டின் நலத்திற்காகக் கழித்துவிடவேண்டும்.' தமது நாற்பத்துமூன்றும் வயதில் தமது 'ஸ்கெட்ச் புக்'கில் இவ்வாறு குறிப்பிடுகிறுர்: ''தவிர்க்க முடியாத காரணங்களால் என் சங்கல்பத்தை நிறைவேற்ற முடியவில்லை. எனது தொழிலின் உச்சத்தை இன்று அடைந்துவிட்டேன். குஜராத்தி வக்கீல்கள் ஒன்று சேர்ந்து சம்பாதிக்கும் பொருளைக் காட்டிலும் நான் இன்று சேர்த்திருக்கிற செல்வம் அதிகமானதே.'' தொழிலின் உச்சத்தை அடைந்தவுடன் ஓய்வு பெற்றுக்கொண்டார். சங்கல்பத்திற்கிணங்க ஓய்வு பெருமல் இருந்திருந்தால் நாம் 'சரஸ்வதி சந்திரன்' நாவலின் நான்காவது பாகத்தைப் பெற்றிருக்க முடியாது. சுருங்கச் சொன்னுல், அற்புதமான சிந்தனையாளர், தேசபக்தர், ஆன்ம வளர்ச்சிக்காக ஆயுளைக் கழித்த ஆசாரியர் ஒருவரின் படைப்புத்தான் 'சரஸ்வதி சந்திரன்'. தமது படைப்பை நெடுங்கதை என்ற வடிவத்தில் இட்டு நமக்களிக்க வேண்டும் என்ற எண்ணம் அவரிடத்தில் எழுந்து விட்டது. முதல் பாகத்தில் ஆங்கிலத்தில் தாம் எழுதியுள்ள முகவுரையில் இப்படிச் சொல்லுகிறுர்.

''உலகம் என்ற புத்தகத்தில் படித்தறிந்தவற்றை நான் எல்லோருக்கும் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கட்டுரை வடிவத்தை முதலில் தேர்ந்தெடுக்க முடிவு செய்தேன். ஆனுல் குஜராத்தி வாசகர்களை ஈர்த்திழுக்கக் கட்டுரை வடிவத்தைவிடக் கதையுருவமே சிறந்தது என்று தோன்றிவிடவே, நிஜ வாழ்விலிருந்து பல உதாரணங்கள் எடுத்துக் கொண்டேன். பல பாத்திரங்களைப் படைத்து அவற்றின்மூலம் நான் சொல்ல வேண்டியதைச் சொல்ல முயன்றிருக்கிறேன்.''

நடப்பு வாழ்விலிருந்து கதாபாத்திரங்களைத் தேர்ந்தெடுத்தார் என்பதால் அவரது படைப்புத்திறன் குறைவானது என்று கொள்ளக் கூடாது. அவர் ஒரு கவியுமாவார். நான்கு ஆராய்ச்சி நூல்களும்

எழுதினார். ஆங்கிலத்தில் நாற்பதுக்குமேல் கட்டுரைகள் எழுதினார். எல்லாவற்றிலும் அவரது திறனைக் காணலாம். அவருடைய படைப்புகளில் எல்லாம் பெருங் கீர்த்தி தருவது 'சரஸ்வதி சந்திரனே.' சிருஷ்டித் திறனும், அழகுக்கு உருவம் தரும் ஆற்றலும் கோவர்த்தனராமின் முக்கியமான சிறப்புகள்.

குமுதசுந்தரியுடன் கடிதப் போக்குவரத்து வைத்திருக்கிறான் என்று அவன் தந்தையிடம் கோள் சொல்லுகிறாள் சித்தி; அதற்காகவே வீடுதுறந்து வெளி ஏகுகிறான் சரஸ்வதி சந்திரன். நவீன சந்திரன் என்ற பெயர் தரித்து மூன்று மாதங்கள் அஞ்ஞாதவாசம் புரிந்து ஸ்வர்ணபுரி வருகிறான்; கோயிலில் யதேச்சையாகப் புத்திதனரைச் சந்தித்து அவருடைய விருந்தாளியாகிறான். அதே புத்திதனரின் மருமகளாகிறாள் குமுதசுந்தரி. இரண்டு மாதங்கள் கழித்து மீண்டும் உற்றார் உறவினரிடம் வருகிறான் சரஸ்வதி சந்திரன். அதுவரைக்கும் நடக்கும் கதை, மற்றப் பாத்திரங்களின் கிளைக்கதைகள் எல்லாம் இந்த நாவலின் நான்கு பாகங்களிலும் பின்னிக் கிடக்கின்றன. அதனால் கதை ஓட்டமும் தடைப்படுகிறது.

இத்தகைய பெருங் காவியத்தில் அதனது அமைப்பைப்பற்றிய குழப்பம் நேரிடலாம்; கதையின் மையந்தான் என்ன என்ற ஐயமும் எழலாம். இந்தப் படைப்பின் ஒருமைப்பாட்டை நாம் உணர்ந்து கொண்டு விட்டால் நம் குழப்பமும் ஐயமும் நீங்கி விடுகின்றன. எல்லாக் கிளைக் கதைகளையும் சம்பவங்களையும் அவர் பின்னி அமைத்திருக்கும் விதத்தில், சொல்லாமல் சொல்லியிருக்கும் பல அம்சங்கள் கதைக்கு எவ்வளவு தேவையாக இருக்கின்றன என்பதையும் உணர்ந்து விடுகிறோம்.

முதல் பாகத்தில் இரண்டு கதைகள் பின்னிக்கிடக்கின்றன: முதலாவது, சரஸ்வதி சந்திரனின் துறவில் பரிணமித்துவிட்ட பம்பாயின் வணிகர் குடும்பம் ஒன்றின் வரலாறு; இரண்டாவது ஸ்வர்ணபுரியின் அரசியல். குடும்ப வாழ்வின் அம்சத்தையும் அரசியலின் அம்சத்தையும் இரண்டாவது மூன்றாவது பாகங்களில் விவரிக்கிறார். இரண்டாவது பாகத்தில், முக்கியமாக, சேர்ந்து வாழும் குடும்பம் ஒன்றைப்பற்றி, அதன் குணநலன்களைத் தந்து வர்ணிக்கிறார்; மூன்றாவது பாகத்தில், அரசியல் ஊழல்கள் மலிந்த உலகவாழ்வில் மனிதன் உய்ய வழிமுறைகளை அலசுகிறார். நான்காம் பாகத்தில் லட்சிய வாழ்வின் சமூக நிலையை விவரிக்கிறார். இதே பாகத்தில் சுந்தரகிரியில் துறவிகளின் வாழ்வு முறை, சமூகவியல், குடும்ப உறவு முறைகள் ஆகியவைகளைப்பற்றியும் தம் கருத்துக்களைத் தருகிறார். இவ்வுலகத்தில் வாழும் மனிதரின் அரைகுறை ஆன்மிக முன்னேற்றம், சுந்தரகிரியில் துறவிகளின் தூய்மையான முன்னேற்றம், சித்தலோகத்தில் உள்ள வாழ்வைப்பற்றிய கனவு நோக்கு ஆகியவற்றை நமக்கு அளித்து, சரஸ்வதி சந்திரனின் மனவளர்ச்சியையும் அவனுடைய லட்சியங்களையும் நமக்கு விளக்குகிறார்.

நாவலின் பல்வேறு நிகழ்ச்சிகளை, கிளைக் கதைகளை ஒருங்கே சேர்த்து அமைத்திருக்கிற ஆசிரியரது திறனை பல்வேறு 'மைய'ங்களில்

காண்கிறோம். ஒவ்வொரு மையத்திற்கும் தனித்தனியான பரிதி. ஒவ்வொரு பரிதியும் அமைந்திருக்கும் தளமும் விதம் விதமானது. ஆயினும் எல்லா வட்டங்களுக்கும் தம்மில் ஒரு தொடர்பு இருப்பதை மறுக்க முடியாது. புத்திதனரும் லக்ஷ்மீநந்தனரும் வெவ்வேறு பாத்திரங்கள்; இருந்தாலும், நவீன சந்திரன் என்ற பாத்திரத்தால் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். அது போலவே ரத்னநகரி என்ற எல்லைக்கோடு இரு தனி வட்டங்களைப் பிணைக்கிறது. ஒவ்வொரு வட்டத்திலும் சுயேச்சையான சம்பவங்கள் நிகழ்கின்றன. நான்காவது பாகத்தில், சந்நியாசிகளின் உலகம் ஒரு புறம்; அதில் மனிதர்கள் தமது சுய முயற்சியால் உன்னதம் அடைய முயல்கிறார்கள். இன்னொரு புறம், சித்த யோகம் என்ற கனவுக் காட்சி; அங்கே மாண்பு எய்திய மனிதர் திருக்கூட்டம் தேவர் வடிவத்தில் வாழ்ந்து வருகிறது. இவ்விரண்டு பரிதிகளையும் பிணைக்கும் எல்லை ஸுரகிராமம். இவை இரண்டும் முத்துப் பேழையின் இரு புறங்கள். அந்தப் பேழையின் மையத்தில் தான் உருவாகிறது சரஸ்வதி சந்திரன் - குமுதசுந்தரி என்ற முத்து.

இரண்டு அற்புதமான நிகழ்ச்சி நிலைக்களன்களை உருவாக்கியிருக்கிறார் ஆசிரியர். ஒன்று, வீட்டைத் துறந்து வெளியே செல்லுவது; இரண்டாவது, கொள்ளைக்காரர்களிடையே அகப்பட்டுக் கொள்வது, முதலாவது, கதாநாயகனின் ஆன்மவாழ்வைக் குறிப்பிடுகிறது. இரண்டாவது, வாழ்வில் வரப்போகும் பெரும் மாற்றங்களுக்கான முன்னோட்டம். இரண்டையும் தொடர்ந்து ஆசிரியர் கதாநாயக நாயகிகளின் சந்திப்பை ஏற்படுத்துகிறார். யதேச்சையான சந்திப்பாக இருந்தாலும், அநாயாசமாக அதை விளைவித்துக் கதையின் ஓட்டத்தைத் துரிதப்படுத்துகிறார்.

'சரஸ்வதி சந்திரன்' இலக்கியகர்த்தா ஒருவரின் படைப்புமட்டுமல்ல, சிந்தனையாளர் ஒருவரின் படைப்புமாகும். அவருடைய பாத்திரங்கள் இலக்கிய பரம்பரையில் என்றும் அழியாத இடம் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. இராமாயணம், மகாபாரதம், புத்த ஜாதகக் கதைகள், பவபூதி-காளிதாஸன் ஆகியோரின் நாடகங்கள், தாந்தே, கெத்தே போன்ற மேனாட்டு இலக்கியகர்த்தாக்களின் படைப்புகள் ஆகியவற்றில் நாம் காணும் கற்பனைகளும் கோவர்த்தனராமின் கற்பனையும் இலக்கியத்தில் உயர்தரமானவை.

'சரஸ்வதி சந்திரன்' குமானின் கோள் பேச்சினால் வீடு துறந்து செல்லுகையில் எழும் துக்கத்தினால் லக்ஷ்மீநந்தனரிடம் விளையும் புத்திர சோகம் இராமாயணத்தில் தசரதனின் பாத்திரத்தை நினைவுறுத்துகிறது. நுணுக்கமான பகுதிகளை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் குடும்ப வாழ்வு உணர்ச்சிகளை இராமாயணம் விளக்குவது போலவே 'சரஸ்வதி சந்திர'னும் நமக்குத் தெரிவிக்கிறது. சேர்ந்து வாழும் குடும்பவாழ்வைப் பின்னணியாக வைத்துக்கொண்டு எழுதப்பட்ட 'சரஸ்வதி சந்திர'னைப்போன்ற உயர்ந்த நூல் குஜராத்தி மொழியில் இதுவரையில் வந்ததில்லை; இனியும் வெளிவருமா என்பதும் பெரியதோர் கேள்வியே.

குமுதசுந்தரி பவபூதியின் சீதையைப் போன்று துயரமே உருவாய், சோக வடிவமாய்த் தோன்றுகிறாள்— ''கருணஸ்யமூர்த்தி: ஶரீரிணி''

என்ற பவபூதியின் வர்ணனை முற்றும் பொருந்துகிறது. கடிந்து பேசும் போது சந்திராவளி வாஸந்தியையும், ஒருமைப்பாட்டை நிலைநிறுத்த அவள் முயலும்போது அருந்ததியையும் நமக்கு நினைவுறுத்துகிறாள். சரஸ்வதிசந்திரனை உணர்ந்துகொண்டவுடன், 'என்னுடைய உள்ளத் தின் துயரம் எல்லாம் மறைந்துவிட்டது' என்கிறாள். 'சரஸ்வதி சந்திர'னின் முக்கியமான உணர்ச்சி கருணை உணர்ச்சி. கருணரசத் தின் சித்திரிப்பில் கோவர்த்தனராம் பவபூதிக்கு நிகராக விளங்குகிறார்.

அதே சமயம் காளிதாஸனது திறனுக்கும் அவர் குறைந்தவ ரல்லர். சுந்தரகிரியில் நாம் காணும் விஷ்ணுதாஸ ஸ்வாமியின் மடம் காளிதாஸனின் மரீசாசிரமத்தை நினைவூட்டுகிறது. இவ்விரண்டு ஆசிரமங்களிலும், பிரிந்த காதலர்கள் கூடுகிறார்கள்; மகாபாரதத்தின் சாயையைக் கோவர்த்தனராமின் படைப்பின் ஒவ்வொரு பக்கத்திலும் காண்கிறோம். கௌதமபுத்தரின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகள் நாவலில் மீண்டும் நிகழ்கின்றன. வெறும் உணர்ச்சி வயப்பட்டுச் சினத்தில் வீடு துறக்கும் முதிர்ச்சியடையாத இளைஞனல்லன் சரஸ்வதி சந்திரன். நன்கு சிந்தித்துப் பொறுப்புகள் யாவும் உணர்ந்தபின்னரே கதாநாயகன் துறவறம் பூணுகிறான். இங்கே நாம் கௌதமர் வீட்டைத் துறந்ததை நினைவு கொள்கிறோம்.

மேனாட்டு இலக்கியச் சாயையையும் நாவலில் காண்கிறோம். வீட் டைத் துறப்பதற்குமுன் சரஸ்வதி சந்திரன் எண்ணக் கனலில், அனலையொத்த சிந்தனையில் உள்ளம் புழுங்குகிறான் (இதுவே இன் ஃபெர்னோ). புத்திதனரின் வீட்டிலே ஆத்மசுத்தி பெறுகிறான் (இதுவே புர்காடோரியா). பின்னர்ச் சிரஞ்சீவிச்ருங்கத்தில் கனவுலகில் சித்தர் அநுபவம் பெற்று, சுவர்க்கத்தில் உலாவுகிறான் (இதுவே பாராடிஸோ). சுவர்க்கத்தில் தாந்தேக்குப் பியட்ரிஸ் துணை இருப்பதுபோல் சரஸ்வதி சந்திரனுடன் குமுதசுந்தரி யாத்திரையில் கலந்துகொள்கிறாள். கெத்தேயின் 'ஃபாவுஸ்'டில் தரிசு நிலம் கனிவகைகளுடன் பூத்துக் குலுங்கிப் புதுவளம் பெருக்குவதுபோல, 'சரஸ்வதி சந்திர'னில் கதா நாயகன், உலகம் உய்ய வழி காட்டுகிறான். இதுவே சரஸ்வதி சந்திரனின் கல்யாணகிராமம் எனும் திட்டம்.

நீதி நெறி முறைகளை மிகவும் வலியுறுத்தியிருக்கும் கோவர்த்தன ராம் டால்ஸ்டாயின் நூல்களையும் படித்துப் பயன் பெற்றிருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. டால்ஸ்டாயின் பாத்திரம் லேவின் இரத்தமில்லாத புரட்சிபற்றிப் பேசுவது போல, கோவர்த்தனராமின் பாத்திரமான சரஸ்வதி சந்திரனும் கல்யாணகிராம திட்டத்தைப்பற்றி உற்சாகத்துடன் இருக்கிறான். ஆகவே, பத்தொன்பதாம் நூற்றாண்டின் எல்லா இலக்கிய கர்த்தாக்களும் புதிய யுகத்தைப்பற்றி ஏறக்குறைய ஒரே விதமான எண்ணங்கள் கொண்டிருந்தார்கள் என்றே தோன்று கிறது.

கதாநாயகன் பூணுகிற துறவறத்தைப்பற்றிச் சிந்திக்கையில் ஆசிரியர் இளமையில் கொண்டிருந்த எண்ணங்களும் நம் நினைவுக்கு வருகின்றன. தமது இருபத்திரண்டாம் வயதில் துறவறத்தைப்பற்றிய

தம் கட்டுரையில், உலகத்தின் நன்மைக்காக அநாஸக்தி யோகத்தைப் பற்றி விவரித்திருக்கிறார்: "உலகத்து உடைமைகளைத் துறந்து சமூக நலன் எனும் ஒப்பற்ற குறிக்கோளுக்காக உயிர் ஈவதே துறவறமாகும்" என்கிறார். 'சரஸ்வதி சந்திர'னின் மீது மகாபாரதத்தின் சாயை இருப்பதைப்பற்றி முன்னரே கூறியிருக்கிறோம். அந்த நூலின் கேந்திரமான கீதையின் போதனையையே நாம் இங்கே காண்கிறோம். இயலாமையைக் குறிப்பதல்ல கீதை; செயல் திறனை, ஆக்க சக்தியைத்தான் வலுயுறுத்துகிறது. சும்மா இருந்து வாளாவிருக்கக் கண்ணன் வழி காட்டவில்லை; "இதோ உனது கர்மம். இதைச் செய்ய நீ தயங்காதே" என்னும் போர் முழக்கமே ஆன்ம முழக்கம். கோவர்த்தனராம் தமது கதாநாயகனுக்குக் காவியுடையும் ஜபமாலையும் தந்து சுந்தரகிரியிலேயே இருத்தி விடவில்லை; மீண்டும் வாழ்வுப் போரில், உலக உறவுகளின் ஆழத்தில் ஆழ்த்திவிடுகிறார். 'சுவர்க்கம் என்பது கண்ணுக்கெட்டாது இருப்பதல்ல. இதோ நம் எதிரில், நம் உணர்ச்சிகளின் சிக்கலில், உறவுகளின் பிணைப்பில் இணைந்திருப்பதுதான் சுவர்க்கம்; மண்ணின்மீதுதான் விண்' என்பது அவர் தந்த போதனை;

வீட்டை விட்டுத் துறந்து செல்லக் காரணம் காதல் உணர்ச்சி என்றால், அதே காதல் உணர்ச்சிதான் மீண்டும் கதாநாயகனை உலகுக்கு அழைத்து வருகிறது. பிரேமை மூலமாகவே சந்நியாசமும் சித்தியடைகிறது. பிரேமையும் உண்மைத் துறவும் இரு துருவங்களல்ல; இரண்டும் இணைந்த கேந்திரமே என்கிறார் கதாசிரியர்.

'சரஸ்வதி சந்திர'னின் கலையழகுபற்றி அண்ணல் காந்தியடிகள் கூறியிருப்பதை அவருடைய காரியதரிசி மகாதேவ தேசாயி தமது டயரியில் இவ்வண்ணம் (25-3-1932) குறித்திருக்கிறார்:

"முதல் பாகத்தில் ஆசிரியர் தமது திறனனைத்தையும் கையாண்டிருக்கிறார். நாவலின் சுவை முழுதும் இதில் வெளிப்படுகிறது; பாத்திரங்களை மிக அழகாக வடித்திருக்கிறார். இரண்டாம் பாகத்தில் ஹிந்து சமூக வாழ்வைத் திறம்படச் சித்திரித்திருக்கிறார். மூன்றும் பாகத்தில் இந்தத் திறன் எல்லாம் எங்கேயோ ஓடி ஒளிந்துவிட்டிருக்கிறது. நான்காம் பாகத்தில், தாம் வாழ்வில் அடைந்துவிட்ட பயனையெல்லாம் புத்தக மூலம் தந்து விடவேண்டும் என்று நிச்சயித்துவிட்டாற்போன்று வரைந்து தள்ளியிருக்கிறார்."

உண்மை, முற்றும் உண்மை. நாவலின் மூன்றும் பாகத்தில் ஆசிரியரின் திறன் மங்கியிருப்பதை உணர்கிறோம். கோவர்த்தனராம் எதற்காக இவ்வளவு தூரம் சுதேச சம்ஸ்தானங்களைப்பற்றி வலியுறுத்தியிருக்கிறார் என்ற கேள்வியும் நம்மில் எழத்தான் செய்கிறது. அவரது காலத்திய குஜராத்தில் எண்ணற்ற சுதேசி ராஜ்யங்கள் இருந்தமையால்தான் ஆசிரியர் இவ்வாறு எழுதியுள்ளார் என்று சமாதானம் கொள்ளுகிறோம்.

நான்காம் பாகத்தில் அவரது திறன் மீண்டும் புத்துயிர் பெறுகிறது. அற்புதமாகத் தம் பற்பல சிந்தனைகளை நிரப்பி வளம் தந்திருக்-

கிருர். முதல் பாகத்தைக் காட்டிலும் அழகுற விளங்குகிறது நான்காம் பாகம்.[1]

சிரஞ்சீவி ச்ருங்கத்தில் கதாநாயக, நாயகியர் காணும் கனவு நிகழ்ச்சிகளாலும் அவைபற்றிய சிந்தனைகளாலும் ஆசிரியர் கதை ஓட்டத்தைத் தடுத்திருக்கிருர் என்று பலர் எண்ணுகிருர்கள்; இன்னும் பலர் அவ்வாறு செய்ததில் தவறேதுமில்லை என்று கருதுகிருர்கள். எல்லா நிகழ்ச்சிகளையும் ஒருங்கே இணைத்து உருவாக்கியிருக்கும் ஆசிரியரின் ஆற்றலில் கனவு நிகழ்ச்சிகளும் அழகாக அமைந்துள்ளன; இன்றியமையாதனவாக இயங்குகின்றன. இந்தக் கனவுச் சிந்தனைகளின் மூலமாகத்தான் கதாநாயக நாயகியர் இருவரும் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளுகிருர்கள்; மனமொருமித்து விடுகிருர்கள். இங்கேதான் நாவலாசிரியர் விதிவலிமையைப்பற்றித் தாம் அறிந்த உண்மைகளை எடுத்துரைக்கிருர். 'விதவையாகிவிட்டேன்' என்பதைக் குமுதசுந்தரி அறியாமலிருந்தால் என்ன; ஆசிரியர் அவளுக்கு எல்லா மங்கலகரமும் கனவில் வழங்குகிருர்; வைதிகர்களின் பிரதிநிதியான நாகமே கதாநாயக நாயகியரை ஒருங்கே பிணைக்க வைக்கிறது. ஆசைகளின் நிறைவில், முடிவில் தம்பதியரின் அத்வைத பாவத்தைச் சித்திரிப்பதன்மூலம் நமது பாரத கலாசாரத்தை அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிருர்.

ஆசிரியர் தம் சிந்தனைகளை வாசகர்களின்மீது ஒருபோதும் சுமத்த முயலுவதில்லை. எதிரான எண்ணங்களையும் வழங்கி நடுநிலையிலே இருந்து வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டுகிருர். உதாரணமாக, மல்ல மகாபவனில் நடைபெறும் விவாதத்தில் வீரராவ் என்ற பாத்திரத்தின் மூலமாகச் சுதேசி சம்ஸ்தானங்களைப்பற்றிய விநோதமான கருத்துக்களைத் தருகிருர். பொருளுக்கு எதிர்ப் பொருள் தந்து உண்மையை நிலைநாட்டும் ஆற்றலில், பொருள் ஒவ்வொன்றையும் அதனதன் 'பெர்ஸ்பெக்டிவ்'வில் அமைத்துத் தருவதில் கோவர்த்தனராம் அற்புதமான ஆசிரியராகத் திகழ்கிருர். நடுநடுவே அரசியல்பற்றி விவாதிக்கையில் அவரது கலைத்திறன் மங்கிவிடுகிறது. மூன்ரும் பாகத்தில் லக்ஷிய, அலக்ஷிய சித்தாந்தத்தைப்பற்றி இருநூற்றுக்கு மேற்பட்ட கவிதைகளின்மூலம் வியாக்கியானம் செய்வதிலும் அவரது ஆற்றல் மறைந்துவிடுகிறது. இவ்விரண்டையும் சற்றே ஒதுக்கிவிட்டு நோக்கிஞல், 'சரஸ்வதி சந்திரன்' மகத்தானதோர் படைப்பு, அற்புதமானதோர் கலாசிருஷ்டி என்றே கூறலாம்.

தாமே ஒரு தரம் கூறியதுபோல் கட்டுரை ஒன்று எழுதவேண்டுமென்று அவர் முனைந்தது உண்மை யென்ருலும் நாவல் வடிவமே அவருக்கு இயற்கையாக வந்தடைந்தது என்பதன்மூலம் சுயமான கதாசிரியர் அவர் என்பது தெளிவாகிறது. அவர் படைத்துள்ள பாத்திரங்கள்-புத்திதனர், வித்யாசதுரர், குணசுந்தரி-ஆகியோர் பெயருக்கேற்றவாறு குணக் குன்றுகள் என நாம் கருதக்கூடாது. அவர்க

---

1. இந்தச் சுருக்கத்தில் நான்காம் பாகத்திற்கு என்று அதிகமான பக்கங்கள் ஒதுக்கிவிடப்பட் டிருக்கின்றன.

ளிடையேயும் பல தவறுகள், குறைகள் இருக்கின்றன; அவர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்டவர்களல்லர் என்பதையும் காட்டியுள்ளார். தூரிகையால் குறைந்த அளவு வண்ணங்களை உபயோகித்து நிறைந்த பாத்திரங்களை வடித்திருக்கிறார். நவீன சந்திரன் ரூபாய் நாணய மொன்றை விட்டெறிய, அது மூர்க்கதத்தனிடம் எழுப்பிய மாற்றந் தான் என்னே! முக்கிய பாத்திரங்கள் யாவும் திரிபரிமாணப் படைப்பு கள்; முற்றும் இயற்கையோடு இயைந்தனவேயாகும். புத்திதனர் முன் பின் தெரியாத அந்நியனுக்குப் பெருமதிப்பு அளிக்கிறார்! வித்யாசதுரர் மகளுக்கு அவசர அவசரமாக மணமுடிக்கிறார். குணசுந்தரி கணநேரத் தில் குமுதசுந்தரியை இனிமேல் கண்ணாலும் பார்க்கமாட்டேன் என்று முடிவு செய்கிறாள்.

பாத்திரங்களைச் சித்திரிப்பது போலவே வர்ணனையிலும் கோவர்த் தனராம் சமர்த்தர் (உதாரணமாக, பூபசிங்கின் ராஜதர்பார், புக்ககத் தில் சரஸ்வதி சந்திரனைக் குமுதசுந்தரி சந்திக்கும் இரவு, குணசுந்தரி யின் பிரசவம், சரஸ்வதி சந்திரன் கொள்ளைக்காரர்களிடம் சிக்கியது ஆகிய காட்சிகள்). வாசகர்களின் கண்களுக்கு எதிரில் பலதரப்பட்ட காட்சிகளைப் பிரத்தியட்சமாக்குகிறார். உபமான உபமேயங்கள்மூலம் ஆசிரியர் தமது திறனைத் தெளிவாக்குகிறார். அவர் கவிஞருமாவார். ஆகவேதான் நூல் முழுதும் கவிதைகளே நிறைந்திருக்கக் காண்கிறோம். முதல் பாகம் வெளிவந்தவுடன் அது குஜராத்தி வாசகரனைவரின் உள்ளங் களையும் கொள்ளை கொண்டுவிட்டதன் பெரும் பங்கு இடையிடையே புத்தகத்தில் வருகின்ற கவிதைகளையே சாரும்.

நகைச்சுவை குறைவுதான்; ஆனாலும் இல்லாமல் இல்லை. மூர்க்க தத்தன், அர்த்ததாஸன், மானசதுரர் ஆகியோரின்மூலம் அது வெளிப் படுகிறது.

ஆசிரியரின் ரசிக உணர்வு, தர்மசிந்தனை, துறவு மனப்பான்மை ஆகிய யாவும் தனித்தியங்குபவை அல்ல. பலப்பல குஜராத்தி இலக்கி யங்கள், நாடோடி இலக்கியங்கள், சம்ஸ்க்ருத காவியங்கள், ஆங்கில நூல்கள் ஆகிய அனைத்தின் சாரத்தையும் நுகர்ந்த உள்ளம் அவரது இலக்கிய உள்ளம்; அவற்றின் சாயைகளை எல்லாம் நாம் எங்கும் காண்கிறோம். கோல்ட்ஸ்மித்தின் 'தி ஹர்மிட்' என்ற காவியம் கோவர்த்தனராமிற்கு மிகுந்த உதவி தந்திருக்கிறது. உதாரணம்: வஸந்த, ஸௌமனஸ்ய குகைகளின் சித்திரிப்பு.

உரைநடை கூடியமட்டும் உரையாடல் உருவத்தில் அமைந்திருக் கிறது. ஆனால் முக்கியமாக, பாணர், ரஸ்கின் ஆகியோரைப் போன்று உரை வடிவத்தில்(நெரேஷன்)தான் அமைந்திருக்கிறது. 'சரஸ்வதி சந்திர'னின் முதல் பாகம் வெளிவந்தபோது குஜராத்தி மொழி உரைநடையின் வயது ஏறக்குறைய ஆசிரியரின் வயதேயாகும். இன்றும் படிக்கப் படிக்க வாசகருக்கு இன்ப மூட்டும் 'சரஸ்வதி சந்திர' னின் உரைநடையை இலக்கிய உலகின் பக்குவமேறாத நாட்களில் படைத்த பெருமை ஆசிரியரையே சாரும். புதிய புதிய சிந்தனைகள், கடினமான எண்ணங்கள், சூட்சுமமான தத்துவங்கள் ஆகியவற்றை எல்லாம் கதாசிரியர் புத்தம் புதிய நடையில் வடித்துத் தந்து, இன்னும்

இளமை குன்றாத தமது நவீனத்தை ஓர் அமர காவியமாக (க்ளாஸிக்), முதிர்ச்சியுறாத அந்நாட்களில் படைத்திருக்கிறார் என்பது நம்மை வியப்பிலே மூழ்கடிக்கிறது.

'சரஸ்வதி சந்திர'னில் ஆசிரியர் மூன்று வித அநுபவங்களைத் தருகிறார். காதல், குடும்ப வாழ்வு, துறவறச் சிந்தனை. முதல் அநுபவத்தை, வாசகர்களின் மனத்தை அள்ளும் வகையில் நளினமான நடையில் தருகிறார். இரண்டாவது அநுபவத்தைத் தருகையில் சேர்ந்து வாழும் குடும்பங்களின் நன்மை தீமைகளைக் கண்களுக்கு எதிரே கொண்டு நிறுத்துகிறார். அன்றாடக் குடும்பப் பூசல்கள், உறவு முறைகள் ஆகியவற்றைச் சரளமான வீட்டு மொழியில், பிரத்தியேக மான மொழிப் பிரயோகங்களுடன் விவரித்து வாசகர்களைக் கவருகிறார். குஜராத்தி மொழியில் ஆசிரியர் பிரேமானந்திற்குப் பிறகு இத்தகைய சரளமான நடையில் மனங்கவர் முறையில் உரையாடலை யாரும் கையாண்டதில்லை என்றே கூறலாம்.

துறவறச் சிந்தனை ஆசிரியரின் நூலுக்கு மகத்தானதோர் பெருமையை அளித்திருக்கிறது. இந்த அநுபவத்தை ஆசிரியர் ஸம்ஸ்கிருதத்தில் இன்னும் அழகாக அளித்திருப்பார் என்றே தோன்றுகிறது. உயர்ந்த தத்துவ சிந்தனைகளை உன்னதமானதோர் நடையில் தந்திருக்கிறார். உரையாடலுக்கும் வீட்டு மொழிப் பிரயோகங்களுக்கு மிடையே இது அடங்கிக்கிடக்கிறது. வாசகர்கள் மீண்டும் படித்துத் தத்துவ சிந்தனைகளைத் தெரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன்.

நாவலின் இறுதியில் கதாசிரியர் சரஸ்வதி சந்திரனின் திருமணத்தைக் குஸுமசுந்தரியுடன் ஏன் நிறைவேற்றுகிறார் என்ற கேள்வி எழுகிறது. 'குமுதசுந்தரி விதவையாகியிட்டாள்; ஆகவே, திருமணம் சாத்தியமில்லை' என்ற காரணத்திற்காக அல்ல; அவள் வாழ்வுப் பெருங்கடலினின்று நீந்தி வெளி வந்துவிட்டாள் என்ற காரணத்தினாலேயேதான். (குமுதசுந்தரி சரஸ்வதி சந்திரனிடம் சொல்கிறாள்: ''ஆனால் நான் வாழ்வின் துயரமெல்லாவற்றையும் ஆழ்ந்து அறிந்துகொண்டு விட்டேன்.'') விதவையாகிவிட்டதை அறிந்த பின்னரும் ஆசிரமத்தில் இரண்டாண்டு கள் தங்கிப் பின்னர் எஞ்சிய வாழ்வை வேறு விதத்தில் கழிப்பேன் என்ற எண்ணத்தை அவள் கைவிடவில்லை. ஆனால் சரஸ்வதி சந்திரனின் பிராயச்சித்தம் என்ற சொல் கேட்டு அவள் நடுங்குகிறாள். குமுதசுந்தரியைத் துயரத்தில் ஆழ்த்திவிட்ட செயலுக்காகத் தண்டனை வேண்டுமென்றும், அதைப் பெற்றுக் கழுவாயாக அவனை மணக்கவேண்டுமென்றும் சரஸ்வதி சந்திரன் விரும்புவதை அவள் குஸுமாவிற்குத் தெரிவிக்கிறாள். தனது திருப்திக்காகக் குமுதசுந்தரி எதிர்நோக்கவில்லை. ஆகவேதான் சந்திரகாந்தனிடம் அவர்கள் சார்பில் எதிர்கால முடிவை நிர்ணயிக்கக் கோரிச் சொல்லுகிறாள்: ''என் மனத்திருப்தி என்ற வார்த்தையை விட்டுவிடுங்கள்; அவருடைய பிராயச்சித்த ரூபத்தில் அவருடன் எனது திருமணம் என்ற பேச்சையும் தள்ளிவிடுங்கள்.''

சுவர்க்கத்தில் பியட்ரீஸ் ஒரு முறை, தாய் தன் பாலகனை நேசித்து வளர்ப்பதுபோல் தாந்தேயிடம் தாய்ப் பாசம் பாராட்டுகிறாள்.

அது போலவே குமுதசுந்தரி உறங்கிக்கொண்டிருந்த சரஸ்வதி சந்திரனை எழுப்பும் முறையில் நெற்றியில் கைவிரல்களால் வருடுகிறள். அவன் தனது தாயின் பாசம் பெற்றவனைய்த் துயில் நீங்கி எழுகிறன். எதிரே இருப்பது தன் தாயோ என மருளுகிறன். தாயுணர்வை அவன் உள்ளத்தில் உயிர்ப்பித்து நல்ல சகுனம் தோற்றுவிக்கிறள் குமுத சுந்தரி. குஸுமா-சரஸ்வதி சந்திரன் இருவரும் விடை பெற்றுக்கொள்ளும் போது குமுதசுந்தரியிடம், "தாயன்பிற்கு உறைவிடம், தாயின் பெருஞ் சக்தி நிறைந்தவள் நீ" என்றெல்லாம் மனம் கனியச் சரஸ்வதி சந்திரன் பேசுகிறன். தாந்தேயின் பியட்ரீஸ் போலவே குமுதசுந்தரி தாய்ப் பாசம் காட்டுகிறள். பிரியும்போது குமுதசுந்தரி கூறுகிறள்: "இறைவனின் அலகிலா விளையாட்டில் வாழ்வின் ஒரு நிலையில் பல நிலைகளின் அநுபவம் பெறுகிறேம். என்னல் நீங்கள் பலவித அநுபவங்கள் நிறையப் பெற்றீர்கள்."

சரஸ்வதி சந்திரனுக்கு இன்னும் பல நிலைகள் தேவை. குமுத சுந்தரிக்கு? "வேறு யாரும் இல்லை எனக்கு" என்கிற அபலை குமுத சுந்தரிக்கு ஆசிரியர் எல்லாவித அநுபவங்களையும் தந்து விட்டிருக்கிறர். சரஸ்வதி சந்திரனை விட்டு எதிர்கால முடிவை நிர்ணயிக்கும் பொறுப்பைச் சந்திரகாந்தனிடம் தந்தாள். அவன் அதை நிறைவேற்ற முடியாது போகவே, அவளே முடிவைத் தெரிவிக்கிறள். ஆசிரியர் இதைவிடத் தகுந்த வேறெருவரைத் தேர்ந்தெடுக்க முடியாது தான். விதவைக் கோலம் அவள் பூணவில்லை; புது மணப் பெண் உடையும் அவள் அணியவில்லை. காவியுடையிலே சகல சோபையுடன் மிளிர்கிறள் அவள். இதுவே அவளுடைய உள்ளழகு!

சரஸ்வதி சந்திரனைக் குமுதசுந்தரி ஏன் மணக்கவில்லை என்று ஆராய்ச்சியில் இருப்பவர்கள் கேள்வியும் கேட்கலாம். சரஸ்வதி சந்திரனிடம் குமுதசுந்தரி நேசம் வைத்திருந்தாள். ஆனல் குஸுமசுந்தரியிடம் அதன் வித்துக்கூட இல்லையே! குஸுமையும் சரஸ்வதி சந்திரனையும் ஆசிரியர் நேருக்கு நேர்ச் சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யாமலேயே எவ்வாறு திருமணத்தை நிச்சயம் செய்யலாம்? ஆசிரியர், "இன்றைய சமூகத்தில் திருமணம் செய்துகொண்ட மனிதர்களே பிரச்னைகளை வென்று முன்னேறவும், உலகத்திற்கு நன்மை புரியவும் முடியும். திருமணம் ஆகாதவர்கள் நிறைவு பெறமுடியாது" என்கிறர். நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களோ, இல்லையோ இதுவே அவரது சமாதானம். ஒப்புக்கொள்ளாதவர்கள் என்றும் முடிவுபெருத இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டே யிருப்பார்கள்.

'சரஸ்வதி சந்திர'னில் வரும் பெண் பாத்திரங்கள் உள்ளத்தை உருக்கும் படைப்புகள். குமுதசுந்தரி, சந்திராவளி, குணசுந்தரி, ஆகியோர் உண்மை வாழ்வில் காணக்கிடைப்பது அரிது. குஸுமசுந்தரி இருபதாம் நூற்ருண்டின் தலை வாயிலில் துள்ளி யெழும் நவீன மங்கை. ஆனல் நாவலின் முக்கிய பாத்திரம் சரஸ்வதி சந்திரனே. எத்தகைய விதம் விதமான அம்சங்கள் நிறைந்த பாத்திரம்! குமுத

சுந்தரியும் விஷ்ணுதாஸ ஸ்வாமியும் அந்தப் பாத்திரத்தை முழுதும் அறிந்திருந்தார்களா என்பதே நம் கேள்வி!

சரஸ்வதி சந்திரன் இளைய பாரதத்தின் இலட்சிய இளைஞன்: பல்கலைக் கழகத்தில் எம். ஏ., பட்டம்; வக்கீல் ஞானம் - யாவும் புதிய வாழ்வில் மலரும் புது மணம். காதல் கடிதங்கள் எழுதுகிறான்; நிச்சயம் செய்துவிட்டிருக்கிற புது மணமகளைச் சந்தித்து வருகிறான். அவளது சித்திரத்தை மாட்டி அலங்கரித்து, அவளுக்காக மோதிரம் ஒன்று செய்து வைக்கிறான். வீட்டைத் துறந்து வெளியேறுகையில் ஆழ்ந் திருக்கிற துறவறம் ஒரு வரப்பிரசாதமானாலும் அது முதிர்ச்சியுற்று, நிர்மலம் பெற இன்னும் நேரமிருக்கிறது. புதிய புதிய அநுபவங்கள் பெற்று முதிரவே, மனமுதிர்ச்சி பெற்று நவீன சந்திரன் சரஸ்வதி சந்திரனாகிறான். முதலில் தரித்துக்கொண்ட பெயர் நவீன சந்திரன் முற்றும் நவீனமே. ஆனால் பின்னால் முதிர்ச்சி பெறவே சரஸ்வதி சந்திரன் என்ற பெயர் முழுப்பொருள் பெறுகிறது. சரஸ்வதி என்பதன் பொருள் ஞானமும் ரஸனையும். சரஸ்வதி சந்திரன் பெயருக்கேற்ப ஞானியாகவும் ரஸிகனாகவும் நிறைவு பெறுகிறான். ஸாக்ரடீசுக்கு 'ஸ்நேஹி-தபஸ்வி' என்ற பெயர் தருவது போல, நாமும் சரஸ்வதி சந்திரனுக்கு 'ரஸிக சந்நியாசி' என்றோ, 'விரக்த ரஸிகன்' என்றோ பெயர் தந்தால் என்ன என்றே தோன்றவில்லையா?

சரஸ்வதி சந்திரன் வெறும் பண்டிதன் மட்டுமல்ல; உணர்ச்சிக் குவியலுங்கூட: அதை நன்கு அறிந்தவள் குமுதசுந்தரியே: "உங்களது கல்வியறிவைக் காட்டிலும் உங்கள் உள்ளத்தின் மேலேதான் எனக்கு அதிக நம்பிக்கை" என்கிறாள் அவள்.

கோவர்த்தனராமிற்கு முன்னர் இலக்கிய வானிலே எழுந்த நந்த சங்கர் எனும் நாவலாசிரியர், 'சரஸ்வதி சந்திர'னைத் 'திரியும் ஸர்வ-ஞானி' என்று அழைக்கிறார். அது பொருந்தாது என்றே கருது கிறேன். பம்பாயிலிருந்து ஐந்து மாதங்கள் வெளியே சுற்றுகிறான் கதாநாயகன். மூன்று மாதங்களைப்பற்றி ஆசிரியர் ஒன்றுமே தெரிவிக்க வில்லை. வெறும் யாத்திரையைப்பற்றி விவரிக்கும் புத்தகமல்ல இது; கதாநாயகனின் மன யாத்திரையைத்தான் ஆசிரியர் வர்ணிக்கிறார்.

அந்தக் காலத்திய சுதேசி ராஜ்யங்களைப்பற்றியும் தேச முன்னேற் றத்தைப்பற்றியும் இந்த நாவல் விவாதித்தாலுங்கூட இதைப் 'பீரியட்' நாவல் என்று அழைக்க முடியாது. யுகங்களை எல்லாம் கடந்து யுகங்களை வெற்றி காணும் நாவல் இது.

பாரத நாட்டின் முன்னேற்றம், விடுதலை ஆகிய பிரச்னைகள் நாவலுக்குப் பெருமை தருவன அல்ல; பாரத நாட்டின் கலாசாரத்தை எளிய நடையில், அழகான சொற்களில் வடித்துக் கூறும் நூல் இது: ஆனால் இது வெறும் சம்சார அகராதி மட்டுமல்ல: என்றைக்கும் நிலையான பொருள்பற்றிய நூல் இது. கோவர்த்தனராம் வாழ்வில்

உன்னதமாகக் கருதின பொருள் பிறவிப் பெருங்கடலினின்று விடுதலை பெறுவதே. இந்த ஜீவன்முக்தியைக் கதை நெடுகிலும் விழுப் பொருளாக்கிக் கடைசிப் பாகத்தில் கருணையின் மூலமாகச் சித்தி பெறச் செய்கிறார். 'சரஸ்வதி சந்திர'னின் முக்கியமான உணர்ச்சி கருணையே; அதுவே வாசகர்களை மிகவும் கவர்கிறது.

* * * * *

கவீர் மநீஷீ பரிபூ: ஸ்வயம்பூர்

யாதாதத்யதோர்த்தாந் வ்யததாச்சாஶ்வதீப்ய: ஸமாப்ய:

[நெடுநோக்கு வாய்ந்தவன், மனத்தை வென்றவன், பரந்த அறிவுள்ளவன், சுயமாக அற்புதக் கருத்துக்களைப் பொழிகிறவன், சொல்லையும் பொருளையும் உள்ளபடி திறனாய்ந்து வழங்குகிறவன் - இத்தகைய மேதாவியின் படைப்பு, நெடுங்காலம்வரை நிலைத்து விளங்கும்.]

ஆமதாபாத்
பிப்ரவரி 29, 1960

உமாசங்கர் ஜோஷி

சரஸ்வதி சந்திரன்

பாகம் ஒன்று

1. ஸ்வர்ணபுரியின் விருந்தாளி

மேலைக்கடலில் பத்ரா நதி சங்கமமாகும் பகுதியில் அமைந்திருப்பது ஸ்வர்ணபுரி. கடல் கன்னியின் வளைக்கரமாம் நதியின் அரவணைப்பின் அன்புச் சிக்கலில் பிணைந்திருக்கும் குழந்தைதான் ஸ்வர்ணபுரி. மாசி மாதம் ஒரு நாள்; துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சி நின்றது நாவாய் ஒன்று. அதிலிருந்து பொருள்களையெல்லாம் இறக்குமதி செய்துகொண்டிருந்தார்கள். கூடவே பிரயாணிகளும் இறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் இளைஞன் ஒருவனும் இருந்தான். கப்பலினின்று கடற்கரை செல்லச் சின்னஞ்சிறிய படகு ஒன்றில் அமர்ந்தார்கள். படகு ஆடி ஆடிச் செல்லத் தொடங்கியது. இளைஞனின் பார்வை கடலுக்கும், அதன் கரைக்குமிடையே தாவித் தாவித் தத்தளித்தது. இளைஞனின் வயது இருபத்துமூன்று, இருபத்துநான்கே இருக்கும். களையிழந்த முகம்; ஒளியிழந்த ஆடை. இதயத்தின் அடித்தளத்தில் ஆயிரமாயிரம் எண்ணங்கள். மனக் கவலையை எல்லாம் அறிவிக்கும் முகம். பிரயாணிகள், வியாபாரிகளின் கும்பலில் அவன் வேறுபட்டுத்தான் இலங்கினான்.

படகு கரைக்கு வந்து சேர்ந்ததும் அடித்துப் பிடித்துக் கொண்டு எல்லோரும் இறங்கினார்கள்; ஆனால் அவன் மிகுந்த அமைதியுடன் தோன்றினான். உடன் வந்தவர்கள் தத்தம் திசையை நோக்கி நடந்தார்கள். ஆனால் அவனோ சிறிதுநேரம் கரையில் நின்று நிதானித்து, யாரும் இதுவரை செல்லாத திக்கில் கால்வைத்து மெல்ல நகர்ந்தான். மரங்கள் அடர்ந்த பாதையொன்று எதிர்வந்தது. கையிலே மூட்டையொன்று. உச்சி வெயில். எதையும் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை; நடந்தான். களைப்பின் காரணமாக வியர்வைத் துளிகள் அவனது பரந்த நெற்றியில் மின்னத் தொடங்கின. கமல பத்திரத்தையொத்த முகம் செக்கச் செவேலென்று மாறி விட்டது. பாதையின் முடிவில் கோயில் ஒன்று வரவே, சுற்றும்

முற்றும் ஒருதரம் பார்த்துவிட்டுச் சட்டென்று கோயிலினுள் புகுந்தான்.

சிவபெருமானின் ஆலயம் அது. ஸ்வர்ணபுரியின் திவான் புத்திதனரின் மூதாதையர் கட்டிய கோயில்; கோயிலைச் சுற்றி வரும் பெரியதொரு பிராகாரம். அங்கே கூரைவேய்ந்த சிறிய மண்டபம்; அதன் பின்னால் ஒரு தோட்டம். அதில் மலர்க் கொடிகளும் பழமரங்களும்; அவற்றோடு, ஆண்டவனுக்கு விருப்பமான வில்வமரம். அதற்கருகில் ராஜஸரோவரம் எனப்படும் சின்னஞ் சிறியதொரு தடாகம். கோயிலுக்குள் நுழைய வேண்டுமென்றால் சிறிது தலைகுனிந்து செல்ல வேண்டும்; வாயிலின் உயரத்தை அவ்வளவு தாழ்வாக வைத்திருந்தார்கள் - இறைவனுக்கு முன்னால் தலைகுனிந்து தான் வரவேண்டும் என்பதை உணர்த்தத்தானோ என்னவோ? மண்டபத்தின் உட்புறச் சுவர்கள் மேலெல்லாம், வருகிற மக்கள் தத்தம் பெயர்களைக் கரித்துண்டினாலோ, இல்லை ஆணி முதலிய கூரிய பொருள்களாலோ எழுதிவைத்திருந்தார் கள். பிராகாரத்தினிடையே கோயில், எளிமையான நுழைவு, பத்துப் பன்னிரண்டு படிகள், முற்றம், நந்தி இவைகளுடன் தூய்மையாகத் திகழ்ந்தது.

அந்த இளைஞன் ஆண்டவனை வணங்கிக் கர்ப்பக்கிருகத்தின் வாயிற்படிமீது உட்கார்ந்துகொண்டான். எங்கே மறந்து விடப் போகிறோமோ என்று மூட்டையையும் தன் எதிரே வைத்துக்கொண்டான். உள்ளே உருத்திராட்ச மணியை உருட்டியவண்ணம் இறைவனின் திருநாமங்களை உச்சரித்துக் கொண்டிருந்த குருக்கள், இளைஞன் அமர்ந்திருந்த நிலையைக் கண்டார்; வெறுப்பினால் சிறிது தள்ளி உட்காருமாறு சாடை காட்டிப் பணித்தார்.

குருக்களுக்கு முப்பது, முப்பத்தைந்து வயதுதான் இருக்க வேண்டும். அடர்ந்த தாடி; சுறுசுறுப்பு நிறைந்தவர் என்று சொல்ல முடியாது. ஆனாலும் திவானின் குடும்பத்தில் பழகுபவர் என்பதால் உயர்ந்த குடும்பத்தினருடைய நடையுடை பாவனை கள் அவருக்குப் புதியனவல்ல; பேசுவதெல்லாம் பட்டிக் காட்டான் பேச்சுத்தான். ஆனால் இடையிடையே நீட்டி முழக்கிப் பெரிய மனிதர்போல் பேசவும் திறன் உண்டு. இனிக்க இனிக்கப் பேசிப் புகழுரைகளைச் சொல்லி மனங் கவரச் செய்யவும் அவருக்குச் சக்தியுண்டு. அதே சமயம் திடீர் திடீரென்று சண்டையிடுவதிலும், சூதுவாது புரிவதிலும் சாமர்த் தியம் உள்ளவர். ஆனாலும் திவான் அவரைக் கபடமற்றவர் என்று கருதி வேலையில் வைத்திருந்தார்.

இளைஞனைக் கண்ட குருக்கள் உரத்த குரலில் இறைவனின் துதிபாடி உருத்திராட்ச மணியை உருட்டலானார்; அவர் போட்ட இரைச்சல் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. இன்னும் சில நாட்கள் போனால் சிவராத்திரி; அப்போது அரசகுடும்பத்தினரும் திவான் குடும்பத்தினரும் மற்றவர்களும் வருவார்கள்—அந்த எண்ணத்தில் இறுமாந்து போனார் அவர்.

கண்கொட்டாமல் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த இளைஞனுக்குச் சிரிப்புப் பொங்கி எழுந்தது. அவரோ தம்மை அவன் புகழ்வதாக எண்ணிக்கொண்டார். மனம் மகிழ்ந்து அவனெதிரில் வந்து குரலைக் கனைத்துக்கொண்டார்.

''உன்னைப் பார்த்தால் சிறந்த பக்தன்போல் இருக்கிறதே; எந்த ஊரப்பா? என்ன பெயர்? எங்கிருந்து வருகிறாய்? ஏதாவது வேலை தேடி வருகிறாயா? நாங்கள் பரம்பரை பரம்பரையாகக் கோயிலில் பூசை செய்துவருகிறோம். என் பெயர் மூர்க்கதத்தன்'' என்று கூறி அவனுக்குத் தீர்த்தமும் வில்வ இலையும் தந்தார். இளைஞன் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு கண்களில் ஒற்றிக் கொண்டான்; பேச ஆரம்பித்தான்.

''என் பெயர் நவீன சந்திரன்; நான் ஓர் அந்தணன். துறை முகத்திலிருந்து நேரே வருகிறேன். இங்கே தர்மசத்திரத்தில் தங்கலாமென்று உத்தேசம். நீங்கள் எந்த உணவு தந்தாலும் உண்ணத் தயார். இதில் ஏதாவது ஆட்சேபம் உண்டா?''

''ஆட்சேபமா?'' என்று குருக்கள் எதிரொலித்தவுடன், நவீனசந்திரன் படியில் நாணயம் ஒன்றை வைத்தான். அதைக் கண்டவுடன் அவருடைய கண்கள் விரிந்தன; கண்களில் திருப்திக்குறி தோன்றியது. குருக்கள் நடந்தார். இளைஞன் தொடர்ந்தான்:

''இதோ பார், நவீன சந்திரன்! உன் பெயர் கொஞ்சம் நீள மாகவே இருக்கிறது. வாயில் நுழைவது கடினமாக இருக்கிறது. சந்திரன் என்றே கூப்பிடுகிறேன். உன்னிடம் விலையுயர்ந்த பொருள் ஏதேனும் இருந்தால் என்னிடம் பெட்டியில் வைத்து விடு. சாவியை நீயே வைத்துக்கொள். பின்னால் தோட்டத்தில் தங்கு. குளமோ இருக்கிறது; குளித்துப் பூசை செய்து மண்டபத்தி லேயே தங்கிவிடு. சாப்பிடுகிற நேரத்தில் குரல் கொடுப்பேன்; சாப்பிட வா. கொஞ்ச நாட்களில் மகாசிவராத்திரி வருகிறது. திவான் வீட்டிலிருந்து தரிசனத்துக்காக வருவார்கள். அந்தச் சமயத்தில் நீ இங்கே கோயிலுக்குள் வந்து தொலைக்காதே! இதைக் கவனத்தில் வைத்துக்கொள். பார், இதுதான் என் அறை.''

2. புத்திதனரின் இல்லத்தில் குமுதசுந்தரி

நவீன சந்திரன் தோட்டத்தில் நுழைந்தான். மூர்க்க தத்தரின் அறையினின்றும் புகைமண்டலம் எழுந்தது. சிறிது நேரத்தில் வண்டிகளின் ஓசையும் குதிரைகளின் குளம்பொலியும் கேட்கத் தொடங்கின. மூர்க்கதத்தர் ஓட்டம் ஓட்டமாக வெளி வந்தார். அரைகுறையாய்க் குடுமியை வாரிக்கட்டி முடிச்சிட்டார். வண்டிகள் வந்து நின்றன; நான்கைந்து இளம்பெண்கள் இறங்கினார்கள். மெட்டி ஒலிக்க, கோயிற்படிகளில் ஏறினார்கள். அந்தப் பெண்கள் கூட்டத்தில் இருவர் முக்கியமானவர்கள். பொங்கும் இளமையில் பூத்துக் குலுங்கும் பெண்தான் புத்தி தனரின் மகள் அலக்கிஷோரி; வயது இருபத்திரண்டு. அவளுக்குப் பின்னால் பூரண நாணத்துடன் நிறைகுடமாய்த் திகழ்ந்து மெல்ல நடந்துவந்தாள் குமுதசுந்தரி; புத்திதனரின் மருமகள்; பிரமாததனனின் புது மனைவி. அவர்கள் இருவருக்குள்ளேதான் என்ன வேற்றுமை! இடி முழக்கத்தி னிடையே வெடித்தெழும் மின்னற்கற்றைபோல ஒளிக்கதிர்களை வாரியிறைத்தாள் அலக்கிஷோரி. மெல்லத் தவழ்ந்துவரும் மேகங்களுக்கிடையே மிதந்துவரும் முழுமதியைப்போல மங்கிய ஒளியை வழங்கிவந்தாள் குமுதசுந்தரி. பிறப்பிலிருந்து இறைவன் தந்த இந்த வேற்றுமைக்குக் காரணம் குடும்பச் சூழ்நிலையும் கல்விமுறையுந்தான்.

அலக்கிஷோரி துடிதுடிப்பு நிறைந்தவள்; தங்கச் சிவப்பு; எவரையும் ஈர்த்திழுக்கும் சுறுசுறுப்பு. அவள் பேச்செல்லாம் உத்தரவு இடுவது போலத்தான் இருக்கும். அதற்கெல்லாம் எவ்வளவு பேர் அடி பணிந்தார்கள்! பிறரைப் பணியவைப்பது அவள் இயல்பு. இந்தக் கவர்ச்சியால் எப்போதும் இளம் பெண்கள் அவளைச் சூழ்ந்திருப்பார்கள். தந்தைக்குப் பிரியமான மகள்; வீட்டிலும் வெளியிலும் அவளுக்குத் தனிச் செல்வம். குடும்பச் செய்தியில் மட்டுமல்லாமல் அரசியலிலும் அவளுக்கு அதிக ஈடுபாடு. மணமானபின்னும் புகுந்த வீட்டார் அவள் சொற்படியே கேட்டார்கள்; கணவனும் அவள் மனத்துக்கேற்றாற் போலத்தான் அமைந்தான். சகோதரன் பிரமாததனனுக்குத் திருமணம் ஆகட்டும், அலக்கிஷோரி சரியாகிப் போய்விடுவாள் என்று நினைத்தார்கள். ஆனால் அப்படி ஏதும் நடந்துவிடவில்லை.

அவனுக்கு எத்தனையோ இடங்களிலிருந்து பெண் கொடுக்க முன் வந்தார்கள். ஆனால் பெற்றோர்களுக்கும் அலக்கிஷோரிக்கும் ஏதும் சம்மதமாக அமையவில்லை. கடைசியில் ரத்னநகரியின்

திவான் வித்யாசதுரரின் மகள் குமுதசுந்தரிதான் தேர்ந்தெடுக்கப் பட்டாள். அவளது மணம் முதலில் பம்பாயைச் சேர்ந்த வணிகர் லக்ஷ்மீநந்தனரின் மகன் சரஸ்வதி சந்திரனுடன் நிச்சயிக்கப் பட்டது. ஆனால் என்ன காரணமோ முகூர்த்தம் நெருங்கிவரும் வேளையில் விவாகம் தடைப்பட்டது. அது இறைவனின் திருவிளை யாடல். சரஸ்வதி சந்திரனிடமிருந்து கடிதம் வந்தது: ''ஏதோ காரணத்தால் வீட்டைத் துறந்து வெளியே செல்கிறேன். திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் போய் விட்டது. பிறவிப் பெருங்கடலில் தத்தளிக்கும் சின்னஞ் சிறு படகாய் வாழ்க்கைப் புயலைத் தன்னந்தனியே எதிர்க்கத் திட்டம் பூண்டுவிட்டேன். என்னைப்பற்றி இனிமேல் சிந்தனை வேண்டாம். குணவதி குமுதசுந்தரியை மணந்து நான் பாக்கிய சாலியாவேன் என்பது உண்மைதான். ஆனால் அவள் பூரணசுகம் பெறுவாள் என்று நான் நினைக்கவில்லை. ஆகவே, அவளை நல்ல தோர் இடத்தில் மணமுடித்து வையுங்கள். அவள் சௌபாக் கியம் நிலைத்து நிற்கட்டுமாக.'' பேரிடியாக வந்தது கடிதம். பெருந்துயரத்தில் யாவரும் ஆழ்ந்தார்கள். வித்யாசதுரர் மலை போல் வீழ்ந்தார்; குமுதசுந்தரிக்குச் சரஸ்வதி சந்திரன் போன்று நிகரான கணவன் எங்கே கிடைப்பான்? பிள்ளைப்பேறு இல்லாத அவருக்கு-சரஸ்வதி சந்திரனை மருமகனாகப் பெற்று இருவரையும் மணக் கோலத்தில் காணத் துடித்த அவருக்கு - எவ்வளவு பெரிய ஏமாற்றம்! குமுதசுந்தரிக்குப் பிறகு இன்னுமொரு பெண்ணும் திருமணத்திற்கு நிற்கிறாளே! 'ஈசனின் இச்சை' என்று எதிர்காலச் சிந்தனையில் ஆழ்ந்துபோனார் அவர்.

தடைப்பட்ட திருமணச் செய்தி நாடெங்கும் பரவியது. வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது. நண்பர்கள் பச்சாத்தாபப்பட்டார்கள். புத்திதனரின் வீட்டிலும் விவாதம் எழுந்தது. 'என் சகோதரனுக்குக் குமுதசுந்தரியை ஏன் மண முடிக்கக் கூடாது?' அலக்கிஷோரி கேட்கத் தொடங்கினாள். வித்யாசதுரரின் பழைய நண்பர் புத்திதனர். தம்பதியர் ஒப்புக் கொண்டார்கள். பேச்சுவார்த்தை நடத்தினார்கள். மணமகனைப் பற்றித் தெரியாது; இருந்தாலும் நல்ல இடந்தான் என்று வித்யாசதுரர் தம் மனைவியைக் கலந்தாலோசித்து மனம் ஒப்பினார்; திருமணத்தை நடத்திவைத்தார்.

பிறந்தகம் விட்டுப் பிரிந்து கணவனிடம் வந்து சேர்ந்தாள் குமுதசுந்தரி. சகோதரனுக்குப் பெண் பார்த்து மணம் நிறை வேற்றியவள் அலக்கிஷோரிதான். தாய் மகனை ஈன்றனள்; சகோதரியோ பெண் தேடிக் கொடுத்தாள்.

குமுதசுந்தரி புதுச் சூழ்நிலையை அநுசரித்து நடந்தாள். தாயைப்போலத்தான் மகள். தாய் வித்யாசதுரரை மணந்த

போது அதிகம் கல்விவாய்ந்தவள் அல்ல. ஆகவே, கணவனுக் கேற்றவாறு கல்வியறிவு இல்லையே என்று மனம் வருந்தினள். கணவரும் அதைப் புரிந்துகொண்டு அவளுக்குக் கல்வி புகட்டத் தொடங்கினர். குமுதசுந்தரி பிறந்தவுடன் மகள் எழுத்தறிவு பெற வேண்டும் என்று நிச்சயித்தாள். அதன் பலன் குமுத சுந்தரி கல்விப் பயன் பெற்ருள். ஆங்கிலம், சம்ஸ்கிருதம் ஆகிய இரண்டு மொழியறிவுடன் இல்லற நியமம், சமய அறிவு, நீதி நெறி, கலையுணர்வு ஆகியவற்றிலும் தேர்ச்சி பெற்ருள். எல்லா வற்றிலும் முழுமை நிறைந்த அவள் ஒன்றில்மட்டும் ஆருத் துயர் அடைந்தாள். அதுதான் சரஸ்வதி சந்திரனைத் தேடி இழந்த நிராசை.

புக்ககம் புகுந்த குமுதசுந்தரி புது உலகத்தினுள் நுழைந் திருந்தாள். அலக்கிஷோரியினின்றும் அவள் முற்றும் வேறு பட்டே காட்சியளித்தாள். திருமாங்கல்யத்துடன் மருதோன்றி யிட்டுச் செக்கச் செவேல் என்று திகழ்ந்த பாதத்தைத் தவிர மற்ற அங்கங்கள் அனைத்தையும் பூரணமாக மூடியவண்ணம் எளிய உடையுடன் திகழ்ந்தாள் அவள். பேச்சும் குறைவுதான். ஆனால் அவள் குரலினிமையில் மனம் ஈடுபட்டுக் குழந்தைகள் அவளைச் சுற்றிச் சூழ்ந்துகொள்வார்கள். அலக்கிஷோரிக்கு உத்தரவு இடுவது எப்படி இயல்பாக இருந்ததோ அப்படியே உத்தரவு ஏற்பது குமுதசுந்தரியின் இயல்பாக இருந்தது. புதுப் பெண் நாணத்துடன் இருக்கிருள் என்று எல்லோரும் கருதினர் கள். ஆனல் உள்ளூற அவள் பொருமிக்கொண்டிருந்தாள்; சரஸ்வதி சந்திரனையே நினைந்து நினைந்து உருகிக்கொண்டிருந் தாள். பிரமாததனனுடன் மனம் ஒத்து நடக்கவேண்டும் என்பதை அறியாதவள் அல்ல; அதுதான் இந்து சமய தர்மம் என்பதையும் அறிந்தவள்தான். நாட்கள் நகர நகர, புக்ககத்தின் சூழ்நிலையை அநுசரிக்கத் தொடங்கினள். பழைய நினைவுகளை அகற்றப் பெருமுயற்சி செய்து வெற்றி பெறத் தொடங்கினள்.

பிரமாததனன் ஆனந்தத்தில் திளைத்துக்கொண்டிருந்தான். பள்ளிப் படிப்பில் அவன் என்றும் கருத்துச் செலுத்தியதில்லை. அரைகுறைப் படிப்பு. அதை முடித்துக்கொண்டு வெளியுலகில் வந்தான். செல்வமே அவனுக்குத் துணை. மற்றப்படிக்குச் சரள மான இயல்பும் இனிமையான சுபாவமும் கொண்டவன். கைபிடித்த குமுதசுந்தரியைத் திருப்தி செய்வதுதான் தன் லட்சி யம் என்று உணர்ந்துகொண்டு மணவாழ்க்கை நடத்தத் தொடங் கினன்.

மூர்க்கதத்தர் கரங்குவித்து, ''வாருங்கள், வாருங் கள்'' என்று வரவேற்றவண்ணம் கர்ப்பக்கிருகத்தில் நுழைந்தார். விதிப்படி வில்வ இலையும் பிரசாதமும் வழங்கி,

பெருத்த குரலில் பேச ஆரம்பித்தார். அப்போது சிப்பாய் ஒருவன் ஓடோடி வந்து அறிவித்தான்:

''அம்மணி, மஹாராஜாவும் திவானும் வருகிறார்கள்.''

பெண்கள் கூட்டம் திகைத்தது. வழி என்ன என்று விழிக்கும்போது சமய சஞ்சீவியாக மூர்க்கதத்தர் யோசனை சொன்னார்: ''வாருங்கள், தோட்டத்துக்குள் சென்று அங்கே தங்கி விடுங்கள். அவர்கள் போனவுடன் நான் குரல் கொடுக்கிறேன். அதுவரைக்கும் உள்ளேயே இருங்கள்'' என்று தோட்டத்தை நோக்கி நடந்தார். தோட்டத்தில் நவீனசந்திரனும் இருக்கிறான் என்பதை அவர் மறந்து போய்விட்டார். பெண்கள் கூட்டமும் வசப்பட்டதுபோல அவரைத் தொடர்ந்து சென்றது. தோட்டத்தில் பெண்கள் நுழைந்தார்கள். கதவை மூடிவிட்டுத் தாழிட்டார்.

''மஹாராஜா வாழ்க'' என்ற வாழ்த்துக் குரல் கேட்டது. ஸ்வர்ணபுரியின் அரசரும் திவான் புத்திதனரும் வந்திறங்கினார்கள். தேவாலயத்தின் உள்ளே விரித்திருந்த தங்கநிறப் பட்டுக் கம்பளத்தின்மீது அமர்ந்தார்கள். கோயிலினுள்ளே அவர்களைத் தவிர வேறெவரும் இல்லை. ஸ்வர்ணபுரியின் அரசியல் சூழ்ச்சிகளையும் மந்திரி சடராயனின் சதிச் செயல்களையும் அவர்கள் விவாதித்தார்கள்; அவைகளை எப்படி எதிர்த்துச் சமாளிப்பது என்பதுபற்றி ஆலோசனை செய்தார்கள். பேச்சுவார்த்தைகளில் திருப்தியுற்றவராக மஹாராஜா எழுந்தார்; திவானைப் பாராட்டியவண்ணம் வெளிநடந்தார்; திவான் தொடர்ந்தார். ''மஹாராஜா நீடூழி வாழ்க'' என்ற வாழ்த்தொலிக்கிடையில் அரசர் புறப்பட்டார். நின்றவண்ணம் திவான் விடை பெற்றுக் கொண்டார். மஹாராஜாவின் குதிரை பூட்டிய வண்டி பார்வையினின்றும் மறையும்வரை நின்றுவிட்டுப் பின்னர்க் கோயிலினுள் நுழைந்தார். ''இறைவா, எல்லாம் உன் திருவிளையாடல்! இதுவரைக்கும் நான் காரணமின்றி எவருக்கும் தீங்கு விளைத்ததில்லை. தக்க காரணங்களுக்காகப் பிறரைத் தண்டிக்க நீயேன் உதவுவதில்லை?'' என இறைஞ்சினார்.

பிரார்த்தனைக்குப் பிறகு, ''தத்தா, தத்தா'' என்று குரல் கொடுத்தார். மூர்க்கத்தர் ஓடோடி வந்தார். ராஜாவும் திவானும் பேச்சில் ஈடுபட்டிருந்ததால் ஒதுங்கியிருந்தார். அப்போதுதான் அவருக்கு நவீன சந்திரனையும் பெண்களையும் தோட்டத்தில் விட்டு விட்டிருக்கிறோம் என்ற நினைவு வந்தது.

''கோயிலுக்கு யாராவது வந்திருக்கிறார்களா?'' என்று திவான் கேட்டார்.

''ஆமாம், அலக்பேனும், தங்கள் மருமகளும் வந்திருக்கிறார்கள். மஹாராணு வந்தவுடன் தோட்டத்தில் தங்கும்படி சொல்லியிருக்கிறேன்.''

''அப்படியா? தர்மசாலையில் யாராவது தங்கியிருக்கிறார்களா?''

''ஆமாம், ஒரே ஓர் ஆசாமிதான்; இப்போது தோட்டத்தில்தான் இருக்க வேண்டும்.''

இருவரும் தோட்டத்தை நோக்கி நடந்தார்கள். வாயிற்கதவைத் திறந்தார் மூர்க்கதத்தர்.

3. தோட்டத்தில்

பூங்காவில் மலர்கள் மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருந்தன. மல்லிகையும் சம்பகமும் ரோஜாவும் மங்கையரை வரவேற்றன. பெண்கள் மலர் கொய்யத் தொடங்கினார்கள். அலக்கிஷோரியும் குமுதசுந்தரியும் மேடையில் அமர்ந்தார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் கொய்த மலர்களைத் தோழியர் கொண்டு வந்தார்கள். அலக்கிஷோரி அவைகளைத் தோழியருக்குப் பகிர்ந்தளிக்கும் வேலையில் ஈடுபட்டாள்.

''மதனி, உங்களுக்கு என்ன வேண்டும்?''

குமுதசுந்தரி புன்முறுவல் பூத்தாள்.

''எது தந்தாலும் வாங்கிக் கொள்கிறேன்.''

''எல்லாவற்றிலும் அப்படிச் சொல்லக்கூடாது, நான் தருவதையெல்லாம் உங்களுக்கு வாங்கிக்கொள்ளச் சக்தியிருக்கிறதா?''

''ஏனில்லை? நீங்கள் தந்த உங்கள் சகோதரரை நான் வாங்கிக்கொள்ளவில்லையா?''

சமத்காரமான பேச்சில் அலக்கிஷோரி மனம் மகிழ்ந்து போனாள். அவள் தந்த மலர்களைக் குமுதசுந்தரி வாங்கிக் கொண்டாள். நீண்ட நதியொத்த கைகளில் பளிச்சிட்டன வெள்ளைத் தாமரை மலர்கள்.

தோழியர் கேலிப் பேச்சில் ஈடுபட்டார்கள்.

''வெறும் மலர்கள் போதுமா, அவைகளைக் கோத்தளிக்க வேண்டாமா?''

''கோத்துக் கூந்தலில் சூடிக்கொள்ள வேண்டும்.''

''ஆமாம், மலர் மாலைகளை மஞ்சத்தின் நான்கு ஓரங்களிலும் தொங்கவிட்டு ரோஜா மலர் மாலைகளை அவர்களிருவருக்கும் அணிய வைக்கவேண்டும்'' என்றாள் அலக்.

''சம்பாவும் மல்லிகையும் நல்ல மணம் வீசும்.''

''மதனி, அவரிடம் முகம் கவித்து நாணத்தால் தலை குனிவாயா?''

''சரிதான்; யார் யாரை வணங்குவார்கள் தெரியுமா?''

தோழியர் கூட்டத்தில் சிரிப்பு வெடித்தது. குமுதசுந்தரி வெட்கத்தால் குன்றிப் போனாள். கணவன் மனைவி தொடர்பை எண்ணினாள். தனக்குப் பிடித்த நூல்களை நினைவு கூர்ந்தாள். சட்டென்று சரஸ்வதி சந்திரனின் நினைவும் உடன் வந்தது. அவன் நினைவு வந்த மாத்திரத்தில் கண்களில் நீர் நிறைந்தது. அதைப் பார்த்தவுடன் தோழியர் பதறிப்போனார்கள். அவர்கள் பேச்சில் தவறேதுமில்லை என்று குமுதசுந்தரி சமாதானம் சொன்னாள்.

சரஸ்வதி சந்திரனை அவள் ஒரே ஒரு முறைதான் பார்த்திருக்கிறாள்; கணவன் பிரமாததனனுடன் அவளது தொடர்பு கணக்கற்ற முறைகள். ஆனால் சந்திரகாந்தக் கல்லில் வடியும் நீரைப்போல் அன்றொரு நாள் சரஸ்வதி சந்திரனைக் கண்டதிலிருந்து சோகரசந்தான் அவளிடமிருந்து எப்போதும் ததும்பிய வண்ணமாக இருந்தது. அவனது வெளிப்புற அழகை அவள் நினைத்ததில்லை. அவனைப்பற்றிய நினைவெல்லாம் அவன் வரைந்த கடிதங்கள் மூலமாகத்தான்; அந்தக் கடிதங்கள் பொழிந்த கருத்துச் செல்வங்களின் மூலந்தான். பிரமாததனன் அழகும் வசீகரமும் நிறைந்தவன். ஆனால் வயதிலும், உடற்பாங்கிலும் வித்தை - அறிவுக் கூர்மை ஆகியவற்றிலும் கணவனைக் காட்டிலும் மனைவி ஒரு படி உயர்ந்தவளாக இருந்தால், அவளுக்கு எப்போதும் துயர்தான்; அவள் மணஇன்பம் பெறுவதில்லை. குமுதசுந்தரியிடம் குலப்பெருமையும், பெற்றோரின் உயர்பண்பும், கல்வியறிவும் நிரம்பியிருந்தன. ஆனால் நீரினின்று தூக்கியெறியப்பட்ட மீனைப் போன்று கல்வியறிவு குன்றிய சூழ்நிலையில் வித்யாசதுரரின் திருக்குமாரி வேதனையுற்றாள். தோழியர் பேச்சில் சரஸ்வதி சந்திரன் நினைவு மீண்டும் எழுந்துவிடவே, தீராத்துயர் அடைந்தாள். சிறிது நேரம் அதை மறப்பதற்காகத் தோட்டத்தில் உலவ எழுந்தாள்.

அலக்கிஷோரியும் கிருஷ்ணகலிகாவும் வார்த்தையாடினார்கள். குமுதசுந்தரியும் தோழி வனலீலாவும் ஒரு பக்கமாக உலவினார்கள். வனலீலா மெல்லப் பாடினாள். ''குன்றிய நம்பிக்

கையின் குவியல் என்று குறையும்?'' என்று அவள் இசைத்த பாடல் குமுதசுந்தரியின் மனக்குமுறலை வளர்த்தது.

அவளது சிந்தனைச் சிதறல்களில் பலப்பல உருவங்கள் எழுந்தன. 'இப்போது அவர் எங்கேயிருப்பார்?' என்ற கேள்விக்கு விடையாக அவை எழுந்தன. கரடு முரடான காட்டுப் பாதையில் சரஸ்வதி சந்திரன்; கிராமம் ஒன்றில் உழவர் வீட்டின் கயிற்றுக் கட்டிலில் சரஸ்வதி சந்திரன்; பெரிய நகரம் ஒன்றின் ரதவீதியில் கூடியிருக்கும் கூட்டத்தில் முன் னேறும் சரஸ்வதி சந்திரன்; சத்திரம் ஒன்றில் நோய்வாய்ப் பட்டு அல்லலுறும் சரஸ்வதி சந்திரன்—பலப்பல கற்பனைகள். என்னவென்று சொல்வது? விழிப்பிலும் கண்மூடிக் கனவு காணும் உறக்கமல்லவா இது? கற்புடைய மங்கையருக்கு இது தகாது என்று அவளுக்குத் தெரியும்; ஆனால் இந்த நிலையினின்று எப்படி மீளுவது? அதுதான் அவளுக்குப் புரியவில்லை. இந்தப் பூசலில் சிக்கி அவள் மனம் நொந்து உடல் மெலிந்து போனாள்.

''இதோ பாருங்கள்.''

வனலீலாவின் உரத்த குரல் அவளைக் கனவுலகினின்றும் எழுப்பியது. நினைவு வந்தவளாக வனலீலாவை நோக்கினாள்; அவள் கைகாட்டிய திசைப் பக்கம் திரும்பினாள். தடாகத் தினருகில் நல்ல உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான் இளைஞன் ஒருவன். அவனது மடிமீது விரித்திருந்தது புத்தகம் ஒன்று.

''புத்தகத்தைப் படித்துக்கொண்டே தூங்கி யிருக்க வேண்டும்'' என்றாள் வனலீலா.

''யாரோ ஒருவர், நமக்கேன் அந்தக் கவலை?'' என்றாள் குமுதசுந்தரி.

''அப்படியில்லை; தூக்கத்தில் புரண்டு போய்க் குளத்தில் வீழ்ந்துவிட்டால்—'

''ஆமாம்; எழுப்பிவிடு அவரை.''

வனலீலா கூக்குரலிட்டு அந்த இளைஞனை எழுப் பினாள். நவீன சந்திரன் கண் விழித்தான். ''பார்த்து எழுந்திருங் கள்; சற்று கவனக் குறைவாக இருந்தால் குளத்தில் விழுந்து விடப் போகிறீர்கள் என்றுதான் எழுப்பினேன்'' என்றாள் வனலீலா.

''மிக்க நன்றி'' என்றவண்ணம் எழுந்தான் நவீனசந்திரன். அந்த விநாடியில் குமுதசுந்தரி தடுமாறி நின்றாள். ஆனால் அவனோ இயற்கையான பார்வை ஒன்றைச் செலுத்திவிட்டுத் திரும்பிச் சென்றான்.

அப்போதுதான் மஹாராணு கோயிலிலிருந்து திரும்பவே, வாழ்த்தொலி முழங்கியது. குமுதசுந்தரியும் வனலீலாவும் தோழியரிடம் செல்லத் தொடங்கினுர்கள். குமுதசுந்தரியின் எண்ணச் சிலந்தி மீண்டும் வலை பின்ன ஆரம்பித்தது. 'ஏன், இவரே சரஸ்வதி சந்திரனுக இருக்கக் கூடாது! தாம் மேற்கொண்ட பிரயாணத்தில் இங்கே வந்திருக்கலாமோ? இல்லை, என் நிலையைக் கண்டு பரிகசிக்கவே வந்திருக்கிறுரோ? அப்படி ஏன் நான் எண்ணவேண்டும்? இனி அவர் யார், நான் யார்? இறைவனின் இச்சைப்படி நான் வேறு ஒருவருக்கல்லவா உரிமை? அதுவல்லவா உண்மை? மற்றதெல்லாம் பொய்யல்லவா?'

குமுதசுந்தரியின் கால்கள் தொய்ந்து போயின. தோழி வேகமாக நடந்தாள். குமுதசுந்தரியின் சிந்தனை துரிதகதியில் சென்றது: 'அவராகத்தான் இருக்கவேண்டும். பிறருடன் பேசினுல் நான் கேட்டுக்கொண்டே யிருப்பேன். அவராக இருந்தால் அவரது அறிவை எவ்வளவு நாட்கள் குடத்துள் விளக்காக மூடிவைக்க முடியும்? இந்த அஞ்ஞானப் பிரதேசத்தில் அவர் அறிவு ஞானவிளக்காகப் பளிச்சிடத்தான் செய்யும்.'

'அவரைப்பற்றிய சிந்தனை எவ்வளவு தவருகும்! நான் அவரைப்பற்றி இனி எண்ணலாகுமா?'

'ஏன் அவராக இருக்கக் கூடாது! அதே முகாரவிந்தம்; கரங்களிலே புத்தகம். அவராகவே இருக்கட்டும், அதுவே நல்லது. நான் அவரை நேரில் பார்க்கவேண்டாம்; பேசவேண்டாம். ஆனுல் அவருடைய சுகநலன்களைப்பற்றி அறிந்து கவலையற்றிருப்பேன்.'

எண்ணமாலை பெருகிக்கொண்டே போனது. தோழியரிடம் நெருங்குகையில் அலக்கிஷோரி வினவினுள்.

''மதனி, என்னவோ மாதிரி இருக்கிறீர்களே; பெற்றவர்கள் நினைவு வந்துவிட்டதா, இல்லை அகத்துக்காரர் நினைவா?''

''என்ன என்று புரியவில்லை. நான் மிகவும் களைத்துப் போயிருக்கிறேன்'' என்றுள் குமுதசுந்தரி.

தோட்டத்தின் கதவு திறந்துகொண்டது. புத்திதனரும் மூர்க்கதத்தரும் உள்ளே நுழைந்தார்கள். அவர்களைக் கண்ட மாத்திரத்தில் பெண்கள் கூட்டம் பணிவாக ஒதுங்கிக் கொண்டது. ராதா என்ற தோழியொருத்தி புத்தகமும் கையுமாக ஓடிவந்தாள். குமுதசுந்தரி புத்தகத்தைக் கையில் எடுத்துப் பார்த்தாள்.

''யாருடைய புத்தகம் அது?'' என்று வினவினுர் புத்திதனர்.

''தோட்டத்தின் மேடைமீது கண்டெடுத்தேன்'' என்றாள் ராதை.

''இங்கே தர்மசாலையில் பிரயாணி ஒருவர் வந்திருக்கிறார் என்றேனல்லவா, அவரது புத்தகமாகத்தான் இருக்க வேண்டும்'' என்றார் மூர்க்கதத்தர்.

''ஓ, அப்படியா, அவரைக் கூப்பிடு. நான் பார்க்கவேண்டும்'' என்றார் புத்திதனர். மூர்க்கதத்தர் ஓடினார். இருவருமாகத் திரும்பிவந்தார்கள். நவீன சந்திரன் கரம் குவித்தான். புத்தி தனர் வணக்கத்தை ஏற்றுக்கொண்டார். பெண்கள் கூட்டம் பதுங்கிக்கொண்டது. குமுதசுந்தரியின் மனம் படபடத்தது.

''எந்த ஊரப்பா உனக்கு? இங்கே ஏதாவது காரியமாக வந்தாயா?'' என்று கேட்டார் புத்திதனர்.

''நான் பம்பாயிலிருந்து வருகிறேன். இந்த ஊர் என் யாத்திரையின் வழியில் வந்த ஊர்; மீண்டும் யாத்திரையை மேற்கொள்வேன்'' என்றான் நவீனன்.

''பம்பாயில் என்ன உத்தியோகத்தில் இருக்கிறாய்?''

''அன்னபூரணி தேவி யாரையும் பசிக்க வைத்திருப்பதில்லை. நானோ பம்பாயில் ஒரு மாணவனாக இருந்தேன். வேலை ஏது மில்லை. சகல அநுபவங்களையும் பெறவேண்டும் என்ற விருப்பம். அதனால்தான் இப்படிச் சுற்றுகிறேன்.''

''ஏதாவது உத்தியோகம் பாரேன்.''

''வேலை ஏதாவது மேற்கொண்டால் ஒருவித அநுபவந்தான் பெறலாம். எனக்கு நானாவித அநுபவம் பெறவேண்டும் என்ற விருப்பம்.''

புத்திதனருக்கு ஆசாமி விசித்திரமானவனாக இருக்கிறானே என்று பட்டது.

''எப்படி, என்னவித அநுபவம் பெற முயலுகிறாய்?''

''எல்லாவற்றையும் காண்பேன்; கேட்பதையெல்லாம் கிரகித்துக் கொள்வேன். நான் மாறாமல் எல்லா மாற்றங்களையும் கண்டு கொள்வேன்.''

புத்திதனர் சிரிப்பைப் பெருத்த முயற்சியுடன் கட்டுப் படுத்திக்கொண்டார்.

''என்ன படித்திருக்கிறாய்?''

''கொஞ்சம் ஆங்கிலமும் ஸம்ஸ்கிருதமும்.''

''இங்கேயே தங்கிவிடு; உனது படிப்பிற்கு நல்ல வேலை கிடைக்கும்.''

குமுதசுந்தரியின் மனம் குதூகலித்தது. ஆனால் அவளது பதிவிரதா தர்மம் அந்த எண்ணத்திற்குத் தடையிட்டது.

4. திவான் வீட்டில்

நவீன சந்திரன் திவான் வீட்டில் உணவு கொள்ள உட்கார்ந்தான். திவான் புத்திதனரும் அவனுடனேயே சேர்ந்து அமர்ந்தார். திவானுடைய மகன் பிரமாததனனும் விருந்தாளியை உபசரித்தான். புத்திதனர் அதிதியைச் சமானமாய்ப் பாவித்து நடத்தினார். சில நாட்களில் திவான்வீட்டுப் பெண்டிரும் கூச்சத்தைவிட்டு எளிமையாகப் பழக ஆரம்பித்தார்கள். நவீன சந்திரனும் மிகப் பணிவுடனும் இயற்கையான சங்கோசத்துடனும் பழகியதால் வீட்டிலுள்ள எல்லோருக்கும் அவன்மேல் பரிவும் மதிப்பும் ஏற்பட்டன.

நவீன சந்திரன் பம்பாயிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் எழுதுகிறான் என்பதும் ஆங்கிலப் பத்திரிகைகளும் அவன் கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றன என்பதும் விரைவில் தெரிந்து போயின. திவானுக்கு அவன்மேல் மதிப்பு மிகுந்தது. அந்தச் சுதேசி சம்ஸ்தானத்தில் ஆங்கில அறிவு உள்ளவர்கள் மிகக் குறைவு; அரசாங்கத்தில் அத்தகையவர்களின் தேவை இருந்தது.

ஒரு நாள் இரவு உணவுக்கு நவீன சந்திரனும் மற்றவர்களும் உட்கார்ந்தபோது சற்றே நேரமாகிவிட்டது. சாப்பாடு முடிந்தவுடன் நவீன சந்திரன் அங்கேயே தங்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அலக்கிஷோரியின் புக்ககம் அதே ஊரில்தான்; இரவாகிவிட்டதால் அவள் போகவேண்டாமென்றும் நிச்சயிக்கப்பட்டது. நவீன சந்திரன் தனக்காக ஒதுக்கப்பட்ட அறைக்குள் சென்றான். புத்திதனரும் பிரமாததனனும் பேச்சுவார்த்தைக்காக உட்காரும் அறைக்குச் சென்றார்கள். அறைக்கு வெளியே குமுதசுந்தரியும் அலக்கிஷோரியும் விளக்கடியில் புத்தகம் ஒன்றை விமர்சித்துக்கொண்டிருந்தார்கள். அன்றைய தபாலில் பம்பாயிலிருந்து வந்த புத்தகம் ஒன்றிலிருந்து சில பகுதிகளைக் குமுதசுந்தரி உரத்த குரலில் வாசிக்க, அலக்கிஷோரி கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

''அலக்பேன், இதைக் கேளுங்கள்: கட்டிய மனைவியைக் கைவிட்டுச் சென்றதால் அவள் உள்ளத்தில் நேர்ந்த துயரத்தை ஆசிரியர் எப்படி விவரித்திருக்கிறார், பாருங்கள்.''

''எல்லோருக்கும் துக்கம் வருகிறது. துக்கங்களைச் சகித்துச் சகித்துக் களைத்துப் போகையில் ஆண்டவன் திருவுளப்படி முடிவும் வருகிறது. எத்தகைய தீங்கு செய்திருந்தாலும் ஆண்டவன் அதை மறக்கவும் அருளுகிறார். ஆனால் என் துக்கங்களுக்கு அந்த முடிவு எப்போது வரப்போகிறது? நான் குற்றமற்றவள். எனக்கு இந்தத் துயரத்தைவிட வேறு என்ன துயரம் பெரிதாக இருக்கப் போகிறது? என் துயரத்துக்கு எது எல்லை என்று தெரிந்துவிட்டால் அது வரும்வரை நான் எதையும் தாங்கத் தயாராக இருப்பேன்!''

குமுதசுந்தரியின் மதுரமான குரலில் கதையின் ரசமான பாகத்தைக் கேட்டுக்கொண்டிருந்த அலக்கிஷோரி சொன்னாள்:

''நீ எவ்வளவு பெரிய அதிர்ஷ்டக்காரி! கல்யாணமாகி ஒரு நாள்கூடக் கணவனைவிட்டுப் பிரியவில்லையே; புக்ககம் வந்த பிறகு நடுவில் ஒரு நாள்கூடப் பிறந்தகம் போகவில்லையே!''

சுவையான அவர்கள் பேச்சு நவீன சந்திரனின் காதில் விழாமலில்லை. அதே சமயம் உட்காரும் அறையில் தந்தையும் தனயனும் சம்ஸ்தான ஊழல்களைப்பற்றி விமர்சித்துக்கொண்டிருந்தார்கள். எவ்வளவு செல்வமும் செல்வாக்கும் இருந்தென்ன? மன அமைதி எளிதில் கிடைத்துவிடுமா? அமைச்சன் சடராயனின் சதிச் செயல்கள் திவான் புத்திதனருக்குப் பெருந்துயர் அளித்தன. புதிய அமைச்சர் ஒருவரைத் தேடவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. பெருத்த ஆலோசனையில் இருவரும் ஆழ்ந்துகொண்டிருந்தார்கள்.

நவீன சந்திரன் விளக்கை அணைத்து உறங்க முயன்றான்; களைத்துப் போயிருந்ததால் உறக்கம் விரைவில் வந்துவிட்டது.

அதே சமயம் திவானின் இல்லத்துக்கு வெளியே நான்கைந்து ஆட்கள் நடமாடிக்கொண் டிருந்தார்கள். அவர்களில் சதிகாரன் ஜமால்கானும் ஒருவன்; அவன் சடராயனின் கையாட்களில் ஒருவன். சடராயனின் மகளும் மருமகளும் சற்றே ஒழுக்கங் குன்றியவர்கள். இது தெரிந்த செய்தியானாலும் பொதுப்படையாக எவரும் விமர்சிக்க விரும்பவில்லை. அலக்கிஷோரி ஒரு சமயம் அப்படித் துணிந்துவிட்டாள். சடராயனின் வீட்டார் அவளுக்குப் பாடம் கற்பிக்க நிச்சயம் செய்தார்கள். அலக்ஷோரி பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீட்டுக்கு இரவிலே திரும்புகையில் அவளைக் கடத்திவரவேண்டும் என்றும், அதை ஜமால்கான் நிறைவேற்ற வேண்டும் என்றும் முடிவு செய்திருந்தார்கள். ஆனால் அன்று அலக்கிஷோரி வீட்டிலேயே தங்க நிச்சயித்துவிட்டதால் ஜமால்கான் வெகு நேரம் காத்திருக்க நேரிட்டது. நடுச்சாமம் நெருங்கியபோது இனி அவள் வெளிவர

மாட்டாள் என்று நிச்சயமாகத் தோன்றவே, அவளது அறையிலே புகுந்து அவளைப் பிடித்து வரவேண்டுமென்று அவன் முடிவு செய்தான்.

தீய எண்ணத்துடன் வீட்டின்மேல் ஏற முயன்றபோது ஆந்தை எதிர்வந்து அலறியது. அபசகுனத்தை அவன் பொருட்படுத்தவில்லை. ஓடுகளைப் பிரித்துக் கூரையினின்றும் அறைக்குள் குதித்தான்; அதுதான் அவள் அறை. அப்படி அவன் குதித்த மாத்திரத்தில் உண்டாகிய அரவம் அவளை விழிப்படையச் செய்தது. பீதியடைந்து கூவினாள்.

''எழுந்திருங்கள், எழுந்திருங்கள்! திருடன், திருடன்!''

அடுத்த நிமிடம் அவள் வாயை அடைத்தது முரட்டுத்தனமான இரும்புக் கை; ஜமால்கான் அவள் தொண்டையை அடைக்க முயன்றான். அலக்கிஷோரியின் குரலை முதலில் கேட்டு விழிப்படைந்தவள் அவள் அன்னை. கலவரமடைந்து மற்றவர்களையும் எழுப்பினாள். குமுதசுந்தரி தன் கணவனை எழுப்பினாள். வீட்டில் தீப் பிடித்துவிட்டதோ என்று அவள் எண்ணினாள். இன்னதென்று அவளுக்குப் புரிபடவில்லை. அலக்கிஷோரியின் குரல்தான் அது என்று அன்னை நிச்சயமாகக் கூறவே, அவள் அறைக்கு முன் வந்தார்கள். தூங்குவதற்கு முன் அவளே தனது அறையைத் தாழிட்டிருந்ததால் அவர்களால் உள்ளே போக முடியவில்லை. வீட்டில் நேர்ந்த கலவரத்தால் எழுந்த நவீன சந்திரன் சட்டென்று புரிந்துகொண்டான். அறைக்குள் நுழைய வேண்டுமென்றால் கூரை வழியாகக் குதிப்பதுதான் வழி என்று முடிவு செய்து கூரைமேல் ஏறலானான். ஜமால்கான் பிரித்துவைத்திருந்த வழியாக நவீன சந்திரன் உள்ளே குதித்தான். வாகவமாக அவன் செய்த சாகஸத்தை எல்லோரும் வியந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவன் வெற்றியடைய வேண்டும் என்று மனத்துக்குள் வேண்டிக்கொண்டார்கள்.

புதியதோர் எதிர்ப்பை ஜமால்கான் முற்றும் எதிர்பார்க்கவில்லை. பெண்ணானாலும் அலக்கிஷோரி அவனுக்கு எதிராகச் சமாளித்துக்கொண்டிருந்தாள். இப்போது நவீன சந்திரன் சேர்ந்துகொண்டான். இளவயதில் குஸ்திப் பயிற்சி பெற்றிருந்ததால் நவீன சந்திரன் ஜமால்கானைத் தைரியத்துடன் எதிர்க்கத் தொடங்கினான். ஆயுதம் தரித்திருந்த ஜமால்கான் நவீன சந்திரனைத் தாக்கத் தயங்கவில்லை. ஆனால் தான் மேற்கொண்ட காரியம் எளிதில் நிறைவேறாது என்ற எண்ணம் வந்தவுடன் ஜமால்கான் சோர்ந்து போனான். விடுபட்ட அலக்கிஷோரி அறைக் கதவுப் பக்கம் வந்து தாழைத் திறந்தாள்; வெளியே கதவின்மீது பாரம் இருந்ததால் அவள் திறந்த

மாத்திரத்தில் எல்லோரும் உள்ளே விழுந்தார்கள். குத்துச் சண்டையில் ஈடுபட்டிருந்த ஜமால்கானைப் பிடித்து மொத்தினர்கள். யார் அவனை அனுப்பினர்கள், எதற்காக அவன் வந்தான் என்ற காரணத்தை அவன் அடி தாளாமல் கக்கினன். மகளை உயிரோடு கண்ட ஆனந்தத்தில் தாய் அவளைக் கட்டிக்கொண்டு கண்ணீர் விட்டாள்.

குமுதசுந்தரி அந்தக் களேபரத்தில் நிதானமாக நின்று ஒரு மனிதரைத் தேடினள். இருளில் கீழே விழுந்துவிட்டிருந்த நவீன சந்திரன் பேச்சு மூச்சற்றுக் கிடந்தான்; அவனைச் சுற்றி இரத்தக் குளம்; சட்டென்று எப்படி அவனை மறந்து போனர்கள்! கீழே என்ன ஈரமாக இருக்கிறதே என்று திகைத்துப்போன குமுத சுந்தரி குனிந்து பார்த்தாள். ''ஆ, நவீன சந்திரர்'' என்று அவளது அலறலைக் கேட்டு எல்லோரும் நெருங்கி வந்தார்கள். ஜமால்கானின் கட்டாரியால் தாக்கப்பட்டிருந்த நவீன சந்திரனின் உடலிலிருந்து ரத்தம் குபுகுபுவென்று ஓடியது. ரத்தத்தைக் கண்டவுடன் கூட்டம் பேதலித்து நின்றது. திவான் வேலையாளை வைத்தியரைத் தேடிவருமாறு பணித்தார். ரத்தக் காயத்தைக் கட்டிப்போடத் துணி வேண்டுமென்று அவர் வேண்டிய போது எல்லோரும் உள்ளே ஓடினர்கள். அமைதியே உருவாகி நின்ற குமுதசுந்தரி சேலைத் தலைப்பைக் கிழித்தெடுத்துத் தந்தாள்.

சிறிது நேரத்தில் வைத்தியர் வந்தார்; அவர் செய்த சிகிச்சைமூலம் அவனுக்கு விழிப்பு வந்தது. அதிர்ஷ்டவசமாகப் பெருங் காயம் ஏற்படவில்லையென்றும், ஆயினும் பல நாட்கள் படுக்கையில் இருந்தாக வேண்டுமென்றும், வைத்தியர் ஆலோசனை சொன்னதால் நவீன சந்திரன் அங்கேயே தங்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

நவீன சந்திரனுக்குச் சிகிச்சை நடந்தது. அலக்கிஷோரி அதை மேற்பார்த்தாள். எதிர்பாராதவிதமாக நடந்துவிட்ட சம்பவத்தை மனேதைரியத்துடன் சமாளித்துத் தன்னைக் காத்தான் என்ற நன்றிப் பெருக்கால் அவள் அவனை அன்புடன் கவனித்துக்கொண்டாள். இந்தப் புதிய உறவு முறையால் அவன் வீட்டில் ஒருவனக மாறிப் போனன்.

குமுதசுந்தரி குறுகுறுத்த உள்ளத்துடன் தனித்து நின்று இலங்கினள்.

5. தங்கத் தட்டில் இரும்பு ஆணி

நவீன சந்திரனுக்குப் பணிவிடை புரிய ஆரம்பித்ததிலிருந்து அலக்கிஷோரி ஒரு விநாடிகூட அவனது கட்டிலேவிட்டு நகரவில்லை. அவளது நடத்தையில் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. உள்ளத்தில் பணிவு ஏற்பட்டுவிட்டது. முன்னெல்லாம் துடிதுடிப்புடனும் பிடிவாத சுபாவத்துடனும் இலங்கிய அவள் சற்றே கலங்கிப் போனாள். திருமணமானாலும் கணவனிடம் அதிகம் மரியாதை பாராட்டவில்லை அவள். தான் உண்டு, தன் செயல் உண்டு என்று பழகிய அவள் முதன் முதலாகப் பிறருக்குப் பணிவிடை செய்ய ஆரம்பித்தது ஆச்சரியமே. குமுதசுந்தரி புக்ககம் வந்ததிலிருந்தே அலக்கிஷோரியின் பழக்கவழக்கங்களில் சற்றே மாறுதல் ஏற்படத் தொடங்கியது. ஆனால் முழுமாற்றமும் விளைந்தது, நவீன சந்திரன் அந்தக் குடும்பத்தில் அதிதியாக வந்து அவள் உயிரைக் காத்ததிலிருந்துதான்.

''அடீ! என்ன ஆனாலும் அவர் வேற்று மனிதர். அவருடைய அறையிலே பணிவிடைக்காக அடைந்திருக்கக் கூடாது. இது நன்றாக இல்லை'' என்று தாயும் தோழியரும் சொன்னாலும் சரி, குமுதசுந்தரி ஒதுங்கி நின்றாலும், ''சரிதான்; நமது குடும்பத்தில் ஒருவராய்ப் போய்விட்ட பிறகு இனி என்ன நாணம் வேண்டியிருக்கிறது'' என்று நகைத்துவிட்டு அசட்டையாக இருந்து விடுவாள். அதுமட்டுமா, குமுதசுந்தரியைப் பிடித்திழுத்து, ''மதனி, இதில் என்ன வெட்கம்? நீயோ படித்திருக்கிறாய்; அவரோ கல்விமான். நீங்கள் இரண்டு பேரும் பேசினால் அது எவ்வளவு சுவையாக இருக்கும்! நீ ஏதாவது புத்தகம் ஒன்றை உரக்க வாசி. அவரும் கேட்கட்டும்; நானும் கேட்பேன்'' என்று யோசனை சொல்வாள். ஆனால் குமுதசுந்தரி தான் ஒருவேளைகூட நவீனசந்திரனுடன் நேருக்கு நேர் உரையாடுவது நேராதபடி பார்த்துக்கொண்டாள். நவீன சந்திரனும் ஏதாவது பொருள் வேண்டுமென்றால் அலக்கிஷோரியைப் பார்த்துத்தான் மொழிவான்.

தூய சூழ்நிலையில் புரட்சி விளைவிக்க வந்தாற்போன்று ஒரு நாள் தோழி கிருஷ்ணகலிகா அலக்கிஷோரியிடம் சொன்னாள்: ''அலக்பேன், கணவராக ஒருவர் வேண்டுமென்றால் அவர் நவீன சந்திரன்போலத்தான் வாய்க்கவேண்டும். உனக்கு எவ்வளவு பொருத்தமாக இருந்திருக்கும்?'' அலக்கிஷோரிக்கு அந்தச் சொற்கள் புதியனவாகவும் பொருத்தமற்றவையாகவும் தோன்றவே, தோழியைக் கடிந்துகொண்டாள்; விரைவில் அலக்கிஷோரியும் அந்தச் சொற்களை மறந்து போனாள்.

நவீன சந்திரனுக்கு மருந்து தரும் வேளை வந்துவிட்டதால் அவன் அறையில் அவள் நுழைந்தபோது அவன் ஆழ்ந்த நித்திரையில் ஈடுபட்டிருந்ததைக் கண்டாள். அவனை எழுப்புவதா, இல்லை சற்று நேரம் உறங்கவிடுவதா என்ற பிரச்னையில் அவள் தடுமாறி நின்றபோது முத்துமுத்தாக அரும்பிய வியர்வைத் துளிகளை கண்டு வியந்து நின்றாள். கறுத்த புருவங்களுக்கிடையே கண்ணிமைகளுக்குமேல் பளிச்சிட்டு நின்ற நீர்முத்துக்கள் நவீன சந்திரனின் தீர்க்கமான முகத்தின் சிவப்பு மேனியில் புதுச் சோபையை எழுப்பின. இந்தப் புதுப் பொலிவுடன் மன்மதனின் கணைகள் நீர்த்துளியில் பிரதிபலித்தாற்போன்று உணர்வு எழுந்தது. அந்த உணர்வு எழுப்பிய லாகிரியில் அவள் அவனுக்கு அடிமையானாள். நவீன சந்திரனின் முகத்துக்கு அருகில் அவள் குனிந்தபோது எதிரே மாட்டியிருந்த நிலைக் கண்ணாடியில் அவள் பார்வை சென்றது. அங்கே இரு அழகிய முகங்கள்; அவை எவ்வளவு பொருத்தமாகக் காட்சியளித்தன! சட்டென்று தோழியின் சொற்கள் அவள் எண்ண வெளியிலே எதிரொலித்தன.

சட்டென்று புரண்டு படுத்தான் நவீன சந்திரன். அப்படிச் செய்த மாத்திரத்திலே கட்டிலின்மேல் பதிந்திருந்த அலக்கின் கரத்தின்மீது நவீன சந்திரனின் கரம்பட்டது. தூக்கக் கலக்கத்தில் அவன் கையை இழுத்துக்கொள்ளவில்லை. எவ்வளவு நேரம் அவன் கை அவள் கைமீது பதிந்திருந்தது! அலக்கிஷோரியின் மனம் அந்த ஆனந்தச் சேர்க்கையில் திளைத்தது. சட்டென்று வெளியே பலகணி வழியாக ஏதோ ஒரு முகம் பார்த்துவிட்டு மறைந்தோடியது.

குமுதசுந்தரியின் தனிமையைக் கலைத்தாள் வனலீலா. "சொல்லட்டுமா புதுச் செய்தி ஒன்றை? சொன்னால் நம்பமாட்டீர்கள்" என்று ஆரம்பித்தாள். வனலீலாவின் மொழிகளைக் கேட்டுத் துயருற்றுப் போனாள் குமுதசுந்தரி. இப்படியும் நடக்குமா என்று திகைத்துப் போனாள். "நீங்கள் சரஸ்வதி சந்திரனாக இருந்தால் இப்படி நடந்திருக்குமா? நீங்கள் நவீன சந்திரனாகவே இருங்கள். அப்போதுதான் இந்த நிகழ்ச்சி நடக்கலாம்; இந்தச் செய்தியை நம்ப முடியும்!" நேரில் வந்து பார்க்க வேண்டுமென்று வனலீலா விடுத்த அழைப்பை ஏற்க மறுத்தாள் குமுதா. "எனக்கு அதில் அக்கறையில்லை" என்று மனம் இடிந்த குரலில் அவள் சொன்னாள்.

பொங்கிப் பாய்ந்தது துக்க வெள்ளம்; குமுதசுந்தரியால் தாங்க முடியவில்லை. மன வேதனையை வடித்து எடுத்துவிட வேண்டுமென்று ஸாரங்கியை எடுத்து இசை கூட்டினாள். துயரத்தை அது கோடு காட்டியது: ஸ்வர சப்தங்களில் நெஞ்சை

அள்ளும் வேதனை அலை பாய்ந்தது. என்றுமே உரத்த குரலில் பாடாதவள் இன்று பாடினாள். அவள் குரலில் இதயம் பேசியது.

அந்தச் சோகவெள்ளம் நவீன சந்திரனின் அறையில் பாய்ந்தது; இசையொளியில் நவீனசந்திரன் விழித்துக்கொண்டான். எதிரேயிருந்த அலக்கிஷோரியின் முகத்தில் அவன் என்றும் காணாத புதிய ரேகைகள்! நவீன சந்திரனுக்குப் புரிய நேரம் பிடிக்கவில்லை. கையை இழுத்துக்கொண்டான். இதோ குமுத சுந்தரியின் குரல்! அது ஏன் வேதனையை வடித்தெடுத்துக் காட்டுகிறது?

''அலக், என்னைச் சகோதரனாகக் கருதுமாறு கேட்டுக் கொள்கிறேன்.''

எதிர்பார்க்கவில்லை அவள்: உடலும் உள்ளமும் குறுகிப் போனாள். என்ன நடந்துவிட்டது என்று பதறிப் போனாள்.

நவீனசந்திரன் இயற்கையாக நடந்துகொண்டான். ''இனித் தவறு ஏதும் நடக்காமல் காத்துக்கொள்ளவேண்டும். மருந்து குடிக்கும் வேளை வந்துவிட்டதல்லவா? மருந்து எடுத்துத் தருகிறீர்களா?''

வெளியே வனலீலாவின் காதில் இந்தச் சொற்கள் விழுந்தன. நவீன சந்திரனின் தூய உள்ளத்தை அவள் அறிந்து கொண்டாள். விகல்பமாக ஏதும் நடந்திராமல் அவன் சமாளித்ததை மனத்திற்குள் எண்ணிப் பாராட்டினாள்.

சட்டென்று இசை நின்றது. ஸாரங்கி சரிந்து நிலத்தில் படிந்து விழுந்த ஒலியும், வளையல் ஓசை எழுந்து சட்டென்று நின்றதும் ஏதோ அசம்பாவிதச் செயல் நடந்துவிட்டதோ என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தன. வனலீலா ஓடினாள். மூர்ச்சையுற்று அலங்கோலமாகக் கிடந்த குமுதசுந்தரியைக் கண்டதும் கூக்குரலிட்டாள்.

''வந்து பாருங்கள், குமுதசுந்தரி மூர்ச்சையடைந்து கிடக்கிறாள்.''

சௌபாக்கியவதி தேவி அதைக் கேட்டு முதலில் ஓடினாள். அலக்கிஷோரியும் நவீனசந்திரனும் தொடர்ந்தார்கள். எல்லோரும் திகைத்துப் போனார்கள். சௌபாக்கியவதி தன் மருமகளுக்கு நேர்ந்த தீங்கைக் கண்டு அரற்றினாள்:

''குமுத், நீ பேசேன்! என் வீட்டின் மங்கள விளக்கல்லவா நீ! மீண்டும் சோபையிழந்த இந்த வீட்டிற்கு நீயல்லவா ஒளி தர வேண்டும்?''

நவீனசந்திரன் அவளைத் தேற்றினான்:

''குமுதசுந்தரி இப்போது பேசமாட்டாள். அவளுக்கு ஓய்வு தேவை. மூர்ச்சையைத் தெளிவிக்க நீர் கொண்டு வாருங்கள்.''

அலக்கிஷோரி ஓடினுள்; நீர் வந்தது. நவீனசந்திரன் அதைத் தெளித்தான். குமுதசுந்தரி விழித்துக்கொண்டாள். அது கன வுலக விழிப்பு. அவள் பிதற்றினுள். அந்தப் பிதற்றல் நிராசை யின் எதிரொலியே ஆகும். யார் அதைப் புரிந்துகொள்வார்கள்?

''இப்போது அவளை யாரும் தொந்தரவு செய்யக்கூடாது. சிறிது ஓய்வு தந்தால் பழைய நிலையை அவள் அடைவாள்'' என்று தைரியம் சொன்னுன் நவீனசந்திரன். அவன் சொற் படியே அவளை அவளது அறையில் படுக்கவிட்டுச் சென்றுர்கள்.

நவீனசந்திரன் அப்போது தீர்மானித்துக்கொண்டான்; இனியும் இந்த ஊரில், இந்த வீட்டில் ஒரு விநாடிகூட அதிகம் தங்கக்கூடாது, தனது பிரயாணத்தை இனி மேற்கொள்ள வேண்டும் என்று நிச்சயித்துக்கொண்டான்.

அந்தத் தீர்மானம் அதிக நேரம் நிலைக்கவில்லை. சிறிது நேரங் கழித்துப் புத்திதனரும் பிரமாததனரும் திரும்பி வந்த போது குமுதசுந்தரி பழைய நிலையை அடைந்துவிட்டிருந்தாள். அவள் உடல் தேர்ந்த செய்தி கேட்டு எல்லோரும் மகிழ்ச்சி யடைந்தார்கள். நவீனசந்திரன் தன் தீர்மானத்தைச் சொன்ன போது அதை ஒத்திப் போடவேண்டுமென்று கேட்டுக்கொண் டார்கள். வேண்டா வெறுப்பாக நவீனசந்திரன் அடிபணிந்தான்.

6. புத்திதனரின் வெற்றி

ஜமால்கானின் அந்தச் சம்பவத்திற்குப் பிறகு புத்திதன ருக்கு அமைதி என்பது அறவே தோன்றவில்லை. சம்பவத்தின் காரணம் தெரிந்தவுடன் அதைத் தொடர்ந்து நிகழப்போகும் பல சம்பவங்களையும் கற்பித்துக்கொண்டார். ''சடராயனே, இப்போது நான் புரிந்துகொண்டேன். எதிர்பாராதவிதமான தாக்குதலுக்கு இனி ஆளாகமாட்டேன்; இதோ நான் தயார்'' என்று மனத்தில் கூறிக்கொண்டார்.

பல ஆண்டுகளாக அமைச்சராக இருந்து வந்த சடராயன் அளவற்ற சக்தியுடன் இயங்கி வந்தான். மஹாராணுவிடம் இருந்த பயம் போய்விட்டது. ஆனல் திவானின் மதிப்பு உயர்ந்து வருவதை அவனுல் தாங்க முடியவில்லை. தனது முன்னேற்றத் திற்கு முட்டுக்கட்டையாகத் திவான் இருப்பதை உணர்ந்து அவரை ஒடுக்க அவன் திட்டமிட்டிருந்தான்.

அன்று சித்திரை மாதத்தின் வளர்பிறை ஒன்பதாவது நாள். மஹாராணியின் பிறந்த நாள். சம்ஸ்தானம் முழுதும் திருவிழாக் கோலம். அன்றைய தினம் தர்பார் கூடவிருந்தது. வைகறையில் எழுந்து நீராடிப் பூஜைகளை முடித்துக்கொண்டார் திவான். சௌபாக்கியவதி தேவியும் நீராடி மலரும் மஞ்சளும் நிறைந்து கணவருடன் இறைவழிபாட்டில் ஈடுபட்டாள். தூய்மையும் இனிமையும் பூண்டு திகழ்ந்த அவள், நவீனசந்திரனுக்குக் காதம்பரி காவியத்தில் வரும் மஹாச்வேதையையே நினைவுறுத்தினாள்.

கதிரவனின் செங்கதிர்கள் மெல்லப் படரும் நேரத்தில் திவான்காணுவில் நண்பர்கள் நிறைந்தார்கள். அன்று தர்பாரில் நிகழப்போகும் சில சம்பவங்களை உயிர் நண்பர்கள் எடுத்துரைத்தார்கள்; எச்சரிக்கை செய்தார்கள். புத்திதனர் உணர்ந்துகொண்டார். தமக்கும் தமது பதவிக்கும் நிகழவிருக்கும் தீங்கிலிருந்து தாம் தப்பலாம், குடும்பம் தப்ப இயலாது; ஆகவே, குடும்பத்தோரைக் காப்பாற்றிவிட வேண்டுமென்று முடிவு செய்தார். தர்பாரில் தமக்கு இழுக்கு ஏற்பட்டு, மன்னர் தம்மைப் பதவியினின்று நீக்க முயன்றபின் சடராயன் அந்த மகிழ்ச்சியில் குடும்பத்தைச் சிதைக்க முயல்வான் என்று கற்பனை செய்துகொண்டார். இந்த இக்கட்டான நிலையிலிருந்து காப்பாற்ற யார் உதவுவார்கள் என்று எண்ணியபோது அறைக்கு வெளியே இருந்த நவீனசந்திரன்மீது பார்வை சென்றது. உடனே அவனை அழைத்தார்.

''நவீனசந்திரா, உன்மேல் எனக்கு நம்பிக்கை உண்டு. என்னுடைய செல்வத்தை உன் கைகளில் ஒப்படைக்கிறேன். நீ ஓர் அறிஞன்; எல்லாம் அறிந்தவன். நீயே என்னைக் காக்க முடியும்.'' அவருடைய சொற்களைக் கேட்டமாத்திரத்தில் நவீனசந்திரன் திகைத்துப் போனான். ''நான் தங்கள் விசுவாசத்திற்குப் பாத்திரனல்லன் என்றே நினைக்கிறேன். ஆனாலும் தங்கள் உத்தரவைத் தலைமேற்கொண்டு நிறைவேற்றுவேன். நான் உறுதி கூறுகிறேன்'' என்றான்.

''நீ அறிந்திருப்பாய்: இன்று தர்பாரிலே எதிர்பாராத விதமாய்ச் சில சம்பவங்கள் நிகழலாம். இறைவனின் இச்சைப்படி எதுவும் நடக்கும். நல்லதே நிகழும் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறேன். தீமை ஏதேனும் நிகழ்ந்தால் உனக்கு உடனே குறிப்புணர்த்துவேன். விரைந்து வீடு திரும்பிக் குடும்பத்தை அழைத்துக்கொண்டு லீலாபுரம் சென்றுவிட வேண்டும். பிரமாததனன் அறியாப் பிள்ளை. அவனால் இதைச் சமாளிக்க முடியாது. ஊரைவிட்டுப் போக எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டிருக்கிறேன்.''

திடுக்குற்றுப் பேச்சற்று நின்ருன் நவீனசந்திரன். மகத்தான ஒரு பொறுப்பை எத்தகைய நம்பிக்கையுடன் அவனுக்கு அளித்திருக்கிருர்!

''விலைமதிப்புயர்ந்த இந்த ரத்தினத்தைத் தருகிறேன்'' என்று திவான் தம் விரலிலிருந்து கழற்றி அழகிய மோதிரம் ஒன்றை அவனிடம் தந்தார். ஒளிக்கதிர்களை இறைத்தது அந்த ரத்தினம்.

''என்னைத் தங்கள் குடும்பத்தினனுகவே கருதவேண்டுகிறேன். தேவியாரை நான் தாயாகக் கருதுகிறேன். அலக்பேனைச் சகோதரியாகப் போற்றுகிறேன். தங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரனுக இருப்பேன்'' என்று அறுதியிட்டுச் சொன்னுன் நவீனசந்திரன். திவான் திருப்தியுற்று எல்லோரையும் அழைத்துப் பேசினுர். இது நாள்வரை தர்பார்ச் செய்திகளைக் குடும்பப் பெண்டிரிடம் அவர் கூறியதில்லை. முதன்முதலாகச் சடராயனது சதிச் செயல் பற்றி விவரித்துத் தமக்கு ஏதேனும் தீங்கு நேரின் லீலாபுரம் சென்றுவிடவேண்டுமென்றும், அந்தப் பயணத்திற்கு நவீனசந்திரன் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வான் என்றும் அவர்களுக்கு அறிவித்தார். இடியோசை கேட்ட நாகம்போலப் பெண்கள் பதறிப்போனுர்கள். ஆனுலும், வெளிப்படையாகத் தங்கள் பதற்றத்தை அவர்கள் காட்டிக்கொள்ளவில்லை. மனத் தேர்ச்சி பெற்ற சௌபாக்கியவதி தேவி மனத்திண்மையுடன் வரப்போகும் சம்பவத்தை எதிர்நோக்கி நின்ருள்.

காலையுணவுக்குப் பின் திவான் தம் மனைவியை அழைத்துச் சில தஸ்தாவேஜிகளைக் காட்டி அவற்றைப் பத்திரமாகக் காக்கும் பொறுப்பை அவளிடம் தந்தார். மனைவியிடம் தைரியமாக இருக்குமாறு ஆலோசனை சொன்னுர். தர்பாருக்குப் புறப்படும் வேளையில் குமுதசுந்தரியும் அலக்கிஷோரியும் எதிர்ப்பட்டார்கள். ''அப்பா, குமுதசுந்தரியும் நானும் தங்களுக்கு அழகான சகுனத்தைத் தந்திருக்கிறேம்'' என்ருள் அலக்கிஷோரி. தந்தை புன்சிரிப்புச் சிரித்தார். அதில் நம்பிக்கை பளிச்சிட்டது.

நெடிதுயர்ந்த மரம் செடி கொடிகளுக்கிடையில் அமைந்திருந்தது தர்பார் மண்டபம். விரிந்திருந்த மலர்களினின்றும் மணம் வீசிப் படிந்தது. பறவைகளும் அணில்களும் மரங்களிலே கனிந்து குலுங்கும் பழங்களைத் தின்று உமிழ்ந்து கொண்டிருந்தன. அந்தச் சூழ்நிலை நவீனசந்திரனுக்குப் புதிதாகப் பட்டது. எங்கிருந்து எங்கு வந்துவிட்டான் அவன்! பம்பாயில் அவனுடைய தந்தையின் நினைவு வந்தது. இனியும் என்ன மாற்றங்கள் நிகழுமோ?

அரசாங்கப் பணியாளின் உரத்த குரல் நவீனசந்திரனை நினைவுப் பின்னணியிலிருந்து நனவுலகத்திற்கு இழுத்து வந்தது.

கட்டியம் கூறிக்கொண்டிருந்தான் ஆள். தர்பார் மண்டபம் விரைவிலே நிறைந்து போயிற்று. மக்கள் குவிந்தார்கள். மஹாராஜா வந்தடைந்தார். அலுவல்கள் ஆரம்பமாயின.

சடராயன் திவான்மீது தீவிரமான குற்றச்சாட்டுகளை ஆவேசமான குரலில் சொல்ல ஆரம்பித்தான். மிக்க அமைதியுடன் திவான் விடையிறுத்தார். அவரது வாதம் பொருளுக்குப் பொருளும் உணர்ச்சிக்கு உணர்ச்சியுமாக நிறைந்திருந்தது. அவர் பேசுகையில் மக்கள் ஆரவாரம் செய்து போற்றினார்கள். அவர் விடவில்லை. சடராயன் விவரித்த குற்றச்சாட்டுகள் அவனுக்கே பொருந்தும் என்று எடுத்துரைத்தார். ஆங்காங்கே அவற்றை நிரூபணம் செய்தார். சடராயன் இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. அவனால் பதில் அளிக்க முடியவில்லை. பொய்யினின்றும் உண்மை பிறந்தது, தீமையினின்றும் நன்மை விளைந்தது என்பதற்கேற்பச் சடராயனின் சதியினின்று புத்திதனர் புகழுடன் விடுபட்டார். மஹாராஜா தர்பார் கலைந்தது எனக் கூற, மக்கள் அகன்றார்கள். புத்திதனர் நவீனசந்திரனை அழைத்து உடனே வீடு சென்று நல்ல செய்தி கூறுமாறு பணித்தார். அவனுடன் பணியாள் ஒருவனையும் அனுப்புவித்தார்.

நவீனசந்திரன் புத்திதனரின் இல்லம் நோக்கி நடந்தான். ஸ்வர்ணபுரிக்கு வந்து நாட்கள் பல ஆகிவிட்டன. பலவகை அநுபவங்கள் பெற்றுவிட்டான். புத்திதனரின் வீட்டில் நிகழ்ந்த சம்பவங்கள், தர்பாரில் அவன் நேரில் கண்ட அரசியல் சதிகள்-எவ்வளவு புதிய விஷயங்களை அறிந்துகொண்டுவிட்டான்! இன்று இறைவனின் திருவருளால் புத்திதனருக்கு வெற்றியும் கிட்டிவிட்டது. இனி இங்கிருந்து கிளம்பவேண்டியதுதான்.

சட்டென்று வேலையாள் புதிய பாதையில் திரும்பினான்.

''நாம் வந்த வழியல்லவே இது?''

நவீனசந்திரனின் கேள்விக்கு வேலையாள், ''இது சுருக்கமான பாதை'' என்று விடையிறுத்தான். பாதையில் அழகியதோர் வீடு தென்பட்டது. யதேச்சையாக, ''யார் வீடு இது?'' என்று நவீனசந்திரன் வினவியதற்கு வேலையாள் கூறிய பதில் அவனைத் திடுக்கிடச் செய்தது.

''ஓ, உங்களுக்குத் தெரியும் என்று நினைத்தேன். திவான் அவர்கள் வீட்டில் இவ்வளவு நாட்கள் இருந்திருக்கிறீர்களே! ஸ்வர்ணபுரியின் பேரழகி கணிகை பத்மாதேவியின் வீடுதான் இது. பிரமாததனர் மிகுந்த நட்புக் கொண்டிருக்கிறார் இவ்விடத்தில்.''

பேரிடி விழுந்தாற்போன்ற உணர்வு; மின்னல் தொடர்ந்து பளிச்சிட்டது. அந்த ஒரு விநாடி நினைவுத் திரையில் தூய்மை நிறைந்த குமுதசுந்தரியின் அழகுப் பிம்பம் ஒளி வீசியது; ''குமுத்! இந்தக் கதி உனக்கு வேண்டாம்.''

உயர் குடும்பத்தாரிடத்திலும் ஆள்வோரிடத்திலும் நீதி முறைகள் நிலைத்து நிற்கவேண்டும். அவற்றால் அவர்களுக்கும் சமூகத்தாருக்கும் பெருத்த நன்மை ஏற்படும். சற்றே நெறி பிறழ்ந்தால் எத்தகைய தீங்கு நேரிட ஏதுவாகிறது! உயர் குடும்பத்தாரின் உறவால் கீழோருக்கு மதிப்பு வருகிறது. ஆனால் கீழோரின் தீய தொடர்பால் உயர்ந்தோர் தாழ்ந்தவராகிறார்கள். ஆகவே, சமநிலையான உறவும் சம்பந்தமும் மேலாகும்....

எண்ண அலைகளிலே அடித்துத் தள்ளப்பட்டான் அவன். வீடு நெருங்கியபோது நவீனசந்திரனுக்குத் தபால்மூலம் கடிதம் ஒன்று வந்திருந்தது.

அலக்கிஷோரியின் கணவன் விதுரப்பிரசாத் சபையில் நடந்த சம்பவங்களை விவரித்துக் கொண்டிருந்தான். நவீனசந்திரன் உடன் சேர்ந்து செய்தியைச் சொன்னான். நவீனசந்திரனுடன் நடந்த அந்தச் சம்பவத்திற்குப் பிறகு முற்றும் மாறிவிட்டிருந்தாள் அலக்கிஷோரி. கணவனிடம் முன்னைக் காட்டிலும் நேசம் செலுத்தத் தொடங்கியிருந்தாள். கணவனின் மொழிகளில் மிகுந்த ஈடுபாடு காட்டித் தந்தையின் வெற்றிச் செய்தியால் மகிழ்ந்துகொண் டிருந்தாள்.

வனலீலா அன்று அலக்கிஷோரியிடம் நவீனசந்திரன் தன்னைச் சகோதரனாகக் கருதுமாறு வேண்டியதைக் குமுதசுந்தரியிடம் தெரிவித்திருந்தாள். ஆகவே, குமுதசுந்தரிக்கு அவன் பாலிருந்த ஐயம் நீங்கிவிட்டிருந்தது.

தனக்கு வந்திருந்த கடிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டு உள்ளே நடந்தான் நவீனன். எதிரே குமுதசுந்தரி வந்துகொண் டிருந்தாள். அவள் கண்கள் அந்தக் கடிதத்தின்மீது பாய்ந்தன. ஊரைவிட்டுக் கிளம்பவேண்டும் என்று நிச்சயித்திருந்த நவீன சந்திரன் விடைபெற்றுக் கொள்பவன்போல் அவளை நோக்கினான்.

அப்போது வெளியே பேரிரைச்சல் கேட்டது. என்ன வென்று பார்க்க வீட்டிலுள்ளோர் வெளியே ஓடோடி வந்தார்கள். சடராயனின் மகள் கனகநந்தா தெருவில் ஓடிக்கொண் டிருந்தாள். மக்கள் அவளைத் தூற்றிக்கொண்டிருந்தார்கள். சௌபாக்கியவதி தேவி அவர்களுக்கு அறிவுரை கூறிக் கனகநந்தாவைக் காத்தாள். மக்கள் அமைதியடைந்து திரும்பினார்கள். யாவரும் வீட்டினுள்ளே மீண்டும் வந்து கூடத்தில் அமர்ந்தார்கள். அந்த இரைச்சலில் நவீனசந்திரனுக்கு வந்த கடிதம் கீழே

விழுந்துவிட்டிருந்தது. குமுதசுந்தரி அதைக் கையில் எடுத்துக் கொண்டாள். நேரே தன் அறைக்குச் சென்று இன்னொரு கடிதத்தையும் பிரித்தாள். அது தனது தங்கையிடமிருந்து வந்திருந்த கடிதம். அதில் சரஸ்வதிசந்திரனைப்பற்றி எவ்வளவோ எழுதப் பட்டிருந்தது.

7. சரஸ்வதி சந்திரன்

சரஸ்வதிசந்திரனின் தந்தை லக்ஷ்மீநந்தனர் பம்பாயில் செல்வம் நிறைந்த வணிகர். அதிகம் படித்தவரல்லர். ஆனால் அவனுடைய தாய் சந்திரலக்ஷ்மி கல்வியறிவும் ஒழுக்கமும் நிறைந்தவள். ஆகவே, தாயின் குணங்கள் யாவும் நிறைந்து சீலனாக விளங்கினான். சந்திரலக்ஷ்மியின் மாமியார் சிறிது கடுமையான சுபாவம் உடையவளானாலும் பேரன் பிறந்த பிறகு மருமகள் மீது அன்பும் மதிப்பும் கொண்டாள். மகனுக்கு ஐந்து வயதான போது சந்திரலக்ஷ்மி காலமானாள். விரைவில் லக்ஷ்மீநந்தனர் குமான் என்ற பெண்ணை மறுமணம் செய்துகொண்டார். குமான் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள் அல்ல. பேரன்மீது பெரும் அன்பு வைத்திருந்த மாமியாரின்மீது அவள் வெறுப்புக் கொண்டாள்.

பொருளுடன் நல்ல மதிப்பு வாய்ந்தவர் லக்ஷ்மீநந்தனர். கல்விமான்களுக்கும் அவர்களது கல்விக்கும் நல்ல சிறப்புச் செய்து வந்தார். அவர்களது இல்லத்தில் அறிஞர்கள் வந்துபோய்க் கொண்டிருந்தார்கள். சித்தியின் முறையான மேற்பார்வை இல்லாதுபோனாலும் சரஸ்வதிசந்திரன் அறிஞர்களின் உறவால் பெருத்த பயன் பெற்றான். ஏழைக் குடும்பத்தில் பிறந்திருந்த சந்திரகாந்தன் என்ற புத்திக் கூர்மையான சிறுவன் இளவயதில் சரஸ்வதிசந்திரனின் தோழனானான். பள்ளிக்கூடத்தில் இருவரும் சேர்ந்தே பயின்றார்கள். 'தி பாம்பே கௌட்' பத்திரிகையின் புகழ் பெற்ற ஆசிரியர் புல்வர் துரை, 'குர்ஜர வார்த்திக்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் உத்தத்லால், கவி தரங்கசங்கர், நூலாசிரியர் சாந்தி சர்மா, மராட்டி ஆசிரியர் தேசவத்ஸல வீரராவ் தம்பாடே, பார்ஸிப் பிரமுகர் ஷம்ஷர்ஜி ஆகியோர் லக்ஷ்மீநந்தனரின் பெரும் நண்பர்கள். இவர்களின் உறவால் லக்ஷ்மீநந்தனரின் செல்வாக்கு, சுதேச சம்ஸ்தானத்தில் பரவியிருந்தது. ரத்னநகரியின் திவான் வித்யாசதுரர் பம்பாய்க்கு வரும்போதெல்லாம் லக்ஷ்மீநந்தனரின் இல்லத்திலேயே தங்குவதை வழக்கமாகக் கொண்டார். சரஸ்வதிசந்திரனைப்பற்றி அப்போதே அறிவார். அவனுடைய புத்திக் கூர்மையும், கல்வியறிவும், விநயமும்,

பணிவும், இனிய சுபாவமும் அவரைப் பெரிதும் கவர்ந்திருந்தன. சரஸ்வதிசந்திரனுக்கு இன்னும் திருமணம் நிச்சயமாகவில்லை என்பது தெரியும். திருமணப் பேச்சில் பாட்டிக்கே முதலிடம் கொடுக்கவேண்டும். குமான் திருமணப் பேச்சில் அக்கறை காட்டவில்லை. ஆகவே, பாட்டி லக்ஷ்மீநந்தனரிடம் பேச்செடுத்தாள். அப்போதுதான் வித்யாசதுரர் பம்பாயில் அவர்கள் வீட்டில் தங்கியிருந்தார். தம் மகள் குமுதசுந்தரிக்கு வரன் தேடவே பிரயாணம் மேற்கொண்டிருந்தார். கிழவியிடம் அவர் புத்திமதியை நாடினர். அவள் சரஸ்வதிசந்திரனையே பிரஸ்தாபித்தாள். லக்ஷ்மீநந்தனரும் ஒப்புக்கொண்டார். ஆகவே, திருமணப் பேச்சுச் சட்டென்று ஆரம்பித்து மங்களகரமான முடிவுக்கு வந்தது. விரைவில் கல்யாணத் தேதியை நிச்சயிக்கவேண்டுமென்று முடிவு செய்தார்கள். குமான் வாய் பேசாது நின்றுள்.

சரஸ்வதிசந்திரன் பத்தொன்பதாவது வயதிலேயே எம்.ஏ., பட்டம் பெற்றிருந்தான். அடுத்த சில ஆண்டுகளில் வக்கீல் பரீட்சையிலும் தேர்ந்தான். பரீட்சைகளில் யாவும் சிறந்து விளங்கிப் பதக்கங்களும் பரிசுகளும் பெற்ருன். உடன் விளையாட்டுக்களிலும் தேகப் பயிற்சியிலும் கலந்து, உடலை உறுதியாக்கிக் கொண்டான். செல்வமும் அறிவும் சேர்ந்து வசீகரத்துடன் விளங்கினுன் அவன்.

குமுதசுந்தரி திருமண வயது நிரம்பியதும் தன் பெற்ருேர்களின் பேச்சுவார்த்தைகளில் அடிபடும் இந்தச் சரஸ்வதிசந்திரன் யார் என்று அறியத் தலைப்பட்டாள். தனக்கென்று நிச்சயிக்கப் பட்டிருக்கும் மணமகன் என்று தெரிந்துகொள்ள நேரம் பிடிக்கவில்லை. சரஸ்வதிசந்திரன் தன் தந்தைக்கு எழுதியிருந்த கடிதமொன்றை அவள் வாசிக்க நேர்ந்தது. வைகறைப் பொழுதில் எழும் கதிரவனின் செந்நிறக் கிரணங்கள், மொட்டவிழும் வெள்ளைக் கமலத்தின்மீது பாய்ந்து உண்டுபண்ணும் வண்ண ஜாலம் குமுதசுந்தரியின் உள்ளத்தில் எழுந்தது. அழகான கையெழுத்து, நளினமான நடை யாவும் அவள் உள்ளத்தைக் கவர்ந்தன. 'எனக்கும் ஏன் அத்தகைய கடிதம் வரக்கூடாது' என்று எண்ணிச் சரஸ்வதிசந்திரனுக்குக் கடிதம் ஒன்று வரைந்தனுப்பினுள். 'என் சந்திரனுக்குத் தங்கள் குமுதம்' என்று முடித்திருந்தாள்.

கடிதத்தைப் பெற்றதும் ஓடோடிச் சந்திரகாந்தனின் கையில் அதைத் தந்து, ''இதோ, இதைப் படித்துப் பார்'' என்று சொன்னுன். படித்துப் பரவசமாகுன் நண்பன்.

''ஆகா, பாக்கியம் என்ருல் இதைவிட எதைச் சொல்வது? ஆண்டவனுக்கு எவ்வளவு நன்றி செலுத்தினுலும் போதாது'' என்ருன் சந்திரகாந்தன்.

''ஆடவர்களுக்குப் பெண்ணின்மூலமா பெருமைமட்டும்?'' என்று வினவினுன் சரஸ்வதிசந்திரன். அவன் உள்ளத்திலே எவ்வளவோ கேள்விகள்.

''ரசிகனுன உனக்கு இந்த வைராக்கியம் எப்படி வந்தது என்று தெரியவில்லையே!''

''இந்தக் கடிதத்தை நான் வரவேற்கவில்லை என்று நினைக்காதே. ஆனுல் வாழ்க்கையில் மனைவியைத் தவிர எவ்வளவோ பிரச்னைகள் இருக்கின்றனவே! கேவலம் ஒரு மனைவியால் அவை யாவும் தீருமா?''

நண்பர்களுக்கிடையே விவாதம் வலுப் பெற்றது. முடிவு காணுத விவாதத்திற்குப் பிறகு சரஸ்வதிசந்திரன் வீடு திரும்பினுன். குமுதசுந்தரியின் கடிதத்தை மீண்டும் ஒரு முறை வாசித்தான். புதியதோர் விழிப்பை அவன் உள்ளத்தில் உண்டு பண்ணியது அது. இதுநாள் வரைக்கும் மனித வாழ்வைப் பெருங் கனவாகவே கருதி வந்தான். நிறைவும் தூய்மையுமற்றதுதான் உலகம், இதில் சம்சார பந்தங்கள் தேவையல்லவென்றும் எண்ணியிருந்தான். ஆனுல், திடீரென்று, திறந்த கூண்டிலிருந்து விடுதலை பெறும் பறவை இறக்கைகளை அடித்துப் பறப்பதுபோல, ரஸிக உணர்வு உள்ளத்தடியினின்று பெருகி வடிந்தது. தந்தை நிச்சயித்த திருமணத்துக்கு இணங்கினுன். குமுதசுந்தரிக்கு 'இனி உன் சரஸ்வதி சந்திரன்' என்று கடிதம் எழுதியனுப்பினுன்.

அநுபவமும் எழுத்தறிவும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட பொருள்கள் என உணர்ந்துகொண்டான். அவனது வைராக்கியம் போய்விட்டது. ஏதோ காரியம் நிமித்தமாக ரத்னநகரிக்குச் சென்று வித்யாசதுரரின் விருந்ினனுகத் தங்கினுன். மாடியறையிலே அமர்ந்து சந்திரகாந்தனுக்கு அவன் கடிதம் எழுத உட்காரும்போது அந்தச் சந்திப்பு ஏற்பட்டது.

லாவண்யம் நிரம்பிய அவள் வனப்பைக் கண்டு சிலையாகி நின்றுன் சரஸ்வதிசந்திரன். கண்கள் கண்களுடன் பேசின; வாய்ச் சொல் பலனற்றுப் போனது. ''இதோ என்னிடம் புத்தகங்கள் உள்ளன. உனக்கு வேண்டுமா?'' என்ற சரஸ்வதி சந்திரனிடம், அவள் பேசாமல் புத்தகங்களை வாங்கிக்கொண்டாள். அப்போது இருவருடைய கை விரல்களும் ஸ்பர்சித்தன. நீர் நிறைந்த மேகங்கள் எழுப்பும் மின்னொளிபோல சரஸ்வதி சந்திரனின் முகம் சுடர்விட்டது. விடியற்காலையில் புதிதாக எழும் கதிரவனின் கிரணங்கள் கமல மலரில் ஏற்றும் இரத்தச் சிவப்புப்போல் குமுதசுந்தரியின் முகம் தோன்றியது. சரஸ்வதி சந்திரன் பேச்சுத் தொடுத்தான்.

''என் குமுதம்!''

ததும்பும் காதலை அவள் பருகினாள். நாணத் திரையை அகற்றி மெல்லிய குரலில் அவள் பேசினாள்.

''சில நாட்கள் தங்கிவிட்டுப் போகக் கூடாதோ? ஏன் இவ்வளவு அவசரமாகத் திரும்ப வேண்டும் என்கிறீர்கள்?''

மணிகள் தொடுத்த வெள்ளிச் சதங்கையின் கிண்கிணி நாதமாக அவள் குரல் கொஞ்சியது. ஸாரங்கி வாத்தியத்தின் தந்தி, வெறும் ஸ்பர்ச வேகத்தால் எழுப்பும் ஸ்வர சப்தம்போல ஒலி மீட்டியது. சரஸ்வதி சந்திரனின் இதயப் பெட்டியில் நீங்காத நாதமாக அவள் குரல் நிறைந்து நின்றது.

சரஸ்வதிசந்திரன் பம்பாய் திரும்பினான். திரும்பியவுடன் அவளுக்குக் கடிதம் எழுதினான். பதில் குமுதசுந்தரி எழுதினாள். ''நீங்கள் ஊர் திரும்பியதிலிருந்து உங்கள் நினைவாகவே இருக்கிறேன். என் நா உங்கள் திருநாமத்தையே ஜபிக்கிறது. நான் உங்கள் புகழ் பாடிப் பாடி மனத்திலே உங்களை நிலைநிறுத்தி விட்டேன். முகூர்த்த நாள் விரைவிலே வைக்கப்போவதாக என் தந்தையார் நிச்சயித்திருக்கிறார். அந்த நன்னாளை எதிர்நோக்கியிருக்கிறேன்.''

புதியதோர் உணர்ச்சிஅலையில் மோதுண்டான் சரஸ்வதி சந்திரன். இந்தப் புத்தம் புதிய அநுபவம், இது நாள்வரை அவன் கனவு கண்டிருந்த எதிர்காலத்தில் எவ்வளவு மாறுதலை விளைவிக்கப் போகிறது! சலசலக்கும் நிர்மலமான நீரோட்டத்திலே நீலநிற வானின் நிழல் விழத்தான் செய்கிறது. அவனுடைய வாழ்விலும் குமுதம் நுழைந்து புதியதோர் பிரதிபிம்பத்தை நிலைநிறுத்திவிட்டாள்.

ஆனால் நினைத்ததெல்லாம் நடந்துவிடுகிறதா? நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும் என்பதில் எவ்வளவு உண்மை!

குமானின் மகன் தனநந்தன் வளர்ந்துவிட்டான். சரஸ்வதி சந்திரனுக்குக் கிடைக்கும் சலுகை அவனுக்குக் கிடைக்கவில்லை. குமான் பொறுமினாள். வயது நிறைந்த சரஸ்வதிசந்திரனை வியாபாரத்தில் பங்குதாரனாக்கியதும் குமானுக்குப் பொறுக்க முடியவில்லை. மெல்ல மெல்ல அவள் உள்ளத்தில் பொறாமை செல்லரிக்கத் தொடங்கியது.

ஒரு நாள் அந்திப் பொழுது லக்ஷ்மீநந்தனர் களைத்துப்போய் வீடு திரும்பினார். சரஸ்வதிசந்திரனைப்பற்றி- எப்போதும்போல விசாரித்தவுடன் குமானின் சொல் சுடு சொல்லாகச் சுட்டது.

''அப்போதே வந்தாகிவிட்டது; அப்பாவுக்கு முன் சாப்பிட்டும் போயாகிவிட்டது. பகலும் இரவும் புதிதாக வரப்

போகிறவளைப்பற்றியே சதா கனவு கண்டுகொண்டிருக்கிறன் உங்கள் பிள்ளை. இப்போதே அவன் இப்படியானல், அவள் வந்த பிறகு எப்படியோ?''

காதில் விழாததுபோலக் காட்சியளித்தார் அவர். குமாஸ்தா கொண்டுவந்த தந்திச் செய்தியில் மூழ்கிப்போனர்; வியாபாரத்தைப்பற்றிய செய்தி அது.

குமான் விடவில்லை.

''இன்றைக்குப் பாருங்கள், கடிதம் ஒன்று வந்தது. எனக்கு என்று எண்ணிப் பிரித்துப் பார்த்துவிட்டேன். உண்மையில் அது அவளிடமிருந்து வந்த கடிதம். என்னவெல்லாம் எழுதியிருக்கிறள்! இப்படியா கைப் பிடிக்கப் போகிற கணவனுக்குக் கடிதம் எழுதுவது? இதெல்லாம் பெண்களுக்குப் படிப்பால் வருகிற வினை. அதுவும் ஆங்கிலப் படிப்பு விபரீதத்தில் கொண்டு வந்துவிடுகிறது. சம்ஸ்தானத்தைச் சேர்ந்தவர்களே சூதுவாது நிறைந்தவர்கள். இப்போதே கணவனைக் கைக்குள் போட எத்தனிக்கிறள். அவள் வீடு புகுந்தபின் என் கதி என்ன ஆகுமோ?''

மனைவியின் பேச்சை அதிகம் பொருட்படுத்தாமல் கேட்டுவிட்டு, வாய் பேசாமல் வெளியே நடந்தார் லக்ஷ்மீநந்தனர்.

சரஸ்வதிசந்திரனின் தாயார் காலமானபிறகு அவளுடைய செல்வம் அவனுக்கு வந்தது. அவளுக்குச் சொந்தமான இரண்டு பங்களாக்களில் ஒன்றான வால்கேசுவர் பங்களாவும் அவன் கைக்கு வந்தது. அங்கே தன் விருப்பப்படி அலங்கரித்து, குமுதசுந்தரியின் உருவப் படத்தைத் தக்கதோர் அறையில் மாட்டி அழகுற வைத்தான். அவளுக்குப் பரிசாக அனுப்பவேண்டுமென்று மோதிரமொன்று வாங்கியிருந்தான். இதையெல்லாம் பார்த்திருந்த சந்திரகாந்தன் சரஸ்வதிசந்திரனுக்குக் குமுதசுந்தரி மீதுள்ள பற்றைப் பாராட்டி அவர்கள் இன்பம் நிரந்தரமாக இருக்கவேண்டுமென்று ஆண்டவனை வேண்டினன். ஆனல் நடக்கப்போவது என்ன என்று யாருக்குத் தெரியும்?

இதெல்லாம் குமானின் காதில் விழாமல் இல்லை. தன் கணவனிடம் வேளை வரும்போதெல்லாம் சரஸ்வதிசந்திரனைப் பற்றிக் கோள் சொல்லி வைத்தாள். வயதான பாட்டிக்கு அவளுடைய சதி தெரிந்துவிட்டது. ஆகவே, தனக்குள்ள செல்வத்தைச் சரஸ்வதி சந்திரனுக்கே எழுதிவைக்க வேண்டுமென்ற எண்ணத்தைச் சொன்னபோது, சரஸ்வதி சந்திரன் தனக்குள்ள செல்வம் போதுமென்றும், தன் சகோதரன் தனநந்தனுக்குப் பாட்டி செல்வத்தைக் கொடுத்துவிடலாமென்றும் சொன்னன். கிழவி மனம் ஒப்பவில்லை. குமுதசுந்தரி அவன் மனக் கோயிலில் புகுமுன்னர்ச் சரஸ்வதிசந்திரன் தேசாடனம்

செய்வதாக நிச்சயித்தான். சம்சாரத்திலிருந்து விடுபட்டு நாடு முழுதும் சாதாரண யாத்திரிகளுகச் சுற்றி வரவேண்டும், அப்படிச் சென்றுவரச் சில ஆண்டுகள் பிடிக்கும் என்றபோது அவன் தந்தை கூடாது என்று சொல்லிவிட்டார். இருந்தாலும் கிழவிக்குச் சிறிது பயமே. பொருள் குவிப்பதிலும் சுகபோகத்திலும் மன நாட்டமில்லாத சரஸ்வதிசந்திரன், இன்று பொருள் வேண்டாமென்று சொன்னாலும் என்றைக்காவது அல்லலுறுங் காலத்தில் உறுதுணையாக உதவட்டும் என்று நிச்சயித்துத் தனது சொத்தை நிர்வகிக்க ஒருவரை நியமிப்பது என்றும், அவரது மறைவுக்குப் பின் சரஸ்வதிசந்திரனும் அவனுடைய மனைவியும் அதை அநுபவிக்க வேண்டுமென்றும் கிழவி முடிவு செய்தாள். இதற்கான தஸ்தாவேஜிகளைத் தயார் செய்யச் சந்திரகாந்தனை வேண்டினாள். அவ்விதமே காகிதங்கள் தயாராயின. சாட்சியாகக் கையெழுத்திடுமாறு லக்ஷ்மீநந்தனரை அழைத்தபோது அவர் தஸ்தாவேஜியைப் படித்துவிட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தார். கையெழுத்துப் போடு என்று தாய் மீண்டும் அவரைப் பணித்த போது மறு பேச்சுப் பேசாமல் கையெழுத்துப் போட்டு வைத்தார்.

குமான் இதை அறிந்தவுடன் தன் மகனுக்குச் செல்வம் எதுவும் சேரக்கூடாது என்பதற்காகச் சரஸ்வதிசந்திரன் செய்த சதி இது என்று நினைத்துக்கொண்டாள். அப்படியே கணவனிடம் சொன்னபோது ஒரு வேளை உண்மையாக இருக்கலாமோ என்று அவர் சந்தேகம் கொண்டார். அன்றிலிருந்து சரஸ்வதிசந்திரனின் எல்லாச் செயல்களையும் சந்தேகக் கண்ணுடன் பார்க்கத் தொடங்கினார். அவ்வளவுதான்; உரைகல்லில் ஏறிய அவ்வளவு தங்கமும் பித்தளையாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணினார். தந்தைக்கு எதிராக இருக்கிறான் மகன் என்று வெறுப்புக்கொண்டார்.

குமானின் சகோதரன் தூர்த்தலால் எவ்வளவோ நாட்களாக முயன்றுகொண்டிருந்த சந்தர்ப்பம் வந்துவிட்டது. சரஸ்வதிசந்திரனுக்கு எதிராகத் தூபமிட்டு வியாபாரத்தைக் கைப்பற்றிவிட வேண்டுமென்று தங்கையும் தமையனும் இட்ட சூழ்ச்சி பலித்து முழுப் பயனும் தந்துவிட்டது. வியாபாரத்தின் சில பொறுப்புகளை ஒரு நாள் தூர்த்தலாவிடம் அவர் ஒப்புவித்த போது தூர்த்தலாவின் துர்ச்செயல்களை மகன் பிரஸ்தாபித்தான். ''என் மனத்தில் தோன்றியபடி செய்தேன்'' என்று தந்தை பேசியபோது மகன் வாய்மூடி நின்றான்.

பல நாட்களுக்கு முன்னால் குமான் தனது பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த செல்வத்தைப் பங்குகளில் இட நிச்சயித்திருந்தார் தந்தை. அப்போது சரஸ்வதிசந்திரனிடம்

நம்பிக்கை இருந்த காலம். ஆகவே, மகனை அழைத்துக் கேட்ட போது ஸ்திரீதனத்தைப் பங்குகளில் இடவேண்டாமென்றும் சர்க்கார் கடன் பத்திரங்களில் இடுவதே உசிதம் என்றும் சொல்லியிருந்தான். தன் தாய் சந்திரலக்ஷ்மியின் செல்வத்தை வயது வந்தவுடன் சர்க்கார் கடன் பத்திரங்களிலிருந்து மீட்டுப் பங்குகளில் இட்டிருந்தான். சில காலம் கழித்து ருஷியாவுடன் போர் மூண்டபோது சர்க்கார் கடன் பத்திரங்கள் மதிப்பிழந்தன; ஆனால் பங்கு விலை உயர்ந்தது. குமானின் செல்வத்திற்கு ஓர் ஆலோசனையும், தனக்கு வேறாகவும் கருதி மகன் தமக்கு நஷ்டம் உண்டாக்கிவிட்டான் என்று தந்தை கருதினார். இவ்வாறே அவன் மீதிருந்த நம்பிக்கையவ்வளவையும் அவர் இழந்தார்.

ஒரு நாள் காலை இருவரும் உணவுக்குப்பின் காரியாலயம் சென்றார்கள். தாம் யோசித்து வைத்திருந்ததுபோல் மகனிடம் பேசினார்.

''ரொம்ப நாட்களாகவே சொல்லவேண்டு நினைத்திருந்தேன். இன்று நேரம் வந்திருக்கிறது. மிகவும் வருந்துவதற்குரிய செய்தி இது.''

''நீங்கள் சொல்லாதுபோனால் வேறு யார் எனக்குச் சொல்வார்கள்?''

''ரொம்ப நாட்களாகவே பார்த்துக்கொண்டு வருகிறேன். நீ பழையமாதிரி இல்லை. ரொம்ப மாறிவிட்டிருக்கிறாய். உன் மனம் ரொம்பக் கலைந்து போயிருக்கிறது. உனக்கு விவாகம் செய்ய நிச்சயித்திருப்பது உனது நன்மைக்குத்தான்; குடும்பத்தில் கிலேசமும் வேதனையும் உண்டுபண்ணுவதற்கல்ல. எத்தனையோ இளைஞர்கள் திருமணத்திற்குப் பிறகு மனைவியரின் பேச்சுக்குக் கட்டுப்பட்டுப் புத்தி பேதலித்துப் போய்விடுகிறார்கள். உன் விஷயத்தில் மனைவி வருவதற்கு முன்னமேயே நீ மாறிவிட்டாய். அவள் வந்தபிறகு என்ன நடக்கும் என்பதைக் கற்பனை செய்ய முடியாது.''

மகன் திடுக்கிட்டு நின்றான்; இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை அவன். எத்தகைய அபாண்டமான பழி இது! அவன் பேரில்மட்டுமிருந்தால் அப்படி மனமுடைந்திருக்க மாட்டான். ஒன்றும் அறியாத களங்கமற்ற குமுதசுந்தரியின்மேல் அத்தகையதொரு பழி! அவனுடன் அறிமுகமானதாலல்லவா அவள் மீது பழி ஏற்பட்டிருக்கிறது! அதற்கு அவனல்லவா காரணம்!

ஆனால் மனத்தைக் கட்டுப்படுத்தி நின்றான் மகன். தந்தைக்கு எதிராக அவன் என்றுமே பேசியதில்லை. அவர் சொல் மிக்கதோர் மந்திரமில்லை [illegible] மன மொழி

மெய்யால் நினைத்திருந்தான். தந்தை பேசினார்; அவ்வளவும் சுடுமொழிகள் - குமானின் நல்ல பாடம்; அவனைச் சுட்டெரித்தன. ''பாட்டி கையெழுத்திடச் சொன்னாள்; கண்ணை மூடிக் கையெழுத்திட்டேன். எனக்குத் தெரியாது, அது உன் காரியமென்று. பங்குகளைப்பற்றி உன் புத்திமதி கேட்டேன்; எனக்கு நஷ்டமே விளைந்தது.'' மகன் தனது பணியில் தவறிவிட்டான், கடமையை மறந்து போனான் என்று தம் கருத்தைத் தெரிவித்தார் தந்தை.

எல்லாம் புதுமையாக இருந்தன. எவ்வளவு பெரும் பழிகள்! யாருடைய சூழ்ச்சிச் செயல் இது? இறைவன் இவ்வளவு சோதனை செய்கிறானே என்றெல்லாம் மனமிடிந்து போனான். ஆனாலும் எதிர்ப் பேச்சுப் பேசுவது புத்திர தர்மத்திற்கு விரோதமென்றே கருதினான். தலைகுனிந்து உறக்கத்திலிருந்து அப்போதுதான் விழித்தெழுந்தாற்போல மெல்ல நகர்ந்தான்.

தந்தையை விட்டு அகன்றவுடன் தூர்த்தலாலை அழைத்துத் தன் பொறுப்பையும் சாவிகளையும் தந்து வெளிநடந்தான். நேரே தன் நண்பன் சந்திரகாந்தனை அழைத்துக்கொண்டு வால் கேசுவர் பங்களாவுக்குச் சென்றான். அங்கே குமுதசுந்தரியின் படத்திற்கு முன்னால் சிறிது நேரம் நின்றவன் விம்மலை அடக்க முடியாமல் கதறினான். நண்பன் பதறிப் போனான்.

''என்ன நடந்துவிட்டது? இப்படி மனம் கலங்கவிடலாமோ?''

''சந்திரகாந்தா! இனி நான் என்ன செய்வேன்? ஆண்டவனின் கடுஞ் சோதனை இது. தந்தையின் செல்வம் இனி எனக்குத் தேவையில்லை.''

''என்ன சொல்கிறாய்? எனக்குப் புரியவில்லை.''

''நான் அவருடைய செல்வத்திற்காக வாழ்கிறேன் என்று எண்ணிக்கொண்டு விட்டார். என்னிடத்தில் அவருக்குள்ள எல்லா நம்பிக்கையும் குன்றிவிட்டது; என்மேல் இருந்த ஆசை, அன்பு எல்லாம் போய்விட்டன. நான் எதற்காக வாழவேண்டும்? அவருடைய பேச்சிற்கிணங்கித்தான் சம்சாரத்தில் ஈடுபட நிச்சயித்தேன். அவருடைய அன்பு போய்விட்ட பிறகு எனக்குச் செல்வம் எதற்கு? பயனில்லாத செல்வந்தான் அது.''

''பயனில்லாத செல்வம் என்று எப்படிச் சொல்கிறாய்?''

''இன்று நான் தெரிந்துகொண்டேன்: செல்வத்தின் உதவியின்றிப் பெறும் நலன்கள் தேசநலனும், சமூகநலனும், ஆன்ம நலனுமே.''

சந்திரகாந்தன் நண்பனின் பாட்டியினுடைய திட்டத்தைச் சொன்னான். சரஸ்வதிசந்திரன் அதில் ஈடுபாடு காட்டவில்லை.

உலகத்தைத் துறந்து செல்வதில் பயனில்லை என்றும், வக்கீல் தொழிலில் ஈடுபடலாமென்றும் புத்திமதி சொன்னான். சந்திர காந்தனின் சொல் ஏதும் சரஸ்வதிசந்திரனின் காதில் ஏறவில்லை.

''சந்திரகாந்தா, வறுமை நிலையில் சுகதுக்கங்களையும் நிராதரவான நிலைமையையும், வாழ்வுக் கொடுமைகளையும், ஏழைமையில் மறைந்து மிளிரும் குடத்துள் விளக்குகளையும், கல்வியும் அது இல்லாத பிரதேசங்களையும் சுற்றிப் பார்த்துவர வேண்டுமென்று எனக்குப் பல நாட்களாக விருப்பம். அதை நிறைவேற்றப் போகிறேன்.''

''நீ இப்படிச் செய்தால் உலகம் என்ன சொல்லும்?''

''உலகத்துக்குப் பயந்தால் எதுவும் முடியாது. நான் பேரும் புகழும் தேடியதில்லை. கீர்த்தியும் அபகீர்த்தியும் பொய் யான தராசுக் கோல்கள். அவற்றில் நாம் எதையும் நிறுத் துப்பார்க்கக்கூடாது.''

''சரி, குமுதசுந்தரியை நினைத்துப் பார்த்தாயா?''

''நினைத்து என்ன பயன்? ஆண்டவன் அவளைக் காப்பாராக! சில நாட்களில் உண்டான நட்பு, சில நாட் பொழுதில் இனி மறையவேண்டும். நல்ல வரன் கிடைத்தவுடன் என்னை அவள் மறக்கமுடியும்.''

''நீ பெருந் தவறு இழைக்கப் போகிறாய், அதுவும் குமுத சுந்தரிக்கு எவ்வளவு தீங்கிழைக்கப் போகிறாய், தெரியுமா?''

''குமுதசுந்தரி என்னை மன்னித்துவிடுவாள், என்னை மணந்துகொண்டு இனி என்ன இன்பம் பெறுவாள்? என் வீட் டில் வந்து இருந்துகொண்டு இனி என்ன மகிழ்ச்சியடைவாள்? சீக்கிரமே நல்ல வரன் ஒருவனை மணந்துகொண்டு நலம் பெறு வாள்; என்னை மறந்துவிடுவாள்.''

''திருமணத்திற்குப் பிறகு நீங்களிருவரும் தனியே ஏன் குடித்தனம் இருக்கக்கூடாது? பெற்றோரின் வீட்டிலேயே சேர்ந்து ஏன் இருக்கவேண்டும்?''

''அது நடக்காத காரியம். தந்தையிடமிருந்து தனித்து வாழ்வு நடத்துவது என்பதைக் கற்பனை செய்வதே கொடிய செயல். அப்படித் திருமணத்துக்குப் பிறகு நான் தனித்திருந் தால் தந்தைக்கு இழுக்குத்தான் ஏற்படும். அவருடைய நலனே என் லட்சியம். நான் போகிறேன், சந்திரகாந்தா. அவருக்கு நீதான் சமாதானம் சொல்லவேண்டும். நீ என்னை மறந்து விடாதே.''

சந்திரகாந்தனின் மனத்தில் துயரம் தோய்ந்தது. அவன் எவ் வளவோ சொல்லிப் பார்த்தும், சரஸ்வதிசந்திரன் பிடிவாத

மாக இருப்பது தெரிந்தது; இது ஆண்டவனின் திருவுள்ளம் என்று மனத்தைச் சமாதானப்படுத்திக்கொண்டான்; இரவு முழுதும் நண்பனோடு தங்குவதாகச் சொன்னபோது காலையில மீண்டும் சந்திக்கலாம் என்று சரஸ்வதிசந்திரன் விடையிறுத்தான். சந்திரகாந்தன் விடை பெறும்போது அவனிடம் சின்னஞ்சிறு கைப்பெட்டி ஒன்றைத் தந்து, ''இதை இப்போது வைத்துக் கொள். நாளை இதுபற்றிய செய்தி தருகிறேன்'' என்று கூறினான்.

மறு நாள் பொழுது புலர்ந்தது. மணி ஏழாயிற்று; எட்டும் அடித்துவிட்டது. சொன்னபடி சரஸ்வதிசந்திரன் வண்டி ஏதும் அனுப்பவில்லை. கவலை கொண்டான் சந்திரகாந்தன். தானே வால்கேசுவர் செல்வதாகத் தீர்மானித்து நடந்தான். பங்களாவின் தோட்டக்காரன், ''எஜமானர் விடியற்காலையில் சௌபாத்திக் கடற்கரையில் உலாவப் போனார்'' எனக் கூறினான். சந்திரகாந்தன் கடற்கரையை நோக்கி நடந்தான். அங்கே நண்பனின் குதிரைவண்டி நின்றுகொண்டிருந்தது. ஆனால் சரஸ்வதிசந்திரனைக் காணவில்லை! வண்டிக்காரன் அவர் உலவப் போயிருப்பதாகவும் சில கடிதங்களைச் சேர்ப்பிக்கச் சொன்னதாகவும் கூறிக் கடிதங்களைச் சந்திரகாந்தனிடம் கொடுத்தான். சந்திரகாந்தனுக்கான கடிதத்துடன் அவன் தந்தைக்கும் ஒரு கடிதம் இருந்தது. நடுங்கும் கரங்களுடன் தனக்கான கடிதத்தைப் பிரித்துப் படித்தான் சந்திரகாந்தன்:

> ''ஆண்டவனின் இல்லத்தில் யாருக்கும் துயர் ஏற்படுவதில்லை. நான் செல்வதால் யாருக்கும் நஷ்டம் ஏற்படப் போவதில்லை. என் சகோதரன் தனநந்தனிடம் நட்புப் பூண்டு அவனை மகிழ்விப்பாய். செல்வத்தின் பயன் அவனையே சாரவேண்டும். என்னைப் பற்றிய நினைவு எப்போதாயினும் எவருக்கேனும் ஏற்பட்டால் அதுவே பெருஞ் செல்வமெனக் கருதுவேன்.
>
> ''நான் இப்படிச் செய்வதைத் தடுக்கப் பிரயாசை ஏதும் எடுத்துக்கொள்ளாதே. பிறவிக் கடலை நீந்திப் பெருமான் சந்நிதியடைவதே என் நோக்கம்.''

கடற்கரையில் உலவப்போகிறேன் என்று கூறி உலகத்தையே துறந்து செல்லத் துணிந்துவிட்டான், சரஸ்வதிசந்திரன் என்பதை அறிந்ததும் சந்திரகாந்தன் துயரில் மூழ்கிப் போனான். மனத்தைப் பன்முறை தேற்றிக்கொண்டாலும் சரஸ்வதிசந்திரனையே நம்பியிருக்கும் குமுதசுந்தரியின் கதி இனி என்ன என்ற எண்ணம் வந்ததும் மனம் இடிந்து போனான். நண்பனின் தந்தையைச் சந்தித்துச் செய்தியைமட்டும் தெரிவித்

தான். கேட்டு மனம் சோர்ந்துபோனுர் அவர். குமரன் சற்றே வெட்கம் அடைந்தாள். ஆனுலும் அவளுக்குச் சந்தேகம்.

''போகிறபோக்கில் எதையாவது எடுத்துக்கொண்டிருப்பான்; வீட்டைச் சோதனை போட்டுப் பாருங்கள்'' என்றவுடன் லக்ஷ்மீநந்தனருக்கு உண்மையிலே கோபம் வந்துவிட்டது. தம் மகனை அவ்வளவு இழிவாகக் கருத இடம் உண்டா?

''எங்கே போயிருப்பான்? பெண்டாட்டியைத் தேடிக் கொண்டு மாமனுர் வீடே அடைக்கலம் என்று போயிருப்பான், ரொம்ப ரோஷக்காரன்தான்'' என்ருள் குமரன் மேலும். கொடிய சொற்கள், வேதனையைத் தந்தன. வெறும் கோபம் வந்தென்ன? எல்லாவற்றுக்கும் தாமல்லவா காரணம்? 'எவ்வளவு ஆத்திரப்பட்டுவிட்டோம்! உண்மை எது என நிதானமாக ஆய்ந்து முடிவுக்கு வர நாம் முயன்றதுண்டா? இப்போது எத்தகைய நிலை வந்துவிட்டது!' தம் மகனிடம் பேசிய கடுஞ்சொற்கள் நினைவுக்கு வந்தன. அவர் பொருமினுர்.

''சந்திரகாந்தா, நீ எல்லாம் அறிந்தவன். எல்லாவற்றையும் எனக்குச் சொல்...'' என்று அவனைத் தனியாக அழைத்துப் போனுர். சந்திரகாந்தன் சரஸ்வதிசந்திரன் அவருக்கென எழுதிய கடிதத்தைத் தந்தான். புத்திரசோகம் நீராகப் பாய்ந்தது; ஆருத் துயரில் ஆழ்ந்து போனுர்.

''சந்திரகாந்தா! அவனை எங்கே காண்பேன்? உனக்குத் தெரியும்; நீ தேடி அழைத்துவா'' என்று அரற்றினுர். சந்திரகாந்தன் அவரது நிலையைக் கண்டு பெருந்துன்பம் அடைந்தான்.

''நான் என்ன செய்யட்டும்? அவன் எங்கே போயிருப்பான் என்பது தெரியவில்லையே! நீங்கள் மட்டுந்தானு? அந்த அபாக்கியவதி குமுதசுந்தரி இதை எப்படிப் பொறுப்பாள்? தங்கள் வீட்டுக் குலவிளக்கு இனி மங்கித்தான் போய்விட்டது.''

சந்திரகாந்தன் விடை பெற்றுக்கொண்டான். குமரன் வந்து நின்ருள். கணவனின் நிலையைக் கண்டாள். அவளுக்கும் தன் சகோதரன் தூர்த்தலாலுக்கும் அருமையான சந்தர்ப்பம் அல்லவா வந்துவிட்டது?

சந்திரகாந்தனும் லக்ஷ்மீநந்தனரும் மிகவும் முயன்ருர்கள். ஆனுல் சரஸ்வதிசந்திரனின் இருப்பிடத்தையோ அவனைப் பற்றிய செய்தியோ எதுவுமே கிடைக்கவில்லை.

ஒரு நாள் சந்திரகாந்தனுக்கு, 'தி பாம்பே லேட்' பத்திரிகையாளர் புல்வர் துரையினிடமிருந்து செய்தி வந்தது. அவரிடம் சென்றவுடன் தெரிந்த கையெழுத்துடன் கூடிய கடிதம் ஒன்றை அவர் தந்தார். புரிந்துகொண்டான். அது சரஸ்வதிசந்திரனின் கையெழுத்துத்தான். உறையின்மீது தபால்

முத்திரையில் ஸ்வர்ணபுரி எனப் பொறித்திருக்கக் கண்டான். ஸ்வர்ணபுரிக்குச் செல்லவேண்டுமென்று தீர்மானித்தான். குமுத சுந்தரி ஸ்வர்ணபுரியின் திவான் புத்திதனரின் குமாரனை மணந்திருக்கிறுள் என்ற செய்தி அவனுக்குத் தெரியும் ஆகவே, முதலில் வித்யாசதுரரைச் சந்தித்துத் தக்க அறிமுகக் கடிதத்துடன் செல்லலாம் என்று முடிவு செய்து ரத்னநகரிக்குக் கிளம்பினுன்.

வித்யாசதுரரும் அவருடைய மனைவி குணசுந்தரியும் சந்திரகாந்தனை வரவேற்று உபசரித்தார்கள். சரஸ்வதிசந்திரனைப் பற்றி விவரமாகக் கூறினுன் சந்திரகாந்தன். வித்யாசதுரர் சொன்னுர்:

''சந்திரகாந்தா, எனக்குத் தோன்றுவது இதுதான்: நமது ஆங்கிலக் கல்வியறிவில் ஓர் பெரிய களங்கம் இருக்கிறது—மேலை நாட்டுக் கல்வி முறையிலே என்று சொன்னுல் பொருந்தும். மனக்குறை, அதிருப்தி என்பதே மேலைநாட்டு நாகரிகத்தின் வித்து ஆகும். இந்த நாகரிகத்தில் கட்டுண்டவர்கள் சூதாட்டக்காரர்கள் போல முன்னேற்றத்தை நாடிச் செல்கிறுர்கள். சரஸ்வதிசந்திரனை எடுத்துக்கொள்ளலாம்: உலக வாழ்வைத் துறந்துவிட்டு உலகத்தைத்தான் நாடிச் சென்றுன். இது என்ன முன்னேற்றம்? லக்ஷ்மீநந்தனரைப் போன்ற தந்தைமார்கள் பலர் உண்டு; ஆனுல் அவரது பேச்சால் இப்படி ஒரு முடிவுக்கு வரச் சரஸ்வதிசந்திரனுல்தான் முடியும்.''

வித்யாசதுரரின் பேச்சு சந்திரகாந்தனுக்கு உற்சாகம் அளிக்கவில்லை. அவர் பேசி முடித்தார்.

''நடக்க வேண்டியது நடந்துவிட்டது. இதை எப்படித் தடுக்க முடியும்?''

அன்று மாலையே சந்திரகாந்தன் ஸ்வர்ணபுரிக்குக் கிளம்பினுன். புல்வர் துறைக்கு வந்த கடிதத்தில் நவீனசந்திரன் என்றே கையெழுத்து இடப்பட்டிருந்தது. அதில் விலாசம் ஏதுமில்லை. ஆனுலும் அது சரஸ்வதிசந்திரனுகத்தான் இருக்க வேண்டும் என்று அநுமானித்தான். அது நிச்சயமில்லை என்பதற்காக 'நவீன சந்திரன், ஸ்வர்ணபுரி' என்று கடிதம் எழுதினுன். அந்தக் கடிதம் நவீனசந்திரனை யடைந்து பின்னர்க் குமுதசுந்தரியிடம் சேர்ந்தது.

சந்திரகாந்தனும் தகப்பனுரும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த குமுதசுந்தரியின் தங்கை குஸுமசுந்தரி அந்த உரையாடலைப்பற்றிக் கடிதம் எழுதியிருந்தாள்; அது சுந்தரிக்கு வந்து சேர்ந்தது.

8. மனமொடிந்த குமுதசுந்தரி

தங்கையின் கடிதத்தைப் படித்ததும் குமுதசுந்தரி மன முடைந்து போனாள். 'என் பொருட்டாகவா அவர் இவ் வளவு கொடுமைகளைத் தாங்க நேர்ந்தது?' என்று உள்ளம் கசிந் தாள். கடந்துபோன அந்த ரம்மியமான நாட்களை எண்ணி அவள் மனம் வருந்தியது. ஆறாத் துயரம் கண்ணிலிருந்து நீராக வடிந்து கடிதத்தை நனைத்துவிட்டது.

கடிதத்திலிருந்து அவள் அறிந்துகொண்டாள்: சந்திரகாந்தன் சரஸ்வதிசந்திரனைத் தேடி வருகிறான்; அவனுடைய தந்தையிட மிருந்து புத்திதனரின் பேருக்கு அறிமுகக் கடிதத்துடன் வரு கிறான். தாய் ஸ்ரீலாபுரிக்கு அருகில் உள்ள பத்ரேசுவரர் கோயி லுக்குத் தரிசனத்திற்காக வருகிறாள். அப்போது குமுதமும் அவ் விடம் வந்தால் எல்லோரையும் சந்திக்கலாம்.''

நவீனசந்திரனுக்குச் சந்திரகாந்தன் வரைந்த கடிதம் சற்றே விசித்திரமாக இருந்தது:

''எத்தகைய துயர் மிகுந்த வாழ்வு!

பகலும் இரவும், நாளும் கிழமையும், எதிலும் மாற்றமில்லை. தந்தையின் பாசம், நண்பனின் நட்பு, உள்ளக் கமலத்தவளின் உறவு - எல்லாம் மடிந்து விட்டன. இது என்ன நிலை?

இனியதும் இன்னாததும், கல்வியும் கல்லாமை யும், மென்மையும் திண்மையும், ரஸனையும் வைராக் கியமும் ஆக ஒன்றுக்கொன்று ஒவ்வாத குணங்கள் உன்னிடம் ஒருங்கே அமைந்துவிட்டிருக்கின்றன.''

அது உண்மைதானா? குமுதசுந்தரி கண்களைத் துடைத்துக் கொண்டாள். உணவு கொள்ளும் நேரம் வந்துவிட்டது. மாடிப் படியிலிருந்து கீழே இறங்கி வந்தாள். எல்லோரும் உணவுக்காக உட்கார்ந்திருந்தார்கள். தனக்காகக் காத்திருக்கிறார்கள் என்று எண்ணிய மாத்திரத்தில் மனத்திலே குடிகொண்டிருந்த சிந்தனை கள் யாவும் மறைந்துபோயின. வானத்திலே எழும் வானவில்லைப் போலத்தான் எண்ணங்கள் எழுப்பும் வண்ணக் கலவையும்; இரண்டும் நெடுநேரம் நிலைத்து நிற்பனவல்ல.

பிரமாததனன் எங்கே? கல்வியறிவு மிகுந்த தன் மனைவி யின்மேல் அவனுக்கு அளவற்ற மதிப்பு இருந்தது உண்மை தான். ஆனால் கணவன் - மனைவி உறவில் கல்வி ஞானத்திற்கு மட்டும் முக்கிய இடம் தரப்படுவதில்லை. மனைவியிடம் விலாசத் திற்குப் பதில் வெறும் வித்தை இருந்து பயனில்லை. மனைவி யிடம் நெருங்கியபோதெல்லாம் கற்றறிந்த ஞானியிடம் இருப்

பதாக எண்ணினான். ஆகவே, ஆனந்தத்திற்கும் உல்லாசத்திற்கும் நண்பர்களையும் பத்மாவையும் நாடினான்.

மாடியில் குமுதசுந்தரியைத் தேடி வந்தபோது அவள் அங்கே இல்லை. ஆகவே, பிரமாததனன் சற்று நேரம் என்ன செய்வது என்று தெரியாமல் நின்றான். அங்கே மேஜைமீது ஆங்கிலக் கவிதைகள் அடங்கிய புத்தகமும், சம்ஸ்கிருத நூல் ஒன்றும், குஜராத்தி மநுஸ்மிருதியும், அத்யாத்ம ராமாயணமும் இருந்தன. நாற்காலியில் உட்கார்ந்து ராமாயண புத்தகத்தை எடுத்துக்கொண்டான். பக்கங்களைப் புரட்டிப் படங்களைப் பார்த்தான். களைப்படைத்தவன் போல் புத்தகத்தை வைத்து விட்டு மூலையில் சாய்த்து வைத்திருந்த ஸாரங்கியின் கம்பிகளை மீட்டினான். குமுதசுந்தரி அதை வாசிக்கும்போதெல்லாம் மனம் உருகிப்போவான்; ஆனால் அவள் பத்மாவைப் போல என்றேனும் பாடியதில்லை.

ஏதோ படிக்கலாம் என்று தான் உடன்கொண்டுவந்திருந்த ஆங்கில நாவலை விட்ட இடத்திலிருந்து படிக்கக் கட்டிலில் சாய்ந்துகொண்டான். எதிரே இருந்த நவீனசந்திரனின் அறையில் சத்தம் கேட்டது. பலகணியைத் திறந்து நோக்கினான். அங்கே கிருஷ்ணகலிகா!

இங்கே எங்கே வந்தாள் இவள்?

நடத்தை குறைவான இந்த யுவதியின் உள்ளத்தில் நவீன சந்திரனைப்பற்றிய எண்ணம் வலுப்பெற்றிருந்தது. தனது நாத்தியிடம், 'இவளுடைய நட்பு வேண்டாம்' என்று பன்முறை குமுதசுந்தரி சொல்லியிருக்கிறாள். கிருஷ்ணகலிகாவுக்கு இது தெரியாமல் இல்லை.

கீழே குமுதசுந்தரியும் அலக்கிஷோரியும் மற்றவர்களும் பேசிக்கொண்டிருக்கையில் சட்டென்று எழுந்து கிருஷ்ணகலிகா மாடி நோக்கிச் சென்றவுடன் குமுதசுந்தரிக்குச் சந்தேகம் எழுந்தது. ஆனாலும் நாம் யார், அவள்மேல் சந்தேகப்படுவதற்கு என்று உட்கார்ந்திருந்தாள். கிருஷ்ணகலிகா திரும்புவதற்கு நேரமாகவே இருப்புக் கொள்ளாமல் குமுதசுந்தரி எழுந்தாள்.

மாடியில் நவீனசந்திரன் இல்லாது போகவே கிருஷ்ண கலிகா சற்றே ஏமாந்து போனாள். 'அதனால் என்ன? பிரமாத தனனைக் கைக்குள் போட்டுக்கொண்டால் என் புருஷனுக்கு நல்லதல்லவா? அப்புறம் அந்தக் குமுதசுந்தரியையும் வஞ்சம் தீர்த்ததாகுமே' என்று எண்ணினாள் அவள். அப்போதுதான் பிரமாததனன் பலகணியைத் திறந்திருந்தான்.

குமுதசுந்தரி மாடி ஏறிவந்தாள். அவள் வந்த மாத்திரத்தில் தான் இருந்த அறையிலிருந்து கிருஷ்ணகலிகா வெளியே ஓடினாள். குமுதசுந்தரி ஒரு நிமிஷம் நின்று வெறுப்புடன் தலையைக் குனிந்துகொண்டாள்.

குமுதசுந்தரி தன் அறைக்குச் சென்றாள். கதவு உள்ளே தாழிடப்பட்டிருந்தது. தட்டியவுடன் பிரமாததனன் திறந்தான். குமுதசுந்தரி நுழைந்தாள். அவன் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான். வேண்டாத செயல் ஒன்றைப் பார்த்துவிட்ட இருவரும் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றார்கள். குமுதசுந்தரிக்குத் துயரம் தொண்டையை அடைத்தது. அவள் விம்மியிருக்க வேண்டும். பிரமாததனன் எழுந்து வந்து அவளுடைய தலையைத் தன் அகன்ற மார்பில் சாய்த்துக்கொண்டான். கற்புடைய மங்கையர்க்குக் கணவனின் அன்பு தவிர வேறு எது சிறந்த பாக்கியம்? ஆதுரத்துடன் கணவனின் கண்களை நோக்கினாள் அவள்.

பிரமாததனன் கலகலப்பாகப் பேச ஆரம்பித்தான். அன்று சபையில் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி விசாரித்துத் தனக்குக் கிடைத்த புதிய உத்தியோகத்தைப்பற்றிச் சொன்னான். குமுதசுந்தரியும் தன் தாய் பத்ரேசுவரம் வருவதாய்க் கூறி அவளைப் பார்த்துவர அநுமதி வேண்டினாள். கணவன் அநுமதி தரவே, அவள் உள்ளம் மலர்ந்தது.

கடந்து சென்ற நாட்களை மறப்பதும், நடப்புக்கால நிகழ்ச்சிகளிலிருந்து விடுபட்டு மன அமைதி பெறுவதும் எதிர்காலத்தைச் செப்பனிட்டு எதிர்நோக்கியிருப்பதும் சிறந்ததோர் ஆத்ம சக்தியாகும்.

மாறிவிட்ட அரசியல் நிகழ்ச்சிகளைப்பற்றிப் புத்திதனர் மஹாராணுவுடன் பேச்சு வார்த்தை நடத்திவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார். வண்டியில் நண்பன் நர்பேராம், நவீனசந்திரன் இருவரும் இருந்தார்கள். நர்பேராமுடன் அரசியலைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அவனுடைய இல்லம் வந்தவுடன் அவன் இறங்கி விடை பெற்றுக்கொண்டான். வண்டி நகர்ந்ததும் நவீனசந்திரனுடன் பேச்சுக் கொடுத்தார் அவர்.

''நவீனசந்திரா, உனக்காக ஓர் ஏற்பாடு செய்திருக்கிறேன்'' என்று கூறி அவனுக்குத் தாம் தரப்போகும் உத்தியோகம்பற்றி விவரித்தார். நவீனன் தன்மேல் அவருக்கு இருந்த அன்பை எண்ணி மனவெழுச்சியுடன் பேசினான்:

''தங்களுடைய இந்தக் கருணைக்கு என்றும் நான் கடமைப்பட்டவன். ஆனால் நானே ஒரு யாத்திரிகன். இன்று இங்கே, நாளை எங்கேயோ! இன்னும் சில நாட்களில் என் நண்பன்

ஒருவன் வரவிருக்கிறுன். அவனைச் சந்தித்துவிட்டு என் பயணத்தை மீண்டும் மேற்கோள்ள நிச்சயித்திருக்கிறேன்'' என்றுன்.

அவனுடைய சொற்கள் அவரைச் சற்றே ஆச்சரியத்தில் மூழ்கடித்தன. இதுவரை யாரும் அவர் பேச்சை மறுத்ததில்லே. ஆனுலும், ராஜதர்பாரில் உத்தியோகம் என்பதை எவர்தாம் மறுப்பார்கள்? அப்படி மறுத்து அதில் சுவை காட்டாத நவீன சந்திரனிடம் அவருக்கிருந்த மதிப்பு அதிகரிக்கத்தான் செய்தது.

''யார் அவன் உன் நண்பன்? எப்போது இங்கே வருகிறுன்?'' என்று கேட்டார் புத்திதனர். அதற்குள் வீடு நெருங்கியது. வண்டி நின்றது. இருவரும் இறங்கி உள்ளே நுழைந்தார்கள்.

''நீ போகவேண்டும் என்ற உன் தீர்மானத்தை வீட்டில் யாரும் வரவேற்கமாட்டார்கள் என்பது நிச்சயம்'' என்றுர் புத்திதனர்.

''நானும் தங்கள் அன்பை எப்படி மறக்க முடியும்? ஆனுல் நான் போகவேண்டிய தருணம் வந்துவிட்டது'' என்றுன் அவன்.

அறைக்குள் நுழைவதற்கு முன் கமர்ஸேனை அழைத்து, ''இன்று வித்யாசதுரரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. என்னைச் சந்திக்கச் சந்திரகாந்த் என்பவர் நாளைக் காலே வருகிறுர். அவர் வரும்போது ஒருவேளை நான் தர்பாரில் இருப்பேன். அவருக்கு எல்லாச் சௌகரியங்களையும் செய்து கொடு'' என்றுர் அவர்.

நவீனசந்திரன் உடனே, ''ஐயா, நான் அவரை அறிவேன். ரத்னநகரியிலிருந்து வரவேண்டுமானுல் ராஜேசுவர் மார்க்க மாகத்தானே வரவேண்டும்?'' என்றுன்.

''ஆமாம்; எப்போது வருவார் என்று நிச்சயம் தெரிந்திருந் தால் நான் அங்கேயே ஆளை அனுப்பியிருப்பேன்.''

''நான் போகிறேன்; நேரமானுலும் உணவுக்காகத் திரும்பி விடுவேன்.''

''அவசியமில்லை; எவ்வளவு நேரந்தான் காத்திருப்பாய்?''

நவீனசந்திரன் தன் அறையில் நுழைந்து உடை மாற்றிக் கொண்டான். இரவு மணி பன்னிரண்டு அடித்தும் உறக்கம் வரவில்லை. வெளியே இருள் கவிந்த ஆகாயம். மனம் குழம்பிய வனுய் நாற்காலியில் அமர்ந்தான்.

9. தூய்மையின் வெற்றி

பிரமாததனன் லீலாபுரி சென்றிருந்தான். ஆகவே, குமுதம் அலக்கிஷோரி, அவளுடைய தோழியர் ஆகியோருடன் பேச்சில் கலந்துகொண்டாள். மாலை நேரமானதும் சௌபாக்கியவதி தேவி, பூஜையை முடித்துவிட்டு எல்லோருக்கும் சாவித்திரி கதையை வியாக்கியானம் செய்தாள். உள்ளத்தைப் பிழிந்தெடுக்கும் அந்தக் கதையைக் கேட்டுக் குமுதசுந்தரி மனமுருகிப் போனாள். மாமியார் கதை சொல்லிக்கொண்டிருந்த நேரத்தில் ஏனோ கிருஷ்ணகலிகாவின் ஞாபகம் வந்தது. மனம் நொந்து போனாள். கதை முடிந்தவுடன் நேரே மாடியில் தன் அறைக்குச் சென்று விம்மத் தொடங்கினாள். சற்று நேரத்திற்கெல்லாம் அவளைத் தேடிக்கொண்டு வந்தார்கள் அலக்கிஷோரியும் வனலீலாவும். சிவந்திருந்த கண்களையும் அயர்ந்த முகத்தையும் கண்டு அவள் வருத்தத்திற்குக் காரணம் என்னவாயிருக்கும் என்று அறியாமல் நின்றார்கள். விளையாட்டில் சற்று நேரம் கழித்தால் மனம் தேறும் எனக் குமுதசுந்தரியைச் சதுரங்கம் ஆடச் செய்தார்கள். ஆட்டம் அவளுக்கு ரசிக்கவில்லை. என்றும் வெற்றி காணும் அவள் பல தவறுகள் செய்தாள். ஆட்டமும் முடிந்தது. வனலீலா உடன் கொண்டுவந்திருந்த 'புத்தி பிரகாஷ்' பத்திரிகையில் வெளிவந்துள்ள 'நிலவு' என்னும் கவிதையின் பொருளை விளக்குமாறு குமுதசுந்தரி வேண்டினாள். கவிதை என்றதும் அவள் உள்ளத்தில் குதூகலம் எழுந்தது. படித்துப் பொருள் சொன்னாள் வனலீலா. பின்னர் இருவரும் அகன்றார்கள்.

இரவு வந்துவிட்டது. கவிதையை மீண்டும் படித்துச் சிந்திக்கத் தொடங்கினாள். அழகான கவிதை; நாயக, நாயகியின் உறவுபற்றி விவரித்தது, மனத்தைக் கவரும் அக்கவிதை. எளிய எண்ணம் என்றாலும் மனங் கவரும்வண்ணம் புனைந்திருந்தான் கவிஞன். ஏனோ கவிதையைப் படித்ததும் சரஸ்வதிசந்திரனையே எண்ணினாள். அது தவறல்லவா? கற்புடைய மங்கையர்க்குத் தகாத செயலல்லவா அது? அவள் அறிவாள். ஆனால் மனத்தை எப்படி அடக்குவது?

எழுந்து அலமாரியில் சின்னஞ்சிறு கைப் பெட்டியில் பட்டுக் கைக்குட்டையில் முடிந்து வைத்திருந்த கடிதங்களை எடுத்தாள். திருமணத்திற்கு முன் ரமணீயமான அந்தச் சில நாட்களில் அவன் அவளுக்கு அன்புடன் எழுதிய கடிதங்கள். தன்னையே மறந்தவளாகப் பிரித்தெடுத்து வாசிக்கத் தொடங்கினாள். கடிதம் அவள் மனக்கண் முன்னால் சரஸ்வதிசந்திரன் முகமாக மாறியது. அந்த முகத்தில் அவள் மனம் பறிகொடுத்

தாள். அது பேசும் முகமாய், பாடும் முகமாய், ஆசை முகமாய் அவளைப் பரவசப்படுத்தியது. கடிதத்தைக் கீழே வைத்தாள். சுற்றுமுற்றும் நோக்கினாள். நோக்குமிடமெல்லாம் அவனன்றி வேறில்லை. இது என்ன? பார்வை சென்ற இடமெல்லாம் சரஸ்வதிசந்திரனின் முகம்!

மெல்ல எரிந்துகொண் டிருந்தது விளக்கு. எத்தனை நேரம் எரிந்துகொண் டிருந்தது?

"நான் தங்களுக்கு என்ன அபராதம் செய்துவிட்டேன்? ஏன் என்னை இப்படித் தவிக்கவிட்டீர்கள்? தமயந்தியைக்கூட நளன் இந்த நிலையில் வைத்ததில்லையே?" என்று அரற்றினாள், நீர் மல்கும் கண்களுடன்.

வெளியிலிருந்து புத்திதனரும் நவீனசந்திரனும் திரும்பிய அரவம் கேட்டது. நவீனசந்திரனின் குரல் எழுந்தது. ஆமாம், அவனேதான். அன்றொரு நாள் தழுதழுத்த குரலில் ஆசையை அள்ளிவிட்ட அதே குரல்...சரஸ்வதிசந்திரனேதான்.

நவீனசந்திரன் மாடி ஏறித் தன்னறைக்குள் நுழைந்து செல்லும் ஒலி கேட்டது. படபடவென்று உள்ளம் அடித்துக் கொண்டது. அந்தத் தனிமை, அந்த எண்ண விகல்பம் - இரண் டின் சங்கமத்திலே குமுதசுந்தரி என்ன செய்வதென்று துடி துடித்தாள். தன் அறைக் கதவு நோக்கி நடந்தாள். இருமுறை சென்று இரு முறையும் திரும்பி வந்தாள். இளம் வயதிலே அவள் பயின்ற நற்பண்பின்மேல் அவள் சிந்தனை ஒரு முறை சென்று திரும்பியது. கொடியதோர் செயலைப் புரிவதாக எண்ணிக்கொண்டாள்; உடன் மனம் திடுக்கிட்டாள்.

எங்கிருந்தோ குரல் ஒன்று எழுந்து வந்தது. அது பாடுங் குரல். கனிவும் காதலும் நிரம்பித் தவழும் குரல். மனைவி யொருத்தி தன் மடிமீது கணவனது சிரத்தை வைத்து மெல் லிய கரங்களால் நெற்றியை வருடி நித்திரையில் ஆழ்த்தும் இனிய குரல்: "சரத் காலத்தில் மின்னும் மின்னலைப்போன்று என்னை ஆட்கொள்ள வந்த மதனனின் வில்லம்பே, நீ வாராய்!"

குமுதசுந்தரியால் பொறுக்க முடியவில்லை. அந்த அனலி லிருந்து வெளிவந்து நவீனசந்திரனின் அறையின் முன்வந்தாள். அறைக் கதவு ஒருக்களித்திருந்தது. கதவின்மேல் நாகப் பாம்பு போன்று கருத்துப்போன அந்தத் தனது கையால் மெல்லத் திறக்க எத்தனித்தபோது....பெரியதோர் கருநிழல் படியக் கண்டாள். அது யார் உருவம்? மெல்லத் திரும்பியபோது நிழலும் திரும்பியது. ஆமாம், அது அவளுடைய நிழலேதான். நிழல் பேசியது: "உனக்கும் கிருஷ்ணகலிகாவுக்கும் என்ன வித்தியாசம்?"-அதை அவள் எதிர்பார்க்கவில்லை. அது மனச்

சாட்சிதான். அவளைச் சுட்டெரித்தது. அடுத்த நிமிஷம் நிழல் தாயாகியது. பாஞ்சாலியின் துயில் உரியத் துச்சாதனன் முயன்ற போது அடைக்கலமாய் வந்த கண்ணபிரான்போல், எதிரே நின்ற நிழலைக் கண்டதும் குமுதசுந்தரி துடித்துப் போனாள். சட்டென்று தன் நிலையை உணர்ந்துகொண்டு கழிவிரக்கம் கொண்டாள். 'என்ன செய்யத் துணிந்தேன்! இந்தத் தீய செயலிலிருந்து காத்துவிட ஆண்டவன் எவ்விதம் வழிகாட்டுகிறான்!' என்று அவள் உணர்ந்துகொண்டாள். கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது.

''என்ன செய்யத் துணிந்தேன்? தூய்மையற்ற இந்தப் பெண்ணை நீ மணந்திருக்கக்கூடாதுதான்'' என்று மனத்தில் அரற்றிக்கொண்டாள். எந்தக் கடிதம் அவள் மனத்தில் விகல்பமான மன உணர்ச்சிகளை எழுப்பியதோ அதை மீண்டும் தூய உணர்வு வந்தவளாய் எடுத்துமடித்து அலமாரியில் வைத்து மூடினாள். 'கணவனைவிடக் கண்கண்ட தெய்வம் ஏது? அவர் சுகமே உன் சுகம்' என்ற அவள் மாமியாரின் குரல் எதிரொலித்தது.

அதோ, அவள் தாய் கண்ணீரும் கம்பலையுமாய், பிறந்த வீட்டிலிருந்து கணவனிடம் செல்லத் தான் கிளம்பியதும் கூறிய மொழிகள்-''இன்றுவரை நீ என்னிடமிருந்தாய், இனிப் புக்ககம் போகிறாய். உன்னை நீயே காத்துக்கொள்ள வேண்டும். நீ படித்த படிப்பு உன்னையே பழிக்க இடம் வைத்துக்கொள்ளக்கூடாது. என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பதை நீயே அறிந்திருக்க வேண்டும்.''

அதோ தழுதழுத்த தந்தையின் குரல்: ''குமுதம், என் கண்ணே! நாங்கள் உனக்குத் தாய் தந்தையராலும் அவன் தான் எல்லோருக்கும் அம்மையப்பன். எங்கே உனக்குத் துணையில்லையோ அங்கே அவன்தான் உன் துணை.''

குமுதசுந்தரி விம்மியழுதாள். அந்தக் கண்ணீரில் மாசு துடைக்கப்பட்டவளாய்த் தூய்மை பெற்றாள். உலகத்தில் சோதனை செய்யும் கட்டங்கள் ஏதுமின்றி மனத்தைத் தூய்மையுடன் வைத்திருப்பவர்கள் பாக்கியவான்கள். ஆனால், இடுக்கண் வந்து தவறிழைத்துப் பின்னர் மனம் வருந்தித் தாமே திருந்தித் தூய்மை பெறுபவர்களின் பாக்கியம், அதைவிடப் பெரிதே.

குமுதசுந்தரி முடிவுக்கு வந்தாள். ''இன்றிலிருந்து சரஸ்வதிசந்திரருக்கும் எனக்கும் உறவு ஏதுமில்லை என்பது நிச்சயம். வாழ்வில் எனக்குக் கணவன்தான் லட்சியம். ஆனாலும் சரஸ்வதிசந்திரருக்கு நான் செய்யக்கூடும் நன்மை ஒன்றே ஒன்றுதான். அவரிடம் நேரில் சென்று, 'நீங்கள் பம்பாய் திரும்பி

விடுங்கள். அங்கே நாட்டுப் பணியில் ஈடுபடுங்கள் என்று நான் ஏன் சொல்லக் கூடாது? அப்படிச் சொல்ல வேண்டுமென்றால் இன்றே செய்ய வேண்டும். நானன்றி இதை யார் அவருக்குச் சொல்லப் போகிறார்கள்? இப்போதே சொல்லிவிடவேண்டும். ஒருவேளை சந்திரகாந்தர் வருவதற்குமுன் அவர் இங்கிருந்து போனாலும் போய்விடுவார்.''

சரஸ்வதிசந்திரனுக்குக் கடிதம் எழுதி அதை அவன் பார்க்கும்வண்ணம் அவன் அறையில் சேர்த்துவிடவேண்டும் என்று எண்ணிக் கடிதம் எழுத முனைந்தாள்.

எழுதிய கடிதத்தை எடுத்துக்கொண்டு அவன் அறைக்கு நடந்தாள். முன்னிருந்த மனக்கிலேசம் இப்போது இல்லை. கற்புடைய மங்கையர்க்குக் கற்பே துணை. ஆகவே, மனத்திண்மையுடன் நடந்தாள்.

சந்திரகாந்தனைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் அவன். உறங்குகிறான் என்று எண்ணிய அவள், அவனது சட்டைப் பையில் கடிதத்தை இட்டபோது அவன் விழித்துக் கொண்டான். குமுதசுந்தரியின் கையில் தனது கடிதத்திற்குப் பதில் இன்னொரு காகிதம் தட்டுப்படவே சற்றுத் தடுமாறினாள். அதற்குள் அதுவாகவே வெளிவந்துவிட்டது. குமுதசுந்தரி பிரித்துப் பார்த்தாள். அவனுடைய கையெழுத்துத்தான். மங்கிய விளக்கொளியில் முத்துமுத்தான எழுத்துக்களில் நெஞ்சத்தை வடித்திருந்த கவிதை அது. பம்பாய்க்குத் திரும்பிச் செல்லுங்கள் என்று சொல்லவந்த அவளுக்கு விடை கிடைத்துவிட்டது. அவள்மீது அவன் வைத்திருந்த நேசத்தையும், குடும்பத்தின் கௌரவத்திற்காக அதைத் தியாகம் செய்துவிடவேண்டிய நிர்ப்பந்தத்தையும், அவன் எடுத்துக்கொண்ட பீஷ்ம சந்நியாசம் அவளை மேலிட்டுத்தான் என்பதையும் அந்த வரிகளினின்றும் அவள் உணர்ந்துகொண்டாள். கண்ணீர் மல்கி நின்ற அவளை ஏறிட்டு நின்றான் சரஸ்வதிசந்திரன். சோகத்தின் சிகரத்தை அடைந்துவிட்டாற்போன்று தோன்றிய அவள் விநாடிப்பொழுதில் மூர்ச்சையிழந்து கீழே சாய்ந்தாள்.

நவீனசந்திரன் திடுக்கிட்டான். தரையில் உயிரற்ற பூங்கொடிபோல் துவண்டு கிடந்த குமுதசுந்தரியைச் சட்டென்று குனிந்து தலையை மடிமீது அமர்த்திக்கொண்டு ஆசுவாசப்படுத்தத் தொடங்கினான். என்ன இக்கட்டான நிலைமை! யாராவது சட்டென்று அறையில் நுழைந்துவிட்டால்?

''குமுத், விழித்துக்கொள்.''

மனச் சஞ்சலம் அடைந்த நவீனசந்திரனுக்கு உயிர் வந்தது. அவள் கண் திறந்தாள். திறந்தமாத்திரத்தில் தன் நிலையை

உணர்ந்தவளாய் எழுந்து நின்றாள். நவீனசந்திரனும் தலை குனிந்தவனாய் எழுந்து நின்றான். அமைதி நிலவியது.

குமுதசுந்தரி பேச ஆரம்பித்தாள். ஆலயத்தில் பதிக்கப்பட்டிருக்கும் பதுமை பேசுவதுபோல் உதடுகளை அசைத்தாள். ஆலயமணிபோல் நாதம் எழுப்பினாள்.

''எனக்கு உரிமை இல்லையென்றாலும், ஏதோ என்னைப் பேசவைக்கிறது. ஆகவே பேசுகிறேன். என்ன நேர்ந்துவிட்டது எனக்கு, நான எந்த நிலையில் இருக்கிறேன் என்று தெரிந்து கொண்டுவிட்டீர்கள். தயை செய்து வேறு ஒருத்தியையும் என்னைப்போலத் துர்ப்பாக்கியசாலியாக்காதீர்கள். நான் என்ன சொல்ல நினைக்கிறேனோ அது என் கடிதத்தில் இருக்கிறது. எனக்காக ஒரே ஒரு நன்மை செய்துவிடுங்கள். இங்கிருந்து கிளம்புங்கள். பம்பாய் சென்றுவிடுங்கள். நான் எப்படியாயினும் காலத்தைக் கடத்திவிடுவேன்; தயை செய்து போய்விடுங்கள்.''

சற்றும் விடை எதிர்பார்க்காமல் பேசிவிட்டு ஓடோடிப் போனாள். பாய்ந்துவந்து தனது அறையில் கட்டிலின்மீது விழுந்து மனம் வெடிக்க விம்மினாள். புயலும் மழையும் நின்றபின் அமைதி எழுந்தது. அலமாரியிலிருந்து அந்தக் கடிதத்தை விளக்கின்மீது இட்டுச் சாம்பலாக்கினாள்; சாம்பலைச் சின்னஞ்சிறு புட்டியில் இட்டு மூடிப் பத்திரப்படுத்தினாள். அவள் கண்களில் தூக்கம் தவழ்ந்தது. என்றுமில்லாத நிம்மதியுடன் உறங்கிப் போனாள்.

10. அவன் சென்றான்

காலையில் சரஸ்வதிசந்திரன் எழுந்தபோது இரவில் நடந்த சம்பவம் எல்லாம் கனவுபோல் நினைவில் மீண்டும் எழுந்தன. மனம் அமைதி கொண்டது. மனக்கனம் குறைந்தவனாய் அன்றைய கடன்களில் ஈடுபட்டான்.

கீழே பிரமாததனன் லீலாபுரியிலிருந்து விடியற்காலையில் திரும்பிவிட்டான். அன்று தர்பாரில் புத்திதனருக்குப் பதவி அளிப்பு வைபவம் என்பதால் வீட்டில் யாவரும் குழுமியிருந்தார்கள். நண்பர்களும் உறவினர்களுமாக ஆண் பெண்கள் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். சரஸ்வதிசந்திரன் கீழே இறங்கியபோது புத்திதனர் நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். சௌபாக்கியதேவி மகளிரெனும் விண்முகிற் கூட்டத்தில் நிலவுபோல் ஒளி வீசிக்கொண்டிருந்தாள். இனிமை

யும் அமைதியும் உருவெடுத்தாற்போல் குமுதசுந்தரி விளங்கினுள். அவளைப் பார்த்தவுடன் சட்டைப் பையில் இருந்த அந்தக் கடிதத்தைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் எழுந்தது சரஸ்வதிசந்திரனுக்கு. ஆனால் அந்தக் கூட்டத்தில் எப்படிப் படிப்பது! உற்சாகமும் மகிழ்ச்சியும் மிகுந்திருந்த கூட்டத்தில் அவன் சற்றே விசித்திரமாகக் காணப்பட்டான். ஆனாலும் அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்.

கேவலம் சரஸ்வதிசந்திரன் மட்டுமல்ல, புத்திதனரும் சற்றே சிந்தனையுடன் காணப்பட்டார். பிரமாததனனின் நடத்தை பற்றிச் சில நாட்களாக அவர் கேள்விப்பட்ட செய்தி அவரை வருத்தத்தில் ஆழ்த்தியது. குத்து விளக்குப்போல் வந்திருக்கும் மருமகளுக்குமல்லவா இந்த இழுக்கு வந்து சேரும்? மகனை எப்படித் தண்டிப்பது என்ற யோசனையில் மூழ்கியிருந்தார்.

சரஸ்வதிசந்திரனின் வேண்டுகோள் அவரை ஏமாற்றம் அடையச் செய்தது.

''இன்றே என்ன அவசரம்? தர்பாரில் இன்று வேலையிருக்கிறது. வேண்டுமென்றால் இன்று மாலை உணவுக்குப் பிறகு நீ போகலாமே!'' என்றார் அவர்.

சரஸ்வதிசந்திரன் விடாப்பிடியாக இருந்ததால் அவன் இச்சைப்படி செல்ல அநுமதி தந்தார். அவருக்கு நன்றி தெரிவித்துச் சௌபாக்கிய தேவியிடமும் அலக்கிஷோரியிடமும் விடை பெற்றுக்கொள்ள வந்தான். கணவர் அநுமதி தந்துவிட்டார் என்றதும் அவளால் மீண்டும் வற்புறுத்த முடியவில்லை.

குமுதசுந்தரியைச் சரஸ்வதிசந்திரன் ஏறிட்டுப் பார்த்தான். சரஸ்வதிசந்திரன் போகிறான் என்று அறிந்த அவள் முகத்தில் சஞ்சலம் தோன்றியது; கண்களில் நீர் முட்டி நின்றது.

சரஸ்வதிசந்திரன் வெளிநடந்தான். கடிதத்தைப் படிக்க வேண்டுமென்ற ஆவல் அவனை உந்தியது. சிவாலயத்தில் மூர்க்கதத்தரைச் சந்தித்தான். ஸ்வர்ண்புரியின் முதல் அறிமுகம் அல்லவா? அவருடன் அமர்ந்து உணவு அருந்தினான். சரஸ்வதி சந்திரன் பத்ரேசுவரம் செல்கிறான் என்பதை அறிந்தவுடன், ''தம்பி, நான் சொல்வதைக் கேள். இன்று சடராயனின் ஆட்கள் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். புத்திதனரின் நண்பர்களையெல்லாம் துன்புறுத்தி வருகிறார்கள். அதனாலேயே புத்திதனரிடம் சொல்லியிருக்கிறேன், இன்று பத்ரேசுவரம் செல்லும் குமுதசுந்தரியின் பயணத்தைத் தள்ளிப்போட வேண்டுமென்று. இல்லாவிட்டால், தக்க பந்தோபஸ்து செய்யவேண்டுமென்றும் சொன்னேன்'' என்றார் மூர்க்கதத்தர்.

''சரியாகப் போச்சு! நான் எதற்குப் பயப்பட வேண்டும்? ஏதாவது வண்டி போனால் எனக்காக நிறுத்தி என்னைக் கூப் பிடு'' என்று சொல்லித் தோட்டத்தில் நுழைந்து கடிதத்தைப் படிக்கத் தொடங்கினான். படிக்கப் படிக்கத் துக்கம் மிகுந்தது.

'குமுதசுந்தரி, உனக்காக நான் இனி என்ன செய்யட்டும்! உன்னைத் தியாகம் செய்யாமல் இருந்தால் நான் பாக்கியவனாக இருந்திருப்பேன். அந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. ஆனால் நீ பாக்கியசாலிதான். நீ ஒரு ஸதி. உன்னை இந்தக் கதியில் ஆழ்த்தியதற்கு நான் பரிகாரம் தேடத்தான் வேண்டும். உற்றாரும் சுற்றமுமின்றி உலகம் சுற்றிக் கழுவாய் தேடுவேன். இனி எனக்குச் செல்வமும் வைபோகமும வேண்டியதில்லை. அதெல்லாம் யாருக்கு என்ன பயன்?

'சந்திரகாந்தா, உன்னை நான் சந்தித்துத்தான் ஆகவேண் டும். இந்த ஆசை எனக்கு உலக வாழ்க்கையில் பற்றிருக் கிறது என்பதைத்தான் உணர்த்துகிறது. இந்த ஆசையை நான் துறக்கவேண்டாமா? இதோ நான் உன்னைச் சந்திக்கப் போவதில்லை. கடிதம்மட்டுமே எழுதி உன்னிடம் சேர்ப்பித்து விடுவேன்.'

சரஸ்வதிசந்திரன் மனவிகாரத்தில் மூழ்கிப் போனான். தந்தையின் நிலை, தான் சென்றபின்னர் அவர் வருத்தமுற் றிருப்பாரோ என்ற ஐயம், எவ்வளவு மனிதர்களைத் துயரத் தில் ஆழ்த்திவிட்டோம் என்ற வருத்தம் யாவும் அவன் உள் ளத்தை உலுக்கின.

ஸ்வர்ணபுரியிலிருந்து செய்தி வந்தது: பிரமாததனனின் வேசியர் உறவுபற்றிய செய்தி புத்திதனருக்கு எட்டிவிட்டது என்றும், மகனைத் தண்டிப்பதாகத் தந்தை முடிவு செய்து விட்டார் என்றும், பிரமாததனன் தந்தையிடம் மன்னிப்புக் கோரப் போவதாகவும், நவீனசந்திரனின் துணையை வேண்டுவ தாகவும் வேலையாள் தெரிவித்தான். ஆனால் சரஸ்வதிசந்திரன் தனது முடிவை மாற்றுவதாக இல்லை. ஆகவே, பிரமாததனன் திருந்தி இனித் தந்தையைப்போல் சீலனாகவேண்டும் என்ற தனது விருப்பத்தைத் தெரிவிக்குமாறு வேலையாளிடம் செய்தி விடுத்தான்.

எருதுகள் பூட்டிய வண்டியொன்றை நிறுத்தியபடி மூர்க்கதத்தர் வந்தார். ''இதோ வண்டி பிடித்திருக்கிறேன். ஆனால், ஒன்று: பத்ரேசுவரம் போகிறதோ இல்லையோ, அது நிச்சயமில்லை.''

''பத்ரேசுவரத்துக்கு நான் செல்லப் போவதில்லை. வண்டி என்னை எங்கு இட்டுச் செல்கிறதோ அங்கேயே போவேன்''

என்றவண்ணம் வண்டிக்கு அருகில் வந்தான் சரஸ்வதிசந்திரன். வண்டியில் சில பிரயாணிகள் இருந்தார்கள். அந்தணர் குலத்தைச் சேர்ந்த வயது நிரம்பிய ஒரு மாது, நாற்பது வயதான வணிகர் குலத்து ஆடவர் ஒருவர், அதே குலத்தைச் சேர்ந்த இருபது வயது நிரம்பிய ஓர் இளம் பெண் ஆகிய மூன்று பிரயாணிகள்.

மூர்க்கதத்தர் பேசினர்: ''இதோ நான் விசாரித்து அறிந்தேன்: வண்டி ரத்னநகரி பக்கம் போகிறதாம். இங்கிருந்து பத்துக் காத தூரத்தில் மனோஹரபுரி என்ற கிராமம் வருகிறது. அங்கிருந்து ஒரு சாலை பத்ரேசுவரத்தை நோக்கிச் செல்கிறது; இன்னொன்று ரத்னநகரி போகிறது.''

''சரி'' என்று சொல்லி மூர்க்கதத்தரிடம் வெள்ளிக்காசு ஒன்றை இனமாகத் தந்து வண்டியில் ஏறினன் நவீனன். எருதுகள் சலங்கைகளை ஒலித்தவண்ணம் நகர்ந்தன. கட்டை வண்டிப் பிரயாணம் அவனுக்கு அதுதான் முதலநுபவம். உட்காருவதற்கு மெத்தை இருந்தது உண்மைதான். ஆனல் வண்டியின் ஆட்டத்தில் மெத்தையின் மென்மை மறைந்துபோனது. தலைக்கு மேல் பிற்பகலின் உக்கிரமான சூரியனின் கதிர்கள். எருதுகள் எழுப்பிய புழுதி மண்டலம் அவனைத் திக்குமுக்காடச் செய்தது. அதுவும் சிறிது நேரத்திற்குத்தான். அதன் பின்னர் வண்டியின் ஆட்டமும் சலங்கை ஒலியும், இசையும் தாளமுமாயின. வெயிலைத் தடுக்கும்வண்ணம் தலைமீது துணியை இழுத்து மூடிக்கொண்டான். சிறிது நேரத்தில் கண்ணயர்ந்து போனன். ஆனலும் பல்வேறு சிந்தனைகள் அவனைத் தொடர்ந்து வந்தன.

'குமுதசுந்தரியை மீண்டும் பத்ரேசுவரத்தில் பார்ப்பேனு? சந்திரகாந்தன் ஸ்வர்ணபுரிக்கு வரும் வழியில் பத்ரேசுவரத்தில் தங்கினல் நான் அவனைப் பார்க்கலாம். சந்திரகாந்தன் இப்போது என்ன செய்துகொண் டிருப்பான்? அப்பா எப்படி இருக்கிருரோ?

'ராஜ சபையில் நான் கண்டது உண்மைதான். ஆனல் அரசாங்கம் எப்படி நடக்கிறது என்பதை நான் காணவில்லை. மக்கள் எப்படி வாழ்க்கை நடத்துகிருர்கள் என்பதையும் நான் பார்க்கவில்லை. பிரமாததனனுக்கு என்ன தண்டனை கிடைக்கும்? ஆனல் அதைத் தெரிந்துகொண்டு என்ன பலன்?

'வழியில் சடராயனுடைய ஆட்களின் அட்டகாசம் என்ருரே மூர்க்கதத்தர். அவர்கள் இப்போது எங்கே?'

வண்டிக்காரன் பாட ஆரம்பித்தான். நாடோடிப் பாட்டு; சிருங்கார ரசம் இழைந்த பாடல். சட்டென்று வண்டியில் இளம் பெண் ஒருத்தி இருக்கிருள் என்று உணர்ந்து பாட்டை நிறுத்தினன். கிழவி பாட ஆரம்பித்தாள்: மெல்லிய குரல்

அது. அதில் ஒரு நடுக்கம். ஆண்டவனைப்பற்றியும் வாழ்வின் அர்த்தமற்ற தன்மையையும்பற்றி மனம் உருகுமாறு பாடினாள்.

வண்டி நகர்ந்துகொண்டிருந்தது; அதன் வேகத்திற் கொப்பச் சந்நியாசி ஒருவனும் நடந்துகொண்டிருந்தான். வண்டிக்குப் பின்னால் மூன்று குதிரை வீரர்கள் வண்டியின்மீது ஒரு கண் வைத்துக்கொண்டே வந்துகொண்டிருந்தார்கள்.

கிழவி இன்னும் பாடிக்கொண்டிருந்தாள். அவளுடைய பாட்டின் பொருள் சரஸ்வதிசந்திரனின் உள்ளத்தை வெட்டியது.

பாகம் இரண்டு

1. மனோஹர்புரியின் எல்லையில்

ஸ்வர்ணபுரியிலிருந்து பத்துக் கஜ 'தூரத்தில்' இருந்த மனோ ஹர்புரி புராதன காலத்தில் பெரிய நகரமாக இருந்தது. பின்னர்க் காலவேகத்தில் பெருமை குன்றிச் சின்னஞ்சிறிய கிராமமாகி ரத்னநகரியின் அரசர் வசத்தில் வந்து சேர்ந்தது. வித்யாசதுர ரின் பிறப்பிடம் இந்தக் கிராமந்தான். அவரது தாய் வீடும் பாட்டனூர் வீடும் இங்கேதான். இளமைப் பருவம் முழுவதையும் இங்கேயே கழித்திருந்தார். அதனால் இதன்மேல் அலாதியான பிரியம் அவருக்கு.

ஸ்வர்ணபுரி, ரத்னநகரி, பிரிட்டிஷ் ராஜ்யம் ஆகிய மூன்றிற்குமிடையே அது அமைந்திருந்தது. மூன்றின் எல்லைகளும் மனோஹர்புரியில் சந்தித்தன. மேற்குப்புறம் அரைக் காத தூரத்தில் கடல் இருந்ததால் மனோஹர்புரியின் வெப்பம் எப்போதும் மிதமான நிலையில் இருந்துவந்தது. வடக்கே சின்னஞ் சிறிய அழகிய மலையின் ஆரம்பம். அருகில் இரு பெரிய வனப் பிரதேசங்கள். பத்ரா நதியின் கிளையான சுபத்ரா நதி கிழக்கி லிருந்து மேற்காக ஓடி ஓங்கி வளர்ந்திருந்த பனை மரங்களிடையே பாய்ந்து மேலைக் கடலில் கலந்தது. வேனிற் காலமாதலால் பழுத்துத் தொங்கிய மாங்கனிகள் நறுமணம் எழுப்பிய மாஞ் சோலைகளுடன் மனோஹர்புரி அழகுறத் திகழ்ந்தது.

மாஞ்சோலையில் எருது பூட்டிய வண்டியொன்று வந்து நின்றது. அதே வண்டிதான்; சரஸ்வதிசந்திரன் பயணம் செய்த வண்டியேதான். வண்டியோட்டியும் பழைய வண்டி யோட்டியேதான். ஆனால் சரஸ்வதிசந்திரனும் சகப் பிரயாணி களும் எங்கே? வண்டியிலிருந்து இறங்குவது அந்தச் சந்நியாசி யல்லவா? சந்நியாசியும் வண்டிக்காரனும் சுவையான பேச்சில் ஈடுபட ஆரம்பித்தார்கள்.

வண்டியின் பின்னால் வந்துகொண்டிருந்த மூன்று குதிரை வீரர்களும் இப்போது காணப்படவில்லை. சரஸ்வதிசந்திரன் செல்கிறான் என்றவுடன் அவனுக்குப் பாதுகாப்பாக அப்துல்லா, ஃபதேசிங், ஹரபம்ஜி ஆகிய மூவரைக் குமுதசுந்தரி அனுப்பி யிருந்தாள்.

சரஸ்வதிசந்திரனைத் தாங்கிவந்த கட்டை வண்டி மாஞ்சோலையும் பனைமரத் தோப்பும் சந்திக்கும் முப்பாதையொன்றில் வந்துகொண்டிருந்தபோது மாஞ்சோலையிலிருந்து கொள்ளைக்காரர் கூட்டம் வெளிவந்து வண்டியை நிறுத்தியது. கொள்ளைக்காரர்களின் தலைவன் சந்தனதாஸ் என்பவன்; ஒரு சமயம் அவன் சடராயனின் கையாளாக இருந்தான். பின்னர் இருவருக்கும் மனத்தாங்கல் ஏற்படவே சந்தனதாஸிடமிருந்து தில்பூர் என்ற கிராமத்தைப் பிடுங்கிக்கொண்டான் சடராயன். சந்தனதாஸ் கொள்ளைக்காரனானான். ஸ்வர்ணபுரியிலிருந்து உளவறிந்து வருவதற்காகச் சந்நியாசி வேஷத்தில் ஸுரசிங்கை அனுப்பியிருந்தான். குமுதசுந்தரி பத்ரேசுவரம் செல்லப் போவதை அறிந்து அவளைக் கைதுசெய்து, புத்திதனரிடம் வேறு கொள்ளைக்காரர்கள் அவளைச் சிறைபிடித்ததாகவும், தானே அவளை மீட்டதாகவும் கூறி அவளை ஒப்படைத்துப் புத்திதனரின் நல்லெண்ணத்தைச் சம்பாதிக்கத் திட்டமிட்டிருந்தான்.

உடன் வந்துகொண்டிருந்த ஸுரஸிங் சரஸ்வதிசந்திரன் புத்திதனரின் ஆள் என்று அறிந்துகொண்டான். அவனைப் பிடித்தால் லாபம் என்று உணர்ந்து, சாலையில் இரு பக்கமும் காடுகள் தென்பட்டவுடன் வண்டியின் முன்பக்கம் வந்து வழிமறித்தான். அவன் குரல் கேட்டுச் சந்தனதாஸும் ஆயுதம் தரித்த ஏழெட்டு மனிதர்களும் மாஞ்சோலையிலிருந்து வெளிவந்தார்கள்.

வண்டியிலிருந்த வணிகனை வெளியே தூக்கிப் போட்டார்கள். அதைப் பார்த்த இளம் பெண் அழத் தொடங்கினாள். ஆனால் கிழவி பேசத் தொடங்கினாள்; அவளுக்குத்தான் எவ்வளவு தைரியம்! "இதோ பாருங்கள்: என்னிடம் பறித்துக்கொள்ள ஒன்றும் கிடையாது. உங்களிடமிருந்து ஏதாவது இருந்தால் என்னிடம் கொடுங்கள். வைத்துக்கொள்கிறேன்" என்றாள்.

"அடீ கிழவி! பேசாமல் இரு" என்று அவளையும் தூக்கி வெளியே போட்டார்கள். தலைமுதல் கால்வரைத் துணியில் போர்த்துக்கொண்டு உறங்கியிருந்த சரஸ்வதிசந்திரன் இந்தக் களேபரத்தில் எழுந்துகொண்டான். எதிரே தரையில் கிடந்த வணிகனைக் கண்டதும் வண்டியிலிருந்து குதித்து என்ன என்று விசாரிக்கப் போனதும் அவனைக் கொள்ளைக்காரர்கள் மறித்துக்கொண்டார்கள். சட்டென்று விஷயத்தைப் புரிந்துகொண்டான். கம்பும் கத்தியுமாக நின்றுகொண்டிருந்தவர்களிடம் அவன் என்ன செய்ய முடியும்?

"இதோ, உன்னைக் கொள்ளையடிக்கப் போவதில்லை. எங்களுக்கு வேண்டியதெல்லாம் நீதான். நீ இவர்களுடன். போ" என்றான் ஸுரசிங். சரஸ்வதிசந்திரன் மறுத்தபோது அவனை

இழுத்துக்கொண்டு கிளம்பினார்கள். இதற்குள் வண்டிக்குப் பின் வந்துகொண்டிருந்த மூன்று குதிரை வீரர்களும் நெருங்கி வந்த கொள்ளைக்காரர்களை எதிர்த்தார்கள். இதைக் கண்ட சரஸ்வதிசந்திரன் அவர்கள் பிடியினின்று திமிறினான். சந்தன தாஸும் கூட்டாளிகளும் அவனைத் தாக்கிக் காயமடையச் செய்தார்கள். காயங்களிலிருந்து ரத்தம் பெருகவே அவன் மூர்ச்சித்து விழுந்தான். ஆகவே, அவனை அழைத்துக்கொண்டு போவது எளிதாகிவிட்டது. சந்தனதாஸும் அவனுடைய சகாக்களும் சரஸ்வதிசந்திரனை இழுத்துக்கொண்டு மாஞ்சோலையில் மறைந்து போனார்கள்.

மூன்று குதிரை வீரர்களுக்கும், ஸூரசிங் - அவனுடைய சகாக்கள் ஆகியவருக்குமிடையே கைகலப்பு நடந்தது. அதில் ஸூரசிங்கிற்கு நல்ல அடி; அவனுடைய சகாக்கள் இருவரும் படுகாயமுற்று மூர்ச்சித்து விழுந்தார்கள். ஆகவே, குதிரை வீரர்கள் அப்படியே அவர்களை விட்டுவிட்டு நகர்ந்தார்கள். நின்றுகொண்டிருந்த கட்டை வண்டியில் ஏறிச் சந்தனதாஸ் வண்டிக்காரனை ஓட்ட உத்தரவிட்டான்.

இதற்குள் சந்தனதாஸ் சரஸ்வதிசந்திரனிடம் பணம் இருக்கிறதா என்று சோதித்தான். அவனுக்கு என்ன தெரியும், ஸூரசிங்கின் திட்டம் கொள்ளைக்காக அல்ல என்று? கொஞ்ச நஞ்சம் இருந்த பணத்தை அந்தத் தேசாந்தரியிடமிருந்து பிடுங்கிவிட்டுத் தன் காரியம் முடிந்தவுடன் சரஸ்வதிசந்திரனையும் அந்த வணிகனையும் உயர்ந்த ஒரு மேட்டின்மேல் புல் கிடங்கின்மீது போட்டுவிட்டுச் சென்றான். சரஸ்வதிசந்திரனைத் தேடி அலைந்த மூன்று குதிரை வீரர்களும் நிராசை அடைந்தவர்களாய் மனோஹர்புரி நோக்கிக் கிளம்பினார்கள்.

ஸூரசிங் சோலைக்குள் வந்தவுடன் தனக்கு முன்னமேயே சென்ற கூட்டாளிகளைக் கண்டான். ஆனால், அவர்களிடம் சரஸ்வதிசந்திரனைக் காணாது போகவே ஏமாற்றமுற்றான். வெறும் பணத்தை என்ன செய்ய? அவனை அப்படியே போட்டு விட்டு வந்துவிட்டார்கள் என்றறிந்ததும் கோபமுற்றான்.

உடனே புதியதோர் திட்டம் உருவாகியது. புத்திதனரின் மருமகள் குமுதசுந்தரி பத்ரேசுவரத்துக்குக் கிளம்பிய செய்தி வந்தவுடன் ஸூரசிங் உற்சாகம் அடைந்தான். அவளைப் பிடித்து வேறு கொள்ளைக்காரர்களிடமிருந்து மீட்டதாகச் சொல்லிப் புத்திதனரின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்து, இழந்த தில் பூரை அடையவேண்டும் - இதுவே அவன் திட்டம். ஸூரசிங்கின் மூத்த மகன் பிரதாப் சிங் இதை ஆதரித்தான். இளைய மகன் வாக்ஜிக்கு இது பிடிக்கவில்லை. பெண்களையும் குழந்தைகளையும்

துன்புறுத்தக் கூடாது என்ற கொள்கையுடையவன் அவன். அவனுடைய ஆட்சேபத்தை அவர்கள் மதிக்கவில்லை. குமுத சுந்தரியைப் பிடிப்பதால் இரட்டை லாபம் என்றும் அறிவார்கள். வித்யாசதுரரிடமிருந்தும் வேண்டியது பெறலாமல்லவா? அதே சமயம் சோலையில் மறைந்து நின்ற சங்கர் என்ற அந்தணன் இதை அறிந்தான்; அவன் புத்திதனனின் இல்லத்தில் பணிபுரியும் விசுவாசமான ஆட்களில் ஒருவன். ஆகவே, பயணத்தை மேற்கொண்டு கிளம்பிவிட்ட குமுதசுந்தரியை எதிர்கொண்டு இதைச் சொல்லி எச்சரிக்க வேண்டுமென்று கிளம்பினான்.

உணர்வு வந்தவுடன் புல் கிடங்கின்மீது திரும்பிப் பார்த்த போது வணிகன் திடுக்கிட்டான். சரஸ்வதிசந்திரன் மூர்ச்சையுற்றுக் கிடந்ததைக் கண்டு அவனது தீரம் நினைவுக்கு வந்தது. மெல்ல எழுந்து அருகில் இருந்த குட்டையொன்றின் நீரை உள்ளங் கையிலே எடுத்துக்கொண்டு அவன்மீது தெளித்தான். சரஸ்வதிசந்திரன் விழித்துக்கொண்டான்.

''அந்தக் கொள்ளைக்காரன் உன்னுடைய பேரைச் சொல்லியழைத்தானே, உனக்கு அவன் யாரென்று தெரியுமா?''-வணிகனுடைய இந்தக் கேள்விக்குச் சரஸ்வதிசந்திரனால் பதில் சொல்ல முடியவில்லை. அவனுக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. அவன் பெயரை அந்தக் கொள்ளைக்காரன் எப்படி அறிந்திருந்தான்?

நேரத்தை வீணுக்குக்கூடாது என்று இருவரும் கிளம்பினார்கள். சட்டென்று நினைவு வந்தவனாக அந்த வணிகன் அழத் தொடங்கினான். ''என் பெண்டாட்டியைக் காணோமே! அவள் மேலிருந்த எல்லா நகைகளையும் அந்தப் பாழாய்ப் போன கொள்ளைக்காரர்கள் கொண்டு போய்விட்டார்களே!

சரஸ்வதிசந்திரன் உடனே புரிந்துகொண்டான்—வணிகனுக்கு மனைவிமேல் அன்பு உண்டோ இல்லையோ, அவள் அணிந்திருந்த நகைகள்மீது நிச்சயம் பற்று உண்டு என்று. அவனுடைய துயரத்திற்கு என்ன மருந்து, அவனை எப்படிச் சமாதானம் செய்வது என்று யோசிக்க ஆரம்பித்தான். உடனே தன் விரலிலிருந்து அந்த மணி முத்திரையை அகற்றி வணிகனுக்கு ஈந்தான். குமுதசுந்தரியின் மீதிருந்த ஆழ்ந்த காதல் அவனை இன்ப அலைகளில் அமிழ்த்திய நாட்களில் அவளுக்கு அளிக்க வேண்டுமென்று திட்டமிட்டுச் செய்த மோதிரம் அது. இனி அது இருந்தென்ன பயன்? மறைந்துபோன தனது காதலின் சாம்பல் என்றே அதைக் கருதினான். வணிகன் அதைப் பார்த்துவிட்டு வியப்பில் ஆழ்ந்து போனான். அவனுக்குச் சந்தேகம்: சரஸ்வதிசந்திரனும் ஒரு வேளை ஒரு கொள்ளைக்காரன்தானோ?- அந்தப் பயம் தோன்றியவுடன் விடுவிடுவென்று மோதிரத்தை

மாட்டிக்கொண்டு சற்றும் திரும்பிப் பார்க்காமல் ஓடோடி மறைந்து போனான்.

2. குணசுந்தரி

மனோஹர்புரியின் வெளிப்புறத்தில் வழிமறிப்பு நடந்த அதே சமயத்தில் கிராமத்திலும் கலவரம் ஒன்று நிகழ்ந்தது. அதே மாலை நேரத்தில் ரத்னநகரியிலிருந்து ஸ்வர்ணபுரிக்கு வந்து கொண்டிருந்த சந்திரகாந்தனைக் கொள்ளைக்காரர்கள் தாக்கிப் பணத்தைப் பறித்துக்கொண்டார்கள். ஆகவே, அவன் பயணம் சற்றே தடைப்பட்டது. நேரே ஸ்வர்ணபுரிக்குக் கிளம்பாமல் மனோஹர்புரியில் அன்று தங்க நிச்சயித்து எதிர்பாராதவிதமாய் மீண்டும் குணசுந்தரியின் விருந்தாளியானான்.

ரத்னநகரியிலிருந்து பத்ரேசுவரம் கிளம்பின குணசுந்தரி, தன் மகள் குமுதசுந்தரியை வழியில் கொள்ளைக்காரர்கள் உபத்திரவம் செய்யப் போகிறார்கள் என்று அறிந்தவுடன் பத்ரேசுவரம் போகுமுன் மனோஹர்புரியில் தங்கி, குமுதசுந்தரியின் வரவை எதிர்நோக்கலாம் என்று நிச்சயித்து, மனோஹர்புரியில் தன் இன்னொரு மகளுடனும் வேலையாட்களுடனும் பயணத்தை நிறுத்தினாள். கொள்ளைக்காரர்களுக்கு இலக்காகித் தனது பிரயாணத்தில் தாமதமுற்ற சந்திரகாந்தனையும் அவர்கள் கண்டார்கள். ஆகவே, தம்முடனேயே தங்குமாறு அவனைக் கேட்டுக்கொண்டார்கள்.

திவானின் மனைவி தன் மகளுடன் வந்திருப்பதாக அறிந்து கிராமத்தாரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்; அவர்களை எதிர்கொண்டு உபசரித்தார்கள். குணசுந்தரியின் திருமண வாழ்வின் சுவையான முதற்பாகம் இதே கிராமத்தில்தான் கழிந்தது; இதை நினைவுபடுத்தி அந்த இன்ப நினைவுகளில் அவள் தன் மனத்தை அலையவிட்டாள்.

இரண்டு பெண்களுக்குத் தாயான குணசுந்தரியின் வயது முப்பத்தைந்துக்குமேல் இல்லை. நல்ல ஆரோக்கியமான உடல்; ஆகவே, பார்ப்பவர்கள் அவளை இருபத்தேழு இருபத்தெட்டுக்கு மேல் மதிக்கமாட்டார்கள். கட்டான உடல்; சிவப்பு நிற மேனியில்லாவிட்டாலும் நல்ல மாநிறம்; கவர்ச்சிகரமான முகம். நீண்ட கரிய கூந்தல். குறுகுறுக்கும் விழிகள். அவள் பாடினால் உச்சஸ்தாயியில் அவள் குரல் குமுதசுந்தரியின் குரலைப் போன்றே தோன்றும். சிரித்த முகம்; விடியற்காலையில் அவள் முகத்தைக் காண்பவர்கள் நாள் முழுதும் மகிழ்வுடன் இருப்பார்கள் என்பது

அவளைச் சார்ந்திருப்பவர்களின் அநுபவம். ஓயாத உழைப்புக்கு அவள் ஓர் எடுத்துக் காட்டு. குமுதசுந்தரியிடம் காணப்படும் சகிப்புத்தன்மையும் பணிவும் தாயின் குணங்களே. மாமியாரும் மாமனாரும் புக்ககத்தில் உள்ள மற்றோரும் குணசுந்தரியின் சீலத்தைப் பெரிதும் போற்றி வந்தார்கள்.

வித்யாசதுரர் பிறந்தபோது சந்ததியில்லாத அவருடைய மாமா ஜராசங்கரர் அவரை வளர்க்கத் திட்டமிட்டார்; அதன்படியே தம் மாமன் வீட்டிலேயே அவர் வளர்ந்தார். வித்யாசதுரரின் தந்தையார் மானசதுரர் பிரிட்டிஷ் ராஜ்யத்தின் ஒரு பகுதியில் தாசில்தார் காரியாலயத்தில் குமாஸ்தாவாக வேலை பார்த்து வந்தார். வயதாகிவிட்டவுடன் நோயுற்று வேலையிலிருந்து நீங்கிக் கிராமம் வந்தார். வித்யாசதுரரைத் தவிர இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் உண்டு. வித்யாசதுரர் கடைசி மகன். மூத்த மகன் இளவயதிலேயே இறந்து போனான். அவனுடைய மனைவி சுந்தரகௌரி பால்ய விதவையானாள். அவளுக்குப் பெற்றோர் எவருமில்லை; ஆகவே, குணசுந்தரி அவளுக்கு அடைக்கலம் தந்தாள். இரண்டாவது மகன் கானசதுரன் படிப்பு ஏதும் ஏறாமல் வேலையிலும் பற்றில்லாமல் தனது மனைவி சண்டிகாவுடனும் நான்கு குழந்தைகளுடனும் ரத்னநகரியில் நிரந்தர விருந்தாளியாக வந்து சேர்ந்தான். வித்யாசதுரரின் சகோதரி துக்கபாயின் கணவன் சாஹஸராயன் வியாபாரத்தில் கடன்பட்டுக் கிராமம் கிராமமாக ஓடினான். ஆகவே, தன் மனைவியை வித்யாசதுரரின் வீட்டுக்கு அனுப்பிவைத்தான். அவனுக்குத் திருமண வயதுக்கான ஒரு புத்திரியும் இருந்தாள். இரண்டாவது சகோதரி சஞ்சல் இளவயதில் விதவையாகி வித்யாசதுரரை வந்தடைந்தாள்; அவளுக்கும் பதினைந்து வயதில் பெண்ணொருத்தி இருந்தாள்.

ரத்னநகரியில் யுவராஜா மணிராஜின் ஆசிரியராக ரத்னநகரிக்கு வந்தவர் வித்யாசதுரர்; திடீரென்று அவரிடம் வந்தடைந்த அவருடைய தந்தை, சகோதர, சகோதரிகளை உபசரித்துப் பாதுகாக்கும் பொறுப்பு அவருடைய மனைவி குணசுந்தரிமீது வந்து விழுந்தது. எல்லோரும் குணசுந்தரியைக் காட்டிலும் வயதில் பெரியவர்கள். அவர்களுக்குத்தான் எத்தனைவிதமான துன்பங்கள்! அவர்களையெல்லாம் தேற்றி, ஆறுதல் கூறிப் பராமரிக்கவேண்டும்; சின்னஞ் சிறுவயதில் மணவாழ்வின் இன்பத்தைக் கணவருடன் தனித்துத் துய்க்க வேண்டிய நாளில், கணவரின் உற்றார் உறவினரது துயர்துடைத்து, எதிர்ப் பேச்சுப் பேசாது இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு பெருந்தியாகம் செய்தாள் குணசுந்தரி. குறைந்த வருவாய், பெருஞ்செலவு எல்லாவற்றையும் சரிக்கட்டிக் குடும்பம் நடத்தினாள்.

வித்யாசதுரர் அவளது திறமையைக் கண்டு வியந்து போற்றினர். குடும்பபாரம் என்பது ராஜ்யபாரம் போலத்தான். தீர்க்க திருஷ்டியும், தியாக உணர்வும், சகிப்புத் தன்மையும், அமைதியும், நேசமும், எல்லோரையும் அநுசரித்து நடக்கும் இயல்பும், பெருந்தன்மையும் ஆட்சி புரிபவர்களுக்குத் தேவை; அவையே இல்லாளுக்கும் இன்றியமையாதவை. வித்யாசதுரர் பெண்ணின் பெருமையை உணர்ந்திருந்தார்.

குணசுந்தரியின் சீமந்த முகூர்த்தம் நெருங்கியது. குடும்ப பாரம் முழுதும் தாங்கியிருந்த அவளுக்குச் சற்றே ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டிய நாட்கள் வந்துவிட்டன. ஆனாலும் எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக்கொண்டு வேலை செய்தாள். மாமியார் எப்போதும் பூஜை, புனஸ்காரம் என்று பூஜை அறையிலே கிடந்தாள். மருமகள் சிலசமயம் தன்னைக் கேட்காமல், கலந்தாலோசிக்காமல் காரியம் செய்கிறாள் என்று கடிந்ததுண்டு; மறுமொழி பேசாமல் குணசுந்தரி பணிந்து போவாள்.

மருமகள் கருவுற்றிருக்கிறாள் என்றறிந்தவுடன் பரிவு காட்டுவதற்குப் பதில் குற்றமே கண்டார்கள். அவளுக்கு ஓய்வு தருவதற்குப் பதில் அவளை முன்மாதிரி வீட்டுவேலைகள் செய்யப் பணித்தார்கள். நடுநிசிவரையில் ஓய்வில்லை; ஒழிவில்லை. கடைசி நாத்தி துக்கபா சில நாட்கள் கூடமாட வேலை செய்தாள். விரைவில் மாறிப்போனாள். "நான் என்ன வேலைக்காரியா? போக்கில்லாமல் வந்துவிட்டேன் என்றால் இப்படியா வேலை வாங்கவேண்டும்?" என்று முணுமுணுத்தாள். அது காதில் விழுந்தவுடன் தாங்கமுடியாமல் குணசுந்தரி பழையமாதிரி மீண்டும் வேலையில் முனைந்தாள். ஆனால் அவளைத் தடுக்கவேண்டுமே யாராவது? ஒன்பதாம் மாதம் நடக்கிறது என்று பொய்க் கவலைதான் தெரிவித்தார்கள். என்ன முனைந்தாலும் என்ன? முன்மாதிரி வேலை செய்ய முடியவில்லை. திடீர் திடீர் என்று வலியால் வேதனை அடைவாள். மௌனமாகக் கண்ணீர் சிந்துவாள். தன்னால் வேலை செய்ய முடியவில்லை என்ற ஆறுமைதான். அப்படியொரு நாள் அவள் தவித்துக்கொண்டிருந்தபோது சுந்தரகௌரி தானாகவே முன்வந்து அவளைக் கைலாகு கொடுத்து அவளறைக்கு அழைத்துச் சென்று படுக்கையில் கிடத்தினாள். மாமனார் எதிலும் பட்டதும் படாதது மாக இருப்பார். அவரே அதைக் கண்டு மனமிரங்கிப் போனார். மற்றவர் எவரும் தம் காரியமே கண்ணாயிருப்பது கண்டு சினம் அடைந்தார். "ஏய் துக்கபா, ஏய் சஞ்சல்! என்ன பெரிய காரியம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்? உங்கள் அம்மாவுக்கு என்ன பூஜை பெரிதாகிப் போய்விட்டது? பாவம், அந்தப் பெண்ணுக்கு நிறைமாசம்; கொஞ்சமாவது இரக்கம் இருக்கிறதா இல்லையா?"

என்று கூப்பாடு போட்டார். அப்படி அவர் இரைந்ததால்தான் எல்லோரும் உணர்ந்துகொண்டார்கள். மாமியார்க் கிழவி ஓடினாள்; நாத்திமார்கள் விரைந்தார்கள்.

கட்டிலில் மூர்ச்சித்து விழுந்திருந்தாள் குணசுந்தரி. அவளது அருகிலே சுந்தரகௌரி உட்கார்ந்திருந்தாள். மருத்துவச்சியை அழைக்க ஆள் அனுப்பினார்கள். மாமியார் என்றுமில்லாத திருநாளாய்ப் பூஜை அறையிலிருந்து வெளிவந்து மருமகளின் நிலையைக் கண்டாள். குணசுந்தரியின் பிரசவவேதனை மணிக்கு மணி மிகுந்தது. சுந்தரகௌரி மனமுருகிப் போனாள். நாத்தனார் துக்கபா எழுந்து, "சரிதான், புருஷனைக் கூப்பிட வேண்டாமா? பெண்டாட்டியைக் கவனிக்காமல் அப்படியென்ன உத்தியோகம்? அப்படியென்ன சம்பாத்தியம்?" என்றாள். திடீரென்று அப்படி அவளுக்கு ஒரு கவலை!

வயது மிகுந்த மானசதுரர் தட்டுத் தடுமாறிக் கைத்தடியை எடுத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினார். அதற்குள் எதிரே கானசதுரன் மருத்துவச்சியை அழைத்துக்கொண்டு வரவே அவனையே வித்யாசதுரரை அழைத்துவர அனுப்பினார். விவரம் கேட்டு வந்தார் வித்யாசதுரர். ஆருயிர் மனைவியின் மோசமான நிலையைப் பார்த்துவிட்டு மனம் கலங்கிப் போனார். என்ன செய்வது என்று தோன்றாமல் அவளது பெட்டியைத் திறந்து பார்க்கையில் குணசுந்தரியின் கடிதம் ஒன்றைக் கண்டார்.

"....வீட்டு வேலைகளால் உங்களைச் சந்தித்து மனம் விட்டுப் பேசக்கூட நேரம் கிடைக்கவில்லை. கால்மணி நேரமாவது கிடைக்கவேண்டுமே; அதுதான் இல்லை. நான் பிழைப்பேனோ இல்லையோ, குழந்தை பிறந்தால் சுந்தரகௌரியிடமே கொடுத்து விடுங்கள். அவள் பிரியமாக வளர்ப்பாள். சின்ன வயதிலேயே விதவையாகிப் போனாள். அவளுக்குப் புத்திர பாக்கியம் கிடைக்காது போய்விட்டது. ஆகவேதான் இதை எழுதுகிறேன். நான் போய்விட்டால் மணந்துகொள்ளுங்கள். நல்ல பெண்ணொருத்தியைத் தேடி வைத்திருக்கிறேன். ஒப்புக்கொள்வீர்களா?"

வித்யாசதுரர் நீர் மல்கிய கண்களுடன் கடிதத்தை மேலே படிக்க இயலாமல், மனைவியுடன் பேசக்கூட முடியாமல் போய் விட்டதே என்று மனம் நொந்து போனார். குணசுந்தரி படும் பாட்டைச் சகிக்கமுடியாமல் மாடி ஏறினார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் துக்கபா மெல்ல நடந்து வந்தாள். செய்தி சொன்னாள்: "வாருங்கள், வாருங்கள்! லக்ஷ்மி தேவதை வந்துவிட்டாள்" என்று பெண் பிறந்த செய்தியைச் சொன்னாள். வீடு முழுதும் மகிழ்ச்சி நிறைந்தது.

அன்னையும் குழந்தையும் சுகம் என்றறிந்தவுடன் வித்யா சதுரர் பெருமூச்சு விட்டார்.

குணசுந்தரி படுத்த படுக்கையாக இருக்க விரும்பவில்லை. அவளன்றி வீட்டில் ஏதும் ஒழுங்குற நடப்பதுமில்லை என்ற உண்மையை அவள் உணர்ந்திருந்தாள். மாமனுருக்கு மணிப்படி மருந்து தரவேண்டும், சரியான கண்காணிப்பு இருந்தால்தான் முதுமையை வெல்ல முடியும் என்றறிவாள். அவளுடைய பொறுமையும் உழைப்பும் வேறு எவரிடமுமில்லை. ஆனாலும் அவளால் உடனே எழுந்து ஓடி வேலை செய்ய முடியாது. பிரசவித்த அவளையே யாரேனும் உரிய வேளையில் உணவு தந்து கவனிக்க வேண்டுமே!

அன்று மானசதுரருக்கு மருந்துவேளை தவறிவிட்டது; மருந்து கொடுக்க எவரும் முன்வரவில்லை. சாப்பாடு வேளை வந்தும் இலை போடவில்லை. மாமனுர் காரணம் தேடிக் கிளம்பினுர். வேலையை முடித்துத் திரும்பிய வித்யாசதுரர் உணவுக்காக அறையில் காத்திருந்தவர், உறங்கிப்போனுர். சமையல் அறையில் துக்கபா அரைகுறைச் சமையலில் ஈடுபட்டிருந்தாள். பார்த்து விட்டுக் கோபமடைந்தார் மானசதுரர். மாடியில் கானசதுரன் பாடிக்கொண்டிருந்தான். கீழே ஊஞ்சலில் உட்கார்ந்து சண்டிகாவும் சஞ்சலும் பேசிக்கொண்டிருந்தார்கள். மானசதுரருக்கு அளவற்ற கோபம் பெருகியது. அவர் தமது கோபத்தை யாரிடம் காட்டுவது என்று தீர்மானிக்கையில் பூஜை அறையிலிருந்து குரல் எழுந்தது. மனைவி தர்மலக்ஷ்மியின் குரல்தான்: "விளக்கில் நெய் தீர்ந்துவிட்டது. சீக்கிரம் நெய்கொண்டு வாருங்கள்." மானசதுரர் விர்ரென்று விக்கிரகத்தைத் தண்ணீர்த் தொட்டியில் எறிந்தார்.

"என்ன கத்திக்கொண்டிருக்கிருய்? பூஜை பூஜை என்று அடைந்திருந்தால் போதுமா? இந்தப் பாழும் வயிறுதான் பிரத்யட்சமான தெய்வம். இதைக் கவனிக்காது போனுல் தெய்வம் உங்களைச் சும்மா விடாது. துக்கபா, சட்டென்று இலையைப் போடு" என்று கூறினுர்.

என்றுமே இரைந்து பேசாத அவர் போட்ட இரைச்சலில் வீடு சூழ்ந்துகொண்டது. ஓடோடி வந்தார்கள் யாவரும். தர்மலக்ஷ்மி கண்ணீரும் கம்பலையுமாக நின்ருள். அவர்கள் அனைவரையும் ஒருங்கே கண்டவுடன் இன்னும் இரைந்து கத்தினுர். வீட்டில் கடைசி மருமகளைத் தவிர வேறு யாரும் வேலை செய்யக்கூடாதா என்று இரைந்தார். சண்டிகாவையும் தம் இரண்டு பெண்களையும் கரகரவென்று இழுத்து வீட்டின் வெளியில் நிறுத்தி, "வேலையற்றவர்களே!" எனத் திட்டி

ஞர். கானசதுரனை அழைத்து, "கானமழை போதும். சாப்பாட்டுக்கு வழி பண்ணு" என்று உத்தரவிட்டார். வெளியே பொதுஜனங்கள் கூடிவிட்டார்கள்.

பெற்றோர்களை விட்டு வேலை வேலை என்றிருந்த வித்யா சதுரர், தந்தை இப்படியும் ஆவேசமாவார் என்பதைப் பார்த்துக் கொண்டார். தர்மலக்ஷ்மி நிலையை உணர்ந்தாள். வெறுமனே பூஜை என்று அடைந்திருப்பதில் பயனில்லை, குடும்பம் நடத்து வதே சாலச் சிறந்த தர்மம் என்பதை அன்று அறிந்துகொண் டாள். வெளியே நின்றிருந்த தன் புத்திரிகளையும், மருமகள் சண்டிகாவையும் அழைத்துப் புத்திமதி கூறினாள். வெளியே கூடியிருந்த ஜனங்களைப் பார்த்து, வீட்டுக்கு வீடு வாசற்படி என்று கூறிக் கதவை இழுத்து மூடினாள். அதற்குப்பின் நிதர்சன மான தர்மத்தைப் பாலிப்பதே தேச சேவையாகும் என்று அந்த அம்மையார் உணர்ந்தவுடன் குடும்பம் மீண்டும் அமைதி கண்டது.

ஹிந்து சமூகவாழ்வில் சுகதுக்கத்தின் ரூபம் ஒவ்வொரு விஷயத்திலும் சூட்சும வடிவத்தில் அடங்கிக் கிடக்கிறது. அநுபவத்தாலன்றி அதைப் பெறமுடியாது. குணசுந்தரி அநுபவத்தின் மூலந்தான் வாழ்க்கையை உணர்ந்துகொண் டாள். வயதாக வயதாகப் புதிய புதிய உண்மைகள் புல னாகின்றன. கட்டிலில் படுத்துக்கொண்டே குணசுந்தரி கடந்து போன வாழ்வின் பாடங்களை மனனம் செய்துகொண் டிருந்தாள்.

ஒரு நாள் பிற்பகல் குணசுந்தரி இளம் பருவ நினைவுகளிலே ஈடுபட்டிருந்தாள். நொடிப் பொழுதில் மறைந்துபோன இன்ப நாட்களின் வசந்தகாலம் - திருமண வாழ்வின் தொடக்க நாட் களில் கணவன் - மனைவி ஊடல், அரை விநாடியில் அதை மறக் கடிக்கும் இன்பவெள்ளம், கல்வியறிவு குறைந்த மனைவிக்குக் கணவன் கற்பிக்க எடுத்த முயற்சி!-புத்தம் புதிய வெள்ளத்தின் சுழிப்பு இனி எப்போது வரும்? குடும்பம் முன்மாதிரி இல்லை. ஐந்து மாதங்கள் ஆகியும் கணவருடன் பேசமுடியாத நிலையில் கண்ணீர் விட்டாள். தொட்டியில் உறங்கிக்கொண் டிருந்த குழந்தையைப் பார்க்கக் குனிந்தபோது கண்ணீர்த் துளி, பச்சைமுகத்தில் பட்டுத் தெறித்தது.

மாமா ஜராசங்கர் வீட்டில் விருந்து என்பதற்காக எல்லோரும் வீட்டுப் பொறுப்பைக் குணசுந்தரியிடம் விட்டுப் போயிருந்தார்கள். வித்யாசதுரர் உணவு அருந்திவிட்டு விரைவிலே திரும்பியிருந்தார். தாம் வந்தது தெரியாமல் கண்ணீர் விட்டுக்கொண் டிருந்த மனைவியைப் பார்த்து அவர் மனம் கரைந்து போனது. அருகில் வந்து நின்றதும் குணசுந்தரி

அதனை உணர்ந்து நின்றுள். அவள் பேசவில்லை; அவரும் பேச வில்லை. மௌனம் பேசியது-ஒரே குரலில், ஒரே பொருளில்.

அதற்குள் வாயில் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. வித்யாசதுரர் தலைப் பாகையை அணிந்துகொண்டு வெளிக் கிளம்பினுர். சிறிது நேரத்திற்கெல்லாம் ஓடோடி வந்தாள் சுந்தரகௌரி; அவள் உடல் பூராவும் பரபரப்பு: பீதியும் நடுக்கமும் முகத்தில். என்னவென்று குணசுந்தரி கேட்கு முன் கானசதுரன் தோன்றினுன். சுந்தரகௌரி குணசுந்தரியின் பின்புறமாக வந்து நின்று பதுங்கினுள். குணசுந்தரி இருக்கவே கானசதுரன் பேசாது திரும்பினுன். இந்தத் திடீர் நிகழ்ச்சி யினுல் குணசுந்தரி அதிர்ச்சியுற்றுள்; சுந்தரகௌரி அழத் தொடங்கினுள். என்ன என்ற கேள்விக்குப் பதிலே பேசவில்லை. குணசுந்தரி புரிந்துகொண்டாள்.

கானசதுரனின் மனைவி சண்டிகா இந்தப் பூசலையறிந்து கொண்டு ஓடோடி வந்து சுந்தரகௌரியுடன் சச்சரவிட வந்தாள். அவர்களிடையில் அன்று குணசுந்தரி இல்லாது போயிருந்தால் சுந்தரகௌரியை அவள் அடித்தே போட்டிருப் பாள். மாமியாரும் மற்றவரும் சண்டிகாவின் கட்சியில் சேர்ந்து கொண்டார்கள்.

மாமனுருக்கு விஷயம் புரிந்துவிட்டது, கைத்தடியை எடுத்துக்கொண்டு பூமியில் இரண்டு தரம் தட்டிக் கர்ஜித்தார்: "யார் அது தெரியுமா அவள்? உன் தாயைப் போலத்தான். அடுத்ததரம் இதுபோல் நடந்துகொண்டால் கொன்று போடு வேன் கொன்று! ஆமாம், என்னிடம் சக்தியில்லை என்று நினைத்தாயா?"

கானசதுரனின் சுவடு தெரியவில்லை; அது நடந்து பல நாட்களுக்குப்பின் மீண்டும் அமைதி எழுந்தது. ஒரு நாள் இரவு உணவுக்குப்பின் மாமனுரும் மாமியாரும் பேச்சில் ஈடுபட்டார் கள். மற்றவர்கள் காதில் படாமலும் இல்லை. "கானசதுரன் திருந்துவான் என்பதில் நம்பிக்கையில்லை. அவன் பெண்டாட்டி தான் வழி காட்டவேண்டும். இந்தமாதிரி விஷயத்தில் மனைவிக் குத்தான் பூரணமான சக்தி உண்டு. அதை உபயோகிக்காது போனுல் வேறு யார் முயன்றும் பயனில்லை."

சண்டிகா அதைக் கேட்டாள். அவளிடம் கணவனைக் கவரச் சக்தியில்லையா? அதை ஏன் பயன்படுத்த முடியவில்லை? குணசுந்தரிதான் அவளுக்கு அறிவுரை கூறவேண்டும். குணசுந் தரியிடம் அவளுக்கு மதிப்புண்டு. சில சமயங்களில் பொறுமை மேலிட்டுத் தன்னை மறந்துவிடுவாள். இப்போது குணசுந்தரி யின் பெருமை தெரிந்தது. ஆகவே, குணசுந்தரியிடம் சென்றுள்.

''கணவன் - மனைவி உறவில் பாதிக்குமேல் பங்கு மனைவியிடந்தான். அதை நாம் சரிவர நிறைவேற்றிவிட்டால் முழு வெற்றியும் நமக்குத்தான்.''

கானசதுரனின் குணதிசயத்தில் பல குறைபாடுகள்; அவனுக்குச் சென்ற இடமெல்லாம் இழுக்கே ஏற்பட்டது. வித்யாசதுரர் அவனுடைய வேலைக்காகப் பல இடங்களில் சொல்லியிருந்தார் ஜராசங்கர் மாமாவும் பல முறை முயன்றார். ஆனாலும் பயனில்லை. கடைசியில் மனைவியே முயன்றாள். விரைவில் கானசதுரன் தன் தவறுதலை உணர்ந்து கொண்டான்.. பின்பு வேலையும் கிடைத்தது. மீண்டும் அந்தத் தம்பதியின் மணவாழ்வு நிறைந்தது.

இரண்டு நாத்திமார்களின் பிரச்னை பாக்கியிருந்தது. துக்கபாவின் கணவன் சாஹஸராயன் கடன்பட்டு ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டிருந்தான். மனைவிக்குச் சரியாகக் கடிதம் எழுதுவதில்லை. அவர்களுடைய பெண்ணுக்கு மண வயது நிரம்பிக் கொண்டிருந்தது. திருமணம் செய்யப் பணம் தேவையாக இருந்தது. வித்யாசதுரரின் சம்பாதனை அதற்குப் போதாதென்று குணசுந்தரிக்குத் தெரியும்.

ஒரு நாள் அவள் தனிமையில் கணவருடன் பேச்சுக் கொடுத்தாள்: ''கல்யாணம் செய்ய வேண்டுமென்றால் பணம் வேண்டும். கடன் வாங்குவது என்றால் நன்றாக இருக்காது. என்னுடைய வைர அட்டிகையை அடகுவைத்துப் பணம் கொடுங்கள். துக்கபாவின் கணவரைக் கூப்பிடுங்கள். கல்யாணத்தை நடத்திவிடலாம்.''

வித்யாசதுரர் சிரித்தார்: ''அட்டிகை போனால் நீ என்ன செய்வாய்?''

''பகவான் கிருபையால் மஞ்சளும் குங்குமமும் போதும். அட்டிகையினால் என்ன உபயோகம்? பிறருக்காவது பயன் படட்டுமே!''

துக்கபாவின் துயர் தீர்க்க வேண்டுமென்று வித்யாசதுரர் முயன்றுகொண் டிருந்தபோது மனைவியின் தியாக உணர்வு அவருக்கு உற்சாகம் அளித்தது, குடும்பத்தில் பேச்சு எழுந்தது; குணசுந்தரியின் முயற்சியில் திருமணக் காரியங்கள் உருவெடுத்தன. மானசதுரர் ஒரு நாள் தமது கருத்தை வெளியிட்டார்.

''குணசுந்தரி, நீ இப்படிச் செய்வதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். ஒருவருக்குச் செய்தால் இன்னொருவருக்கும் செய்யவேண்டும். இதற்கு முடிவே இல்லாது போய்விடும். வளமை இல்லாதபோது வள்ளன்மையும் குற்றந்தான். கூப்பிடு, அந்தச் சாஹஸராயனையும் துக்கபாவையும்!''

குணசுந்தரி பணிவுடன் பதில் சொன்னாள்: ''பெரியவர் சொல்படியே! இப்போதைக்கு நான் ஒன்றும் செய்யப் போவதில்லை. கல்யாணம் நடந்தபிறகு செலவைப் பார்த்துக்கொள்ளலாம்.''

சாஹஸராயன் வந்தான். கல்யாணம் நடந்தேறியது.

கல்யாணச் செலவு பார்த்துத் தீர்க்கும்வரையில் யாரும் பேச்செடுக்கவில்லை. எங்கே குணசுந்தரியின் தலையில் விழுமோ என்று மானசதுரர் பயந்து கொண்டிருந்தார். குணசுந்தரி எங்கே கணவர் தனது அட்டிகையைப் பயன்படுத்திக்கொள்ளாமற் போய்விடுவாரோ என்று கவலை கொண்டிருந்தாள்.

கணக்குத் தீர்க்க மனிதர்கள் வித்யாசதுரரிடம் வந்தபோது கணவனின் கவலையைத் தீர்க்கக் குணசுந்தரி தனது யோசனையைச் சொன்னாள். கணவனும் மனைவியும் கலந்தாலோசிப்பது மானசதுரருக்குத் தெரிந்துவிட்டது. 'வைர அட்டிகையைப் பற்றிப் பேச்சு வந்துவிட்டதா? மருமகள்தான் இந்தச் சிக்கலைத் தீர்த்து வைக்க வேண்டுமா?' என்று எண்ணினார்.

கணவனிடம் பேசிவிட்டுத் திரும்பிய குணசுந்தரியிடம், ''என்ன நிச்சயம் செய்திருக்கிறாய்? இந்தப் பாரத்தை உன்மீதே போட்டுக்கொள்ளப் போகிறாயா?'' என்று கேட்டார்.

''இல்லை; இது எனக்கு ஒரு பாரமாகத் தோன்றவில்லை.''

''ஏன் பாரமாகத் தோன்றவில்லை? உனக்குப் பாரமில்லை என்றால் துக்கபாவுக்கும் அப்படியேதான். அவள் ஏன் தன் அட்டிகையைக் கொடுக்கக் கூடாது? தன் நகைகளை அவள் ஏன் பூட்டி வைக்கவேண்டும்? இந்த வீட்டில் இருப்பவர்கள் எல்லோரும் உயிரற்ற ஜடங்களா? புத்தியற்ற கழுதைகளா? துக்கபாவின் பெண் கல்யாணத்துக்குக் குணசுந்தரியின் நகை – நன்றாயிருக்கிறது! இதை என்னால் சகிக்க முடியாது.''

மானசதுரர் அப்படிச் சொன்னபோதே நிச்சயித்து விட்டார். இரவில் எல்லோரும் உறங்கும் வேளையில் சாஹஸராயனை அழைத்து விஷயத்தைச் சொன்னார். அவன் பெண் கல்யாணத்திற்குக் குமுதசுந்தரி தன் நகைகளைத் தியாகம் செய்யப்போகிறாள், இது முறையா என்று கேட்டார். சாஹஸராயன் கைவிரித்தான். 'நான் எங்கே போவேன் பணத்துக்கு?' என்று கேள்வி விடுத்தான். அவன்மேல் அவருக்கு இரக்கந்தான் வந்தது. பெண்ணைக் கூப்பிட்டார்; ''இது ரொம்ப அழகாயிருக்கிறது. உன் பெண் கல்யாணத்திற்கு இன்னொருவர் வரிந்து கட்டுவது. வெட்கமாயில்லை, எங்கே உன் நகைகள்? எடுத்து வா எல்லாவற்றையும்!'' என்று கடிந்தார். பேசாமல் நின்றாள் துக்கபா.

''ஏன் வாய் மூடிக்கொண்டிருக்கிறாய், சாஹஸராயா, எங்கே நகைகள்?''

பெண் பயந்துபோய் நகைப் பெட்டியைக் கொண்டு தந்தையிடம் சேர்ப்பித்தாள். ''நீயே தரப்போகிறாயா, இல்லை, நானே எடுத்துக் கொள்ளட்டுமா?''-மறுமொழி பேசாமல் தந்தையின் கைகளில் நகைகளை மகள் இட்டாள்.

மறுநாள் விடிந்ததும் விடியாததுமாகக் கிழவரும் சாஹஸராயனும் நகைகளைப் பக்கத்துக் கிராமத்தில் அடகு வைத்துப் பணம் கொண்டுவரக் கிளம்பினார்கள்.

இந்தச் சம்பவம் வித்யாசதுரருக்கும் குணசுந்தரிக்கும் தெரிய நியாயமில்லை. ஆகவே, நகைகளைக் கழற்றி வித்யாசதுரரிடம் குணசுந்தரி கொடுத்தபோது அவர் அன்புடன் சொன்னார்: ''உன்னுடைய அழகே அழகு! வெறும் நகையின்றி எப்படிச் சோபிக்கிறாய்? உன் சோபையின் காரணத்தால்தான் இந்த நகைகளுக்கெல்லாம் அழகு வந்தது'' என்றார் கண்களில் மின்னும் அன்புடன். கணவரின் ஆசை மொழிகளில் நாணம் அடைந்து அவள் ஓடோடிப் போனாள்.

மானசதுரரும் சாஹஸராயனும் பணத்துடன் திரும்பிவந்து முதற் காரியமாக வித்யாசதுரரை அழைத்து, கணக்குகளைத் தாமே தீர்க்கப் போவதாகவும், வித்யாசதுரர் ஒரு பைசாக்கூடச் செலவழிக்கக் கூடாது என்றும் திட்டவட்டமாகச் சொல்லவே, வித்யாசதுரர் கணக்குகளைக் கூறினார். மானசதுரரே கடைக்காரர்கள், கடன்காரர்களை அழைத்துக் கணக்குத் தீர்த்தார். பாக்கிப் பணத்தை சாஹஸராயனிடம் கொடுத்து, ''ஒழுங்காக வியாபாரம் செய்'' என்று புத்திமதி சொன்னார்.

குணசுந்தரியின் தாம்பத்திய சுகத்திற்கு இனி இடையூறு இருக்கக்கூடாது என்று தீர்மானித்துத் தனித்து வாழ்வதே சிலாக்கியம் என முடிவு செய்தார். சாஹஸராயனையும் மனைவி துக்கபாவையும் மீதிப் பணத்தை எடுத்துக்கொண்டு கிளம்புங்கள் என்று சொல்லி அவர்கள் கிளம்புவதைப் பார்த்துவிட்ட பின்னரே, மறு காரியம் பார்த்தார். கானசதுரனையும் அவ்வாறே தனிக் குடித்தனம் பார்க்கும்படி சொல்லித் தாமே தனிக்குடித்தனம் செய்துவைத்தார். கடைசியாகத் தாமும் மனைவி தர்மலக்ஷ்மியையும், சஞ்சலையும் அழைத்துக்கொண்டு மனோஹர்புரிக்குக் கிளம்பினார். சுந்தரகௌரி குணசுந்தரியிடம் தங்கினாள்.

வைகறைப் பொழுதில் மரத்தைவிட்டுப் பறவைகள் வெளியுலகில் பறப்பதுபோல வீட்டைவிட்டு எல்லோரும் கிளம்பிவிடவே தனியாக விடப்பட்டாள் குணசுந்தரி. சில சமயம்

தனிமை தாளாமல் மனோஹர்புரி சென்று சிலநாள் தங்கிவிட்டுத் திரும்புவாள். இந்தத் தனிமையில் புது அநுபவங்கள் கிடைத்தன. குமுதசுந்தரிக்கு இரண்டு வயது நிறைந்தபோது குஸுமசுந்தரி பிறந்தாள். பிள்ளையில்லையே என்ற குறை தோன்றியதுண்டு. ஆனால் நற்குணம் பொருந்திய கணவர், நற்பண்புகள், தூய அநுபவம், நல்லறிவு இவற்றால் அந்த மனக்குறையை அகற்ற அவள் முயன்று வெற்றி பெற்றாள். ஆண்டுகள் கழியக் கழிய ஒவ்வொருவராக மறையத் தொடங்கினார்கள்-தர்மலக்ஷ்மி. சஞ்சல், பிறகு அவளுடைய இரண்டு குழந்தைகள், துக்கபா, கானசதுரன், கடைசியில் சண்டிகா.

வித்யாசதுரரும் குணசுந்தரியும் ரத்னநகரியில் இருந்தார்கள். குமுதசுந்தரி புக்ககம் போய்விட்டாள்; கிழவர் மானசதுரர் தன்னந்தனியாக மனோஹர்புரியில் வசித்து வந்தார். அவருக்குப் பணிவிடை புரியச் சுந்தரகௌரியும் உடன் இருந்தாள்.

3. மனோஹர்புரியில் ஓர் இரவு

சரஸ்வதிசந்திரனை நையப் புடைத்துப் புல்கிடங்கில் கொள்ளைக்காரர்கள் கிடத்திய ஏறக்குறைய அதே நேரத்தில் மனோஹர்புரிக்கு வந்து சேர்ந்தாள் குணசுந்தரி. கடந்த நாட்களின் நினைவுச் சுழலில் பிணைந்து போயிருந்த அவளை நிகழ்காலத்துக்குக் கொண்டு வந்தார்கள், குமுதசுந்தரி அனுப்பியிருந்த குதிரைவீரர்கள். ''இன்று மாலை புறப்பட்டு நாளைக் காலை வந்து சேர்கிறேன்'' என்று குமுதசுந்தரி எழுதியிருந்த கடிதத்தைக் குணசுந்தரியிடம் சேர்ப்பித்தார்கள். கடிதம் வந்தவுடன் அவளைச் சூழ்ந்துகொண்டார்கள் மானசதுரரும், சுந்தரகௌரியும். குஸுமா அந்தக் கடிதத்தை இரைந்து படித்தாள். சந்திரகாந்தனுக்குக் கடிதத்தின் கையெழுத்துப் புதிதல்ல; சரஸ்வதிசந்திரனுக்கு வந்த ஆசைக் கடிதங்களின் கையெழுத்துத்தான். குதிரை வீரர்களிடம் கேள்விமீது கேள்வியிட்டு மகளின் சுகத்தைப்பற்றி அறிந்துகொண்டாள் தாய்.

இருள் கவிந்தது. குணசுந்தரியின் உள்ளத்தில் விதவிதமான கவலைகள் எழுந்தன. மகளின் சுகம், புக்ககத்தில் அவளை மற்றவர்கள் எப்படி நடத்துகிறார்கள், கணவன் அன்புடன் இருக்கிறானா இல்லையா, சரஸ்வதிசந்திரனை வரனாக நிச்சயித்தும் அவன் கைநழுவிப் போனது, அவனுடன் மணமுடித்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்றெல்லாம் கவலைப்பட்டாள். பெற்ற தாயின் நெஞ்சைப் பிழிந்தெடுக்கும் எண்ணங்கள்; அவற்றின் வடிவ,

மான நீர்த் திவலைகள் கண்களிலிருந்து உருண்டோடுவதைக் கண்டுவிட்ட குஸுமா, ''அம்மா, ஏன் சும்மா அழுகிறாய்?'' என்று ஓடிவந்து கழுத்தைக் கட்டிக்கொண்டாள். பதின்மூன்று வயது அவளுக்கு; இளமைப் பூ மலர் விரிக்கும் பருவம். தாயின் சோகம் மகளுக்கு எங்கே புரியும்? கண்களைத் துடைத்துக்கொண்டு சிரித்தாள் தாய். மகளை ஆசையுடன் அணைத்துக்கொண்டாள்.

உணவுக்குப் பிறகு உறங்குவதற்காக மானசதுரரும் சந்திர காந்தனும் தமக்கு அளிக்கப்பட்ட அறையில் சென்றார்கள். மான சதுரர் சரஸ்வதிசந்திரனைப்பற்றி விசாரித்தார். அவனும் ஆதியோடந்தமாய் எல்லாவற்றையும் சொன்னான். வித்யா சதுரர் சரஸ்வதிசந்திரன்மீது குற்றங் கண்டதையும் எடுத்துச் சொன்னான்.'' அநுபவம் மிக்க மானசதுரர் ஆதுரத்துடன் பேசினார்.

''சந்திரகாந்தா! எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்தால் சரஸ்வதிசந்திரன் செய்ததில் தவறேதுமில்லை. குமுதசுந்தரி குமான்பாவிடம் சேர்ந்து சுகித்திருக்கப் போவதில்லை. இளம் மணமகளின் எல்லா நலன்களும் ஆரம்ப நாட்களில் மாமியார், மருமகள் உறவில்தான் பொருந்தியிருக்கின்றன. வித்யாசதுர னுக்கு என்ன தெரியும்? அவனுடைய பெரும்பாக்கியம் குணசுந்தரி போன்ற மனைவி கிடைத்திருக்கிறாள். ஒவ்வொரு வீட்டிலும் குணசுந்தரி போன்ற பெண்மணி இருப்பாள் என்று நினைத்திருக்கிறான். குமான்பா வேறு, குணசுந்தரி வேறு.

''சரஸ்வதிசந்திரனால் வியாதியை உணர முடிந்தது. ஆனால் அவன் அதற்கு மருந்தென்ன என்பதை அறியவில்லை. மருந்து இல் லாமல் இல்லை. குடும்பத்தைத் துறந்து வனவாசம் போனானே, அந்த அளவில் புத்தி மட்டுத்தான். லக்ஷ்மீநந்தனரைப் பிரிந்து வசிக்கலாம்; அது தோன்றவில்லை. சேர்ந்து வசிக்கும் நமது குடும்ப வாழ்வில் தவறேதுமில்லை. ஆனால் எல்லாவற்றுக்கும் எல்லை இருக்கிறது. ஒரேவிதமான சமநோக்கில்தான் சேர்ந்து வாழும் குடும்பங்கள் சுகித்திருக்க முடியும். எப்போது அந்தச் சமநோக்கு இல்லையோ, பிரிந்து வாழ்வதே சிறந்தது.''

வித்யாசதுரரின் வார்த்தைகளால் கோபமுற்றிருந்த சந்திரகாந்தன் மானசதுரர் சொல்வதில் பல உண்மைகள் இருப்பதை உணர்ந்து அமைதியுடன் உறங்கினான்.

நெடுநேரம் விழித்திருந்த குணசுந்தரி தூங்கிப் போனாள். சட்டென்று விழித்துக்கொண்டபோது குஸுமா பலகணியைத் திறக்கக் கண்டாள். கையில் லாந்தருடன் ஃபதேசிங் நின்று கொண்டிருந்தான். குணசுந்தரி எழுந்து வந்தாள். சரஸ்வதி சந்திரன் ஸ்வர்ணபுரியை விட்டு வரும் வழியில் கொள்ளைக்

காரர்களால் தாக்கப்பட்டான் என்றும், இன்னும் அவன் அகப் படவில்லை என்றும் செய்தி சொன்னான். குமுதசுந்தரி அனுப்பிய வீரர்கள் இன்னும் அவனைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறினான்.

அப்படியானால் சரஸ்வதிசந்திரன் ஸ்வர்ணபுரியில்தான் இருந்தானா? அதுவும் புத்திதனரின் வீட்டில்தானா?

ஆடவர்களை எழுப்புவதில் பயனில்லை என்று அவனை அனுப்பிவைத்தாள். "நாளை விடியற்காலையில் என்ன செய்தி வருமோ? இப்படியும் இருப்பானோ ஒருவன்? சந்திரகாந்தனிடம் சொன்னால் அவனுக்கு ரோஷந்தான் வரும்."

"தலையில் எழுதியிருப்பதை யார் மாற்றமுடியும்? எல்லாம் விதியின் செயல்" என்றாள் சுந்தரகௌரி. அதற்குள் மீண்டும் கதவு இடிக்கப்படும் சத்தம் கேட்டது. எல்லோரும் திடுக் கிட்டார்கள்.

"அம்மா, கதவைத் திறவுங்கள். நாங்கள்தாம் ஃபதே சிங்கும் ஹரபம்ஜியும்."

குணசுந்தரி கதவைத் திறந்தாள். சரஸ்வதிசந்திரனைத் தேடச் சென்றிருந்த குதிரை வீரர்களில் ஒருவனான ஹரபம்ஜி வெறும் கையுடன் திரும்பியிருந்தான். அதுமட்டுமா, குமுத சுந்தரியையும் கொள்ளைக்காரர்கள் பிடிக்கத் திட்டமிட்டிருப் பதாகவும் அவளைக் காக்கச் செல்லப்போவதாகவும் கூறினான். குணசுந்தரியால் பொறுக்க முடியவில்லை. குஸுமா அழத் தொடங் கினாள். இந்தச் சந்தடியில் ஆண்கள் எழுந்தார்கள். அவர்களுக்குக் குணசுந்தரி விவரமாக எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னாள். குமுதசுந்தரியைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் தலை தூக்கி நின்றது.

மானசதுரர் ஹரபம்ஜியுடன் கலந்தாலோசித்தார். எங்கே எவ்வளவு ஆட்களை அனுப்பவேண்டும், குமுதசுந்தரிக்கு எப்படிப் பாதுகாப்புத் தரவேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டார்கள். குமுதம் வரக்கூடிய இடத்தில் பிரதாபை வைத்துப் பாரா செய் வது என்று முடிவு செய்தார்கள். அப்துல்லாவுடன் வேறு யாரை யாவது துணைக்கு அனுப்பவேண்டும் என்றவுடன் மானசதுரர் தாம் போவதாக உடை தரித்து வாளுடன் புறப்பட்டார். குணசுந்தரி, "இந்த வயதில் இந்தமாதிரி ஆபத்தில் மாட்டிக் கொள்ளக் கூடாது" என்று பலமுறை வேண்டியபோதும் அவர் கேட்கவில்லை. கடைசியில் அவரை அவர் வழி என்று விட்டார் கள். சந்திரகாந்தன் பெண்களுக்கு உதவியாக இருக்க வேண்டு மென்று நிச்சயமாயிற்று. சிங்கம் சிங்கந்தான், வயதானாலும்

தன் குணத்தை மறப்பதில்லை; அதுபோலத்தான் மானசதுரர் வீராவேசத்துடன் கிளம்பினார்.

4. காடு, இருள், சரஸ்வதிசந்திரன்

மணிமுத்திரையுடன் ஓடிய வணிகனுடன் பகலும் ஓடி மறைந்தது. இரவும் வந்தது. சட்டென்று இருளும் ஒளியும் பளிச்சிடும் சூன்யச் சூழ்நிலையில் ஒரு மனித இருதயம் வாழ்வின் துடிப்பில் சிக்கியிருந்தது. ஆகாயத்தின் ஒரு முனையில் மங்கிய நிலவுத் தட்டின் சன்னமான ஒளிக்கதிர்கள் மரம் செடி கொடிகளின் இலைகளின் ஊடே பாய்ந்து கொண்டிருந்தன. மூர்ச்சை தெளிந்து விழித்துப் பார்த்த சரஸ்வதிசந்திரனை அந்தகாரம் ஏறிட்டு நோக்கியது. திடீர், திடீர் என்று எழுந்த காட்டு விலங்குகளின் ஒலி அந்தகாரத்தின் குரூரத்தை விநாடியில் விவரித்துக் காட்டியது. தலையின்கீழ்க் கைகளை மடித்து நான்கு புறமும் நோக்கினான்.

''இது என்ன, மகாராத்திரியின் தரிசனமா? குமுதம்! இதோ உன்னை மறந்துவிட்டேன். தந்தையே! காதலைத் துறந்து மாயையின் ஆழத்தில் மாட்டிக்கொண்டு விட்டேன். இனி நான் ஒரு போதும் மீளேன்!''

நான்கு புறமும் கப்பிய இருள். வீட்டையும் வெளியையும் துறந்தான். செல்வத்தையும் துறந்தான்; நண்பர்களையும் துறந்தான். காதலையும் துறந்து குமுதத்தையும் இழந்து விடுதலை பெற்றுவிட்டான். இதோ கானகத்தில், காரிருளில் எண்ண விகாரங்களின் சிக்கல்களில் இழுக்கப்பட்டு நெடுமரமாக நின்றுகொண்டிருந்தான். பசியும் தாகமும் மாயை அல்ல. அவை நிதர்சனமான உண்மைகள். வயிறு கிள்ளியது; தாகம் தொண்டையை வறட்டியது. பசி பொறுக்க முடியாமல் மீண்டும் மயங்கி விழுந்தான்.

காட்டில் காரிருள் சூழ்ந்திருந்தது. மங்கிய நிலவு மேல்வானத்தில் மறைந்து போயிற்று. எங்கிருந்தோ எழுந்த காற்று, சூறையாடியது. இலையும் கொடியும் மரமும் ஆடின. அந்த இரைச்சலில் பறவைகள் சடசடவென இறக்கைகளை அடித்துக்கொண்டன. மழைக்கால மேகங்கள் இருளைவிடக் கருமையாயின. அவை மோதித் தெறித்த மின்னல் இடி ஒலி எழுப்பியது. அந்த இடியோசையில் காட்டு விலங்குகள் அமைதி இழந்தன. கொடிய மிருகங்கள் கர்ச்சித்தன. இருப்பிடங்களை விட்டு வெளியே பாய்ந்தன.

சரஸ்வதிசந்திரன் விழித்துக்கொண்டான். எழுந்திருக்க முயன்முன். படுத்தேயிருந்தால் நலம் எனத் தோன்றியது. இதோ காடு, இதை விட்டுப் போகவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. ஆனல் உடல்-அது வலிமையற்றுக் கட்டையாகக் கிடந்தது. இது என்ன, மரணம் நெருங்கிவிட்டதா? சாவு நெருங்கினல் இந்த நிலைதான் ஏற்படுமா? சாவின் சாயலை அவன் கண்டுகொண்டான்: 'இதோ, சிறிது நேரத்தில் நிலவுலகை விட்டுப் பிரிந்து விடுவோம்.' அவன் வாழ்வில் கண்டது என்ன? தந்தை, குமுத சுந்தரி, சந்திரகாந்தன் எல்லோரையும் நினைத்துக்கொண்டான்; மானசிகமாய் மன்னிப்பு வேண்டினன்.

பக்கத்தில் செடி கொடிகள் சலசலத்தன. அவைகளிலிருந்து வெளிவந்தது கருநாகம் ஒன்று. அது நெளிந்து நெளிந்து, வளைந்து வளைந்து நீண்டு பருத்ததோர் உடலுடன் மெல்ல வந்து கொண்டிருந்தது. எழுந்திருக்கச் சக்தியற்று படுத்தவண்ணமே அதைக் கண்டான். இருளில் ஏனே அது ஒளி விட்டது. அதனுடைய வழியில் அவன் படுத்துக் கிடந்தான். இனி இந்த விநாடியோ அடுத்த விநாடியோ, அது அவன்மேல் ஊர்ந்து வரும். பின்னல் இனிய சாவு. அதை எதிர்நோக்கினன். பாம்பு அவனைச் சுற்றிவந்தது. கண்களை மூடிக்கொண்டான். அது தன்னைத் தீண்டிவிடப் போகிறது என்று எண்ணிக்கொண்டான். சிறிது நேரமாகவே கண் விழித்துக்கொண்டான். 'பாம்பு எங்கே? இதோ தலைக்குமேல் படம் விரித்துக் குடைபோல நிற்கிறது. ஏன் இன்னும் என்னைத் தீண்டவில்லை?' - இதோ, வாலைச் சுழற்றி அவன் முகத்தில் அடித்துவிட்டு நகர்ந்தது. வாலின் அடிபட்ட சரஸ்வதிசந்திரன் நாகம் தன்னைத் தீண்டி விட்டதென்றே மரம்போலக் கிடந்தான். இதோ செத்து விடுவோம் என்று எண்ணிக்கொண்டான். அந்தப் பயத்தில் இருதயம் நின்றுவிட்டதாக உணர்ந்தான்.

சாதாரண நாட்களில் காட்டு வழியே மனிதர் நடப்பதில்லை. பழக்கமான ரஸ்தாவிலேயே நடந்தார்கள். காடு வழியாக வருபவர்கள் புதிய மனிதர்களாகத்தான் இருக்க வேண்டும். அப்படித்தான் சந்நியாசிகளின் கூட்டம் வந்துகொண்டிருந்தது. ஜடைதரித்த சந்நியாசிகள்; முப்பது பேர்களுக்குமேல் இருப்பார்கள். சின்ன ரதம் ஒன்றை இழுத்துக்கொண்டு வந்தார்கள். உயர்ந்த கொடி ஒன்றை ஏந்திவந்தார்கள். சரஸ்வதிசந்திரனின் பக்கம் வந்தவுடன் கூட்டம் நின்றது. ரதத்திலிருந்து யோகீசுவரர் குரல் எழுப்பினர்:

''மோகன்புரி, என்ன நடந்துவிட்டது?''

''குருஜி, ஏதோ மனித உடல்போல் தோன்றுகிறது. உடலில் உயிர் இருக்கிறதா இல்லையா என்று பார்க்கலாமா?''

குரு சில விநாடிகள் தியானத்தில் ஆழ்ந்துவிட்டுப் பேசினுர். ''ஆமாம், ஜீவன் இருக்கும் என்றுதான் தோன்றுகிறது. சுந்தர கிரியின் மடத்திற்கு இவன் வரவேண்டும் என்பது பகவானின் இச்சை. அங்கேயுள்ள சாதுக்கள் இவனுடைய வரவை எதிர் நோக்கிக்கொண்டிருக்கிருர்கள்.''

குருவின் உத்தரவுப்படி மோகனபுரி தன் பலமான தோள் களில் சரஸ்வதிசந்திரனைத் தூக்கி எடுத்துக்கொண்டான்; சாதுக் களின் கூட்டம் நகர்ந்தது.

5. குமுதசுந்தரி கிளம்பினுள்

குமுதசுந்தரி கிளம்பப் போகிருள் என்று அறிந்ததும் கிருஷ்ண கலிகா மகிழ்ச்சி அடைந்தாள். பிரமாததனனுக்கும் தனக்கும் உள்ள கள்ளக் காதலுக்கு இனி இடையூறு ஏதுமிருக்காது என்று எண்ணினுள். ஆனுல் தந்தை இதை அறிந்துவிட்டார், தன்னைத் தண்டிக்கப் போகிருர் என்று பயந்து போனுன் பிரமாததனன். நவீனசந்திரன் உதவ மறுத்துவிட்டதால் அவனுக்குக் கவலை மிகுந்தது. இனி என்ன என்று யோசித்தபோது கிருஷ்ணகலிகா யோசனை சொன்னுள்; ''நவீனசந்திரனுக்கும் குமுதசுந்தரிக்கும் சம்பந்தம் ஏதோ இருப்பது தெரிந்துவிட்டதால்தான் குமுத சுந்தரி இந்தப் பழியை என்மேல் சுமத்தியிருக்கிருள் என்று சொல்லுங்களேன்.''

அப்படிச் சொன்னுல் யார் தன்னை நம்பப் போகிருர்கள் என்று எண்ணியவாறு பிரமாததனன் வீடு திரும்பினுன். குமுத சுந்தரியின் அறையில் சாம்பல் அடைத்த சிறு புட்டியையும் சில காகிதக் கட்டுகளையும் கண்டவுடன் திகைத்துப் போனுன். கடிதங்களில், ''பிரியே, கண்மணி'' என்ற ஆசைச் சொற்கள்!

பிரமாததனன் குதித்தெழுந்தான். ''இவை நவீனசந்திர னின் கையெழுத்து அல்லவா? இதைவிட வேறு என்ன நிரூபணம் வேண்டும்?'' அதற்குள் அறையில் நுழைந்தாள் குமுதசுந்தரி. பிரமாததனன் கோபத்தில் இரைந்தான்;

''இதுதான் உன் படிப்பின் லட்சணமா? இப்படித்தான் பரபுருஷனிடம் நட்புக் கொள்வதா?''

இருக்கிற துயரம் போதாதென்று புதியதோர் ஆபத்து! குமுதசுந்தரி புரிந்துகொண்டாள். ஈனமான குரலில், ''என்ன?'' என்று வினவினுள்.

''என்னவா? என்ன என்று கேட்கத் துணிவும் உனக்கு இருக்கிறதே! இதோ, இந்தக் கடிதங்களைப் பார்'' என்று கடிதக் கட்டை விட்டெறிந்தான்.

பேதை குமுதசுந்தரி உள்ளத்தில் குமுறினாள். 'ஆண்டவனே, யாரிடம் இதைச் சொல்வது? என்னை இன்னுமா சோதனை செய்ய வேண்டும்? நான் பட்ட பாடு போதாதா? இந்தப் புதிய சோதனை எதற்கு?'

''ஏன் பதில் இல்லை? குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயா?''- பிரமாததனன் கத்தினான். குமுதசுந்தரி சிலையாகி நின்றாள். மேலும் சுடுசொற்களை வீசிவிட்டுப் பிரமாததனன் நகர்ந்தான்.

கிருஷ்ணகலிகாவைச் சந்தித்தான். அவள் அவனுக்கு மேலும் யோசனை சொன்னாள்: ''இப்போது இவளைப் பிறந்தகம் அனுப்பிவிடுங்கள். பின்னால் அந்தக் காகிதக் கட்டுக்களை உங்கள் தகப்பனாரிடம் காட்டி அவளுடைய நடத்தையைப்பற்றிச் சொல்லுங்கள்.''

குமுதசுந்தரி கிளம்பியபோது பிரமாததனனைத் தவிர எல்லோரும் பிரியா விடையுடன் அவளை வழியனுப்பி வைத்தார்கள். புத்திதனர், ''குமுதசுந்தரி, சீக்கிரம் வந்துவிடம்மா'' என்றார்.

''மதனி, பதினைந்து நாட்களுக்குமேல் ஒரு நாள்கூட அதிகம் தங்கக்கூடாது'' என்றாள் அலக்கிஷோரி. ''குழந்தை, நீ திரும்பிவரும்வரை வீடு சூன்யமாக இருக்கும். சீக்கிரம் திரும்பிவிடு'' என்றாள் மாமியார்.

குமுதசுந்தரி கிளம்புவதற்கு முன் வனலீலா கடிதமொன்று எழுதி அவளிடம் கொடுத்தாள். தான் நேருக்கு நேர் சொல்ல விரும்பவில்லையென்றும் பின்னர் நேரம் கிடைத்தபோது படித்துப் பார்க்கவேண்டும் என்றும் அவளிடம் சொன்னாள். பிரமாததனன்-கிருஷ்ணகலிகா சந்திப்பைப்பற்றியும், அவர்கள் என்ன திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதையும் கடிதத்தில் எழுதியிருந்தாள். குமுதசுந்தரி வாங்கி வைத்துக்கொண்டாள். பயணத்தைத் தொடங்கினாள்.

குதிரை வண்டி நகர்ந்தது. வண்டியின் ஆட்டத்தில் குமுதசுந்தரி தூங்கிப் போனாள். பாதையில் மரங்களின் விரிப்பும், இலைகளின் மணமும், மலர்களின் சுகந்தமும் காய்ந்த இலைகளின் மீது ஏறிய சக்கரங்களின் ஒலியும், இருமருங்கிலும் ஆங்காங்கே வரும் தடாகங்கள், நதிகள்மீதிலிருந்து வரும் இளங்காற்றும் பேதை குமுதசுந்தரிக்கு அமைதியைத் தந்தன.

நித்திரை வசமான குமுதசுந்தரியின் வண்டி தக்க துணையுடன் நகர்ந்துகொண்டிருந்தது. கிழக்கு வெளுக்கும் நேரத்தில் மானசதுரரும் தம் ஆட்களுடன் வந்து அந்தக் காவல்காரர்களுடன் சேர்ந்துகொண்டார். திரையை விலக்கிக் காலைத் துயில் பூண்டிருந்த குமுதசுந்தரியைக் கண்டதும் பெருமூச்சு விட்டார்.

பொழுது புலர்ந்தது. இருள் மறைந்தது. பறவை இனங்கள் இனிய இசை எழுப்பின. கீழ்வானம் பொன்மயமானது. கண் விழித்த குமுதசுந்தரி முதல் காரியமாகக் கடிதத்தை வாசிக்க ஆரம்பித்தாள். கடிதத்தைப் படித்ததும் குமுதசுந்தரி மனமுடைந்து போனுள். பதிக்குத் தன்மேல் நம்பிக்கை போய் விட்டது, கிருஷ்ணகலிகா கணவனே வசப்படுத்திவிட்டாள் என்றறிந்து சொல்லொணுத் துயர் கொண்டாள்.

'இந்த அபவாதத்திலிருந்து இனி எப்படி நான் மீளப் போகிறேன்? என் மாமனுருக்கும் என் நாத்தனுருக்கும் என்ன பதில் சொல்லுவேன்? என்னைத்தான் எப்படி நம்புவார்கள்?'

நெஞ்சைப் பிழிந்தெடுத்தது துயரம். அதைத் தாங்க முடியாமல் திரையை அகற்றிக் கதிரவனின் பொன்னுன கிரணங்களைக் கண்டாள். வெளியே திரை அகற்றப்படுவதைக் கண்ட மானசதுரர் குதிரையின் வேகத்தைக் கட்டுப்படுத்தி வண்டியின் பின் வந்தார். பாட்டனுரைக் கண்டதும் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தாள் குமுதம். அவர் ஆசையுடன் அவளுடைய சுக நலன்களைப்பற்றி விசாரித்தார். அவளும் தாய், தந்தை, சகோதரி ஆகியவர்களைப்பற்றி நலன் கேட்டறிந்தாள். கொள்ளைக்காரர்கள் பயமிருப்பதாகவும் அதனுல் ஆட்களுடன் தாம் வந்திருப்பதாகவும் மானசதுரர் தாம் வந்திருக்கும் காரணத்தைச் சொன்னுர்.

அப்போது தூரத்தில் சலசலத்துக்கொண்டிருந்த சுபத்ரா நதிக்கரையிலிருந்து ஓசை எழுந்தது. எல்லோரும் உஷாரானுர்கள். மானசதுரர் வாளையுயர்த்தி, ''எல்லோரும் தயாராகுங்கள்... அம்மா, நீ பயப்படாதே'' என்று மார் தட்டினுர். குமுதசுந்தரி திடுக்கிட்டுப் போனவளாய், ''என்ன, என்ன?'' என்று கேட்கத் தொடங்கினுள். நதிக்கரையிலிருந்து மானசதுரரைச் சேர்ந்த குதிரை வீரன் விரைந்துவந்து, எவ்வாறு தான் கொள்ளைக்காரர்களை முறியடித்தான் என்ற செய்தியைச் சொல்லி விவரித்தான். ''சபாஷ், ஃபதே சிங்'' என்று உடனிருந்த அப்துல்லா அவனைப் போற்றினுன். மானசதுரர் தோள் பூரித்தார். ''அம்மா, பாதி பயம் போய்விட்டது. இன்னும் கொஞ்ச தூரந்தான். அப்புறம் அந்தக் கொள்ளைக்காரர்களின் பயம் தீர்ந்துவிடும்'' என்று தைரியம் சொன்னுர்.

வெகு தூரத்திலிருந்து வந்துகொண்டிருந்த குதிரைவீரனை எல்லோரும் உன்னிப்புடன் கவனித்தார்கள். புத்திதனருடைய ஆட்கள் அவனை அடையாளம் கண்டுகொண்டார்கள் - அவன் தான் சங்கர்.

''கவலைப்படாதீர்கள்; என்னுடன் கிராமத்து ஜனங்கள் இருக்கிறுர்கள். ஸுரசிங்கை இப்போது நாங்கள் பார்க்கப்

போகிறோம்'' என்று சொல்லித் திரும்பினான். ஸுரசிங்கின் கூட்டத்தாரைச் சந்தித்து நதிக்கு அப்பால் குமுதசுந்தரி வந்து விட்டாள் என்றும், அவளைப் பிடிப்பதானால் இப்படிச் செல்ல வேண்டும் என்றும் பொய்யான திசை ஒன்று காட்டிக் கொடுத்தான். அவ்வாறே ஸுரசிங்கும் அவன் ஆட்களும் சென்றார்கள் அதற்குள் குமுதசுந்தரியின் வண்டி மேலும் நகர்ந்தது.

சிறிது நேரம் கழித்து ஸுரசிங் குமுதசுந்தரியின் வண்டி ஏதும் காணாமல் பழைய ரஸ்தாவுக்கே திரும்பிவந்தான். அவனை யும் அவன் ஆட்களையும் எதிர்பார்த்தவண்ணம் ஹரபம்ஜியும் மற்றவர்களும் நின்றிருந்தார்கள். கைகலப்பு மூண்டது. குமுத சுந்தரி அவர்களைக் கடந்து எப்போதோ போய்விட்டாள் என்றறிந்ததும் ஸுரசிங் ஆத்திரம் அடைந்தான். சங்கர் தன்னை ஏமாற்றிவிட்டதை அறிந்து கோபம் கொண்டான். பிரதாபனும் வாக்ஜியும் ஸுரசிங்கிடம் வந்து சேர்ந்தார்கள். சங்கரின்மேல் அவர்கள் பெருஞ் சினம்கொண்டார்கள். சங்கர் தன் ஆட் களுடன் ஹரபம்ஜியோடு சேர்ந்துகொண்டான். ஸுரசிங் தன் கை வாளைச் சங்கரின்மீது எறிந்தான். ஹரபம்ஜி அதைத் தக்க சம யத்தில் தடுத்து சங்கரின் உயிரைக் காத்தான். பிறகு ஆயுதமிழந்த ஸுரசிங்கைத் தாக்கி அவனை உயிருடன் சிறைப்பிடித்தார்கள். ஆனால் அவனுடைய பிள்ளைகள் இருவரும் தப்பி ஓடினார்கள். ஸுரசிங்கை ஸ்வர்ணபுரிக்குத் தக்க பாதுகாப்புடன் சங்கரும் அவனுடைய ஆட்களும் இட்டுச் சென்றார்கள்.

6. எண்ண அலைகள்

ஸுரசிங்கின் ஆட்களுக்கும் தம் ஆட்களுக்கும் தூரத்தில் கைகலப்பு நடந்துகொண்டிருந்தபோது மானசதுரர் வண்டியை நிறுத்திப் பாதுகாப்பாக நின்றுகொண்டிருந்தார். வண்டியின் படுதாவை அகற்றிப் பாட்டனாரின் முகத்தையே பார்த்தவண்ணம் இருந்தாள் குமுதசுந்தரி. அவரது முகத்தில் தோன்றி மறையும் உணர்ச்சிக் குறிப்புகளின்மூலம் என்ன நடக்கிறது என்று கற்பனை செய்துகொண்டாள். எல்லோரது மனத்திலும் கொள் ளைக்காரர்களைப்பற்றிய பயம். அவளுடைய துர்ப்பாக்கியத்தை என்னவென்று சொல்வது? கொள்ளைக்காரர்களின் நிரந்தர பயத்தில் பிறந்தகம் செல்லும் அவள் துயரத்தைத்தான் என்ன வென்பது? கட்டிய கணவனும் அவள்மீது நம்பிக்கை இழந்து விட்டான். அந்த அபலைக்கு வேறு யார் புகலிடம்? அவளுக்கு இருப்புக்கொள்ளவில்லை. விநாடிக்கு விநாடி படுதாவை அகற்றி வெளியே பார்ப்பதும், வனலீலாவின் கடிதத்தை எடுத்துப்

படித்துத் துக்கமடைவதும், தூரத்தில் நதியின் பிரவாகத்தைக் கூர்ந்து கேட்பதுமாக நேரத்தைப் போக்கினான்.

சரஸ்வதிசந்திரனைப்பற்றிய எண்ணம் எழுந்தது.

"இப்போது எங்கே இருக்கிறீர்கள்? துருவகுமாரனைப் போன்று உலக வாழ்வைத் துறந்துவிட்டீர்கள். இதெல்லாம் யாருக்காக? அலைந்து திரியும் காற்றாடிகூடப் பூமியில் பந்தத்துடன்தான் பறக்கிறது. உலக வாழ்வின் பந்தம் ஒருபோதும் அறுபடுவதில்லை. குறுகிய கால வாழ்வின் சுகத்தை எவ்வளவு விரைவில் தியாகம் செய்துவிட்டீர்கள்?"

கணவனைப்பற்றிய சிந்தனை எழுந்தது.

"அவரைப் பற்றி நான் என்ன சொல்வது? அவர் எப்போது திருந்துவார்? ஆனால் நான்..? என்மீது ஏறியிருக்கும் களங்கம் கருமேகம் போலல்லவா சூழ்ந்திருக்கிறது! அது எப்போது நீங்கும்?"

வெளியே ஸூரசிங்கை முறியடித்த வீரர்களின் வெற்றி ஒலி கேட்டது. குமுதசுந்தரிக்கு விவரம் தெரியாததால் திடுக்கிட்டு வெளியே பாட்டனாரிடம், "என்ன நடந்துவிட்டது?" என்று விசாரித்தாள். அவர் உற்சாகம் மேலிட, "அம்மா, இனி மேல் பயம் போய்விட்டது. கொள்ளைக்காரர்கள் கதறிக்கொண்டு ஓடுகிறார்கள். நாம் வெற்றியடைந்துவிட்டோம்" என்றார்.

தம்முடைய ஆளை அழைத்து, "இதோ, உடனே மனோஹர் புரிக்கு விரைந்துசெல். அங்கே கவலைப்பட்டுக்கொண் டிருக்கும் குணசுந்தரியிடமும் மற்றவர்களிடமும் விஷயத்தைச் சொல். இனிப் பயமேதுமில்லை; நான்கு மணிநேரத்தில் நாங்கள் மனோஹர்புரி வந்தடைவோம் என்று செய்தி சொல்" என்று அவனை மனோஹர்புரிக்கு அனுப்புவித்தார்.

மற்ற எல்லோரிடமும், "இதோ குதிரைகளிலிருந்து இறங்குங்கள். அந்த வாயில்லாப் பிராணிகளுக்குச் சிறிது ஓய்வு கொடுங்கள். நதிக்கரையில் சிறிது உட்கார்ந்து களைப்பாறுவோம். நதிக்கரையில் விரிப்பு ஒன்றை விரியுங்கள்" என்று சொல்லிக் குமுதசுந்தரியின் பக்கம் திரும்பினார்.

"அம்மா, நீ வேண்டுமானால் சற்று ஓய்வெடுத்துக்கொள். கை கால் முகம் கழுவிக்கொள்" என்று சொல்லிப் படுதாவை விலக்கி அவள் கீழே இறங்க உதவி செய்தார்.

குதிரை வீரர்கள் கீழே இறங்கிக் கடிவாளம் அகற்றிக் குதிரைகளைப் புல்வெளியில் மேய அழைத்துச் சென்றார்கள். ஆனால் சங்கர் மட்டும் குதிரையினின்று கீழே இறங்காமல் பாரா கொடுத்துக்கொண் டிருந்தான். ஸூரசிங் சிறைப்பட்டானென்றாலும், அவனுடைய இரண்டு பிள்ளைகளும் தப்பித்துவிட்டார்

கள். அவர்கள் புதிதாகத் தொல்லை ஏதாவது தந்தாலும் தருவார்கள் என்ற பயத்தில் பாதுகாப்பாகச் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டிருந்தான் சங்கர்.

குமுதசுந்தரியை மானசதுரர் நதிக்கரைக்கு அழைத்துச் சென்றார். சலசலக்கும் நீரோட்டத்திற்கு முன்னால் விரித்த விரிப்பின்மேல் அவள் அமர்ந்தாள். கரைகள் இரண்டும் சற்றே உயர்ந்திருந்தன.

காலை மணி ஏழே இருக்கும்; ஆனாலும் வனாந்தரமானதால் எட்டு ஒன்பதுமணிபோல் காட்சியளித்தது. வெயில் சற்றே கடுமையாக இருந்தது. வெள்ளை வெளேரென்ற ஆற்று மணலின் மீது கதிரவனின் சுடுகிரணங்கள் பட்டு வெப்பத்தை அதிக மாக்கின. சற்றுத் தூரத்தில் நதியின்மேல் பாலம் ஒன்றிருந்தது. பாலத்தின் வழியே ஓடிய நீர்வெள்ளம் சுழித்தோடிச் சலசல வென்ற ஒலி எழுப்பியது.

''தாத்தா, இங்கே நதி மிகவும் ஆழமாக இருக்குமா?'' என்று வினவியவண்ணம் நீரினுள்ளே நோக்கினாள். நதியின் ஆழம் அவ்வளவு எளிதில் புலப்படவில்லை.

மீண்டும் சரஸ்வதிசந்திரனைப்பற்றி எண்ணங்கள் ஓடின.

'நீங்கள் ஒன்றும் இக்கட்டாக ஏதும் செய்துவிடவில்லை. இந்தமாதிரி நதி ஒன்றில் குதித்து உயிர் மாய்த்துக்கொள்ள வில்லை. சுபத்ரா நதியே, அவர் அதுபோல் ஏதாவது செய்யத் துணிந்தால் அவரை மூழ்கடிக்காதேயம்மா! அவரைக் காத்து விடு, அம்மா. அவர் என் கணவரல்லர் என்றாலும் என் கணவர் என்மீது அன்பு ஏன் கொள்ளவில்லை? அன்பிருந்தும் சரஸ்வதிசந்திரன் ஏன் என் கணவராகவில்லை? என்னை மனைவி யாகவும் தோழியாகவும் ஏன் ஒருவரும் கருத மறுக்கிறார்கள்?'

குமுதசுந்தரியின் இதயம் கசிந்தது. உள்ளக் குமுறல் பொறுக்காமல் எழுந்து நதிக்கரைமீது நடந்தாள். எவ்வளவு நேரம் அப்படி நடந்தாள் என்று சொல்ல முடியாது. மெல்ல எழுந்து உயர்ந்துகொண்டிருந்த கதிரவன் நீரின் அடித் தளத்திலே பிரதிபலித்துக் குளிர் நிலவுபோலக் காட்சியளித் தான்.

அந்த அமைதியைக் கிழித்ததுபோல் சங்கரின் குரல் வீரிட்டெழுந்தது. ''ஐயோ, என்ன நடந்துவிட்டது!'' என்று கத்தியவண்ணம் குதிரையினின்று கீழே இறங்கி நதிக்கரையில் ஓடினான். அங்கே வெள்ளத்தில் அடிக்கப்பட்டுப் போய்க் கொண்டிருந்தாள் குமுதசுந்தரி. அதோ அவளைத் தொடர்ந்து நீந்திக்கொண்டிருந்தான் கொள்ளைக்காரன் பிரதாபன். சங்கர் நீரில் குதித்தான்.

அதோ, பாலம் வருவதற்குமுன் குமுதசுந்தரியைக் காத்துவிட வேண்டும்; அங்கே நீரின் ஆழம் மிகுதி; அங்கே சுழிப்பு வேறு. சங்கர் வெகு வேகமாக நீந்தினான். ஆனால் அவனுக்கும் பிரதாபனுக்குமிடையே நல்ல தூரம். அவனுக்கும் குமுதசுந்தரிக்கும் எவ்வளவு தூரம்? எங்கே, பிடித்துவிட முடியுமா? மானசதுரர் பதறிப்போய்க் கரையின்மேல் ஓடினார். "குமுதா! குமுதா" என்று கூவினார். ஆட்கள் நாற்புறமும் ஓடினர்; பாலத்தின்மேல் நின்று கீழே குதித்துக் குமுதசுந்தரியைப் பிடித்துவிட வேண்டுமென்று திட்டமிட்டு அவ்வாறே செய்தார்கள்.

ஆனால் குமுதசுந்தரி மீளவில்லை.

குதிரை வண்டி அப்படியே நின்றது. வண்டிக்காரன் வியந்து நின்றான். அவனுக்குச் சந்தேகந்தான்—மணல் சரிந்து கால் தட்டி நதியில் அவள் விழுந்திருக்கலாமா? இல்லை; கொள்ளைக்காரன் அவளைப் பிடிக்கவந்து நதியில் அவளைத் தள்ளிவிட்டிருக்கலாமா? இல்லை, அது தற்கொலையாக ஒருவேளை இருக்கலாமா? - அவனுக்கு வீட்டு வம்பு சிறிது தெரியும்.

விரிப்பை மடித்து வண்டியை வைத்தார்கள்; குமுதசுந்தரி வைத்திருந்த கடிதத்தையும் துணிமணிகளையும் வண்டியில் வைத்து மனோஹர்புரிக்கு வண்டி ஓட்டுமாறு கூறினார்கள்.

"குணசுந்தரி தேவியிடம் சொல்: நதியின் வேகத்துக்கு முன்னால் நம்பிக்கை ஏதும் இல்லை. இருந்தாலும் அவள் உடலாவது நிச்சயமாக அகப்படும். நல்ல சமாசாரம் கிடைத்தால் மனோஹர்புரி வருகிறோம்; இல்லாவிட்டால் ஸ்வர்ணபுரி செல்வோம்" என்று அவனிடம் செய்தி சொன்னார்கள்.

வண்டிக்காரன் கண்களில் நீர்முட்டப் பிரமை பிடித்தவன் போல வண்டியைச் செலுத்தினான். என்ன பரிதாபகரமான முடிவு! கொள்ளைக்காரர்கள் பயம் போய்விட்டது என்று குதூகலித்தோமே, எப்படி விபரீதமாய்ப் போயிற்று!

* * * *

சுந்தரகிரியில் யதுச்ருங்கம் என்ற பெயருடைய உச்சியொன்றின்மீது சாதுக்களின் மடம் ஒன்று இருந்தது. அதன்மேல் ஏற இரண்டு மணி நேரம் பிடிக்கும்; சாதாரண மனிதர்களுக்கு மூச்சுத் திணறிவிடும். பழக்கமானவர்களுக்குச் சிரமம் தெரியாது; விரைவில் ஏறி அடைந்துவிடுவார்கள். குருஜியுடன் மற்றச் சாதுக்களும் ஒரு மணி நேரத்தில் உச்சிமீது வந்தடைந்தார்கள். சித்திரை மாதமானாலும் மலையுச்சியில் குளிர் தெரிந்தது. சரஸ்வதிசந்திரனின் உடல் குளிரால் வெடவெடத்தது. புதிய காற்றும் சூழ்நிலையும் அவனுக்குப்

புத்துயிர் அளித்தன: அவனது களைப்பெல்லாம் மறைந்து போயிற்று.

சரஸ்வதிசந்திரன் கண்விழித்தது கண்டு சாதுக்கள் மகிழ்ச்சி யடைந்தார்கள். நான்கு புறமும் கண்களை ஓட்டிப் பார்த்தான் சரஸ்வதிசந்திரன். மோஹன்புரி முன் வந்து பேசினர்.

''ஐயா, இப்போது உடம்பு எப்படியிருக்கிறது? சொல்லுங்கள்.''

எப்படி இங்கே வந்தோம், இது புதியதோர் இடமாகக் காணப்படுகிறதே என்று வியந்துபோன சரஸ்வதிசந்திரனுக்கு மோஹன்புரி விவரம் சொன்னர்: சுந்தரகிரியின் மடத்துக்குத் தலைவர் விஷ்ணுதாஸர் என்றும் அவருடைய அதிதியாக வந்திருக்கிறன் என்றும் விஷயம் கூறினர். சரஸ்வதிசந்திரன் உண்பதற்காக லேசான உணவு தயார் செய்து தந்தார் மோஹன்புரி. உணவு உண்டபிறகு மீண்டும் உறங்கிப் போனன் அவன்.

கண் விழித்தபோது விடியற்காலை, மணி ஐந்துதான் இருக்கும். சித்திரை மாதமாகையால் சீக்கிரமே விடிந்து விட்டது. சூரியனின் செங்கதிர்கள் எழுப்பிய பொன் வண்ணத்தில் சிகரங்கள் மின்னின. கதிரவன் தொடுவானத்தில் மெல்ல எழுந்தான்.

எத்தகைய மாற்றம்! நேற்றுத் தன்னந்தனியே காட்டு வெளியிலே பசியாலும் பிணியாலும் கட்டுண்டு கிடந்தான். முந்திய நாள் ஸ்வர்ணபுரியின் ராஜ தர்பாரிலே சதிச்செயல்களின் நடுவே....! இன்ரே புத்தம் புதியதோர் இடத்திலே, அமைதி சூழ்ந்ததோர் பிரதேசத்திலே! சுற்றுமுற்றும் பார்த்தான். சாதுக்கள் காலைக் கடன்கள் கழித்துத் தத்தம் கிரியைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். அருகிலே மடம்; அங்கிருந்து துதிப்பாடல் மெல்ல எழுந்து இனிமை பொழிந்துகொண்டிருந்தது.

விஹாரபுரி என்ற சாது சரஸ்வதிசந்திரனின் முன்னல் வந்து பேசலுற்ரர்.

''நீ ஒரு பாக்கியசாலியாகத்தான் இருக்க வேண்டும். விஷ்ணுதாஸரின் மடத்துக்கு அதிதியாக வரும் பாக்கியம் எளிதில் கிடைப்பதில்லை. நீ ஒன்றும் சந்தேகப்படாதே! பெரும் பவித்திரமான இடத்தில் வந்திருக்கிருய். உன் கவலைகள் யாவும் கதிரவன் ஒளிபட்ட பனிபோலக் கரைந்துவிடும்'' என்று ஆறுதல் சொன்னன்.

சரஸ்வதிசந்திரன் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டான். சாதுக்கள் அவனை அன்புடன் கவனித்துக் கொண்

டார்கள். தன் பெயர் நவீனசந்திரன் என்றும், தான் ஒரு யாத்திரிகன் என்றும் தன்னை அறிமுகம் செய்துகொண்டான். மலையுச்சிமீது உலாவ நிச்சயித்தபோது கூடவே ராதேதாஸர் என்ற சாதுவும் வந்தார். பல்விதமான காட்சிகளைச் சுட்டிக் காட்டி, ''இந்த மடத்தின்மீது மஹாராஜா மணிராஜாவுக்கு பெரிய மதிப்பு இருக்கிறது. அவர் எவ்வளவோ சௌகரியங்கள் செய்து தந்திருக்கிறார். சைத்ர வைசாகத்தில் அவர் அவசியம் வந்து தங்கிவிட்டுப் போவார்'' என்றார்.

தூரத்தில் மேற்குத் திசையில் தெரியும் சமுத்திரத்தையும் கீழே சமவெளியில் ஓடும் சுபத்ரா நதியையும் காட்டி, ''கடலும் நதியும் இந்த மலைக்கு அருகில்தான்'' என்றார். மலைப் பிரதேசத்தில் சின்னஞ்சிறிய ஸுரகிராமத்தைக் காண்பித்தார். ''அற்புதமான ஸ்தலம்; ஜனங்கள் தரிசிக்க வருகிறார்கள். நீயும் இங்கே சுந்தரகிரிவாசி ஆகிவிடு; நீ பேரானந்தம் பெறுவாய்'' என்றார்.

சரஸ்வதிசந்திரன் இயற்கைக் காட்சிகளில் மனத்தைப் பறி கொடுத்தான்; உடன் வந்திருந்த சாது என்ன சொல்கிறார் என்பதை அவன் காதில் போட்டுக்கொள்ளவில்லை. 'இதோ நீல ஆகாயம்; பஞ்சு மேகங்கள், பச்சைப் புல் கம்பளங்கள்; சமவெளியிலே வெள்ளியை உருக்கிவிட்டாற்போன்று ஓடும் நதிக்கோடுகள். அதோ சுபத்ரா நதியின் சலசலக்கும் ஓசை. ஸ்வர்ணபுரியிலிருந்து இப்போது கிளம்பியிருப்பாள்; என்னை அடித்துப்போட்ட கொள்ளைக்காரர்கள் அவளையும் தொல்லை செய்வார்களா? அவள் தகுந்த பாதுகாப்புடன் போகவேண்டும். இதோ சுபத்ரா நதி குறுக்கிடுகிறது. அவளது வாழ்வில் எத்தகைய ஏமாற்றத்தை உண்டுபண்ணிவிட்டேன்! அதைத் தாங்காமல் இதோ இந்த நதியில் அவள் குதித்துத் தன்னை மாய்த்துக்கொண்டால்..?'

என்ன அசம்பாவிதமான எண்ணங்கள்! சரஸ்வதி சந்திரனைத் தட்டியெழுப்பினார் ராதேதாசர். எண்ண விசாரத்தில் மூழ்கியிருந்த சரஸ்வதிசந்திரன் உணர்வு வந்தவனாகத் திரும்பினான்.

''இதோ குருஜி உன்னைச் சந்திக்க வேண்டும் என்று செய்தி அனுப்பியிருக்கிறார்....வா, போகலாம்.''

பாகம் மூன்று

1. மனோஹர்புரியில் மணிராஜ்

மனோஹர்புரியிலிருந்த மானசதுரர் குதிரை வீரர்களுடன் கிளம்பிய பிறகு எவரும் உறங்கவில்லை. கண்களை மூடிக் கொண்டு, வராத உறக்கத்துடன் போராடினார்களே தவிரத் தூக்கம் வரவில்லை. எப்போது பொழுது விடியும் என்றே எதிர் நோக்கியிருந்தார்கள். பொழுது புலர்ந்தது. இன்று என்ன செய்தி வரப் போகிறதோ என்ற தயக்கந்தான் எல்லோரிடமும்.

மித்ர சோகத்தால் வருந்தி நின்ற சந்திரகாந்தனை உபசரிக்கும் பொறுப்பைக் குஸுமசுந்தரி ஏற்றுக்கொண்டாள். அதிதியுடன் அவள் பேச்சுக் கொடுத்தாள்.

''எனக்கென்னவோ அப்படிச் சரஸ்வதிசந்திரர் வாழ்வைத் துறந்துவிட்டுப் போனதில் தவறு ஏதுமில்லை என்றே படுகிறது. அவருக்கு ராபின்ஸன் குருஸோ போல உலகம் சுற்ற வேண்டும் என்ற ஆசை இருந்திருக்கும் என்று தோன்றுகிறது.''

''அந்த ஆசை நல்லதென்று சொல்லலாமா?''

''எனக்கும் அப்படிச் சுற்றுவதென்றால் ஆசைதான். அவருக்கும் அப்படி ஓர் விருப்பம் இருந்திருக்க வேண்டும். வீட்டில் சற்று மனத்தாங்கல் ஏற்பட்டதும், அதைச் சாக்காக எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டார்.''

''கல்யாணம் பண்ணிக்கொண்டிருந்தால்.....''

''கல்யாணம் பண்ணிக்கொண்டிருந்தால் என்ன புண்ணியம்? இதோ குமுதசுந்தரியை எடுத்துக்கொள்ளுங்கள்: என்ன பலன்? கல்யாணம் செய்துகொண்டாள்; என்ன விளைவு?''

''அப்படியெல்லாம் பேசக்கூடாது.''....குஸுமா வெட்கமுற்றாள். ஆகவே, பேச்சை மாற்றிக்கொண்டாள்; ''நான் என்ன சொல்ல வந்தேனென்றால் சரஸ்வதிசந்திரரின்மேல் தவறு ஏதும் இல்லை; அவர் என்ன செய்திருந்தாலும் நன்றாகப் பூரணமான முடிவுக்கு வந்திருப்பார் என்றே தோன்றுகிறது.''

அதற்குள் வெளியே இரைச்சல் கேட்டது.

பலகணியைத் திறந்து வெளியே நோக்கினாள் குஸுமா. குதிரைவீரன் ஒருவன் செய்தி கொண்டுவந்திருந்தான். கொள்ளைக்காரர் பயம் போய்விட்டதாகவும், இன்னும் சில மணி

நேரத்தில் குமுதசுந்தரி வந்துவிடுவாள் என்றும் அவன் சொன்ன செய்தி மகிழ்ச்சியை வாரியிறைத்தது. குணசுந்தரியும் சுந்தர கௌரியும் குஸுமசுந்தரியும் அவனை வரவேற்க ஏற்பாடு செய்தார்கள். ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது.

தாய் சொன்னதற்கேற்பக் குஸுமசுந்தரி ஸாரங்கி வாத்தியம் எடுத்து வாசிக்க ஆரம்பித்தாள். ஸாரங்கி இசை சந்திர காந்தனை வசப்படுத்தியது. அந்த இசையுடன் குஸுமா பாடத் தொடங்கினாள். பாட்டு முடிந்ததும் ஸாரங்கியை வைத்து அவள் ஓடோடிப் போனாள்.

''இந்தக் குஸுமாவைப்பற்றி எவ்வளவு கவலை! எல்லாம் சீக்கிரம் கற்றுக்கொண்டு விடுகிறாள்; ஆனால் பேச்சுமட்டும் குறைவாகப் பேசினால் எவ்வளவு நன்றாயிருக்கும்! நமது வீட்டில் என்றால் பரவாயில்லை. இப்படி மாமியார் வீட்டிலே பேசினால் நன்றாக இருக்குமா? இவளுக்கு மீராபாயைப்போல் ஆகவேண்டுமாம்! என்ன விசித்திரமான எண்ணம்!'' என்றாள் பெருமூச்சுடன் குணசுந்தரி, சுந்தரகௌரியிடம்.

''இப்போது சின்னப் பெண்தானே! வயது வந்தால் எல்லாம் சரியாகிப் போய்விடுவாள்'' என்றாள் சுந்தரகௌரி, ஆறுதலாக.

''அது உண்மைதான்; ஆனால் குமுதசுந்தரியைப் போலில்லை இவள். மிகவும் பணிவான சுபாவம் அவளுக்கு. இவளோ சிங்கத்தைப் போன்றிருக்கிறாள். இவளுக்கு எப்படிப் பட்ட புருஷன் கிடைக்கப் போகிறானோ?''

சந்திரகாந்தனின் காதில் இந்தச் சொற்கள் படாமலில்லை.

அதற்குள் குஸுமா ஓடோடி வந்தாள். மணிராஜா அன்று வருகிறார் என்ற செய்தியைக் கூறி வாயிற்கதவைத் திறந்து வைத்தாள்.

ரத்னநகரியின் இளம் மன்னர் மணிராஜாவுக்கு வயது இருபது. இருபத்துமூன்றுக்குமேல் இராது. அவருடைய தந்தை மல்லராஜா மூன்று வருஷங்களுக்கு முன்புதான் காலமானார். மணிராஜாவுக்கு வேட்டையாடுவது என்றால் மிகவும் பிரியம். சுந்தரகிரி மனோஹர்புரி வனங்களில் அவர் அப்படி வேட்டையாடுவது வழக்கம்.

அன்றும் அவ்வாறே கிளம்பின அவர், கொள்ளைக்காரர் தொல்லைபற்றிக் கேள்விப்பட்டு மனோஹர்புரி வந்தடைந்தார். சற்றும் முன்னேற்பாடு செய்யாத விஜயம் என்பதால் கிராமத்தார் அவசர அவசரமாக வரவேற்புக்கான ஏற்பாடுகள் செய்தார்கள்.

குஸுமா அழகான உடை அணிந்துகொண்டு மலர் சூடி, நகையணிந்து கையில் தட்டுநிறைய மலர் மாலைகளை எடுத்துக்

கொண்டு வந்தாள். சந்திரகாந்தனுக்கு எல்லாம் புதிதாக இருந்ததால் தனியாக நின்ருன். குணசுந்தரி, ''மஹாராஜா ஊர்வலம் வருகிருர். அவரை வழியில் உள்ளவர் அனைவரும் வரவேற்பார்கள். நீயும் வாசலில் நின்று எங்கள் எல்லோருடனும் சேர்ந்து வரவேற்கலாம்'' என்ருள்.

தெரு முழுதும் மனிதர் கூட்டம் நிரம்பி வழிந்தது. ராஜ பக்தியில் திளைக்கும் மக்கள் மலர்மாலை பன்னீர் வகைகளுடன் நின்றுகொண்டிருந்தார்கள். குணசுந்தரியும் சுந்தரகெளரியும் வாயிற்படியில் மஹாராஜாவின் வரவை எதிர்நோக்கி நின்ருர்கள்.

வாழ்த்தொலிகளுடன் மஹாராஜாவின் ஊர்வலம் நெருங்கியது. குஸுமா மலர்த்தட்டுடன் முன் நடந்தாள். மஹாராஜா கம்பீரமாக நின்ருர். ராஜபுத்திரக்களை நன்ருக வீசியது; நல்ல சிவந்த உடல்; நல்ல உயரம். இளமைப் பருவம்.

நெடிதுயர்ந்த மலைக்கருகில் அழகும் புன்னகையும் தவழும் உஷை வருவதுபோல மஹாராஜா மணிராஜா முன் குஸுமா வந்துநின்று மலர் மாலைகளை வழங்கினுள். அரசர் தலை குனிந்து பெற்றுக்கொண்டார்.

ஸம்ஸ்கிருத சுலோகம் ஒன்றை இசைத்துக் குஸுமா மஹாராஜாவை வரவேற்ருள். மஹாராஜா மகிழ்ந்து அவளிடம் இரண்டொரு வார்த்தைகள் பேசினுர். தூரத்திலிருந்து அந்தக் காட்சியைக் கண்டுகொண்டிருந்த தாயின் உள்ளத்தில் பெருமை பொங்கியது.

சந்திரகாந்தன் ஆச்சரியப்பட்டான். ''ஆகா! என்ன அழகான குடும்பம்! இதில் சம்பந்தம் கொள்வதற்குச் சரஸ்வதி சந்திரனுக்குச் கொடுத்துவைக்கவில்லையே!

மஹாராஜாவிடம் சற்றுநேரம் அதிகமாகப் பேசக் குஸுமா பிரயத்தனம் செய்தாள்; கன்னங்கள் எல்லாம் சிவப்பு ஏறியது. 'தந்தையின் வீட்டில் புத்திரர்கள் சுகமடைவதுபோல உன் ராஜ்யத்தில் மக்கள் சுகம் பெறுகிருர்கள்' என்ற அர்த்தத்தில் இன்னொரு சுலோகத்தைக் கூறி மஹாராஜாவை மகிழ்வித்தாள். அரசர் மனம் மகிழ்ந்து மலர் மாலையொன்றை இவளுக்கு வழங்கினுர்.

ஊர்வலம் நகர்ந்தது.

சுந்தரகெளரி குஸுமசுந்தரியை வாரி அணைத்துக்கொண்டாள். குணசுந்தரியின் முகம் ஒளி வீசியது.

''ஆஹா, இறைவனின் இஷ்டமே இஷ்டம்! கணநேரத்துக்குமுன் மன அமைதியில்லாதிருந்தோம். இப்போது எத்தகைய ஆனந்தம்!''

இறைவனின் செயலை யாரறிவார்? சற்று நேரத்திற்கெல்லாம் குமுதசுந்தரி நதியில் மூழ்கிய செய்தியைக் குதிரை வீரர்கள் கொண்டுவந்து தெரிவித்தவுடன் குணசுந்தரியின் துயரத்தை என்னவென்பது? அவள் கதறினுள்; குமுறினுள். மகளை இழந்த சோகம் என்பது கொடிது. அவளது துயரத்தை யார்தாம் ஆறுதல் கூறிப் போக்க முடியும்?

''என்ன நடந்தது, சொல்லுங்களேன்'' என்று அரற்றினுள்.

''கொள்ளைக்காரன் அவளைப் பிடிக்க வந்தவுடன் அவனிடமிருந்து தப்பவே அவள் குதித்திருக்க வேண்டும். நீரின் ஆழத்தாலும் சுழற்சியாலும் அவள் மூழ்கியிருக்க வேண்டும்'' என்ருர்கள். அவளுக்கு அந்தச் சமாதானம் என்ன ஆறுதல் தரப்போகிறது?

''குமுதசுந்தரியிடம் இந்தப் பொட்டலம் ஒன்றிருந்தது'' என்று கூறி அதைக் கொடுத்தான் வண்டிக்காரன். அதைப் பிரித்துப் பார்த்தாள். அதில் குமுதசுந்தரிக்கு வனலீலா எழுதியிருந்த கடிதம் இருந்தது. அதைப் பார்த்ததும் குணசுந்தரியின் துக்கம் பெருகியது. பிரமாததனன், கிருஷ்ணகலிகா ஆகியோர்பற்றிய செய்தியால் அவள் துயரம் பன்மடங்கு மிகுந்தது.

''குமுதா! நீ இந்தத் துக்கத்தை எப்படித்தான் சகித்துக் கொண்டிருந்தாயோ? நீ அழுது நான் ஒருநாளும் சகித்ததில்லையே? இந்தத் துக்கத்திலேயே நீ மூழ்கிப்போனுயோ?''

கடிதத்தில் பிரமாததனன் குமுதசுந்தரிமீது பழி சுமத்த முயன்றதும், அவ்வாறே நவீனசந்திரன் அவளுக்கு எழுதிய கடிதங்களின்மூலம் பிரமாததனன் அந்தப் பழியை நிலைநிறுத்தப் போவதும் கூறப்பட்டிருந்தன. ஆகவே, யார் இந்த நவீனசந்திரன் என்ற கேள்வி எழுந்தது. வனலீலாவை ரத்னநகரிக்கு அழைத்து விஷயம் முழுவதையும் அறிந்துவிட வேண்டுமென்றும் மகளின்மேல் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டை நீக்க முயல வேண்டும் என்றும் நிச்சயம் செய்துகொண்டாள் குணசுந்தரி.

வீடு முழுவதும் துக்கம். குஸுமசுந்தரி விம்மி விம்மி அழுதாள். சுந்தரகௌரி தன் துக்கத்தைக் குறைக்க முடியாமல் குணசுந்தரியைத் தேற்றினுள். சந்திரகாந்தன் பேச்சும் மூச்சுமற்றுச் சிலையாகி நின்ருன்.

2. தூர்த்தலாலின் தீய எண்ணம்

ஆசை மகனின் பிரிவுக்குத் தாமே காரணம் என்பதை அறிந்துகொண்ட லக்ஷ்நமீந்தனர் சோகமே உருவானுர். அவரது

இதயத்தில் பட்ட அந்தக் காயம் நிரந்தரமாக நின்றது; ஆறுத அந்தக் காயத்தினின்று துக்கமெனும் ரத்த வெள்ளம் பாய்ந்த வண்ணம் இருந்தது. வயது செல்லச் செல்ல மனிதன் தன் பிள்ளைகளின் உதவியை நாடுகிறுன்; முதுமையில்தான் மகனின் பெருமையும் தேவையும் புலப்படுகின்றன. சரஸ்வதிசந்திரனை இழந்து அவர் தவியாய்த் தவித்தார். அவனையே நினைவிலும் கனவிலும் நினைந்துருகிறுர். அவனைத் தேடுவதற்குப் பலவாறு முயன்றுர். நண்பர்கள், தமக்குத் தெரிந்த அதிகாரிகள், வெளியூர்ச் சிநேகிதர்கள், போலீஸ் எல்லோரது உதவியையும் நாடினுர்; ஆனுல் பலன்தான் ஏதுமில்லை. மகனைத் தேடுவதில் முழு நேரத்தையும் அவர் செலவழிக்க முற்பட்டதால் வியாபாரத்தைத் தம் மனைவியின் சகோதரன் தூர்த்தலாவிடம் ஒப்படைத்தார். மகனைத் தேடுவதற்கான பணச் செலவுக்காக மட்டும் தூர்த்தலாலை அழைப்பார்; அவனிடம் கணக்கு வழக்கு ஏதும் கேட்கமாட்டார். இரவு-பகல் மகனின் நினைவாக இருந்தார். திடீர் திடீரென்று சித்தப் பிரமை பிடித்தவர்போல், "இதோ என் சரஸ்வதிசந்திரன்" என்பார்; அவனை நேரே பார்ப்பதுபோலத் தமக்குள் பேசிக்கொள்வார். அவன் பதில் சொல்வதுபோல் கற்பித்துக்கொண்டு கூர்ந்து மௌனமாக நிற்பார். அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று நிச்சயம் செய்தார்கள் நண்பர்கள். இனி எவ்வளவு காலம் உயிருடன் இருப்பாரோ என்று கவலைப்படத் தொடங்கினுர்கள்.

ஆனுல் தூர்த்தலாவின் உள்ளத்தில் புதிய புதிய எண்ணங்கள் உதயமாயின. லக்ஷ்மீநந்தனர் குமானைச் சந்திப்பதை நிறுத்திக்கொண்டார். தூர்த்தலாவிடம் வியாபாரப் பொறுப்பு வந்துவிட்டது. கடையில் தானே ராஜாவானுன். மனம் போன போக்குப்படி வியாபாரம் செய்தான். தஸ்தாவேஜி, பணப்பெட்டி எல்லாம் அவனது உரிமையாயின. சரஸ்வதிசந்திரன் வீட்டைவிட்டுச் சென்றுல் தன் மகன் தனநந்தனுக்குத்தான் வியாபாரம் வரும் எண்றெண்ணிய குமான் ஏமாற்றம் அடைந்தாள். முன்னெல்லாம் குமானின் பேச்சைக் கேட்டு அடங்கிப்போகும் தூர்த்தலால் தன்னிடம் சக்தி வந்துவிட்டதென்று அலட்சியமாக இருந்தான். குமான் இதை எதிர்பார்க்கவில்லை. சகோதரனின்மீது மிகுந்த கோபம் கொண்டாள். தன் சத்துருவாக அவனைக் கருதத் தொடங்கினுள்.

கணவரது வியாபாரத்தில் குமாஸ்தாவாக இருந்த ஹரிதாஸர் பல வருஷகாலம் கடையில் வேலையில் இருந்தார்; நம்பிக்கையானவர். சரஸ்வதி சந்திரனின்மீது பிரியம் உள்ளவர். தூர்த்தலாவிடம் வியாபாரப் பொறுப்பு வந்தவுடன் சற்றே

ஒதுங்கியிருந்தார். அவனுடைய எண்ணத்துக்கு அவர் பணியாமல் இயங்கிவந்தார்.

தூர்த்தலால் வியாபாரத்தில் தனக்காகப் பொருள் சேகரித்துக்கொண்டான். லக்ஷ்மீநந்தனரின் பொருளைச் செலவழித்தான். சரஸ்வதிசந்திரனைத் தேடுவதற்காக வெளிப்படையாக அவன் லக்ஷ்மீநந்தனருக்கு உதவினாலும் அவருடைய முயற்சிகள் ஏதும் வெற்றி பெறுதபடி பார்த்துக்கொண்டான்.

ஒரு நாள் மகனை நினைத்துக்கொண்டே லக்ஷ்மீநந்தனர் சரஸ்வதிசந்திரனின் வால்கேசுவரம் பங்களாவுக்குச் சென்றார்; உடன் குமாஸ்தா ஹரிதாஸரும் தூர்த்தலாலும் இருந்தார்கள். பங்களாவில் மாட்டியிருந்த குமுதசுந்தரியின் உருவப் படத்தைப் பார்த்ததும் அவர் கண்ணீர் விட்டார்.

''ஹரிதாஸா, இவள் என் மகனின் மனைவியாக இருக்க வேண்டியவள். என் புத்திக் குறைவால் எப்படி இரண்டு ரத்தினங்களை இழந்துவிட்டேன்!''

ஹரிதாஸரின் தோளின்மீது தம் தலையை இட்டுக் கதறினார். இதுதான் சமயம் என்று தூர்த்தலால் தன் கருத்தை வெளியிட்டான்:

''சித்தம் கலங்கிப்போகும் முன் நீங்கள் பத்திரம் எழுதி வைத்துவிடுங்கள். அப்படி எழுதி வைத்தால்தான் செல்வம் தங்களுடைய குமாரர்களிடையே இருக்கும். பத்திரம் ஏதுமில்லை என்ற காரணத்தால் சொத்துச் சிதறிப் போனாலும் போய்விடும். ஆகவே, பத்திரம் எழுதிவிடுங்கள். என் மருமான் சார்பில் நானும் சரஸ்வதிசந்திரனின் சார்பில் ஹரிதாஸரும் சொத்தைப் பாலித்து வருகிறோம். மருமானுக்கு வயது நிறைந்ததும் நேரடியாக உரிமைக்காரனாகிவிடுவான். என்றைக்குச் சரஸ்வதிசந்திரன் திரும்பிவருகிறானோ அன்று ஹரிதாஸருக்குப் பொறுப்புக் குறைந்துவிடும்'' என்றான்.

ஹரிதாஸருக்கு இது ஆச்சரியமாக இருந்தது. இது என்ன புதுமையாக இருக்கிறது என்று வியப்படைந்தார். ஹரிதாஸர் சாதாரண குமாஸ்தா; லக்ஷ்மீநந்தனரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். 'அவர் பெயரைச் சொல்லிக் காரியத்தைச் சாதித்துக்கொள்வோம்; பின்னர் ஹரிதாஸரைச் சமாளித்துக்கொண்டு வியாபாரத்தையும் சொத்தையும் கைப்பற்றுவோம்' எனத் திட்டமிட்டான் தூர்த்தலால். லக்ஷ்மீநந்தனரிடமிருந்து பத்திரத்தில் கையெழுத்துப் பெற்று, பின்னர் அவர் பைத்தியக்காரர் என்று வைத்தியரிடமிருந்து சீட்டு ஒன்று பெற்று, மனநோய் வைத்தியசாலையில் அவரைத் தள்ளிவிடலாம் என்று சதித்திட்டம் போட்டிருந்தான்.

ஹரிதாஸர் இச்சமயம் ஒன்றும் எதிர்த்துப் பேசாமல், ''ஆமாம்; அப்படியே செய்தால் போச்சு'' என்று சொல்லி வைத்தார்; ஆகவே, தூர்த்தலால் ஹரிதாஸர் நம் கையாள் ஆவார் என்றெண்ணம் கொள்ளச் செய்தார்.

ஹரிதாஸர் சும்மா இருக்கவில்லை. தூர்த்தலாவின் முழுத் திட்டத்தையும் அறிந்துகொண்டார். தூர்த்தலாலோ ஹரிதாஸர் நம்பிக்கையான ஆள் என எண்ணி விஷயத்தைச் சொன்னான். மறுநாள் லக்ஷ்மீநந்தனரின் காரியாலயத்தில் கையெழுத்துப் போடச் சென்றபோது தூர்த்தலாலுக்கு வலை விரித்திருந்தார் ஹரிதாஸர். லக்ஷ்மீநந்தனரைப் பத்திரத்தில் கையெழுத்திட வற்புறுத்தியபோது தக்க சமயத்தில் போலீஸ் வந்து அவனைக் கைது செய்தது. ஹரிதாஸர் தக்க நிரூபணத்துடன் தூர்த்தலாலின் சதித்திட்டத்தை விவரித்தார். போலீஸ் வழக்குத் தயாராகியது.

இந்தச் சம்பவம் பத்திரிகைகளில் விவரமாக வெளியாயிற்று. புல்வர்துரை நல்ல விளம்பரம் தந்து தந்தையின் மன நிலையையும் குறிப்பிட்டுப் பிரசுரித்திருந்தார். சரஸ்வதிசந்திரன் இதைப் படித்துவிட்டுப் பம்பாய் திரும்புவான் என்று நம்பினார். ஊஹும், சரஸ்வதிசந்திரன் படித்தானோ இல்லையோ, அவன் வரவில்லை.

''இன்றிலிருந்து ஒருமாத காலம் அவன் வரவை நோக்கியிருப்பேன். அதற்குள் அவன் வராமற்போனால் தசரத ராஜனைப்போல் பிராணனை விடுவேன்'' என்றார் லக்ஷ்மீநந்தனர்.

3. பிரமாததனனுக்குத் தண்டனை

ஆளுவோரிடத்தில் குற்றம் இருந்தால் குடிமக்கள் எவ்வாறு முறையிட வருவார்கள்? அவர்களது புகாரை எப்படிக் கேட்டுக் குறை தீர்க்க இயலும்? ஆகவே, ஆள்பவர் தம்மிடம் உள்ள குறைகளைத் தாமே தீர்க்கவேண்டும்; அவைகளை மறைப்பதால் தீமையே அதிகரிக்கிறது; மக்களின் நம்பிக்கை குறைந்து மதிப்பிழந்து விடுகிறார்கள்.

அப்படித்தான் புத்திதனர் எண்ணினார். பிரமாததனனின் குறைபாடுகளை அறிந்தவுடன், ''அடடா, நமது குடும்பத்திலேயும் இந்தக் களங்கமா? நான் இதைத் தீர்க்காது போனால் சடராயனுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?'' என்று தம்மைத் தாமே கேட்டுக்கொண்டார். மகத்தானதொரு பிரச்னை அவர்முன் நின்றது. நீதிக்குமுன், பிள்ளைக்கும் பாசத்திற்கும் இடம் ஏது?

நவீனசந்திரன் செல்வதற்குமுன் வனலீலா சௌபாக்கிய தேவியிடமும் அலக்கிஷோரியிடமும் பிரமாததனேப்பற்றிச் சொல்லியிருந்தாள். அந்தச் செய்தி புத்திதனரை வந்தடைந்தது. பின்னர்க் குமுதசுந்தரி கிளம்பிய அன்று, பிரமாததனன் - கிருஷ்ணகலிகா இவர்களது உறவுபற்றிய விஷயத்தை வனலீலா சொன்னுள். தாயும் சகோதரியும் பிரமாததனனைக் கடிந்து கொண்டார்கள். கிருஷ்ணகலிகா உபதேசித்தபடி பிரமாததனன் நவீனசந்திரனின் கடிதங்களைக் காண்பித்துக் குமுதசுந்தரிமீது பழி சுமத்தினுன். சௌபாக்கிய தேவியால் இதை நம்ப முடியவில்லை.

''அந்தணர் குலத்தில் வந்து பிறந்தாயே, அசுரனைப் போன்று! சிவ, சிவ, சிவ'' என்று தலையில் அடித்துக்கொண்டாள்.

''சீ, சீ வெட்கம்! இப்படியும் அறிவு கெட்டுப் போகுமா?'' என்று சகோதரனைக் கடிந்துகொண்டாள் அலக்கிஷோரி.

''என்னைத் திட்டுகிருேயே, இதோ குமுதசுந்தரிக்கு நவீன சந்திரனிடமிருந்து வந்த கடிதம். என்ன சொல்கிருய், இதைப் பற்றி?'' என்ருன் பிரமாததனன்.

அலக்கிஷோரி அதை எடுத்துக்கொண்டு தந்தையிடம் சென்ருள். புத்திதனருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. பிரமாததனனின் பதில் நர்பேராம் வழியாக வந்தது. ''என்னைப் பற்றிக் குற்றம் சொல்லவேண்டாம். குமுதசுந்தரியைச் சொல்லுங்கள். தன்னைப்பற்றி விஷயம் தெரியப் போகிறதே என்று தான் கிளம்பிப் போய்விட்டிருக்கிருள் - இதோ இன்னெரு நிரூபணம்.''

எல்லோரையும் ஒருங்கு கூட்டி விசாரித்தால்தான் உண்மை தெரியவரும் என்று புத்திதனர் எண்ணினுர். ஆனுல் எப்படி எல்லோரையும் விசாரணைக்கு அழைப்பது? குடும்பத்தின் மானம் பறி போய்விடுமே! இதே எண்ணத்தில் நாள் முழுவதும் கழிந்தது.

மாலை நேரத்தில் ஸுரசிங்கைச் சிறைபிடித்து வந்தார்கள். இரவு ஒன்பது மணி வாக்கில் குமுதசுந்தரி நீரில் மூழ்கிவிட்டதாகவும், என்ன முயற்சியெடுத்தும் அவள் சடலம் அகப்படவில்லையென்றும் செய்திவந்தது. உடனே சோகம் நிறைந்தது. குமுதசுந்தரியின் மீதிருந்த ஆழ்ந்த பற்றின் காரணமாக அவள் மறைவு பெருத்த துயரத்தை எழுப்பியது. பிரமாததனன் - கிருஷ்ணகலிகா இவர்கள்மீது மற்றவருக்கு வெறுப்பு அதிகமாகியது.

வித்யாசதுரரிடமிருந்து புத்திதனருக்கு வந்த கடிதம் ஒன்றில், பிரமாததனன் ரத்னநகரி அல்லது ஸ்வர்ணபுரியைத்

தவிர வேறு ஓரிடத்தில் வந்திருந்தால் அவன் பெயருக்கு நல்லது என்றும், தற்போதுள்ள நட்பையும் நண்பர்களையும் அவன் கைவிட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். அந்தக் கடிதத்தைப்பற்றி அவர் எண்ணிக்கொண்டிருந்தபோது அலக்கிஷோரி வந்தாள்.

''அப்பா, செய்யாத குற்றத்திற்கு ஜன்மதண்டனை என்பதுபோல் குமுதம் இந்த முடிவை அடைந்துவிட்டாள். அவள் குற்றமறியாதவள் என்றே எண்ணுகிறேன். நீங்கள் தயங்காமல் உண்மைக் குற்றவாளியைத் தண்டிக்கவேண்டும்'' என்றாள்.

தந்தை மகளைச் சாந்தமுறச் செய்து அனுப்பினார். அவள் சென்றதும் புத்திதனர் மீண்டும் சிந்திக்க ஆரம்பித்தார்.

'ஆண்டவனே, நான் என்ன செய்யட்டும்? அண்ணனின் கட்சியைவிட்டு அண்ணியின் பக்கம் பேசுகிறாள். நீதி நிலைத்திருக்கும் என்பதையே இது காட்டுகிறது. குமுதா, நீ எங்கள் வீட்டின் மணிவிளக்கு.'

தீவிரமான சிந்தனைக்குப் பிறகு, நவீனசந்திரனின் கடிதங்களும் கவிதைகளும் குற்றமற்றவை, தான் குற்றத்திலிருந்து தப்ப எண்ணிப் பிரமாததனன் அதைக் குமுதசுந்தரியின்மீது சார்த்தியிருக்கிறான், இவை பொய்யானவை என்ற முடிவுக்கு வந்தார். ''பிரமாததனா, உன்னைத் தண்டிக்கத்தான் வேண்டும். இன்றிலிருந்து தந்தை - மகன் என்ற உறவு இனி மறைந்து விட்டது'' என்று சொல்லிக் கொண்டார்.

ஆனால் மகனை அப்படித் தண்டிப்பதன்மூலம் மருமகளையும் தண்டிப்பதாகுமே, அவள் குற்றமற்றவளாயிற்றே, மகன் என்ற உறவு போனால் மருமகள் உறவு எங்கிருந்து வரும் என்றெல்லாம் எண்ணினார். சித்தம் கலங்கிப் போனவுடன், ''பகவானே, நாளைக் காலை இதுபற்றி முடிவு செய்ய எனக்குச் சக்தி கொடு. நீ என்ன ஆக்ஞை தருகிறாயோ அதை நிறைவேற்றுகிறேன்.''

''பிரபு, என்னுடைய வைராக்கினியால் சடராயன் பஸ்மமானான். அதனால் இறுமாந்து போனேன்; அகம்பாவம் கொண்டேன். இதோ என்னை நானே பரீட்சிக்கும் காலம் வந்துவிட்டது. இந்த அக்கினிப் பரீட்சையிலிருந்து விடுபெறுவேனாக.

''சடராயா, இன்று உன்னைப் போலத்தான் காட்சியளிக்கிறேன். நாளையிலிருந்து நான் பூரணமாவேன். இனி என் ஆட்சியில் ஒரே ஒரு குறிக்கோள்தான் இருக்கும்: ஈசுவரனின் சேவை, மக்களின் சேவை, மஹாராணாவின் துய பெருமை. பாக்கி எதுபற்றியும் இனிக் கவலையில்லை...''

புத்திதனர் நெடுநேரம் சிந்தித்துவிட்டு நடுநிசி வேளையில் உறங்கப் போனார். அப்போதும் பிரமாததனன் வீடு திரும்ப வில்லை; திரும்புபவனாக இல்லை. காலை எல்லோரும் எழுந்து அவனைத் தேடினார்கள். ஆனால் அவனைக் காணவில்லை. ஜனங்கள் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். சமுத்திரத்தின் கரையில் அடித்துத் தள்ளப்பட்ட சடலம் ஒன்று பிரமாததனனுடையதாக இருக்கலாம் என்று சொல்லிக்கொண்டார்கள்; தற்கொலை செய்துகொண்டு விட்டான் என்றார்கள். இல்லை, யாரோ அவனை அடித்துப் போட்டுவிட்டார்கள் என்றார்கள். ஆனால் என்ன நடந்தது என்பதை யாராலும் சொல்ல முடியவில்லை.

''பிள்ளை தேடப்படுவதற்குத் தகுதியற்றவன். ஒழிந்தான் என்றால் நல்லதற்குத்தான். உயிரோடிருந்தாலும், செத்துப் போயிருந்தாலும் எனக்கு ஒன்றுதான். அப்போதே நான் ஸ்நானம் செய்தாகிவிட்டது'' என்றார் தகப்பனார்.

பிறர் வெறுப்புக்காளான மனிதன் ஒவ்வொருவனின் முடிவும் இப்படித்தான் ஆகிறது.

4. விஷ்ணுதாஸ ஸ்வாமிகள்

ஸுந்தரகிரியும் ஸூரகிராமமும் யாத்திரிகர்களுக்குப் பவித்திர ஸ்தலங்களாக இருந்து வந்தன. விஷ்ணுதாஸ ஸ்வாமி பூர்வாசிராமத்தில் அந்தணராக இருந்தார். காசி, வங்காளம் பூராவும் சுற்றி வந்து வியாகரணத்திலும், ஸாஹித்யத்திலும், கணிதம், மீமாம்சை, நியாயம், வேதாந்தம் ஆகியவற்றிலும் புலமை பெற்றார். வைராக்கிய பாவம் எழுந்தவுடன் சம்சாரத்தைத் துறந்து யக்ஞோபவீதத்தையும் விட்டுவிட்டு விபூதியும் ஜடையும் தரித்துக்கொண்டார். தமது ஞானத்தாலும் பாண்டித்தியத்தாலும் விரைவில் மடத்துக்கு அதிபதியானார். ஸ்ரீ யதுநந்தனரின் கோயிலில் மறைந்திருக்கும் பக்தி மார்க்கத்தைப்பற்றிய ரகசிய நூல்களைக் கண்டறிந்தார்.

அந்த நூல்களிலிருந்து விஷ்ணுதாஸர், அக்கோயில் புராதனமானது என்பதை அறிந்துகொண்டார். கோயிலில் கோஸாயிகள் பூஜித்து வந்தார்கள் என்றும், அவர்கள் அலக்வாதிகள் என்றும் அறிந்துகொண்டார். பழைய நூல்களில் அலக் என்றால் அலட்சிய, நிர்க்குண ப்ரம்மம் என்றே பொருள். பின்னால் ஜைனர்களும் சாமான்ய ஜனங்களும் புரிந்துகொள்ள இயலாமற் போகவே அலக் வாதத்தில் லக் வாதத்தையும் சேர்த்துக்கொண்டார்கள். அவசியமான ப்ரம்மம் சர்வவியாபி;

ஆனால் நாமத்துடனும் ரூபத்துடனும் லட்சியமாகத் தோன்றுகிறது. அதை ஈசுவரன் என்று கூறுங்கள், மாயை என்று சொல்லுங்கள், வேறு என்ன பெயர் வேண்டுமானாலும் இட்டு அழையுங்கள். லட்சியம் மனிதனின் சாதனையால்தான் அடையப்படும். இந்தச் சம்பிரதாயத்தில் யதுநந்தனரின் பிரதிமையையும், பிரம்மா, விஷ்ணு, மஹேசர் ஆகியோர் அவதாரங்களையும் வழிபட்டனர். ஆகவே, இந்த மார்க்கம் சைவ, வைஷ்ணவ, சாக்த, ஜைனர்களைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை.

சரஸ்வதிசந்திரன் கோயிலுக்குமுன் வரும்போது சந்நியாசிகள் மேற்கண்டவாறு சம்பிரதாயத்தைப்பற்றி விவரித்தார்கள்.

விஷ்ணுதாஸர் பூஜைக்கு எனக் கோயிலுக்கு வந்தபோது மோஹனபுரியும் விஹாரபுரியும் சரஸ்வதிசந்திரனைப்பற்றிச் சொல்லவே, அவனைப் பார்க்கவேண்டும் என்று தமது விருப்பத்தை அவர் தெரிவித்தார்.

சரஸ்வதிசந்திரனைச் சாதுக்கள் அழைத்து வந்தார்கள். கோயிலினுள் நுழைந்து குருஜியை வணங்கினான். ஆனால் ஸ்ரீ யதுநந்தனரின் பிரதிமைப் பக்கம் திரும்பாமல் கதவு மூலையிலே நின்றான். விஷ்ணுதாஸர் கேட்டார்.

''குழந்தாய், நீ யார்? யாருடைய குழந்தை? எங்கே போகிறாய்? உன்னைப் பார்க்கப் பார்க்க என் அன்பு வளர்கிறது. எனக்குப் பதில் தந்து மகிழ்விப்பாயாக'' என்றார்.

''நான் மனிதனல்லன், தேவனுமல்லன். அந்தணனல்லன்; க்ஷத்திரியனுமல்லன்; வைச்யனல்லன்; சூத்திரனுமல்லன். கிருகஸ்தனல்லன்; சந்நியாசியுமல்லன்; நிஜபோத ரூபன் நான்.''

''அற்புதம், அற்புதம்'' என்று கூறினார் ஸ்வாமிகள். ''நவீன சந்திரா! இந்தக் கோவிலுக்கு வருபவர் யாவரும் எங்கள் தெய்வமான யதுநந்தனனை நமஸ்கரிக்கிறார்கள்.''

''இருக்கலாம்; ஆனால் நான் இஷ்டதேவனையே வணங்குகிறேன்.''

''உன் இஷ்ட தெய்வம் என்பது யார்?''

''ஊருமல்லான்—நிரஞ்சன நிராகாரன்.''

''ஊரும் பேரும் எல்லாம் இல்லாத அவனிடமிருந்துதான் அனைத்தும் தோன்றின. எல்லாம் ஒன்றுதான்'' என்று கூறி விஷ்ணுதாஸர் அலக் ரகசியத்திலிருந்து சில சுலோகங்களைப் படித்துக் காட்டினார். அவைகளுக்குப் பொருள் விளக்கம் செய்தார்.

''நாங்கள் வேதாந்தத்தை இரண்டு பாகங்களாகப் பிரிக்கிறோம். ச்ருத பாகத்தில் சம்ப்ரதாய ரூபத்தின் மூலம் இருக்கிறது; சாங்கர வேதாந்தத்தில் சந்நியாசம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது; மாயைக்கு இடமிருக்கிறது, அலக் சித்தாந்தத்தில் வேறுவிதம். வேதாந்தத்தில் குறிப்பிடும் ஜீவன், ஈசுவரன், ப்ரம்மம் மூன்றையும் ஏற்றுக்கொள்கிறோம்; ஆனால் ஒரே ஒரு வேற்றுமை, மூன்றுக்குப் பதில் இரண்டாக. ஜீவனும் ஈசுவரனும் ஒரு பக்கம், பிரம்மம் இன்னொரு பக்கம்.

''நாங்கள் ஸம்ஸாரத்தை விடவில்லை. அதை ஜடையில் கட்டிக்கொண்டு வைத்திருக்கிறோம்; பஸ்மரூபத்தில் வைத்து விபூதியாகப் பூசிக்கொள்கிறோம்.

''நீ என்ன சொல்கிறாய்? எங்கள் வாதத்தை ஒப்புக்கொள்கிறாயா?''

நவீனசந்திரன் மௌனமாக நின்றான். என்ன சொல்வது என்று தெரியவில்லை.

''இங்கிருந்து நீ வெறுங்கையுடன் போனாயானால் அது ஆச்சரியந்தான். ஆகவே, என் வேண்டுகோளை நிராகரிக்காதே.''

''எப்படி?'' என்றான் அவன்.

''சந்நியாசம் வாங்கிக்கொண்டவர்கள் மீண்டும் கிருகஸ்தர்களாக முடியாது. ஆனால் எங்கள் சம்பிரதாயத்தில் அது முடியும். இந்த விபூதியைமட்டும் இட்டுக்கொள். அது போதும். எங்கள் யதுநந்தனனை நீ வணங்க வேண்டாம்; ஆனால் அவனைத் திரஸ்கரிக்காதே. நீ எப்போது கிருகஸ்தனாக மாறுவாயோ, அப்போது என்னிடம் தெரிவித்துவிடு'' என்றார் அவர்.

''அவ்வளவு செய்தால்மட்டும் தங்களுக்கு மகிழ்வு ஏற்படும் என்றால், அப்படியே ஒப்புக்கொள்கிறேன். எனக்கு உயிர்ப் பிச்சை தந்தீர்கள் என்பதால் நான் செய்ந்நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். ஆனால் அலக்வாதத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது'' என்றான்.

''பரவாயில்லை, மன்னித்து விடுகிறோம். நீ அலக் வாதத்தைப் படித்து மனனம் செய்; நீ அதை உடனே ஏற்றுக்கொள்ள வேண்டாம். அதற்கு ஒரு வருஷ காலம் அவகாசம் தருகிறேன்'' என்றார் ஸ்வாமிகள்.

5. ரத்னநகரியின் மன்னரும் மந்திரியும்

ரத்னநகரியின் மன்னரும் மந்திரியும் பல காலமாகவே புத்திமான்களாக இருந்து வந்தார்கள் என்பது பெரும் பாக்கியமாகும்.

சூரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் மன்னர் குலத்தோர். குடிமக்களுடன் தந்தை - மக்கள் உறவே கொண்டிருந்தார்கள்; குடிகள் மன்னரை மிக்க அன்புடன் நேசித்து வரவேண்டும் என்பது நியதி. மன்னர் குலத்தவரும் கேவலம் மனிதர்களுடன் மட்டும் நண்பர்களாக இருக்கக்கூடாது, அவர்களுடைய தூய குணங்களுக்காகவே நட்புப் பூண வேண்டும் என்பது இன்னொரு கொள்கை. அரச திரவியத்தைத் தமது நலனுக்கே என்று செலவழிக்காமல் மிக்க சிக்கனத்துடன் மக்கள் நலனுக்கே பயன்படுத்த வேண்டும் என்பது ஒரு குறிக்கோள். 'சேனைகளுக்குத் தலைவனாக மன்னரே இயங்கவேண்டும்; தம் பிள்ளைகளுக்குப் போர் முறைகள் யாவும் கற்றுத் தந்து பட்டத்திற்குத் தகுதியாக்க வேண்டும்; பிள்ளை இல்லாத மன்னர் தக்க நேரத்தில் தத்தெடுத்துக் குலக்கொடியைத் தழைக்கச் செய்ய வேண்டும்' என்பதும் பரம்பரைச் சம்பிரதாயம்.

ரத்னநகரி ராஜ்யம் பழங்காலத்தில், அதாவது அசோக, சந்திரகுப்தர் ஆட்சிக் காலத்தில் தனி அரசாக இயங்கி வந்தது என்பதற்கான தடயங்கள் அவ்வப்போது கிடைத்து வந்தன. பின்னர்ச் சகர்களுடன் பல முறை போரிட்டு ரத்னநகரி ராஜ்யம் தோல்வியுற்றது என்றும், மீண்டும் போர்புரிந்து வெற்றிபெற்றது என்றும், அதற்கான சான்றுகள் தொல்பொருள் ஆராய்ச்சிமூலம் வித்யாசதுரர் காலத்தில் தெரிய வந்தன. முஸ்லிம் பாதுஷாவின் தில்லி அரசாங்க நாட்களில் மிகுந்த ராஜதந்திரத்துடன் ஸாம தான பேத முறைகளின்மூலம் ரத்னநகரி மன்னர் தமது சுதந்தரத்தைக் காத்துவந்தார். தமது அண்டை அயல் ராஜபுத்திர சம்ஸ்தானங்களுடன் நெருங்கிய நட்புப் பாராட்டிப் பொது மிலேச்ச எதிரிகளைக் கூட்டாக எதிர்த்து எவருக்கும் அடிமையாக மாறுமல் ராஜ்யத்தை ஆண்டு வந்தார்.

வெள்ளைக்காரக் கம்பெனி அரசாங்கம் பேஷ்வாக்களை வெற்றி கண்டு முன்னேறிய நாட்களில் ரத்னநகரியின் மல்லராஜாவின் தந்தையார் நாகராஜா ஆங்கிலயருக்குப் பெருத்த எதிர்ப்புத் தந்து வந்தார். கம்பெனித் துருப்புக்கள் ரத்னநகரியின் படைகளுடன் பல முறை போரிட்டன. போரை நாகராஜாவே நேரில் நடத்தி வந்தார். ஆங்கிலப் படைத்தளபதி கர்னல் பிரேவ் களைப்படைந்து போனுன். யுத்தத்தின்மூலம் வெற்றியடைவது என்பது இயலாத காரியம் என்று உணர்ந்து நேரடிப் பேச்சுவார்த்தைகள்மூலம் சமாதானம் செய்துகொண்டு கம்பெனி ஆட்சிக்கு அவரை ஒரு நண்பராக்கிக்கொண்டு ரத்னநகரியிடமிருந்து இடையூறு வராமற் பார்த்துக்கொள்ளலாம்

என்று திட்டமிட்டுக் கர்னல் பிரேவ் நாகராஜாவுக்கு அழைப்பு விடுத்தான்.

''உங்கள் சேனை வெறும் ஆற்று மணல்போன்றது. என் சேனை தீக்கனல் போன்றது. மணலால் தீக்கங்குகளை அணைத்து விடலாம் என்று எண்ணியது தவறு. அதை உணர்ந்துவிட்டீர்கள் என்று அறிந்து திருப்தி அடைகிறேன். சமாதானம் என்பது என்னைப் பொறுத்தவரையில் இதுதான்: ரத்னநகரிமீது கம்பெனி ஆதிக்கம் ஏதும் கொள்ளக்கூடாது. நாங்கள் தனித்தியங்குவோம். ஆனால் நட்புப் பாராட்ட வருபவர்களுடன் என்றும் நட்புப் பூண்டிருப்போம்'' என்று நாகராஜா பதில் விடுத்தார்.

நாகராஜா தம் புத்திரர் மல்லராஜாவை அழைத்துச் சொன்னார்:

''கம்பெனியுடன் சமாதானம் என்றால், நமது மதிப்பை இழப்பது என்று பொருளல்ல. 'நமது சுதந்தரம் நம்மிடமே இருக்கும்; பிறர்க்கு அடிமையாகமாட்டோம்.' இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் கம்பெனியுடன் உடன்படிக்கை செய்வோம். இந்தச் செய்தியை அண்டை அயல் ராஜ்யங்களுக்கு எடுத்துச் செல்; அங்குள்ளவர்களைச் சந்தித்து, கூட்டான உடன்படிக்கைக்கு ஏற்பாடு செய்'' என்று அவரை அயல் தேசங்களுக்கு அனுப்பிவைத்தார்.

இளைஞரான மல்லராஜாவுக்கு இது பிடிக்கவில்லை. சமாதான உடன்படிக்கை என்பது தொடக்கத்தில் சுதந்திரத்தைக் காத்துவிடும் என்றாலும், அடிமை ஆட்சிக்கு அதுவே அடிகோலும் என்றெண்ணினார். எனினும், தந்தையின் சொல்லுக்கிணங்கி மற்ற மன்னர்களைச் சந்தித்துவிட்டு வந்தார். நாகராஜாவின் செய்தியை அவர்கள் வரவேற்றார்கள். கம்பெனியுடன் உடன்படிக்கை செய்வதால் அவர்கள் சுதந்தரத்துக்கு இடையூறு இல்லை என்று தீர்மானித்தார்கள். அப்படியே மன்னர்கள் ஒருங்கே குழுமினார்கள். கம்பெனிப் பிரதிநிதியுடன் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. அதன்படி கம்பெனிக்குத் தேவையான காலத்தில் பொருளுடன் துருப்பு உதவியும் செய்வதாக ஒப்புக் கொண்டார்கள். தமக்குள் பூசல் இருந்தால் கம்பெனியே முன் வந்து தீர்க்கவேண்டும் என்றும் ஒப்புக்கொண்டார்கள். உடன்படிக்கை ஷரத்துக்கள் அபாயமற்றவை என நம்பி அமைதியுடன் திரும்பினார்கள்.

காலம் நகர்ந்தது; மல்ல ராஜா பட்டம் ஏற்றவுடன், ''இது என்ன அமைதி! யுத்தம் புரிவதையே மறந்து போய்விட்டோம். போர்க் காலத்தில் பெண்களுக்கும் பேதையர்க்கும் பாதுகாப்புத்

தருவதுபோல ஆங்கிலேயர் நம்மை ரட்சிப்பதாவது!' என்று பொருமினர்.

காலக்கிரமத்தில் பல சுதேசி ராஜ்யங்கள் கம்பெனி ஆட்சியின் கீழே வந்தன. நானா ஸாஹேபின் புரட்சியின் போது கம்பெனி உடன்படிக்கைக் கிணங்கச் சுதேசி சமஸ்தானங்கள் நடுநிலைமை வகிக்க நேரிட்டது. தேசத்தின் பாதுகாப்பே தலையாய தேவையாக இருக்கையில் சுதேசி மன்னர்கள் சுதந்தரம் இழந்து நானாஸாஹேபின் உதவிக்குச் செல்லாமல் இருப்பது மல்ல ராஜாவுக்கு மிகுந்த வேதனை தந்தது. புரட்சியில் சேரலாமா, வேண்டாமா என்ற பிரச்னை அவர் முன்னே நின்றது.

வித்யாசதுரரின் மாமா ஐராசங்கரர் அப்போது ரத்னநகரியில் மந்திரியாக இருந்தார். மன்னர் அவரை அழைத்து ஆலோசனை கேட்டார். நெடுநேரம் விவாதம் நடந்தது. தேசபக்தியும் நாட்டின் சுதந்தரமும் சிறிய கடனுணுலும் ஒரு சில அரசர்களின் பலம்மட்டும் போதாது; நாடு முழுதும் ஒற்றுமை வேண்டும் என்று ஐராசங்கரர் வலியுறுத்தினர். அந்தச் சூழ்நிலையில் அரசர்கள் பொருமைப் பூசலில் ஆழ்ந்து இருந்ததால் ஒற்றுமையை எப்படி எதிர்பார்க்க முடியும்? ஆகவே, புரட்சி வெற்றி பெருது என்றுர் ஐராசங்கரர்.

''ஆங்கிலேயர் வெற்றிபெற்ருல் என்ன ஆவது?'' என்றுர் மஹாராஜா.

''முட்டாள் சிநேகிதர்களைக் காட்டிலும் கெட்டிக்கார எதிரியே தேவலை.மாரீசனை இராவணன், 'நீ போய்ப் பொன்மான் வேடம் தரித்து இராமனின் வில்லம்பினுல் மாண்டு போக வேண்டும்; இல்லாவிட்டால் நான் உன்னைக் கொன்றுபோடுவேன்' என்று சொன்னபோது, அதற்கு 'ஆஹா, கொடிய நண்பனின் கையால் இறப்பதைவிட அருங்குணம் பொருந்திய எதிரியின் அம்பினுல் சாவதே பெரும் புண்ணியம்' என்றுனும் மாரீசன்.''

மல்ல ராஜா யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார். ஐராசங்கரரை அழைத்து, ''பிரேவ் துரைக்குக் கடிதம் எழுதிவிடுங்கள். அவர் பக்கமே இருப்பேன் என்று தெரிவித்துவிடுங்கள்'' என்றுர்.

ஐராசங்கரர் ஒரு நிமிஷம் தயங்கினர்.

''என் ஆலோசனைப்படி நீங்கள் சொல்கிறீர்கள். என் மூளைக்குப் பட்டதையே சொன்னேன். தாங்கள் எடுத்திருக்கும் முடிவின் வெற்றி, தோல்வி என் ஆலோசனையில் உள்ள குறைபாட்டையே பொருந்தியிருக்கும். பின்னுல் ஏதேனும் தவறு நிகழ்ந்துவிட்டால் என்னை மன்னித்துவிட வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

''பிறர் ஆலோசனையால் மட்டுமின்றித் தாமே சிந்தித்து முடிவுக்கு வருதல்தான் மன்னர்க்கழகு ஆகும். அதனால் நீங்கள் ஒன்றும் மனக்கவலையுற வேண்டாம்'' என்றார் மன்னர்.

ஜராசங்கரர் நகர்ந்தார். 'ஒற்றுமையில்லாத காலத்தில் கையள்வு மன்னர்கள் சேர்ந்து மாபெரும் ஆங்கிலேய ஆட்சியைச் சிதைப்பது என்பது முடியாத காரியமாகும். அந்தப் பைத்தியக் கார முயற்சியால் தேச ஒற்றுமையும், சுதந்தரமும் கிட்டா. அதற்குப் பதில் சர்வநாசமே உண்டாகும்' என்று எண்ணித் தான் மன்னருக்கு அந்த யோசனையை ஜராசங்கரர் சொன்னார்.

கர்னல் பிரேவ் துரைக்குக் கடிதம் சென்றது. அன்று மாலை மஹாராஜாவின் தாயாதியான ஸாமந்தர் ஒரு தூதனுடன் வந்தார். கான்பூரில் பெருங் கலகம் மூண்டுவிட்டதாகவும், புரட்சிக்காரர்கள் வெற்றிக்கு மேல் வெற்றி அடைவதாகவும், சுதேசி மன்னர்களின் வெற்றிக்கு உதவவேண்டும் என்றும் செய்தி கொண்டு வந்திருந்தான் தூதன்.

தாத்தியா தோபியின் மூவாயிரம் பேரடங்கிய படை வந்து கொண்டிருப்பதாகவும், சுதேசி அரசர்கள் உடனே உதவ வேண்டுமென்றும், இல்லாவிடில் தாங்களே வேண்டியதை இலவசமாக எடுத்துக்கொண்டு போக நேரும் என்றும் தூதன் மேலும் சொன்னான்.

மல்லராஜா ஒன்றும் பேசாமல், ''அப்படியா, தாத்தியா தோபியின் படையின் முன்னேற்றத்தைத் தெரிவி'' என்று மட்டும் சொல்லி அனுப்பினார்.

ஸாமந்தரின் பக்கம் திரும்பி, ''நம் படைத் தலைவர்களை யும், தாயாதிகளையும் அழைத்து வா. அவர்களிடம் நான் தேசத்தின் நெருக்கடி நிலைபற்றித் தெரிவிக்கவேண்டும்'' என்றார்.

''தாத்தியா தோபி நம்முடன் போர் தொடுக்க வரவில்லை. நமது உதவியையே நாடி வருகிறார்'' என்றார் ஸாமந்தர்.

''ஆமாம், உதவி தராது போனால் நமக்கெதிரே சண்டை யிடுவார்கள்.''

''உதவி தருவதற்கு என்ன ஆட்சேபம்?''

''ஆமாம்; அதை நான் உங்களையெல்லாம் கலந்தாலோ சிப்பேன்.''

ஸாமந்தர் நகர்ந்தார்.

மல்லராஜா ஜராசங்கரரைச் சந்திக்க வேண்டுமென்று சொல்லியனுப்பினார். ஜராசங்கரர் வந்தார், மஹாராஜா நடந் ததைச் சொன்னார்.

''மஹாராஜா, நீங்கள் அவர்களையெல்லாம் அழைத்திருக்கிறீர்கள். அவர்கள் அனைவரோடும் சேர்ந்து ஆலோசிப்பது என்பது நல்லதல்ல. அவர்கள் ஒரேடியாக தாத்தியா தோபிக்கே உதவுவது என்று சொல்லிவிட்டால் நீங்கள் உங்கள் கருத்துடன் தனித்துப் போய்விடுவீர்கள். ஆகவே, அவர்கள் ஒவ்வொருவராகத் தங்களிடம் வந்தால் நல்லது'' என்றார்.

மல்லராஜா ஜராசங்கரர் சொல்வதைப் புரிந்து கொண்டார்.

''இதோ யுத்த சந்தர்ப்பம் வந்திருக்கிறது. இனி இதில் க்ஷத்திரியனுக்குத்தான் வேலை. ஆகவே, நான் இதைப் பார்த்துக்கொள்கிறேன்'' என்று சொன்னார்.

சிறிது நேரத்தில் படைத்தலைவர்களும் மஹாராஜாவின் தாயாதி மக்களும் கூடினார்கள். மஹாராஜா பேச ஆரம்பித்தார்:

''போருக்கான சூழ்நிலை வந்துவிட்டது. தாத்தியா தோபியின் ஆட்கள் நெருங்கி வந்துவிட்டார்கள். அவர்களுக்கு நாம் அஞ்சப் போவதில்லை. ரத்னநகரியின் சூரிய வம்சத்து நாகராஜா கலியுக சூர்ய வம்சத்துச் சுக்கிரீவனுடன் சமாதானம் செய்துகொண்டார். அந்தச் சமாதானத்தை நாகராஜாவின் சந்ததி உடைக்க விரும்பவில்லை. மன்னரின் கட்டளையை வேறு ஒருவரும் மறுக்க மாட்டார்கள். இதை நான் அறிவேன்; நீங்களும் உணர்வீர்கள். நாகராஜாவின் வாக்கை நான் நிறைவேற்றுவேன்; என் ஆக்ஞையை நீங்கள் நிறைவேற்றுவீர்கள்'' என்று கூறிச் சபையை உடனே கலைத்தார். குழுமியிருந்தவர்கள், ''மஹாராஜா வாழ்க'' என்று கூறிக் கலைந்தார்கள்.

ஸாமந்தருக்குப் பெரிய ஏமாற்றம்; இதென்ன எதிர்பாராத முடிவாகிவிட்டதே!

''மஹாராஜா! நீங்கள் எங்கள் அபிப்பிராயத்தைக் கேட்கப் போகிறீர்கள் என்றல்லவா நினைத்தேன்? அதற்குப் பதில் உத்தரவு அல்லவா தந்துவிட்டீர்கள். இதை எப்படி மீறமுடியும்?'' என்றார் ஸாமந்தர்.

''ஸாமந்தா, மிகுந்த ஆலோசனைக்குப் பிறகே இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். நீ உண்மையான காரணங்களை அறிந்துகொண்டால், என்னுடன் ஒப்புக்கொள்வாய். உன்னுடைய ராஜபக்தியை நான் அறிவேன். கேவலம், என் உத்தரவு எதற்கு? நான் எதற்கு உத்தரவு இடவேண்டும்? உங்களுடைய பிரியம் அல்லவா எனக்குத் தேவை'' என்றார் மல்லராஜா.

ஸாமந்தர் மென்மையடைந்து போனார்.

''மஹாராஜா, மற்ற எல்லோரும் தங்கள் ஆணையைப் பின்பற்ற நான்மட்டும் விலக்கல்ல; தங்கள் உத்தரவைச் சிரமேற்கொள்வேன்'' என்று உறுதி கூறினார்.

''என்னுடைய முடிவின் காரணங்களை அறிந்துகொள்.''

''மஹாராஜாவின் ஆணையே ஆணை. அதற்கான காரணங்களை எளியவர்களான நாங்கள் அறிந்துகொள்ளத் தேவையில்லை.''

மஹாராஜா மகிழ்ச்சியடைந்தார்.

''உன்னைப் போன்ற ரத்தினங்கள்தாம் ரத்னநகரியைக் காக்கும். உன்னைப்பற்றிப் பெருமையடைகிறேன்.''

ஸாமந்தர் வணங்கிவிட்டு நகர்ந்தார்.

ஜராசங்கரரிடம் திரும்பி மன்னர் பேசலுற்றார்;

''இவர்கள்தாம் ரத்னநகரியின் ரத்தினங்கள். இவர்களாலேயே நான் ஆளுகிறேன். ஆனால் ரத்தினங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பதன்மூலந்தான் ஆட்சியின் ரகசியம் அடங்கிக் கிடக்கிறது. இதை நீங்கள் கவனித்துக்கொள்ளுங்கள். நான் சென்றபின்னர் என் புத்திரனுக்கு இதைக் கற்பித்துக் கொடுங்கள்.''

ஜராசங்கரர், மன்னரின் ராஜதந்திரத்தை வியந்து மனத்தில் பாராட்டிக்கொண்டார்.

படைகள் திரண்டன. யுத்தத் தளவாடங்களுடன் வீரர்கள் அணிவகுத்தார்கள். ஸாமந்தர் ராஜ்விசுவாசம் மின்னும் கண்களுடன் ஆயுதபாணியாக அரசரிடம் வந்து விடைபெற்றுக் கொண்டார். ரத்னநகரியின் எல்லைகளைக் காக்கப் படைகள் விரைந்தன.

மன்னரும் மந்திரியும் தனிமையில் மீண்டும் விடப்பட்டார்கள். அப்போது தூதன் ஒருவன் வந்து, ''மஹாராஜா, நகருக்கு வெளியே தாத்தியா தோபியின் சேனைத்தலைவர்கள் இருவர் வந்திருக்கிறார்கள். தங்களைக் காணவேண்டுமென்று விரும்புகிறார்கள். தங்களுடைய ஆக்ஞை என்ன என்று தெரிவிக்கவேண்டும்'' என்றான்.

''அவர்கள் யார்?''

''ஒருவர் மராட்டி வீரராகக் காணப்படுகிறார். இன்னொருவர் தக்ஷிணி அந்தணராகத் தோன்றுகிறார்; அவர் சாஸ்திரம் எல்லாம் அறிந்தவராம்; குஜராத்தி சுதேசி ராஜ்யங்களில் பணிபுரிந்திருக்கிறாராம்.''

''நீ போகலாம்; நான் உணவருந்திவிட்டு ஆள் அனுப்புவேன்'' என்றார் மன்னர்.

மஹாராஜா, ஜராசங்கரரை மீண்டும் வருமாறு சொல்லி அந்தப்புரத்தில் நுழைந்தார்.

கணவர் யுத்தகோலம் பூண்டுவிட்டார் என்பதை அறிந்து மனக்கிலேசம் அடைந்து போனாள் ராணி மேனாதேவி. அவளுடைய கலக்கத்தை அறிந்தவராய் மன்னர், "ராஜபுத்திரர்களுக்குப் பல ராணிகளாம்; ஆனால் பிரியமான ராணி ரணபூமி தானாம்" என்றார் ஹாஸ்யமாக.

மேனாதேவி கண்ணீர் சிந்தினாள். அவளைத் தேற்றினார் மன்னர். அவள் சற்றே தைரியம் கொண்டு மன்னருக்கு வெற்றி உண்டாகட்டும் என வாழ்த்தினாள்.

மன்னர் சபாமண்டபத்திற்கு வந்தார். அவர் வருமுன் ஜராசங்கரர் அங்கே காத்திருந்தார். தாத்தியா தோபியின் தூதருக்குச் சொல்லி அனுப்பினார் மன்னர். சுபாஜிராவ் என்ற மராட்டியவீரரும் கேசவபந்த் என்ற அந்தணரும் வந்து மஹாராஜாவிற்கு வாழ்த்துக்கள் தெரிவித்தார்கள். தூதர் அவ்விருவரையும் மன்னருக்கு அறிமுகம் செய்துவைத்தார். மல்லராஜாவும் தம் மந்திரி ஜராசங்கரரையும் அவ்வாறே அறிமுகம் செய்து வைத்தார்.

கேசவசாஸ்திரி பேச ஆரம்பித்தார்; "வெளியிலிருந்து பாரத தேசத்துக்கு வந்த மிலேச்சர்களில் ஆங்கிலேயரைக் காட்டிலும் தந்திரக்காரர்கள் எவருமில்லை; அவர்களால் தேசத்திற்குப் பயங்கர நிலை வந்துவிட்டது. இதுநாள் வரை அவர்களுக்குப் பணப்பசி இருந்தது; இப்போதோ நிலப் பசி ஆரம்பித்துவிட்டது. யாரையும் தத்து எடுத்துக்கொள்ள அநுமதிக்க மாட்டோம் என்கிறார்கள். ஸாதாராவில் இன்று இந்தக் கதி; நாளையே தங்கள் தேசத்துக்கு இந்தக் கதி வரலாம். ஹிந்துவும் முஸல்மானும் வெள்ளையரை எதிர்க்க ஒன்றுகூடி விட்டார்கள். மீரட், ஸஹாரன்புர், முஸாபர்நகர், கான்பூர் - வடக்கே எடுத்துக் கொள்ளுங்கள்; எல்லா இடத்திலும் வெற்றிக்கு மேல் வெற்றி. இந்தப் பிரதேசத்திலும் நாம் வெள்ளையரை எதிர்த்தோமென்றால் தேசவிடுதலைக்கு உதவியாகும். இந்தத் தருணத்தை விட்டோமென்றால் வேறு தக்க வாய்ப்பு எப்போது கிடைக்கும் என்று சொல்ல முடியாது. ஆகவே, உங்கள் உதவியை நாடுகிறோம். நீங்கள் உதவி செய்ய மறுத்தால் நாசந்தான் உங்களை வந்தடையும்" என்ற எச்சரிக்கையில் முடித்தார்.

மல்லராஜா உடன் பதிலளிக்காமல் தம் மந்திரியுடன் எழுந்து பக்கத்தறையில் சென்று அவரோடு கலந்தாலோசித்தார்.

''தத்தெடுக்கும் பிரச்னையை அநாவசியமாக எழுப்பி விட்டிருக்கிறார்கள். அதைத் தவிர வெள்ளையர்களின் சக்தி பெருகத்தான் போகிறது; அதைத் தடுக்க வழி ஏதும் இல்லை. நிலப்பசி என்றார்கள். நிலப்பசி என்பது புதிதல்ல; ஏன் சுதேசி மன்னர்களுக்கே அது கிடையாதா? நான் ஒப்புக்கொள்ளப் போவதில்லை'' என்று நிச்சயித்து வெளியே வந்தார். அங்கே காத்திருந்த அவர்களிடம் தமது எண்ணத்தைத் தெரிவித்தார். உடனே ரத்னநகரியின் எல்லையினின்று அவர்கள் நீங்கவேண்டுமென்று உத்தரவிட்டார். அவ்வாறு செய்யாவிட்டால் பலாத்காரமாக வெளியேற்றுவோம் என எச்சரிக்கை செய்தார். அவர்களை அவ்வாறே அனுப்பிவிட்டுப் படுக்கச் சென்றார்.

6. மல்லராஜாவின் சிந்தனை

வெள்ளையர் மீண்டும் வெற்றி பெற்றார்கள்; தில்லி மறுமுறை அவர்கள் கைவசம் வந்தது; விக்டோரியா மகாராணியின் ஆட்சி தொடங்கியது. மல்லராஜாவின் தீர்க்கதரிசனம் பலித்துவிட்டது. ஆனாலும் அவர் மிகவும் துயருற்றுப் போனார். எப்போதாவது அதைப்பற்றி நினைத்தால் பெருமூச்செறிவார்.

''ஜராசங்கர்! ராஜபுத்திரர்கள் விதவைக் கோலம் பூண்டுவிட்டார்கள். வெள்ளையர்கள் இனி யாருடனும் சண்டை போடத் தேவையில்லை. ஆனால் கொள்ளைக்காரர்கள், கோழைகள் இவர்கள்தாம் அவர்களுக்கு எதிரிகளாக இருப்பார்கள். ஆனால் இந்த எதிர்ப்பும் ஓர் எதிர்ப்பாகுமா? வெள்ளையர்கள் எங்கு, எப்படி இருந்தாலும் இந்தத் தேசத்தில் பணியாக்களாக நமது திரவியத்தை வாரிச் சுருட்டிக்கொண்டு போவார்கள். ஆகவே, இந்த மாறும் காலத்தில் நாம் இனி என்ன செய்ய வேண்டும் என்பதுதான் பிரச்னை; எதை நாம் செய்யக்கூடாது என்பது இன்னொரு கேள்வி. நீயும் நானும் இதைப்பற்றி யோசித்தாகவேண்டும்'' என்றார் மிகுந்த வருத்தத்துடன்.

''மகாராஜா, நீங்கள் சொல்வது உண்மைதான். ஆனால் அத்தகைய புது யுகம் இன்னும் வரவில்லை. பழைய காலத்திலேயேதான் இன்னும் இருக்கிறோம். ஆகவே, புது யுகத்தில் உடனே நுழைவது என்பது சிலாக்கியமல்ல. அதே சமயம் சூழ்நிலையை அறவே மறந்து, பழைய நாட்களின் போலி பத்திரத்திலேயே இருக்கக்கூடாது. எதைச் சொல்ல வருகிறேன் என்றால், 'நிதானம் வேண்டும்; நம்பிக்கை இழக்கக்கூடாது' என்று சொல்ல விரும்புகிறேன்'' என்றார் ஜராசங்கரர்.

மன்னர் விசாரம் அடைந்தார். பலவேறு எண்ணங்களில் மூழ்கிப்போனார். பற்களை நறநறவென்று கடித்து உதட்டைக் கடித்துக்கொண்டார்; இரத்தம் வரவேண்டியதுதான் பாக்கி.

''ஜராசங்கர், நீ சொன்னது உண்மை. க்ஷத்திரியர்களின் ரணபூமி போய்விட்டது; ராஜபுத்திரர்கள் மடிந்துவிட்டார்கள். இதோ, ராணியிடம் போய்ச் சொல்'' என்று கூறினார்.

ஜராசங்கரர் உடனே மகாராணியிடம் சென்று மன்னரை உடனே சென்று பார்க்கவேண்டும் என்று வேண்டினார். அவள் பதறிக்கொண்டே வந்தாள். துயரத்தால் தலை குனிந்து நின்ற அரசரின் மோவாயை நிமிர்த்தி, ''மகாராஜா, நாதா'' என்றாள்.

மன்னர் அவளை நோக்கி, ''என்ன, எங்கே வந்தாய்? உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

''தங்கள் மகிழ்ச்சியையன்றி வேறு எனக்கு என்ன வேண்டும்? ஏன் இந்தத் துயரம்?'' என்று வினவினாள் ராணி.

''ராணி! ஜராசங்கர் எங்கே?''

''உங்கள் நிலையைக் கண்டு வருந்தியவண்ணம் வாயிலிலே நிற்கிறார்.''

''ராணி! ஜராசங்கருடனும் ஸாமந்தனுடனும் கலந்தாலோசித்தால்தான் என் துயரம் தீரும்.''

ராணி புரிந்துகொண்டாள்; மன்னர் கூறியபடியே அவர்களை அழைத்தாள். ஜராசங்கரரும் ஸாமந்தரும் வந்தார்கள். ராணியைமட்டும் உள்ளே அனுப்பி வாயிலில் நின்றதன் காரியத்தை அவர் கேட்டபோது ஜராசங்கரர் பணிவுடன் கூறினார்:

''மகாராஜ், தங்கள் மனக்கலக்கத்தைத் தீர்க்க முயன்று நான் தோல்வியே அடைந்தேன். ராணியாரை அனுப்பினால் அவர் வெற்றி பெறுவார் என்றறிவேன்.''

மகாராஜா குறுநகை பூத்தார்.

''உன்னைவிடவா அவருக்குச் சக்தியுண்டு?''

''ஏனில்லை? தாங்களே என்னையும் ஸாமந்தரையும் மந்திராலோசனைக்கு அழைக்க முடிவு செய்தது மகாராணியாரின் வெற்றியை அல்லவா குறிக்கிறது!''

மல்லராஜா சிரித்தார்.

சிறிது சிந்தனைக்குப் பிறகு தம் கருத்துக்களை எழுதுமாறு இருவரையும் பணித்தார். அரசாங்கத்தில் அதிகார வர்க்கமும், குடும்பத்தினரும் எத்தகைய பணிகளாற்றவேண்டும் என்பதையும், அவர்களுடைய பரஸ்பர தர்மம் எது என்பதையும், வெள்ளையர் ஏதாவது சதி செய்ய முயன்றால் எவ்வாறு வெல்வது என்பது குறித்தும், க்ஷத்திரியர்களின் தர்மம் எது என்பதையும்,

ராஜ்யத்தை எப்படிக் காப்பது என்பது குறித்தும், வருங்காலச் சந்ததியார் வாழ்வுமுறை குறித்தும், தாம் யோசித்து வைத்திருந்த கருத்துக்களை அவர் சொல்ல, ஜராசங்கரரும் ஸாமந்தரும் எழுதிக்கொண்டார்கள்.

''புதிய யுகம் பிறக்கவிருக்கிறது; என்ன நடக்கும் என்பது தெரியாது. அந்த அந்தகாரத்தில் இந்த என் எண்ணங்கள் நமக்கு நமது குல ஆசாரத்தையும், யுக ஆசாரத்தையும் எடுத்துக் காட்டும்'' என்றார் ஸாமந்தரை நோக்கி.

ஜராசங்கரரும் ஸாமந்தரும் விடை பெற்றுக்கொண்டார்கள்.

மகாராணியை நெருங்கினார் மன்னர். ''நீங்கள் மன அமைதியும் மகிழ்ச்சியும் பெறவேண்டும். அதுவே நீங்கள் எனக்குத் தரக்கூடிய பெரிய வரன்'' என்றாள் ராணி.

''என் பட்டத்து ராணிக்கு அந்த உரிமை உண்டு. உனக்கு உண்டா?'' என்றார் அவர்.

''எனக்குத் தெரிந்தவரையில் நான் ஒருத்திதான் தங்கள் ராணி.''

''நான் இதுநாள் வரையில் சொன்னதில்லை, உங்களிருவருக்கும் எப்போதும் அநாவசியமான சண்டை நிகழும் என்று.''

''இப்போது சொல்லுங்களேன். நாங்களிருவரும் பரஸ்பர அன்புடன் சேர்ந்தே வாழ்கிறோமா இல்லையா என்பதைத்தான் பாருங்களேன்!''

''ஓரிருவர் அல்ல; மூன்று பேர் சேர்ந்து வாழவேண்டும், முடியுமா?''

''இதோ பாருங்கள்; சீக்கிரம் சொல்லிவிடுங்கள்: இல்லாவிட்டால் சாப்பாடு எனக்கு இறங்காது.''

''நான் சொல்லித்தான் தெரியவேண்டுமா, நீயே அவர்களை அறிந்திருப்பாய்.''

''மகாராஜ், தயைசெய்து சொல்லுங்கள்.''

''என் முதல் ராணி எனது புத்தி - சின்னஞ் சிறு வயதிலிருந்து. இரண்டாம் ராணி ரத்னநகரி. மூன்றும் ராணி எனது ரணபூமி. அவள் என்னைக் கூப்பிட்டால் விழித்திருந்தாலும் உறங்கிக்கொண் டிருந்தாலும் எல்லாவற்றையும் போட்டது போட்டபடி ஓடுவேன்.''

''நான் ஒரு வரம் கேட்கலாமா?''

''ஓ, நிச்சயமாக!''

''தங்கள் மூன்று ராணிகளுக்குப் பிறகு நான்காவது ஸ்தானத்தை வேறு ஒருவருக்குக் கொடுத்துவிடுங்கள். என்னை ஐந்தாம் ராணியாக்கிவிடுங்கள்.''

''யார் அவள்?''

''மகாராஜா, தங்கள் ராஜ்யத்துக்கு வாரிசு வேண்டாமா? சந்ததி இல்லாமல் எவ்வளவு நாட்கள் இருக்கமுடியும்? ஸாமந்தரும் தங்களிடம் சொல்லிச் சொல்லி அலுத்துப் போய்விட்டார். என் பேச்சையாவது தாங்கள் கேட்டீர்களா? ஸாமந்தர் நல்ல இளவரசிகளாகப் பார்த்து வைத்திருக்கிருர். அவர்களில் ஒருத்தியைத் தாங்கள் மணம் புரிந்து நான்காம் ராணியாக ஆக்கிக்கொள்ளவேண்டும்.''

''ஸாமந்த சிம்மனின் யோசனை சரி; நீ அதைப்பற்றி என்ன சொல்கிருய்?''

''நான் அதைப் பரிபூரணமாக ஆதரிக்கிறேன்.''

''அப்படியே உன் கழுத்தையும் அறுத்துக்கொள்ளலாமென்று. . .''

''இல்லே, இல்லே; ஸாமந்தசிம்மரின் இந்த யோசனேக்கு முன்னேயே நான் நினேத்ததுண்டு. இதில் ஹாஸ்யத்திற்கு இடமேதுமில்லே.''

''நானும் ஹாஸ்யம் செய்யவில்லே. உன்னுடைய யோசனேயை என்னுடைய மூன்று ராணிகளும் எதிர்க்கிருர்கள். அவர்களே எதிர்த்து ஒரு நாளும் ஒரு காரியமும் செய்யமாட்டேன். ஸாமந்தசிம்மனிடம் தெரிவித்துவிடு. சாஸ்திரம், சம்பிரதாயம் என்று சொல்லி ராணிகளேச் சேர்த்துக் கூட்டம் போட நான் விரும்பவில்லே.''

7. ஆசையும் நிராசையும்

மல்லராஜாவுக்கு மணிராஜா பிறந்தான். பல ஆண்டுகள் அரசாண்ட பிறகு மணிராஜாவுக்குப் பட்டம் அளித்தார். குமுதசுந்தரி சுபத்ரா நதியில் மூழ்கின செய்தி வந்தவுடன் வித்யாசதுரர் குணசுந்தரியிடம் வந்து சேர்ந்துகொண்டார்; அப்போது மணிராஜாவுக்கு முடி சூட்டி மூன்றே வருடங்கள் ஆகியிருந்தன.

மணிராஜா பட்டம் பெற்றவுடன் மல்லராஜா வானப்பிரஸ்தம் புகுந்தார். ஆனுல் விரைவில் முடிவுக் காலம் நெருங்கிவிட்டது. மரணம் அடைவதற்குமுன் தம் மகனே அழைத்துச் சொன்னூர்:

''மணிராஜ், பிரஜைகளின் சுகநலன்களே மறந்துவிடாதே! அவர்கள் ஏழைகள். பல வருஷங்கள் நாம் ஆட்சி செலுத்தியும் அவர்கள் இன்னும் ஏழைகளாக இருக்கிருர்கள். தாங்களாகவே

சொல்ல மாட்டார்கள். நீயே அவர்கள் துயரத்தை அறிந்து கொள்ள வேண்டும்.''

மல்லராஜா உயிர் நீத்த இடத்திற்கு மல்லேசுவரம் என்ற பெயர் தந்து, எளிய சிவாலயம் ஒன்றைக் கட்டினார்கள். விதவை மகாராணி அங்கேயே கோயிற் பூங்காவில் இரவும் பகலும் வாழ்ந்து வந்தாள்.

வித்யாசதுரர் ஆசுவாசப்படுத்தியும் குணசுந்தரி துக்கம் குறையாமல் மனம் புண்பட்டுக்கொண்டாள். ஆகவே, அவள் துக்கத்தைப் போக்கவும் மன ஆறுதல் அடையவும் விதவை மகாராணியுடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார். அவ்வாறே குணசுந்தரியும், ஸுந்தரகௌரி ஆகியோருடன் மல்லேசுவரம் சென்றாள். அப்போது காலை மணி ஏழே அடித்திருக்கும். மெலிந்த உடலுடன், எப்போது ஒடிந்துவிடுமோ என அஞ்சக் கூடிய துளசியின் கிளையைப் போன்று காட்சியளித்தாள் மகாராணி; ஜபத்திலும், தவத்திலும், பகவந் நாமாவளியிலும் தனது காலத்தைத் கழித்து வந்தாள் அவள்.

மல்லேசுவரத்துக்கு ஆறுதலுக்காகக் குணசுந்தரி சென்றாள். ஆனால் அவளுக்குக் குமுதசுந்தரியைப்பற்றி மேலும் தகவல் தெரிய வந்தது.

நதியில் குமுதசுந்தரியின் ஒரு காலைக் கொள்ளைக்காரன் பற்றினான் என்றும், அவன் அவளைக் கைப்பற்றிக்கொண்டு போக எத்தனிக்கும்போது சங்கரை அவன் கத்தியால் தாக்கினான் என்றும், அதற்குள் இன்னொரு காவலாளான ரூபராஜன் பிரதாபனைத் தாக்கி அவன் தலையை வெட்டிவிட்டான் என்றும் கூறினார்கள். இரண்டு பயங்களில் ஒன்றான பிரதாபன் மாண்டு போனான்; ஆனால், நதியின் வேகமும் சுழிப்பும் மிகப் பயங்கரமாக இருந்தன என்று சொன்னார்கள்.

குணசுந்தரி அதனால் திருப்தி அடையவில்லை. குமுதசுந்தரியின் உடல் நதியில் அடிக்கப்பட்டுக் கடலில் சங்கமம் அடையு முன்னர்க் கிடைக்கும் என்றும், அங்கே நீரின் வேகமும் சுழிப்பும் குறைவாதலால் உடலை எளிதில் கண்டு பிடித்து விடலாமென்றும் ஆட்கள் சொன்னார்கள்.

''ஆண்டவன் விட்ட வழி'' என்று பெருமூச்சு விட்டாள்.

''கடவுள் காப்பார்'' என்றாள் மகாராணி.

''தங்கள் ஆசீர்வாதம். மூழ்கியவள் மூழ்கியவள்தான். இனிமேல் நான் என்ன நம்பிக்கை கொள்ளமுடியும்? கடைசி நிமிஷம் வரை நம்பிக்கை இழக்கக்கூடாது என்பது தர்மம் அல்லவா?'' என்று கூறியவண்ணம் எழுந்தாள் குணசுந்தரி.

குதிரை வண்டி அந்த மூன்று பேரையும் தாங்கியவண்ணம் வீடு நோக்கி நகர்ந்தது. குஸுமா பேசினாள்:

''அம்மா, கல்யாணம் செய்துகொள்ளாதவர்கள்தான் சுகித்திருப்பார்கள் என்று தோன்றுகிறது.''

''கல்யாணம் செய்துகொண்டால் என்ன துக்கமாம்?'' என்று வினவினாள் ஸௌந்தரகௌரி.

''பாருங்கள், மாப்பிள்ளை தேடுவதென்றால் அதுவே ஒரு பெரிய தொல்லை; கணவன் இருந்தாலும் துக்கம்; கணவன் இறந்தாலும் துக்கம். துக்கத்திற்கு முடிவே இல்லையே! குமுத சுந்தரிக்கு மணம் முடித்ததே பெரிய துக்கம்; கணவன் கிடைத்து மணவாழ்விலும் என்ன சுகம் கண்டாள்? அம்மா, குமுத சுந்தரிக்கு இந்தத் துக்கம் வந்திருக்கவே கூடாது.''

ஸௌந்தரகௌரி அவள் பேச்சை அடக்கினாள். பெற்ற தந்தையின் உள்ளத்தில்தான் என்ன துயரம்!

'குமுதா, உன் துர்ப்பாக்கியத்திற்கு எல்லையே இல்லாது போய்விட்டதே; நீ சுகப்படவே பிறக்கவில்லையே! கல்விமானான மாப்பிள்ளை என்று தேடினேன். உன் அதிர்ஷ்டம் - நீ அவனை மணம் செய்துகொள்ளக் கொடுத்து வைக்கவில்லை. நல்ல குலத்தில் மணம் செய்துகொண்டாய்; ஏனோ நீ சுகம் பெறவில்லை! சொல்லொணாத் துயர் அடைந்தாய். கொள்ளைக்காரர்களிட மிருந்து மீண்டாய்; ஆனால் நதியிடம் அடைக்கலம் புகுந்தாய்.

'நீ மாண்டுவிட்டாய் என்றே எண்ணுகிறேன்; நீ ஒருநாள் உயிருடன் மீண்டுவருவாய் என்று நான் எப்படி ஆசை கொள்ள முடியும்? அது வெறும் நிராசையாகிவிடும். நான் அப்படித் தான் மனச்சமாதானம் கொள்ளவேண்டும். உன்னைப் பெற்றவள் உயிர் துடிக்கிறாள்; நீதான் உயிருக்கு உயிராய் இருந்தாய்.

'பிரமாததனன் சமுத்திரக்கரையில் நீரில் மூழ்கி மாண்டு கிடந்தான் என்ற செய்தி வந்திருக்கிறது. நீயும் செத்திருந்தால் உன்னுடைய துக்க வாழ்வின் அந்திமம் என்றே எண்ணவேண்டும். பிரமாததனன் வாழ்ந்து நீமட்டும் மறைந்து போனாலும் என்னைப் பொறுத்தவரை உன் துக்கவாழ்வுக்கு முடிவு வந்துவிட்டதென்று எண்ணுவேன்.

''ஆனால் நீ ஒருவேளை உயிருடன் மீண்டால் விதவைக் கோலமல்லவா பூணவேண்டும்? பெற்ற மகள் மணமும் பூவும் மங்களமும் இழந்து காணச் சகிக்கமுடியாதே! ..அம்மா! நான் எப்படித் தாங்குவேன்?

''குமுதா, சரஸ்வதிசந்திரன் இன்னும் உயிருடன் இருக்கிறான்; அவனது அறிவிலித்தனம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அவன் உள்ளத்தில் ஏற்றிவைத்த பிரேமைத் தீபம் இன்னும் அணையாமல் இருக்கிறது.

'குமுதா! நீ மீண்டும் வந்து, மறுவிவாகம் செய்துகொண்டால் அப்படிச் செய்துகொள்ள அநுமதி தந்தால் அதுவே சாகஸச் செயலாகும்; அதைவிடப் பெரும் சாகஸச் செயல் உன்னை அவன் ஏற்றுக்கொண்டு மணம் முடிக்க ஒப்புக்கொள்வது. ஆனால் சமூகம்..? என் தகப்பனாரும், என் மாமனாரும் என்ன சொல்வார்கள்? அவர்களைப்பற்றி நான் ஏன் விசாரப்படவேண்டும்? அவர்களுக்கு உன்மேல் ஆசை இல்லையா? கிழவர் வாள் ஏந்தி உன்னைக் காக்கவேண்டுமென்று குதிரை ஏறிச் செல்லவில்லையா?''

வித்யாசதுரர் மனவிசாரத்திலே மூழ்கிக்கொண் டிருந்த போது சந்திரகாந்தனும் அதே எண்ணவேகத்தில் அடித்துத் தள்ளப்பட்டுக்கொண் டிருந்தான்.

''சரஸ்வதிசந்திரா, உன்னைத் தேடவந்த நான் உன் துயரத்தைவிடப் பெருந்துயரம் ஏதுமில்லை என்று நினைத்தேன். அதைக் காட்டிலும் துயர்தரும் குமுதசுந்தரியின் செய்தி கேட்டேன். இனி என்ன? நீ அகப்படுவாயா, இல்லையா என்பது பிரச்னை. உன் வீட்டிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. என் முயற்சிகள் தோல்வியுற்றன; ஆகவே, திரும்பி வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் வெறுங்கையுடன் திரும்பி என்ன பயன்? ஆயிரம் சந்திரகாந்தர்களைச் சேர்த்தாலும் உன்னைப் போல ரத்தினம் அகப்படுமா?''

அப்போது அவ்விடம் பிச்சை எடுத்துக்கொண் டிருந்த ஒருவர், சிந்தனையில் மூழ்கியிருந்த சந்திரகாந்தனிடம், ''உன்னைப் பார்த்தால் இந்த ஊர்க்காரன் என்று தோன்றவில்லையே?'' என்றார்.

''ஆமாம்; நான் பம்பாயிலிருந்து வந்திருக்கிறேன்'' என்றான்.

''பெயர்?''

''சந்திரகாந்தன்.''

''இதோ, சந்திரகாந்தா, தூரத்தில் ஆகாயத்தைத் தொட்டுக்கொண் டிருக்கிறதே உயர்ந்த மலைச் சிகரமொன்று, அதுதான் ஸுந்தரகிரி. அங்கே சாதுக்களின் ஆசிரமம் இருக்கிறது. ஒருநாள் அங்கே வந்து பார்: நீ மன அமைதி பெறுவாய்.''

சாதுவின் வார்த்தைகளைக் கேட்டுப் பிரமித்துப் போனான் அவன். சாது நகர்ந்தார்.

''சரஸ்வதிசந்திரன் ஒரு வேளை இந்தப் பிரதேசத்தில் எங்கேனும் இருக்கலாமோ? இதே வெளியில்தானே குமுதசுந்தரியும் நீரில் மூழ்கிப் போனாள்?''

சிந்தனையில் ஆழ்ந்திருந்த சந்திரகாந்தனை அழைத்தார் வித்யாசதுரர். மனச்சிலந்தியின் வலை அறுபட்டது.

''இதோ, இந்த மோதிரத்தைப் பார்த்தாயா? இதுபோல் மோதிரமொன்றைச் சரஸ்வதிசந்திரன் அணிந்திருக்கக் கண்டிருக்கிறேன்'' என்றார் அவர். அவர் காண்பித்த மோதிரத்தைக் கண்டதும் சந்திரகாந்தனின் கண்கள் விரிந்தன; அதே மோதிரத்துடன் சரஸ்வதிசந்திரனின் உருவம் மனக்கண்களின் முன்னால் எழுந்தது.

''இது எங்கே இங்கே வந்தது?''—வியந்து போய்க் கேட்டான் சந்திரகாந்தன்.

வித்யாசதுரர் மோதிரம் கொண்டுவந்த அரசாங்க ஹவில்தாரை நோக்கினார்.

''அர்த்ததாஸன் என்ற வணிகனிடமிருந்து இது கிடைத்தது. 'நவீனசந்திரர் என்ற மனிதர் எனக்கு இதை இனாமாக வழங்கினார்' என்று வணிகன் சொல்கிறான். வணிகனைப் பிடித்துச் சோதனையிட்டார்கள், அரசாங்கக் காவலாளிகள்; அவர்கள், 'இது கள்ளச் சொத்தாக இருக்கும்' என்று பம்பாயைச் சேர்ந்த ஹீராலால் என்ற இன்னொரு வணிகனைக் கேட்டபோது, அர்த்ததாஸனின் கூற்று நம்பத் தகுந்ததாக இல்லையென்றும், ஒருவேளை மோதிரத்தின் சொந்தக்காரனை அர்த்ததாஸன் கொலை செய்திருக்கலாம் என்றும் தெரிய வருகிறது.''

''ஹீராலால் என்பவன் யார்?''

''பம்பாயில் தூர்த்தலால் சேட் என்பவரின் ஆள்.''

''தூர்த்தலாலா?''

சந்திரகாந்தன் எழுந்து உட்கார்ந்தான்.

தூர்த்தலாலைப்பற்றி வித்யாசதுரரிடம் விவரமாகக் கூறினான்.

வித்யாசதுரர் மோதிரம் கிடைத்த செய்திபற்றி இன்னும் மேல் விவரங்கள் அறிய முயல்வதாகக் கூறினார்.

''தூர்த்தலால் இன்னும் சரஸ்வதிசந்திரனை விடவில்லையா? அவனைத் தேடவேண்டுமென்று நண்பர்கள் முயல்வதோடு நிற்காமல், எதிரியும் அவனைத் தேடவேண்டுமா?''

சந்திரகாந்தன் சிந்தனையில் ஆழ்ந்து போனான்.

பாகம் நான்கு

1. தாகம்

சுபத்ரா நதி கடலில் சங்கமம் ஆவதற்கு முன்னுல் உள்ள பிரதேசம் வருஷம் முழுவதும் ரமணீயமாகத் தோற்றம் அளிக்கும். எட்டுமாதம் அங்கே மணல்திட்டுக் காட்சியளிக்கும். மழைக்காலத்தில் மணல்திட்டு மறைந்து எங்கும் நீர் வெளியாய் நிறைந்து நிற்கும். அப்போதெல்லாம் நதியில் பெருத்த ஆழம்.

நதிக்கு வடக்கில், ஸுந்தரகிரிக்கு அருகில் பெரியதோர் மைதானம்; தெற்கே மணல் உயர்ந்து பரந்து மலையாகவே தோற்றமளித்தது. நதிக்கு அருகில் உடனே வரும் கரையில் மணல்; பின்னுல் பன்னிரண்டு மாதமும் பசுமையாகக் காட்சி யளிக்கும் புல்வெளி. அதற்குமேல் மரம் செடி கொடிகள்.

மணல் திட்டுக்கு அருகில் கோரைப் புற்களுடன் மூங்கில் மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. மணல் திட்டின் இடையில் சின்னஞ்சிறு குடிலில் சந்நியாசினி ஒருத்தி வசித்து வந்தாள். அவள் தேவி உபாசனை புரிந்துவந்தாள்; அங்கே அம்மனின் சிலைவைத்து வழிபட்டு வந்தாள். யாத்திரை நாட் களிலும் பண்டிகைத் தினங்களிலும் பக்தர்கள் வந்து பூஜை செய்துவிட்டுப் போவார்கள்.

சந்நியாசினி இளமைப் பருவத்தினள்தான். ஆயினும் வைராக்கியம் நிறைந்த வாழ்வானதால் அவள் தூய்மையுடன் ஒளிவிட்டாள். பெண்கள் கிராமத்திலிருந்து வருவார்கள்; போவார்கள். அவர்கள் யாவரும் அங்கே அம்மன் கோயில் முன்னுல் பஜனைக் கீதங்கள் இசைத்துவிட்டே போவார்கள். அப்படியே குமுதசுந்தரி நீரில் மூழ்கின அன்றும், கர்பா நாட்டியத்தில் ஈடு பட்டுக்கொண் டிருந்தார்கள் பெண்கள். அவர்களில் ஒருத்தி நதியில் ஏதோ ஒன்றைப் பார்த்துவிட்டுக் கூவினுள். இசைக்கு நடுவில் அவள் கூறுவதை மற்றவர்கள் அடக்கினுர்கள். மீண்டும் சிறிது நேரத்தில் அது அவள் கண்களில் தென்படவே, ''நீங்கள் என்ன வேண்டுமானுலும் சொல்லுங்கள்; அது ஒன்றும் மீன் போலத் தோன்றவில்லை'' என மீண்டும் கத்தினுள்.

எல்லோரும் கூர்ந்து கவனித்தார்கள். தூரத்தில் மிதந்து வரும் உடல் மீனினது என்று நிச்சயமானவுடன் நீந்தத் தெரிந்த பெண்மணிகள் குதித்து அதை மீட்க முயன்றுர்கள். நான்

கைந்து பேராக இழுத்துக்கொண்டு வந்தபோது அவர்கள் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நின்ருர்கள். வேறு யாருமில்லை - குமுதசுந்தரியேதான்!

சொட்டச் சொட்ட நனைந்த உடையிலிருந்து நீர் வடிந்தது. பேச்சு மூச்சற்றவளாக அவள் நினைவிழந்து கிடந்தாள்.

துஷ்யந்தனுல் கைவிடப்பட்ட பேதையான சகுந்தலை போன்று கணவனின் அன்பும் தயையும் இழந்தவளாய்க் கேட்பாரற்றுக் கிடந்தாள்.

''மதுரிமையா, இந்தத் திட்டிற்கு முன்னுல் பாயும் நீர் அமிர்தத்திற்கு ஒப்பாகும்; இந்த இடத்தைச் சுவர்க்கத்தின் வாயில் என்றே சொல்லலாம். நீ அதன் வழியே வந்திருக்கிருய்; ஆகவே, நீ சாவையே தியாகம் செய்துவிட்டாய் எனலாம்'' என்ருள் சந்நியாசினி சந்திராவளி.

மதுரிமையா என்று அவள் அழைத்தது குமுதசுந்தரியையே ஆகும். சந்நியாசியினிடம் அவள் தன் வாழ்வுத் துயரத்தையெல்லாம் சொன்னுள். சில இடங்களில் உண்மையைச் சொல்ல முடியாமலும், பெயர்களைக் குறிக்க முடியாமலும் போய்விடும் என்பதற்காக முன்னமேயே சந்நியாசினியிடம் மன்னிப்பு வேண்டினுள். சந்திராவளி அவளுடைய துயரத்தைப் புரிந்துகொண்டாள்; பராசக்திமீது நம்பிக்கை வைக்குமாறு அவளிடம் சொன்னுள்.

சந்தியா காலத்தின் சாயை மேலைத் திசையில் வீழ்ந்தது. அதேபோல் குமுதசுந்தரியின் உள்ளத்திலும் அந்தி நேரத்தின் நிழல் படிந்தது. அவள் பேசாது எதிரே அலைவீசும் கடலை நோக்கியவண்ணம் அமர்ந்திருந்தாள்.

''மதுரி, பின்னுல் திரும்பிப் பார், சந்திரனின் உதயத்தை!''

குமுதசுந்தரி திடுக்கிட்டுத் திரும்பினுள். ''பின்னுல் சந்திரனு?'' - ஆமாம், பூரண நிலவு தண்ணொளி எழுப்பியவண்ணம் கீழ்த்திசையில் எழுந்துகொண்டிருந்தது. சந்நியாசினியைப் பார்த்து அவள் பேசினுள்.

''சந்திராவளியக்கா, தமயந்தி நளனது மனத்தைக் கவரத் தெய்வத்தை வேண்டினுளாம். அவரும் என் மனத்தைக் கவர என்னை ஸ்துதி செய்தார். ஆனுல் என்னை என் நலனுக்காகவே கைவிட்டதாகக் கூறுகிருர். என்னவென்று சொல்வது.. அவரை ஸம்ஸாரி என்பதா, யோகி என்பதா?''

குமுதசுந்தரியின் உள்ளக் குமுறலைச் சந்திராவளி அறிந்துகொண்டாள். அவளுடைய மன அமைதிக்காக உபதேசம் செய்துவிட்டு நீங்கினுள்.

நீரின்மேல் நிலவொளி வீழ்ந்து குளிர்நிழல் தந்துகொண்டிருந்தது. சித்திரை மாதத்தின் மாலைக் காற்று மந்தமாருதமாகத் தவழ்ந்தது. அமைதி பொழியும் அந்தச் சூழ்நிலையில் நினைவு அலை பாய்ந்தது.

மாலை மதியம்போல அவள் மாமியாரின் நினைவு வந்தது. 'உங்களுக்கு எவ்வளவு ஏமாற்றம் தந்துவிட்டேன்! என்மேல் நீங்கள் காட்டிய பரிவும் ஆசையும் எவ்வளவு வியர்த்தமாகிப் போயின! நான் அருகதையற்றவளாய் தூற்றலுக்கும் இழுக்குக்கும் இரையாகிப்போனேன். இனி உங்கள் முகத்தை எப்படிப் பார்ப்பேன்?'

அலக் கிஷோரியை நினைந்தாள்; புத்திதனரின் ஆதுரத்தைப் பார்த்தாள். கடைசியில் சரஸ்வதிசந்திரனை மையமிட்டு நின்றது அவள் நினைவு.

'நீங்கள் திரும்பிப் போனீர்களா, இல்லையா? அல்லது எங்கேனும் தண்ணீரில் மூழ்கிப் போய்விட்டீர்களா?'

அப்போது நிலவு நடு ஆகாயத்தில் வந்துவிட்டது. மேகங்கள் மறைப்பதும் அகலுவதுமாக நேரம் கடந்தது. விரைந்து செல்வது போலத் தோன்றும் சந்திரன் உண்மையில் நகர்வது இல்லை, மேகங்கள்தாம் அந்த உணர்ச்சியை எழுப்புகின்றன என்பதை அவள் அறிவாள். அதோ தூரத்தில் பாய்மரக் கப்பல் ஒன்று, நீரின் அலைகளால் மிதப்பதும் எழுவதுமாகச் சென்றுகொண்டிருந்தது.

'என் துர்ப்பாக்கியத்தை என்னவென்று சொல்வேன்? படகும் நிலவும் நீரில் மூழ்கித் தத்தளிக்கும்போது நான்மட்டும் மீண்டேன்! ஏன் நான் மீண்டும் உயிர் வாழவேண்டும்?'

நீரை நோக்கி நடந்தாள். மணல் நீங்கிக் காலடியிலேயே நீர் நின்றது.

'இதோ சற்று முன்னே சென்றால் இடுப்புவரை தண்ணீர்; இன்னும் சிறிது முன்னே போனால் கழுத்தளவு; பிறகு தலைமேல் தண்ணீர். அப்புறம் குமுதசுந்தரி மறைந்தது போவாள். சந்திராவளியின் பிட்சையை உண்ணவேண்டுமென்ற தலை எழுத்து; அது நிறைவேறிவிட்டது. இனி என் மரணந்தான் பாக்கி. அது நிறைவேறட்டும். பகலில் யார் கண்களிலாவது படுவேன்; இரவில் யார் என்னைப் பார்க்கப் போகிறார்கள்!'

குமுதசுந்தரி நடந்தாள். நீர் மெல்ல உயர்ந்தது. பாதம், கால், இடை, தோள், கழுத்து. குமுதசுந்தரியின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஓடியது. ஒவ்வொரு கண்ணீர்த்துளியிலும் சரஸ்வதிசந்திரனின் உருவம் பளிச்சிட்டது.

திடீரென்று எங்கிருந்தோ இசை எழுந்தது. பாட்டு முடியும் வரை நீரில் முழுகவேண்டாம் என்றெண்ணினுள். இனிய இசை நின்றதும் சட்டென்று குரல் ஒலித்தது.

''மதுரி! மதுரி! என்ன காரியம் செய்துவிட்டாய்? இப்படியும் கோழையாகிவிடலாமா?''

நான்கு பெண்மணிகள் ஓடோடி வந்தார்கள். அவர்களைக் கண்டு குமுதசுந்தரி கரை நோக்கி வந்தாள். அங்கே நின்று கொண்டிருந்த சந்திராவளி அவளை வாரி அணைத்துக் கொண்டாள். அவளது மார்பிலே முகம் புதைத்துக் கேவிக் கேவி அழுதாள்.

''நான் என்ன செய்யட்டும்! நான் எங்கே போவேன்? எனக்கு இனி என்ன பாக்கி இருக்கிறது?''

குமுதசுந்தரிக்கு ஆறுதல் கூறினுர்கள்; பெண்கள் எல்லோரும் அவளைச் சூழ்ந்துகொண்டு விதம் விதமாக அவள் மனத்தை மாற்ற வேண்டிப் பேசத் தொடங்கினுர்கள்.

ஆனுல் குமுதசுந்தரியின் மனம்மட்டும் எங்கேயோ ஓடிக்கொண்டிருந்தது. அவர்கள் பேச்சில் அவள் துளியேனும் கலந்து கொள்ளவில்லை.

சந்நியாசினி ஒருத்தி சொல்லிக்கொண் டிருந்தாள்.

''சந்திராவளியக்கா, நம்முடைய குருஜியின் ஆசிரமத்தில் புதிதாக அதிதி ஒருவர் வந்திருக்கிறுராம். குருஜி அவரிடம் மிகுந்த நட்புக் காட்டுகிறுராம்.''

குமுதசுந்தரி உரையாடலில் சற்றே ஈடுபாடு காட்டினுள்.

சந்திராவளி கேட்டாள்: ''பக்தி மையா! யார் அவர், புதிதாக வந்திருக்கும் அதிதி?''

''அவர் பெயர் நவீனசந்திரர் என்கிறுர்கள்.'' - குமுதசுந்தரியின் உடலில் மின்சாரம் பாய்ந்தாற்போன்ற உணர்ச்சி. துடிதுடிக்கும் மார்பை அமிழ்த்தியவாறு கேட்டாள்.

''குருஜி அவரை மனோஹர்புரிக்கருகில் உள்ள ஆரண்யத்திலிருந்து மூர்ச்சையுற்ற நிலையில் எடுத்து வந்தாராம். அதற்குப் பிறகு அவருடைய அறிவுத் திறன்கண்டு குருஜியின் அன்பு பெருகியிருக்கிறதாம்.''

குமுதசுந்தரி பிரமையிலிருந்து நீங்கி விழித்திருப்பது கண்டு, சந்திராவளி அவளிடம் பராசக்தியின் பக்தி மார்க்கத்தைப்பற்றி விவரித்தாள்; அதனுல் மன அமைதி கொண்டாள் குமுதசுந்தரி. பின்னர்ப் பெண்கள் சேர்ந்துகொண்டு துதிப் பாடல்கள் பாடினுர்கள். பின்னர் யாவரும் உறங்கிப்போனுர்கள்.

குமுதசுந்தரி உறங்காதிருப்பது கண்டு சந்திராவளி அவளை நெருங்கி, "என்ன, நீ இன்னும் உறங்கவில்லையா?" என்று வினவினுள்.

"சந்திராவளி யக்கா, காலையில் பக்தி மையாவுடன் யதுச்ருங்கரைத் தரிசனம் செய்ய அநுமதிப்பீர்களா?" என்று கேட்டாள் குமுதசுந்தரி.

அவர்கள் பேச்சினுல் விழித்துக்கொண்ட பக்தி மையா, "சந்திராவளி யக்கா, மதுரியை என்னுடனே அனுப்புங்கள்" என்ருள்.

"ஆனுல், அம்மா, அவளுடைய மெல்லிய பாதங்கள் சிரமத்தைத் தாங்குமோ? மலையுச்சியில் ஏறுவது என்பது கடினமல்லவா?" என்ருள் சந்திராவளி.

"பராசக்தி எனக்கு அந்த அளவு சக்திகூடத் தரமாட்டாளா?" என்ருள் குமுதசுந்தரி.

"அவள் களைத்துப் போனுல் மலர் மொட்டை எடுத்துக் கொள்வதுபோல் அவளை எடுத்துச் செல்வோம்" என்ருள் பக்தி மையா.

சந்திராவளி ஒப்புக்கொண்டாள்.

எல்லோரும் உறங்கிப்போனுர்கள். குமுதசுந்தரி தூக்கத்திலே கனவு ஒன்று கண்டாள். தன்னந்தனியே பராசக்தியின் கோயில் முன்புறத்திலே உட்கார்ந்திருக்கிருள். கடலிலே சூருவளி; புயற் காற்றின் பேயாட்டம்; வானத்தின் குமுறல்; அவ்வளவுக்கு நடுவே கொந்தளிக்கும் கடலிலே சின்னஞ்சிறு படகு. அதில்தான் அவளது உயிர் அடங்கிக் கிடக்கிறது. படகு நீரின் அலைகளால் அடிக்கப்பட்டுக் கரை சேரும்போது அவளுக்கு உயிர் வருகிறது. சட்டென்று படகு நீரின் அலைகளால் இழுக்கப்பட்டு, அங்கே கடலின் மத்தியிலேயே மூழ்கியிருக்கிறது. அப்போது அவளது உயிர் மாய்கிறது. கரையிலே அவள்; கடலிலே படகு. இரண்டும் தத்தளிக்கின்றன. இரண்டிற்கும் இடையிலே, வானத்திலே நிலவு நிற்கிறது. குமுதசுந்தரி பாடுகிருள். அது உள்ளத்துச் சோகமனைத்தையும் ஒலிவடிவாய்க் கடலலைகளிலே கவர்ந்து நீராய் நிறைந்துவிடுகிறது.

2. சரஸ்வதிசந்திரன் கண்ணீர்

சரஸ்வதி சந்திரன் விஷ்ணுதாஸ ஸ்வாமியை மனம் மகிழச் செய்யவேண்டும் என அங்குள்ளவர்கள் அணியும் முறையில் வஸ்திரமும் தலைப்பாகையும் அணிந்துகொண்டான். அன்று மடத்தில் வழிபாடு முடிந்தபிறகு சரஸ்வதிசந்திரனை விஹார

புரியும் ராதேதாஸரும் அழகான காட்சிகளைக் காண்பிக்க அழைத்துச் சென்றார்கள். மலையுச்சியிலிருந்து கீழே சமவெளியில் காட்சியளித்த நீர் நிரம்பியதோர் இடத்தைக் காட்டி உடன் வந்தவர்களை விசாரித்தான் அவன்.

''நாம் நல்ல உயரத்திலிருந்து கீழே பார்க்கிறோம். மலைக்கும் ரத்னநகரிக்கும் இடையே நீ பார்க்கும் இடம் ஏரியோ குளமோ அல்ல; அது பெரியதோர் மணல் நிறைந்த மைதான வெளி; நீ காண்பது வெறும் கானல் நீர்தான்!

''இது ஒரு பொய்யான தோற்றந்தானா? நான்கு கரைகளையும் மோதுகின்ற நீர்ப்பரப்பு என்றல்லவா நினைத்தேன்!''

''எல்லாமே பொய்யான தோற்றந்தான். இந்தப் பொய்யான நீருக்கு எவ்வளவு மிருகங்கள் ஓடோடி வருகின்றன; நீர் காணாது தாகத்தால் வருந்தி மடிகின்றன.''

எல்லோரும் பாறைமீது அமர்ந்தார்கள். சரஸ்வதிசந்திரனின் பார்வை கானல் நீர்மீதே நிலைத்துநின்றது.

'செல்வமும் கானல் நீர்தான்; என் மனத்தில் குடிகொண்ட குமுதசுந்தரியின் வடிவம் கானல் நீர்தான். இரண்டும் எவ்விதம் பொய்யாகி மறைந்தன!

'குமுதா, நீ இப்போது எங்கே இருக்கிறாய்? குமுதா, சந்திரகாந்தா! கேவலம் ஒரு வாழ்வு, ஓருயிர் மற்றவர்கள் வாழ்க்கையை எப்படித்தான் துயரத்தில் மூழ்கடித்துவிடுகிறது! என் துயரம் மற்றவர்களையும் எப்படிப் பாதித்துவிட்டது! இறப்பவர்கள் தாங்கள் விட்டுப் பிரிகிற மனிதர்களை வருத்தத்தில் மூழ்கடிப்பது போல இயற்கையாக மரணம் அடைபவர்களுக்கு அந்தப் பாவம் சேருவதில்லை. ஆனால் தற்கொலை செய்து கொண்டு மாய்கிறார்களே, அவர்களிடத்தில் இந்தப் பாவம் அவசியம் சேர்கிறது. நான்மட்டும் என்ன? தற்கொலைக் கொப்பான ஆத்ம தியாகம் செய்துவிடவில்லையா?

'நற்பயனுக்காகச் செய்யும் ஆத்ம தியாகம் புண்ணியச் செயலே ஆகும். நான் செய்த ஆத்ம தியாகம் நற்செயலாகுமா? இந்த உடலுடன் ஓர் ஆத்மாமட்டுமல்லவே, இன்னோர் ஆத்மாவுமல்லவா உறவு கொண்டிருந்தது! இது விசுவரூப சரீரமல்லவா? இது என்னுடைய சரீரம்மட்டுந்தான், பிறர் சரீரமல்ல என்று எப்படிக் கூறமுடியும்? இந்தச் சரீரம் குடும்பத்தின் அம்சத்துடன் கூடிய சரீரம். குமுதசுந்தரியுடன் உறவாட முயன்றபோது அது தாம்பத்திய ரூபம் பெற்றது; இதில் தேசத்தின், மனிதகுலத்தின் அம்சம் இருக்கிறது. நான் செய்தது ஆத்ம தியாகம் என்று எப்படிக் கூறமுடியும்? ஆத்மா என்பது அமரத்துவம் வாய்ந்தது. அது எங்கேயும் நிறைந்து வாழக்கூடியது. பிறப்பு என்னும்போது

ஒருடலின் எல்லேக்குள்ளே இருந்து வாழ்கிறது..சரஸ்வதி சந்திரா, நல்ல காரியத்திற்காக நீ செய்தது தீய செயலல்லவா?'

சரஸ்வதிசந்திரன் எழுப்பிய பிரச்னே அவனது மூளையைத் திக்கு முக்காடச் செய்தது.

''பம்பாய் நகரின் கல்விமான்கள், தலேவர்கள், கவிஞர்கள், தேசசேவகர்கள், தந்தையின் செல்வம், சந்திரகாந்தனின் நட்பு, குமுதத்தின் நேசம் - யாவற்றையும் இழந்து அவர்கள் யாவரையும் துயரத்தில் மூழ்கடித்தேனே! அந்தக் கோலாகலத்திலிருந்து எவ்வளவு விரைவில் பாதாளத்தில் அமிழ்ந்து போனேன்! முதல் பாதாளம் புத்திதனரின் ஸ்வர்ணபுரியில்; இரண்டாவது அவரது அரசாங்கத்தில்; மூன்ருவது அவரது இல்லத்தில்; நான்காவது கொள்ளேக்காரர்களிடையில்; ஐந்தாவது வனுந்தரத்தின் காரிருளில் - ஐந்து பாதாளங்களிலும் அமிழ்ந்து எழுந்து விட்டேன். இதோ, ஆருவது பாதாளத்தில்! இன்னும் என்ன பாக்கியிருக்கிறது? பெரியதொரு கருநாகத்தின் வயிற்றில் நுழைந்து மீளுவது போலல்லவா இது? கங்கையில் விழுந்து போன சீதையைப் பவபூதி மீட்டு, அவளுக்குக் கங்கையின் வனப்பையும் கானகத்தின் எழிலேயும் காட்டினுர். எனக்குக் கிடைக்கப் போவது எதனுடைய காட்சி?''

அங்கே பறந்துவந்த கடிதத்தின் துண்டு அவனது காலடியிலே சிக்கி அவனே வியப்பில் ஆழ்த்தியது.

'சந்திரகாந்தனுக்கு வந்த கடிதம்போல் அல்லவா தோன்றுகிறது? கையெழுத்தும் புல்வர் துரையின் கையெழுத்துத்தான். இது என்ன விந்தை!'

சிந்தனேயிலிருந்து விடுபட்டு விஹாரபுரியை வினவினுன்: ''இது எங்கேயிருந்து வந்தது?''

''நவீனசந்திரா! நான்கு நாட்களுக்குமுன் சாது ஜனங்கள் கீழே சமவெளிக்குப் போனபோது ரத்னநகரியிலிருந்து பத்ரேசுவரம் செல்லும் மார்க்கத்தில் ஒரு காகிதக்கட்டைக் கண்டெடுத்தார்கள். அந்தக் கட்டை இங்கே ஆசிரமத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதிலிருந்துதான் இந்தக் காகிதம் வந்திருக்கவேண்டும்'' என்ருர் சாது.

அந்தக் காகிதக் கட்டைப் பார்க்கவேண்டும் என்று சரஸ்வதி சந்திரன் கேட்டுக்கொண்டான். அதன்படி விஹாரபுரி கொண்டு வந்து கொடுக்கவே சரஸ்வதிசந்திரன் காகிதங்களேப் படிக்கத் தொடங்கினுன். அதிலிருந்து சந்திரகாந்தன் தன்னேத் தேடுவதற்காக ரத்னநகரி வந்தடைந்தான் என்பதை அறிந்துகொண்டான்.

விஷ்ணுதாஸர் தம் சாதுக்களுடன் மலேயினின்றும் இறங்கிக் கீழே வந்து தமது அலக்வாதப் பிரசாரத்திற்காகச் சென்ற போது, தனிமையில் விடப்பட்ட சரஸ்வதிசந்திரன் கடிதங்களேப் படிக்கத் தொடங்கினுன்.

கொள்ளேக்காரர்களால் தாக்கப்பட்ட சந்திரகாந்தனின் கடிதக்கட்டுக்கள்தாம் அவை. அவர்களுக்கு அவை தேவை யற்றனவாக இருந்ததால் எறிந்துவிட்டுப் போயிருந்தார்கள்.

சந்திரகாந்தன் ஆருயிர் நண்பனுக இருந்தபோதும், அவன் தனது துயர வாழ்வைப்பற்றி ஒரு சமயங்கூட எடுத்துச் சொன்னதில்லே. சுகமயமான வாழ்வில் தனது துக்கத்தைச் சேர்க்க விரும்பவில்லே. சந்திரகாந்தனின் கடிதக் கட்டின்மூலம் முதன்முதலாக அதைப்பற்றி அறிந்துகொண்டான்; நண்பனின் குடும்பக் கிலேசத்தைப்பற்றித் தெரிந்துகொண்டான். சரஸ்வதி சந்திரனின் கண்களிலிருந்து நீர் வழிந்தது. கடிதத்தைப் படித்தான்:

'' பிரிய சந்திரகாந்தா,

நீ சரஸ்வதிசந்திரனேத் தேடக் கிளம்பியது கங்கா அண்ணியைத் தவிர வீட்டில் எவருக்கும் பிடிக்கவில்லே. பம்பாயில் ஆகும் செலவும், நாம் நியாயமான முறையில் பெறும் சம்பாதனேயும் பாம்பும் எலியும் போலத்தான். 'சரஸ்வதிசந்திரன் நம் குடும்பத்திற்கு என்ன செய்துவிட்டான்? அவனுக் காக நீ இவ்வளவு செலவு செய்துகொண்டு ஏன் அவனேத் தேடவேண்டும்?' என்கிருள் உன் தாய். நீ அப்படிச் சென்றுவிட்டதால் உன் சம்பாதனேயும் போய்க் குடும்பத்திற்கு வருவாயும் குறைந்துவிட்டது என்று உன் தாய் குறைப்படுகிருள். வருவாய்க்கும் செலவுக்கும் சரிக்கட்ட முடியாமல் திணறுகிருர்கள். செலவைக் குறைக்க முயன்று துன்பப்படுகிருர்கள்.

நீ இதற்காக ஏதாவது செய்தாக வேண்டும். அவர்களுக்கு ஏதாவது மார்க்கத்தைக் காட்ட வேண்டும்.

நான் உன்னேப்போல் படித்தவனில்லே. ஆனு லும் உனக்கு நான் இதைச் சொல்ல வேண்டும் என் பதற்காக எழுதுகிறேன்.

உன் அன்புள்ள நண்பன்,
சம்சாரிலால்.''

கடிதத்தின்மேல் சந்திரகாந்தனின் குறிப்பையும் கண்டான்.

''சந்திரகாந்தக் கல் சந்திரனைக் கண்டு உருகத் தான் செய்யும் என்பதை ஏன் இவர்கள் அறிய மறுக்கிறார்கள்? பொருளைத் தேடிச் செலவை மீட்பது பெரிய ஓட்டமாகும். ஆத்மானந்தந்தான் பெரும் ஆனந்தம்.''

கடிதத்தை மூடிவிட்டு இன்னொரு கடிதத்தை எடுத்தான். சந்திரகாந்தனின் மனைவி கங்கா எழுதியிருந்தாள்:

''தங்கள் கடிதம் கிடைத்தது. தங்களைப்பற்றிப் பேச்சு எழும்போதெல்லாம் ஒரே மனத்தாங்கல்தான்; அதற்கெல்லாம் பதில் கொடுத்துக் குடும்பத்தை நடத்தி வருகிறேன்.

சரஸ்வதிசந்திரரைத் தேடப் போயிருக்கிறீர்கள்; தேடியே கொண்டு சேருங்கள். திரும்ப ஓடி விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்காக என்னுடைய உதாரணத்தையே சொல்லுங்கள்—நல்ல மங்களமான மனைவி வீட்டைப் பார்த்துக்கொள்வாள், மகிழ்ச்சி தருவாள் என்று. அப்பாவின் குற்றத்துக்காக எல்லா ஆண்பிள்ளைகளும் ஓடிப் போனால் பெண்கள் கதி என்ன ஆவது? எப்போதும் குமாரிகளாகவே இருக்க வேண்டியதுதான்! இப்படி வீட்டைவிட்டுப் போய் ஒரு பெண்ணைக் கதறக் கதறச் செய்வது எந்த வக்கீல் செய்கிற நியாயமாம்?''

தன்னை அறியாமல் சிரித்தான்; கங்கா அண்ணியின் கடிதம் சரஸ்வதிசந்திரனது துயரை மறக்கடித்தது.

'அண்ணி, என்னால் உங்களுக்கும் எவ்வளவு துயரம்! கணவன் என்னைத் தேடி அலைகிறான்; குடும்ப சுகமும் அமைதியும் எவ்விதம் தங்களுக்குக் கிட்டாமல் போய்விட்டது. நானல்லவா அதற்குக் காரணம்? என்னால் யார் யாருக்கெல்லாம் இன்னல் ஏற்படுகிறது. சந்திரகாந்தா, நீ பாக்கியசாலிதான். ஓர் அருமையான மனைவி கிடைத்திருக்கிறாள். அவள்தான் உனக்கு எவ்வளவு சாந்தி தருகிறாள்!

'பெண்ணின் பெருமையே பெருமை! குமுதசுந்தரி, உன்னைத் தியாகம் செய்ததால் பெண்குலத்திற்கே தீங்கு செய்துவிட்டேன்; எவ்வளவு பெண்மணிகளுக்கு இதனால் அல்லல் ஏற்பட்டிருக்கிறது! உன் துயரத்தால் பெண்குலமே துயருற்றிருக்கிறது.'

சரஸ்வதிசந்திரன் இன்னொரு கடிதத்தை எடுத்தான். இது கவிஞர் தரங்கசங்கரரின் கடிதம்:

"உனக்கு உன் மனைவியும் நண்பனும் எழுதிய கடிதங்களுக்குமேல் நான் ஒன்றும் புதிதாகச் சொல்லப் போவதில்லை. உன்னுடைய குடும்பத்தார் அனைவரும் சுயநலக்காரர்கள்; நீ செய்தது அவர்களுக்கு நியாயமெனத் தோன்றாதபோது எங்கிருந்து உன்மேல் இரக்கம் வரும்? எனக்கும் இதே நிலைதான்; ஒரு காலத்தில் இந்த மாதிரி நிலை வேறெவருக்கும் வராது என்று நினைத்தேன்; வீட்டுக்கு வீடு வாயிற்படியாக இது நடந்து வருகிறது. இதை அறிந்து கொண்டுதான் சரஸ்வதிசந்திரன் வாழ்வைத் தியாகம் செய்தான். ஆனால் சிவபெருமானைப் போன்று வாழ்வை ஸ்மசானமாகக் கருதி உண்மை ஆனந்தத்தில் வாழ்பவர் மிகக் குறைவு; சுயநலமின்றி வேறு எதுவும் இந்த உலகத்தில் கிடையாது. ஆகவேதான் மனிதர்கள் கவிஞனின் கனவுகளான காவியங்களில் மனத்திருப்தி காண்கிறார்கள். இந்தத் திருப்தி வெறுங் கனவுதான்."

அந்தக் கடிதத்தின்மீது சந்திரகாந்தனின் குறிப்பைக் கண்டான்.

"கவிராஜரே, குடும்பத்தில் ஒருவருக்கும் நிர்மலமான பிரியம் கிடையாது என்கிறீர்கள்: ஒவ்வொருவர் அன்பிலும் சுயநலம் கலந்திருக்கிறது என்கிறீர்கள். உண்மை; ஒப்புக்கொள்கிறேன். பெருந்தன்மை ஸ்வயம்பூவைப் போன்றது. அதில் நாம் நித்தம் காணும் பாசமும் நேசமும் இருப்பதில்லை. எவர்க்கும் அது எளிதில் கிடைப்பதில்லை. அது அப்படியாயின், அறிவற்ற என் குடும்பத்தாரிடம் அந்தப் பெருந்தன்மையை எப்படி எதிர்பார்க்க முடியும்? அவர்களுடைய அன்பில் தோய்ந்திருக்கும் சுயநலத்தைப் பிரித்து மறைந்துள்ள பெருந்தன்மையைப் பெறுவதில்தான் வாழ்வின் உண்மையான மார்க்கம் இருக்கிறது."

சரஸ்வதிசந்திரன் சிந்தனையில் மூழ்கிப்போனான்:

'சந்திரகாந்தா! தரங்க சங்கர்! வீட்டுக்கு வீடு நிகழும் சித்திரத்தைத் தந்திருக்கிறீர்கள். இதனால் உலகத்தின் அமைதியே குலைந்து விடுகிறதல்லவா? இந்த அமைதியை மீண்டும் எப்படிப் பெறுவது?

'உத்தமமான பொருளை இழந்துவிடுவதால் குடும்பநலம் உயர்ந்துவிடுமா? அதைத் தவிர வேறு வழி ஏதுமில்லையா? இதோ நான் குமுதசுந்தரியை இழந்து நிற்கிறேன். இதனால்

நான் என் குடும்பத்தை மகிழவைத்தேனு? அதனுல், குமுத சுந்தரிக்குமல்லவா துயர் அளித்தேன்!

'குமுதா! ஒரு நாள் என் இன்பமான கனவில் நீ நிறைந்து என்னை மகிழ்வித்தாய். இன்றோ என் சோகக் கனவில் நீ நிறைந்து என்னைத் துயருறச் செய்கிருய்!

'இந்தக் கனவு மாயைகளைக் களைந்து நான் பிராயச்சித்தம் செய்வேன். என் சகல மகிழ்ச்சியையும் கொடூரமாகத் தியாகம் புரிந்தேன். அதைப்பற்றிக் கவிதை புனைந்து உனக்கு அனுப்பி வித்தேன். ஒரு நாள் உனது மன்னிப்பை வேண்டி நேரே வருவேன்.

அமைதியடைந்து இன்னொரு கடிதத்தை எடுத்தான். 'குர்ஜர வார்த்திக்' பத்திரிகை ஆசிரியர் உத்தத்லாலின் கடிதம் அது:

''பிரிய சந்திரகாந்தா,

உன் கடிதம் கிடைத்தது. நம் நண்பன் சரஸ்வதி சந்திரன் நம் செயல்கள், எண்ணம் அனைத்திலும் பரவியிருந்தான். நாட்டில் இன்று அறிஞர்கள் தேவை; தேசபக்தர்கள் தேவை; ஞானிகள் தேவை; செயலாற்றுபவர்கள் தேவை; சீர்திருத்தக்காரர்கள் தேவை. இதுமட்டுந்தானு? எல்லாச் சீரிய குணங் களும் ஒரே இடத்தில் இருக்கவேண்டும். ஆனுல் உண்மையில் எப்படி! செல்வனுக இருந்தால் அவனிடம் பரோபகார சிந்தை இருப்பதில்லை; கல்வி மானுகவும் அவன் இருப்பதில்லை. என்ன பயன்?

ஆகையால் அப்படிப்பட்ட சில புருஷர்களின் தேவை இன்றைய சூழ்நிலையில் மிகமிக அதிகம். நமது பாக்கியம், லக்ஷ்மீநந்தனரின் குடும்பத்தில் எல்லாம் அமையப்பற்ற சரஸ்வதிசந்திரன் பிறந்தான். நமது துரதிருஷ்டம் அவன் நம்மிடமிருந்து கண்காணுமற் சென்றுவிட்டான். குமுதசுந்தரி போன்ற ரத்தினங் களும் கிடைப்பது துர்லபம். அந்த மனித ரத்தினமும் பெண் ரத்தினமும் இணைந்திருந்தால் அது எத்தகைய பெரும் யோகமாகும்? குடும்பக் கிலேசம் மிக்க நமது வாழ்வில் அத்தகைய யோகம் சித்தி பெறவில்லை. நீ மீண்டும் சரஸ்வதிசந்திரனைத் தேடிப் பெற்ருலும் குமுதசுந்தரி கிடைக்கமாட்டாள்; அந்த யோகம் போனது போனதுதான். பெண்கள் முன்னேற்றத் திற்கான மகத்தானதோர் வாய்ப்பை இழந்துவிட்டுத் தரித்திரர்களாக நிற்கிருேம்.

வாழ்க்கைச் சீர்திருத்தத்தை எடுத்துக்கொள். பால்ய விவாகத்தை என்று நிறுத்தப் போகிறோம்? விதவைகளின் கண்ணீரை எப்போது துடைக்கப் போகிறோம்? பெண்களுக்கு எப்போது கல்வி புகட்டப் போகிறோம்? பணத்தைச் சேர்த்துக் குவித்துப் பயனடையாமல், நன்றாகச் செலவழித்து மேற்கு நாடுகள் ஒப்ப எப்போது கல்வி ஞானம் பெறப் போகிறோம்? இந்தச் சீர்திருத்தம் யாவும் எப்போது நிறைவேறும்? நம்முடைய தற்காலக் கூட்டுக் குடும்ப வாழ்வைச் சிதைத்தால்தான் நமக்கு விமோசனம் ஏற்படும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் விவாகம் செய்து கொள்ளவேண்டும் என முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள். விவாகம் ஆனவுடன் மகன் மனைவியுடன் நேசமாக இருந்தால் தாய்க்கு இது பொறுப்பதில்லை. தனது பிரியத்தில் பங்கு கேட்க வந்து விட்டாள் மருமகள் என மாமியார் விரோதம் பூணுகிறாள். இதுதான் இன்றைய குடும்பப் பூசல். இதனால் யாருக்கு என்ன பலன்? ஜாதி, குடும்பம் ஆகியவற்றின் அபிமானம் என்பது கடந்த காலத்தின் அறிகுறி. இன்றைய யுகத்தில் தேசாபிமானமே தேவை. நமது குடும்ப சுகம், தேசத்தின் சுகத்தை யொட்டியோ, சமூகநலனைச் சார்ந்தோ இருக்க வேண்டும்.

பிறந்த குழந்தைக்குக் கல்வி புகட்டத் தந்தை செய்யும் செலவும், அன்னை அதற்குப் பால் தந்து ஆளாக்குவதும் ஒன்றே ஆகும். தானே தோற்றுவித்த குழந்தைக்குப் பால் தருவதும் நட்ட செடிக்கு நீருற்றி வளர்ப்பதும் ஒன்றே. தண்ணீர் விடுவதும், விதை விதைப்பதுடன் கூடிய செயலே. ஆனால் வளரும் குழந்தையுடன் சத்துரு பாவம் கொண்டு, பின்னர் அதே குழந்தை இறந்துபோனால் கண்ணீர் விடுவது எந்தப் பிரியத்துடன் சேரும்? வெறும் சாம்பலை அக்கினியென்று அழைக்கிறோமா? லக்ஷ்மீநந்தனரின் செயல் இதைப்போலத்தான்.

சரஸ்வதிசந்திரனைத் தேடும் முயற்சியில் ஒரு வேளை வெற்றி பெறுவாய்; ஆனால் அவன் பம்பாய் திரும்பி வர மறுத்துவிட்டால் அதன் காரணத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கடிதம்.''

கடிதம் சரஸ்வதிசந்திரனை வியப்பில் ஆழ்த்தியது. ஸ்தம்பித்து நின்றான். சந்திரகாந்தனின் குறிப்புகளைப் படிக்க ஆரம்பித்தான்:

"பிரிய உத்தமனே! நீங்கள் சித்திரித்திருக்கிற வாழ்க்கைமுறை பொய்யல்ல; ஆனால் அரைகுறைச் சித்திரம் அது. சமூகச் சீர்திருத்த வேகம் தடைப் படக் காரணம், நமது குடும்பத்தின் குறைபாடுகள் என்று குறித்திருக்கிறீர்கள்; அது மிகவும் உண்மை. குடும்பபாரம் தாங்கும் ஸ்திரீ புருஷர்களின் சுகத்திலே தான் குடும்ப சுகமும் பொருந்தியிருக்கிறது என்று அவர்கள் உணர்ந்தால்மட்டுமே நீங்கள் சொல்லும் செயல் முறைகளை அநுசரிக்க முடியும்.

கல்வி ஏன் பெருகவேண்டும், எப்போது பெருகும் என்பதை நீங்கள் அறிவீர்கள். கல்வி பெருகினால் சிந்தனை வளர்கிறது. கல்வியில்லாமல் சிந்தனை வளர்ந்தால் அது இயற்கையான புத்தி அல்லது அநுபவம் எனலாம். நம்மிடையே குடும்பத்தவர் களின் விசுவாசத்தை வளரச் செய்வது நமது கடமை யாகும்; குணசுந்தரி போன்றவர்களின் கடந்த வாழ்வைப்பற்றிக் கேள்விப்பட்டேன், அவர்கள் வாழ்வின்மூலம் சாத்துவிகம், தூய அன்பு, பெருந் தன்மை ஆகியவை இயற்கையாக வளர்கின்றன; அத்தகைய குணங்கள் துர்லபம் அல்ல என்று கூற விரும்புகிறேன்.

கூட்டுக் குடும்பம் மனித வாழ்வின் இன்னல் களைத் தாங்க உதவுகிறது. குடும்ப வளர்ப்புக்கு உறுதியாய் உதவுகிறது. நமது குடும்பம் ஓர் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிபோல் இயங்குகிறது என்று சொல்லுவேன்; அப்போது கூட்டுக் குடும்பத்தின் நன்மைகளை உணரமுடியும்.

குடும்ப வாழ்வு கோட்டை கொத்தளம் போன்று அடைக்கலம் அளிக்கிறது. கூட்டு வாழ்வால் பத்திரமான சூழ்நிலை ஏற்படுகிறது. அத்தகைய குடும்பத்தில் எவரும் வெறுமனே உட்கார்ந்திருப்ப தில்லை. ஒவ்வொருவரும் தம்தம் செயலைச் செய் கிறார்கள்.

'நம் குடும்பங்கள் தேசநலனுக்கு இடையூறாக இருக்கின்றன' என்ற தங்கள் கருத்தை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. சோஷலிஸ்டுகள் கூறுகிற கூற்றின் சூட்சுமத்தை நமது குடும்ப வாழ்வில்

காண்கிறேன். வருவாய், குடும்பத்தாரனைவருக்கும் பேதம் இல்லாமல் செலவழிக்கப்படுகிறது. அவர்கள் நலனுக்காக, முன்னேற்றத்திற்காக, பாகுபாடுகள் இல்லாமல் சமநிலையில் வருவாய் பயன்படுத்தப்படுகிறது. எனது குடும்பத்தின் மேலுள்ள அன்பு என் தேசத்தின் மீதுள்ள அன்பையே காட்டுகிறது. இரண்டும் தனிப்பட்ட பொருள்கள் அல்ல; இரண்டும் ஒன்றே.

ஆங்கில ஞானம் தனிக் குடித்தனச் சுதந்தரத்தைப்பற்றிய - அதன் பெருமையைப்பற்றிய - அறிவைத் தருகிறது. ஆகவேதான் இன்று இரண்டு விதமான கொள்கைகளிடையுள்ள பூசல் குடும்பப் பூசலை ஏற்படுத்தி யிருக்கிறது. நம் பெரியவர்கள் பழையகாலக் கூட்டுக் குடும்பக் கொள்கையை அநுசரிக்கிறார்கள். இளைஞர்கள் புதிய தனிச் சுதந்தர வாழ்வில் ஈடுபாடு காட்டுகிறார்கள். இரண்டும் ஒன்றுக்கொன்று ஒவ்வாமல் இருப்பதாலேதான் இன்றைய பூசல்களைக் காண்கிறோம்.''

சரஸ்வதிசந்திரன் அக் கடிதங்களைப் படித்து மெய்ம் மறந்து நின்றான். அற்புதமான கடிதங்கள்; தெளிவான சிந்தனை; அழகான உரை நடை.

''எத்தகைய சந்திரகாந்தர்கள் குடத்துள் இட்ட விளக்காக விளங்குகிறார்கள்! கலைவாணியும் திருமகளும் ஒரு நாளும் சேர்ந்திருப்பதில்லை என்பது உண்மைதானா? கல்விப் பயன்பெற்ற சந்திரகாந்தனின் ஞானம் எத்தகைய ஞானம்! சலசலக்கும் கங்கையின் பிரவாகம் போன்றல்லவா இருக்கிறது, அவன் சிந்தனையின் வேகம்! சந்திரகாந்தனின் அமைதியான அறிவு குடும்ப யக்ஞத்தில் தீ வளர்க்கிறது. உத்தத்லாலின் அறிவோ குடும்ப வலைகளையும் சிக்கல்களையும் அறுத்துப் புரட்சியில் ஏறுநடை போடுகிறது. தரங்கசங்கர் பெண்களிடம் பரிவு காட்டுகிறார். குடும்ப வாழ்வை அவர் புறக்கணிக்கவில்லை. கவிஞன் எப்போதும் கனவுலகத்தில் சஞ்சரிக்கிறான் என்பது உண்மைதான்.''

சரஸ்வதிசந்திரன் எழுந்து நின்றான்.

''இந்தச் சிந்தனையெல்லாம் உன் பொருட்டுத்தானே! நீ செய்த செயலால்தானே அவர்கள் இந்தக் கடிதங்களை எல்லாம் வரைந்திருந்தார்கள்! இதோ தேசத்தின் தசையைக் கண்டுவிட்டாய். இதோ பம்பாய் திரும்பி வீடு செல்; தனநந்தனனிடம் கொடுத்த செல்வத்தை மீண்டும் பெற்று, உடுத்திருக்கும் உடையைக் களைந்து வாழ்வில் மீண்டும் ஈடுபடு.

''கொடுத்த செல்வத்தை மீண்டும் கேட்பது பர்வச் செயலாகும். எதன்மூலம் தேசசேவை செய்ய முடியுமோ, அது போய்விட்டது. ஆகையால், இனி இருப்பதன்மூலம் வழி தேடவேண்டும். எடுத்த பிரதிக்ஞையை இனிக் கைவிடக்கூடாது. துக்க குண்டத்தில் உன்னை இட்டுப் பிராயச்சித்தம் செய்து துறவறம் பூண்டுவிட்ட இதே தர்மம் யோக்கியமானதேயாகும். இதன்மூலமே இனிச் சேவை செய்.

''இதற்காக நான் வீடு ஏன் செல்லவேண்டும்', என் பிரதிக்ஞை ஏன் உடைபடவேண்டும்? என் பிராயச்சித்தம் பிரதிக்ஞை மூலமாகவே நிறைவேற வேண்டும்.

''சந்திரகாந்தா! பம்பாயை விட்டு நான் புறப்படுகையில் தேசநலனும் சமூகநலனும் ஆத்மநலனும் செல்வம் இல்லாமல் அடையக்கூடியவை என எண்ணிப் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டேன். அதை நிறைவேற்றுவேன்.

''சந்திரகாந்தா! என்னை மன்னித்துவிடு. குமுதசுந்தரியின் மன்னிப்புக் கிடைக்கும்வரையில் தபோமயத் துறவறம்; பின்பு அமைதியுடன் கூடிய துறவறம். அமைதியுடன் கூடிய துறவற நாட்களில் செல்வமின்றித் தேசநலனும் சமூகநல்னும் சித்தி பெறத் தொண்டு புரிவேன்.''

3. குஸுமசுந்தரி

''வளரும் குஸுமசுந்தரியின் எதிர்காலம்பற்றிய சிந்தனைகள் எப்போதும் தாய்க்கு இருந்துவந்தன. ஆனால் தற்போது தன் மூத்த பெண் குமுதசுந்தரிக்கு நேர்ந்த இன்னல்கள் அவளது சித்தத்தைக் கலக்கியிருந்தன. அபலை குமுதசுந்தரியின் தூய உள்ளத்தை உணர்ந்து பாராட்டிச் சுகித்திருக்கப் பிரமாத தனனுக்குக் கொடுத்து வைக்கவில்லையே! எவ்வளவு அறிவற்ற கணவன் அவளுக்குக் கிடைத்தான்! இதோ, தீவிர அறிவு பெற்ற குஸுமசுந்தரிக்கு எங்கிருந்து தகுந்த கணவன் கிடைப்பான்?—இரண்டு துக்கங்களுக்கிடையே ஊசலாடினுள் குணசுந்தரி.

மகாராணியின் தோட்டத்திலிருந்து திரும்பின குணசுந்தரி சிந்தனையில் மூழ்கியிருந்தாள். பெண்ணின் துர்ப்பாக்கியம், அவள் கணவனின் அறிவற்ற செயல்கள் எல்லாவற்றையும் எண்ணித் துக்கித்துப் போனுள். 'பிரமாததனு, நற்குணங்களை அறிந்து பாராட்டி மனம் மகிழக்கூட உனக்கு அறிவில்லையா? என்னுடைய மடமையை என்னவென்று சொல்வது? நதியின் நீரைக் கடல்நீரில் கலந்து சுவையைக் கெடுத்து-

விட்டேனே! எத்தகைய பாவச்செயல் புரிந்துவிட்டேன்! அறிவற்ற கணவனைத் தேடிக் கொடுத்த பாவம் என்னையல்லவா சேரும்! பேதை குமுதசுந்தரிக்கு என்னால் எவ்வளவு துயரம் நேர்ந்துவிட்டது!' - அவள் கண்கள் நீரைச் சொரிந்தன.

தோட்டத்திலிருந்து கிளம்பியபோது குஸுமா சொன்ன மொழிகள் நினைவுக்கு வந்தன; அவளது கவலையை இன்னும் தூண்டிவிட்டன. கவலையை மறக்கவேண்டித் தனது மாளிகையின் பூங்காவில் நுழைந்தாள். திவான் வித்யாசதுரரின் மாளிகை நகருக்கு வெளிப்புறத்திலே பெரியதோர் உத்தியானத்தினுள் அமைந்திருந்தது. உத்தியானத்தில் மகளுக்கென எல்லா வசதிகளும் செய்திருந்தாள். அவள் படிக்கவும், களைப்புறவும் நிழல் கவிந்த மரங்களுக்கிடையில் நாற்காலியும் மேஜையும் போட்டிருந்தார்கள்; மரத்தின் கிளையிலே ஊஞ்சலும் கட்டப்பட்டிருந்தது. குஸுமசுந்தரிக்கு முன்னால் அதே சூழ்நிலையில் குமுதசுந்தரி வளர்ந்து வந்தாள். குமுதம் புக்ககம் சென்ற பிறகு தாயின் பொறுப்புக் குறைந்தது; ஒரே பெண் குஸுமா, தாயின் கவனம் முழுதிலும் நிறைந்து நின்றாள்.

பூங்காவின் பலகணியின் வெளியிலிருந்து தாய் மகளைக் கவனித்தாள். மகள் பூங்கொடியென வளர்ந்து உயர்ந்திருந்தாள். அள்ளிப் பருக ஆசை தரும் அழகு; நீண்ட கரிய கூந்தல், கருமேகக் குவியல் நிலத்தில் வந்திறங்கினாற்போன்று காட்சியளித்தது.

''ஹே பிரபு! இவளுக்கு எந்தக் கணவனை நிச்சயித்திருக்கிறாய்?''

பின்னால் ஸுந்தரகௌரி வந்து நின்றாள். ''சந்திரகாந்தன் தமது அறையில் சோகமே உருவாகி உட்கார்ந்துகொண்டிருக்கிறார்'' என்றாள்.

குணசுந்தரியும் ஸுந்தரகௌரியும் சந்திரகாந்தனின் அறைக்கு நடந்தார்கள். தனக்குள் அவன் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டதும் அவர்கள் நின்றார்கள்.

''ஒரு முறை உனக்கு மணமுடிக்க நிச்சயித்தபடி நடந்திருந்தால் நல்லது. இனி மறுமுறை உனக்குத் திருமணம் எங்கே நிச்சயிக்க முடியும்?''

''இதைக் கேட்பதால் நமக்கும் துயர்; அவனுக்கும் வருத்தந்தான். சரஸ்வதிசந்திரன் அகப்பட்டால் குஸுமசுந்தரிக்கான கணவனைத் தேடும் கவலை போகும் என்று நினைக்க முடியாது. ஒருவரிடம் குறையிருந்தாலே கடினம்; இரண்டு பேரும் வக்கிரமாக இருந்தால் மிக மிகக் கடினம். சரஸ்வதி சந்திரனை நமது குடும்பத்தில் ஒருவனாகவே கருதுகிறோம்;

அதனால்தான் அவனைத் தேடுவதற்கான முயற்சியில் நாம் உதவுகிறோம். அதைத் தவிர வேறு எந்த எண்ணமும் இல்லை'' என்றாள் குணசுந்தரி ஸுந்தரகௌரியிடம்.

சந்திரகாந்தன் இன்னும் பேசிக்கொண்டிருந்தான்.

''குஸுமசுந்தரி குமரியாகவே இருக்கவேண்டும் என்று விரும்புகிறாளாம். மானைப் போன்று அவள் உள்ளம் குதித்துக் கொண்டிருக்கிறது. இளமைப் பருவத்தின் புத்தம் புது எண்ணங்கள் எழுந்தவண்ணமாக இருக்கின்றன. ஆனால்...''

அவன் திடுக்கிட்டு நின்றான். எதிரே குணசுந்தரி நிற்பதைக் கண்டான். உரக்கத் தனக்குள் பேசிக்கொண்டிருந்ததை அவள் கேட்டிருக்கலாமோ என்று எண்ணியதும் நடுக்கம் கொண்டான்.

குணசுந்தரி அவனது பயத்தை உடனே அகற்றினாள். இயற்கையான தனது சுபாவத்தால் பேச்சுத் தொடுத்தாள்; சரஸ்வதிசந்திரனைத் தேடும் முயற்சிகள்பற்றித்தான் அவர்களிடையே பேச்சு.

அதற்குள் குஸுமசுந்தரி வந்தாள்; கையில் கவிதைப் புத்தகம். சந்திரகாந்தனுடன் உட்கார்ந்து கவிதை படிக்கத் தொடங்கினாள். அதில் நேரம் போனதே தெரியவில்லை.

ஜராசங்கரரின் இல்லத்தில் விருந்து என்பதாக வித்யாச்துரர் சந்திரகாந்தனை அழைக்க ஆளனுப்பியிருந்தார். அவன் வந்து செய்தி சொன்னதும் சந்திரகாந்தன் எழுந்தான். உடை தரித்துக்கொண்டான். விருந்துடன் அரசியல் சம்பந்தமான விவாதமும் நடக்கவிருந்தது. மகாராஜா மணிராஜாவும் அதில் கலந்துகொள்ள இருந்தார். சந்திரகாந்தன் புறப்பட எத்தனித்த போது சரஸ்வதிசந்திரன், குஸுமசுந்தரி இவர்களின் தகுதிகளைப் பற்றி மனத்தில் சர்ச்சை செய்துகொண்டிருந்தான்.

* * *

வித்யாசதுரரின் குடும்பம் ஒன்றுகூடியது. கிழவர் மானசதுரர் திரும்பிவிட்டார். ஆனாலும் அவர் நம்பிக்கை இழந்துவிடவில்லை; எல்லோரையும் நம்பிக்கை கொள்ளச் செய்தார். புத்திதனரிடமிருந்து வந்த கடிதம் பிரமாததனனின் மரணச் செய்தியைத் தாங்கிவந்தது. ஒரே நாளில் மகள், மாப்பிள்ளை இருவரும் காலமாகிப் போனார்கள். அமாவாசை நள்ளிரவில், கப்பிய இருளுடன் கோரமான புயலும் மழையும் சேர்வதுபோல அவர்கள் இல்லத்தில் துயரச் சூழ்நிலை எழுந்தது. பிரமாததனனின் குணங்களை ஆராய்ந்து, மகளின் முடிவுக்கு அவனே காரணம் என விவாதிக்கவே, அவர்களிடத்தில் அமைதி குடிகொண்டது. என்ன விவாதித்து இனி என்ன பயன்?

மகாராஜா மணிராஜா நேரில் வந்து ஆறுதல் தெரிவித்துப் போனார். நண்பர்கள், உறவினர்கள், அரசாங்க அதிகாரிகள் யாவரும் வந்து துக்கம் விசாரித்தார்கள். அவர்களால் துக்கமே அதிகரித்தது. குணசுந்தரிக்கு இரவு முழுதும் உறக்கம் வரவில்லை.

நாள் கழியக் கழியத் துக்கம்பழசாகிப் போயிற்று; துயரம் ஆறிப்போக ஆரம்பித்தது. இரண்டாவது மகளைப்பற்றிய சிந்தனை எழுந்தது. குடும்பத்தின் நித்தியக் கடன்கள் ஒரு பக்கம் இருக்க, பெண்ணின் பிரச்னை மறுபுறம் இருக்க, தாயின் துயரம் குறைந்தது; ஆனால் கவலை அதிகரித்தது. குஸுமாவை மேற்பார்க்கும் பொறுப்பு ஸுந்தரகௌரியிடம் வந்தது.

குஸுமா தோட்டத்தில் உலவிக்கொண்டிருந்தாள். அக்காளின் நினைவு வந்து அவளைச் சிந்திக்கவைத்தது.

''நீ கல்யாணம் செய்துகொண்டும் என்ன பயன்? நீ போய் விட்டாய்; பிரமாததனும் போயாகிவிட்டது. நீங்கள் இருவரும் உயிர் வாழ்ந்தாலும் சரி, நீ தனியே ஜீவித்தாலும் சரி, உன் துக்கம் எங்கே குறைந்திருக்கப் போகிறது? உன் துக்கத்தின் காரணம் விவாகந்தான். நீ விவாகம் செய்துகொள்ளாதிருந்தால் சுகித்திருந்திருப்பாய்.''

குஸுமா ஓடோடிப் போய்த் தடாகத்தினருகில் அமர்ந்தாள். அவளைக் கண்ட ஸுந்தரகௌரி அருகில் வந்து பேசினாள்.

''நீ இப்படித் துள்ளி ஓடுவது வயதுவந்த பெண்ணுக்கு நன்றாக இராது.''

''கல்யாணமான பெண் இப்படிச் செய்தால் நல்லதில்லை தான். ஆனால் குமரிகள் இப்படிச் செய்தால் தவறில்லை.''

''உனக்குத்தான் கல்யாணமாக வேண்டுமென்ற நினைப்பே இல்லையே! உன் அம்மாவுக்கு எவ்வளவு கவலை தெரியுமா? நீ அவள் கவலையைக் குறைக்க வேண்டாமா?''

குஸுமா ஒரு நிமிஷம் மௌனமாகிப் போனாள். பெண்ணின் மனோபாவம் தாய்க்குக் கவலை தந்தபோது வித்யாசதுரர் ஒரு நாள் மனைவிக்கு ஆறுதல் சொன்னதுண்டு:

''குழந்தைகள் பெற்றோரைவிடப் புத்திசாலிகளாக இருக்க வேண்டுமென்ற இச்சை யாருக்குத்தான் இல்லை? அவர்கள் புத்தி வளர நாம் ஒருபோதும் தடங்கல் செய்யக்கூடாது. அவர்கள் புத்தி ஓடும், ஆடும், துள்ளும்; அதன் வளர்ச்சிக்கு இடையூறு ஏதும் தரக்கூடாது''. - குணசுந்தரி அதன்படியே பெண்ணின் சுதந்தர வளர்ச்சிக்கு இடம் தந்திருந்தாள். ஸுந்தரகௌரி இதை அறிவாள். ஆகவேதான் குஸுமாவிடம் அவள் அப்படிப் பேசினாள்.

''சித்தி, எனது நடத்தை அம்மாவுக்கு ரொம்பவும் கவலை தந்திருக்கிறதா?''

''உன் நடத்தைமேல் தவறேதுமில்லை; இருந்தாலும், பெற்ற மகளைப்பற்றிய கவலை இல்லாமல் போகுமா?''

''அம்மா, நேரடியாக என்னிடம் சொல்லவில்லை?''

''உன் அப்பா விருப்பப்படி உன் வளர்ச்சிக்கு இடையூறு தரக்கூடாது என்பது அம்மாவின் எண்ணம்.''

''நான் அன்று சொன்னதில் தப்பு ஒன்றுமில்லையே?''

''தப்புக் கண்டுபிடிக்க நான் அவ்வளவு படித்ததில்லை. ஆனால் உன் எண்ணப்படி நடந்தால் விபரீதந்தான் ஏற்படும். உனக்கும் மற்றவர்களுக்கும் வருத்தந்தான் ஏற்படும்.''

''அப்பா ஒருமாதிரியும், அம்மா ஒருமாதிரியும் நினைத்தால் நான் என்ன பண்ணுவேன்?''

''பிள்ளைகளின் கவலையைத் தந்தையும், பெண்ணின் கவலையை அம்மாவும் பார்த்துக்கொள்வார்கள்; இதுதான் நியதி.''

''எனக்குக் கல்யாணம் வேண்டாம் என்று தோன்றுகிறது. குமரியாகவே இருக்க வேண்டுமென்று விருப்பம். மாடும் பெண்ணும் ஒன்றுதானா? எங்கெல்லாம் அழைத்துக்கொண்டு போகிறார்களோ, அங்கேயெல்லாம் வாய் திறவாமல் போக வேண்டுமா?''

ஸுந்தரகௌரிக்கு இரக்கம் வந்தது.

''குஸுமா. உனக்குத் தெரியாததல்ல; ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் செய்தார்கள். என்ன பலன்? இரண்டாவது பெண் விஷயம் எப்படி ஆகுமோ என்ற விசாரத்தில் தாய் தந்தையர் முழுகியிருக்கிறார்கள். கல்யாணம் செய்த பிறகு ஏற்படும் கவலை மகள் குமரியாக இருக்கும்போது ஏற்படும் கவலையைவிடக் குறைவு.''

குஸுமா விம்மினாள். அவள் கண்களில் நீர் முட்டிநின்றது.

''சித்தி, கல்யாணம் செய்துகொண்டவர்களின் துக்கத்தை நாம் பார்க்கவில்லையா? குமரிகளின் துக்கத்தை நாம் பார்த்ததுண்டா?''

''குமரிகள் கிழவிகளாகப் போனபிறகு உள்ளூறப் புழுங்குவார்கள். அவர்கள் துக்கம் தெரிவதில்லை. அதனால் அவர்கள் துக்கப்படுவதில்லை என்பதை எப்படி அறியமுடியும்? உன்னிடம் பலம் இருக்கிறது; உண்மைதான். நீ இப்போது மணம் செய்துகொள்ளாமல் இருக்கலாம். இதே பலம் வயோதிகத்தில் இருக்கும் என்பது என்ன நிச்சயம்! ஒருவருக்கு இரண்டுபேராக இருந்தால் அப்படியிருக்கும் தைரியமே அலாதியானதுதான்.''

''சித்தி, நீங்கள் அநுபவத்திலிருந்து பேசுகிறீர்கள். அதன் உண்மையை நான் நன்ருகச் சிந்திக்கவேண்டும். அப்புறந்தான் எனக்கு அது தெரியும்.''

4. அரசியல் விவாதம்

ஆங்கிலேயர்களிடம் கொண்ட சம்பந்தம் விபரீதமான முடிவைத் தந்துவிட்டது என்பது மல்லராஜாவை மிகவும் வருத்தத்துக்கு உள்ளாக்கியது; இருந்தாலும், தாம் செய்தது தவறு என்பதை அவர் ஒப்புக்கொள்ளவில்லே. தம் மகன் மணி ராஜாவுக்கு ஆங்கில அறிவு தர ஏற்பாடு செய்தார்; வித்யா சதுரரை ஆசிரியராக அமர்த்திஞர்.

மல்லராஜாவின் சிந்தனே வித்துக்களே நட்டு நீருற்றி விருட்சமாக்கிஞர்கள் மகாராஜா மணிராஜாவும், திவான் வித்யா சதுரரும். தமக்குப் பின் திவான் பதவிக்கு நியமிக்க ஒருவரையும் தயார் செய்துகொண்டிருந்தார் வித்யாசதுரர்.

வெளியூரிலிருந்து வந்திருந்த ராணு காசர் அவர்களுக்காகக் கூடவிருந்த தர்பாரில் திவானுக்கும் அழைப்பு இருந்தது. அதில் கலந்துகொள்ளச் சந்திரகாந்தனுக்கும் அழைப்பு வந்தது. பம்பாயிலிருந்து வந்திருந்த மராட்டி கனவான் வீரராவ் தம்பாடே அதில் கலந்துகொள்ளவிருந்தார். பம்பாய் நகரின் சுதந்தரச் சூழ்நிலேயில் வளர்ந்த அவரது அநுபவத்தையும் மற்றவர்கள் அறிந்து செயலாற்ற வேண்டுமென வித்யாசதுரர் திட்டமிட்டிருந்தார். ராணு காசரின் வருகையால் சுதேசி மன்னர்களின் ஐக்கியம் வளரும் என்ற நம்பிக்கையும் இருந்தது.

ராணு காசரின் அண்டை ராஜ்யத்திலிருந்து பிரவீண்தாஸ் என்ற அதிகாரி ஒருவரும் வந்திருந்தார். அவர் வணிகர் குலத்தைச் சேர்ந்தவர். ஆங்கிலக் கல்விஞானம் பெற்றவர்; ஆங்கிலேயப் பிரதேசங்களில் தாசில்தாராக நியமனம் பெற்றுப் பேரநுபவம் பெற்றவர்; வித்யாசதுரரிடம் மிகுந்த நேசம் கொண்டவர். பம்பாய் செல்லும்போதெல்லாம் வழியில் வரும் அந்த ராஜ்யத்தில் தங்கிவிட்டு அதன் முன்னேற்றத்தை அறிந்துவருவார். பின்னர் வித்யாசதுரர் அவரை ரத்னநகரியில் வசூல் இலாகாவில் நியமித்தார்.

நியாய இலாகாவைப் பலப்படுத்த வேண்டி ஆங்கிலச் சட்டத்தில் நிபுணத்துவம் பெற்ற சங்கர சர்மா என்ற வக்கீல் ஒருவரைப் பம்பாயிலிருந்து அழைத்து வித்யாசதுரர் வேலேயில் அமர்த்திஞர்.

ரத்னநகரியின் காட்டுவளத்தை அதிகரிக்கவும், துறைமுகங்களை நிறுவவும் பம்பாயிலிருந்து நிபுணர்களைத் தருவித்து வேலையில் நியமித்தார். கவனம் அதிகம் செலுத்தப்படாமல் இருக்கும் கல்வி இலாகாவின் பொறுப்பைக் கல்விமான் ஒருவரிடம் அதிக சம்பளம் கொடுத்து ஒப்புவித்தார். மணிராஜா கல்வி இலாகாவில் அதிகம் ஈடுபாடு காட்டினர்.

இவ்வாறு பெருத்த முன்னேற்றம் காட்டியிருக்கும் அதிகாரிகளில் சங்கர சர்மாவையும், பிரவீண் தாஸையும், கூடவிருக்கும் தர்பாருக்கு அழைத்திருந்தார். மல்ல மகாபவன் என்ற மாளிகையில் விதுரபவன் என்ற அறையில் அது கூடியது.

விதுரபவனில் பெரியதோர் மேஜைமீது அரசியல் சம்பந்தமான புத்தகங்களும், அரசியல் தலைவர்களின் சரித்திரங்களும் வைக்கப்பட்டிருந்தன. நானுவித தேசங்களின் படங்கள் அறையின் சுவரில் மாட்டப்பட்டிருந்தன.

மணிராஜா, மற்ற அதிதிகள் ஆகியோரின் வருகையை எதிர்பார்த்து எல்லோரும் குழுமியிருந்தார்கள்.

சந்திரகாந்தன் புத்தகங்களின் சேகரிப்பைக் கண்டு வியந்து போனுன். ''எவ்வளவு அழகிய புத்தகங்கள்! அரசர் இந்த புத்தகப் பூங்காவில் வந்து புத்தகங்களைக் கண்டு நுகர்ந்தாலே போதுமே; அறிஞராகிவிடுவார்'' என்றுன்.

வீரராவ் சிரித்தார்: ''வெறும் டம்பம்; பார்வைக்குத்தான். எல்லாச் சுதேசி ராஜ்யங்களிலுமே ஒரே ஊழல்'' என்றுர். பிரவீண் தாஸும், சங்கர சர்மாவும் திகைத்து நின்றுர்கள். சந்திரகாந்தனுக்கு அவரது பேச்சு, அதுவும் மணிராஜாவின் உபசாரத்தை ஏற்றுக்கொண்டு அவரது மாளிகையில் கூடியிருக்கும்போது அப்படிச் சொன்னது உசிதமாகப் படவில்லை. ஆகவே சொன்னுன்:

''நீங்கள் இடம் பார்த்துப் பேசவேண்டும்.''

வீரராவ், ''சத்தியம் என்பது இடம் பொருள் ஏவலுக்கு உட்படாத ஒன்று. உண்மைக்குப் பயப்பட்டதில்லை நான்'' என்றுர். அதிகாரிகள் யாவரும் ஸ்தம்பித்து நின்றுர்கள். பின்னல் மணிராஜாவும் வித்யாசதுரரும் வந்து நின்றுர்கள். மணிராஜா வீரராவின் தோள்மேல் கைவைத்துச் சொன்னர்.

''சொற்போருக்குத்தான் இந்த விதுரபவனை ஒதுக்கிவைத்திருக்கிறோம்.''

வீரராவ் தமக்கும் சந்திரகாந்தனுக்குமிடையே நிகழ்ந்த உரையாடல்பற்றி விவரித்தார்.

மணி: ராஜு காசர் வந்ததும் சபையைத் தொடங்கலாம்.

ராணு காசர் ஸாமந்தரின் மகனுன மூலராஜாவுடன் சபையில் நுழைந்தார். வயது மிகுந்தவராய்க் காணப்பட்டார்; மெலிந்த உடல்; நல்ல உயரம் வாய்ந்தவர். ராஜபுத்திரக்களை ஒளி வீசியது. கண்கள் மின்னின. எல்லோரும் அமர்ந்தார்கள். ஆகாயத்தில் சந்திரனும் தூமகேதுவும் பிரகாசிப்பது போல மணிராஜாவும் ராணு காசரும் சபையில் திகழ்ந்தார்கள்.

மணிராஜா எல்லோரையும் ராணு காசருக்கு அறிமுகம் செய்து வைத்தார். வீரராவின் அறிமுகத்தின்போது, "இவருடைய அபிப்பிராயம் என்னவென்றால், சுதேசி ராஜ்யங்களில் எல்லாம் வெறும் ஊழல், ஏதும் சரிவர நடப்பதில்லை என்பதாகும்" என்றார் மணிராஜா.

"ஓ! அப்படியா! என்ன செய்வது? பம்பாயிலிருந்து வருகிற கறையான் சுதேசி ராஜ்யங்களை அரிக்காமற் போகுமா?" என்றார் ராணு காசர் சிரித்துக்கொண்டே.

வீரராவ் விடவில்லை.

"மகாராஜ், பம்பாயில் கறையான்கள் இருக்கின்றன; அவற்றுடன் நகரசபையும் இருக்கிறது. சுதேசி ராஜ்யங்கள் வெறும் கறையான்களைத்தான் கவர்ந்திருக்கின்றன. ஆகையால்தான் அவை நாசம் அடைந்துவிட்டன."

"எங்கெங்கெல்லாம் வியாதி இருக்கிறது என்று சொல்லுங்கள்: அதனுடன் உபாயமும் தெரிவியுங்கள்" என்றார் மணிராஜா.

"வீரராவ் அவர்கள் சொல்லுவது என்னவென்றால், ரோகம் இன்ன இடத்தில் என்பதில்லை; சுதேசி ராஜ்யங்கள் அனைத்திலும் அது பரவியிருக்கிறதாம்."

"இனி உபாயம் ஏதுமில்லை; தலைக்குமேல் தண்ணீர். உபாயம் ஏதும் காப்பாற்றப் போவதில்லை" என்றார் வீரராவ்.

"வீரராவ் அவர்களின் பிரதேசத்துக் கதை என்ன? அதைக் கேட்போம்" என்றார் பிரவீண் தாஸ்.

அதற்கு வீரராவ் விடையிறுத்தார்.

"கேட்பதற்கென்ன? சுதேசி ராஜ்யத்து மக்களின் முன்னேற்றத்துக்குத் தடை அந்த அந்த ராஜ்யங்களின் அரசாங்கங்களேதாம். சுதேசி மன்னர்களுக்கு ஆளவே தகுதியில்லை; அதனால்தான் இந்த அதோகதி வந்திருக்கிறது என்கிறார்கள் ஆங்கில அதிகாரிகள். அவர்கள் சொல்லுவது அவ்வளவும் உண்மை என்பது எந்தச் சுதேசி சம்ஸ்தானத்தில் போய்ப் பார்த்தாலும் தெரியவரும்."

''எங்களுக்குத்தான் கடைத்தேற வழியில்லை. உங்கள் பிரதேசத்தில் எவ்வளவு தூரம் உயிர் இருக்கிறது? அதைச் சொல்லுங்கள்'' என்று கேட்டார் பிரவீண் தாஸ்.

''எப்படித் தெரிவிப்பது! டல்ஹௌஸி போன்ற கவர்னர் - ஜெனரல்கள் இருந்த நாட்களில் சுதேசி ராஜ்யங்களைப் பிரிட்டிஷ் ராஜ்யத்துடன் சேர்த்திருந்தோம். அப்போது உயிர் நல்ல துடிப்புடன் போய்க்கொண்டிருந்தது. இப்போது ஜாதிப் பிரச்னை வந்துவிட்டது. முன்னேற்றத்தைத் தடை செய்கிறது. உங்கள் ராஜ்யங்களின் ஸ்திதி எங்கள் அபிலாஷையைத் தடை செய்கிறது.'' வீரராவின் பேச்சு ராணு காசருக்குப் பிடிக்க வில்லை. சங்கர சர்மா இடைமறித்தார்.

''உங்கள் ராஜ்யத்தில் என்ன நடந்தால் என்ன! எங்களுக்கு ஏதும் பயனில்லை. ஆனால் உங்களின் முன்னேற்றத் தையும் எங்களின் நாசத்தையும் நீங்கள் விரும்பினால் அது எந்த நியாயத்தைச் சேர்ந்ததாகும்?''

''தேசம் முழுவதும் வாழ வேண்டும் என்ற எங்கள் எண்ணத்தில், தேச முன்னேற்றத்திற்காக ஒரு சில ராஜ்யங்கள் நாசம் அடைந்தால் பரவாயில்லை. க்ஷத்திரியர்கள் யுத்தத்தின் போது அதர்மச் செயலையும் தர்மச் செயலாகக் கருதுவார்கள்; நடுவே பசு வந்துவிட்டால் யுத்தத்தை நிறுத்தமாட்டார்கள். பசுவதை சாதாரண நாட்களில் பாவமானாலும், யுத்த நாட்களில் நியாயமானதாகும்'' என்று வீரராவ் விடையிறுத்தார்.

வித்யாசதுரர் பேசினார்:

''வீரராவ் அவர்களே, இப்போது நியாயம் - அநியாயம், தர்மம் - அதர்மம் ஆகிய தர்க்கத்தில் இறங்க வேண்டிய தில்லை. நீங்கள்தாம் ஆளப்பிறந்தவர்கள், நாங்கள் ஆளத் தகுந்தவர்களில்லை என்ற கூற்றை எடுத்துக்கொள்வோம்.''

''இருவரும் ஒரே சரீரத்தினர்தாம்; உடலில் ஓர் அவயவம் விஷத்துடன் இருந்தால் அதை அறுத்தெறிந்துவிடவேண்டும்; இல்லாவிடில், உடல் முழுதும் நஞ்சு பரவி உலை வைத்துவிடும்; ஆகவே, விஷமேறியுள்ள சுதேசிச் சம்ஸ்தானங்களைக் களைந்து விட்டால்தான் கதிமோட்சம் உண்டு'' என்றார் வீரராவ்.

வித்யசதுரர் மேலே கேள்வியிட்டார்.

''சுதேசி ராஜ்யங்களினால் என்ன தீங்கு ஏற்படுகிறது?''

''நோயுற்ற கண் மற்றவர் கண்ணையும் பாதிக்கிறது. அதுபோலத்தான் சுதேசி ராஜ்யங்களின் கதையும். தானும் கெடுவதுடன் மற்றவர்களையும் கெடுக்கிறது. சுதேசி ராஜ்யங் களின் பிரஜைகள் மீளாத துக்கத்தில் உழன்று கதறுகிறார்கள்.

சுதேசி மன்னர்கள் பிரஜைகளைக் கொள்ளையடிக்கிறார்கள். பாவம், ஏழை மக்கள்.''

மூலராஜா சிரித்தார். ''சரிதான்; வீரராவ் நம்மையெல்லாம் மறு உலகத்திற்கு அனுப்பி ஸ்வர்க்கவாசம் தர யோசிக்கிறார்.''

விவாதம் சூடேறியது. அதைத் தணிக்க வேண்டிச் சந்திரகாந்தன் பேச்சில் கலந்துகொண்டான்.

''வீரராவ் அவர்கள் பல புத்தகங்களுக்கு ஆசிரியர்; பத்திராதிபர். அவருக்குச் சுயமான சுதேசி சம்ஸ்தான அநுபவம் கிடையாது. மகாராஜ், வீரராவ் சுதேசி ராஜ்யங்களை எவ்வளவுக்கு வெறுக்கிறாரோ அவ்வளவுக்கு என் நண்பன் சரஸ்வதிசந்திரன் அவற்றின் முன்னேற்றத்தை வியந்து பாராட்டியிருக்கிறான்; அவனிடம் பல சமயங்களில் கேட்டு அறிந்திருக்கிறேன்: அதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.''

''சிறிதும் அச்சப்படாமல் சொல்; எங்கள் குற்றங்குறைகளை அறிந்துகொள்ள வேண்டும் என்ற உண்மையான, மனப்பூர்வமான ஆவலுடன்தான் எல்லோரையும் அழைத்திருக்கிறேன்'' என்றார் மணிராஜா.

சந்திரகாந்தன் தொடர்ந்தான்: ''சாதாரண மக்களுக்கும் மன்னர்களுக்கும் இடையே பரஸ்பரம் நம்பிக்கையும் ஒத்துழைப்பும் வேண்டும்; அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தப் பெருந்தன்மையுள்ள மனிதர்கள் முன்வரவேண்டும். மக்களையும் அருகருகே கொண்டுவர அவர்கள் முயல்வார்கள். அதிலேதான் சுதேசி ராஜ்யங்களின் வெற்றி அடங்கியுள்ளது.''

''நான் எதைச் சொல்ல வந்தேனோ அதைத்தான் நண்பர் குறிப்பிடுகிறார்'' என்றார் வீரராவ்.

''இல்லை; இல்லை. நீங்கள் சொல்ல வந்தது முற்றும் வேறு; மன்னர்களையும் புதிய பெருந்தன்மை வாய்ந்த தலைவர்களையும் அழித்துவிடவேண்டும் என்பதுதான் உங்கள் கூற்று. ஆனால் சந்திரகாந்தன் சொல்வது வேறு; மக்களை உயர்த்தி அருகில் கொணர மன்னர்களும் தலைவர்களும் முயலவேண்டும்'' என்றார் சங்கர சர்மா.

''இரண்டும் ஒன்றுதான்.'' - வீரராவ் விடவில்லை.

''ஒன்றல்ல; முற்றும் வேறு. ரோமாபுரி சாம்ராஜ்யம் உலகமெங்கும் பரவியபோது சுற்றியுள்ள பிரதேசம் எல்லாம் அந்தச் செல்வாக்கில் வந்தது; அதுபோலவே ஆங்கில அரசு வந்தவுடன் அக்கம்பக்கத்திலுள்ள சுதேசி மன்னர்களும் அதனது செல்வாக்கின்கீழ் வந்து பெருந்தன்மையாளராக மாறிவிடுவதைப் பார்த்து வருகிறோம். பிரிட்டிஷ் சூரியனின்

முன் எல்லாச் சுதேசி அரசாங்கங்களும் மின்மினிகளாக மாறிவிடுகின்றன; ஒளி இழந்த விண்மீன்களாகிப் போகின்றன. ஆகவே, இனிச் சூரியனின் ஒளியில்தான் அவை மின்ன வேண்டும். மன்னர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முன்னேற்ற வேகத்தையே அநுசரிக்க வேண்டும். ஆகவே, இப்போது பார்க்கும்போது சுதேசி மன்னர்களைக் காட்டிலும் அந்நியர்களின் ஆட்சியே சிறந்ததாகத் தோன்றும்.''

''அதனால் என்ன பலன்?'' என்று கேட்டார் பிரவீண் தாஸ்.

''ஆட்சிகளின் பாகுபாட்டில் அர்த்தமில்லை, மக்கள் எங்கிருந்தாலும் ஒன்றுதான். அவர்களின் நலனே குறிக்கோளாக இருக்க வேண்டும். எப்படி ஜாதிமத பேதத்தால் தீங்கு ஏற்படுவதை உணர்ந்திருக்கிறோமோ, அதுபோலவே பிராந்திய வேறுபாடுகளும் தீமை தருவன என்பதை உணரவேண்டும். சுதேசி அரசாங்கங்கள், பிரிட்டிஷ் அரசாங்கம் எல்லாம் ஒரே உடலின் பல பாகங்கள். மாபெரும் இயந்திரமொன்றில் நாம் சின்னஞ்சிறியதோர் சக்கரம். சக்கரமும் இயந்திரமும் ஒரே வேகத்தில் சுழலவேண்டும். பாரத தேசத்தின் எல்லையில் ஆக்கிரமிப்பு என்றால், பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடமிருந்து விலக முடியுமா, ஒதுங்கி வாளாவிருக்க முடியுமா? இன்னல் வருங்காலத்தில் தனித்தியங்க முடியாது. பக்கத்துவீட்டில் தீப் பிடித்துவிட்டதென்றால் நாம் சும்மா இருப்பதில்லை. இதில் என்ன பட்சபாதம்? சுதேசி மன்னர்கள், அவர்களின் பிரஜைகள், பிரிட்டிஷ் அரசாங்கம் இவற்றின் மக்கள் - எல்லோரது குறிக்கோளும் ஒன்றுதான். அதுபோலவே உலகம் முழுவதிலும் மக்களின் குறிக்கோளும் ஒன்றுதான் - அவர்களின் சுகநலன். மகத்தானதோர் உலக அரசாங்கம் ஒரு நாள் உருவாகப் போகிறது. மொழிகளும், பிரதேசங்களும் பலவாறுலும் சமஷ்டி முறையில் ஃபெடரலிஸம் என்பதன்மூலம் ஒரே ஆட்சியில் ஒன்றுபடும். ஆட்சி ஒன்றானல் மக்களின் ஒற்றுமையும் உருவாகிறது. இது நமது முன்னேற்றத்தின் கடைசிப்படி. தற்போது எல்லாச் சுதேசி ராஜ்யங்களின் தலைவர்களும் மன்னர்களும் ஒன்றுபட்ட பாரத நாட்டை உருவாக்க வேண்டும். அதுதான் பிரச்னை.

பிரவீண் தாஸ் சந்திரகாந்தன் சொன்னதை ஒப்புக்கொள்ளவில்லை.

''நீங்கள் இருவரும் நம்பிக்கை இழந்தவர்களாக இருக்கிறீர்கள். சுதேசி மன்னர்கள் பிரிட்டிஷ் ராஜ்யத்துடன் சேர்ந்து இயங்க வேண்டுமெனச் சொல்கிறீர்கள். ஆனல் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம். சுதேசி மன்னர்கள் தனித்து இயங்கி, மக்கள்நலனை வளர்க்க முடியும் என நம்புகிறேன்.

''அப்படியானால் நீங்கள் எந்த வேகத்தில் மக்கள் நலனுக்காக உழைத்திருக்கிறீர்கள் என்பது தெரியுமா?''

''பிரஷ்யாவுடன், ஜெர்மனியின் சின்னஞ் சிறு தேசங்கள் சேர்ந்து எந்த வேகத்தில் சென்றனவோ அதே வேகத்தில்தான் போவோம். குட்டி ராஜ்யங்களின் உதவியால் பிரான்ஸ் தேசத்தைத் திணற அடித்ததுபோல் எங்கள் உதவியால் ருஷியாவைத் திணற அடிப்பார்கள் பிரிட்டிஷார்.''

சங்கர சர்மா இடைமறித்தார்.

''ஜெர்மனியைப் போல் பொய்யான குறிக்கோள் நமக்கு இல்லை. மக்கள் நலன் என்னும் உண்மையான குறிக்கோளுடன் தான் சமஷ்டி அரசாங்கத்தை விரும்புகிறோம். அமெரிக்காவின் ஐக்கியக் குடியரசு போன்ற ஒரு சமஷ்டி அரசுதான் நமது குறிக்கோள்; அது காலக்கிரமத்தில் செயல்படும். ஆனால் அந்நிய ஆங்கில அரசாங்கம் மக்களின் நலனுக்காக ஒரு நாளும் பாடுபடப் போவதில்லை. ஆனால் சுதேசி ராஜ்யங்கள்தாம் மக்கள்நலனுக்காக இயங்க முயற்சி செய்யும்; சுதேசி ராஜ்யங்கள்தாம் வெற்றி பெறும். அவற்றைப் பார்த்துத்தான் ஆங்கில அரசாங்கம் உணர்ந்துகொள்ளும்.''

வீரராவ், ''உங்கள் ஆகாயம் தூய்மையாக இருந்தாலும் குடிக்கத் தண்ணீர் ஒரு நாளும் அதிலிருந்து விழாது'' என்றார்.

ராணா காசர் கைக் கடிகாரத்தை எடுத்துப் பார்த்து, ''வித்தியாசதுரர் அவர்களே, மாலையின் முத்துக்கள் அழகாக இருக்கின்றன. எல்லாவற்றையும் கோத்துச் சீராக்குங்கள்'' என்று உத்தரவிட்டார்.

வித்யாசதுரர் இதுவரை நடந்த விவாதத்தின் சாராம்சத்தை அழகாக எடுத்துச் சொன்னார்:

''வீரராவ் அவர்களே, எதிர்காலத்தில் சுதேசி ராஜ்யங்கள் மறைந்துவிடும் என்று சொல்லுகிறீர்கள். அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் எதிர்காலம் என்பது கனவு போலத்தான்; எதிர்காலத்தில் இன்னது நடக்கும் என்று ஆருடம் சொல்வது கனவில் தோன்றும் நிகழ்ச்சிகள் நடக்கும் என எதிர்பார்ப்பதுபோலாகும். இறைவனின் இச்சையும் மனிதனின் எதிர்கால எண்ணங்களும் எப்போதும் ஒன்றாயிருப்பதில்லை; இருளில் காணுவது எப்போதும் இருள்தான்.

''ஆனாலும் இருளில் மின்வெட்டினிடையே சில உண்மைகளைக் காணுகிறோம், அது கணநேரந்தான் நிற்கும். அந்தக் கணநேரத்தில் தீர்க்க தரிசனம் நமக்கு மிக உதவி அளிக்கும், கரடு முரடான பாதை எது, ராஜபாட்டை எது என்பதைத் தீர்க்கதரிசனம் அறிவித்துவிடும். மன்னர்களும் அறிஞர்

களும் அத்தகையதோர் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறக்கூடாது.

''பிரஜைகளும் மட்டுமரியாதைகளை உணர்ந்து ராஜ்யங்களில் தத்தம் பொறுப்புக்களை வகிக்கவேண்டும்; மன்னர்களின் ஆக்ஞைக்கொப்பக் கடமைகள் புரியவேண்டும். சுதேசி ராஜ்யங்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குக் கீழே இயங்கி வருகின்றன. சாதாரண நாட்களிலும், நெருக்கடியான காலத்திலும் சரிவர நம் கடமைகளைச் செய்யவேண்டும். சாதாரண நாட்களில் பிரிட்டிஷ் அரசாங்கம் குறிப்பிடும் பொறுப்புக்களைக் காட்டிலும் அதிக முயற்சிகள் எடுத்துக்கொண்டு பிரஜைகளின் நலனைப் போற்றி வருவது நமது தர்மமாகும்.

''நமது சக்தியும் அதிகாரமும் போய்விடும் என்ற பயத்தில் மூழ்கிவிட்டோமானால் தற்போதைய பொறுப்புகளை நாம் செய்யமாட்டோம்; நமது தர்மம் கெட்டுவிடும்.''

''அப்படியானால் பிரிட்டிஷ் அரசாங்கம், சுதேசி ராஜ்யங்கள் இரண்டுக்குமிடையே பிரிட்டிஷ் அரசாங்கம் ஒருபட்சமாக இருந்தாலும், அதன் நாட்டாண்மையை ஒப்புக்கொள்கிறீர்களா? அப்படிப்பட்ட நாட்டாண்மையினால் சுதேசி ராஜ்யங்களுக்கு நஷ்டம் உண்டாகிறது என்பதை மறுக்கிறீர்களா?'' என்று சந்திரகாந்தன் கேட்டான்.

''இல்லை, அந்த நாட்டாண்மையினால் சுதேசி ராஜ்யங்களின் அதிகாரம் குறையத்தான் செய்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். இருந்தாலும், ஆங்கில அதிகாரிகள் சாம்ராஜ்யம் நடத்தத் தகுதியுள்ளவர்கள்தாம்; அவர்கள் பெருந்தன்மையுடன் பட்சபாதமில்லாமல் நடுநிலை வகிக்கிறார்கள் என்றும் சொல்லுவேன்.

''சுதேசி ராஜ்யங்களின் முயற்சியால் பாரத தேசத்தில் சமஷ்டி அரசாங்கம் ஏற்படுமானால் ஜெர்மனியின் பல ராஜ்யங்களின் சமஷ்டியைவிட, அமெரிக்காவின் ஐக்கிய நாட்டுக் குடியரசைவிட அது தனி ஸ்தானத்தையே வகிக்கும். இன்று காலம் மிக வேகமாகப் போகிறது. சுதேசி மன்னர்கள் விழித்துக்கொண்டு காலத்தை உணரவேண்டும். தக்க தலைவர்களும் மன்னர்களுக்கு அறிவும் உதிக்காமற்போனால், இன்றைய நிலையைவிட மிகுந்த துயரத் தசையில் மூழ்கிவிடுவோம்.

''ஆங்கில அரசியல் நீதி விரைவில் சமஷ்டி அரசாங்கத்தை நிலைநிறுத்த வேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. சுதேசி மன்னர்கள் இந்த நீதியை அநுசரித்து, சமஷ்டி உருவாக முயற்சி செய்யவேண்டும். கால வெள்ளத்தைத் தடுக்க

முயற்சி எடுத்துக்கொண்டால் நாம்தான் முறியடிக்கப் படுவோம்; துக்கந்தான் நம்மைச் சூழும். தீர்க்க தரிசனமும் செயலாற்றும் தன்மையும் இன்று நமக்குத் தேவை.

''நமது அண்டை ராஜ்யமான நீலவர்ணபுரியின் ஜடசிங் மகாராஜா காலத்திய சரித்திரத்தை அறிவோம். அநீதியும், கொடுமையும், ஒழுங்கின்மையும் மிகுந்திருந்ததை நாம் உணர் வோம். அந்த நிலை மாறுமலிருந்தால் சுதேசி ராஜ்யத்திற்குக் கதி மோட்சமே கிடையாது. மன்னர்கள் எப்போது மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளாமல் இருந்தார்களோ, அப்போது வீரராவ் அவர்கள் எடுத்துக்கூறிய அபாயம் அத்தகைய சுதேசி ராஜ்யங்களைக் சூழ்ந்திருக்கும். கௌரவர்களின் ஆட்சி யிலும், கொடுங்கோலரின் ஆட்சியிலும் அத்தகைய பயம் எப்போதும் இருந்து வந்தது. அரசியலில் அண்டை வீட்டில் நெருப்புப் பிடித்துக்கொண்டால் நம் வீட்டில் என்ன ஆகுமோ என்ற பயம் இருக்கத்தான் வேண்டும்.

''சந்திரகாந்தன் கூறியபடி சுதேசி ராஜ்யங்களிலே அநீதியை யும் துர்க்குணங்களையும் அகற்றப் பெருந்தன்மை நிறைந்த தலைவர்கள் உருவாக வேண்டும்; நான் அந்தக் கருத்தை ஆதரிக்கிறேன். வெறும் மன்னர்கள் பெருந்தன்மையாளராக மாறினுல்மட்டும் போதாது; அவர்களுடன் அரசாங்கத்தில் பலமும் சக்தியும் வேண்டும். யுதிஷ்டிரருடன் பீமனும் அர்ஜுன னும் இருந்தார்கள் என்பதை எப்படி மறக்கமுடியும்? இல்லாது போனுல் பிரஜைகள் மன்னருக்கு அடங்காமற் போவார்கள். அவர்களுக்கு இழுக்கு ஏற்படும்.''

விவாதம் முடிந்தது. மணிராஜா எல்லோருக்கும் வாழ்த்துக்கள் கூறினுர். வெற்றிலை பாக்கும் மலர்களும் எல்லோருக்கும் வழங்கப்பட்டன. அப்போது மகாராஜா மணி ராஜாவுக்குக் கடிதம் ஒன்று கொண்டுவந்தான் ஓர் ஆள். மகா ராஜா அதைப் படித்துவிட்டு வித்யாசதுரரிடம், ''தாங்கள் வீடு செல்லுங்கள்; தங்கள் தகப்பனுர் திரும்பிவிட்டதாகச் செய்தி வந்திருக்கிறது'' என்றுர்.

ராணு காசர் வித்யாசதுரரின் துக்கத்தை அறிவார். ஆகையால், அவருக்குத் துக்கம் தெரிவிக்கும் வகையில், ''குமுத சுந்தரியின் செய்தி கேட்டேன்; புத்திரியின் மறைவால் விளையும் துயர் எனக்குத் தெரியும். நான் அநுபவித்திருக் கிறேன்'' என்றுர். மணிராஜாவின் கண்கள் பனிச்சிட்டன. சபை கழிவிரக்கம் கொண்டது.

வித்யாசதுரர் சொன்னுர்: ''ஒரு பக்கம் குமுதசுந்தரி; இன்னெரு பக்கம் பிரமாததனன். இரண்டு வீடுகளிலும்

சூன்யம் நிறைந்துவிட்டது. என்னைக் காட்டிலும் புத்திதனர் மிகவும் துக்கித்திருப்பார்.''

வித்யாசதுரர் விடைபெற்றார். சபை கலைந்தது. மகா ராஜாவும் ராணுவும் தனியே கூடினார்கள்.

''இந்த மாதிரியான தர்பாரினால் செலவும் இல்லை; நஷ்டமும் இல்லை. ஆனால் ஒன்று: இதெல்லாம் ஏட்டுச் சுரைக் காய்; இந்தப் புத்தகப் படிப்பினால் லாபம் ஏதுமில்லை என்பதை அறிந்து கவனமாயிருக்கவேண்டும்'' என்றார் ராணு.

''திவான் உத்தியோக அநுபவமும் வாழ்க்கை அநுபவ மும் நிறைந்தவர். புத்தகப் படிப்புடன் நிதர்சனத் தெளிவும் அவரிடம் இருக்கிறது'' என்றார் மணிராஜா.

''அது சரி; அதிகாரிகளிடம் புத்தகப் படிப்பு அநுபவம் எல்லாம் இருக்கட்டும். சற்றே கிறுக்குப் பிடித்தால் ஜாக் கிரதையாக இருக்க வேண்டியவர்கள் நாம்.''

''உண்மையைச் சொல்லப்போனால் இதுவரை தகராறு ஏதும் ஏற்பட்டதில்லை. இருந்தாலும், நீங்கள் ஆலோசனை ஏதேனும் சொன்னால் கேட்கச் சித்தமாயிருக்கிறேன்.''

''தகராறு இல்லை என்கிறீர்கள். நல்லது; ஆனால் எப்போ தும் இதுபோல் இருக்காது. சக்கரவர்த்தியும் கவர்னரும் வைசி ராயும் இங்கிருந்து தூரத்தில் இருப்பவர்கள். நமக்குக் கெடுதல் செய்பவர்கள் நம்மிடையே உத்தியோகம் புரியும் அதிகாரிகள் தாம். இருவர் நல்லவர்களாக இருப்பார்கள்; இருவர் விஷமக் காரர்களாக இருப்பார்கள். 'நாம்தான் நிரந்தரம்; இவர்கள் இன்று வருவார்கள், நாளை போவார்கள்' என்பதை உணர்ந்து விட்டால் அவர்கள் அடி பணிந்திருப்பார்கள்.

''நம்முடைய செல்வாக்கும் அதிகாரமும் எவ்வளவு தூரம் செல்லும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். நதியில் குதிப்பதற்குமுன் நதியின் அக்கரைக்குச் செல்லும் அளவுக்கு நீந்தச் சக்தி இருக்கிறதா என்று நம்மை நாமே பரீட்சித்துக்கொள்ள வேண்டும்.

''வாளை எடுத்துப் போரிடும் காலம் போய்விட்டது. பேனாதான் இனி வெற்றி தரக்கூடிய ஆயுதம். அதை நன்றாகப் பயன்படுத்த வேண்டும்.

''உலகத்தின் முன் நம்முடைய பெருமைக்குச் சிறுமை தராத நட்பையே தேடவேண்டும். விதியும் தெய்வமும் பிரஜைகளுக்குத்தான்; நாம்தான் விதியை வெல்லவேண்டும். உண்மையான மன்னர்கள் விதியிலும் பிராரப்தத்திலும் நம்பிக்கை வைப்பதில்லை; முயற்சியிலேயே நம்பிக்கை வைக்

கிறார்கள். காலத்துக்கேற்ற மாதிரி கலைகளைப் பயின்றிருக்க வேண்டும். காலமெனும் குதிரைக்குக் கலையே கடிவாளம்.''

மணி ராஜா அனுபவம் மிக்க ராஜு காசரின் வார்த்தை களில் பல உண்மைகளைக் கண்டார்.

5. குஸுமசுந்தரியின் சிந்தனை

குணசுந்தரி குமுதசுந்தரியை இழந்த சோகத்தில் வாடி வதங்கிப் போனாள். பெண் குஸுமசுந்தரியின்மீது அவள் கவனம் குறைந்து போயிற்று. இதைக் கண்ட மகாராஜா மணி ராஜாவின் மனைவி மகாராணி கமலாராணி, குமாரி ஃப்ளோரா என்பவளைக் குஸுமாவிடம் அனுப்புவித்தாள். அவள் ஆங்கிலம் பயின்ற இருபத்தைந்து வயது நிரம்பிய குமாரி; அவளுக்கு இந்தியக் கலைகளில் பயிற்சி இல்லை. ஆனால் அத்தகைய பயிற்சி குஸுமசுந்தரிக்கு உண்டு. மேலைநாட்டு வாழ்க்கையில் பெண் களுக்கு எத்தகைய ஸ்தானம் இருக்கிறது என்பதுபற்றியும், இந்திய நாட்டிலும் பெண்கள் அத்தகைய முன்னேற்றத்தை ஏன் அடையக்கூடாது என்பதுபற்றியும் இரு பெண்களுக்கும் இடையே ரசமான விவாதம் நிகழ்ந்தது. மேலை நாட்டில் பெண்கள் தம் இச்சைப்படி மணம் செய்துகொள்ளாமல் இருக் கலாம் என்றும், பெண்களுக்கு அதிக சுதந்தரம் இருக்கிறது என்றும் அவளிடமிருந்து அறிந்துகொண்டாள் குஸுமா; அந்தச் சந்திப்பினால் குஸுமாவின் தீர்மானம் பலப்பட்டது. ஃப்ளோரா சென்றவுடன் தோட்டத்தில் தனியாகக் குஸுமா உலவினாள். பல பல சிந்தனைகள் அவள் உள்ளத்தில் எழுந்தன. குணசுந்தரி யின் துயரை அகற்றச் சந்நியாசி ஒருவர் கூறிய ஒரு சுலோகத்தின் பொருள் நினைவுக்கு வந்தது:

'கானகத்தில் தடாகத்தில் கண்பார்வை தெரியாமல் களைத்துப்போன யானை விழுந்து வாடுகிறதைப் போல் சம்சார சாகரத்தில் சக்தியில்லாத மனிதர்கள் வீழ்ந்து அல்லலுறு கிறார்கள். நல்லதற்கே என்றாலும் அது மாயை, அஞ்ஞானம் என்றே சொல்லலாம். கோடையின் வெப்பத்தைத் தணிக்கத் தனது நிழல் எப்படி மனிதனுக்குப் போதாதோ அதேமாதிரி தான் சுகமும் ஒரு நிழல்போல.'

'அந்த ஸ்வாமிஜி சொல்லிவிட்டுப் போய்விட்டார், அம்மா வுக்கும் அப்பாவுக்கும் உபதேசம்! குமுதா, நீ மணந்துகொண்டாய், என்ன சுகம் கண்டாய்? சம்சாரம், மாயை என்று தாய்தந்தையர் கள் அறிந்துகொண்டாலும் என்னையும் மற்றவர்களைப் போல அதே படுகுழியில் தள்ள ஏன் தீர்மானித்திருக்கிறார்கள்? இதோ,

அதே ஸ்வாமிஜியின் கால்களைப் பற்றிக்கொண்டு எனக்குத் தீட்சை தாருங்கள் என்று வேண்டினால்? தந்தை என் விருப்பத்தைத் தடுக்கமாட்டாரே!'

புதியதோர் எண்ணத்தால் உந்தப்பட்ட அவள் மகிழ்ச்சியுடன் துள்ளியதை ஸௌந்தரகௌரி கண்டாள். ''இதென்ன விபரீதம்?'' என்று தனக்குள் கூறிக்கொண்டாள்.

* * *

'குடும்பப் பிரச்னைகள் அரசியல் பிரச்னைகள்போலக் கடினமானவைதாம். ஸௌந்தரகௌரி சொல்கிறாள், குஸுமைப் படிக்க வைக்காமலிருந்தால் இந்த அனர்த்தம் வந்திருக்காது என்று. ஹிந்து தர்மம், கன்னிகையை வாழ்வு முழுதும் மணம் முடிக்காமல் குமாரியாக வைத்திராதே என்று சொல்லுகிறது. இந்தக் காலத்தில் நாகரிகமான கல்வி முறை குழந்தையையும் வயதுவந்த மனிதராகக் கருதவேண்டும் என்று புத்திமதி சொல்கிறது. மனத்திற்கு விரோதமாய்ப் பெண்களுக்கு விவாகம் செய்துவைப்பதைக் கண்டனம் செய்கிறது. ஒரு பக்கம் குஸுமசுந்தரி துறவறம் பூணவேண்டும் என்றாள்; இன்னொரு புறம் சாஸ்திரங்கள் பெண்களுக்கு மணம் முடித்துத்தான் தீரவேண்டும் என்கின்றன. இது என்ன பிரச்னை?'

இவ்வாறு சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்; பால் உணவுக்குப் பிறகு உண்ட மயக்கத்தில் உறங்கிப்போனார் வித்யாசதுரர்.

கண் விழித்தபோது குணசுந்தரி எதிரே நின்றுகொண்டிருந்தாள்.

''கடிதம் வந்திருக்கிறது. சௌபாக்கியவதி தேவியும் சொர்க்கவாசம் அடைந்துவிட்டார்களாம்.''

தூக்கிவாரிப் போட்டது அவருக்கு; ''என்ன, என்ன?''

''பிள்ளை கோடரிக்காம்பு போலப் பிறந்தான். குமுதசுந்தரி போனாள், பிரமாததனனையும் அழைத்துக்கொண்டு. நான்கு பக்கங்களிலிருந்தும் வேதனை! அம்மாவின் இருதயமே உடைந்திருக்க வேண்டும். புத்திதனருக்கு இனி என்ன வாழ்க்கை பாக்கியிருக்கிறது? நம்முடைய துக்கம் எல்லாம் இதற்குமுன் ஒரு துக்கமாகுமா?''

குணசுந்தரி மனமுருகிச் சொன்னாள்.

வித்யாசதுரரின் கண்கள் குளமாயின.

''பாவம், தாங்க முடியாத துயரத்தால்தான் அவள் காலம் அடைந்திருக்கவேண்டும். இளமையில் எந்தத் துக்கத்தையும் தாங்கிக்கொள்ளலாம்; அதற்குச் சக்தி உண்டு. முதுமையில் துக்கத்தைத் தாங்கிக்கொள்ளும் சக்தி மறைந்து போய்விடு

கிறது. வயோதிகத்தில் ஆண் பெண்கள் ஒருவருடைய உதவியை ஒருவர் நாடுகிறார்கள். இனிமேல் புத்திதனருக்கு யார் ஆறுதல் சொல்வார்?''

''மரணம் என்பது என்றைக்கேனும் வரவேண்டியதுதான். யாரால் யோகக்ஷேமம் அதிகரிக்கிறதோ அவர்கள் சிரஞ்சீவியாக நூறு ஆண்டுகள் வாழவேண்டும். பெண்ணாய் வாழ்ந்து என்ன பயன்? இதோ பூவும் மஞ்சளுமாக நானும் வேண்டுகிறேன்: எனக்கு எப்போது கிடைக்கப் போகிறது?''

''மலை கம்பீரமாக நின்று என்ன பயன்? அதனுடைய இயற்கை அழகும் காடுகளும் சேர்ந்தால்தான் பிறர்க்கு உபயோகமாகிறது.''

''நீங்கள் சொல்வது சரியே. ஆனால் மிகவும் துன்புற்றுப் போய்விட்டேன். இனி நான் இருந்து என்ன பிரயோசனம்? சௌபாக்கியவதி தேவியைப் போல் நானும் போய்விட வேண்டுமென்று விரும்புகிறேன். குமுதா போய்விட்டாள். இனி நம் குஸுமா இருக்கிறாள். அவளுக்குக் கல்யாணம் செய்துவைக்க வேண்டும். நான் முன்னாடியே போய்விட்டால் அதைப்பற்றிய கவலைகூட இல்லாது போய்விடும், சம்சாரம் துக்கமயம்.''

''இனி வேறு பேச்சுப் பேசுவோம்: வேறு என்ன எழுதியிருக்கிறார்கள் கடிதத்தில்?''

''புருஷருடைய கடிதத்தைப் படிக்கவில்லை. அலக்கிஷோரி எழுதியிருக்கிறாள். தன் தந்தைக்குக் குஸுமசுந்தரியைக் கொடுக்கிறீர்களா என்று கேட்டு எழுதியிருக்கிறாள். வனலீலாவும் இதைப்பற்றி எழுதியிருக்கிறாள்.''

''என்னது? புத்திதனருக்குக் குஸுமசுந்தரியா?'' என்று எழுந்தார் வித்யாசதுரர். அவர் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்து போய்விட்டன.

குணசுந்தரி நிதானமாகப் பேசினாள்:

''தப்பு ஒன்றுமில்லை. அவர்கள் ஒன்றும் வேற்று மனிதர்கள் இல்லையே!''

''என்ன பேச்சுப் பேசுகிறாய்? புத்தி பேதலித்துவிட்டதா? துக்கபாவை வயது மிகுந்த ஒருவருக்கு மணமுடித்து அவள் விதவையாகிப் போனது தெரியாதா?''

''குமுதசுந்தரியின் மரணத்தால் என் புத்தி தடுமாறிப் போய்விட்டது. குஸுமாவின் கவலை என் சித்தத்தைக் கலக்கி விட்டது. என்ன செய்வது?''

''பிரமாததனனுடன் கல்யாணம் என்பதையே அவசர அவசரமாக நிச்சயித்தோம். அவனுக்கோ படிப்புக் கிடையாது என்ற குறை. இப்போதோ வயது அதிகம் என்ற குறை.''

''அலக் சொல்கிறுள்: புத்திதனர் பிரியமாக் வைத்துக் கொள்வார்; சௌபாக்கியவதி தேவி எவ்வளவு சுகத்துடன் வாழ்ந்தாளோ அவ்வளவு சுகம் அவள் பெறுவாள் என்று நிச்சயமாகக் கூறுகிறுள். வனலீலாவும் அதையேதான் எழுதியிருக்கிறுள்.''

''ஆமாம், அவர்கள் என்ன வேண்டுமானுலும் சொல்வார்கள். எல்லாவற்றையும்விடக் குஸுமா கன்னிகையாகவே இருக்கட்டும்; அதுதான் உசிதம்.''

''இந்தக் கடிதங்களைத்தான் படியுங்களேன்.''

''நான் படிக்கவேண்டிய தேவையில்லை. இதோ பார்: சரஸ்வதிசந்திரன் நிச்சயமான பிறகு வேறு யாரைப்பற்றியும் யோசிக்கவேண்டாம்.''

''அது சரி; ஆனுல் நல்ல வரன் வந்திருக்கிறது; இதை நிராகரித்தால் பின்னர்ப் போனது போனதுதான்.''

''பார்த்துக்கொள்ளலாம்.''

அறையின் பலகணி அரைகுறையாகத் திறந்திருந்தது. குஸுமா ஓடுவது தெரிந்துவிட்டது. உரையாடல் முழுதையும் அவள் கேட்டுவிட்டிருக்கலாமோ என இருவருக்கும் தோன்றியது.

''குஸுமா'' என்று கூவினுர் தந்தை. ஊஹூம்; அவள் வரவில்லை. முதன்முதலாகத் தந்தையின் குரலுக்குச் செவி சாய்க்கவில்லை. அவள் ஓடிப் போய்விட்டாள். தாய் அறைக்கு வெளியே சென்று பன்முறை அவள் பெயரைச் சொல்லி அழைத்தாள். அவள் கண்ணில் படவே இல்லை.

குணசுந்தரி பெண்ணின் நடத்தையைக் கண்டு சற்றே மனமுடைந்து போனுள். தந்தை கூப்பிடுகிறுர்; மகள் மறுக்கிறுளே!

''பலாத்காரமாய்ப் பெண்ணுக்கு மணம் முடிப்பது பெரிய பாவச் செயலாகும்'' என்றுர் வித்யாசதுரர்.

''நான்தான் சொல்லிவிட்டேனே, என் சித்தமே கலங்கிப் போய்விட்டது என்று. என்னுல் இனி எதையும் தாங்க முடியாது. என் சக்தி எல்லாம் போய்விட்டது. தயை செய்து பெண்ணின் கல்யாண முயற்சிகளை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள். கவலைகளிலிருந்து எனக்கு முக்தியளியுங்கள்.''

குணசுந்தரி பொலபொலவென்று கண்ணீர் உகுத்தாள்.

''தகப்பன் பெண்ணையே கடிந்துரைக்காமல் இருக்கும் போது உன்னைப்போன்ற கற்புடைய மங்கைமேல் நான் ஏன் கோபமுறவேண்டும்! என் தங்கமே, உன் மனக்கவலையெல்லாம்

எனக்குத் தெரியாதா?'' என்று உருகிய மனத்துடன் அவளை நெருங்கினர்.

பெற்றோர்களின் பேச்சைக் கேட்டுவிட்ட குஸுமா மனம் குமுறினுள். பெரியதோர் அநியாயம் இழைக்கப்பட்டதாகக் கருதி மனம் கசந்து போய்த் தன்னறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டாள். கண்கள் சிவந்துபோகும்படி அழுதாள்; தொண்டை வறண்டுபோகும் வரை கதறினுள். சற்றே மனச் சாந்தி அடைந்தவளாய்ச் சிந்திக்க ஆரம்பித்தாள்.

'தாய், தந்தையாரைக் குற்றம் சொல்லுவது? என்னுடைய சுகமே அவர்கள் லட்சியம், அதனுல்தான் அவர்கள் மனத்தைக் குழப்பிக்கொண்டு நிற்கிருர்கள்,

'புத்திதனரைப்பற்றிச் சொன்னபோது அப்பா வேண்டாமென்கிருர்; அம்மா பரவாயில்லை என்கிருள். ஏன்? சரஸ்வதி சந்திரர் ஒரு வேளை கிடைக்காமல் போய்விட்டால், அப்போது என்ன செய்வது? ஆகவே, கையில் வந்துள்ள நல்ல வரனை உடனே ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது அம்மாவின் வாதம். எனக்கு இரண்டுமே வேண்டாம். புத்திதனரை வேண்டாம் என்பேன். சரஸ்வதிசந்திரர் கிடைக்கப் போவதில்லை. அப்புறம் எல்லாம் என்னிஷ்டப்படியே!'

அறைக் கதவைத் திறந்தாள்; தாய் தந்தையரிடம் நேரே சென்ருள். அவர்கள் அறையில் மேஜைமீது இருக்கிற கடிதங்களைக் கண்டாள். 'என்னைப்பற்றிய கடிதங்கள்; வாசிப்பதில் என்ன தவறு?' என்று மனத்துக்குள் சொல்லிய வண்ணம் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள். முதல் கடிதம் நர்பேராமிடமிருந்து வந்தது; புத்திதனருக்காகக் குஸுமாவை வேண்டி விநயமாக எழுதியிருந்தார். இரண்டாவது புத்திதனர் எழுதியிருந்த கடிதம்; குஸுமா படிக்க ஆரம்பித்தாள்:

''என்னுடைய குடும்ப விளக்குகள் இரண்டும் அணைந்து விட்டன. ரத்தினங்கள் இரண்டும் மறைந்து போய்விட்டன. என்னுடைய புத்திரியும், என் அருமை நண்பன் நர்பேராமும் தமது பிரியத்தால் என்னை மீண்டும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும்படி வற்புறுத்துகிருர்கள்; என் விருப்பத்திற்கு எதிராக அவர்கள் எழுதியுள்ள கடிதங்கள் தங்களுக்குக் கிடைத்திருக்க வேண்டும். அவர்களை என்னுல் தடுக்க முடியவில்லை. அவர்கள் விருப்பம் ஒரு நாளும் நிறைவேருது என்று தங்களுக்கு உறுதி யளிக்கவே இதை எழுதியிருக்கிறேன்.

''என் குலவிளக்கு குமுதசுந்தரி மறைந்தாள்; அவளுடன் என் பெருமையும் மாண்பும் மறைந்து போயின. ஒழுக்கமற்ற

என் மகன் மாண்டு போனான்; அவன் பிழைகளுக்கான தண்டனை அது என்றே கருதுகிறேன்.

''மருமகள் போன துயரத்தால்தான் என் மனைவி காலமானாள். குணசுந்தரியும் என் மனைவியும் நல்ல தோழியர்; ஆகவே, தோழியின் துயரைத் தோழியே அறிவாள். சுகத்திலும் துக்கத்திலும் என் மனைவி பரிபூரண நட்பைத் தந்தாள். அவளுடைய கணவன் என்ற பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. தெய்வ சித்தம், எனது புண்ணியத்தின் க்ஷீணமான காலம்; ஆகவேதான் அவள் போய்விட்டாள். இனி எனக்கு வாழ்வில் பற்றுக் கிடையாது; நான் இனி வாழவிரும்பவில்லை.

''ஒரே ஒரு பெண்ணை வைத்துவிட்டுப் போய்விட்டாள். பெரியவனாக வளர்ந்திருந்த மகன் மாண்டுவிட்டான். மின்னலைப் போன்று விநாடிக்கு விநாடி சபலபுத்தியுடன் இருக்கும் என் பெண் இனி என்ன செய்வாள்?

''சமூக முறைப்படி பார்த்தால் முதுமையில் மணம் புரிவது மடமையிலும் மடமையாகும். நியாயப்படி பார்த்தால் இளம் பெண்ணை மணந்து அவளை விரைவில் விதவையாக்குவது மகத்தானதோர் பாவச்செயலாகும்.

''சிரஞ்சீவி குஸுமசுந்தரிக்குக் கல்விப் பயனும் அழகும் உள்ள இளம் வாலிபன் கிடைக்கவேண்டும் என்பது என் மனப்பூர்வமான விருப்பம்; அப்படியே நான் அவளை ஆசீர்வதிக்கிறேன். என் ஆசீர்வாதம் முழுப்பயன் பெறுமாறு நான் முயல்வேன். அவளை என் பெண்ணாகவே கருதுகிறேன்.''

குஸுமா படித்துவிட்டு மனம் உருகிப்போனாள். உடனே தன் அறைக்குள் சென்று தனக்குள் பேசிக்கொண்டாள்:

''நல்லதாகப் போயிற்று ஆண்டவனே, நீ என் பிரார்த்தனைக்கு மனம் இரங்கிவிட்டாய்; என்னைக் காத்துவிட்டாய். இனிச் சரஸ்வதிசந்திரர் பாக்கி. அவர் எங்கே கிடைக்கப் போகிறார்? உண்மையில் அவர்தாம் என் குருநாதர். கன்னியாகவே இருக்கவேண்டுமென்ற என் ஆசைக்கு அவர்தாம் காரணம். அவர் கிடைக்காத வரை இனி ஏது எனக்குக் கல்யாணம்? அதுபற்றிய பேச்சு இனி எடுபடவே படாது.

''சித்திமட்டும் ஏன் ஆட்சேபிக்கவேண்டும்? கல்யாணமாகாத பெண்களுக்கு இருக்க இடம் கிடைக்காதாம். சாப்பிட உணவு கிடைக்காதாம். சந்நியாசினியாக மாறிவிட்டால்....? துறவறம் பூண்டுவிட்டால் யார் ஆட்சேபிக்கப் போகிறார்கள்? அதுதான் ஒரே வழி.''

6. மல்ல மகாபவனத்தில் மகாபாரதம்

ராணு காசருக்கு மரியாதை செய்யும்விதத்தில் கூட்டப்பட்ட தர்பாரில் நிகழ்ந்த விவாதம் மணிராஜாவின் மனத்தில் பலவித எண்ணங்களை எழுப்பிவிட்டிருந்தது. தமது தந்தையாரின் தீர்க்கதிருஷ்டியையும், ராஜதந்திரத்தையும் அவர் தம் மனத்துக்குள் பாராட்டிக்கொண்டார். அவர் அன்று நிலை நிறுத்திய கொள்கை இன்றும் பயனளிப்பது கண்டு வியந்து போனார் மணிராஜா. மற்றச் சுதேசி ராஜ்யங்களில் நடைபெறும் ஆட்சியை அவர் கண்டு மனம் உடைந்து போனார். ஆங்கில அரசாங்கத்தின் முன்னேற்றம் கண்டு பொறுமை அடைந்தார். இந்திய சுதேசி ராஜ்யங்களின் கொடூரமான ஆட்சியையும், அறிவிலித்தனமான கொள்கைகளையும் கண்டு மனம் நொந்தார். ஆங்கில அரசாங்க அதிகாரிகளின் புத்திக் கூர்மையையும் பட்சபாதமற்ற ஆட்சியையும் தமது ராஜ்யத்திலும் பெறவேண்டும் என விழைந்தார். இவ்வாறாக நாலைந்து நாட்கள் கழிந்தன. ஒரு நாள் பகல்வேளை மல்ல மகாபவன மாளிகையில் 'குருக்ஷேத்திர பவன்' என்றதோர் அறையில் மகாராஜா மணிராஜா மேலும் கீழுமாக நடந்துகொண் டிருந்தார்.

மல்ல மகாபவனத்தின் திட்டத்தை மல்லராஜாவே தயாரித்திருந்தார். ராஜ்யத்தின் தலைநகரில் அழகிய கட்டிடம் ஒன்று அமைந்து, பொது மக்களுக்குப் பயன்படவேண்டும் என்ற மூலநோக்கத்துடனே அதை அமைக்கத் திட்டமிட்டிருந்தார். இதே காரணத்துடனேதான் மராமத்து இலாகா ரத்ன நகரியில் இயங்கி வந்துகொண் டிருந்தது. அழகான கட்டிடங்களைப் பயன்படத் தக்கனவாக அமைப்பதையே மல்லராஜா நோக்கமாகக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் வித்யாசதுரருடன் மல்லராஜா இதைப்பற்றி விவரித்தார். சுதேசி ராஜ்யங்களில் மன்னர்கள் பிரஜைகளின் சொத்தைத் தம் சொத்தாகப் பாவித்து விரயம் செய்வதைக் கண்டித்தார். பெரிய பெரிய அரண்மனைகளையும், தமக்கெனப் பூங்காக்களையும் சிறிதேனும் கவலையின்றிக் கஜானாவிலிருந்து பணத்தை எடுத்துச் செலவழித்து அமைப்பதை அறவே வெறுத்தார். அதைப்போலவே மன்னர்கள் தம் திருமணங்களுக்கும், தம் புத்திரர்கள் - புத்திரிகளின் கல்யாண வைபவங்களுக்கும் பொதுச் சொத்தை உபயோகித்து, போலி ஆடம்பரத்திலும் போலி கௌரவத்திலும் தேவையற்ற செலவு செய்வதை வெகுவாகக் கண்டனம் செய்தார். மகாபாரதத்தில் பீஷ்ம பிதாமகர் அம்புப் படுக்கையில் படுத்தவண்ணம் தரும

புத்திரருக்கு உபதேசம் செய்ததுபோல் தமது அநுபவத்தில் உதித்த அரும்பெருங் கருத்துக்களை இளைஞரான மணிராஜாவுக்கும் திவான் வித்யாசதுரருக்கும் வானப்பிரஸ்த நாட்களில் எடுத்துரைத்தார். ஒரு நாள் மணிராஜா தம் தகப்பனாரின் பெயர் நீடூழி நிலைத்திருக்கும்வண்ணம் கட்டிடம் ஒன்றைக் கட்ட நிச்சயித்து அதைப்பற்றித் தந்தையாரிடம் சொன்னபோது மல்லராஜா ஆட்சேபம் தெரிவித்துப் பேசினார்:

''பேரும் புகழும் என்றும் நிலைத்திருப்பனவல்ல. இருந்தாலும், உன் இச்சைப்படி கட்டிடம் கட்டவேண்டுமென்றால் இப்படிக் கட்டலாம்: அதில் மன்னர்கள் நீதிமான்களாக எப்படி ஆட்சி செய்யவேண்டும் என்பதைப் போதிக்கலாம்: நம்முடைய அநுபவத்தைப் பிற்காலச் சந்ததியார் பெறும்வண்ணம் கட்டிடத்தை அமைக்கலாம்'' என்று ஆலோசனை சொன்னார்.

அதன்படியே மணிராஜா ராஜ்ய வேதசாலை என்ற மாளிகையை அமைத்தார். அதற்கு மறுபெயர், மல்ல மகாபவனம் மாளிகைக்குள் நுழைந்த மாத்திரத்தில் அழகியதோர் பூங்கா; பின்னர் அதைத் தொடர்ந்து சங்க மண்டபங்கள்; விதுரபவனம் என்ற நீண்டதோர் சபா மண்டபம்; ஐந்து வேறு சபா மண்டபங்கள் இருந்தன. அவைகளின் பெயர் துரியோதனபவனம், துச்சாஸனபவனம், கர்ணபவனம், துரோணபவனம், பிதாமகபவனம்; கௌரவசாலை என்று இந்த ஐந்து பவனங்களுக்கும் பொதுப் பெயர் தந்திருந்தார். பாண்டவசாலை என்ற பெயரில் ஐந்து பாண்டவர்கள் பெயரிலும் ஐந்து சபாமண்டபங்கள். பின்பு, 'திருதராஷ்டிர பவனம்', 'பாண்டு பவனம்' என்ற இரு சபா பண்டபங்கள்; பாஞ்சாலியின் பெயரில் 'பாஞ்சாலி மண்டபம்'. இவை யாவற்றுக்குமிடையே 'குருக்ஷேத்திர மண்டபம்'.

சந்திரகாந்தனும் வீரராவும் சொன்னவற்றுக்கு வித்யாசதுரர் அளித்த பதில் மணிராஜாவிற்கு அவ்வளவு திருப்தி அளித்திருக்கவில்லை. வித்யாசதுரர் வீரராவையும் சந்திரகாந்தனையும் மல்ல மகாபவனைக் காண அழைத்திருந்தார்; அதன் மூலம் சுதேசி ராஜ்யங்களின் புது நோக்கை அவர்கள் அறிந்து திருப்தியுறுவார்கள் என நம்பினார்கள், வித்யாசதுரரும் மணிராஜாவும். மகாராஜா அவர்களது வருகையை எதிர்நோக்கியிருந்தார்.

வித்யாசதுரர் அவர்களைச் சிறிது நேரத்தில் அழைத்து வந்தார். குருக்ஷேத்திரத்தில் எல்லோரும் அமர்ந்தார்கள். மாளிகையைப்பற்றி எல்லோருக்கும் வித்யாசதுரர் அறிமுகம் தந்தார். வீரராவ் மல்லராஜாவின் தீர்க்கதரிசனத்தை வியந்து போற்றினார்.

குருக்ஷேத்திரத்திலிருந்து பாண்டுபவனம் சென்றார்கள். பாண்டு ராஜாவின் இரு பத்தினிகளின் உருவச் சிலைகள் இருந்தன. அந்தச் சபாமண்டபத்தில் சிம்மாசனத்தின்கீழே கீழ்க் கண்ட வரிகள் பொறிக்கப்பட்டிருந்தன:

> ''மன்னர்கள் ராஜயோகம் எப்படிப் பெறுகிறார்கள்? ஆளுபவர்களுக்குத் தேகம் தேவை. திருதராஷ்டிரருக்குத் தேகம் இருந்தது; பார்வை இல்லை. ஆகவே தான் இளையவராக இருந்தாலும் ராஜயோகம் கிட்டியது. ராஜத்துவ குணங்கள் அவரது வம்சத்தில் பெருகின.''

இன்னொரு பக்கம் மணிராஜாவின் விருப்பப்படி பொறித்துள்ள எழுத்துக்கள் ஆங்கிலத்தில் இருந்தன:

> ''Spirit of Acquisition and Growth! Thou wert born to acquire and to grow and not to enjoy. Thou wert born for duties and not for rights. Power is the sweet charmer by thy side and awful will be the moment that will tempt thee to her embraces.''

வீரராவ் படித்துவிட்டு வியப்புடன் மகிழ்ச்சியடைந்தார்.

சந்திரகாந்தன் வினா ஒன்று விடுத்தான்:

''ராஜயோகம் பாண்டு ராஜா அடைந்தார் என்பதிலிருந்து தற்காலத்தில் சக்தியற்ற நாட்களில் சுதேசி மன்னர்கள் என்ன தெரிந்துகொள்வார்கள்?''

மணிராஜா பவனத்தின் காரியதரிசிக்குக் குறிப்பு ஒன்று செய்தார்; மேஜையிலிருந்து அவர் புத்தகம் ஒன்றை எடுத்து வந்தார். வித்யாசதுரரின் கையெழுத்தில் எழுதப்பட்டிருந்த சில வாக்கியங்களை மன்னர் வாசித்துக் காட்டினார்:

''ராஜ்யம் என்றால் உலகம் என்பதாக மல்லராஜா எண்ணியதில்லை. ராஜ்யம் என்றால் ராஜத்துவம், அல்லது ராஜ குணங்களின் சேர்க்கை என்பதாகப் பொருள் தந்திருந்தார். சுதேசி ராஜ்யங்களில் அத்தகைய ராஜத்துவம் வளர்ந்தால் ராஜயோகத்தின் வளர்ச்சி நிச்சயம். அத்தகைய வளர்ச்சி குறைந்தால் அதற்குக் காரணம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமல்ல; சுதேசி மன்னர்களேதாம்.''

சந்திரகாந்தனும் வீரராவ் அவர்களும் படித்துத் திருப்தியடைந்தார்கள்.

''இத்தகைய புத்தகங்கள் எவ்வளவு இருக்கின்றன? இவைகளால் என்ன பயன்?'' என்று கேட்டான் சந்திரகாந்தன்,

''ஒவ்வொரு பவனத்திலும் இதைப்போல ஐந்து புத்தகங்கள் இருக்கின்றன. காலஞ் சென்ற மகாராஜாவின் கருத்துக்களை

என் ஞாபகத்தில் உள்ளவரை ஒரு புத்தகத்தில் எழுதிவைத்திருக்கிறேன். இன்னொரு புத்தகத்தில் மகாராஜா அவர்கள் தமக்கு அவ்வப்போது தோன்றும் எண்ணங்கள், ஏற்படும் அநுபவங்கள், படித்த கருத்துக்கள் ஆகியவற்றை எழுதி வருகிறார். மூன்றாவது புத்தகம், ரத்னநகரியின் வருங்கால மன்னர்கள் தம் எண்ணங்களை எழுதுவதற்காக. நான்காவது புத்தகம், ரத்னநகரியின் திவான் பதவியிலிருப்பவர்கள் தத்தம் சிந்தனைகளையும் அநுபவங்களையும் எழுதுவதற்காக. ஐந்தாவது புத்தகத்தில் மகாராஜாவின் உபயோகத்திற்காகப் பலப் பல புத்தகங்களிலிருந்து குறிப்பிடத் தக்க கருத்துக்களைக் காரியதரிசி திரட்டி எழுதிவருகிறார்'' என்றார் வித்யாசதுரர்.

சந்திரகாந்தன் குந்திதேவியின் சிலையின்கீழ்ப் பொறித்திருந்த எழுத்துக்களைப் படித்தான்:

> ''தைரியமும் பெருந்தன்மையும் இரக்கமும் கூடிய குந்திதேவி, பெருந்துயரில் புதல்வர்களைப் பெற்றெடுத்து வளர்த்தாள். ராஜ்ய காரியங்களைச் சித்தமாக்கவும், அழிவிலிருந்து ஆக்கம் எழச் செய்யவும், தர்மபத்தினியின் சேவை தேவை. நீயன்றிப் பாண்டவர்கள் இல்லை; ஆக்கமில்லை; சித்தமும் இல்லை.''

அங்கிருந்து எல்லோரும் அருகேயுள்ள சபாமண்டபத்திற்குச் சென்றார்கள். வித்யாசதுரர் சொன்னார்:

''பாண்டுபவனம் ராஜயோகத்தின் சாதனையை விளக்குகிறது. மற்றச் சபாமண்டபங்கள் மக்களின் நலனை விளக்குகின்றன. பாண்டு ராஜா இல்லாவிடில் ராஜயோகமில்லை; பாண்டவ கௌரவர்கள் இன்றேல் மக்கள் நலனுமில்லை. ராஜ்ய க்ஷேமம் என்கிற உடலில் ஞானேந்திரியங்களைப் பாண்டவர்களும் கர்மேந்திரியங்களைக் கௌரவர்களும் பிரதிபலிப்பதாகச் சபாமண்டபங்கள் விளக்குகின்றன. கர்மேந்திரியங்களை ஞானேந்திரியங்கள் வெல்லுவதாகவும், எல்லாவற்றிலும் சிறந்த தர்மத்தைப் பாண்டுபவனத்துக்கு அருகில் உள்ள சபாமண்டபம் எடுத்துக் காட்டுகிறது.''

யுதிஷ்டிரர் சிலைக்குக் கீழே தங்கநிற எழுத்துக்கள் மிளிர்ந்தன:

> ''குடும்பத்திலிருந்து ராஜ்யபாரம்வரை ஒரே ஒரு பொருளை மல்லராஜா சாலச் சிறந்ததாகக் கருதினார் - அதுதான் தர்மம். எல்லா யுகத்திலும் எல்லா மக்களுக்கும் உரிய தர்மம் தருமபுத்திரர் காட்டிய தர்மந்தான். ராஜயோகத்தை நிலைநிறுத்தி, ராஜக்ஷேமத்தைத்

தருவது தர்மந்தான்; பாண்டுராஜா அதைத் தம் மூத்த மகன்மூலம் உலகுக்குத் தந்தார். தர்மம் விழிப்புத் தருகிறது. அதர்மம் உன்னை உறங்க வைக்கிறது.''

''தருமபுத்திரர் சிலைக்குப் பின்னால் தெரியும் கதவு வழியாகப் பாஞ்சாலி பவனத்துக்குச் செல்லலாம். பாஞ்சாலி மக்களின் அன்னை; அவளைப் பாதுகாப்பவர்கள் ஐந்து பாண்டவர்கள். இந்தப் பவனத்தில் மூன்று மூலைகளிலும் ஆசனங்கள் உள்ளன. மகாராஜா ஓர் ஆசனத்தில் அமர்ந்து தர்மவிசாரமும் அரசியல் விசாரமும் புரிவார்; இரண்டாவது ஆசனத்தில் அமர்ந்து அதிகாரிகளையும் ராஜ சேவகர்களையும் விசாரிப்பார்; மூன்றாவது ஆசனத்திலிருந்தவாறு மன்னர், மக்களுக்கு எதிராகக் குற்றம் புரிபவர்களைத் தண்டிப்பதற்கான யோசனை புரிவார்; அதன்படி தண்டிப்பார்'' என்றார் வித்யாசதுரர்.

தர்மபவனம், பீமபவனம் இரண்டிற்குமிடையே வாயில்கள் இருந்தன.

வித்யாசதுரர் சொன்னார்: ''தருமபுத்திரர் தம் சகோதரர்களைக் கலந்தாலோசிக்காமல் தருமம் நிர்ணயித்ததில்லை; அண்ணனது உத்தரவைத் தம்பிகள் என்றும் மீறியதில்லை. இந்த ஒற்றுமையை விளக்கும்வண்ணம் பஞ்சபாண்டவர்களின் பவனங்களில் ஒன்றிலிருந்து இன்னொன்று செல்ல வாயில்கள் இருக்கின்றன.''

பீமனின் சிலைக்குக் கீழே எழுதியிருந்ததைப் படித்தார்கள்:

''மல்ல ராஜாவின் பலம் சைன்யத்தில் இருந்ததில்லை. அவருடைய படை அவருக்காக அல்ல. அது பாஞ்சாலி - மக்களுக்காக; மக்களின் பாதுகாப்பிற்காக.''

''திருதாஷ்டிரர் மன்னர்களின் உடல். துரியோதனன் அந்த உடலில் ஒரு பாகம். ராஜ்யத்தின் கொள்கையைத் துரியோதனன் குறிக்கிறான். துச்சாஸனன் தீயவர்களின் சக்தியைக் குறிக்கிறான். இம்மூவரும் தருமரின் அரசைத் தாக்குகிறார்கள். பாஞ்சாலியின் துகில் உரியும்போது பீமன் சபதம் செய்துகொள்கிறான்..இப்போது அர்ஜுன பவனத்திற்குச் செல்லுவோம்'' என்றார் வித்யாசதுரர்.

அங்கே அழகான சிற்பம் அவர்களை வரவேற்றது. ரதத்தில் அர்ஜுனன் உட்கார்ந்திருக்கிறான்; பார்த்தசாரதி ரதம் ஓட்டிக் கொண்டிருக்கிறார்.

மல்ல ராஜாவுக்குப் பிடித்தமான அறை இது. இங்கே ஐந்து ஆசனங்கள் இருக்கின்றன. யோகாசனம், நீதி ஆசனம்,

கிரியாசனம், விஜயாசனம், விபூதி ஆசனம், கண்ணனும் அர்ஜுனனும் இறைவனும் மனிதனும் ஒருமித்த காட்சியைக் காட்டுகிறார்கள். மனித முயற்சிகள் இறைவனருளால்தான் சித்தமடைகின்றன; ஆண்டவனில்லையேல் மனிதன் வெற்றி பெறுவதில்லை என அறிவுறுத்துகிறது இது'' என்று கூறினார் வித்யாசதுரர்.

''இந்த நவீன காலத்தில், ஆங்கிலேயர் ஆளும் நாட்களில் பீமனின் கதையும் அர்ஜுனனின் வில்லம்பும் எம்மாத்திரம்? இதை விளக்கவேண்டும்'' என்றார் வீரராஸ்.

''மகாகவிகளின் கற்பனையில் எழுந்த நிகழ்ச்சிகளை அவ்வப்போது தோன்றும் கவிஞர்கள் தத்தம் காலத்திற்கேற்பப் பயன் படுத்துவதுபோல நம் பெருங்காவியங்களின் செய்திகளை நமது காலத்திற்கு ஏற்றவாறு புரிந்துகொள்ள வேண்டும்.

''அர்ஜுனனின் ரதம் நீதி, செயல்திறன் என்ற இரண்டு சக்கரங்களின்மேல் ஓடுகிறது. எல்லாப் பாண்டவர்களும் தேவ குமாரர்களானாலும் இந்திரனின் மகன் அர்ஜுனனே செயல் வீர னாகிறான். தர்மபுத்திரனின் ஆணையையும் பீமனின் எண்ணத்தை யும் அர்ஜுனனே செயல்படுத்துகிறான். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பாண்டவரின் நண்பர்; அவர்களுக்கு உபகாரம் செய்கிறார். ஆனால் அவர் அர்ஜுனனின் ரதத்தைத் தாமே ஓட்டுகிறார்.

''இதோ ஒவ்வொரு செயலுக்கும் சிந்தனை வேண்டும். அர்ஜுனன் மனம் நொந்து அஸ்திரங்களைத் தூர எறியும்போது சிந்தனையாளர் வழிகாட்டுகிறார். கர்மயோகத்தின் பாதைதான் கண்ணன் காட்டிய வழி.

''இப்படியே ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒரு வழிகாட்டி வேண்டும். மன்னர் வழி தவறும்போது, மனம் கலங்கும்போது, தக்க வழிமுறைகளைக் காட்ட ஒரு சிந்தனையாளர் தேவை. அவர்தான் ராஜ்யத்தின் ரதத்தை, மக்களின் முன்னேற்ற வண்டிக்குச் சாரதியாகச் செலுத்துவார். ஒவ்வொரு மன்னருக் கும் தகுந்ததோர் சீரிய மந்திரி தேவை. பாண்டவர்களுக்குத் தக்கதோர் அமைச்சர் கண்ணபிரானின் வடிவத்தில் கிட்டினார். கௌரவர்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை'' என்று விவரித்தார் வித்யாசதுரர்.

மணிராஜா பேசினார்:

''தர்ம பவனில் நாம் கண்ட சுலோகத்தை நினைவுறுத்திக் கொள்வோம் - யதோ தர்மஸ்ததோ ஜய:-அறம் எப்போதும் வெல்லும். இது உண்மை. ஆனால் ஆண்டவன் அருள் இல்லாது போனால் தர்மத்தின் சக்தி குன்றிவிடுகிறது என்பதை நமக் குணர்த்தவே இந்த வாக்கியம் - யத: க்ருஷ்ணஸ்ததோ ஜய:''

வித்யரசதுரர் பேசினார்:

''மகாராஜர் மல்லராஜாவின் மனத்தில் எழுந்த மகத்தான கருத்துக்கள் இவை; என்றும் இவற்றை நினைவில் இருத்தி ராஜ்ய பாரம் செலுத்தியிருக்கிறார் மஹாராஜா. இனி இருக்கும் பவன்கள் மேலும் சில செய்திகள் சொல்லியிருக்கின்றன. சங்கர சர்மாவும் பிரவீண் தாஸும் விவரிப்பார்கள். ஆனால் முக்கியமானவற்றை இதுவரை கண்டுகொண்டீர்கள்.''

''அற்புதமான காட்சிகள் இவை; அழகழகான கருத்துக்கள்'' என்று வியந்து நின்றான் சந்திரகாந்தன்,

எல்லோரும் குருக்ஷேத்திர பவனம் நுழைந்தார்கள், பிரவீண் தாஸ் பேசத் தொடங்கினார்:

''ராஜசக்தியின் உருவம் மாத்ரி - அவளுக்கு இரண்டு புத்திரர்கள்: நகுலன் அழகின் வடிவம், சகதேவன் உணர்வின் உருவம். அரசும் மக்களும் சேர்வதுபோல நகுலனும் சகதேவனும் சேர்ந்தே இருந்தார்கள். நகுலன் அழகு வாய்ந்தவன்; சகதேவன் உடலை ஆரோக்கியமாக வைத்திருந்தான்; சகதேவன் பொருள் குவித்தான்; அவன்தான் ராஜ்யத்தின் பொருள் அதிகாரி. நகுலன் பொருளைச் செலவு செய்வான். தேசத்தின் பொருளாதார முன்னேற்றம், பூமி, திரவியம் ஆகியவற்றின் பிரச்னைகளை ஆராய்ந்து அவைகளைத் தீர்க்க முயல்பவன் சகதேவன். அவன் தான் தேசத்தின் வரிவசூல் அதிகாரி. இந்த ஐந்து பவன்களுக்குப் பின்னால் நாம் காண்பது பாஞ்சாலி பவனம். பிரஜைகள் யாவரையும் கண்டு கலந்தாலோசிப்பது இங்கே. பாண்டு பவனத்துக்கு எதிரே இருப்பது திருதராஷ்டிர பவனம்.''

சங்கரசர்மா தொடர்ந்தார்:

''எதிரே இருப்பது துரியோதன பவனம். திருதராஷ்டிரனை நாம் ராஜ சரீரம் என்றழைத்தால் துரியோதனனை நாம் ராஜ தந்திரம் என்று குறிக்கலாம். அர்ஜுனன் எவ்வாறு நீதியையும் செயல் திறனையும் தனது ரதத்தின் சக்கரங்களாகக் கொண்டானோ அவ்வாறே துரியோதனன் ராஜதந்திரத்தையும் ஆங்கிலத்தில் 'டிப்ளொமஸி' என்னும் மாண்பையும் கொண்டிருந்தான். துரோணரும் பீஷ்மரும் பாண்டவர்களின் நண்பர்களாக இருந்தார்கள் என்றாலும், கௌரவர்களுக்கு உதவி புரிந்த காரணம் துரியோதனனின் பொருளைப் பெற்று வந்ததுதான். கர்ணனைத் துரியோதனின் ராஜதந்திரந்தான் வென்றது. ஆனால் அவனுடைய ராஜதந்திரம் துன்மார்க்கத்தில் சென்றதால் அவனுக்குத் தீங்கே ஏற்பட்டது.

''ராஜ்யத்தின் தண்டசக்தி ரூபந்தான் துச்சாசனன்: திரௌபதியின் துகிலை உரிந்ததால் பீமனின் சபதம் எழுந்தது-

அருகே கொடைவள்ளல் கர்ணனின் பவனம். வள்ளன்மைக்கு அவன் எடுத்துக்காட்டு. எந்தத் தேசத்தில் கொடையும் தானமும் இல்லையோ அங்கே வாழ்வும் வளமும் கிடையாது.

அதற்குப் பிறகு குரு பவனம். இங்கே துரோணர், அவருடைய மகன் அசுவத்தாமன்-இருவருடைய சிலைகளும் இருக்கின்றன. வித்தையையும் கலையையும் பிறர்க்கு வழங்குபவர் குரு; அந்தணர் வித்தையையும் கலையையும் தாமே பயன்படுத்துபவரல்லர்; மற்றவர்களுக்குப் புகட்டுபவர். யுத்தத்தில் பயின்ற கலையைப் பயன்படுத்த இறங்கியபோது குருவின் தர்மம் அதர்மமாகிறது; தர்மம் நாசம் அடைந்துவிட்டது. துரோணர் அதைச் செய்தார். இந்த நாட்டில் அஸ்திரங்களை உபயோகித்த ஒரே அந்தணர் பரசுராமர்தாம். ஆசிரியர் என்ற .பதவியிலிருந்து இறங்கி யுத்தம் தொடுத்தபோது அதர்மம் எழுந்தது. அதை வெல்வதற்காகச் சீடனும் குருவாயிருந்த துரோணர்முன் வில்லம்பு தொடுத்தான்; அது தர்மமானது.

''இனிப் பிதாமகரின் பவனம் செல்வோம். பீஷ்மர் வேதசாஸ்திர புராணங்களில் விற்பன்னர். அவரது ஞானம், சற்குணங்கள் யாவற்றிலும் இந்தத் தேசத்தின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது. அபூர்வமான ராஜ நீதி அவரை யுத்தத்தில் ஆழ்த்தியது. இருந்தாலும், ஞானம் தோல்வியுறவில்லை. அவர் வீழ்ந்தாலும் அம்புப் படுக்கைகள்மீதுதான் வீழ்ந்தார். கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே!''

சங்கர சர்மா முடித்தார்.

வித்யாசதுரர் பேச ஆரம்பித்தார்:

''கௌரவ பவனத்துக்குப் பின் விதுரபவனம் இருக்கிறது. அங்கே அதிதிகளையும் நண்பர்களையும் மகாராஜா சந்திக்கிறார். எல்லாவற்றிற்கும் கடைசியில் குருக்ஷேத்திரம். இதுதான் அரசவை - 'கவுன்சில் ஹால்.' எல்லோரும் குழுமிப் பிரச்னைகளை அலசி ஆராயுமிடம் இதுதான்.''

வீரராவ் மனம் மகிழ்ந்து பேசலானார்.

''அற்புதமான அநுபவத்தை இன்று பெற்றேன், திவான் அவர்களே! தங்களின் வார்த்தைகளால் நான் இன்று ஆறுதல் அடைந்தேன். எல்லா சுதேசி ராஜ்யங்களிலும் தங்களையொத்த அதிகாரிகள் மன்னர்களுக்கு ஆலோசகர்களாக அமர்ந்தால் சுதேசி ராஜ்யங்கள் பெரும் முன்னேற்றமடையும்; சங்கர சர்மா, பிரவீண் தாஸ் ஆகியோரின் கனவும் நனவாகும்.''

7. பிரேமையின் பந்தம்

அன்று காலை பக்திமையாவும் குமுதசுந்தரியும் மற்றத் துறவிகளுடன் ஸுந்தரகிரியின்மேல் ஏறிச் சென்றார்கள். அதே நேரத்தில் சரஸ்வதிசந்திரனும் விஹாரபுரி, ராதேதாசர் ஆகியோருடன் ஸுரக்கிராமம், சமுத்திரக்கரை இரண்டையும் பார்க்க மலையிலிருந்து கீழே இறங்கினான்.

மலையின் மேற்குப்பாகம் அன்று அற்புதமான அழகுடன் திகழ்ந்தது. மரம் செடி கொடிகள் என்றுமில்லாத பசுமையுடன் மிளிர்ந்துகொண் டிருந்தன. பரந்த புல்வெளிகளுக்கிடையே பலப்பல ஒற்றையடிப் பாதைகள் பாம்புகள் போல் நெளிந்து கொண்டிருந்தன.

சித்திரை மாதத்துத் தூய வானம் தலைக்குமேலே வெள்ளைத் துணிபோல் போர்த்துக்கொண் டிருந்தது. ஒரு மேகங்கூடக் காணப்படவில்லை. மலையேறிவந்த பெண் துறவிகள் சற்று நேரம் களைப்பாறினார்கள். அவர்களிடையே குமுதசுந்தரி தனது அழகாலும், உடையாலும், அணிகளாலும் தனித்து விளங்கினாள். பக்திமையா நல்ல உயரமும், பருத்த உடலும் வாய்ந்தவள்; நிறமோ நல்ல கறுப்பு. அதுபோலவே மற்றச் சந்நியாசினிகளும். இருந்தாலும், துறவறம் பூண்ட அழகு அதிலே ஒளிர்ந்தது. எல்லோருக்கும் நடுவிலே அவள் சற்றே உயர்ந்த பாறைமீது அமர்ந்துகொண்டாள். ஒரு சந்நியாசினி பேசினாள்:

''மதுரிமையா! கடலுக்கும் மலைக்கும் நடுவிலே பளிங்கெனத் திகழும் மதுரமான ஆகாயத்தில் ஒளிவிடும் கதிரவனைப் போன்று நீ எங்களுக்குப் பிரியமானவள். உனது உள்ளத்தில் எழும் துயர் எங்களுக்குக் கன்னங்கரிய இரவு போன்றதாகும். உன்னைப் போன்ற ஸம்ஸாரிகள் விவாகம் புரிவதற்கு முன்னால் நேசம் கொள்ளுவதில்லை. நாங்கள் மன்மதன் எப்போது விழித்துக்கொள்கிறானோ அப்போது அவனது ஆக்ஞைக்கு இணங்க மணம் புரிந்துகொள்கிறோம். எங்கள் நட்பின் முடிவு 'அலக்'கில் வருகிறது; எப்போதாவது நட்புக் கொள்ள வேண்டுமென்றால் எங்களைப் போன்றவர்களிடம் கொள்.''

சிறிது நேரம் பஜனையிலும் துதிப்பாடல்களிலும் கழிந்தது. அப்போது பாதையில் சரஸ்வதிசந்திரனை அழைத்துக்கொண்டு விஹாரபுரியும் ராதேதாசரும் நடந்து வந்துகொண் டிருந்தார்கள். பெண்கள் கூட்டத்தைக் கண்டு திகைத்து நின்றார்கள் அவர்கள். பெண்களும் எழுந்து நின்றார்கள். பக்திமையா முன் வந்து அவர்களை வணங்கினாள். குமுதசுந்தரி சரஸ்வதிசந்திரனை

அடையாளம் தெரிந்துகொண்டாள். காவியுடையில் அவன் மறைந்து விளங்க முடியவில்லை. சரஸ்வதிசந்திரன் அவளைப் பார்த்தான்: - 'இவள் இங்கே எங்கே வந்தாள்?' - குமுதசுந்தரி கண்களைத் தாழ்த்திக்கொண்டாள்.

சந்நியாசினி ஒருத்தி கேட்டாள்: ''நவீனசந்திரர் என்பது இவராகத்தான் இருக்குமா?'' விஹாரபுரி, ''ஆமாம்'' என்று பதில் தந்தார். நவீனசந்திரன் தான் ஆசிரமத்தில் எப்போது வந்தான் என்பதுபற்றியும் அன்று அவர்களது ஸுரக்கிராமப் பயணம்பற்றியும் சொன்னான்.

விஹாரபுரி அவர்களிடம், ''நீங்கள் மலையுச்சி அடையும் போது நல்ல உச்சி வேளையாக இருக்கும். பாறைகள் வெப்பத்தால் சூடேறிவிடும். நீங்கள் பூங்கொடி ஒன்றை அழைத்துக் கொண்டு போகிறீர்கள். அவள் வாடாமல் வருந்தாமற் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று எச்சரிக்கை செய்தார்.

ஆடவர்கள் நகர்ந்தார்கள்.

பக்திமையா குமுதசுந்தரியைத் தன் தோளின்மேல் தூக்கிக்கொண்டாள். என்ன எதிர்த்தாலும் பக்திமையா விடவில்லை. ''பரவாயில்லை, நான் நடந்து வருகிறேன்'' என்ற குமுதசுந்தரியின் சமாதானத்தை அவர்கள் ஒப்புக்கொள்ள வில்லை. பக்திமையாவும் மற்றவர்களும் மாற்றி மாற்றித் தம் தோள்களில் குமுதாவைத் தூக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள்.

ஸுரக்கிராமம் என்ற தீர்த்த ஸ்தலத்தில் கடலும் நதியும் கலக்கும் இடத்தில் பல தேவாலயங்கள் இருந்தன. அவற்றில் பெரியது சிவாலயம் ஒன்று.

காலை ஒன்பது மணிவாக்கில் வந்தடைந்த அவர்கள் கோயில் முற்றத்தில் உட்கார்ந்து களைப்பாறினார்கள். ராஜேசுவரக் கோயிலினின்று பலவிதத்தில் வேறுபட்டதாகக் காட்சியளிக்காவிட்டாலும், அந்தச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தக்க வேறுபாடுகளுடன் காட்சியளித்தது இக்கோயில்.

கோயிலில் தரிசனம் செய்தபிறகு தர்ம சர்ச்சையில் சிறிது நேரம் கழித்தார்கள். பின்னர் அங்கே ஓர் அந்தணர் இறைவனைத் தரிசித்துவிட்டுப் பின்னர் அவர்களிடம் வந்தார்.

''துறவிகளே, இங்கே எங்கே வந்தீர்கள்?'' என்று வினவினார்.

''ஐயா, இவர் எங்களுடைய அதிதி. இந்தப் புண்ணிய ஸ்தலத்திற்கு வந்து தரிசிக்க விரும்பினார்; ஆகவே, அழைத்து வந்தோம்'' என்றார் விஹாரபுரி, நவீனசந்திரனைக் காட்டிய வண்ணம்.

அந்தணர் நவீனசந்திரனைப் பார்த்து வணங்கினார். நவீன சந்திரன் கரம் கூப்பினான்.

''தங்கள் பெயர் என்ன?'' என்று கேட்டார் அந்தணர்.

''நவீன சந்திரன்.''

''அப்படியா, இப்போது பத்திரிகைகளில்...சந்திரன் என்ற பெயர் அடிப்பட்டு வருகிறது. அது நீங்களாக இருக்குமா?''

''எதைப்பற்றி?''

''பம்பாயிலிருந்து ஒரு வித்துவான் ஓடிவந்துவிட்டாராம். அவர் பெயர் ஏதோ..சந்திரனாம்.''

''முழு விவரம் தெரிந்தால்தான் பதில் சொல்லலாம். நீங்கள் எந்தப் பத்திரிகை படித்தீர்கள்? இங்கே செய்திப் பத்திரிகைகளும் வருகின்றனவா?''

அந்தணர் அவனைப் புத்தகசாலை ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். பம்பாயிலிருந்து வெளிவரும் பத்திரிகையில் லக்ஷ்மீ நந்தனர் அளித்திருந்த விளம்பரத்தைப் படித்தான். ''இங்கே வேறு பத்திரிகைகள் வருகின்றனவா?'' என்று அவன் கேட்டதற்கு அவர் ரத்னநகரிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்றை எடுத்துப் போட்டார். ''இந்தப் பத்திரிகையில் எங்கள் திவானின் குடும்பத்தைப்பற்றிய செய்திகள் வெளிவந்திருக்கின்றன'' என்றார்.

சரஸ்வதிசந்திரன் படித்தான். பிரமாததனனின் மரணச் செய்தி, குமுதசுந்தரி நீரில் மூழ்கி மறைந்த செய்தி, சௌபாக்கியதேவி காலம் அடைந்த செய்தி, புத்திதனர் துறவறம் பூணுவதாகத் தீர்மானித்துவிட்ட செய்தி - எல்லாம் பேரிடிகளாய் அவனைத் தாக்கின.

அந்தணர் சந்தேகம் கொண்டார்.

''நீங்கள் இவ்வளவு துக்கப்படுகிறீர்களே; அப்படியானால் நீங்கள் சரஸ்வதிசந்திரர்தானா?''

சரஸ்வதிசந்திரனின் கண்களிலிருந்து நீர் வழிந்தது. ''ஐயா, சரஸ்வதிசந்திரன் ஓடிவிட்டான் என்பதால் இந்தத் துயரமில்லை. நான் ஸ்வர்ணபுரியைச் சேர்ந்தவன். நான் திவான் புத்திதனர் அவர்களை அறிவேன். அவருக்கு நேர்ந்த கதி என்னைத் துக்கத்தில் மூழ்கடித்துவிட்டது'' என்று சமாதானம் சொன்னான். அந்தணரின் சந்தேகம் போய்விட்டது. சாதுக்கள் சமாதானம் அடைந்தார்கள்.

அப்போது வணிகன் ஒருவன் வந்து அவர்களைப் பார்த்து, ''இன்று என் பாக்கியவசத்தால் தங்களைப் பார்க்கும் பேறு கிட்டியது. தாங்கள் என்னுடைய இல்லத்தில் வந்து உணவருந்த வேண்டும்'' என்று அழைப்பு விடுத்தான்.

அவனுடைய அழைப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதற்குமுன் ராதிகேசரின் கோயிலில் கண்ணபிரானின் உற்சவம் என்பதால், அங்கே சென்று வணங்கவேண்டும் என்று நிச்சயித்தார்கள். சரஸ்வதிசந்திரன்மட்டும் பொம்மைபோல் நகர்ந்தான். அவன் உள்ளத்திலே பலப்பல எண்ணங்கள்.

ராதிகேசரின் கோயிலில் பக்தி பரவசமடைந்து பெண்மணியொருத்தி பாடிக்கொண்டிருந்தாள்; "இறப்பும் பிறப்பும் மனிதனைக் கட்டியிருக்கும் பந்தங்கள்; அவை என்று தீரும்?" என்று இறைஞ்சினாள். சரஸ்வதிசந்திரன் கண்ணீர் மல்க, கீதத்தைக் கேட்டான்.

குமுதசுந்தரியைப்பற்றி எண்ண ஆரம்பித்தான்:

'குமுதசுந்தரி, உன் துக்கத்திற்கு எல்லையே இல்லையா? நீ துக்கத்தால்தான் நீரில் மூழ்கியிருக்க வேண்டும். உன்னைப் போன்ற மலர்கள் எவ்வளவு வாடி வதங்கிக் கசங்கிப் போயிருக்கின்றன! இன்று கண்ட அந்த அழகிய முகத்தில் எவ்வளவு சோகம்? அது நீதானோ?'

கோயிலில் வணங்கிவிட்டு எல்லோரும் வெளியே சென்றார்கள். வெளியே அவர்கள் சந்திராவளியைச் சந்தித்தார்கள்.

"நீங்கள் வழியில் பக்திமையாவையும் மதுரியையும் மற்றவர்களையும் சந்தித்தீர்களா?" என்று அவள் வினவினாள்.

"ஆமாம்; அவர்களுடன் புதிதாக ஒரு கிருகஸ்தப் பெண்மணியையும் பார்த்தோம்" என்றார் ராதேதாசர்.

"ஆடவர்களின் கொடுமையால் சம்சாரத்தைவிட்டு ஓடிவந்துவிட்டாள். நதியில் குதித்து முழுகிப்போய்ப் பராசக்தியின் சரணங்களை அடைந்து இப்போது உயிர் வாழ்கிறாள்."

"எங்கே ஆடவர்களின் கொடுமை என்கிறீர்கள்?"

"ஏனில்லை?"

சந்திராவளி கோயிலுக்குள் சென்றாள். அவளுடன் அவள் உறவினள் ஒருத்தியும் இருந்தாள். அவள் பெயர் பிந்துமதி.

"அந்தச் சாதுக்களுடன் புதிதாக இருப்பவர் யார்?"

"நமக்கு என்ன கவலை?" என்றாள் சந்திராவளி.

"இல்லை. சாதாரணமாகத்தான் கேட்கிறேன். பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கிறார்."

"இருக்கட்டும்; நீ மதுரியின் கதையைக் கேட்டிருக்கிறாயா?"

"அப்படியானால் அவர்தான் இவரா? இப்போதுதான் புரிகிறது மதுரியினது பிரேமையின் தீவிரம்."

''மதுரியின்மீது நம்பிக்கை உண்டு. இப்போது அவளது வாழ்வின் சுகத்தின்மீது இன்னும் நம்பிக்கை அதிகரித்து விட்டது.''

''இப்போது எங்கே, யதுச்ருங்கம் பக்கந்தானே போகிறோம்?''

''ஆமாம்; நீயும் உடன் வா; உன் வயதும் மதுரியின் வயதும் ஏறக்குறைய ஒன்றுதான். உன்னிடம் அவள் ஒரு வேளை மனம்விட்டுப் பேசலாம். நீ அவளிடம் பழகி எல்லாம் கேட்டு அறிந்துகொள்.''

8. குஸுமாவின் மனத்துயர்

''குஸுமா! ஓ குஸுமா! உன்னைத் தேடித்தேடி அலுத்துப் போனேன். நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?'' என்றவாறு வீடு முழுதும் தேடிக்கொண்டிருந்தாள் ஸுந்தரகௌரி. ஆனால் குஸுமா அகப்பட வேண்டுமே! ஊஹூம், வீட்டில் எங்கேயும் காணவில்லை. அவள் அதிசயித்து நிற்கையில், தோட்டத்தில் அரச மரத்தின் பின்புறத்திலிருந்து புகை மண்டலம் எழுந்து வந்து கொண்டிருந்தது. யாராவது சமைத்துக்கொண் டிருக்கிறார்களா என்ன? ஆமாம், யாரோ ஒரு பெண் உலை மூட்டிக்கொண்டிருக்கிறாள்! யாரது? தலை முழுதும் போர்த்து உடல் முழுவதும் மூடிக் கொண்டு நகைநட்டு ஏதுமில்லாமல் இவள் யார்? முகம், மூக்கு, கண், காது எல்லாம் குஸுமசுந்தரியினுடையவை போலல்லவா இருக்கின்றன! ஆச்சரியந்தான்; குஸுமசுந்தரியேதான்!

மரத்தடியில் பள்ளம் தோண்டி அடுப்பு அமைத்து நெருப்பு மூட்டிக் கிச்சடி சமைத்துக்கொண் டிருந்தாள் குஸுமா. அழகும், அலங்காரமும் எங்கே? தேய்பிறை நாட்களில் தொடுவானத்தில் எழும் மூளியான நிலவுபோல ஒளியும் அழகும் இழந்து காணப் பட்ட அவளைக் கண்டதும், ஸுந்தரகௌரி மனம் கலங்கிப் போனாள். அடுப்பு புகைந்துகொண் டிருந்தது. குப்பை செத்தைகள் சரியாக எரியாமல் புகையைக் கக்கின. தோட்டக் காரி அங்கு வந்து, ''இதோ பார்! என்ன காரியம்? பெரிய மனிதர்கள் செய்கிற வேலையா இது? கண்களைப் பார்! ஒரேயடியாகச் சிவந்துவிட்டன. புகையால் கண்ணே எரிந்து போகும்'' என்றாள்.

குஸுமா அவள் சொன்னதை லட்சியம் செய்யவேண்டுமே! ''இதோ இந்த எரிகிற குச்சிகள் எல்லாம் ஈரம். இதையெல்லாம் எடுத்துவிட்டால் பாரேன், எப்படி எரிகிறதென்று'' என்றாள்

குஸுமா. விடாமல் அடுப்பைக் கிளறிக்கொண்டிருந்தாள். நெருப்பு நன்றாகப் பற்றி எரிந்தது.

''இப்போது எப்படி எரிகிறது, பாரேன்'' என்று நிமிர்ந்தாள் குஸுமா. தோட்டக்காரிக்குப் பதில் நின்றுகொண்டிருந்தவள், அவள் பெரியம்மா ஸுந்தரகௌரி.

''என்னது இதெல்லாம்? உன் வேஷம் என்ன இப்படி இருக்கிறது? அடுப்பில் என்ன வைத்திருக்கிறாய்?'' என்றவாறு ஸுந்தரகௌரி சுற்றும் முற்றும் பார்த்தாள். குஸுமா பதில் பேசவில்லை.

''சரி எழுந்திரு, போகலாம்.''

குஸுமா வாய் திறக்கவில்லை.

''தோட்டக்காரி, என்ன இதெல்லாம்?''

''நான் எவ்வளவு தரம் சொல்லுவேன்? சிறிதாவது காது கொடுத்தால்தானே?'' என்று அங்கலாய்த்தாள் தோட்டக்காரி.

''குஸுமா எழுந்திருக்கிறாயா இல்லையா? வீட்டில் பெரியவர்களை எல்லாம் கூப்பிடட்டுமா?'' என்றாள் ஸுந்தரகௌரி.

''ஏன், உங்களைப் போல அவர்களும் என்னைத் திட்டுவதற்கா?'' என்று கேட்டாள் குஸுமா.

''இல்லை, உன்னை அவர்கள் அந்த நிலையில் பார்த்தால் எவ்வளவு வருத்தப்படுவார்கள், தெரியுமா? அம்மாவுக்கு ஏற்கனவே எவ்வளவு கவலைகள் தெரியுமா? எழுந்திரு. அப்பாவுக்கு என்ன தெரியும்? பெண்ணுக்குப் படிப்பு சொல்லித் தந்தால் வினையாகும் என்பதைத் தாத்தாதான் அறிவார்'' என்றாள் ஸுந்தரகௌரி.

குஸுமா மண் பானையில் வெந்துகொண்டிருந்த கிச்சடியைக் கிளறிக் கொஞ்சம் தண்ணீர் விட்டுக் கிண்டினாள்.

''என்னத்தைக் கிளறிக்கொண்டிருக்கிறாய், குஸுமா?''

''பெரியம்மா! ஏழையான சந்நியாசினி ஒருத்தி எப்படிச் சாப்பிடுவாள், எப்படி உடை அணிவாள் என்பதை அறியும் பொருட்டு இப்படி எல்லாம் செய்து அநுபவத்தில் தெரிந்து கொள்கிறேன். அடுப்பில் கிச்சடி ஆகிக்கொண்டிருக்கிறது. சென்ற இரண்டு மூன்று நாட்களாகக் கிச்சடிதான் எனக்கு'' என்றாள் குஸுமா.

''அழகாயிருக்கிறது. நீ செய்வது கொஞ்சங்கூட நன்றாயில்லை!'' என்றாள் ஸுந்தரகௌரி.

''பெரியம்மா, கிச்சடி சாப்பிடுகிறீர்களா?''

''குஸுமா, போதும், கொஞ்சங்கூட நன்றாகவேயில்லை!'' என்று கூறி ஸுந்தரகௌரி மண்பானையை எடுக்கப்போனாள்.

''தொடாதீர்கள்; நான் விரதமிருக்கிறேன். எல்லாம் மடி இங்கே'' என்றாள் குஸுமா.

''விரதமாவது கிரதமாவது'' என்று ஸுந்தரகௌரி படபடத்தாள்; ''கிளம்பு. வீட்டுக்குப் போவோம்.''

''ஊஹும்!''

''இதோ, நானே எல்லாவற்றையும் கொண்டு போய் எல்லோருக்கும் காண்பித்துவிடுகிறேன்'' என்று கிளம்பிய ஸுந்தரகௌரியைக் குஸுமா தடுத்தாள்.

''யாரிடமும் சொல்லமாட்டேன் என்று வாக்குக் கொடுத்தீர்கள் என்றால், உங்களிடம் சொல்வேன்.''

''சரி.''

''என்னைத் தடுக்கக்கூடாது.''

''உன்னைத் தடுத்துத்தான் ஆகவேண்டும்.''

''பலாத்காரமாகவா?''

''அவசியமிருந்தால் அப்படிச் செய்யவேண்டியதுதான்.''

''சரி. சொல்கிறேன். அம்மா என்னைப் புத்திதனருக்குக் கல்யாணம் செய்து கொடுக்கவேண்டும் என்கிறாள். நான் முடியாது என்று சொல்கிறேன். அப்பா என்னைச் சரஸ்வதி சந்திரருக்கு மணம் முடிக்கவேண்டும் என்கிறார். அதற்கு என் சம்மதம் இல்லை. மூன்றாவது, சந்திரகாந்தருக்கு ஏற்கனவே மனைவி இருக்கிறாள்; என்னை இரண்டாவது மனைவியாகத் தர வேண்டும் என அவருடைய சகோதரர் கேட்டிருக்கிறார்; அதற்கும் கொஞ்சங்கூடச் சம்மதமில்லை.''

''மூன்றில் இரண்டு சரி; ஆனால் சரஸ்வதிசந்திரனை ஏன் மறுக்கவேண்டும்?''

''நீங்கள் அந்த இரண்டிலும் என் சார்பாக எல்லோரிடமும் சொல்லி எனக்கு உதவுங்கள். நான் ஏன் சரஸ்வதிசந்திரரை மணக்கமாட்டேன் என்பதற்கான காரணத்தைச் சொல்கிறேன்.''

''நான் அந்த இரண்டிலும் உதவி செய்கிறேன். ஆனால் சரஸ்வதிசந்திரனை நான் சொல்வது போல் நீ கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். அப்போதுதான் என் உதவி நிச்சயம் உனக்குக் கிடைக்கும்.''

''அதுதான் இல்லை.''

''எது அதுதான் இல்லை?''

''சரஸ்வதிசந்திரர் இப்போதைக்கு அகப்படமாட்டார். அகப்பட்டாலும் தமது முடிவை மாற்றிக்கொள்ள மாட்டார்.

அவர் அகப்பட்டு, முடிவை மாற்றிக்கொள்ள யுகம் ஆகும். நான் ஏன் அதற்குள் அவரை மணக்கப் போவதாக முடிவு செய்ய வேண்டும்?''

''ஊஹூம், உன் பேச்சை நான் ஒப்புக்கொள்ள முடியாது.''

''சரி; சரி. நான் சாப்பிட உட்காரப்போகிறேன்'' என்று இலையில் கிச்சடியை இட்டு உண்ணத்தொடங்கினுள் குஸுமா.

''உனக்கு உதவி புரியவேண்டாமா? சொல் காரணத்தை'' என்ருள் ஸுந்தரகௌரி.

''இந்த அன்னத்தின் பெருமையை என்னவென்று சொல்லுவது? சாப்பிட ஆரம்பித்தவுடன் காரணம் என்ன என்பது மறந்து போய்விட்டது'' என்ருள் குஸுமா சிரித்துக்கொண்டே.

''ஓ! அப்படியா! சரி; என் பசியில் நான் உனக்கு உதவி செய்யப் போவதை மறந்துவிடுகிறேன்; சரிதானே?'' என்று அவள் கிளம்பினுள். குஸுமா அவளைத் தடுத்து நிறுத்தினுள்.

''அப்புறம்?''

''அப்புறம் என்ன? குஸுமா போய்விட்டாள். இன்னொரு மீராபாய் ஆக மாறத் தயார்.''

''பெட்டி படுக்கையெல்லாம்?''

''சந்நியாசினிக்குப் பெட்டியும் படுக்கையும் எதற்கு?''

''குஸுமா, நீ வீட்டுக்கு வரப்போகிருயா, இல்லையா?''

''குஸுமாவிற்கு இனி வீடும் வெளியும் ஒன்றுதான். மீராபாயின் கறுப்பு உடை குஸுமாவின் பிரிய உடை. அவள் வேறு எந்த உடையையும் அணியமாட்டாள்.''

குஸுமா பெண்களுக்கு இனிமேல் படிப்பும் எழுத்தறிவும் தருவதற்கு முன்னுல் அவர்களைச் சம்சாரத்தில் ஈடுபடுத்தவேண்டுமென்று எல்லோரும் உன் விஷயத்தின்மூலம் அறிந்துகொள்வார்கள். ஆகையால், பெண்களுக்கு இனிமேல் படிப்பு இல்லாதுபோனுல் நீதான் காரணம்; நீதான் அந்தக் குற்றத்திற்கு ஜவாப்தாரி ஆவாய்.''

ஸுந்தரகௌரி கோபத்துடன் பேசிவிட்டு விடுவிடு வென்று நடந்துபோனுள். குஸுமா அதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை யாதலால் சற்றே உற்சாகம் குன்றிப்போய் அவள் சென்றதையே பார்த்துக்கொண்டு நின்ருள்.

வீட்டின் பலகணி முன்னுல் வித்தியாசதுரர் சிந்தனையில் மூழ்கியவண்ணம் நின்றுகொண் டிருந்தார். குஸுமாவைத் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டே அவளது விரதத்தை மனத்தில் போற்றினுர். அவருக்கு அது திருப்திதான். ஆனுல் இந்தத் தேசத்தில் சமூக விரோதச் செயலாயிற்றே! அதனுல்

பெண்ணுக்கே துயர் மூளுமே! ஸுந்தரகௌரியின் வாயிலாகக் குஸுமசுந்தரியின் தீர்மானத்தை அறிந்த அவர் வருத்தம் அடைந்தார்.

''பேதை குமுதசுந்தரிக்குச் சற்றேனும் சுதந்தரம் தராமல் அவளது எதிர்காலத்தை நானே நிச்சயித்து அவளைத் துயரத்தில் மூழ்கடித்தேன். அதனால் நல்ல பாடம் கற்றுக்கொண்டேன். ஆகவே, குஸுமாவுக்குச் சுதந்தரம் தரவேண்டும் என்ற என் தீர்மானத்திற்குச் சரியான பலன் கிட்டியிருக்கிறது. ஒரு புத்திரியை இழந்து சோகத்தில் தவிக்கும் அன்னைக்கு இன்னொரு புத்திரியின் இந்த முடிவு எவ்வளவு துயரை அளிக்கப்போகிறது! இது ஏன் என் பெண்ணுக்குத் தெரியவில்லை?''

9. சசியும் சசிகாந்தனும்

'எனக்கு மல்ல பவனில் என்ன வேலை? சரஸ்வதிசந்திரனைத் தேடிவந்த எனக்கு அரசியல் விவாதமும் மகாபாரத விளக்கமும் அவசியமா? தேடிவந்த முயற்சியல்லவா தாமதம் அடைகிறது?' என்று மனச்சஞ்சலம் அடைந்தான் சந்திரகாந்தன். பூங்காவின் காற்றும் மணமும் அவனது மனக்கவலையை எள்ளளவும் குறைக்கவில்லை. வித்யாசதுரர் சரஸ்வதிசந்திரனைத் தேட உதவுவார் என்று நினைத்திருந்தான். ஆனால் அவருக்குத்தான் எத்தகைய இன்னல்கள்! கொள்ளைக்காரர்கள், குமுதம் முழுகிய செய்தி, ஸாமந்தரின் சுகக்கேடு எல்லாம் அவரைப் பாதித்துவிட்டன. தேவையற்ற விவாதங்களில் பங்கெடுத்துக்கொண்டு, தேடும் முயற்சிகளில் ஏன் கவனம் செலுத்தாமற் போய்விட்டான்? குணசுந்தரியிடம் எப்படிச் சொல்லி விடை பெற்றுக்கொள்வது? ''அம்மா, எனக்கு அநுமதி தாருங்கள். நான் போகிறேன். உங்கள் உதவி எனக்குத் தேவையில்லை. என்னை விடுங்கள்'' என்று எப்படி சொல்லுவது? பலவிதக் கேள்விகள் எழுந்து அவனைக் கவலைக்குள் ஆழ்த்தின.

நகரத்திற்கு வெளியே பூங்கா இருந்தாலும் நகரத்திலிருந்து வெளியே செல்பவர்கள் பூங்காவில் சற்றே தங்கிவிட்டுப் போவார்கள். பூங்காவில் ஒரு மைதான வெளியில் வியாபாரிகளும், சாதுக்களும், பிரயாணிகளும் குழுமியிருந்தார்கள். அவர்களை நோக்கினான்; 'அழகுதான்! எனக்காகச் சரஸ்வதி சந்திரன் காத்துக்கொண்டிருப்பானா? அவர்கள் நின்றுகொண்டிருப்பது போல என் முன்னால் வந்து நிற்பானா? நானல்லவா முயன்று தேடவேண்டும்?' என்று எண்ணினான்.

சந்திரகாந்தன் தனது சட்டைப்பைக்குள் கை விட்டான். பையில் நான்கைந்து காகிதங்கள் தட்டுப்பட்டன. அவைகளை எடுத்துப் பிடித்து மீண்டும் கைக்குள் விட்டான்.

''பம்பாயில் கங்கா மிகவும் நோயுற்றிருக்கிருள். வீட்டில் அவளைக் கவனித்துக்கொள்ள ஆளில்லை என்று சம்சாரிலால் எழுதியிருக்கிறுன். நீ வராமற் போனுல் அவள் செத்துவிடுவாள் என்று எழுதியிருக்கிருர்கள்.

''பம்பாயை விட்டதிலிருந்து குடும்ப வருவாய் போய் விட்டது. சரஸ்வதிசந்திரனைவிட இதெல்லாம் பெரிதில்லைதான். ஆனுல் கங்கா போய்விட்டால்..? இந்தத் தருணத்தில் நான் அங்கில்லாதுபோனுல் ஆண்டவனுக்கே அடுக்குமா?''

அப்போது பூங்காவில் சங்கர சர்மாவும் பிரவீண் தாஸும் வந்தார்கள். சந்திரகாந்தன் சுருக்கமாகச் சரஸ்வதிசந்திரனைப் பற்றிச் சொன்னுன்.

சங்கர சர்மா, ''ராஜ்யத்தில் ஏதாவது தப்புதண்டா நடந்தால்தான் போலீஸார் புலன் விசாரிக்கத் தேடுவார்கள். அர்த்த தாஸனின் அந்த நிகழ்ச்சிக்காகச் சரஸ்வதிசந்திரனைப்பற்றிப் போலீஸ் புலன் விசாரிக்க வேண்டித் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது'' என்ருர்.

''திவான் அவர்களின் உத்தரவுப்படி போலீஸார் சரஸ்வதிசந்திரனைத் தேடி வருகிருர்கள். ஆகையால், நீங்கள் கவலையற்றிருக்கலாம்'' என்ருர் பிரவீண் தாஸ்.

சங்கர சர்மா கடிதம் ஒன்றைச் சந்திரகாந்தனின் கைகளில் இட்டார்.

''திவான் அவர்களுக்கு வந்திருக்கிறது, இந்தக் கடிதம். சரஸ்வதிசந்திரனைப்பற்றி எழுதியிருக்கிறது இதில். உங்களுக்காகத்தான் இருக்கவேண்டும் என நினைத்துக் கொண்டுவந்திருக்கிருேம்'' என்ருர் சங்கர சர்மா.

கங்காவின் கடிதம்: அது அவனுக்குத்தான். அதில் அவன் பெயரை அவள் குறிப்பிடத் தவறியதால் திவானை வந்தடைந்திருக்கிறது. சந்திரகாந்தன் படித்தான்:

''தூர்த்தலாலின் மனிதர்கள் வந்து போய்க்கொண்டிருக்கிருர்கள். தங்கள் முயற்சி வெற்றி பெருமலிருக்க வேண்டுமென லஞ்சம் வழங்குகிருர்கள். ஒரு வேளை அவர்கள் என் பெயரைச் சொல்லி உங்களை அழைக்க வருவார்கள்; நீங்கள் மறுத்துவிடுங்கள். உங்கள் முயற்சிகளைப் பாழடிக்கவே அவர்கள் திட்டமிடுகிருர்கள். எனக்கு வியாதி என்பது உண்மைதான். நான் செத்துப் போனுலும் துக்க

மில்லைதான். நீங்கள் வீட்டில் எப்போதுதான் சுகம் பெற்றிருக்கிறீர்கள்? நான் போனாலும் என்ன? அதுவும் துக்கமாகுமா?''

சந்திரகாந்தன் மனம் கலங்கினான்; ''நீங்கள் போகலாம். இந்தக் கடிதம் எனக்குத்தான். இதைப்பற்றி அப்புறம் சொல்கிறேன்.''

இருவரும் அகன்றார்கள்.

சந்திரகாந்தனின் துயரை அளவிட முடியாது. ஒரு பக்கம் தனிமை; இன்னொரு பக்கம் மனிதக் கும்பல். ஒன்றிலும் மனம் ஈடுபடவில்லை. அப்போது பூங்காவின் வெளியிலிருந்து சில குரல்கள் உரக்கப் பாடிக்கொண்டிருந்தன; சசியையும் சசிகாந்தனையும் பற்றிய பாடல்: ''நிலவே! உன்னைத் தேடி அலையும் குமரியைப் பார்!''

சந்திரகாந்தன் எழுந்து நின்றான். சசியும் சசிகாந்தனும்- இதன் பொருள் என்ன? ஆவல் எழுந்தது அவனுக்கு. சரஸ்வதி சந்திரனாக ஏன் இருக்கக்கூடாது என்று வெளியே ஓடினான். குரல்கள் தூரத்திலிருந்து ஒலித்தன. மனிதக் கும்பல்களினூடே ஓடினான். எதிர்வந்தவர்களைத் தள்ளிக்கொண்டே ஓடினான். பக்கத்தில் இருப்பவர்களைத் தாண்டிக்கொண்டே ஓடினான். மூச்சு வாங்கியது. அங்கே சில சாதுக்கள் பாடிக்கொண்டிருந்தார்கள். சந்திரகாந்தன் நின்றான். அவர்கள் பாட்டு முடிந்ததும் அவர்களை அணுகி, ''நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? அந்தப் பாடலின் அர்த்தம் என்ன?'' என்று கேட்டான்,

''பாடலைப் புரிந்துகொள்ளும் சக்தியுடையவர் அர்த்தம் அறிந்துகொள்வார்கள்.''

''இவ்வளவுதானா, பாடலில் ஏதேனும் பாக்கியிருக்கிறதா?''

''அவ்வளவுதான். உன் பெயரென்ன?''

''என் பெயர் சந்திரகாந்தன்.''

''ஓ, அப்படியா? உன் பெயரைப் பொறுத்தமட்டில் இந்தப் பாடலின் அர்த்தம் விளங்கியிருக்குமே!'' என்றார் அந்தச் சாது.

சந்திரகாந்தன் திவானின் அதிதி என்பதை அறிந்துகொண்ட இரண்டு சாதுக்கள் நகர்ந்தார்கள். ஆகவே, மற்ற இரண்டு சாதுக்கள் சந்திரகாந்தனின் அருகில் நின்றார்கள்.

சந்திரகாந்தன் சொன்னான்:

''நீங்கள் பாடிய பாடலில், 'உலகத்தைத் துறந்து சென்றாய்; காவியுடை தரித்துக்கொண்டாய்' என்ற குறிப்புகள் வந்தனவே; அப்படியானால் என்னுடைய சந்திரன் உங்களிடந்தான் இருக்கிறானா? காவியுடைதான் தரித்துக்கொண்டிருக்கிறானா?''

''குழந்தாய்! நீ கொஞ்சங்கூடக் கவலைப்பட வேண்டாம். உனக்குப் பிரியமானவன் மட்டுமல்ல, எங்களுக்கும் பெரிய ரத்தினம் போன்றவன். அவன் ஜீவித்திருக்கிறான் என்பதை அறிந்துகொள்; திருப்தியுறுவாய்'' என்றார் சாது.

''ஸுந்தரகிரியில் என் நண்பன் எங்கே இருக்கிறான்? தயை செய்து சொல்லுங்கள்: அவன் சுகந்தானா? மனநிலை எப்படி இருக்கிறது? அவனை எப்போது பார்க்கலாம்? எங்கே சந்திக்க முடியும்? இப்போதே நான் போகவேண்டும்.''

''குழந்தாய், உனக்கு இதைப்பற்றிப் பரமரகசியமாகச் சொல்லவேண்டும் என்று ஆணை. ஆனால் சொல்லுவதற்குச் சமயம் அல்ல இது. உன்னுடைய ரத்தினத்தைத் தங்கப் பேழையில் இட்டுக் காத்து வருகிறோம் என்பதை அறிந்து கொண்டு அமைதி கொள். இன்று மாலையிலிருந்து நாளைக் காலைவரை இங்கேயே இருப்பேன். அப்போது என்னைச் சந்தி.''

அப்போது அந்த இடத்தில் சங்கர சர்மாவும் பிரவீண் தாஸும் வந்து சேரவே, சாதுக்களுடன் உரையாடல் நின்றது. சாதுக்கள் அவர்களைக் காணவே, அங்கிருந்து நகர்ந்து சென்றார்கள்.

''இங்கே எங்கே வந்தீர்கள்?'' என்று சந்திரகாந்தனைச் சங்கர சர்மாவும் பிரவீண் தாஸும் கேட்டார்கள்.

''நண்பன் சரஸ்வதிசந்திரனைப்பற்றி ஏதாவது தடயம் கிடைக்குமா என்று வந்தேன். அப்படியே சில செய்திகள் அறிந்தேன். ஆனாலும் அவன் கிடைப்பான் என்பது நிச்சயமில்லை; தயைசெய்து வேறு ஒன்றும் கேட்காதீர்கள். ஏனென்றால், அவற்றையெல்லாம் ரகசியமாகக் காக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்றான் சந்திரகாந்தன்.

''பரவாயில்லை; என்னுடன் வாருங்கள். போலீஸ் அதிகாரி தங்களுக்குப் புதிதாகத் தாம் சேகரித்த செய்திகளைச் சொல்வார்'' என்று அவனை அழைத்துக்கொண்டு அவர்கள் சென்றார்கள்.

ஸர்தார் சிங் என்ற அந்த அதிகாரி எவ்விதம் சரஸ்வதி சந்திரன் கொள்ளைக்காரர்களுக்கு இலக்கானான் என்றும், அவனை எவ்விதம் கொள்ளையடித்தார்கள் என்றும் அவனுக்கு எடுத்துச் சொன்னார். ''அவ்வளவு வரைக்குந்தான் எங்களுக்கு நிச்சயம் தெரியும். அதற்குப் பின்னர் என்ன நடந்தது என்பது ஊகந்தான். ஒன்று, அவரைக் கொள்ளைக்காரர்கள் கொன்றுபோட்டிருக்கலாம். இரண்டாவது, அர்த்ததாசன் மோதிரத்துக்காக அவரைக் கொன்றிருக்கலாம். மூன்றாவது, பம்பாயைச் சேர்ந்த ஹீராலால் என்பவனின் கூற்று. சரஸ்வதிசந்திரனின் உறவினனை தூர்த்தலால் தற்போது சிறைச்சாலையில் இருக்கிறான்.

சரஸ்வதிசந்திரரைக் கொள்ளைக்காரர்கள் பிரிட்டிஷ் எல்லைக்குள் கொன்று போட்டிருக்கிறார்கள் என்றும், அந்த வழக்குப் பற்றிப் பிரிட்டிஷ் எல்லையில் புலன் விசாரணை நடக்கிறது என்றும், நாம் அதைப்பற்றி விசாரணை நடத்தவேண்டாம் என்றும் ஹீராலால் சொல்லியிருக்கிறான்.''

''ஹீராலால் நம்பத் தகுந்தவனல்லன்; பெரிய போக்கிரி'' என்றான் சந்திரகாந்தன்.

''எங்களுடைய புலன் விசாரணைப்படி அர்த்ததாசன் அவரைக் கொன்றுதான் இருக்கவேண்டும். கொலை எங்கள் எல்லையில் நடந்திருப்பதால் நாங்கள்தான் விசாரணை நடத்த வேண்டும்.''

''விசாரணை ஒரு நாளும் பூர்த்தி பெறாது.''

''ஹீராலால் சொல்கிறபடி கொலை பிரிட்டிஷ் எல்லைக்குள் நடந்திருந்தால் பிரிட்டிஷ் அரசாங்கம் விசாரணை செய்ய வேண்டும். அதற்கான விண்ணப்பத்தைச் செய்யுமாறு எங்களைக் கேட்டிருக்கிறான். இப்படியும் அப்படியும் சரஸ்வதிசந்திரர் கொலையுண்டுவிட்டார் என்பதாக அறிவிப்பைப் பெற முயலுகிறான் தூர்த்தலால். இப்படிப்பட்ட அறிவிப்பைப் பெற்றால் செல்வமெல்லாம் தூர்த்தலாலையே அடையும்; அதுவே அவன் ஏற்பாடு.''

''சிறைக்குப் போனாலும் அங்கேயும் இதே யோசனைதானா?''

''அர்த்தாசன் சொல்வதில் ஒரே ஒன்றை எப்படி நம்புவது என்பது கடினமாக இருக்கிறது. தான் சந்தித்த நபரின் பெயர் நவீனசந்திரர் இல்லை, சந்தாபாய் என்கிறான்.''

''பெயருக்கென்ன, எப்படி வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாமே!''

''என்னுடைய காரியமும் ஆகும்; உங்கள் காரியமும் ஆகும். நீங்கள் வாக்குமூலம் கொடுக்கவேண்டும். இதோ எழுதிக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறேன்.''

''வாக்கு மூலமா, நானா கொடுக்கவேண்டும்?''

''இன்று பூங்காவில் நீங்கள் சாதுக்களைப் பார்த்தீர்களா, இல்லையா? அவர்கள், சரஸ்வதிசந்திரரைப்பற்றிய தகவல் தெரிவித்தார்கள்; இல்லையா? உங்களைச் சரஸ்வதிசந்திரரைப் பார்க்க அழைத்தார்களா, இல்லையா?''

சந்திரகாந்தன் திகைத்துப்போனான்; யோசனையில் ஆழ்ந்தான். என்ன பதில் சொல்வது? அவனுடைய கவலையைப் போக்கும்வண்ணம் ஸர்தார் சிங் பேசினான்.

''பரவாயில்லை, நீங்கள் சொல்லவேண்டாம் என்று எண்ணியிருந்தீர்களானால் பாதகமில்லை. ஆனால் பின்னால் சொல்ல

முடியாமற் போய்விட்டதே, சொல்லியிருந்தால் அனர்த்தத்தைத் தவிர்த்திருக்கலாமே என்ற எண்ணத்திற்கு இடம் வைத்திருக்கக் கூடாது.''

''உங்களுக்கு உதவி செய்ய நான் தயங்கமாட்டேன், அது என் பொறுப்பு.''

''சரஸ்வதிசந்திரர் எங்கிருக்கிறார் என்பதுபற்றி அறிய ஹீராலாலும் முயன்று வருகிறான். அவன் சும்மா இருக்க வில்லை. உங்கள் வீட்டிலும் ஏதாவது கலகம் விளைவித்துக் கொண்டிருக்கிறான்.''

''என் வீட்டிலா! என் வீட்டிலிருந்து அவனுக்கு என்ன கிடைக்கப்போகிறது?''

''உங்கள் தந்தையாருக்கும் அன்னையாருக்கும் பண உதவி செய்து வருகிறான். உங்களைத் திருப்பி வரவழைக்க உங்கள் குடும்பத்தாரின்மூலம் பிரயத்தனம் செய்கிறான். நீங்கள் திரும்பி வந்துவிட்டால் சரஸ்வதிசந்திரனைத் தேடும் முயற்சிகள் கைவிடப்படுமல்லவா?''

''அடடா!''

''ஆமாம், நீங்கள் இதைப்பற்றிய கவலை ஏதும் கொள்ளக் கூடாது. ஒன்று வேண்டுமானால் செய்யலாம்: கங்காபாயை இங்கே வரவழைத்துக்கொள்ளலாம். இல்லையேல், பம்பாயில் நம்பத் தகுந்த நண்பரொருவர் வீட்டில் அவரைத் தங்கச் சொல்லுங்கள்.''

''அப்படியே என் நண்பன் உத்தத்லால் பெயருக்குக் கடிதம் எழுதிவிடுகிறேன்.''

போலீஸ் அதிகாரி சொன்ன வார்த்தைகளைச் சந்திர காந்தன் அவ்வப்போது நினைவு கூர்ந்தான். அவனுக்குக் கவலை அதிகரித்தது. சாதுக்கள் சொன்ன செய்தியை ஏன் தெரிவித் திருக்கக்கூடாது என்று தோன்றியது. கடைசியில் மறு நாள் காலை சாது சொன்னபடி கிடைக்கவில்லையென்றால், தானே மலையுச்சிக்குச் சென்று சரஸ்வதிசந்திரனைச் சந்திக்க முயல்வது என்று நிச்சயித்துக்கொண்டான்.

10. குமுதசுந்தரியின் நிலை

விஷ்ணுதாஸரின் மடத்திலிருந்து அரைக் காத தூரத்தில் மணமான சாதுக்களின் மடம் இருந்தது. அதைக் 'கிருகஸ்த மடம்' என்றும் 'விஹாரம்' என்றும் அழைத்தார்கள். அதற்குப்

பின்னுல் வேறு ஒரு மடம் இருந்தது. அங்கே விதவைகள் துறவறம் பூண்டு வசித்து வந்தார்கள்.

மூன்று மடங்களுக்கிடையே பசுமையான புல்வெளிகளும் பாறைகளும் இருந்தன. தியானத்திற்கும் தவத்திற்கும் ஏற்ற பிரதேசங்கள்.

பக்திமையாவுடன் வந்து சேர்ந்த குமுதசுந்தரியும் மற்ற வர்களும் விதவைகளது மடத்தில் இருந்தார்கள். களைப்பால் வாடிப்போன குமுதசுந்தரி புதிய காற்றினுலும் சூழ்நிலையாலும் விரைவில் புத்துயிர் பெற்ருள். அலக்வாதத்தைப்பற்றியும் சாதுக்களின் வாழ்வுபற்றியும் நவீனசந்திரனைப்பற்றியும் மற்றச் சாதுக்களிடமிருந்து கேட்டு அறிந்துகொண்டாள்.

மாலைநேரத்து நிலா உதயமாயிற்று. குமுதமும் புது உற்சாகம் பெற்ருள். மடத்தில் அமர்ந்து எதிரே தெரிகின்ற இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்துகொண்டிருந்தாள். மடத்தைச் சார்ந்து செல்லும் பாதையொன்றிலும் அவ்வப் போது அவள் பார்வை பதிந்தது. ஸுரக்கிராமத்திலிருந்து வரு பவர்கள் அந்தப் பாதையிலேதான் வரவேண்டும். சுக்கில பட்ச நாட்கள்; மாலை நேரத்திலே நிலவு ஆகாயத்தின் மத்தியிலே வந்துவிட்டது. மௌனமான சந்திரனின் ஒளி ஆழ்ந்த வானத்தின் அடித்தளத்திலிருந்து வந்துகொண் டிருந்தது. என்னதான் மற்றவர்களிடம் பேசிக்கொண்டிருந்தாலும் குமுத சுந்தரியின் உள்ளம் அந்தப் பாதையில் யார் வருகிருர்கள் என்பதை அறியத் துடித்துக்கொண்டிருந்தது. அங்கே வீசும் காற்றும், சலசலக்கும் மரம் செடி கொடிகளின் ஓசையும் அவள் காதுக்கும் பழகிப் போய்விட்டன. இனி யாராவது நடக்கும் ஓசை கேட்டால் அது சட்டென்று அவளுக்குக் கேட்டுவிடும்.

மோஹினி என்ற சாது அவளிடம் பேச்சுக் கொடுத்தாள்.

''மதுரி, உன் வாழ்க்கையின் சந்திரன் இங்கேயே இருப்பதை அறிந்து நீ மன அமைதி பெற வேண்டும்.''

''என்னைப் பொறுத்தவரையில் என் வாழ்க்கை நடைப் பிணத்தின் வாழ்க்கைதான். அங்கே உணர்ச்சிகளுக்கு இடமில்லை. பவித்ரமானது மணம் புரிந்த கணவனின் நினைவு. அதைத் தவிர வேறு எதுவும் தர்மமாகாது.''

''குடும்பத்தவர்களுக்கு நீ சொல்வது உண்மையே யாகும். தற்போது நீ அலக் பகவானின் ஆசிரமத்திற்கு வந்துவிட்டாய். உன் சம்சாரபந்தங்கள் இனி அறுந்து போய்விட்டன. நீ இப்போது புதிய பிறவி யாவாய். ஆகவே, நீ எல்லாச் சுகத்தை யும் இனிப் பெறுவாய்.''

''பதிவிரதையின் தர்மம் எப்போதும் ஒன்றுதான்; அது மாறுவது இல்லை.''

''உன் உறுதியைப் பாராட்டுகிறேன். ஆனால் உறுதிக்கு அடிப்படை உண்மையில்லை.''

''ஏன்?''

''மதுரி, உன்னை மணமுடிக்கச் செய்தது தீமை நிறைந்த உலகம். திருமணத்திற்கு முன் நீ யாரை மனத்தில் வரித்திருந்தாயோ அவரே உன் கணவர்; சமூகம் உன்னை வேறு யாருக்கோ திருமணம் செய்து தந்திருக்கலாம். அவர் உன் கணவராக மாட்டார். நீயே மனத்தில் வரித்திருப்பாயே அவரே கணவர்; பெற்றோர்கள் தேர்ந்தெடுத்த பிறர் கணவர் ஆக மாட்டார். எந்தச் சந்திரன் உனக்கு ஆன்மாவைத் தந்தானோ அவனே உன் பதி. உன் உடலை வேறு யாருக்கோ தந்திருக்கலாம். உடலைப் பெற்றவன் கணவனாக மாட்டான். உள்ளத்தைப் பெற்றவனே உன் பதி. உன் பதிவிரதத்தைப்பற்றி எண்ணிப் பார்.''

குமுதா பெருமூச்சு விட்டாள்.

''இதோ பார், உன்னிடம் வாதம் புரிந்து என் உறுதியை நிலை நாட்டமுடியாது. பேச்சை விடு. தயைசெய்து என் வாழ்க்கையைப்பற்றிப் பேசாமல் வேறு ஏதாவதுபற்றிப் பேசுவோம்; என் நொந்த உள்ளத்திற்கு அப்போதுதான் மன அமைதி ஏற்படும்.''

''அலக்மார்க்கத்துக் குருமுனிவர்கள் பெண்கள் சமூகத்தின் கஷ்டநஷ்டங்களைச் சிந்தித்து எழுதிவைத்திருக்கிறார்கள். அதைப்பற்றிக் கேட்டால் நீ சாந்தி பெறுவாய்'' என்றாள் பன்ஸரி.

ஆண் - பெண் ஆகியோரின் தனித்தனிக் கடமைகள், வாழ்க்கையில் அவர்கள் பங்கு, நட்பின் ரகசியம், விவாகத்தின் பல அம்சங்கள், காமபோகம், நேசம் ஆகியவற்றைப்பற்றித் தக்க உதாரணங்களுடன் பன்ஸரி விளக்கினாள்.

''மதுரி, நவீனசந்திரன் போன்ற சான்றோரை மணம் புரிந்தால் அலக்வாதம் சொல்கிற நேசத்தைப் பெறுவாய்.''

''நீங்கள் சொல்கிற பாக்கியம் இனி இந்த ஜன்மத்தில் கிடையாது. அத்தகைய யோகம் வந்து போய்விட்டது. இனி எவ்வளவு நாட்கள் வாழவேண்டுமோ அவ்வளவு நாட்கள் வாழ்ந்து இந்த வாழ்வை நீக்கிவிட வேண்டும்.''

''எதற்காக? நவீனசந்திரரை மணந்துகொண்டால் எப்படி அதர்மமாகும்?''

''தர்ம அதர்மம்பற்றிய சிந்தனை என் மனத்தைக் குழப்பி விடும்; இதோ வெளியே பொழிகின்ற நிலவின் பிரவாகத்தில் குளித்தெழச் சிறையுண்டு இருக்கும் பிராணிக்கு அதிகார மில்லை என்பதுபோல என் சந்திரனின் அன்பு வெள்ளத்தில் அமிழ்ந்து ஆனந்தமடைய எனக்கு அருகதையில்லை'' என்றாள் குமுதசுந்தரி.

''உன்னைச் சிறையிலிருந்து மீட்டு வெளியுலகத்தின் நிலவில் அழைத்துச் செல்வது எப்படி என்பதன் வழியை நான் தேடுகிறேன்'' என்றாள் மோஹினி.

மதுரியின் சோகக் கதையை எல்லோரும் விவாதித்தார்கள். கூடவே நவீனசந்திரனின் பெயரும் அடிபட்டது. அவன் செய்தது நியாயமா, இல்லையா என்று விவாதித்தார்கள். குமுத சுந்தரி அவனை மறப்பது தர்மமா, அதர்மமா என்பதுபற்றித் தீவிர சர்ச்சை நடந்தது.

குமுதசுந்தரி இரவைச் சந்நியாசினிகளுடன் கழித்தாள். சரியாக உறக்கம் வரவில்லை. நடுநடுவே விழித்துக்கொண்டாள். அருகிலே மோஹினியும் பன்ஸரியும் படுத்துக்கொண்டிருப்பதைப் பார்த்துக் கண்களை மூடிக்கொண்டாள். காலையில் காவியுடையில் கண்ட சரஸ்வதிசந்திரன் அவளது மனத்தில் பன்முறை வந்து சிந்தனைகள் எழுப்பினான்.

'அத்தகைய மனிதர் துறவியாகவே இருக்கட்டும்; மண வாழ்க்கையில் புகுந்து என்ன பயன்? நான்தான் துர்ப்பாக்கிய சாலியாகிப் போனேன். ரத்தின பஸ்மத்திலிருந்து இனி ரத்தினம் எப்படிக் கிடைக்கும்? அவருக்குத்தான் எவ்வளவு துயரம்!' என்றெல்லாம் எண்ணி மனம் கலங்கினாள்.

நள்ளிரவில் பக்திமையாவும் வாமனியும் திரும்பினார்கள். குமுதசுந்தரி உறங்கிவிட்டிருந்தாள். மோஹினியும் பன்ஸரியும் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள்: ''நாளைக் காலை விஹார மண்டபத்தில் குஞ்சவனத்தில் மண்டபம் கட்டப்போகிறார்கள். அங்கே நாளையிலிருந்து ராஸலீலா ஆரம்பமாகப் போகிறது. அதற்குமுன் சாயங்காலம் குருஜி, சாது மண்டபத்தை வந்து பார்ப்பார். அவருடன் நவீனசந்திரரும் வருவார் என்று தோன்றுகிறது'' என்றாள் பக்திமையா.

''குருஜி வரும்போது நவீனசந்திரருக்கும் மதுரிக்கும் ஓர் சந்திப்புக்கான ஏற்பாடு செய்யலாம்'' என்றாள் மோஹினி.

''மிகவும் சரி'' என்றாள் பக்திமையா.

விடியும் முன் 'விஹார மட'த்திலுள்ளோர் சகலரும் எழுந்துவிட்டார்கள். காலைக் கடன்களுக்குப் பிறகு பக்திமையாவும்

மற்றவர்களும் மதுரியை அழைத்துக்கொண்டு குஞ்சவனம் சென்ருர்கள். அன்று சாயங்காலம் நடக்கவிருக்கும் ராஸலீலா நடனத்துக்கான ஏற்பாடுகளே அவளுக்குக் காண்பித்தார்கள்.

நல்ல உயரமான இடம்; பரந்த வெளி. மேலேக் காற்றுச் சுகமாக வீசக்கூடிய பாங்கான பிரதேசம். அங்கே ராஸலீலாவுக்கான சவுக்கம் அமைத்திருந்தார்கள். அதைச் சுற்றி ஓங்கியுயர்ந்த மரங்கள்; மரங்களிலே பறவை இனங்கள்; அவைகளின் இன்குரல்கள் எங்கும் பரவிக்கொண்டிருந்தன. அங்கிருந்து தூரத்தில் அலே பாய்ந்துகொண்டிருந்த கடல் நன்ருகப் பார்வைக்குத் தென்பட்டது; அதனுடைய வெண்மை நிறம் கொண்ட அலேகள் கடல் கன்னியின் நெஞ்சமெனப் பாய்ந்து கொண்டிருந்தன.

வாமனி, பன்ஸரி ஆகியோர் குமுதசுந்தரியை நோக்கிய வண்ணமே இருந்தனர். அவள் துடித்தவண்ணமே இருந்தாள். ''சந்திரிகை இன்னும் சிறிது நேரத்தில் உதயமாகிவிடும். ஆனல் என் சந்திரன் இன்னும் சிவபெருமானின் ஜடையினின்றும் விடுபெறவில்லே'' என்ருள் குமுதசுந்தரி.

''நீ ஏன் அப்படி நினேக்கவேண்டும்? உன்னேப் பார்க்கவே அவர் வருவார். நேற்று உன் கண்களில் கண்ட அதே ஏக்கம் அவர் கண்களிலுங்கூடத்தான்...'' என்ருள் வாமனி.

குமுதசுந்தரி ஆழ்ந்த பெருமூச்சு விட்டாள். ஒரு விநாடி அவள் கண்கள் கலக்கமுற்றன.

''பன்ஸரிமையா, கனிந்திருக்கும் அக்கினியைக் கிளறிவிடாதே; அது சாம்பலாகப் போகவிடு'' என்ருள் அவள். பின்னுல் சந்திராவளி நின்றுகொண்டிருந்தாள். குமுதசுந்தரியைத் தனியே அழைத்துச் சொன்னுள்: ''இதோ உன் மனக்கவலேக்கு நாங்கள் எல்லாம் சேர்ந்து மருந்து தேடுகிருேம். நீ அதைப் பற்றிப் பயப்படக்கூடாது. எங்கள் முயற்சியில் வெற்றி நிச்சயம் கிட்டும். நீ ஏதும் தடையாக இருக்காதே!''

மணமாகாத கன்னிகையரும் விதவைகளும் விதவைகளுக்கான மடத்தில் வசித்து வந்தார்கள். 'விஹார மட'த்தில் விவாகம் புரிந்த தம்பதிகள் சேர்ந்தே வசித்து வந்தார்கள். ஒரு காலத்தில் விஹாரபுரியும் சந்திராவளியும் மணமான தம்பதியர்; பின்னர்ப் பிரிந்து விஹாரபுரி விஷ்ணுதாஸரின் மடத்தில் போய்ச் சேர்ந்தார். சந்திராவளி விதவைகள் மடத்தில் போனுள். பின்னர் ஸுந்தரகிரியைவிட்டு நீங்கி நதியின் மணல்மேட்டிற்குச் சென்ருள். அவள் சென்ற பிறகு மோஹினி, விதவைகள் மடத்திற்குத் தலேவியானுள்.

பக்திமையாவும் சந்திராவளியும் பிந்துமதியும் கூடினார்கள்.

''நவீனசந்திரர் நேற்றுக் கீழே சென்றபோது குமுதசுந்தரி அவரைக் கண்டாள். அவள் கண்களில்தான் என்ன ஏக்கம்! மனத்தை அப்படியே அது பிரதிபலித்தது'' என்றாள் பக்திமையா.

சந்திராவளி பிந்துமதியை அழைத்து, ''இன்று மாலை ராஸலீலா நடக்கவிருக்கிறது. நவீனசந்திரரும் வரவிருக்கிறார்'' என்று சொல்லி மதுரியை அழைத்தபோது அவள் என்ன சொன்னாள்?'' என்று கேட்டாள்.

''ஊஹூம், அவள் ஒன்றுமே பதில் பேசவில்லை. வெறும் ஆகாயத்தையும் பூமியையும் பார்த்தாள்; அவ்வளவுதான்.''

''அவளுடைய உணர்ச்சிகள்தாம் என்ன?''

''நேற்றிரவு அவள் சந்திரனை மறைத்திருக்கும் புகை மண்டலத்தைக் கலைக்க விரும்பவில்லை என்றாள். ஆகவே, அவள் அவரைப் பார்க்க விரும்பவில்லை என்றே தோன்றுகிறது.''

''நவீனசந்திரரின் உணர்ச்சிகள் என்னவாம்?''

''நேற்று அவர் கீழே இறங்கும்போது கவனித்தேன். குமுத சுந்தரியைக் கவனித்த மாத்திரத்தில் அவர் கண்களிலே ஒரே நீர்'' என்றாள் பக்திமையா.

''ஒன்றுதான், பாக்கி: இருவரையும் இனித் தனிமையில் சந்திக்க விடவேண்டும். அப்போதுதான் ஏக்கம் நீங்க இருவரும் வழி தேடுவார்கள்.''

''ஆனால் அது மிகவும் கடினம். நவீனசந்திரர் எப்போதும் விஹாரபுரி, ராதேதாஸர் ஆகிய இருவருடனேயே இருக்கிறார். இல்லாவிட்டால், குருஜியுடன்; ஆகவே, தனிமையான சந்திப்புக்கு எப்படி வழிதேடுவது?''

''ஒரே ஒரு வழிதான் இருக்கிறது'' என்றாள் மோஹினி.

''என்ன?'' என்று வினவினாள் சந்திராவளி.

''விஹாரபுரியிடம் இதைப்பற்றிச் சொல்லி இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யச் சந்திராவளிதான் முயல வேண்டும்.''

''நானா?'' என்றாள் வியப்புடன் சந்திராவளி.

''ஏன்?''

''ஏனா? நானும் அவரும் எப்போதோ தாம்பத்திய உறவிலிருந்து பிரிந்துவிட்டோம். மீண்டும் அவரைச் சந்தித்து, வேறு இரண்டு உடல்களுக்கான சந்திப்பைப்பற்றி எப்படிப் பேசுவது? என்னால் முடியாத காரியம். எப்போது துறவறம் பூண்டு தனியே போகத் துணிந்தோமோ அப்போது நான் எடுத்துக்கொண்ட விரதத்தை, எப்படி மீறுவது?''

''ஆனால் மதுரியின் மகிழ்ச்சி...அது நமது கவலையல்லவா?''

''ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனுல் என் முன்னேய கண வரிடம் எப்படிப் போவது? ஆடவர்களின் மனவைராக்கியம் பற்றிய மாத்ரியின் அநுபவம் நினேவில்லையா?''

''ஆனுல் மகளுக்குச் சுகம் தேடுவது அன்னேயின் கடமை தானே? அவளுக்கு உயிர்ப்பிச்சை அளித்தது நீங்கள்தாமே? அவளது எதிர்காலத்தைப்பற்றிய தீவிர எண்ணத்திற்கும் நீங்கள் தானே பொறுப்பு எடுத்துக்கொண்டீர்கள்! இப்போது நீங்கள் மறுக்கலாமா?''

மோஹினியின் அந்த வார்த்தைகள் சந்திராவளியை விசாரத்தில் மூழ்கடித்தன.

''சரி, நான் அப்படியே செய்கிறேன். என் விரதத்தைப் பராசக்தி காப்பாளாக'' என்று சந்திராவளி சொன்னதும் அனேவரும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

மோஹினி தனது திட்டத்தைச் சொன்னுள்.

''இன்று மாலே நடக்கவிருக்கும் ராஸ லீலாவின்போது மதுரியை அழைத்து வருகிருேம். அப்போது நவீனசந்திரரும் ஒருவேளே வருவார். அவரைத் தூரத்தில் அவள் பார்த்து விடுவாள். அப்போது அவளிடம் பேச்சுக் கொடுப்போம். பின்னர் இரவு நீங்கள் அவளுடனே படுத்துக்கொள்ளுங்கள். இரவு அவள் மனம் திறந்து பேசுவாள். பிந்துமதியையும் உடன் சேர்த்துக்கொள்ளுங்கள். பேச்சின் சாரத்தை ஒரு நாள் காலே விஹாரபுரியிடம் சொல்லி, அவரது கருத்தை என்ன வென்று என்னிடம் தெரிவியுங்கள். நவீனசந்திரரின் மனத்தையும் அறிந்து சொல்லுமாறு விஹாரபுரியிடம் வேண்டுங்கள். நாளே யிலிருந்து நவீனசந்திரரைத் தனிக் குகையில் உறங்கச் சொல்லு மாறு அதற்கான ஏற்பாடுகளேச் செய்ய விஹாரபுரியிடம் கேட்டுக்கொள்ளுங்கள்.''

''சரி; அப்படியே செய்கிறேன்'' என்ருள் சந்திராவளி.

அன்று மாலே விஷ்ணுதாஸ ஸ்வாமி, மடங்களுக்குச் சென்று பிரச்னேகளேக் கேட்டுத் தெரிந்துகொண்டார். மடங்களில் நடைபெறும் அலக் - போதனே, ஸதாசாரம் ஆகியவற்றின் முன்னேற்றத்தைத் தம்முடன் வந்திருந்த சரஸ்வதிசந்திரனுக்கு எடுத்துச் சொன்னுர். பிறகு மாலே நேரத்தில் சவுக்கத்தில் நடை பெற்ற ராஸலீலாவுக்கு ஸ்வாமிகள் சரஸ்வதிசந்திரனே அழைத் துக்கொண்டு சென்ருர். இங்கே விஹார மடத்தைச் சேர்ந்த பெண்கள் சிலர், கண்ணன் வேடத்தைத் தாங்கினுர்கள். சிலர் கோபிகள் வேடம் தாங்கினுர்கள். ஒரு பெண் ராதையின் வேடம் தாங்கினுள். ஐந்து, ஆறு பெண்கள் சகிவேடம் தாங்கி னுர்கள். முதலில், கோகுலத்தின் வாழ்வையும் பின்னர்க் கோபி

கையரின் வாழ்வு முறையையும் சித்திரித்தார்கள். திடீரென்று முரளீதரன் குழல் ஊதுகிறான்; காற்றினிலே கீதம் மிதந்து வருகிறது. வீடும் வெளியும் துறந்து மதுவனத்திலே செல்கிறார்கள் கோபிகையர். யமுனா நதி தீரத்திலே ராதாகிருஷ்ணர்களின் இசையும் நடனமும். அத்துடன் ராஸலீலா முடிவடைந்தது. நடுநிசி வரைக்கும் அது நடந்தது.

இரவில் எல்லோரும் உறங்கும் வேளையில் குமுதசுந்தரி விழித்திருந்தாள். பொழுது புலர்ந்தபோதும் அவள் கண் உறங்கவில்லை. காலைக் கடன்களைத் தீர்க்க எல்லோரும் எழுந்தார்கள். மடத்திலே குமுதசுந்தரியும், மோஹினி, சந்திராவளி பிந்துமதி ஆகியோரும் தனித்து விடப்பட்டார்கள். காலைக் கடன்கள் தீர்ந்த பிறகு பஜனை நடந்தது. அதற்குப் பின்னர் மோஹினி உபதேசம் செய்தாள். சென்ற இரவில் நடந்த ராஸலீலாவின் தாத்பர்யத்தைப்பற்றி விரிவாகச் சொல்லி விட்டுக் குமுதசுந்தரியிடம் நேசம் என்பது ஒருநாளும் மறைவதில்லை என்றும், இதை மறைப்பதும் முடியாத காரியம் என்றும் சொன்னாள்.

''ராஸலீலாவில் நீ கண்ட கண்ணபிரானை நினைவுபடுத்திக் கொள். உன் நவீனசந்திரரைக் கண்ணபிரானாகக் கருதி அவர் குழலிசைப்பதாக எண்ணிக் கொள். நீ பாடு'' என்றாள்.

''நான் அருகதையற்றவள்'' என்றாள் குமுதம்.

''நீ சொல்வது தவறு. உனது உள்ளம் அவரை நாடுகிறது. உள்ளத்தினின்று உடல் பிரிந்திருப்பது முடியாத காரியம். நீ விரும்புகிற அவரிடம் உன்னை வசப்படுத்த நாங்கள் முயல்கிறோம்'' என்றாள் மோஹினி.

சந்திராவளி எழுந்து சென்றாள்.

''இரவு சந்திராவளிமையா விஹாரபுரியைச் சந்தித்து வந்தாள். நவீனசந்திரரை இன்று சந்திக்குமாறு ஸ்வாமிகளின் சம்மதியுடன் விஹாரபுரி ஏற்பாடு செய்திருக்கிறார். அதன்படி சந்திராவளி அவரைச் சந்திப்பாள்'' என்றாள் மோஹினி.

''நேற்று அவரைப் பார்த்தாகிவிட்டது. இனி அவரைச் சந்திக்க விரும்பவில்லை நான்'' என்றாள் குமுதசுந்தரி.

11. சரஸ்வதிசந்திரனும் சந்திராவளியும்

சாதுக்கள் பிக்ஷைக்காகச் செல்லும்போதெல்லாம் சரஸ்வதி சந்திரன் ஆசிரமத்தின் கண்காணிப்பாளர்களான விஹாரபுரி, ராதேதாஸர் ஆகியோருடன் தனித்து விடப்படுவது வழக்கம்.

இன்று விஹாரபுரியும் சாதுக்களுடன் வெளியே சென்றுவிட நேர்ந்ததால் ராதேதாஸர் சரஸ்வதிசந்திரனுடன் தங்கிவிட்டார். அவர் வெளியே புத்தகம் படித்துக்கொண்டிருந்தார். தனது குகையில் தனித்திருந்தான் சரஸ்வதிசந்திரன்.

ஸுரக்கிராமம் சென்று வந்ததிலிருந்து அவன் மனத்தில் பலப்பல சிந்தனைகள் எழுந்திருந்தன. போகும் வழியில் குமுத சுந்தரியைக் கண்டான்; எதிர்பாராத சந்திப்பு, மீண்டும் மனத்தில் குமுறலை மூட்டியது. பின்னர் அந்த அந்தணரைக் கண்டு அவர்மூலம் செய்திப் பத்திரிகைகளைப் படித்தான். அதன் மூலம் குமுதசுந்தரி, பிரமாததனன், சௌபாக்கிய தேவி, லக்ஷ்மீ நந்தனர், புத்திதனர் ஆகியோர்பற்றிய செய்திகளை அறிந்து கொண்டான். கடந்த இரவில் ராஸலீலா நிகழ்ச்சியின்போது குமுதசுந்தரியின் மதுரமான குரலையும் அவன் கேட்டான்.

'மதுரி எனக் குமுதசுந்தரியை அழைக்கிறார்கள். இந்த மதுரியின் முகத்திலே ஏன் இவ்வளவு சோகம்? அவள் பழைய குமுதசுந்தரிபோல் இல்லை. சொல்லமுடியாத துயரம் வடிகிறது, அவள் முகத்தில். அவள் நீரில் விழுந்து தன்னை மாய்த்துக் கொள்ளத் துணிந்தது என்னால்தான்? நான் வாழ்கிறேன்; ஆனால் அவள் விதவை ஆகிப்போனாள். பிரமாததனன் கால மானது அவளுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் இன்னும் எவ்வளவு துயரமடைவாள்? அவள் தாய் குணசுந்தரியிடம் நான் அவளைச் சேர்ப்பிப்பேன். சீதையை லட்சுமணன் வனத்தில் விட்டுவிட்டு வணங்கினான்.

'தாயே, தங்களுக்கு இவ்வளவு இன்னல் தந்துவிட்ட கொடியனான நான் தங்களை வணங்குகிறேன் என அவன் கூறிய தைப்போல் குமுதசுந்தரியை வணங்கிவிட்டு அவளைத் தாயிடம் சேர்ப்பிப்பேன். நான் எந்த முகத்துடன் அவளுடைய அன்னை யைப் பார்ப்பேன்? ஆனால் நான் பிராயச்சித்தம் செய்துதான் ஆகவேண்டும்.:...சந்திரகாந்தா, இதோ உன்னைத் தேடுகிறேன்: நீதான் எனக்கு ஆறுதல் சொல்லவேண்டும். ஆனால் உன்னை ஏனோ இதுவரைக்கும் காணமுடியவில்லையே!'

சிந்தனையில் ஆழ்ந்து போனான் சரஸ்வதிசந்திரன்.

சந்திரகாந்தனைச் சந்தித்துப் பேசிய சாது மறு நாள் காலை வரையில் இருக்கவில்லை. போலீஸ்காரர்கள் சந்திரகாந்தனுடன் தாம் பேசியதைக் கண்டுகொண்டார்கள் என்பதை அறிந்த வுடன் ஸுந்தரகிரிக்குத் திரும்பிவிட்டார். ஆகவே, நவீன சந்திரனைப்பற்றிய செய்தி ஏதும் சந்திரகாந்தனுக்குக் கிட்ட வில்லை. சில நாட்கள் கழித்துச் சாது மீண்டும் சென்று சந்திர காந்தனுக்குச் செய்தி தரவேண்டும் எனத் தீர்மானிக்கப்

பட்டது. இப்படியாகச் சந்திரகாந்தனைச் சந்தித்துப் பேசுவதற்கான முயற்சிகள் தாமதம் அடைந்தன. தன்னை மறக்கடிக்க எவ்வளவோ முயன்றான்; புத்தகங்கள் துணைசெய்தன.

'அலக்' மடத்தின் புத்தகசாலையில் 'அலக்' யோகிகள் எழுதிவைத்திருந்த புத்தகங்கள் அலக்வாதிகளுக்கு மிகவும் உபயோகமான உபதேசங்களைப் போதித்தன. விஷ்ணுதாஸ ஸ்வாமிகளுடன் விதவைகளின் மடத்திற்கும் விஹார மடத்திற்கும் சென்றபோது சரஸ்வதிசந்திரனின் கண்களில் புத்தகசாலையே பட்டது. கடந்த காலத்தின் ஞானப் பிரவாகமும் இன்றைய சமூகத்தின் நிலையும் எவ்வளவுக்கு முரண்பாடானவை! புதிய வருங்காலச் சமூகம் எவ்வளவு பயங்கரமாக இருக்குமோ?

'எவ்வளவு தாழ்ந்த நிலை? ஞானமும் சாஸ்திரங்களும் செழித்திருந்த இந்த நாட்டின் நிலை தற்போது எவ்வளவு தாழ்ந்து விட்டது! இதோ ஸுந்தரகிரியின்மேல் ஞானவிளக்கு ஒளி வீசுகிறதே, இதுபோல் நாடுமுழுதும் ஏன் ஒளி மயமாகத் திகழக் கூடாது? இந்தச் சாதுக்கள் இங்கே அறிவுத் தீ வளர்த்து வருவது போல் மற்றவர்களும் தேசமுழுதும் ஏன் வளர்க்கக் கூடாது? இங்குள்ள பெண்களின் வைராக்கியமும் தர்மசிந்தனையும் மற்ற இடங்களிலும் ஏன் பரவக்கூடாது? அந்தச் சாதுக்களின் எளிய சிந்தனையையும் வாழ்வையும் ஏன் மற்றவர்களும் அநுசரிக்கக்கூடாது? மேலைநாட்டுப் படிப்பு மோகத்தால் அறிவு முரண்பட்ட வித்துவான்கள்மேலும், அரசாங்கத் தலைவர்கள்மீதும் இந்தத் தேசம் நம்பிக்கை வைத்து என்ன பயன்? எப்போது நமது பழைய கலாசாரத்தில் பற்று மீண்டும் எழுகிறதோ அப்போதுதான் இந்தத் தேசத்திற்கு விமோசனம் ஏற்படும். அப்போதுதான் பாமரஜனங்கள் வித்துவான்கள்மீது நம்பிக்கை கொள்வார்கள். சகுந்தலையின் மானிடம் துஷ்யந்தன் நம்பிக்கை ஏற்படுத்தவில்லை; ஆகவேதான், துஷ்யந்தன் கொடுத்த புல்லை மான் தின்ன மறுத்தது.

'என் நண்பர்கள் கூறுகிறார்கள், தம் பேச்சைப் பாமரர்கள் கேட்க மறுக்கிறார்கள், பழைய வழக்கங்களையே பின்பற்றுகிறார்கள் என்று. யார் குற்றம் இது? பழைய வழக்கங்கள் வெண்ணெய் போன்றவை. அவைதாம் இன்றுவரை சமூக வளர்ச்சிக்கு உதவி வருகின்றன. அப்படிக் கருதுவது சரியோ, தவறோ, அவற்றின்மேல் மக்களுக்குப் பெருநம்பிக்கை இருந்து வருகிறது; குறையாத நம்பிக்கையை ஏன் உடைக்க விரும்ப வேண்டும்? தேசத்தின் துர்ப்பாக்கியத்தையே இது காட்டுகிறது.

'புதிய வித்துவான்கள் சமூக சேவையின் தேவையை உணராதவரை வெறும் ஏட்டுப் படிப்பால் - நவீனக் கல்வி

மோகத்தால் - எதையும் சாதிக்கச் சக்தியில்லாமல் தோல்வியுறுவார்கள். வாழ்க்கையைத் திருத்துவதற்கான தேவைகள்- வாழ்க்கையின் உணர்வு, சம்சார ஞானம், ரசிகத் தன்மை, வைராக்கியம் - இதோ இந்த வித்துவான்களிடம் இருந்தால்தான் பலன் ஏற்படும். இந்தச் சாதுக்கள் சம்சாரத்தின் இன்னல்களிலிருந்து விலகி, என்றேனும் அல்லலுறுவோம் என்ற கவலையின்றி உலகத்தின் சுகத்திற்காகப் பாடுபடுகிறார்கள். ஆனால் உலகம் ஏன் அவர்களுக்குச் செவி மடுப்பதில்லை?

'வாழ்வினின்று தூர விலகியிருந்தாலும், உலகம் சாதுக்களின்மேல் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கிறது. ஏன் இந்த நம்பிக்கை? இருந்தாலும், அவர்களிடம் அபிமானம் இல்லை. அவர்களுக்கு உதவி அளிப்பதில்லை. ஆனால் வாழ்வின்மேல் அவர்கள் மிகுந்த இரக்கம் காட்டுகிறார்கள். என்போன்றவர்களுக்கு அடைக்கலம் தருகிறார்கள். உண்மையான தர்மத்தை அவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். சுத்த வைராக்கிய உணர்ச்சியோடு அவர்கள் நடந்து வருகிறார்கள்.

'மதுரி இந்த அற்புதமான இடத்திற்கு வந்து சந்நியாசினிகளுடன் தங்கினால் அவள் சாந்தி பெறுவாள். ஆனால் நான் அவள் அருகில் இருக்கலாமா? அவள் இங்கிருந்து வீடு சென்றால் நல்லதா, அல்லது இங்கேயே தங்கினால் நல்லதா?'

சிந்தனையைக் கலைத்தவண்ணம் ராதேதாஸர் உள்ளே வந்து சந்திராவளிமையா சரஸ்வதிசந்திரனைப் பார்க்க வேண்டுவதாகக் கூறினார்.

''என்னையா, எதற்காக?''

''அவருடைய மனத்தில் என்ன இருக்கிறது என்று என்னால் சொல்ல முடியாது.''

''தயைசெய்து கேட்டுச் சொல்லுங்கள். இந்தக் காவியுடையில் பேசுவது துறவறத்திற்கும் உடலுக்கும் நல்லதல்ல.''

''விதவை மடத்தைச் சேர்ந்த தூய சந்நியாசினியின் எண்ணத்தைப்பற்றிக் கேட்க எனக்கு அருகதை கிடையாது. அவருடைய ஆத்மாவுக்கு ஸ்திரீரூபம் கிடையாது. உங்களுடைய ஆத்மாவுக்குத் தனியான புருஷரூபமும் இல்லை. எப்போது பகவதி சந்திராவளிமையா வருகிறாரோ நல்ல காரியத்தை உத்தேசித்து வருகிறார் என்று தைரியமாகக் கொள்ளலாம். தூய்மையும் ரமணீயமும் கொண்டவர்.''

நவீனசந்திரன் தயங்கினான்.

''விஹாரபுரி..''

''ஓ, அவருடைய அநுமதியும் முன்னரே பெற்றாகிவிட்டது.''

''அப்படியானால்..''

''நீங்கள் குருஜிக்குத் தரும் மரியாதையையும் மதிப்பையும் அவரிடம் காட்டுங்கள். அலக் மார்க்கத்தின் சம்பிரதாயம் இதுதான்: நீ குழந்தையானாலும் பெண்ணானாலும் சரி; உலகத்தை வணங்க உனக்கு அருகதை இருக்கிறது. பூஜை செய்ய வயதும், ஆண்பெண் என்ற பேதமும் கிடையா.''

''சரி; நீங்கள் முன் சென்று எனக்கு அறிமுகம் செய்யுங்கள்.''

அவ்வாறே ராதேதாஸர் இருவரையும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்தார். இருவரும் வெளியே திண்ணைக்குச் சென்றார்கள். சந்திராவளி ராதேதாஸரிடம், ''நான் இவருடன் தனியே பேசவேண்டும்'' என்று சொல்ல, ராதேதாஸர் குறிப்பறிந்துகொண்டார். ''இதோ நான் தூரத்தில் மரத் தடியில் உட்கார்ந்துகொள்கிறேன். எப்போது வேண்டுமானாலும் என்னைக் கூப்பிடுங்கள்'' என்று நகர்ந்தார்.

சந்திராவளி சரஸ்வதிசந்திரனை நோக்கினாள். அவன் பணிவுடன் நிலத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

''நவீனசந்திரஜி, இதோ நான் திண்ணையில் உட்காரு கிறேன். நீங்கள் இதோ படியின்மேல் உட்காருங்கள்'' என்று அவனிடம் சொன்னாள். அவ்வண்ணமே அவன் படியின்மேல் உட்கார்ந்தான். ஒரு படியிலிருந்து இன்னொரு படியைப் பார்த்துக்கொண்டே கண்களை அவளிடமிருந்து அகற்றிக்கொண்டிருந்தான்.

சந்திராவளி பேசத் தொடங்கினாள்:

''நவீனசந்திரஜீ! ஸுந்தரகிரியில் தங்கள் கீர்த்தி கதிர வனின் ஒளிக்கதிர்கள் போல் சுடர்விட்டிருக்கிறது. ஆனால் நான் தங்களின் பூர்வாசிரமம்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''தங்களுடைய கீர்த்தியில் இருக்கும் அளவுக்கு என்னுடைய பூர்வாசிரமக் கதையில் சாந்தி இல்லை. அது ஆசிரமத்தில் யாருக்கும் தெரியாது.''

''நீங்கள் ரகசியமாக வைத்திருக்கவேண்டும் என்று விரும்பலாம்; ஆனால் துடிக்கும் ஓர் உள்ளத்தின் குமுறல் மூலந்தான் அது வெளிப்பட்டது.''

''ஆமாம்; அந்த உள்ளம் தேவனின் திருக்கோயிலிலே இருந்தது. ஆனால் கோயில் நாசமடைந்து போயிற்று.''

சரஸ்வதிசந்திரன் பெருமூச்செறிந்தான்.

''கோயில் நாசமடையவில்லை; சற்றே கலங்கியிருக்கிறது. அந்த உள்ளத்தை எடுத்து வந்திருக்கிறேன்; நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.''

''அதெப்படி முடியும்? நீங்கள் ஒருவேளை வேறோர் உடல்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கலாம். நானோ மற்றுமோர் உடல்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். மேலும், இதே உடலின் பெயர்கூட வேறுதான்.''

''உங்கள் பெயரை மாற்றிக்கொண்டது போலவே அந்த உடலை மதுரி என்றழைக்கிறோம். நவீனன் என்ற பெயரும் உசிதமான பெயர்தான்.''

''நீங்கள் சொல்கிறபடி எல்லாம் பொருத்தமாக இருந்தால் என் மனம் அமைதியடையும். நீங்கள் அநுமதித்தால் நான் கேட்கிறேன். நீங்கள் சொல்வதனைத்தும் ரகசியமாக வைத்திருப்பேன் என உறுதி கூறுகிறேன்.''

''அது சரி; குருஜீ தங்களுக்கு ஏகாந்த வாசம் தந்தால் ஒப்புக்கொள்ளுங்கள்.''

''இதே ஆசிரமத்தில் குருஜீயைத் திருப்திப்படுத்த எதுவும் செய்வேன். அதைத் தவிர வேறு ஆசை ஏதும் கிடையாது.''

''நவீனசந்திரஜீ, எங்கும் பறவை நிலவொளியால்தான் திருப்தியடையும்.''

''அந்தப் பறவைக்குச் சொல்லுங்கள், எந்தத் தன்னடக்க ஒளியைச் சந்திராவளிமையா அவர்கள் விஹாரபுரிஜீக்கு அளித்தார்களோ அதே ஒளியைப் பல நிலவுகளின் மாலையை யொத்த சந்திராவளி, அந்தப் பறவைக்கும் அளிக்கலாம் என்று.''

''எதைத் தன்னடக்கம் என்பீர்கள்?'' என்று கூறிச் சந்திராவளிமையா - உத்தரராம சரிதத்திலிருந்து சுலோகம் ஒன்றைச் சிறிது மாற்றிச் சொன்னாள்:

''ஓ, கொடிய மனிதனே! உனக்குப் பிரியமானது தன்னடக்கம் என்பது சரியே. ஆனால் தன்னடக்கம் என்ற பெயரில் தன்னடக்கத்தைக் குலைப்பது தன்னடக்கமாகுமா? இதோ அந்த மான்விழியாளின் கதி என்ன ஆயிற்று என்பது தெரியுமா, அதைச் சொல்.''

சரஸ்வதிசந்திரனின் கண்கள் நீர்க் குளங்களாயின.

''நீங்கள் எவ்வளவு குற்றஞ் சாட்டினாலும் அது உண்மையாகும். அதுவே சத்தியம். துஷ்யந்தனுக்கு இருந்த பாக்கியம் எனக்கும் இருந்தது உண்மைதான். ஆனால் இப்போது ஒரே

ஓர் அம்சந்தான் பாக்கியிருக்கிறது. உன்னை ஸ்வீகரிக்க மறுத்தேனே, அதனது களங்கத்தை இனி உன் இதயத்தினின்றும் களைந்துவிடு'' என்று கூறிச் சகுந்தலையின் மன்னிப்பை வேண்டினுன். அதேபோல நானும் மன்னிப்பு வேண்ட விரும்புகிறேன். ஆனுல் துஷ்யந்தனுக்கு இருந்த தகுதி என்னிடம் இல்லை. என் மேல் சாபம் ஏதும் இருக்கவில்லை; மலர்க் கொடியை நான் பாம்பு என்று எண்ணி ஒதுக்கிவிட்டேன். மலர்ந்த உள்ளத்தின் அன்பை நான் அறிந்திருந்தேன்; அறிந்தும் அறிவிலி நான்; கோமள மலர்களை, நறுமணம் வீசிய நன்மலர்க்கொடியை வேனிற்காலத்து உச்சிப் பகலின் வெயிலிலே இட்டுப் பொசுக்கினேன். அது என் குற்றம். மன்னிப்புக் கேட்கக்கூட எனக்கு அருகதை கிடையாது. இருந்தாலும், மன்னிப்பு வேண்டுகிறேன். அது கிடைத்துவிட்டால், இனி என் வாழ்வில் ஏதும் பாக்கி இருக்காது.''

சந்திராவளி மனம் நெகிழ்ந்து போனுள். ''நவீனசந்திரஜீ, மதுரியின் மதுர இதயக் கடலிலே இரக்க அலைகள் பாய்ந்து குமுறிக்கொண்டிருக்கின்றன. அமாவாசை இரவில் மறைந்திருக்கும் நிலவு இல்லாமையால் கடல் கொந்தளித்து அலை பாய்கிறது. ஒவ்வோர் அலையிலும் கழிவிரக்கம் கரைபுரண்டோடுகிறது. நீங்கள் சிறிதும் ஐயமுறவேண்டாம்'' என்ருள்.

''அவளுடைய பெருந்தன்மை ஒவ்வொரு கணமும் பெருகி வளர்வதே போல எனது குற்றம் வளர்ந்து மன்னிப்புக்கு என்னை அருகதையற்றவனுக்குகிறது. எனது பிராயச்சித்தம் துர்லபமாகி விடுகிறது.''

''அவளுடைய உள்ளத்தைச் சரிவரச் சொல்லிக் காட்டியிருக்கிறீர்கள்.''

''நான் என்ன செய்வேன்! என் பிராயச்சித்தம் எப்போது?''

சரஸ்வதிசந்திரன் கண்ணீர் வடித்தான். ''மனமார நேசிப்பவளின் இதயத்தில் குடிகொள்வதும் அதனுல் மனம் மகிழ்வதுந்தான் உண்மையான பிராயச்சித்தமாகும்.''

''அவள் உள்ளம் தூய்மையானது. அதிலே நான் புகுவதற்கான தகுதி என்னிடம் இல்லை. இதே நிலையில் என் மீதி வாழ்வைக் கழித்தேனுனல்தான் அவள் உள்ளம் மகிழ்ச்சி அடையும்.''

''இனி எப்படி வாழ்வு என்பது நிச்சயிப்பதற்கு இனிமேல் தான் தருணம்.''

''நிச்சயிப்பதற்கு இனி ஏதுமில்லை. இந்த என் நிலையை விட வேறு எந்த நிலையையும் நிச்சயிப்பதற்கில்லை.''

''இதோ நானும் அவளும் மலையுச்சியில் ஏறி வந்தது உங்களுடைய தற்போதைய நிலையை நிரந்தரமாக்குவதற்கல்ல. உங்களுடைய பூர்வாசிரமத்தை நினைத்து மனத்திற்கு மனம் சாட்சி என்பதை உணர்ந்து கேள்விக்குப் பதில் தாருங்கள்.''

''நான் துயருற்றிருக்கிறேன் என்று என் துயரிலிருந்து மீளச் செய்யவே இங்கு வந்திருக்கிருள்.''

''நீங்கள் துயருற்றுத்தான் இருக்கிறீர்கள்.''

''அவளுடைய மன்னிப்பு எனக்கு எப்போது கிடைக்குமோ, அப்போதுதான் என் மனம் சாந்தி அடையும்.''

''உங்களது துக்கம் அவ்வளவு விரைவில் தீர்ந்துவிடுமானுல் அவளுடைய கணவரின் இல்லத்திற்கு நீங்கள் ஏன் சென்றீர்கள்? அவளது துக்கத்தைக் கண்டு பரிகசிக்கத்தானே போனீர்கள்?''

''அவள் அப்படி என்னைக் கொடியவனுகக் கருதியிருந்தால் அப்படியே ஆகட்டும்.''

''எந்த ஆவேசம் செல்வத்தையும் தந்தையையும் தியாகம் செய்யத் தூண்டியதோ அதே ஆவேசந்தான் காதலின்மேல் வெறுப்பு கொள்ளத் தூண்டியது. அதே வெறுப்புத்தான் அவளுடைய புக்ககத்திற்கு உங்களை அனுப்பியது. நீங்கள் இதை ஒப்புக்கொள்ளவேண்டும்''

விநாடி நேரம் வெட்கமடைந்து சொன்னுன்:

''என்னுடைய குற்றத்தை நான் அறிவேன். எனக்கு யார் மன்னிப்புத் தருவார்கள்? இனி இறைவன்தான் தரவேண்டும்.''

''ஞான வடிவமே! இந்த அலக் மடத்தில் வருபவர்கள் ஆன்மாவை அறிந்துகொள்கிருர்கள்; அவர்கள் சோகத்தைக் கடந்துவிடுகிருர்கள்.''

''சோகம் நீங்கிவிடும்; ஆனுல் பாவம்?''

''குருஜி அதற்கும் வழி சொல்லுவார்; ஆனுல் என்னுடைய தற்போதைய திட்டம் இதுதான்: நீங்களும் மதுரியும் ஏகாந்தமாய்ச் சந்தித்து இருவரும் ஒருவர் நிலையை ஒருவர் புரிந்துகொண்டு உங்களிருவரின் இச்சைப்படி சேர்ந்திருப்பதைப் பற்றியோ பிரிந்திருப்பதைப்பற்றியோ முடிவு செய்துகொள்ள வேண்டும்.''

''அதனுல் என்ன பலன்?''

''அவளுடைய துக்கத்தை நீங்கள் அறிந்துகொள்ளுவீர்கள்; அவளும் உங்கள் துயரத்தைத் தெரிந்துகொள்வாள். அவளுடைய நோய்க்கு இந்தச் சந்திப்பினுல் மருந்து ஏதேனும் கிடைக்குமானுல், அதையே நீங்கள் மன்னிப்பாகக் கருதலாம். வேறேதேனும் தருவதாக நீங்கள் யத்தனித்தால் அதையும் நீங்கள்

மன்னிப்பாக எண்ணிக்கொள்ளலாம். எப்படியும் மன்னிப்புப் பெறவேண்டுமானால் சந்திப்பு இல்லாமல் எப்படி அது சாத்திய மாகும்? இரண்டு உள்ளங்களின் சந்திப்பில்லாமல் அவை இரண்டிலுமுள்ள ஆவேசம் தீராது.''

''மன்னிப்புக்குச் சந்திப்புத் தேவை என்பதை அறிவேன். ஆனால் மதுரியின் உள்ளம், அவளுடைய பதியின்மேல் உள்ள நேசம், அவளுடைய கற்பு - இவற்றைப்பற்றிச் சிந்திக்க வேண்டாமா?''

''நீங்கள் அதைப்பற்றி யோசிக்கவேண்டாம். அது மதுரியின் விசாரம்.''

''என்னைப் பொறுத்தவரையில் அவளுக்குச் சரியான மார்க் கத்தைக் காட்டவேண்டும் என்பது என் விருப்பம்.''

''அதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் இருவரின் காதல் சந்திரன், குமுத மலர் இரண்டினது நேசத் தைப்போல. அதிலே உடல் சம்பந்தத்திற்கு இடமில்லை. கண்களும் உள்ளங்களும் சேருவதுதான் அதிலே இடம் பெறும். உள்ளச் சேர்க்கையைத்தான் நாங்கள் விரும்புகிறோம்; உங்கள் உடற்சேர்க்கைக்கான திட்டம் இதுவல்ல.''

''காரணம்?''

''எங்கள் நியாயப்படி அவள் உள்ளம் தங்களைத்தான் கணவராக வரித்திருந்தது; ஆகவே, நீங்கள்தாம் உண்மைக் கணவர்; அவளுடைய உடலை மணந்தவரை ஆசை நாயகராகக் கருதுகிறோம்.''

''இது விபரீதமான எண்ணமாகும்.''

''அலக் வாதப்படிதான் எங்கள் தீர்மானத்துக்கு வந்திருக் கிறோம். நீங்கள் உங்கள் இச்சைப்படி எந்த எண்ணமும் கொள்ளலாம்.''

''உங்களுடைய தீர்மானத்தைக் கேட்டுத் திடுக்கிடுகிறேன், மையாஜீ. உங்கள் தீர்மானம் ஒரு தூய வாழ்வைக் கெடுத்து விடும்; உலக நீதி அதை ஒப்புக் கொள்ளாது. உலக நீதிக்குப் புறம்பானதாய் அவள் ஒதுக்கப்படுவாள். இந்த மார்க்கம் சிறிதும் உசிதமில்லை.''

''ஏன் உசிதமில்லை? அபலை யொருத்தியைக் காதலித்து விட்டு அவளைப் பாழும் கிணற்றில் தள்ளிய பிறகு அவளை நீங்களே காப்பது ஏன் உசிதமில்லை? பெரும் பயத்தினின்று அவளை விடுவிக்க நான் சொல்லுகிற மார்க்கம் உலகநீதிக்குப் புறம்பான மார்க்கம் என்று பொய்யான பயம் காட்டுகிறீர் கள். இது உசிதமா? உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் என்ற பொய்யான கௌரவந்தான் உசிதமாகுமா? சுகநலன்களுக்கு

என்று யுத்தத்தில் ஈடுபடவேண்டும். அதுவே தர்மமாகும் என்று நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அந்த வழியே பிராயச்சித்தமாகும்; தயை செய்து பின்வாங்காதீர்கள், அதில் அதர்மத்தையும் அநீதியையும் பார்க்காதீர்கள்.

சந்திராவளி கோபத்துடன் கண்ணிமைகள் துடிக்கக் கூறினாள்.

''எனக்குப் பயத்தைத்தவிர வேறு ஒன்றுமில்லை. நான் வேறு என்ன சொல்வது?''

''உங்கள் இரண்டு உள்ளங்களுக்கும் அமைதி தேட வேறு என்ன வழி இருக்கிறது?''

''வேறு வழி ஏதுமில்லை என்பது உண்மைதான். இருந்தாலும் இந்தச் சந்திப்பை நான் விரும்பவில்லை; அதற்கான காரணத்தைச் சொல்லியாகிவிட்டது.''

''நீங்கள் இந்தப் பயத்தை விடுங்கள். இந்த ஒரே ஒரு வழியைப் பின்பற்றி முடிவு செய்யுங்கள். உலகநீதி வகுத்திருக்கிற திருமணக் கட்டுப்பாட்டையே அவள் பின்பற்றி வருகிறாள்; இந்தச் சந்திப்புக்கான அவளுடைய சம்மதியும் எளிதில் கிடைத்துவிட்டது.

''மதுரி தங்களின் சுகத்தை விரும்புகிறாள்; அதிலே சிறிதும் சுயநலம் என்பது இல்லை. மற்றத் துறவிகள், சந்நியாசினிகள் ஆகியோரின் சார்பிலும் என் சார்பிலுமே வந்திருக்கிறேன். மதுரி தங்களிடம் வர மறுத்துவிட்டாள். ஆகவே, நானே தங்களிடம் வந்து பேசவேண்டும் என்பது சந்நியாசினிகளின் யோசனை. நான் சொல்ல வேண்டியவற்றையெல்லாம் சொல்லிவிட்டேன். இனி முடிவு செய்ய வேண்டியது நீங்கள். மதுரியும் தங்களைப்போலவே துறவறம் பூண்டவள்தான். நானும் விரதம் பூண்டவள்தான், என் விரதத்தைத் தியாகம் செய்து மதுரிக்காகத் தங்களிடம் வந்திருக்கிறேன். சாது ஜனங்களின் வார்த்தையில் மதிப்புவைத்து, மதுரியின்மீது தயை புரிந்து நான் சொல்வது சத்தியம் என உணர்ந்து பெருந்தன்மையுடன் முடிவு செய்யுங்கள்; எனது வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளுங்கள். உண்மையை வலுப்பெறக் கூறி நிறுத்த எனக்குப் போதிய ஞானமில்லை. ஆனால் கரங்குவித்துத் தங்கள் முன்னே நிற்கிறேன்; துறவியிடம் பிட்சை வாங்க நான் வெட்கப்படவில்லை.''

சந்திராவளி இதைச் சொல்லச் சொல்ல மனம் உருகிப் போனாள்; குரல் தழுதழுத்தது. சரஸ்வதிசந்திரன் சிந்தனையில் மூழ்கினான். என்ன பதில் சொல்வது என்ற சஞ்சலத்தில் ஆழ்ந்துவிட்டான்.

சந்திராவளி மீண்டும் பேசினுள்.

''விஹாரபுரியைத் தவிர ஆடவர் வேறெவரிடமும் நேருக்கு நேர் நின்று பிட்சை வேண்டியதில்லை இதுவரைக்கும். இன்று இரக்கத்தின் சுடரொளிக்காகக் காத்து நிற்கிறேன்'' என்ருள் சந்திராவளி.

பதில் இல்லை.

மீண்டும் கேட்டாள்:

''எனக்கு என்ன உத்தரவு தரப்போகிறீர்கள்?''

சரஸ்வதிசந்திரன் திடுக்கிட்டான். உறக்கத்திலிருந்து விழித்தெழுந்தவன்போல எதிரே நின்ற சந்திராவளியைக் கண்டு அவள் கை குவித்து வணங்கும் நிலையைக் கண்டான்.

''மையாஜி! நீங்கள் எனக்குத் தாய் போன்றவர்கள். என் மேல் இவ்வளவு கருணையும், அன்பும், சிந்தனையும் வைத்து வந்திருக்கிறீர்கள். உங்களுடைய உத்தரவை மீற எனக்கு அதிகாரமில்லை'' என்ருன் சரஸ்வதிசந்திரன்.

முந்தின நாள் விஷ்ணுதாஸ ஸ்வாமிகள், மடங்களைச் சுற்றிப் பார்க்கச் சென்றபோது, சரஸ்வதிசந்திரன் சில காட்சிகளைக் கண்டான்; அவை இப்போது அவனது நினைவுக்கு வந்தன. விஷ்ணுதாஸ ஸ்வாமிகள் சந்திராவளிமையாவிடம் சென்று அவளுடைய சுகநலனைப்பற்றி விசாரித்தார். 'அலக்' கோஷத்துடன் சந்திராவளியின்பேரிலும் சாது ஜனங்கள் ஜயகோஷமிட்டார்கள். மாலை ராஸலீலா நிகழ்ச்சியின்போது விஹாரபுரி உபதேசம் செய்துகொண்டிருந்தார். மிகுந்த தியானத்துடன் நின்றுகொண்டிருந்தாள் சந்திராவளி. உபதேசம் முடிந்தவுடன் விஹாரபுரி சந்திராவளியிடம் சென்று அவளை வணங்கினுர். எல்லோரும் 'சந்திராவளிக்கு ஜய்' என்ற கோஷமிட்டார்கள். சாது ஜனங்களிடம் சந்திராவளிக்குப் பெரு மதிப்பு இருக்கிறது என்பதைச் சட்டென்று உணர்ந்துகொண்டான் சரஸ்வதிசந்திரன்.

சந்திராவளி விடைபெற்று எழும்போது சரஸ்வதிசந்திரன், ''மையாஜி! வசிஷ்டரின் சகதர்மிணி அருந்ததியைப் போன்று தெய்விகம் உடையவர்கள் தாங்கள். உஷாதேவி போன்று என்னிடம் வந்து என் அக இருளை நீக்கி ஒளி தந்துவிட்டிருக்கிறீர்கள்'' என்று அவளுடைய சரணங்களில் விழுந்து பணியத் துடித்தபோது சந்திராவளி அவனைத் தடுத்து நிறுத்தினுள்.

சந்திராவளி சென்ருள்.

சரஸ்வதிசந்திரன் சிந்திக்கத் தொடங்கினுன். புத்திதனரது இல்லத்திலே குமுதசுந்தரியுடன் கழித்த நாட்களை நினைவு கூர்ந்தான். 'ஸ்தூல சரீரத்தின் வளர்ச்சிதான் என்ன?

அன்று தன்னடக்கத்துடன் அவளுடைய வீட்டில் நடந்துகொண்டேன். இன்றோ மனம் ஏன் நெகிழ்ந்துவிட்டது. அந்நியர் வீட்டில் அன்று அச்சம் இருந்தது; அந்த அச்சத்தையும் இந்தத் துறவிகள் உடைத்தெறிந்துவிட்டார்களே! நான்தான் கணவன். பிரமாததனன் ஆசைநாயகன் என்கிறார்களே!

'நான் கணவனா, இல்லை பிரமாததனனா என்ற பிரச்னை பிரமாததனனின் மரணத்தால் முடிந்துவிட்டது. இந்தச் சாதுக்களின் எண்ணப்படி குமுதசுந்தரியின் திருமணம் உண்மையானதல்ல என்ற கொள்கையை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். அவள் இதுநாள் வரை வளர்த்து வந்திருக்கும் பதிவிரதா தர்மத்திற்குக் களங்கமேதும் ஏற்படக்கூடாது. இனி விதவையாகிப் போய்விட்ட அவள் விதவைகள் மடத்திலேயோ, அல்லது சந்திராவளியுடனோதான் எஞ்சிய நாட்களைக் கழிக்கவேண்டும். அதுதான் சிறந்த மார்க்கம். ஆனால் நான் யார், அவளுடைய எதிர்காலத்தை நிச்சயிப்பதற்கு? நான் செய்தது பெரியதோர் குற்றம்; அதைக் கழுவுவதற்குத்தான் நான் வழி தேட வேண்டும். அதைத் தவிர வேறேதும் நிச்சயிப்பதற்கு எனக்கு அதிகாரம் இல்லை.

'குமுதசுந்தரியின் வாழ்வில் நான் மீண்டும் ஏன் புக வேண்டும்? இனி எப்படிப் போனால் என்ன? பிரமாததனன் எப்படியானால் என்ன? அவனது மரணச் செய்தியை நானா தெரிவிக்கவேண்டும்? அதை அறிந்து எவ்வளவு துக்கமடைவாள்? அதை நான் ஏன் பார்க்கவேண்டும்? துக்கத்தைப் பார்ப்பதற்கும் பார்க்காமலிருப்பதற்கும் எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது!

'பிரமாததனனது மரணச் செய்தியை அறிந்து மனம் ஆறுதல் பெற்றபின் என்னை மணந்துகொள்ள அவள் முடிவு செய்தால் என் தர்மம் என்னவது? பிரமாததனனின் மரணச் செய்தியை நான் தெரிவிக்கமாட்டேன். அவள் அறியாமலிருந்தால், பதிவிரதா தர்மம் அவளை நிச்சயம் தடுக்கும்; அவள் என்னை மணக்க முடிவு செய்யமாட்டாள்.

'குணசுந்தரியின் தூய உள்ளத்தின் பிரதிபிம்பமே! சௌபாக்கிய தேவியின் அன்புக்கு உரியவளே! நீ எந்த மார்க்கத்தைக் காட்டுகிறாயோ அதுவே சிறந்த மார்க்கமாகும். உனது விருப்பமே என் விருப்பமாகும்; அதையே நான் பின்பற்றுவேன்.'

12. விஷ்ணுதாஸ ஸ்வாமிகளின் சாமர்த்தியம்

விஷ்ணுதாஸ ஸ்வாமி ஸுந்தரகிரியில் இருக்கும்போதெல்லாம் நித்திய நியமப்படி பணிகள் நடக்கும். கீழே சமவெளியில் அவர் செல்லும்போது நாளெல்லாம் சமய உபதேசத்தில் நேரம் கழிப்பது வழக்கம். அவரைச் சந்திக்க மக்கள் திரள்வது சர்வ சாதாரணம்.

ரத்னநகரிக்கும் மனேஹர்புரிக்கும் இடையில் ஹிமஸர் என்னும் பெயருடைய தடாகம் ஒன்று இருந்தது. சந்திராவளி சரஸ்வதிசந்திரனைச் சந்தித்துவிட்டுத் திரும்பிச் சென்றபோது சாதுக்கள் தடாகத்தினருகில் வந்துவிட்டார்கள். தடாகக் கரையில் வேப்பமரங்களும், மாமரங்களும் அரசமரங்களுமாக நிழல் விரித்துக்கொண்டிருந்தன. அங்கே அவர்கள் தங்க நிச்சயித்தார்கள். விஹார மடத்தின் தலைவர் ஞானபாரதி, வயது முதிர்ந்த பிரம்மசாரி ஜானகிதாஸ ஸ்வாமிகள், விஹாரபுரி, இன்னும் இரண்டும் சாதுக்கள் ஆகியோர் விஷ்ணுதாஸ ஸ்வாமிகளுடன் அங்கே தங்கினார்கள். அந்த இரண்டு சாதுக்களும் சம்சாரத்தைத் துறந்து விஷ்ணுதாஸரை வந்தடைந்தார்கள். அவ்விருவரும் நன்கு படித்தவர்கள்; ஆங்கிலம் அறிந்தவர்கள். ஒருவர் அமைதியான சுபாவம் கொண்டவர்; அவர் பெயர் சாந்திதாஸர். இன்னொருவர் குறுகுறுப்பானவர், எதிலும் வினுக்கள் எழுப்புபவர் - சங்காபுரி. அவ்விருவரும் குளத்தில் இறங்கி நீச்சலடிக்கத் தொடங்கினார்கள். மரத்தடியில் விஷ்ணுதாஸ ஸ்வாமிகளும் மற்றவர்களும் குழுமினார்கள்.

விஹாரபுரியை நோக்கி விஷ்ணுதாஸர் பேசலானார்:

''விஹாரபுரி, உன்னுடைய உள்ளம் இதோ இந்த நிழல் நிறைந்த தடாகக் கரையைப் போன்று குளிர்ந்த அமைதியுடன் கூடியிருக்கிறது. அதற்கான காரணம் சந்திராவளி மையாவின் உள்ளச் சாயை உன்னிடத்தில் படிந்திருப்பதுதான். நவீன சந்திரனின் இதயம் இந்தத் தடாகத்தைப் போல் குளிர்ந்து, அமைதியுடனும் அமிர்தத்துடனும் கூடியிருக்கிறது. ஆனால் அவனது உள்ளத்தடியிலே என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லையே!''

விஹாரபுரி புன்னகை பூத்தவண்ணம் பேசினார்:

''தடாகத்தின்மேல் மரங்களின் நிழல் படியவில்லை. ஆகவே, நீரெல்லாம் ஆவியாகி மறைந்து காய்ந்து போய்விட்டிருக்கிறது'' என்றார்.

ஞானபாரதி, ''குருஜீ, சந்திராவளிமையா சிகிச்சை செய்து மருந்து தருவதே உசிதமாகும்'' என்றார்.

ஜானகிதாஸர், ''இரவில் அது தெரிந்துவிடும்'' என்று கூறினார்.

விஷ்ணுதாஸர், ''விஹாரபுரி, இன்று இரவு நவீன சந்திரனை சிரஞ்சீவிச்ருங்கத்தில் தங்கவிடுங்கள்'' என்றார்.

''காரணம் என்ன?'' என்று வினவினார் விஹாரபுரி.

''காரணம், காரியம் இரண்டும் பெரியவை. நீங்கள் மூன்று சாதுக்களும் யதுச்ருங்க சம்பிரதாயத்தில் பயிற்சி யுடையவர்கள். உங்கள் மூவரில் மடத்தின் முக்கியமான காரியத்தை யாரிடம் ஒப்படைக்கலாம்?'' என்று கேட்டார் விஷ்ணுதாஸர்.

''அதை நீங்கள்தான் நிச்சயிக்கவேண்டும்'' என்றார் ஜானகிதாஸர்.

''ரஸம், ஞானம், வைராக்கியம் ஆகிய மூன்றிலும் யாருக்கு அதிகம் தேர்ச்சியுண்டு என்பதை நீங்கள்தான் அறிவீர்கள்'' என்றார் ஞானபாரதி.

''அது உண்மைதான். அத்தகைய மனிதரைத் தேடி, மடத்தின் பொறுப்பை ஒப்படைக்க மேற்கொள்ளும் முயற்சி இந்தத் தேகத்தைச் சார்ந்தது. இதுநாள் வரை விஹாரபுரியே பாத்திரமானவர் என்று கருதி வந்தோம். ஆனால் இப்போது விஹாரபுரியே நவீனசந்திரனிடம் பொறுப்பை ஒப்படைக் லாம் என்கிறார்'' என்றார் விஷ்ணுதாஸ ஸ்வாமிகள்.

''ஆமாம், கொஞ்சங்கூடப் கவலைப்பட வேண்டாம்'' என்றார் விஹாரபுரி.

விஷ்ணுதாஸ ஸ்வாமிகள் சொன்னார்:

''சோதிட முறைப்படி யோசித்தால் நவீனசந்திரன் பெரியதோர் தியாகி ஆவான் என்று தோன்றுகிறது; அதனால் யதுச்ருங்கனுக்குப் பெருத்த லாபம் விளைய யோகம் இருக்கிறது. ஆனால் நவீனனுடைய உள்ளத்தடியே ஏதோ துக்கம் இருக்கிறது என்பதாகச் சொல்லுகிறார் விஹாரபுரி. ஸ்திரீகள் சம்பந்தப்பட்டவரை தியாகம் செய்கிற யோகமும் அவனிடம் இருக்கிறது. இதைப்பற்றிய துயரம் என்றால், அதற்கான விருப்பமும் அக்கினிமேல் நீரென மறைந்துவிடும். சந்திராவளி மையா சொல்லுகிற உபாயத்தில் பயப்படுவதற்கு ஏதுமில்லை. இருவரையும் சந்திக்க வாய்ப்புத் தந்து அவர்களே நிச்சயிக்கட்டும். சிரஞ்சீவச்ருங்கமே நல்ல உசிதமான இடமாகும். அங்கே சந்திப்புக்கு ஏற்பாடு செய்யலாம்.

இந்தச் சந்திப்பினுல் மூன்று மடங்களுக்கும் மிகுந்த நன்மை விளைய இடம் இருக்கிறது.''

''நீங்கள் செய்திருக்கிற முடிவு உத்தமமானதாகும். மதுரிமையா மிகவும் உயர்ந்த பண்பு கொண்டவள். அவசியம் இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யத்தான் வேண்டும்'' என்ருர் ஞானபாரதி.

''நவீனசந்திரனைத் தொடர்த்து யோகசாஸ்திரத்திலும் சோதிட சாஸ்திரத்திலும் வர்ணிக்கப்பட்டுள்ள நாடி சக்கரத்தின் பலத்தால் கவரப்பட்டு மதுரிமையா வந்திருக்கிருள். இதே நாடி சக்கரம் சந்திப்பின் பிராரப்தத்திற்கும் வழி செய்யும்'' என்ருர் விஷ்ணுதாஸர்.

அப்போது அங்கே வந்தார்கள், சங்காபுரியும் சாந்தி தாஸரும். சங்காபுரி கேட்டார்.

"சோதிட முறைப்படி கிரகபலன் கிட்டுமாளுல், நாம் எதற்காக முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்? தாளுகவே அது வரட்டுமே!''

விஷ்ணுதாஸர் பதில் சொன்ஞர்:

''சங்காபுரி, சோதிட சாஸ்திரத்திஞல் மனிதனது கதியையும் ஈசுவரனின் இச்சையையும் தெரிந்துகொள்கிறோம். அதஞல் மனிதரின் தர்மம் நஷ்டமுறுவதில்லை. நவீனசந்திரனது உடலை நாம் காட்டின் அந்தகாரத்திலிருந்து கிரகத்தின் நாடிச் சக்கர வேகத்தால் பெற்றுக்கொண்டோம், கிரகபலன்படி இந்த உடல் நம்மிடத்தில் ரத்னரூபம் அடையும். அலக் மடத்தின் சாமான்ய தர்மம் மங்களமான முடிவைப் பெறுவதுதான். கிரகபலன் என்பது நமது முயற்சியான தீபத்திற்கு எண்ணெய் போன்றதாகும்.''

''நவீனசந்திரரின் கிரகதசை நமக்கு எப்படித் தெரியும்? அவரது ஜாதகமும் நம்மிடம் இல்லையே!''

''பிரச்ன லக்கினத்தின்மூலம், என்னுடைய சொந்த ஜாதகத்தின் தசைவழியாக நான் கண்டு அறிந்தேன்.''

''ஆண் - பெண் இருவரைத் தனிமையில் சந்திக்க ஏற்பாடு செய்வது தகுதியாகுமா?'' என்று வினவிஞர் சாந்திதாஸர்.

''யதுச்ருங்கத்திலுள்ள சாதுக்கள் ஸ்திரீபுருஷர்களை அத்யாத்ம திருஷ்டிமூலமே பார்க்கிருர்கள். உடல்விகாரத்தின் அதர்ம வளர்ச்சிக்கான மார்க்கம் இங்கே இல்லை. தற்போது சந்திரவாளி மையா நவீனசந்திரனைத் தனிமையில் சந்தித்திருப்பாள். அதனது பவித்திரத்தைப்பற்றிச் சங்காபுரிகூடச் சந்தேகிக்க இடமில்லை.''

சாந்திதாஸர் விஷ்ணுதாஸரின் பதிலால் மகிழ்ச்சியடைந்தார். சங்காபுரியும் சாந்திதாஸரும் அகன்றார்கள்.

எஞ்சியிருந்த மூன்று சாதுக்களிடம் விஷ்ணுதாஸர் சொன்னார்:

''இனி நான் சொல்லப்போவதை நீங்கள் மூவரும் பரம ரகசியத்துடன் காத்து வரவேண்டும்.''

மூவரும் திகைத்துப் போனார்கள். விஷ்ணுதாஸர் தொடர்ந்தார்.

''நாளையிலிருந்து ஐந்து நாள் என் உடல் உயிரின்றிக் கிடக்கும். அதை நீங்கள் ஜாக்கிரதையாகக் காத்து வாருங்கள்.''

''ஸ்வாமி, தங்கள் ஆக்ஞையில் விசேஷம் ஒன்றுமில்லையே. இருந்தாலும், சரீர சம்ரட்சணத்தில் கேட்பதற்கு என்ன இருக்கிறது?'' என்று கேட்டார் விஹாரபுரி.

''இந்த உடல் பலவீனம் அடைந்துவிட்டது. இனி நவீன சந்திரனைத் தயார் செய்வதற்கு என்னால் செய்யக்கூடியது ஒன்றே ஒன்று பாக்கியிருக்கிறது: அவனுடைய விருப்பங்களும் ஆசைகளும் தகனமாவதற்கான காலம் வெகு தூரத்தில் இல்லை. நாளையிலிருந்து ஐந்து நாட்களில் அநுகூலமான முகூர்த்தங்களில் அவனுடைய உடலில் புகுந்து ஆசைகளை ஒழிக்க முயல்வேன். மீதிச் சமயத்தில் எனக்குரிய யோக நிலையில் இருப்பேன். எந்த எந்த விஷயங்களில் நவீன சந்திரனின் ஆசைகளையும் விருப்பங்களையும் தகர்த்து அமைதியளிக்கத் தவறுவேனோ, அவற்றில் மீதிச் சித்தபுருஷர்கள் முயல்வார்கள். வேறு ஒன்றும் முடியாது போனாலும் சித்த தரிசனத்தால் அவனுடைய உள்ளத்தில் பிரக்ஞையின் வித்து விழும்.''

''நவீனசந்திரனின் கிரகயோகம் நிச்சயமாயிருக்கும்போது இந்த முயற்சி தேவையில்லையே!'' என்றார் ஜானகிதாஸர்.

''தங்களுக்கும் நவீனசந்திரனுக்கும் முக்தி என்பது சாத்தியமாக இருக்கும்போது இந்தக் கடினமான மார்க்கம் எதற்கு?'' என்று கேட்டார் விஹாரபுரி.

''அலட்சிய தத்துவம் வழியாகப் பார்த்தால், விஹாரபுரி, நீங்கள் சொல்வது சரியே. ஆனால் கண்ணபிரான் பாண்டவர்களுக்கு உதவி புரிந்து அவர்களுடைய சாதனைகளுக்குக் காரண கர்த்தராக இருந்தார்; அதேபோல நானும் நவீனசந்திரனின் முயற்சிகள் வெற்றியடையக் காரணபூதனாக வேண்டுவது என் கடமை: எங்களிருவருக்கும் உள்ள பிணைப்பு ஆழ்ந்த ஒன்றாகும். அந்தப் பிணைப்பில் அவன் சிறந்ததொரு நிலை அடையவேண்டுமென்பது எனது லட்சியமாகும்'' என்றார் ஸ்வாமி.

13. சநாதன தர்மம்

விஷ்ணுதாஸ ஸ்வாமியும் மற்றத் துறவிகளும் 'அலக்' பிரசாரம் செய்து திரும்பினார்கள். மறுநாள் காலை நித்தியக் கடன்களை முடித்துவிட்டு மடத்தின் பின்புறத்தில் விஷ்ணுதாஸர் மற்றத் துறவிகள், நவீனசந்திரன் ஆகியோர் கூடினார்கள்.

விஷ்ணுதாஸர் பேச ஆரம்பித்தார்:

''நவீனசந்திரா, ஸ்ரீயதுநந்தனை நமஸ்கரிக்காத நீ நேற்றுச் சந்திராவளிமையாவைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கத் துணிந்ததன் காரணம் என்ன?'' விஷ்ணுதாஸ ஸ்வாமியின் கேள்விக்கு நவீனசந்திரன் பதில் சொன்னான்:

''வாழ்க்கையைத் துறந்து தங்களுடைய சரணங்களை அடைந்துவிட்ட எனக்குத் தங்கள் அபிப்பிராயத்தை அறியவே ஆசை. நான் வணங்கியது மையாவின் தூய உள்ளத்தையே. அன்னைக்குமுன் மகன் அடிபணிவது இயல்பே. ஒன்றை வணங்கிவிட்டு இன்னொன்றை வணங்காததன் காரணம் இந்த இதயமே. இந்தத் தேசத்தில் ஆண் - பெண்களுக்குள்ள வேற்றுமையை உணரும் தன்மையைத் தங்கள் சரணம் வந்தடைந்த பின்னர் மறந்துபோனேன்.''

விஷ்ணுதாஸர் மகிழ்ச்சியடைந்தார்.

''நவீனசந்திரா, உன்னுடைய பதிலைக் கேட்டு மிகவும் திருப்தியடைகிறேன். உன்னுடன் பேசப் பேச எனக்கு உன்னிடம் பற்றுதல் அதிகமாகிறது. செய்யவேண்டிய காரியத்தைக் கூட மறந்துவிடுகிறேன். உனக்காகப் புதியதோர் திட்டமிட்டிருக்கிறேன். நாளையிலிருந்து நான் சில நாட்கள்வரை சமாதியில் இருக்கப் போகிறேன். அதுவரை நீ சிரஞ்சீவி ச்ருங்கத்தில் ஏகாந்தமாக நாட்களைக் கழிக்கவேண்டும்.''

''தங்கள் உத்தரவுப்படி நான் என்றுமே நடக்கத் தயார். நேற்றுச் சந்திராவளிமையாவுக்கும் அவ்வாறே வாக்களித்திருக்கிறேன்.''

''சந்திராவளிமையாவின் விருப்பம் சுகநலன்களை முன்னிட்டாகும். ஆனால் என்னுடைய விருப்பம் மற்றக் காரணங்களுக்காக. சிரஞ்சீவிச்ருங்கத்தின் மகாத்மியமே மகாத்மியம்! அங்கே சித்ததரிசனம் கிடைக்கும் பாக்கியம் கிட்டுகிறது. உலக நலன்களுக்கான சிரஞ்சீவத்துவமும் கிட்டுகிறது; சில உத்தமர்களுக்கு விழிப்பு நிலையில் உண்மை புலனாகிறது; சிலர் அற்

புதமான உறக்க நிலையில் உண்மையை அறிகிறார்கள்; முக்தியடைந்து விழிப்படைகிறார்கள். இன்று இரவிலிருந்து நீ அங்கே தங்கிவிடு. அதன் பலனை அடைய இடையூறு ஏதேனும் இருந்தால் நான் சமாதிநிலையில் உனக்குச் சித்ததரிசனம் கிடைக்க உதவி புரிவேன்.''

''தங்களது கருணை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. எனது சக்திக்கும் தகுதிக்கும் அதிகமாக என்னைக் கருதி அளவற்ற அன்பு காட்டி வருகிறீர்கள். நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். எனக்கு ஏற்பட்டுள்ள நான்கு சந்தேகங்களுக்குத் தாங்கள் சமாதானம் சொல்லவேண்டும்.''

''ஓ, நீ அவசியம் கேட்கலாம்.''

''தியாகம் சிறந்ததா? கிருகஸ்த பதவி சிறந்ததா? தியாகம் செய்வதற்குத் தகுந்தவர் யார்? கிருகஸ்த பதவிக்குத் தகுந்தவர் யார்? பிதா, பத்தினி, குரு, சுயமான மனிதன் இந்நால்வரில் கருத்து வேற்றுமை இருந்தால் யாருடைய கருத்துக்கு அதிகமாக மதிப்புத் தரவேண்டும்? பெண்ணொருத்தியைக் காரணமின்றித் தியாகம் செய்பவருக்குப் பிராயச்சித்தம் என்ன? வாழ்வு, தர்மம், சாஸ்திரம் ஆகிய மூன்றும் சேர்ந்தால் வெற்றி எதற்கு? தியாகம் செய்வதற்கான தகுதி யாருக்கு உள்ளது? யாருக்குக் கிடையாது? விதவிதமான வர்க்கத்தைச் சேர்ந்தவருக்குச் சநாதன ரீதியில் சாமான்யமான தர்மம் எது?''

பதில் கிடைப்பதற்கு முன் வெளியே குரல்கள் கேட்டன: ''யதுநந்தனருக்கு ஜயம்! சந்திராவளிமையாவுக்கு ஜயம்''!-கோயிலிலே மணிகள் ஒலித்தன. சிறிது நேரம் கழித்துக் குமுதசுந்தரியை அழைத்து வந்தாள் சந்திராவளிமையா. அவளுடன் பல சந்நியாசினிகளும் வந்தார்கள். விண்மீன்களுடன் சுக்கிரனையும் அழைத்துவரும் சந்திரலேகாவைப் போல் விஷ்ணுதாஸரின் ஆசிரமத்துக்குள் வந்து நின்றாள் சந்திராவளி; மலர்களை ஸ்வாமிகளின் சரணங்களில் சமர்ப்பித்துக் கரங்கூப்பினாள். விஷ்ணுதாஸர் கரங்களைக் குவித்து எல்லோரையும் அமரச் செய்தார்.

ஒரு பக்கம் சாதுக்கள் அமர்ந்தார்கள். இன்னொரு பக்கம் சந்திராவளியும் அவளுடைய கூட்டத்தினரும் அமர்ந்தார்கள். அந்தச் சபை சரஸ்வதிச்சந்திரனுக்குச் சற்றே விசித்திரமாகப் பட்டது. ஜடைதரித்த ஆடவர்களுடன் காவியுடை பூண்ட பெண் துறவிகள்: அவர்களுக்கு முன்னால் குமுதசுந்தரி சந்திராவளிமையாவுடன் இருந்தாள். எல்லாருக்கும் முன்னே விஷ்ணுதாஸர் - இமயம் போன்றும்: அதிலிருந்து எழும் கங்கையும் யமுனையும் போன்றும் இப்படித்தான் சரஸ்வதிசந்திரனுக்கு அக்காட்சி தோன்றியது.

அந்தப் பிரவாகத்திற்கு முன்னால் மறைந்து செல்லும் சரஸ்வதி - கங்கா போன்று குமுதசுந்தரி அமர்ந்திருந்தாள்; விநாடிக்கு விநாடி எழும் மின்வெட்டில் தனக்கு முன்னால் வழி தேடி ஓடும் நதியெனக் குமுதசுந்தரி தனது பார்வையால் சபையை நோக்கினாள். சந்திராவளி அந்த வேளை விஷ்ணு தாஸரிடம் விடையிறுத்தாள்.

''குருஜி, தங்கள் கருணை சாது ஜனங்களின் பாக்கியமாகும்; இதோ, மதுரியை இங்கே அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். தங்களையும் தங்கள் ஆசிரமத்தையும் தரிசனம் செய்து பயன் பெறவேண்டும் என்பதே எங்கள் நோக்கம். ஞானபோதம் நடக்க இருந்தால் நாங்களும் கேட்டு நன்மை அடைய விரும்பு கிறோம்.''

விஹாரபுரி, ''ஸ்வாமிஜீ, நவீனசந்திரரின் கேள்விகளுக் குத் தாங்கள் சமாதானம் தந்தால், எல்லோரும் கேட்டுப் பயன் பெறுவோம்'' என்றார்.

விஷ்ணுதாஸர் சொன்னார்:

''நவீனசந்திரா, வாழ்க்கைக்காக மநு போன்ற பெரி யோர்கள் தர்ம சாஸ்திரங்கள் இயற்றியுள்ளார்கள். சாதுக் களுக்காக அலட்சிய (அலக்) சித்தாந்தம் வகுக்கப்பட்டுள்ளது. நீ இங்கே வாசகசாலையில் படித்திருப்பாய். ஞானிகள் தம்முடைய எல்லாவற்றையும் உலக நலனுக்கே அர்ப்பணிக்கிறார்கள்; தமக்கு என்று எதுவும் வைத்துக்கொள்வதில்லை. சாதுக்கள் இயற்கையாகவே திருப்தி நிறைந்தவர்கள். வாழ்வைத் துறந்து ஸுந்தரகிரியின்மேல் வருகிறார்கள். ஆத்ம சுத்திக்கான கடமைகளில் ஈடுபடுகிறார்கள். அதைத் தவிர வேறெதுவும் அவர்களுக்கென்று இல்லை. 'இதோ நான் செய்யவேண்டியது எல்லாம் செய்துவிட்டேன். ஆனால் கர்மம் முற்றும் பெறுவ தில்லை. ஏதாவது செய்யவேண்டிய தர்மம் மிகுந்திருந்தால் உலக நலனுக்குத்தான் அதைச் செய்யவேண்டும்' என்று உறுதி பூணுகிறார்கள்.

''எல்லாப் பொருளும் ஒரே ஒரு பரம்பொருளில் அடங்கி யுள்ளன. அதுதான் லட்சியம். லட்சியத்தை அடையும் வரை அவை கர்மவலையில் பின்னிக் கிடக்கின்றன. அவை யாவும் வலையினின்றும் நீங்கிப் பரம்பொருளை அடைய வெகு காலம் பிடிக்கிறது. வெறும் ஞானத்தால் இந்த லட்சியம் நிறை வேறுவதில்லை. தர்மபலத்தால், உலக நலன்களுக்கான செயல் களால் எல்லாப் பொருளிலும் நிறையப் பெற்றுப் பின்னர்ப் பெரும் பொருளாம் பரம்பொருளில் நிறைவு அடைகிறார்கள் பெரியோர்கள். 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே

யன்றி வேறொன்றறியேன் பராபரமே' என்பதுதான் லட்சிய வாதத்தின் குறிக்கோள்.

''சம்சாரிகள் தம் நலன்களுக்காக உலகத்தில் இயங்குகிறார்கள். சாதுக்கள் தம் இச்சையையும், செயல்களையும் உலகநலன் எனும் தீயில் இட்டுப் புடம் போடுகிறார்கள். எஞ்சியிருக்கும் வாழ்வுகளை உலக நலனுக்காகவே செலவிடுகிறார்கள். காரணம், உலக நலன்தான் லட்சியத்தின் இலக்கு. அதனால்தான் மநு, 'மறு உலகத்தில் உன் துணைக்குத் தாயும் தந்தையும் பிள்ளையும் பத்தினியும் வருவதில்லை. நீ செய்த அறமே உனக்குத் துணை' என்றார். அறம் என நாங்கள் கருதுவது உலக நலனுக்காக ஒவ்வொருவர் செய்யும் செயல்கள்.

''சந்நியாசிகளுக்கான தர்மத்தைப்பற்றி மநு கூறுகையில் 'வெறும் மரணத்தைமட்டும் எதிர்பார்க்கக்கூடாது. கர்ம பலனால் நடைபெறும் மனித நிலைகளை விமர்சித்து மனிதனின் துன்பங்கள், நோய்கள், இச்சையைத் துறப்பது, துறவறத்தால் அமைதியடைவது ஆகியவைபற்றியும் எண்ணி வரவேண்டும்; எல்லா உயிர்களுக்கும் இடையே சமநிலை பெற்று யாவும் உய்யவேண்டும் என்ற எண்ணம் பெறவேண்டும்: தேனை உண்டுவிட்டு, இனி மலரில் என்ன இருக்கிறது என்று இறுமாந்து இருக்கக்கூடாது. 'ஞான நூல்கள், வேத புத்தகங்கள் யாவும் பயின்றுவிட்டேன். இனி என்ன பாக்கியிருக்கிறது?' என்று கர்வம் அடையக்கூடாது. பெற்ற ஞானத்தைக் கிராமம் கிராமமாகச் சென்று பரப்பி வரவேண்டும்.

''சம்சாரிகளின் தர்மம் பஞ்சமகாயக்ஞம் என்பதில் நிறைவடைகிறது. அதே போலவே சாதுக்களின் தர்மம் பஞ்சமகாயக்ஞத்திலேயே நிறைவு பெறுகிறது. சம்சாரிகளுக்கான பஞ்சமகாயக்ஞத்தில் பித்ருயக்ஞம், மனிதயக்ஞம், பூதயக்ஞம், தேவயக்ஞம், பிரம்மயக்ஞம் ஆகிய ஐந்தும் அடங்கியுள்ளன. சாது ஜனங்களின் யக்ஞத்திலும் இந்த ஐந்துந்தாம் உள்ளன: ஆனால் அதில் ஆத்மாவும் உடலும் வெவ்வேறு விதத்தில் இயங்குகின்றன. பரமபுருஷர்கள் பரமயக்ஞத்தில் தங்களையே பலியிட்டுக்கொள்வது போல, ஜீவாத்மாவும் சாது ஜனங்களின் இந்தப் பஞ்ச மகாயக்ஞத்தில் கலந்துவிடுகிறது.

''வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளோர் செய்யும் யக்ஞத்தில் விறகு, நெய் இன்னோரன்ன பொருள்கள் தேவையாகின்றன. துறவிகளின் யக்ஞத்திலே அழகு, ஈடுபாடு, அன்பு, பக்தி ஆகிய நற்பண்புகள் தேவையாகும். இந்த யக்ஞத்தில் முதல் யக்ஞம் பித்ரு யக்ஞமாகும். பிள்ளைகள் ஆயுளுடன் இருந்தால் பித்ருக்கள் இந்த யக்ஞத்தின்மூலம் திருப்தி அடைகிறார்கள். இந்தத் திருப்திமூலம் பிதாமாதாக்கள்

பேராசை அடைகிறார்கள். அவர்களுடைய சூட்சுமசரீரங்கள் இந்த ஆசையினால் இழிவே அடைகின்றன. பிள்ளைகள் மற்ற நான்கு யக்ஞங்களையும் சரிவரச் செய்யாது போனால் அதனால் விளையும் பாவமும் பித்ருக்களை வந்தடைகின்றது; பித்ருக்களின் பஞ்சமகாயக்ஞமும் அரைகுறை நிலையை அடைந்துவிடும். துறவிகள் பித்ரு யக்ஞத்தைத் தியாகம் செய்து அதற்குப் பதில் மடயக்ஞம் செய்கிறார்கள். துறவிகளும் தம் பிள்ளைகளிடமிருந்து பித்ரு யக்ஞத்தை எதிர்பார்ப்பதில்லை. அதற்குப் பதில் சாதுக்களின் பராமரிப்பு, குருவைப் போற்றுதல், ஆசிரமப் பணி, மடத்தின் பணி, இறைவனின் பணி ஆகிய அறச் செயல்கள் செய்கிறார்கள்.

''மடயக்ஞம் செய்யும் நாட்களில் சாதுக்கள் மனிதயக்ஞம் செய்யவேண்டியவர்களாகிறார்கள். மனிதர்களின் திருப்திக்காகத்தான் இந்த யக்ஞத்தைச் செய்யவேண்டும். இந்த யக்ஞத்தில் சாதுக்களே யஜமானர்கள்; அவர்களே யக்ஞ பசுக்கள். இளமையில் யாகம் செய்யும் சக்தி இல்லாததால் பெற்றோர்களுக்கு அதிதிகளாகிறார்கள். பின்னர் வயது நிறைந்தவுடன் அதிதி என்ற முறை போய் யாக சக்தி வந்துவிடுவதால் யஜமானர்களாகிவிடுகிறார்கள். பெற்றோர்களை அதிதிகளாக்குகிறார்கள். அவர்களுடைய திருப்திக்காக யக்ஞம் செய்யப்படுவதால் பித்ருயக்ஞமாக இதைக் கருதலாம். துறவிகள் பெற்றோர்களையும் மற்றவர்களையும் சமானமாகக் கருதுகிறார்கள். ஆகவே, பித்ரு யக்ஞத்திற்கான முறைகளை மனித யக்ஞத்தில் ஒன்றாகச் சேர்ந்திருக்கிறார்கள். எங்கெங்கே இருக்கிறார்களோ அங்கங்கே உள்ளவர்களை யக்ஞத்திற்கான அதிதிகளாகக் கருதுகிறார்கள். அவர்கள் மாதா, பிதா போன்ற அதிகாரம் உடையவர்கள். புத்திரபுத்திரிகள் இதே அதிகாரம் உள்ளவர்கள். பதியிடம் பத்தினி வருகிறாள்; பத்தினியிடம் பதி செல்கிறார். ஒருவரையொருவர் அதிதியாகக் கருதுவதில்லை. அவர்களிடத்தில் தம்பதி பாவம் இருக்கிறது. இது போலவே - காந்தமும் இரும்பும் போல்-சாதுக்களிடம் அத்வைத பாவம் இருக்கிறது. இந்த பாவத்தில் அதிதி உணர்ச்சி வருவதில்லை. இத்தகைய பாவத்தைப் பார்க்க வேண்டுமானால் சந்திராவளி மையா, விஹாரபுரி இவர்களிடம் பார்க்கலாம்.

''யக்ஞத்தினின்று எழும் அறம் யக்ஞத்தின் யஜமானர், அதிதி ஆகிய இருவரின் அறத்தினைப் பொறுத்திருக்கிறது. விருந்தோம்பலினால் விளையும் பயன் புத்திரர்களிடமிருந்து பெற்றோர்களை அடைகிறது. தக்க அதிதிகளைத் தேர்ந்தெடுப்பதன்மூலம் பெரும் பயன் பெறலாம். ஆனால் அதிதிகளைத் தேர்ந்தெடுத்தபின் யோசிப்பதில் பயனில்லை.

''பின்னர் வருவது ஐம்பெரும் பூதங்களுக்கான யக்ஞம். இதில் பூதங்களுக்கான நலத்தையே நாம் நாடுகிறோம். பூதங்களிடம் நாம் தயை வைக்க வேண்டும். ஆகவே, இதைத் தயாயக்ஞம் என்று கூறுகிறோம்.

''இதைத் தவிர வேறு விதமான பூதயக்ஞம் - வியவகார யக்ஞம் என்பதாக ஒன்றிருக்கிறது. இதில் மனிதர்கள் தம் சூட்சும உடல்களைத் தரவேண்டும். நிலத்திலிருந்து அன்னம் வேண்டுகிறோம். அடிமைகளிடமிருந்து சேவை வேண்டுகிறோம். குதிரைகளிடமிருந்து ரத சேவை வேண்டுகிறோம். இந்த யாசனைக்குப் பதில் உடலையே வழங்கவேண்டும்.

''மடயக்ஞம் மற்ற யக்ஞங்களுக்குப் பதிலான சிறந்த யக்ஞமாகும். துறவிகளின் துறவறம் தழைக்கவும், உலக வாழ்வினின்று ஒதுங்கி வாழவும் மிகவும் தேவையான யக்ஞம் இதுவன்றி வேறு எதுவும் துறவிகளுக்கு இன்றியமையாததன்று.

''மனிதர்கள் செய்யும் பலவித யக்ஞங்களில் யக்ஞ விதிகள் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்தால் என்ன செய்வது? தம்பதிகள் சேர்ந்து செய்யும் ப்ரீதியக்ஞம், அதிதிகள் வைத்துச் செய்யும் யக்ஞம் ஆகியவற்றைப்பற்றிச் சொன்னேன். அவ்வாறான முரண்பாடுகள் இருந்தால் தம்பதிகள் இருவரது விருப்பத்திற்கிணங்க யக்ஞம் புரிந்தால் முரண்பாடு மறைந்து விடும். உதாரணமாக, இராமபிரான் மக்கள் நலனுக்காகச் சீதாபிராட்டியை வனவாசம் அனுப்புவித்தார். சீதா பிராட்டி அதில் தவறு ஏதும் இருப்பதாகக் காட்டிக்கொள்ளவில்லை.

''மரக்கிளையில் இரண்டு இலைகள் எதிரும் புதிருமாக இருப்பதைப் பார்க்கிறோம். இரண்டிற்குமிடையே மலரும் காயும் கனியும் மலர்ந்து கனிவதுபோல தபோவிருட்சத்தின் கிளையில் சத்தியத்திற்கிடையே தர்மம் உதயமாகிறது. இதே தர்மம் மக்கள் நலனுக்காக மழையாகப் பொழிகிறது.

''நவீனசந்திரா! இதுதான் சநாதன தர்மம். பலப்பல தேசங்களுக்கான தர்மமும் இதுவே; பலப்பல காலங்களுக்கான தர்மமும் இதுதான். வெறும் யக்ஞ தர்மத்தில் அத்யாத்ம திருஷ்டி இருப்பதில்லை; கேவலம் வியவகார தர்மத்தில் சத்திய திருஷ்டியில்லை; உன்னுடைய கேள்விகளுக்கான பதில் இதில் வந்துவிட்டது.

''சாதுக்கள் தமது மனத்தில் சம்சாரிகளாக இருந்தால் உலக வாழ்க்கையில் பற்றுள்ளவர் செய்யவேண்டிய அறங்களைச் செய்தால்தான் கடைத்தேறலாம். ஆகவே, மனமே எதற்கும் காரணம். உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளோர் தத்தம் அறங்களைச் செய்யவேண்டும்.

''லட்சிய தர்மத்தில் மனிதர்கள் தமது வாழ்வில் செய்ய வேண்டிய யக்ஞங்களுக்கான சம்சார வாழ்வு எவ்வளவு நாட்கள் தேவையோ அவ்வளவு நாட்கள் அதைப் பூணுவதை அறமெனக் கருதுவர்.

''உலகத்தில் தத்தம் சக்திக்கேற்றவாறும் நிலைக் கேற்றவாறும் இயன்ற அறங்களைச் செய்யவேண்டும். துறவிகள் இதை அறிவார்கள். லட்சிய பரமாத்மாவின் பதங்களினின்றும் பாயும் சம்சார கங்கையின் பிரவாகத்தில் சிலர் தோற்றுவாய்க் கருகிலும், சிலர் மத்திய பாகத்திலும், சிலர் அலைகளுக்கு மேலும் இருப்பார்கள்; தத்தம் நிலைகளை அவர்கள் உணர்ந்து வாழ்க்கை அறங்களைச் செய்யவேண்டும். நவீனசந்திரா! இது தான் மகாயக்ஞம்; இதுதான் தர்மம்; இதுதான் பிராயச் சித்தம்.''

விஷ்ணுதாஸ ஸ்வாமிகள் இப்படிக் கூறிவிட்டுக் கைகளை உயர்த்தி எல்லோரையும் ஆசிர்வதித்தார். எல்லோரும் எழுந்தார்கள். எல்லோருக்கும் முன்னால் சந்திராவளிமையாவும் விஹாரபுரியும் நடந்து சென்றார்கள். பின்னால் சந்நியாசினி களிடம் குமுதசுந்தரி நடந்தாள். அவர்களுக்குப் பின்னால் விஷ்ணுதாஸ ஸ்வாமிகளும் சரஸ்வதிசந்திரனும் சாதுக்கள் பின் தொடர, நடந்தார்கள். சங்கநாதமும் மணி முழக்கமும் ஒலித்தன. விஷ்ணுதாஸ ஸ்வாமிகளின் உபதேசத்தால் எழுந்த சூழ்நிலையில் மரம், செடி, கொடிகள் மெய்ம்மறந்து நின்றிருந்தன.

14. ஆசைகளின் கீதம்

சிரஞ்சீவிச்ருங்கம் ஸுந்தரகிரியின் எல்லா மலையுச்சிகளிலும் உயரமான சிகரமாகும். யதுச்ருங்கத்தின் அருகில் அது அமைந் திருந்தது. அதன்மேல் இரண்டு பெரும்பாறைகளுக்கிடையே ஐம்பதுக்கு மேலான குகைகள் இருந்தன. அவைகளுக்கிடையே பன்னிரண்டு மாதங்களும் நீர்சுரக்கும் சுனையொன்று இருந்தது; அதிலிருந்து சுரக்கும் நீர் குகைகளைச் சுற்றி ஓடையாகப் பாய்ந் தது. ஸௌமனஸ்ய என்ற பெயருடைய குகையொன்றில் சரஸ்வதிசந்திரன் வந்து சேர்ந்தான். அப்போது மாலைநேரம்; உடன் வந்தவர்கள் ராதேதாஸரும், ஞானபாரதியும் மூன்று வேறு சாதுக்களும். ஞானபாரதி பேச ஆரம்பித்தார்:

''நவீனசந்திரஜி, இந்தக் குகைக்குப் பெயர் ஸௌமனஸ்ய என்பதாகும். குகைக்குமேல் இரவில் யாராவது உலவினால்

ஆவிகள் பிரத்தியட்சமாகும். திடமற்ற பாமரர்கள் அவற்றைக் கண்டு சித்தம் இழந்துவிடுவார்கள். ஆனால் யோகிகளுக்கும் தபஸ்விகளுக்கும் இது பவித்திரமான இடம். தூய சிந்தனைகளும் பூரண ஆனந்தமும் நிறைவுபெறும் இடம் இது. தாங்கள் இங்கே ஐந்து நாட்கள், ஐந்து இரவுகள் கழிக்கவேண்டும். தங்களுடைய சேவைக்காக நாங்கள் கீழேயிருப்போம். குரல் கொடுத்தால் ஓடோடி வருவோம்.''

அப்போது சுனைநீரைத் தூய பாத்திரமொன்றில் எடுத்து வந்தார் சாது ஒருவர். எல்லோரும் அதை அருந்திய பின் சரஸ்வதி சந்திரனை அங்கே விட்டுவிட்டு அகன்றார்கள்.

தனிமையில் விடப்பட்ட சரஸ்வதிசந்திரன் உயர்ந்ததொரு பாறைமீது அமர்ந்தான்.

'எத்தகைய ஏகாந்தமான இடம்! குரு இங்கே அனுப்பியது ஒரு காரணத்திற்காக வென்றால், சந்திராவளிமையாவின் காரணம் இன்னொன்று. எதைப்பற்றியும் என்னால் இந்த நிலையில் சிந்திக்க முடியாது. எதைப்பற்றித்தான் நினைப்பது? சந்திரகாந்தனைப்பற்றியா, கங்காவைப்பற்றியா, சம்சாரிலாலைப் பற்றியா, வீரராவைப்பற்றியா, அல்லது வீட்டைப்பற்றியா, தகப்பனாரைப்பற்றியா? இல்லையென்றால், எல்லாச் சிந்தனைகளையும் மூழ்கடிக்கும் குமுதசுந்தரியைப்பற்றியா?

'குமுதசுந்தரிதான் நீரில் மூழ்கிப் போய்விட்டாளே! இப்போது இங்கே எங்கேயிருந்து வரமுடியும்? மதுரிமையாவின் குரல் குமுதசுந்தரியின் குரலைப் போன்றுதான் இருக்கிறது. சந்திராவளி மையா காட்டிய வழியை அவள் பின்பற்றுவாள் என்பது நடவாத காரியம்....தகப்பனார் என்னைப்பற்றிப் பத்திரிகையில் பிரசுரித்திருக்கிறார். பிரமாததனனும் சௌபாக்கிய தேவியும் காலமாகிவிட்டார்கள். ஸுரக் கிராமத்தில் நான் படித்த பத்திரிகையில் தேசத்தின் கதியைப்பற்றி அறிந்து கொண்டேன். தேசமே, உனக்கு நான் செய்யவேண்டிய யக்ஞந்தான் எது?

'பறவை மரத்தின் இலைமேல் இலையாகத் தாவி உட்காருவதுபோல இதோ இங்கே வந்துவிட்டேன். இனி இங்கிருந்து எங்கேயோ?'

ஸுரக்கிராமத்திற்குச் சென்ற நினைவு மீண்டும் எழுந்தது.

''குமுதா, நீ எங்கே வந்தாய்? இது என்ன வேஷம்? ராணு மீராவுக்கு நஞ்சை அனுப்பியது போல உன்னைத் தியாகம் செய்து கடிதம் எழுதினேன்; உன்னைப் பிரமாததனனிடம் சேர்ப்பித்தேன். ஆனால் நீ என்ன செய்தாய்? நஞ்சும் அமிர்தமானது போல நீயும் துன்பங்களைச் சகித்துக்கொண்டாய். உன்னுடைய

பெருந்தன்மை சந்திராவளிமையாவைக் கவர்ந்ததில் என்ன ஆச்சரியம்?

'இதோ இப்போது குமுதசுந்தரியைச் சந்தித்தேன் என்றால், அவள் என்ன சொல்வாள்? அவளிடம் என்ன உபதேசம் செய்வேன்? எப்படி மன்னிப்புக் கேட்பேன்? புத்திதனரின் வீட்டில் இருக்கும்போது இருந்த கட்டுப்பாடு இப்போது இல்லை; ஆனால் ப்ரீதியக்ஞம்-அத்வைத்யக்ஞம் - இங்கே சாத்தியமாகுமா? சந்திராவளிமையாவும் விஹாரபுரியும்கைக்கொண்ட தர்மம் இங்கே இயலுமா? குமுதா, நீ என்ன நினைக்கிறாய்? என்னுடைய தர்ம சங்கடமான நிலை பிரமாததனனின் மறைவால் போய்விட்டது. என்னுடைய பாபத்தைப் போக்கடித்து உன்னை மகிழ்விப்பது என் கடன் என்றால், லோக அபவாதத்திற்குப் பயப்படாமல் உன்னை மீண்டும் அடையலாமா?'

நிலவு எழுந்தது. சித்திரை மாதத்து வளர்பிறை ஏகாதசி இரவு; கீழ்த் திசையில் தொடுவானத்திலிருந்து சற்றே உயரத்தில் நிலவு உதயமானது. சந்திரனின் ஒளிக் கதிர்கள் குளிர் நிழல் தந்தன. மென்துகில் இள நங்கையின் உடலை மூடியதும் மூடாததும் போல் சந்திரனின் கிரணங்கள் மலையுச்சியைச் தழுவின. சரஸ்வதிசந்திரன் மேல் திசையில் கடலின் கருங்கோட்டைக் கவனித்தான். அதோ மேல் திசையில் தீபம் ஒன்று எரிகிறதே! இதோ ஓடையின் மேலுள்ள பாலத்தின்மீது...! குகையின் மேற் பாகத்தினின்று கீழே இறங்கினான். அங்கே பெண்கள்! சரஸ்வதிசந்திரன் சற்றே பின் வாங்கினான்.

பாலத்திலிருந்து கண்களை அகற்றிக்கொண்டான். ஆனால் பெண்களின் குரல்கள் அவன் காதுகளை எட்டாமல் இல்லை. எல்லா எண்ணங்களையும் விட்டுவிட்டு, பாறையோடு பாறையாக உணர்ச்சியற்று உட்கார்ந்திருந்தான்.

ஸௌமனஸ்ய குகைக்குப் பின்னாலிருந்த குகையில் குமுதசுந்தரியைச் சந்நியாசினிகள் அழைத்து வந்திருந்தார்கள். சைத்ர மாதத்தின் வளர்பிறை நாட்களில் குகைக்கருகில் இருந்த மரங்களில் பலவிதமான பறவைகள் தங்குவது வழக்கம். அங்கே குயில்களும் வருவது உண்டு. வசந்தருது நாட்கள் அவை; குகையின் பெயரும் வசந்த குகைதான். ஸௌமனஸ்ய குகையைப் போன்றதுதான் என்றாலும், சற்றே உயரத்தில் தாழ்ந்து இருந்தது. சந்நியாசிகளில் ஒருவர் பேசுவது கேட்டது.

'மதுரிமையா! நவீனசந்திரரை ஐந்து இரவுகள் கழிக்க வேண்டுமென்று குருஜி சொன்ன மலையுச்சி இதுதான்.

இதற்கருகில் உள்ள குகையில்தான் அவர் தங்குவார். நாங்கள் குகைக்கடியில் தங்கியிருப்போம்.''

குமுதசுந்தரி சற்றே திடுக்கிட்டாள். சந்திராவளி இந்தச் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும், அதில் குருஜீயின் சம்மதியும் இருக்கிறது என்றும் பக்திமையா தெரிவித்தவுடன் குமுதசுந்தரி அமைதி அடைந்தாள். சிந்தனையில் மூழ்கிப் போனாள்.

''மதுரி! நீ எந்தவிதமான பயமும் கொள்ளக்கூடாது. திரும்பப் போகவேண்டும் என்றால், காலையில் சென்று விடலாம். வாழ்வில் உனக்குப் பலவிதமான இன்னல்கள் ஏற்பட்டுவிட்டன. இதோ இந்த மகாத்மாவுடன் உன்னால் பேசக்கூட முடியாமல் போய்விட்டது. ஆகவே, அவருடன் இன்று பேசிவிடு. கேட்கவேண்டியதெல்லாம் கேட்டும்விடு. வேறு என்ன செய்யவேண்டும் என்பதை நாங்கள் சொல்லப் போவதில்லை.''

குமுதா தனிமையில் விடப்பட்டாள். மற்றவர்கள் எழுந்து செல்லும்போது அவளும் எழ முயன்றாள். ஆனால் முடியவில்லை. மண்ணுடன் அவள் உடலும் ஒட்டியிருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. மண்ணின் விருப்பமோ அது? நான்குபுறமும் இருள்; நிலவின் மென்மையான கதிர்கள். அவளது உள்ளத் திலே இப்போது என்ன எண்ணங்களோ? 'ரத்னநகரியில் சரஸ்வதிசந்திரர் நமக்கு அளித்த கவிதையில் சில மாற் றங்கள் செய்து பாடலாமா?' என்று சிந்தித்தாள். தரங்க சங்கரின் படைப்பு அது: ஆலிவர் கோல்ட்ஸ்மித்தின் 'ஹெர்மிட்' என்ற கவிதையின் மொழிபெயர்ப்பு. 'இனி அவர் பம்பாய் திரும்புவார் என்பது நடவாத காரியம். துறவறம் பூண்டபின் இனிமேல் தியாகம் செய்ய என்ன இருக்கிறது? நானில்லாமல் அவர் சுகித்திருக்கிறார். அவரில்லாமல்-நான் சுகித்து வாழா விட்டாலும் திருப்தியுடன்-பராசக்தியின் தியானத்தில்-வாழ்ந்து வருகிறேன்' என்று சிறிது நேரம் உட்கார்ந்திருந்து எழுந்தாள். பாலத்தின்மீது கண் செலுத்தினாள். மீண்டும் உட்கார்ந்தாள்.

'இந்த வாய்ப்புப் போனால் மீண்டும் எப்போது கிடைக்கும் என்று சொல்ல முடியும்? பகவான் இதற்காகவே என்னை இங்கே அனுப்பியிருக்கிறார். வாய்ப்பை நான் அவசியம் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். என்னுடைய மனம் தூய்மையாக இருக்கும்போது அச்சம் எதற்கு? என்னுடைய மனத்தில் தைத் திருக்கிற முள் அவரைச் சந்திப்பதால் அகன்றுவிடுமென்றால் நல்லதே. அமைதியும் தர்மமும் அவர் எனக்குக் காட்டித் தருவார்.' சிறிது நேரம் அவள் உட்கார்ந்[illegible]ர்த் தைரியத்துடன் பாட ஆரம்பித்தாள்.

வசந்த குகையினின்றும் எழுந்த குரல் சரஸ்வதிசந்திரனிடம் சென்றது. குரலின் அடையாளம் புரியாமல் இல்லை. அதோ உள்ளத்தின் உள்ளம்; உள்ளத்தை உருக்கும் மதுரமான குரல் - இந்த நிலவில், இந்தத் தனிமையில்!

சரஸ்வதிசந்திரன் எழுந்தான். நடந்தான். "இதோ பாடுவது குமுதசுந்தரியேதான். பாறையில் தலை மோதிக்கொண்ட அவளைப் பார்த்துத் திடுக்கிட்டான். அன்று புத்திதனரின் இல்லத்திலே மூர்ச்சித்து விழுந்தாள் குமுதசுந்தரி. அப்போது தடுமாறித் தயங்கி நின்றான் அவன். இன்று அவன் ஏன் தடுமாற வேண்டும்? ஏன் தயங்கி நிற்கவேண்டும்? ஓடோடிச் சென்றான். அங்கே பாறைமீது மயங்கி விழுந்து கிடந்தாள் குமுதசுந்தரி. அவளருகில் சென்று தழுதழுத்த குரலில் பேசினான்:

"குமுதசுந்தரி, விழித்துக்கொள். இதோ, நான்தான் சரஸ்வதிசந்திரன். உன்னுடைய தூய உள்ளத்தின் குரலைக் கேட்டேன். கேட்டுப் புரிந்துகொள்ளாமல் போய்விடுமா? எல்லாவற்றுக்கும் நான்தான் காரணம். பிரமாததனனும் போய் விட்டான். யார் துணை இனிமேல்? உன்னைப்போன்ற சதி எங்கிருப்பாள்? உனது உள்ளத்திலே எரிகிற நெருப்பின், கனவின் ஒளிக்கருகிலே நான் உட்கார்ந்திருக்கிறேன். குமுதா, நீ தேர்ந்தெடுக்கிற மார்க்கம் தூய்மையான மார்க்கம். பரமாத்மாவுடன் அத்வைத நிலைபெற்ற ஜீவாத்மா மீண்டும் துவைத நிலை அடைவதில்லை. அதுபோல் பிரீதியக்ஞத்தில் அத்வைத நிலையடைந்த உள்ளம் துவைத நிலை பெறுவதில்லை. எந்தப் பிரீதி யக்ஞத்தில் நான் உன்னுடன் சேர்ந்திருந்தேனே அது மீண்டும் என் உள்ளத்தில் எழுந்துவிட்டது. பிரமாததனனை நீ தியாகம் செய்துவிட்டாய். அவனை அதிதியாக்கிச் செய்யவேண்டிய யக்ஞப் பொறுப்புப் போய்விட்டது. ஓரே ஓர் யக்ஞந்தான் இனி மேல் பாக்கியிருக்கிறது. உன்னை நான் தியாகம் செய்தேன். அது வெறும் உடலைத்தான்; உள்ளத்தை நான் தியாகம் செய்ய முடியவில்லை."

நிலவின் ஒளியில் மின்னின கண்ணீர்த்துளிகள்: தாமரை இலையை யொத்த கன்னங்களின்மீது அவை பட்டுத் தெறித்தன.

"பிரமாததனனின் கோயிலிலே எனக்குக் கண்ணீர் சிந்தவும் அதிகாரமில்லை; ஆனால் அந்தப் பாக்கியம் இன்று சித்தியாகி விட்டது. ஆனால் எந்த முகத்தைக் காணவும், ஆசை கொள்ளவும் எனக்கு அருகதை இல்லாதிருந்ததோ இன்றும் அந்தக் காணவும் ஆசை கொள்ளவும் அதிகாரம் கிடையாது

தான்; ஆனால் பார்க்கவும் முடியாமல் எப்படி இயலும்? இதோ பார்த்துக் கொண்டேயிருக்கிறேன்.

''குமுதசுந்தரி, விழித்துக்கொள். மூர்ச்சித்து விழுந்த இராமபிரானைச் சீதை தொட்டு எழுப்பிய அதே அதிகாரத்துடன் உன்னைத் தொட்டு எழுப்ப முயல்கிறேன். என்னை மன்னித்துவிடு. இனி இதுபோல எதுவும் நிகழக் கூடாது.''

குமுதசுந்தரி விழித்துக்கொண்டாள்.

''குமுதசுந்தரி, உன்னை மிகவும் துக்கத்தில் ஆழ்த்தி விட்டேன்.'' நெகிழ்ந்த குரலில் சொன்னான் சரஸ்வதிசந்திரன்.

குமுதசுந்தரி பேசினாள்:

''நடக்கவேண்டியது நடந்துவிட்டது. என்னை மணக்க நீங்கள் முயன்றீர்கள். எனக்குப் பாக்கியம் கிட்டவில்லை. அதில் குற்றம் காணுவதற்கு நான் யார்? சகுந்தலையின் காதலைத் துஷ்யந்தன் போன்ற ஆடவர்கள் மறந்தால் துர்வாசர் போன்றவர்களின் சாபமே அதற்குக் காரணம் எனலாம்.''

''நடந்து போன மடமைக்கும் கொடுமைக்கும் நான்தான் காரணம். என்னால் எப்படி மறக்கமுடியும்?''

''ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? தவறு என்பதானாலும் கொடுமை என்று சொல்லாதீர்கள். நீங்கள் கொடியவரல்லர். எல்லாவற்றையும் விட்டு இந்த உடலைத் தேடி வராதீர்கள்.''

''என்ன சொன்னாலும் இது மடமையே மடமைதான்; பெருங் கொடுமைதான்.''

''இனி என்ன செய்வது? பிராரப்தந்தான் இது. அறிவும் அநுபவமும் நிரம்பிய என் தந்தையார் தங்கள் எண்ணத்தை அறிந்தவுடன் மனங்கலங்கிப் போனார்; அவசர அவசரமாக என் கல்யாணத்தை நடத்திவைத்தார். அது இறைவனின் விருப்பம்.''

''உன் துக்கம் என் துக்கம்; நீ எப்போது சுகமடைவாயோ அப்போதுதான் நான் சுகமடைவேன்.''

''நான் சொல்லுவதைக் கேட்பீர்களா? இதோ சாதுக்கள் வைத்துவிட்டுப் போயிருக்கும் பழங்களை உட்கொண்டு நீங்கள் உறங்கப் போங்கள்.''

இருவரும் ஒருவரையொருவர் நோக்கி நின்றார்கள். அவர்களிடத்தில் ஆசை பெருகியது. அநுபவம் மிக்க குமுதசுந்தரி உணர்ந்துகொண்டாள். ஆகவே பேச்சை மாற்றினாள்:

''நாம் இருவரும் உண்மைப் பெயர்களைச் சொல்லிக் கூப்பிட்டுக்கொள்ளக் கூடாது. சாதுக்களிடம் வழக்கத்தில் வந்துள்ள பெயர்களை இட்டு அழைத்துக்கொள்ளவேண்டும்.''

''அதுவே சரி, மதுரி என்று அழைப்பதில் எவ்வளவோ பொருத்தமிருக்கிறது.''

''உலகத்தில் பெயர்களை இட்டு அழைக்காமலேயே பரஸ்பரம் வாழ்க்கை நடத்துகிறார்கள்.''

''ஆமாம்; பெரும்பாலும் தம்பதிகளுக்குள்தான் அப்படி. நாமும் அவ்வாறு நடந்துகொண்டால்..?''

''நான் உங்களைச் சந்திரன் என்றே அழைக்கிறேன். நவீன என்ற பெயர் சற்றே நவீனமாக இருக்கிறது.''

உரையாடிக்கொண்டே பழங்களை எடுத்துக்கொண்டார்கள். அப்படிச் செய்ததில் ஒருவரின் கைவிரல்கள் மற்றவரின் விரல்களை ஸ்பர்சித்தன. கைகளை இழுத்துக்கொண்டார்கள். ஆனால் கண்கள்-அவை மற்றவரின் வசமாயின. அந்த நிலையை மாற்ற வேண்டுமெனச் சரஸ்வதிசந்திரன் முயன்றான். அவனது மன நிலையை உணர்ந்துகொண்ட குமுதா கேட்டாள்:

''தாங்கள் வீட்டைவிட்டு வந்தீர்களே, அது தந்தையின் மேல் கொண்ட கோபத்தாலா, அல்லது வேறு காரணம் இருக்கிறதா? என்னை எந்தக் காரணத்திற்காகத் தியாகம் செய்தீர்கள்? ஸ்வர்ணபுரிக்கு எந்த நோக்கத்துடன் வந்தீர்கள்? இங்கே எவ்விதம் வந்தீர்கள்? இங்கிருந்து இனி எங்கே செல்வதாக, இனி என்ன செய்வதாக உத்தேசம்? உங்களைத்தவிர எனக்கு வேறு யாருமில்லை. தயை செய்து ஒன்றையும் என்னிடம் மறைக்காமல் சொல்லிவிடுங்கள்.''

''உன்னிடம் சொல்லாமல் யாரிடம் சொல்லப் போகிறேன்? உன்னை மகிழ்விப்பது என் நோக்கம் மட்டுமல்ல; என் தர்மமேயாகும்.''

''நல்லது; என்னை மகிழ்விப்பது இருக்கட்டும்; உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்.''

''எனக்கு வேண்டியது மகிழ்ச்சியல்ல; மன அமைதி. என் தர்மம் குலையக்கூடாது என்பதுதான் என் விருப்பம்.''

''உங்களுடைய தர்மம் என்பது எது?''

''குருஜி சொன்ன பஞ்சமகாயக்ஞந்தான். அதுதான் உன்னுடையதும் என்னுடையதுமான தர்மம்.''

''நீங்கள் செய்த தியாகத்தில் தர்மத்தைக் காண்கிறீர்கள்; அதைச் சொல்லுங்கள். நான் கேட்ட வினுக்களுக்கெல்லாம் விடை தாருங்கள்; எனது சுகமெல்லாம் நீங்கள் தரும் பதில்களில்தான்.''

''அப்படியானால் இதோ சொல்கிறேன், மதுரி, கேள்: எனது மடமைக்கான பிராயச்சித்தம், என் கொடுமைக்கான

கழுவாய் இதோ நான் தரும் விடைகள்தான் என்றிருந்தால் அந்தப் பிராயச்சித்தத்தை நான் செய்துதான் தீரவேண்டும். செல்வத்தையும் தந்தையையும் துறந்தது ஏன் என்று கேட்கிருய்; தந்தை தாயின் துக்கத்தினின்றும் புத்திரயக்ஞத்தி னின்றும் மீளத் தியாகம் செய்தேன். என் தந்தையாரின் இச்சைப்படி உன்னை முன்பின் சந்திக்காமலேயே அவர் நிச்சயித்த விவாகத்திற்கு மனம் இசைந்தேன். எப்போது அந்த விவாகத்தால் என் தந்தை திருப்தியுற மாட்டார் என்று அறிந்தேனே அப்போது 'விவாகத்தைப்பற்றிய விருப்பத்தைக் கைவிட்டேன். சின்னஞ்சிறு வயதிலிருந்தே வாழ்க்கையின் உண்மைகளை அறிவதற்காகத் தேசாடனம் செய்யவேண்டுமென்ற என் விருப்பத்தை நீ அறிவாய். ஒரு நாள், உன்னுடைய பிரீதி யக்ஞத்தில் எனது ஆஹுதி என் தந்தைக்குப் பிடிக்கவில்லை என்று அறிந்துகொண்டேன். உனது அழகு உருவத்தைச் சித்திர மாக வரைந்து உன் அன்பைப் பருகினேன். கடிதங்கள் எழுதி னேன். மோதிரம் செய்துகொண்டேன். ஆனல் அவை என் தந்தையாருக்குப் பிடிக்கவில்லை. உன்னைத் தியாகம் செய்வதன் மூலம் என் தந்தையார் திருப்தியுறுவார் என்று தோன்றியதால் தான் இம் முடிவுக்கு வந்தேன்.''

''உலகத்தார் என்ன சொன்னுர்கள் தெரியுமா? தகப்பனுர் சொன்ன வார்த்தைகளின்மேல் ரோஷம் கொண்டு ஆத்திரப் பட்டு என்னைத் தியாகம் செய்தீர்கள் என்றுதான்; தெரியுமா?''

''பத்திரிகைகளில் அப்படித்தான் செய்தி பிரசுரித்திருக் கிருர்கள். அது தவறு. தந்தையின்மேல் கோபம் கொண்டு தியாகம் செய்யவில்லை; நான் சொல்லுவதை நம்பு. சிரத்தை யில்லாமல் செய்யும் பூஜை, மனமில்லாமல் செய்யும் உபசரணை, சிநேகப் பண்பில்லாத உதட்டு நட்பு-இவை யாவும் நீரில்லாத குளத்தைத் தியாகம் செய்வது போலாகும். நான் செய்தது தர்மமான செயலாகும். மகனிடம் அன்பு நீங்கிய தந்தையின் கோயிலில் யஜமானருக்கு இடமில்லை.''

''நீங்கள் அப்படிச் செய்ததால் அவருக்குத் துயர் விளைய வில்லை என்று எண்ணுகிறீர்களா? அப்படிப்பட்ட துயரைத் துயராகக் கருதாமல், தாம் செய்த தவறுதலை அவர் உணரட்டும் என்று வாளாவிருப்பதுதான் புத்திர தர்மமா?''

''என்மீது குற்றமில்லாமல் என்மீது அவர் வெறுப்புக் கொண்டார். ஆசையே எல்லாவிதமான துக்கத்திற்கும் காரணம். வெறுப்பினுல் அவர் என்னை மறக்கக்கூடுமானுல் நான் பித்ரு யக்ஞத்திலிருந்து முக்தி பெறுவேன். மற்றப்படிக்கு, நான் அவ ரிடம் கொண்டுள்ள பாசம் அதிகரித்திருக்கிறதே தவிரச் சிறிதும் குறையவில்லை என்றே சொல்லுவேன்.''

''என்னிடம் கொண்டுள்ள அன்பைச் சொல்லுங்கள். விருப்பம் என்பது வீண் என்று தந்தையாரையும் என்னையும் தியாகம் செய்தீர்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால் எனக்காக ஏன் இவ்வளவு தூரம் மனமிரங்கி என்னை நாடி வருகிறீர்கள்? தந்தைக்காக மனமிரங்கி, பம்பாய் ஏன் செல்லவில்லை? தந்தையாரைவிட நான் எந்த விதத்தில் உயர்ந்தவள்?''

''விருப்பம் வீண் என்பதைப்பற்றி என்னைவிடச் சந்திராவளி மையா உனக்கு விளக்கமாகச் சொல்லுவாள். தந்தையின் அன்பும் உன்மீதுள்ள பிரியமும் வறண்டுவிட்டதாக நான் கருதவில்லை. தந்தையின் அன்பை நான் வறண்ட அன்பாகக் கருதியிருந்தேனென்றால், நாம் இருவரும் தற்போது பம்பாயில் பெரியதோர் மாளிகையில் இருந்திருப்போம். உன்மீதுள்ள நேசத்தால் நான் உருகுகிறேன், தந்தையின்மேலுள்ள பிரியத்தால் நான் தவிக்கவில்லை என்பது தவறு. ஆனால் நானே உனக்குத் துயர் விளைவித்துவிட்டேன். உனது துக்கத்தைக் களையவேண்டும் என்பது எனது தர்மம். தந்தைக்காக நான் செய்த தியாகத்தைத் தியாகம் செய்வது அதர்மமாகும். எந்தத் தியாகம் நடந்ததோ அது நடந்துவிட்டது.''

''தங்கள் தந்தையாரின் துயரம், எனது துயரம் இரண்டும் தங்களது தியாகத்தினால்தான் என்றீர்கள். எனது துயரத்தைக் களைய வேண்டுவது உங்கள் தர்மமானால் தந்தையாரின் துயரத்தைத் தீர்ப்பது எப்படி அதர்மமாகும்?''

''உங்களிருவரின் துயரத்திற்கும் காரணம் எனது தியாகம் என்பது தவறு. உனது துயரத்திற்குக் காரணம் உனது உள்ளத்தில் நான் எழுப்பிய காதலே. தந்தையின் துயரத்திற்கான காரணமும் பிரியந்தான். ஆனால் அந்தப் பிரியம் சவரூபத்தில் அவரிடம் இருக்கிறது; அது குறையவில்லை.''

''உங்கள் உள்ளத்தில் ஆத்திரமும் ரோஷமும் மறைந்து கிடக்கின்றன. தந்தையின் அன்பு சவரூபத்தில் அடங்கிக் கிடக்கவில்லை; மூர்ச்சையுற்று வீழ்ந்திருக்கிறது. தயை செய்து கேளுங்கள். வயது முதிர்ந்து போன அவரது துக்கத்தைத் தீருங்கள். என்னைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். வயது நிறைந்தவர்களின் துயரத்தைக் காணச் சகியாமல், அவர்களது துக்கத்தைத் தீர்ப்பது உங்கள் கையில்தான் இருக்கிறது. தயைசெய்து உடனே அவரது துயரைத் தீருங்கள்.''

''நீ சொன்னது சரிதான்; ஆனால் என் தந்தையாரின்மீது கோபமில்லை. நமது சமூக வாழ்க்கையில் உள்ள குறைபாடுகள் மீதுதான் எனக்குக் கோபம். உன்னைப் போன்ற மலர்கள் மண்ணில் இடறி விழுந்து வாடுவதைக் கண்டு என்னால் சகிக்க

முடியவில்லே. என் தந்தைக்காக நான் செய்வதும் செய்யாத தற்குமான காரணம் விருப்பும் வெறுப்புமல்ல. அதே போல உனக்காக நான் எதைச் செய்ய வேண்டுமெனத் துணிகிறேனே அதற்கான காரணம், கேவலம் நேசம் மட்டுமல்ல. எனது புத்திக்கு எது தர்மமெனப் படுகிறதோ அதையே நான் செய்கிறேன்.''

''எல்லோரது அன்பையும் அப்படிக் கருதும்போது என்னேப் பொறுத்தமட்டும் வேறு விதமாக ஏன் எண்ணுகிறீர்கள்?''

''நீ சுதந்திரமாக இருக்கவில்லே; உனது எதிர்காலம் உன் தாய்தந்தையர்களிடம் அடங்கி இருந்தது. அவர்கள் உன்னேயும் என்னேயும் மணம் முடிக்க நிச்சயம் செய்திருந்தார்கள். அது நிறைவேருமல் போகவே நிச்சயதாம்பூலத்திலிருந்து விடுபட நான் உன் தந்தையாருக்குக் கடிதம் எழுதினேன். அவர்கள் உனக்கு வேறு இடத்தில் மணம் முடித்தார்கள்.''

''வேறு என்ன செய்வார்கள்? உலகறியதிப்படி எனக்கு இன்னெரு வரன் தேடத்தானே வேண்டும்?''

''அவர்கள் செய்தது தவறு என்று நான் சொல்லவில்லே. நம்மிடத்தில் சுயநலம் ஏதும் இல்லாமல் காட்டுகிற அன்பினுல் தவறு ஏதுமில்லே. அத்தகைய அன்பினுல் புதியதோர் வழி தென்படுகிறது. முதலில் எனக்கு அது தோன்ற வில்லே. பின்னுல் என் மனம் பெருங் குழப்பத்தில் ஈடுபட்டுத் தத்தளித்து அலேபாய்ந்தபோது சட்டென்று அது தோன்றியது. இன்பத்திலும் திருப்தியிலும் நீ விளங்குவதைப் பார்க்கவேண்டு மென்று நான் முடிவு செய்து கிளம்பினேன். அதுவே என் மனக்குமுறலே அடக்கும் என்று நம்பினேன். ஆனுல் ஸ்வர்ண புரியில் நான் கண்டது என்ன? எனது தர்மம் அமைதி நிறைந்த துறவியினதன்று; அலேந்து திரியும் பயனற்ற துறவியின் அமைதியே யாகும்.''

''இனி என்ன செய்யவேண்டும்? எனது எதிர்காலத்தைப் பற்றி என்ன தீர்மானம் செய்திருக்கிறீர்கள்? - இந்த இரண்டு கேள்விகளேக் கேட்பதில் என் மனம் நடுங்குகிறது. இனி என்னேப் பரீட்சிக்க வேண்டியது ஏதாவது பாக்கியிருக்கிறதா? என் தந்தை என்னேப்பற்றி முடிவு செய்தபோது பேதை நான் என்ன பதில் சொல்வேன்? தங்களுடன் முறிக்கமுடியாத பந்தத்தால் கட்டுப்பட்டிருந்தேன். என் இதயம் உங்களிடமே குடிகொண்டிருந்தது. எவ்வளவோ படித்திருந்தீர்களே; அதை என்னிடமா குரூரமாகப் பிரயோகம் செய்யவேண்டும்?'' - குமுதசுந்தரியின் கண்களிலிருந்து நீர் பாய்ந்தோடியது.

''என் குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன்.'' பெருமூச்சு விட்டான் சரஸ்வதிசந்திரன்; பின்னர்த் தொடர்ந்தான்.

''பம்பாயில் இருந்தபோது நான், ரத்னநகரிக்கு வந்து அஞ்ஞாத வாசத்தில் உன் மனவிருப்பத்தை அறிய எண்ணினேன்.''

''அறிந்து என்ன பயன்?''

''உனது நேசம் நிரந்தரமாக இருந்திருந்தால் நானே உன் தந்தையைச் சந்தித்து இருப்பேன். அவரும் உனது கருத்தையே கொண்டிருந்தால் உன்னை அழைத்து வந்திருப்பேன். உன் தந்தை உனக்கு எதிரான எண்ணம் கொண்டிருந்தால் நீ உன் எதிர் காலத்தைப்பற்றி முடிவு செய்யும்வரையில் நான் என் பயத்தில் ஈடுபட்டு, பரிபக்குவமான சமயம் வரும்போது உன்னை அழைத்துப் போக வந்திருப்பேன். ஆனால் அது நடக்கவில்லை. பம்பாயிலிருந்து நான் வந்த கப்பல் ரத்னநகரி சேரும்போது காற்றின் காரணத்தால் நேரங் கடந்து வந்தது. நீ ஸ்வர்ணபுரி சென்றுவிட்டதாக நான் அறிந்தேன். பின்னால் நடந்ததை நீ அறிவாய்.''

''இன்று என் வாழ்வின் பெருந்துயர் தீர்ந்தது. என் துக்கத்திற்குக் காரணகர்த்தர் நீங்கள் இல்லை; அது என் தலைவிதி. ஆனால் இந்த அபலைமீது நீங்கள் அன்பு கொண்டிருக்கிறீர்கள் என்று அறிந்துகொண்டேன். எனது இதயம் என்றும் அறியாத அமைதியை இன்று கண்டுகொண்டது. இனி நான் செய்யவேண்டிய தர்மம் என்ன என்பதையும் நீங்கள் சொல்லிவிட்டீர்கள்.''

''உன்னுடைய தூய உள்ளத்தில் எழும் ஞானம் எதுவும் தூய்மையாகத்தான் இருக்கும்.''

''அப்படியொன்றும் இருப்பதற்கு நியாயமில்லை.''

15. சித்தலோக யாத்திரை

''நடுநிசியாகி விட்டதே. நீங்கள் படுத்துக்கொள்ளுங்கள்.''

''சரி.''

''எங்கே படுத்துக்கொள்வீர்கள்?''

''உனக்கு எது சரி என்று படுகிறதோ அங்கேயே.''

''அப்படியானால் தாங்கள் ஸௌமனஸ்ய குகைக்குச் செல்லுங்கள்; நான் இங்கேயே படுத்துக்கொள்கிறேன்.''

சரஸ்வதிசந்திரன் எழுந்தான்; குமுதசுந்தரியும் எழுந்தாள். சாதுக்கள் சரஸ்வதி சந்திரனுக்கு விரித்திருந்த மெல்லிய துணிப் படுக்கையை எடுத்துவிட்டு, அதைவிடச் சற்றே கனமான

படுக்கையை அவனுக்கு விரித்துக் கொடுத்துத் திரும்பினுள் குமுதா.

"இதோ எனக்குப் படுக்கையைத் தந்துவிட்டு நீ வெறும் பாறைமீது படுத்துக்கொண்டால் எனக்குத் தூக்கம் வராது."

"படுக்கை ஒன்றுதான். அதைப் பூஜிக்க உகந்தவர் எடுத்துக்கொண்டார். அதில் என்ன தவறு?"

"சாதுக்களில் பாகுபாடு உண்டா?"

"நான் இன்னும் சாதுவாகவில்லை. இன்னும் உலக வாழ்வில் ஈடுபட்டிருக்கிறேன்."

"இல்லை, நீ துறவறம் பூண்டுதான்விட்டாய்."

"நீங்கள் என்னுடைய அதிதி."

"நீ என்னுடைய அதிதி."

"என்னை மகிழ்விக்கப் போவதாக வாக்குத் தந்திருக்கிறீர்கள்."

"சரி; உண்மைதான். நான் கட்டுப்பட்டிருக்கிறேன். இதோ இந்த மெல்லிய துணிகளையாவது எடுத்துக்கொள்."

குமுதம் திரும்பிச் சென்ருள். சரஸ்வதிசந்திரன் உறங்கிப் போனுன்.

சரஸ்வதிசந்திரனின் மெல்லிய துணியால் ஆன படுக்கையை அவள் தனக்காக விரித்துக்கொண்டாள். 'உங்களுடைய தூய துணிகள் எனக்குக் கிடைத்துவிட்டன. அவற்ருல் என்னை மூடிக்கொண்டு உறங்குவேன். மகாத்மா ஒருவரின் பிரசாதம் எனக் கருதுவேன்.' - கண்களை மூடிக்கொண்டாள்.

'அவருடைய தூய அன்பை என்னவென்று சொல்லுவது? எத்தகைய பெருந்தன்மை! எத்தகைய உள்ளம்! உலகத்தில் மனைவியைவிடத் தந்தையையே பெரிதாகக் கருதுகிருர்கள். அன்னை, பிதா இவர்களைவிடப் பதியையே சிறந்தவராக உலகம் எண்ணுகிறது. ஆனுல் பதியானவர் பத்தினியைத் தாயாரை நேசிப்பதைவிட அதிகம் நேசித்தால் அதர்மம் என அதே உலகம் கருதுகிறது. ஆனுல் என் சந்திரரோ, எதை உலகம் அதர்மம் எனக் கருதுகிறதோ அதைத் தர்மமாகப் பாவிக்கிருர். சாதுக்களும் அப்படியே எண்ணி வருகிருர்கள். இந்த உடல் அவரிடமே வசப்பட்டு வருகிறது. அவருடைய அன்புக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்? நானே வாழ்க்கையில் அவற்றை அநுபவித்துவிட்டேன். ஆனுல் அவருடைய ரஸேந்திரியம் எதையும் அநுபவிக்காத நிலையில் இருக்கின்றன. அந்த உள்ளத்தில் அபூர்வமான சக்தி இருக்கிறது. அதை இன்று நான் பார்த்திராவிட்டால் அப்படியொரு சக்தி இருப்பதாகச் சிறிதுகூட எண்ணியிருக்க மாட்டேன். அத்தகைய திடமான இதயத்தை

இந்தப் போர்வைதான் மூடிவருகிறது.' குமுதா விழித்துக் கொண்டாள்.

அந்த உடல் தகித்துக்கொண்டிருந்தது. அந்தக் கண்களி லிருந்து பெருகிய பிரவாகம் என்னுடைய உடலை நனைத்துவிட் டது. அந்த உள்ளத்தின் தூய விருப்பங்கள்! பழங்களை உண்ணும் போது வெறும் கை விரல்கள் ஒன்றையொன்று....சிறிதுநேரம் உறங்கினாள். பயங்கரக் கனவொன்று கண்டவளாய்த் திடுக்கிட்டு எழுந்தாள். மெல்ல மெல்ல எழுந்து, சரஸ்வதிசந்திரன் தந்த துணியை ஒரு கையில் எடுத்தவண்ணம் பாலத்தின்மீது நின்றாள்.

எதிரே ஸௌமனஸ்ய குகையில் உறங்கிக்கொண் டிருந்த சரஸ்வதிசந்திரன் தூக்கத்தில் பேசிக்கொண்டான்:

'ஒருவரது துயரில் எவ்வளவு பேர்களுடைய துக்கங்கள் கலந்திருக்கின்றன! குமுதசுந்தரி, சந்திரகாந்தன், தரங்கசங்கர், உத்தத்லால், குணசுந்தரி, சௌபாக்கிய தேவீ-எல்லோருடைய துக்கங்களுக்கும் காரணம் நான்தான். இந்தத் தேசம்-? அத னுடைய பரிதாபகரமான நிலை-? அதை எப்படித் திருத்தி முன்னேற்றுவது? குமுதசுந்தரி, உன்னை நான் மணந்திருந்தால், உன்னுடன் அத்வைத உறவு பூண்டு, தேசத்தின் முன்னேற்றத் தில் ஈடுபட்டிருப்பேன். ஆனால் மணமாகாத ஆடவர்கள் இந்த நாட்டுப் பெண்களால் நிராகரிக்கப்படுகிறார்கள். ஆனால் உன்னைப் போன்ற பெண்களில்லாமல் இந்த நாட்டுப் பெண்டிர் முன்னேற்றம் அடைவது இயலாத செயல்..''

குமுதசுந்தரி அவனுடைய வார்த்தைகள் யாவற்றையும் கேட்டாள். போர்வையை எடுத்துக்கொண்டு அவனிடம் சென்று அருகில் நின்றாள். எத்தகைய அழகு! அவனுடைய அமைதி நிரம் பிய முகத்தினை அவள் பார்த்துக்கொண்டே நின்றாள். ''இத்தகைய தூய உடலை நான் தொட்டுச் சேதம் செய்யமாட்டேன்.''

சரஸ்வதிசந்திரன் தூக்கத்தில் புலம்பினான்:

"And now the hour is come when I should quit
This golden prison when my heart is caged!''

அதைக் கேட்ட குமுதசுந்தரியின் கண்களிலிருந்து நீர் பெருகியது.

'இந்தத் தூய உள்ளத்தை வரவேற்று என்னால் அடைக் கலம் தரக்கூட முடியாது போய்விட்டதே! என்னை மன்னித்து விடுங்கள். தங்கள் பாத கமலங்களைத் தொட்டுக் கும்பிட அதிகாரம் வேண்டுகிறேன்; வெறும் மன்னிப்புக் கேட்கத்தான் அதுவும்.'

உறங்கிக்கொண்டிருந்த சரஸ்வதிசந்திரனின் பாதங்களுக் குக் கீழே குமுதசுந்தரி அமர்ந்துகொண்டாள்.

'உலகத்தில் மகாத்மாக்களின் சரணங்களைத் தொடுவதைப் பாவம் எனக் கருதுவதில்லை. இதுதான் நான் என் பாவங்களிலிருந்து நீங்குவதற்கான வழி.'

குமுதசுந்தரி அவனுடைய பாதங்களின்கீழே தலையை வைத்து அப்படியே படுத்துறங்கிப் போனாள். சரஸ்வதிசந்திரனும் புலம்பலை நிறுத்திவிட்டு நித்திரையில் ஆழ்ந்தான்.

நிலவின் ஒளிக்கதிர்கள் ஸௌமனஸ்ய குகையிலிருந்து நீங்கி வசந்த குகையில் விழுந்தன. ஸௌமனஸ்ய குகையில் இருள் பரவியது. உறக்க நிலையில் இருவரும் கனவு காண ஆரம்பித்தார்கள். குகைக்கு வெளியே இளங்காற்று வீசிக்கொண்டிருந்தது. நிலவின் தண்மை நிலமெங்கும் பரந்து குளிர்நிழல் பூத்துக் கொண்டிருந்தது. சரஸ்வதிசந்திரன் எழுந்து வெளியே நடந்தான். குமுதசுந்தரி அவனைத் தொடர்ந்தாள். ஓடையை இருவரும் கடந்தார்கள். வெகு தூரம் நடந்த பிறகு எதிரே கோட்டை போன்றதொரு பெருஞ் சுவரை அடைந்தார்கள். சுவரின்மீது பெரியதொரு கோபுரம் காட்சியளித்தது. நகரம் ஒன்றின் வாயில் அது. அதனுள் நுழைந்து வெளிவந்தார்கள். நிலவைக் கடுமேகங்கள் மறைத்துவிட்டிருந்ததால் இருள் பரவியது. இருளில் மரங்கள் அசைவற்று நின்றுகொண்டிருந்தன. ஆனால் அசைந்தாடும் உருவம் ஒன்று..? யார்? சௌபாக்கிய தேவியா!

குமுதசுந்தரி அவளைக் கண்டு அச்சமுற்றாள்; அவளுடைய பாத கமலங்களைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் சிந்தினாள். மாமியார் மருமகளைப் பிடித்து உயர்த்திப் பேசலுற்றாள்:

''குமுதசுந்தரி, நீ இப்போது பூமியில் இருந்தாலும் உலகத்தின் தர்மத்தை மறந்துவிட்டுச் சித்தலோகத்தின் தர்மத்தை உணருவதற்கான அதிகாரம் பெற்றுவிட்டாய். உனது உள்ளத்தினை நான் அறிவேன். உன்னைத் தூயவளாக்கிச் சித்தலோகத்தின் அதிதியாக உன்னை வரவேற்பேன். சித்தலோகத்தின்வாசிகளை நீ தரிசனம் செய்வாய். சாதுக்கள் உனக்கு உண்மை அறத்தைக் காட்டினார்கள். ஆனாலும் நீ வாழ்க்கையில் ஈடுபட்டிருந்ததால் தர்மத்தை நீ அதர்மமாகக் கருதுகிறாய். என்னுடைய மகன் உனது உண்மையான கணவன் அல்ல. இதோ உன் பின்னால் நிற்கிறானே ஆடவன் ஒருவன், இவன்தான் உன் கணவன். உங்களிருவரிடமும் அத்வைத பாவத்தைக் காண்கிறேன். ஸ்தூல பாணிக்கிரகணத்திற்குப் பதில் இதயங்களின் சங்கமமே தூய்மையானது என்பதை நீ உணர்வாய்'' என்று கூறிச் சௌபாக்கியதேவி இருவருடைய தலைகளின்மீதும் தன் கரங்களை வைத்து மேலும் சொன்னாள்:

''பிரமாததனனின் பொறுப்பிலிருந்து குமுதசுந்தரியை விடுதலைசெய்து அவளது உண்மையான அன்பனிடம் சேர்ப்பிக்கிறேன். இந்தச் சித்தலோகத்தில் இருவரும் வந்து வாழ அதிகாரம் தருகிறேன். இந்த இருவரிடமும் மனிதர்களிடம் காணப்படும் காம, க்ரோத, மத, மாச்சரியம் எதுவும் இல்லை. சுத்தமானதும் சாத்துவிகமானதுமான எண்ண உணர்வே இவர்களிடம் இருக்கிறது. சுயநலமற்ற அன்பே இவர்களிடம் குடிகொண்டிருக்கிறது. உலகவாழ்வில் தொடங்கிவைத்த யக்ஞத்தை இங்கே முடிப்பார்கள். இந்த அன்பே சித்தஜனங்களின் சூட்சுமரூபமாகச் சஞ்சரிக்கிறது. இதைத்தவிர வேறு சுவர்க்கம் ஏதுமில்லை; இதைத் தவிர வேறு எந்தக் கல்ப விருட்சமுமில்லை. இவர்களைத் தவிரத் தேவர்கள் எவருமிலர். இனி நீங்கள் இருவரும் தைரியமாக உலாவி வரலாம்.''

அவள் அவ்விதம் சொன்ன மாத்திரத்தில் இருவருடைய உடைகளும் புதியதோர் ஒளி வீசின.

''தேவி! இந்தத் தேசத்தைப்பற்றி நீங்கள் சிறிது கூற வேண்டும்'' என்று வேண்டினான் சரஸ்வதிசந்திரன்.

சௌபாக்கியதேவி, ''சூரியனுக்கும் பூமிக்கும் இடையேயுள்ள பிரதேசந்தான் சித்தலோகம். நீங்கள் பிதாமகநகரின் கீழ் நின்றுகொண்டிருக்கிறீர்கள். அந்த நகர் பறக்கும் தீவுபோல் உங்களைச் சுற்றிவருகிறது. அதை உங்களுக்குக் காட்ட இன்னும் நேரம் இருக்கிறது. உங்கள் காலடி ஓசைகேட்டு மற்றச் சித்தர்கள் வருவார்கள்; தக்கவற்றை எடுத்துச் சொல்வார்கள்'' என்றாள்.

சிறிது நேரத்தில் இருவரும் உயர்ந்து உயர்ந்து போனார்கள். காற்றுப்போல் அவர்கள் சரீரம் மென்மை அடைந்தது. ஆகவே, மெல்லப் பறந்து உயரச் சென்றார்கள். அங்கே சரஸ்வதி சந்திரனின் அன்னை சந்திரலக்ஷ்மி தோன்றி அவர்களிடம் பேசினாள்:

''உன்னுடைய பித்ருயக்ஞம் முடிவடைந்து பிரீதியக்ஞம் தொடங்கிவிட்டது. பெரியதோர் மனிதயக்ஞத்திற்கான யாகத்தீ உன் இதயத்தில் கொழுந்து விட்டெரிவதை நான் காண்கிறேன். யக்ஞவிதி முறைகளைப் பிதாமகபுரம் சென்றறிவாய். உனது யக்ஞத்திற்கான சாதனங்களை நான் தருவேன். இன்னும் உயரமாகச் சென்றால், உனது பாட்டி தர்மலக்ஷ்மியைப் பார்க்கலாம். என்னைக் காட்டிலும் பெருந்தவம் செய்திருக்கிறார் அவர். பிரீதியக்ஞத்தின் பயனை அவர் அடையாவிட்டாலும் பித்ருயக்ஞத்தின் பயன் பெற்றவர் அவர். துக்கங்கள் யாவற்றையும் சகித்து எப்போதும் தர்ம சிந்தனையுடன் காலங் கழித்து, சித்திப் பயன் பெற்றவர்....'' என்று கூறி மறைந்து போனாள்.

இருவரும் மேலே உயர்ந்து சென்ருர்கள். தர்மலக்ஷ்மி தோன்றிப் பேசலானுள்:

''துக்கத்தைச் சகிப்பது பெருந் தவமாகும். அப்படி நான் சகித்துப் பலன் பெற்றேன். நான் சித்தலோகம் அடைந்து இரு நன்மணிகளைப் பெற்றேன். ஒரு மணியை ஆபரணமாக அணிந்து கொள்ளுங்கள். இந்தச் சிந்தாமணி முத்திரையை விரலில் இட்டுக்கொண்டு, சரஸ்வதிசந்திரா, நீ சித்தநகரின் ரகசியத்தை அறியவேண்டுமானுல், மணியின்மீது பார்வையைச் செலுத்து. உனக்கு அது விளங்கிவிடும். குமுதசுந்தரி, இதோ ஸ்பர்சமணி; மாங்கலியம்போல் இதை உன் கழுத்தில் அணிந்துகொள். இதன் ஸ்பரிசமும் பிரகாசமும் உன்னை அமைதியடையச் செய்யும். இந்தச் சித்தலோக யாத்திரையில் நீ காணப்போவதனைத்தும் இந்த மணியின் ஒளியால் இன்னும் துல்லியமாகத் தெரியும். நீங்கள் ஆரம்பித்திருக்கும் இந்தப் பிரீதியக்ஞம் உலகத்தில் நன்மை விளைவிக்கும்'' என்று கூறி அவள் மறைந்துபோனுள்.

இருவரும் மேலே உயர்ந்து சென்ருர்கள். பிதாமகபுரக் கோட்டை வாயிலை அடைந்தார்கள்.

''பிரிய சந்திரரே, இது என்ன?''

''இதுதான் பிதாமகபுரத்தின் வாயில்.''

''இன்று தங்கள் உடலுக்கு மிக நெருங்கியிருந்தும் நான் மிகுந்த அமைதியுடன் இருக்கிறேன். நேற்ருே உங்கள் ஸ்பரிசம் பட்ட மாத்திரத்தில் மன்மதனின் அக்கினிப் பிழம்பைத் தொட்டது போலல்லவா இருந்தது?''

''நேற்று அந்த அக்கினி ஸ்தூல சரீரத்தில் எழுந்தது. இன்ருே இது சூட்சும சரீரம்; அதுவும் நாம் இருவரும் சித்த லோகத்தில் இருக்கிருேம்.''

அப்போது நாய்கள் குரைக்கத் தொடங்கின. இருவரும் திடுக்கிட்டார்கள். பெரியதோர் நாய் ஒன்று சரஸ்வதிசந்திரனின் முன்னிலையில் வந்து மனிதக்குரலில் பேசத் தொடங்கியது:

''பாண்டவர்கள் சுவர்க்கம் புகுந்தபோது தர்மபுத்திரர் எங்கள் மூதாதையரை இங்கே அழைத்து வந்தார். நாங்கள் இங்கே காவல் காத்து வருகிருேம். சித்தர்களுடன் மனிதர்களும் இங்கே வருகிருர்கள். ஆனுல் சாத்துவிக உணர்ச்சியுள்ள மனிதர் களை மட்டுந்தான் உள்ளே விடுகிருேம்.''

''இங்கே கடைசியாக வந்த மனிதர் யார்?'' என்று வினவினுன் சரஸ்வதிசந்திரன்.

''மஹாராஜா மல்லராஜா உங்களைப் போலவே ஒரு சமயம் இங்கு வந்திருந்தார். இங்கு இருப்பதையெல்லாம் பார்த்துவிட்டு உலகத்தில் பீஷ்மவனம் கட்டியிருந்தார்.''

''நான் அதைப் பார்த்திருக்கிறேன். எங்களுக்கு ஏதாவது உபதேசம்?''

''நாங்கள் டம்பம் என்பதை அறவே வெறுக்கிறோம். மனிதர்களின் குரலில், செயலில், எண்ணத்தில் எல்லாம் டம்பம் வெளிப்படுகிறது. உங்களிடத்தில் டம்பம் ஏதும் இல்லாததால் ஆசிகள் வழங்குகிறேன். சித்தயோகம் உலகத்தின்மீது தீவு போல் தொங்குகிறது. உலகத்தில் நீங்கள் பாரததேசத்தில் வசிக்கிறீர்கள். அதனுடைய பிரதிபிம்பத்தைப் பிதாமகரின் குண்டத்தில் நீங்கள் பார்க்கலாம். பிதாமகரின்மேல் கட்டியுள்ள மண் புற்றுக்களைச் சாத்துவிக திருஷ்டியுடன் பாருங்கள்; பின்னர், கங்கா மாதாவின் மடியில் உறங்கும் பிதாமகரைத் தரிசித்து விட்டு உங்கள் தேச முன்னேற்றத்திற்கான வழியைப்பற்றி உபதேசம் பெற்றுச் செல்லுங்கள்'' என்று சொல்லி நாய் மறைந்து போயிற்று.

இருவரும் பிதாமகரின் குண்டத்தை நெருங்கினார்கள். ஒரு காத தூரம் நீளமும் அகலமும் உடைய அக்குண்டத்தில் நீரைப் போல ஒளி நிரம்பியிருந்தது. சரஸ்வதிசந்திரன் தனக்குக் கிடைத்த அந்த மணியின்மீது பார்வை செலுத்தி, குமுத சுந்தரியிடம் சொல்ல ஆரம்பித்தான்.

''நமது தேசத்தின் புராதனப் பெருமையின் ஒளியால் இந்தக் குளம் நிறைந்திருக்கிறது. அதன் நடுவே பெரியதோர் திட்டு இருக்கிறது. அதை அடைய இந்த ஒளியில் நீந்தித்தான் சேரவேண்டும். எந்த மனிதர்களை நாய்கள் துரத்திக் கடிக்கின்றனவோ அவர்கள் இந்தக் குளத்தில் தள்ளப்பட்டு உலகை அடைகிறார்கள். இந்தக் குண்டத்தின் அரைகுறை ஒளியுடன் உலகத்தில் அரைகுறை ஞானிகளாக உலவுகிறார்கள். இதோ அவர்களுடைய பிரதிபிம்பத்தைப் பார்க்கிறோம்.''

குமுதசுந்தரி திகைப்புடன் அதைப் பார்த்தாள். சரஸ்வதி சந்திரன் இன்னொரு காட்சியை விளக்கினான்:

''பாரத யுத்தம் முடிந்தபிறகு தர்மபுத்திரர் சுவர்க்கம் சென்றார். பீஷ்மர் தமது அம்புப் படுக்கையிலிருந்து கங்கையில் புகுந்தார். நீர் உடலைச் சிறிதேனும் சேதம் செய்யவில்லை. இதோ அவருடைய உடல்மீது நாம் காணும் மண்புற்றுக்கள். ஒவ்வொரு புற்றிலிருந்தும் கிளம்பும் ஒளிப் பிழம்புகளைப் பார்!''

''எத்தகைய அரும்பெருங் காட்சி! இந்த ஒளி நமது தேசத்திற்கு வழி காட்டுமாக!''

மண் திட்டின்மேல் சின்னஞ் சிறு மண் குன்று ஒன்று இருந்தது. சரஸ்வதிசந்திரனுக்கு அதைக் காட்டி, ''இது என்ன?'' என்று வினவினாள்.

''பிதாமகர் கங்கையிலிருந்து திரும்பிவந்த பிறகு தேசத்திலிருந்து மனிதர்களின் புத்தியிலிருந்து திரட்டிய மண்தான் இந்தக் குன்று.''

''வெறும் மண் மட்டுமல்ல; சற்றுக் கவனித்துப் பாருங்கள்: சின்னஞ்சிறிய புழுக்களையும் நாம் பார்க்கிறோம்.''

''உண்மை; இவைதான் தேசத்தில் இன்று உலவும் நாகரிக மனிதர்கள்; அவர்களின் பிரதிபிம்பத்தைத்தான் நாம் பார்க்கிறோம்.''

''புழுக்களினிடையே நாம் வெள்ளை ஒளியையும் வண்ண ஒளியையும் காண்கிறோமே; ஏன்?''

''இந்தப் புழுக்களுக்கு மார்க்கம் காட்டும் மகாத்மாக்களின் ஒளிதான் அந்த வெண்மையான ஒளி. ரஜோ குணமும் தீவிர புத்திசாலிகளும் இதே காரணத்திற்காக வகுத்த வழிதான் வண்ண ஒளி. மற்ற மண்புற்றுக்களில் எல்லாம் ஜந்துக்கள் அடைந்திருக்கின்றன.''

''இந்த மண்புற்றுக்களினூடே போக முடியுமா?''

குமுதசுந்தரி கேட்ட மாத்திரத்தில் வெள்ளை ஒளி வீசின மண்புற்று ஒன்றில், ஏணி ஒன்று தென்பட்டது. அதன் வழியே இருவரும் கீழே இறங்கினார்கள்.

''இதோ புழுக்கள் கூட்டத்தைப் பார். ஒவ்வொன்றும் மண்ணைச் சேகரிப்பதைப் பார். பணம் சேகரிக்கும் மனிதர்களின் பிரதிபிம்பங்கள். ஒவ்வோர் அணு அணுவாகச் சேகரிக்கும் இந்தப் புழுக்கள் உழைப்பாளிகள்; சட்டென்று காற்று வீசினவுடன் புழுக்கள் ஓடிவிடுகின்றன. மற்றவை, உழைப்பாளிப் புழுக்கள் சேகரித்துள்ள மண்ணை எடுத்துக்கொள்கின்றன. சற்றும் சிரமமில்லாத வாழ்வு. பிறர் உழைப்பால் செல்வம் பெறும் கும்பல் கடைசியில் இருவகையும் நாசமடையும்.''

''திரவியம் யோக்கியமானவர்களிடம் இல்லாது போனால் எல்லா நன்மைகளும் பாழடைந்து விடுகின்றன.''

''நீ சொல்வது மிகவும் உண்மை. இதோ பார்; இவர்கள் தாம் இந்தத் தேசத்தைப் பாழாக்குகிறார்கள். தந்தையர்கள் புத்திரர்-புத்திரிகளுக்கான யக்ஞம் செய்யாமல் தமக்காகவே இயங்குகிறார்கள். அன்னையர் தம் புத்திரர்களுக்கும் மருமகள் மாருக்குமிடையே புகுந்து பிரிவு ஏற்படுத்துகிறார்கள். இதோ மாமியார் மருமகளுக்குச் செய்யும் கொடுமை.''

''பெண்களைப் போலவே ஆடவர்களும். ஆண்களைத் திருத்துவதுதான் பெண்டிரின் புத்திசாலித்தனம்.''

''குமுதசுந்தரியைப் போல எல்லோரும் இருப்பார்களா!''

வெகுதூரம் அவர்கள் இருவரும் கீழே இறங்கிப் போய்விட்டிருந்தார்கள்.

''தற்போதைய கால மணற்புற்றிலிருந்து அசோகர் காலத்திய புற்றுக்கு வந்துவிட்டோம். நமது தேசத்தின் மன்னர்களுக்கெல்லாம் மன்னர், துறவிகளுக்கெல்லாம் துறவி அசோகர். புத்தபகவான் தோற்றுவித்த தர்மம் பல நாட்கள் வாழ்ந்து தழைத்துப் பின்னர் மங்கி மறைந்துபோயிற்று. அந்த நாளைய புண்ணியப் பிரவாகத்தின் பிரதிபிம்பத்திற்கிடையில் இப்போது நாம் நிற்கிறோம்.''

கீழே கருநாகங்கள் அவர்களை வரவேற்றன. விதவிதமான வண்ணங்களில் பாம்புகள் தங்களது நாக்குகளிலிருந்து நச்சு நெருப்புப் பொறிகளை வாரி இறைத்தன. சரஸ்வதிசந்திரன் தனது பயணத்தைப்பற்றி அவற்றிடம் சொன்னான்: ''அதர்மத்தின் மூலத்துடன் போரிட்டு வருகிறீர்கள். நாங்கள் உங்களைப்பற்றி அறிய ஆவலுடன் இருக்கிறோம்.''

''நாகலோகத்தின் குறைகளை அறியத் துடிக்கும் மனிதர்களே, நாங்கள் உங்களுடைய பிரதேசத்தில் உதித்த சாஸ்திர கர்த்தாக்கள், புராணிகர்கள் ஆகியவர்களின் பிரதிபிம்பங்கள் தாம். எங்களுடைய ஆகாரம் சத்தியத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. அது கிடைத்துவிட்டால் தர்மத்தைக்கூட விரும்பமாட்டோம். காரணம், தர்மம் சத்தியத்தைத்தான் பின் தொடர்ந்து ஓடுகிறது. சத்தியம் தர்மத்தைப் பின் தொடர்ந்து ஓடுவதில்லை. உங்களுடைய உலகத்தில் ரஜஸ், தமஸ் என்ற குணமுடையவர்கள் நிறைந்திருக்கிறார்கள். உங்களைப் போன்ற சாத்துவிக குணத்தவர்கள் மிகக் குறைவு. உங்களைப்போன்றவர்களால் உலகம் திருந்தப் போவதில்லை. பிராணிகள் ஒன்றையொன்று கடித்துத் தின்பதும் குறையப்போவதில்லை; கூச்சலும் ஆர்ப்பாட்டமும் குறையப் போவதில்லை; அரசர்களின் பேராசையும், அதர்மச் செயல்களும் குறையப்போவதில்லை. நாங்கள் இந்தத் தேசத்தின் மூன்று குணங்கள் உடைய சர்வசிருஷ்டிகள். மேலும் எங்கள் திருஷ்டியை இடுகிறோம். உங்களுடைய விஹாரமடம் போன்றவைகளை நாசம் செய்கிறோம்; இளம் பெண்களை மணம் முடிக்கிறோம். விதவைகளை மறுமணம் செய்துகொள்ள அநுமதிப்பதில்லை. ஜாதிகள் தத்தம் குறிப்பிட்ட பகுதியினின்று வெளியே செல்ல அநுமதி தருவதில்லை. பிறரையும் அண்டவிடுவதில்லை..''

''நீங்கள் தேசத்தின் முன்னேற்றத்துக்காக இயங்குகிறீர்களா, இல்லை தேசத்தைக் கெடுக்க முயல்கிறீர்களா? இந்தத் தேசத்தின் ஆகாயத்தில் அமிர்தத்தைக் கொட்டுகிறீர்களா, இல்லை விஷத்தை வாரி இறைக்கிறீர்களா?''

சரஸ்வதிசந்திரனின் கேள்விக்குப் பதில் ஏதும் தராமல் நாகப்பாம்பு தன்னைத்தானே சுற்றிக்கொண்டது.

குமுதசுந்தரி கேட்டாள்:

''இங்கே உள்ள எல்லா நாகங்களின் தலையிலும் பிரகாசிக்கும் ரத்தினங்களில் எல்லாவற்றையும்விட அதிக ஒளி வீசும் ரத்தினம் எது?''

''விஷஜ்வாலை வீசும் இதே நாகலோகம் ரத்தினக் களஞ்சியமாக இருக்கிறது. எவருடைய பார்வையில் விஷம் இருக்கிறதோ அவருக்கு முன் விஷம் வாரிக் கொட்டப்படுகிறது. விஷம் விஷத்தால் நாசமடைகிறது. எவருடைய திருஷ்டியில் ரத்தினப் பிரகாசம் இருக்கிறதோ அவருடைய திருஷ்டியில் நாகலோகம் மணிதர்சனம் தருகிறது. சாத்துவிக திருஷ்டிக்கு விஷமும் ரத்தினமும் சேர்ந்து காட்சியளிக்கின்றன.''

''இதோ இங்கே இருக்கும் ரத்தினக் குவியலில் பல உருவங்களின் பிம்பத்தைப் பார்க்கிறேன்'' என்று குமுதசுந்தரி தன் இரு கைகளிலும் ரத்தினங்களை வாரி எடுத்துக்கொண்டாள்.

''குமுதா, நிதானமாகப் பார்த்து எனக்கு விவரித்துச் சொல். எந்த நாட்டில் தியாகமும், துறவறமும் பெருந்தன்மையும் தென்படுகின்றன?''

''எல்லாம் பாரத நாட்டில்தான். சின்னஞ்சிறு கிராமங்களிலும் பெரிய நகரங்களிலும் ஆனந்த கீதத்தை நான் கேட்கிறேன். காடுகளிலும், மலைச்சிகரங்களிலும், நதிக்கரையிலும் நல்லோர்களின் செயலைக் கண்டு மனம் மகிழ்ச்சியடைகிறது. நாடுவிட்டு நாடு செல்கிறார்கள் பாரத நாட்டின் பண்டிதர்களும் வணிகர்களும். இதோ அவர்கள் வீட்டில் வெள்ளி ஊஞ்சலில் காதலித்து மணம்புரிந்த தம்பதிகள் தென்படுகிறார்கள். கிலேசம் என்பது ஒரு குடும்பத்திலுங்கூடத் தோன்றவில்லை. அநாதைகளுக்குச் சேவை செய்கிறார்கள். செல்வத்தைச் சேர்ப்பதில் களைத்துப்போனாலும் நன்மார்க்கத்தில் செலவழிப்பதில் களைப்பாறுவதில்லை. அரசர்கள் மக்கள் நலனுக்காக அரசாளுகிறார்கள். முனிவர்கள் பல சாதனைகள் புரிகிறார்கள். கலையறிவும், ரஸனையும், ஞானமும், சாத்துவிக திருஷ்டியும் ஒளி வீசுகின்றன. காளிதாசர், பவபூதி, விக்கிரமன், சாலிவாகனன் இவர்களைப் போன்ற தேஜஸ்விகளின் உருவங்களைக் காண்கிறேன்.''

குமுதசுந்தரி சொல்லிமுடித்ததும் ரத்தினக் குவியலினின்று குரல் ஒன்று ஒலித்தது: ''இந்த யுகத்தில் மனிதர்கள் எங்களை அவமதிக்கிறார்கள்; மட்டமாக எண்ணுகிறார்கள். எல்லாவற்றையும் இங்கிருந்து நாங்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்

கிருேம். ஆனுல் இங்கிருந்து அவர்களுக்கு எதிராக வாதம் புரிவது கடினம். ஆகையால் நீங்கள் யாவற்றையும் பார்த்துவிட்டு அவர்களுக்குச் சொல்லுங்கள். பழமை என்பதால் மடமை என்று எண்ணிவிட வேண்டாம். சுடர்விட்டு ஒளிரும் பலப்பல ரத்தினங்கள் எங்களிடம் இருக்கின்றன. அதே சமயம் வழி தவறி முறை கெட்டவர்கள், அதோகதி அடைந்து தாழ்ந்தவர்களும் உண்டு, தேசத்தின் வரலாற்றைச் சொல்லுங்கள்; அதிலிருந்து அவர்கள் உண்மையை அறிவார்கள். பழமையில் நல்லதும் தீயதும் உண்டு, நஞ்சும் ரத்தினங்களும் இருக்கின்றன என்று அவர்கள் அறியட்டும். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வெறும் கல்வி வளர்ச்சியால் சம்பிரதாயங்களை அமைத்து வந்திருக்கிருேம். இந்த நாளைய மனிதர்கள் சட்டென்று யோசியாமல் அழித்து விட்டார்களென்ருல், புதிய சம்பிரதாயங்கள் உருவாகும்வரை நாகலோகத்தினரான நாங்கள் இவ்வாறு தவம் புரிந்துகொண்டிருப்போம்.''

குரல் நின்றது. குமுதசுந்தரியும் சரஸ்வதிசந்திரனும் திடீரென்று மேல் இழுத்துச் செல்லப்பட்டார்கள். மண்புற்றுக்களின் மேற்பாகத்தில் முதலில் நின்றுகொண்டிருந்த இடத்திலேயே மீண்டும் வந்தடைந்தார்கள். மீண்டும் திறந்த வெளியில் வந்ததும் வீசிக்கொண்டிருந்த இளங் காற்ருல் தெம்படைந்தார்கள். திடீரென்று அவர்களுக்கு அருகில் மண் வெட்டப்பட்டுப் பெரியதோர் குழி தோன்றியது. அங்கே நாகலோகத்தில் அவர்கள் பார்த்த பிரகாசமான ஸ்தம்பம் ஒன்று நின்றுகொண்டிருந்தது. அங்கேயிருந்த ஐந்துக்களிடம் பலப்பல சித்திரங்களையும் உருவங்களையும் கண்டார்கள். எல்லாம் சரஸ்வதிசந்திரனுக்குத் தெரிந்த மனிதர்கள்!

''சற்றே கூர்ந்து கவனி: இவற்றின் கண்களில் காகத்துக்கு இருப்பது போல் ஒரே ஒரு கண்மணிதான் இருக்கிறது. ஆனுல் இதோ ஆகாயத்தில் குரங்குகள் கூட்டம் கொண்டு செல்லும் ஔஷதங்களினின்று விழும் மகரந்தப்பொடி இவற்றின் கண்கள்மீது விழுந்து இவற்றினுடைய பார்வையை விகாரப்படுத்துகிறது. இதோ இவற்றின் பார்வையை எப்படித் திருத்துவது?'' என்ருள் குமுதசுந்தரி.

''விகாரம் அடைந்திருக்கும் கண்கள்மீது நாகலோகத்தின் மணிப் பிரகாசம் பட்டவுடன்தான் பார்வை திருந்தும். சாத்துவிக திருஷ்டி இல்லையென்ருல் பார்வை திருந்தாது. சாத்துவிக திருஷ்டி அதிகரித்தால்தான் இரண்டாவது கண்மணியும் திரும்பும்'' என்ருன் சரஸ்வதிசந்திரன்.

''இதோ இந்தக் கூச்சலும் சத்தமும் ஏன்?''

''சில ஜந்துக்களுக்கு ஒரே ஒரு கண்; சில குருடுகள்; சில கவிழ்ந்து கிடக்கின்றன. ஆகவே, ஒன்றையொன்று மோதிக் கொண்டு வழியில் இடறி இருப்பதால்தான் இந்தக் களேபரம்.'

''பார்க்க மிகவும் பரிதாபமாக இருக்கிறது. இதோ வெளிவருகின்றது வெண்மையான ஒளிக்கற்றை! இந்த ஒளி மறைந்து விடும் போல இருக்கிறதே?''

''இல்லை, இல்லை; இந்த ஒளி என்றும் மறையாது. இதோ இந்த மண்புற்றுக்களினின்று எழுகின்றன ஒளிக்கற்றைகள்.''

குமுதசுந்தரி திகைத்து நின்றாள். வித்யாசதுரர், குணசுந்தரி இருவருடைய சித்திரங்கள் எழுந்து அவர்கள் அருகில் வந்தன. குமுதசுந்தரி அவற்றை வணங்கி நின்றாள். சித்திரங்கள் நகர்ந்து சென்றன; பின்னர்ப் புத்திதனர், சௌபாக்கியதேவி, மல்லராஜா ஆகியவர்களின் சித்திரங்களும் எழுந்து அவர்கள் பக்கமாக வந்து சென்றன.

மண்புற்றுக்களினின்று பெரியதோர் குரல் எழுந்தது:

''மண்புற்றுக்களை அழிக்க விரும்பும் மனிதர்களே, கேளுங்கள்: இப்போது நீங்கள் பார்த்த சாத்துவிக மனிதர்களின் சித்திரங்கள் நாகலோகத்தின் மணிப்பிரகாசத்தால் எங்கள் இதயத்தில் நிறைந்திருக்கின்றன. மண்புற்றுக்களை நீங்கள் அழித்துவிட்டால் நாங்கள் பெறும் ஒளி மறைந்து போய்விடும். ஆகையால், சிறிது சிந்தனை செய்யுங்கள். முதலில் நீங்கள் பார்த்தீர்களே, அத்தகைய மனிதர்களை முதலில் சிருஷ்டி செய்யுங்கள்; பின்னர் மண்புற்றுக்களை நாசம் செய்யுங்கள். சாத்துவிக திருஷ்டி இல்லாமல் நாசவேலையில் ஈடுபட்டால் இந்த ரத்தினங்கள் யாவும் பறிபோய்விடும்.'' குரல் நின்றவுடன் மண்புற்றுக்கள் சிரிப்பதுபோல ஓசை எழுந்தது.

''இதோ மண்புற்றுக்கள் அழிந்துபோனால் விளையும் சேதத்தைப் பார்க்க விரும்புகிறீர்களா?'' என்ற கேள்வி பிறந்தது. உடனே சில மண்புற்றுக்கள் பெருத்த ஓசை எழுப்பிச் சிதறிச் சேதம் அடைந்தன. மணற்கட்டிகள்சரிந்து விழுந்ததால் கிருமிகள் பல மரித்துப்போயின; சில அவயவங்கள் இழந்தன. கால், கை, தலை எல்லாம் சிதறி மனிதர்களின் உறுப்புக்களாய் மாறின. காணச் சகிக்க முடியாத காட்சி!

இருவரின் உள்ளங்களும் நெகிழ்ந்தன. அவர்கள் பார்த்த சித்திரங்கள் குண்டத்திற்கருகில் வந்து நின்றன. புத்திதனரின் சித்திரத்திற்கருகில் தோன்றினாள் அலக்கிஷோரி. ''அண்ணி, அண்ணி! வாருங்கள், வாருங்கள்! அம்மா போய்விட்டாள். நீங்கள் நிச்சயம் வரவேண்டும்.'' அலக்கிஷோரி விம்மி விம்மி அழுதாள்.

லக்ஷ்மீநந்தனரின் சித்திரத்தில் கண்களிலிருந்து நீர் சுரந்தது. இதயத்தை உருக்கும் குரல் எழுந்தது:

''மகனே, நீ சீக்கிரம் வந்துவிடு. ஒரு மாதத்தில் நீ வரவில்லையானால் நான் செத்துப் போய்விடுவேன்.''

சிறிது நேரத்தில் ஒலிகள் எல்லாம் அடங்கிப் போயின. குண்டத்திலே சலசலக்கும் அலையோசையும், வீசும் காற்றின் ஒலியும் தவிர நிச்சப்தம் எங்கும் நிலவியது. வானத்தில் பெரிய தோர் மின்னல், ஒளியை வாரி இறைத்தது; அதனது பயங்கரமான பிரதிபிம்பம் குண்டத்தில் தோன்றியது. அதைத் தொடர்ந்து இருளும் இடிமுழக்கமும் எங்கும் பரவின. ஒருவரையொருவர் பார்க்கவும் இயலாத கப்பிய இருளில் இதயத் துடிப்பினைத்தான் கேட்க முடிந்தது; குமுதசுந்தரி சரஸ்வதிசந்திரனைத் தழுவிக்கொண்டாள். திடீர் திடீர் என்று மின்னற்பொறிகள் எழுந்தன. விநாடிக்கு விநாடி எழுந்த ஒளியில் சித்திரங்கள் ஒவ்வொன்றும் குண்டத்தில் அமிழ்ந்து மறைவதைப் பார்த்தார்கள். ''அண்ணி, அண்ணி'' என்ற குரலுடன், ''மகனே, மகனே'' என்ற குரலும் ஒலித்தன.

எல்லாவற்றுக்கும் கடைசியில் கண்ணைப் பறிக்கும் மின்னொளியில் குமுதசுந்தரியும் சரஸ்வதிசந்திரனும் குண்டத்தில் இறங்கினார்கள். விநாடிப் பொழுதில் ஒளிக்கும் ஒலிக்குமிடையே மறைந்து போனார்கள்.

16. காதலின் யாத்திரை

அவர்களுடைய உறக்கம் அதிக நேரம் நிலைக்கவில்லை. சித்திரை மாதத்தின் சுக்கிலபட்ச ஏகாதசி இரவின் பின் பகுதி எவருக்கும் இனிமையான உறக்கத்தையே தருவது. ஆனால் குமுதசுந்தரியின் உறக்கம் கலைந்துபோயிற்று. கனவும் அதன் ஸ்பரிசமும் அவள் கண்களைத் திறக்க மறுத்தன. மூடிய கண்கள்; ஆனால் விழிப்புநிலை. சட்டென்று உணர்வு வந்தது அவளுக்கு. யாருடைய சரணங்களின் ஸ்பரிசத்தை அவள் அநுபவித்துக்கொண் டிருக்கிறாள்? உணர்வு எழுந்ததும் திடுக்கிட்டாள்; கண் விழித்துக்கொண்டாள். அடுத்த விநாடி வெட்கம் அவளைச் சூழ்ந்துகொண்டது; வெட்கத்திற்குப் பின் பயம் எழுந்தது. சரஸ்வதிசந்திரனின் பாதங்களைவிட்டு எழுந்து நின்றாள். கழிந்த கனவின் நிகழ்ச்சிகள் மீண்டும் நினைவுத் திரையில் எழுந்தன. பெற்றோர், மாமனார், மாமியார் ஆகியவரின் நினைவு வரவே ஓரமாக உட்கார்ந்துகொண்டாள். அப்படியே

கண்களை மூடி உறக்கத்தில் ஆழ்ந்தாள். அதற்குள் சரஸ்வதி சந்திரன் விழித்துக்கொண்டான். ''யார் தூங்குவது, குமுத சுந்தரியா?'' என்று உட்கார்ந்தவண்ணமே உறங்கும் குமுத சுந்தரியின் முன்னர் வந்து நின்ருன். அவளைப் பார்த்த மாத்திரத்தில் ஆசைகள் யாவும் எழுந்தன; ஆனுல் இன்னொரு புறம் நற்சிந்தனைகள் எழுந்து இருளைக் கிழித்து ஒளியாகச் சுடர் விட்டன. விகார எண்ணங்கள் அழிந்துபோயின. குமுதசுந்தரி எழுந்துகொண்டாள். அவனுடன் சர்ச்சையில் ஈடுபட்டாள். ஆசைகள், விருப்பங்கள், ஆண் - பெண் சம்பந்தம், அவை யாவும் நிறைவேற்றிவைக்கும் அறமுறைகள் பற்றிய சர்ச்சைக்குப் பிறகு சரஸ்வதிசந்திரன் சொன்னுன்:

''சாதுஜனங்களுடன் நாம் கலந்துவிட்டோம். அவர்களது சநாதன தர்மத்தினையே நாம் ஏற்றுக்கொண்டுவிட்டோம். நமது சம்சாரதர்மம் முடிவடைந்துவிட்டது; நாம் அதிலிருந்து விடுபட்டு விட்டோம்.

''எந்த விருப்பத்தில் அதர்மம் இல்லையோ அதனது திருப்தியே சாந்தி. இரக்கமும் ஒருவகை விருப்பமாகும்.''

''நீ யார்மேல் இரக்கம் கொண்டிருக்கிருய்?''

''உங்களுடைய உடம்பு சுடுகிறது. அதை நான் அறிந்தேன். அதற்கான மருந்து தேடுவது யஜமானரின் கடமை.''

சரஸ்வதிசந்திரன் சிரித்தான். தனது கையை நீட்டினுன்;

''ஏமாந்து போனுய். இதோ எங்கே காய்ச்சல், தொட்டுப் பாரேன்!''

''இப்போது சுடவில்லைதான்! ஆச்சரியந்தான்; ராத்திரி உடம்பு காய்ந்தது.''

''உனது கைதான் சுடுகிறது. ஆனுல் சூடு குறைவதுபோல் தோன்றுகிறது.''

''உங்கள் கை சூடு ஏறும்போல் தோன்றுகிறது.''

''இதோ கையைவிடு. நீ தொடாமலிருந்தால் சூடு மறைந்துவிடும். மின்னலைப்போல் கணநேரம் தோன்றிக் கண நேரத்தில் மறைந்துபோகும் இதற்கு நீ இரக்கம் கொள்ளக் கூடாது. ஆனுல் உன் விருப்பம் நன்மைக்குத்தான்.''

''அதில் தவறு ஒன்றுமில்லையே?''

''தவறுதான். உன் வயது மிகவும் சின்ன வயது. உன் எதிர்காலம் உன் தந்தையின் கையில் இருக்கிறது. அவரது சம்மதி இல்லாமல் நமது திருமணம் நடைபெற இயலாது. கன்னிகையர் மடத்துக்கோ, இல்லையானுல் சந்திராவளிமையாவிடம் இரண்டு

ஆண்டுகள் தங்கிய பிறகு விஹார மடத்துக்கோ சென்றால், ஆட்சேபம் ஏதும் இருக்காது.''

''இந்த ஆட்சேபம் இதுவரை உங்கள் கவனத்தில் வர வில்லையா?''

''இல்லை, பாவம் உன்னைச் சேராது; ஆனால் என்னைச் சேரும். நான்தான் குற்றவாளியாவேன். அந்தக் குற்றத்தைச் செய்தேன் என்றால், பிராயச்சித்தம் செய்வது என் கடமையாகும். அத்தகைய பிராயச்சித்தத்திற்கு நான் தயாராக இருந்ததால், அதைப்பற்றி நான் சொல்லவில்லை. ஆனால் உன்னுடைய விருப்பத்தை அறிந்தவுடன் நான் சொல்ல வேண்டுவதைச் சொன்னேன்.''

''இந்த உடல் இருக்கும் வரை இரக்கவுணர்ச்சி என்றும் மறையாது. இனி நாம் என்ன செய்ய வேண்டியது என்பதுபற்றி இந்த ஐந்து இரவுகளில் முடிவு செய்வோம்.

''இனி நமது எதிர்காலச் சுகவாழ்வு, நம்மிருவரின் கவலை மட்டுமல்ல; நாம் ஒருவரை ஒருவர் சந்திக்க ஏற்பாடு செய்த சாது ஜனங்களின் கவலையுமாகும். அவர்களுடைய கீர்த்தியும் நிலையும் நமது முடிவில் பெரும் அளவுக்குப் பொறுத்திருக் கின்றன. சரியான முடிவுக்கு வராது போனால், அவர்களுடைய விருந்தாளிகளான நாம் கடமை தவறியவர்களாகிவிடுவோம்.''

''உண்மை; துறவிகளை வருத்தத்தில் ஆழ்த்தக் கூடாது என்ற நம் விருப்பம் நம்முடைய மற்ற விருப்பங்களை அகற்றி விடும்.''

''இதோ பொழுது புலர்ந்துவிட்டது.''

''இயற்கையின் விடிவுடன் நமது விடிவுக்காலமும் வந்து விட்டது. தாங்கள் இனி ஆயுளை எப்படிக் கழிக்கப் போகிறீர் கள்? எதிர்காலத்தில் நாட்டிற்கும் தங்களுக்கும் எவ்வகையில் பணி புரியப் போகிறீர்கள்? அதில் நான் எவ்விதம் புரிய இயலும்?-இவை எல்லாவற்றையும் நான் அறிந்தவுடன் என்னைப்பற்றி முடிவு செய்வேன். நீங்கள் தரும் அறிவின் ஒளிப் பிழம்பை என்றும் காத்து வருவேன். இதோ இந்தப் போர்வையை எடுத்துக் கொள்ளுங்கள்; நான் போகிறேன்.''

குமுதசுந்தரி வசந்த குகையின் கீழ்ப்பாகத்திற்குச் சென்றாள். அங்கே மற்றச் சந்நியாசினிகள் தத்தம் கடமைகளில் ஈடுபட் டிருந்தார்கள். குமுதசுந்தரியைக் கண்டதும் திருப்தி யுற்றார்கள்.

''சாது ஜனங்களின் வழிமுறைகள் எனக்கு மிகவும் அமைதி யளிக்க உதவியிருக்கின்றன'' என்றாள் குமுதசுந்தரி.

''உனது அமைதியை அறிந்தால் சந்திராவளிமையா மிகவும் மகிழ்ச்சியுறுவாள்'' என்ருள் பக்திமையா.

குமுதசுந்தரி சென்ற பிறகு சரஸ்வதிசந்திரன் தன் கடன்களை முடித்துக்கொண்டான். இரவு தான் கண்ட கனவின் நிகழ்ச்சிகளைக் காகிதத்தில் வரைய முனையலாஞன். நான்கு மணி நேரம் ஒரே மூச்சில் உட்கார்ந்து எழுதி முடித்துச் சிறிது உலவினன். மலையின் இயற்கைக் காட்சிகளைக் கண்டு மனம் மகிழ்ந்த பின்னர் மீண்டும் தன் இருப்பிடத்திற்கு வந்து சந்திரகாந்தனின் கடிதக் கட்டுகளைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். அப்போது குமுதசுந்தரி பாலும் பழமும் ஏந்தி வந்தாள். அவள் ஏந்திவந்த அழகில் மனம் பறிகொடுத்தவனுய் அவளையே ஏறிட்டு நோக்கினன்; அவனது பார்வை அவளுடைய ஒவ்வோர் அங்கத்திலும் பட்டு அங்கேயே நிலைத்து நின்றது. அவனை விழிப்படையச் செய்வதுபோல் புன்முறுவல் பூத்துக் குமுதசுந்தரி பேசினள்.

''ஸ்தூல விருப்பத்திற்கும் சூக்ஷ்ம விருப்பத்திற்குமிடையே பெரிய கொத்தளச் சுவர் இருப்பது உண்மையானுலும், ஒன்றிலிருந்து இன்னென்றுக்குக் கள்ளத்தனமாய்த் தாண்டுவதற்குக் கதவுகள் இல்லாமல் இல்லை.''

சரஸ்வதிசந்திரன் நிலையை உணர்ந்துகொண்டான். அவனுக்கு அருகிலே அவன் எழுதியிருந்த காகிதங்களைப் படிக்க வேண்டுமென்ற விருப்பம் அவளுக்கு எழுந்தது.

''நேற்று நான் பெருங் கனவொன்று கண்டேன். நீங்கள் அதைப்பற்றி எழுதியிருப்பீர்களோ என்று தோன்றுகிறது.''

''என்ன, நீயுமா அத்தகைய கனவொன்று கண்டாய்?''

குமுதசுந்தரி அதைப் படித்தாள்.

''நம் இரண்டு கனவுகளிலும் வித்தியாசம் ஏதுமில்லை. ஆனல் நீங்கள் எழுதியிருப்பதில் உடன் இருந்தவளின் பெயரைக் குறிப்பிடவில்லை. என் பெயரைக் குறிப்பிட்டிருந்தீர்களானல் என் கனவும் அதேதான்.''

''குமுதசுந்தரி, நான் மிகவும் வருந்துகிறேன்.''

''என்னுடைய துக்கத்தை நீங்கள் போக்கிவிட்டீர்கள். உங்கள் துயரம் என்னல் குறையவில்லை என்ருல், நான் சகதர்மிணியாகிச் சமபாகம் பெறுவேன்.''

''உன்னுடைய துயரம் இதுநாள்வரைத் தேளைப்போல என்னைத் தீண்டிக் கொண்டுவந்தது. ஆனல் இந்தத் துக்கமோ நான்கு புறங்களும் என்னைக் காற்றைபோல் சூழ்ந்து என்னை வருத்தத்தில் ஆழ்த்துகிறது.''

''என்ன துக்கம் அது?''

''நம்முடைய தேசத்தின் - மக்களின் - நிலைதான் என்னை வருத்துகிறது. இதை எப்படித் தீர்ப்பது என்பதே பிரச்னை. ஏகாந்தவாசிகளான இந்தச் சாதுக்கள் எங்கே, எவ்வளவோ சிக்கல்களில் அகப்பட்டு அல்லலுறும் மக்கள் எங்கே!''

''நீங்கள் ஆசிரமத்தில் இனி நாட்களை எப்படிக் கழிக்கப் போகிறீர்கள்? உங்கள் மனத்துயரை எப்படி நீக்க முயலுவீர்கள்?''

''ஆத்ம நலனுக்கான சிந்தனைக்கு வேண்டிய எல்லாச் சாதனங்களும் ஆசிரமத்தில் இருக்கின்றன; தேச நலனுக்கு வேண்டிய சாதனைகள் இங்கே இல்லை. ஆனால் தேச சேவை எப்படிச் செய்வது என்பதை இந்த இடம் உணர்த்துவதைப்போல வேறு எந்த இடமும் உணர்த்தாது. மக்கள் சேவைக்கான சக்தியை வெறும் பணமும் செல்வாக்கும் தரா. ஆனால் அந்தச் சக்தியை எப்படிப் பெறுவது என்பதுதான் கடினமான கேள்வி.

''சம்சாரத்தைப்பற்றிய பிரச்னைகளைச் சம்சாரமே தீர்த்து வைக்கும். ஆனால் இங்கேயோ சம்சாரத்தை வெறுத்து வாழ வேண்டும்.''

''கல்வி புத்தியைத் தீட்ட உதவுகிறது; சக்தியைப் பெருக்குகிறது. உலக வாழ்வு சக்தியையும் புத்தியையும் பயன்படுத்த வாய்ப்புக்களைத் தருகிறது. நமது புத்தியில் இப்போது புதிய அநுபவங்களைப் பெற்று வருகிறோமே, இதற்குக் காரணம் இந்த மலையின் மகிமையே யாகும். தீர்த்த ஸ்தலங்களுக்குச் சென்று வருவதால் அங்கேயுள்ள தூய்மையும் சௌந்தரியமும் மனத்துக்கு அமைதிதந்து மகிழ்விக்கின்றன. இந்த மலையோ எனக்குத் தந்துள்ள லாபம் இந்தத் துக்கந்தான்.''

''துக்கத்தை லாபம் என்கிறீர்களே?''

''பம்பாயில் இருந்தபோது செல்வத்தை என்ன செய்வதென்று அறியாமல் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தேன். இன்று தெரிந்துகொண்டேன். பணத்தைச் செலவழித்து நம்முடைய வித்துவான்களை இவ்விடத்திற்கு அழைத்துத் தங்கச் செய்ய வேண்டும். அதனால் அவர்கள் அறிவு வளர்ச்சியடையும். இந்த நாட்டின் முன்னேற்றம் இரண்டு பேர்களிடந்தான் இருக்கிறது - வெள்ளையர்களும் வித்துவான்களுந்தாம்.''

''அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்கள்?''

''ஒவ்வொருவர் வீட்டிலும் குணசுந்தரிகளும் குமுதசுந்தரிகளும் சௌபாக்கிய தேவிகளும் சந்திராவளிமையாக்களும் பெருக வேண்டும். அவர்களுடைய வைபவம் வளரவேண்டும். நோய்,

தீமை இவற்றிலிருந்து அவர்கள் விடுதலை பெறவேண்டும். கலைவாணியும் திருமகளும் சேர்ந்து இலங்க வேண்டும். அன்பும் நற்குணங்களும் ஓங்கவேண்டும். அவர்களுடைய சிந்தனைகளில் தேச முன்னேற்றம்பற்றிய ஆசைகள் எழவேண்டும். நாம் பார்த்த மணற்புற்றுக்களின் மண் அவர்கள் உடல்களினின்று பறந்து விடவேண்டும். வெள்ளை ஒளி காட்டிய வழியில் முன்னேறவேண்டும்; புதுப்புதுச் செயல்கள், சாதனைகள் செய்திட வேண்டும். இதைப் பார்க்கவேண்டும் என்பது என் ஆழ்ந்த விருப்பம்.''

''இந்த விருப்பத்தை எவ்விதம் நிறைவேற்றுவீர்கள்?''

''என்னிடமிருந்த ஒரு சாதனம் - செல்வம். அதைத் தியாகம் செய்துவிட்டேன். குமுதசுந்தரியை நான் தியாகம் செய்யாமலிருந்தால் பஞ்சபாணங்களின் பயம் நீங்கி அவள் வழியாகத் தேச முன்னேற்றத்திற்குப் பாதை அமைத்திருப்பேன். யாரேனும் பெண்ணொருத்தியைப் பார்த்தால் உன்னைத்தான் நினைவுபடுத்திக்கொள்கிறேன்; பெண்குலத்தின் துயரத்தை நினைத்துக்கொள்கிறேன். உன்னை நினைத்துக்கொண்டவுடன் மன்மதன் வில்லேந்தி நின்றுவிடுகிறான். ஆகவே, அந்தப் பயத்தால் உன்னை நினைவுபடுத்தும் கற்பனைகளையெல்லாம் ஒதுக்கி வைத்து விடுகிறேன்.''

''நீங்கள் சொல்வதைக் கேட்டால் மனம் உருகிவிடுகிறது. எந்த விதத்தில் நான் தங்களுக்கு உதவுவது?''

''குமுதசுந்தரி! இதோ இந்தக் கடிதக் கட்டுகளில் உள்ள கடிதங்கள் என் இதயத்தைப் பிழிந்தெடுக்கின்றன. என் ஆருயிர் நண்பர்கள் குடத்துள் இட்ட விளக்குகளாய், புழுதி படிந்த ரத்தினங்களாக மறைந்துகிடக்கிறார்கள். நான் அதை அறியாமல் போய்விட்டேன். பிரமாததனன் உன்னை ஆசையாக அன்புடன் இன்பமாக வைத்திருந்தானேயானால் நான் மகிழ்ந்திருப்பேன். ஆனால் அவன் செய்த தவறு காரணமாக என் கண்கள் திறந்தன. பெண்ணினம் படும் துயரை அறிந்துகொண்டேன். இன்று அவர்களின் கண்ணீர் ஆறுகப் பெருகி ஓடுகிறது. ஆரிய குலத்தின் அரைப்பகுதியின் - அழகும் நளினமும் துலங்கும் பெண்டிரின் - நிலையைத் திருத்தும் பணிக்கான வாய்ப்பை இழந்து தவிக்கிறேன். நடக்கவேண்டியது நடந்துவிட்டது. இந்த எல்லாத் துக்கத்தையும் எப்படிப் போக்குவது?''

''உங்களிடம் எஞ்சியுள்ள சக்தியால் முடியாதா?''

''கல்வி, துறவறம், செல்வம் - இந்த மூன்று சக்திகளும் தேவை. மூன்றுவது சக்தி போய்விட்டது. நான்காவது உன்னுடைய இதயத்தில் இருக்கிறது.''

''மூன்றாவதும் நாலாவதும் இல்லாவிட்டால் முடியாதா?''

''ஸோமரச பானம் எதை நமக்குத் தெரிவிக்கிறதோ, அது போதும்.''

''எத்தகைய ஸோமம்?''

''தேசயக்ஞத்தில் தேசப்பிரீதி - அதுவே ஸோமரசம்.''

''எப்போது தெரியவரும்?''

''அந்த ரசத்தால் நம்முடைய இதயங்களைக் கடையும் போது.''

''சரி, நான் வருகிறேன். கீழே சாதுக்கள் பூஜையில் ஈடுபட்டிருப்பார்கள்; அவர்களுக்கு உதவியாக இருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் எழுந்து செல்லவேண்டும் என்று நினைக்கும்போதெல்லாம் என்னை அறியாமல் உட்கார்ந்து விடுகிறேன். உங்கள் கை நீளமாகிவிட்டது. என் புடைவைத் தலைப்பை விடுங்கள்.''

''அலக்கிஷோரி அருகில் இருக்கையில் எந்தச் சக்தி இதே கைகளைத் தூய்மையாக வைத்ததோ, அதுவே இப்போதும் பவித்திரமாக வைக்கும்.''

''நாம் என்ன பாமர மக்களா, ஒவ்வொரு விநாடியும் பிரயத்தனம் செய்தால்தான் ஜாக்கிரதையாக இருக்க முடியும் என்பதற்கு?''

''தியாகத்தாலும், தீர்க்கமான, சூட்சுமத் தவத்தாலும், அதிக எச்சரிக்கையாலுந்தான் விழிப்புநிலை அடைய முடியும்.''

''நான் வரட்டுமா, உத்தரவு கொடுங்கள்.''

17. அர்ஜுனனின் வாயு ரதமும் காட்டுத் தீயும்

மாலை நேரம் சரஸ்வதிசந்திரன் தனது குகையின் மேற் பாகத்தில் வந்து அமர்ந்துகொண்டான். நான்கு புறமும் இயற்கை அமைத்திருந்த வனப்புமிக்க காட்சிகளைக் கண்டு அநுபவித்துக்கொண்டிருந்தான். மெய்ம்மறந்து போயிருந்த அவன் காதில் குமுதசுந்தரியின் காலடிச் சப்தம் விழவில்லை; பாறையின் இன்னொரு புறத்தில் உட்கார்ந்துகொண்டு, ''சரஸ்வதி சந்திரஜி'' என்று அவனை விளித்தாள். அவளது பக்கம் திரும்பினான். இருவரும் இயற்கைக் காட்சிகளைக் காணத் தொடங்கினார்கள். இன்னும் அந்தி சாயவில்லை. ஆகாயத்தில் வெண்மதி ஒளியிழந்து காணப்பட்டது. இருள் கவியக் கவிய ஒளி அதிகமாயிற்று. சுற்றிலும் இருந்த மரம், செடி, கொடிகள் ஆகியவற்றின்

பசுமை மெல்லக் கரைந்து இருள் தழுவத் தொடங்கியது: பறவை எதையும் காணவில்லை; அனைத்தும் கூடு நோக்கி விரைந்திருக்கவேண்டும். நிலவின் ஒளி பூரணமாக வீசியது.

குமுதா கேட்டாள்:

''திருமண விதிகளில் மணமகன் மணமகளிடம், 'நான் ஆகாயம்; நீ மண்' என்கிறனே, இதன் உண்மை என்ன?''

சரஸ்வதிசந்திரன் பதில் சொன்னன்:

''மேகம் வானினின்று பெய்கிறது; நீரை மண் கவர்ந்து தனது கருப்பையில் இடுகிறது. அதிலிருந்து பயிரும் பச்சையும் உயிரும் உலகமும் உருவாகின்றன. மண் ஒரு மகாயக்ஞம் புரிகிறது. அதேபோல மனைவியின் உள்ளத்திலிருந்து பெருகும் உவகையைக் கணவன் வாங்கி மீண்டும் அவளிடமே தருகிறன். அவள் புதிய உயிர்களை உருவாக்குகிருள். இந்தத் தம்பதியின் யக்ஞம் இவ்வாருக நடைபெறுகிறது.''

''அப்படியா?''

''இன்னும் ஓர் உபமானமும் இருக்கிறது: பெண் 'ருக்' என்ருல் ஆண் 'ஸாமம்'. 'ருக்'கிலிருந்து ஸாமம் பிறக்கிறது. அதுபோலவே மண்ணிலிருந்து மேகமும், பெண்ணிலிருந்து ஆணும் உதயமாகின்றன.''

''அப்படியானல் மண்ணில் உள்ள கடலின் உப்புநீர் விண்ணின் பெருமையால் தூய நீராகிறது என்றும், ருக்வேதத்தினின்று பிறக்கும் ஸாம வேதம் கான ரூபம் பெறுகிறது என்றும் சொல்லலாமா? பெண்ணின் உள்ளமும் கணவனின் இதயத்தை அடைந்து மதுரம் அடைகிறது என்றும் கூறலாமே! ஆகவே, விவாகம் என்பது மனிதவாழ்வில் மகத்தானதோர் மைல் கல் என்றே சொல்லலாம்.''

''ஆம்; அது உண்மையே.''

''நமது தேசத்தில் அதனுடைய நிலைமை என்ன?''

''இந்தக் கேள்வி எனக்குத் துக்கத்தையே அளிக்கிறது. நாம் கண்ட மண்புற்றுக்களிலிருந்து ஒளி எழும்பியதே, அதுபோன்றதே இந்த மண வாழ்வு எனும் வழக்கமும். மற்றப்படி மண்புற்றில் நாம் கண்டதெல்லாம் மண்ணும் புழுக்களுமேயாம்.''

''மண்புற்றுக்களிடையே ஒளிமயமான குண்டங்களும் மணிமயமான மார்க்கமும் ஒருநாளும் உதயமாகாவா?''

''இறைவனல் முடியாதடுதன்ன? ஆனல் மண்புற்றுக்கள் பிரகாசம் பெறப் பல காலம் பிடிக்கும். அதற்குள் என்ன ஆகும் என்று சொல்லமுடியாது. பிறநாட்டு முன்னேற்றத்துக்கு முன்-

அங்கிருந்து வீசும் புயலுக்கு முன்-மண்புற்றுக்கள் யாவும் சரிந்து மண்ணோடு மண்ணாகிவிடும். இதோ ஒளி வீசுகிற நிலவு பின்னிரவில் அஸ்தமனமாகிவிடும்.''

''நிலவு மறைந்து சிறிது நேரத்திற்கெல்லாம் கதிரவன் எழுந்துவிடுவான்.. தூக்கம் கண்களைச் சுழற்றுகிறது.''

குமுதா உறங்கிப் போனாள். சரஸ்வதிசந்திரனும் தூங்கப் போனான்.

நிலவு அவர்கள் உடலில் ஒளிவீசி விளையாடியது. பஞ்சுப் பொதியொத்த மேகக் கூட்டத்தில் நிலவு புகுந்து கண்ணாமூச்சி விளையாடியது. நேரம் ஆக ஆகப் பனி படிய ஆரம்பிக்கவே, குமுதா சரஸ்வதிசந்திரனை எழுப்பினாள்: ''கீழே குகையில் சென்று உறங்கலாம்; இங்கே பனி படிகிறது.'' சரஸ்வதிசந்திரன் எழுந்தான். இருவரும் கீழே குகையில் சென்று உறங்கினார்கள். இருவரும் கனவுலகில் சஞ்சரிக்கத் தொடங்கினார்கள்.

ஒளிவீசும் உடையொன்றின் இரு முனைகளும் அவர்களை இணைத்தன; இறக்கைகள் முளைத்தன. சந்திரலோகத்தை நோக்கி இருவரும் பறக்க ஆரம்பித்தார்கள். கீழே உலகத்தின் நிழல் படிந்திருப்பதைக் கண்டார்கள். வானம் உயர்ந்து விளங்கியது. தாரா மண்டலம் அருகில் நெருங்கியது. அவர்களுக்கு எதிரே மல்லராஜாவின் தாயாதி ஸாமந்தராஜாவின் உருவம் தோன்றியது. ''சரஸ்வதிசந்திரா, எனது ராஜபக்தியின் காரணமாக இதுவரை என்னால் வரமுடிந்தது. சித்தநகரில் நுழைய அதிகாரம் கிடைக்கவில்லை. ஆனால் ஓர் உதவி செய்ய வேண்டும். இதோ என்னுடைய கிளியை உங்களுடன் வர அநுமதி தாருங்கள்; அது உடன் வரும். என்னுடைய விருப்பங்கள் யாவற்றையும் அது அறியும்.''

''ஓ, நிச்சயமாக. இப்போது நாங்கள் எங்கே இருக்கிறோம் என்பதைச் சொல்லுங்கள்.''

''இதோ இந்த இடத்தில் காற்று வீசுவதில்லை. இன்னும் சிறிது உயரம் போனீர்கள் என்றால், சூரியனுக்கு அருகில் செல்வீர்கள். பூமியில் வாழும் மனிதர்களின் தலைவிதிகளை நிர்ணயிக்கும் கயிறுகளையும் பார்க்கலாம்; நமது தேசத்தின் தலைவிதியை இழுக்கும் கயிற்றையும் காணலாம்'' என்று கூறி உருவம் மறைந்தது. உடனே பெரியதோர் மேகம் போன்று பலூன் விமானம் ஒன்று காட்சியளித்தது. அந்த விமானத்திலிருந்து தங்கம் முதலிய உலோகங்களால் ஆன கயிறுகள் தொங்கின. ஒரு கயிறு உலகத்தை இழுத்துக்கொண்டிருந்தது. விமானத்தினுள்ளே ஆசனம் ஒன்றில் வில்லேந்திய உருவம் ஒன்று இருந்தது.

''குமுதா, மல்லராஜா அர்ஜுனன் பெயரில் அமைத்த மண்டபத்தைப் பார்த்திருக்கிறோம் அல்லவா? அதே அர்ஜுனனை இங்கே காண்கிறோம்.''

''வில் ஏந்தியவர்களின் காலந்தான் மலையேறிவிட்டதே!''

''நம்முடைய தேசத்தில் அப்படி இருக்கலாம். ஆனால் சூரிய சந்திரர்கள் இருக்கும்வரை அர்ஜுனன் உலகத்தைச் சுற்றி வலம் வருகிறான்.''

''இதோ இங்கே என்ன பிரதேசம் இருக்கிறது!''

''அதுதான் பூமத்திய சமுத்திரத்திற்கு அருகேயுள்ள கிரிராஜ மலையாகும். அதனது மேற்குப்புறத்தில் அர்ஜுனனின் ரதம் செல்லுகிறது.''

''மேற்குப் பாகத்தில் வசிப்பவர் யார்?''

''நீ இப்போது பார்க்கிறாயே, அந்த மேற்குப் பாகத்திற்கும் மேற்குப் பாகத்தில் வானரர்கள்[1] வசிக்கிறார்கள். அவர்கள் ரதத்தின் தங்கக் கயிறுகளை இழுக்கிறார்கள். அதற்குக் கீழே இழுக்கும் பட்சி பகலில் கருட பட்சியாகவும் இரவில் சகோரப்[2] பட்சியாகவும் காட்சியளிக்கிறது. மூன்றாவது பக்கத்திலிருந்து யானை[3] இழுக்கிறது. தென்புறத்திலிருந்து மயில்[4] பிடித்து இழுக்கிறது.''

ஸாமந்தரின் கிளி பறந்து பாடத் தொடங்கியது.

சரஸ்வதிசந்திரன் சொன்னான்: ''நம்முடைய தேசத்தின் தேசபக்தர்களான சுதேச மன்னர்களின் அபிலாஷைகளின் சூட்சும ரூபந்தான் இந்தக் கிளி; இரவு பகல் தேச நலனுக்காகப் பாடு படுகிறது.''

மயூரமும் சகோரமும் கிளியின் கவலையைப் போக்க முயன்றன. சகோரப் பறவை சொல்லிற்று: ''கிளியே, குரங்குகளைக் கண்டு பயப்படாதே! ஒளிமயமான எதிர்காலம் நிச்சயம் வரத்தான் போகிறது. தற்கால யுத்தச் சூழ்நிலையைக் கண்டு பயப்படாதே. பிரசவ வேதனைக்குப் பிறகுதான் புதிய யுகம் பிறக்கும். பிறக்கப் போகும் புதிய யுகத்தில் எல்லோருக்கும் நம்பிக்கை இருக்கிறது. நீ ஏதாவது சந்தேகம் கொண்டால், உன்னுடைய தேசத்து அமரர்களிடம் வழி கேள்; ஆன்ம சோதனையை விட்டுப் பிற நாட்டவரிடம் வழி தேடாதே!''

---

1. ஆங்கிலேயர்கள்.
2. பிரான்ஸ் தேசத்தைக் குறிக்கிறது.
3. ஜெர்மனி தேசத்தைக் குறிக்கிறது.
4. ரோமன் நாட்டைக் குறிக்கிறது.

கிளி பதில் சொல்லவில்லை. சரஸ்வதிசந்திரனும் குமுதசுந்தரியும் தங்கக்கயிற்றை நோக்கிப் பறந்துசென்றார்கள். கீழே தோன்றிய மகாசாகரம் உலகத்திலுள்ள எல்லாக் கடல் நீராலும் நிறைந்து காணப்பட்டது.

''இதோ இந்த மகாசாகரத்தின்மேல் குரங்குகளின் கூட்டமாக இருக்கிறது. வாயுவையும் அக்கினியையும் வசப்படுத்துகிறதே இந்தக் கூட்டம்!'' என்றாள் குமுதசுந்தரி.

''வருணன், வாயு, அக்கினி, இந்திரன் ஆகியவர்கள் அர்ஜுனனுக்கு உதவுபவர்கள். அர்ஜுனன் அவர்களுடைய தேசத்தில் ரதத்தைச் செலுத்துகிறான். நம் தேசத்தவர்கள் உறங்குகிறார்கள். அவர்களிடத்தில் கலியுகம் நடக்கிறது. ஆனால் வானரர்களோ நடமாடுகிறார்கள். ஆகவே, அர்ஜுனன் அவர்களிடம் பட்சபாதம் பாராட்டுகிறான். 'இந்திர இச்சரத: ஸர்க்கா' என்பது வசனம்.''

''அந்த யானையும் கரடியும் யாரைக் குறிப்பவை?''

''கரடி ருஷிய மக்களைக் குறிக்கிறது. வானரர்களிடையே பாஞ்சாலியின் ராஜ்யம் இருக்கிறது. கரடி, யானைகளிடையே துரியோதனனின் ராஜ்யம் இருக்கிறது. ரதத்தின் கயிறுகளைப் பற்றுவதற்காகத் துரியோதனன் முயல்கிறான். எங்கே பாஞ்சாலி சுகித்திருக்கவில்லையோ அங்கே அர்ஜுனன் ரதம் மிகவும் மெல்லச் செல்கிறது.''

வானரர்களிடம் சரஸ்வதிசந்திரன் கேட்டான்: ''உங்களிடம் இரண்டு பிரிவுகள் இருக்கின்றனபோல தோன்றுகிறதே, ஏன்?''

''உங்கள் தேசத்தில் வாலி சுக்கிரீவர்கள் இருப்பதுபோல எங்கள் தேசத்திலேயும் உண்டு. இருவரும் பாஞ்சாலிக்குச் சேவை புரிகிறார்கள். சுக்கிரீவ கோஷ்டியார் சநாதன தர்மத்தைப் போற்றுகிறார்கள். வாலியின் பிரிவினர் காலத்திற்கேற்றவாறு எவ்வளவுக்கு அநுகூலமோ அவ்வளவுக்குச் சநாதன தர்மத்தைப் பின்பற்றுகிறார்கள். நான் வாலியின் பிரிவைச் சேர்ந்தவன்.''

''வாலியின் கொள்கையைப் பின்பற்றுபவர்கள் இருக்கிறார்களா?'' என்றது கிளி.

''எங்களுடைய குறிக்கோள் பாஞ்சாலியின் நலன்தான். உங்கள் தேசத்தில் பாண்டவர்கள் பாஞ்சாலிக்குச் சேவை புரிந்தார்கள். சுக்கிரீவப் பிரிவினர் பாஞ்சாலிக்குப் பணி புரிந்தாலும் மனிதகுலத்தையே பாஞ்சாலியாகக் கருதுகிறார்கள்.''

அப்போது வயது நிரம்பிய வானரம் ஒன்று கிளியிடம் கூறியது:

''இதோ உனக்காக ஏறி வந்திருக்கிறேன். சுக்கிரீவப் பிரிவினைச் சேர்ந்தவன் நான்.''

''எல்லோரும் கொள்ளைக்காரர்கள். எங்களைப்போன்ற எவ்வளவு சுதேசி மன்னர்களிடம் வாக்குத் தந்து காப்பாற்றத் தவறியிருக்கிறீர்கள்! கையெழுத்திட்டு ஒப்பந்தத்தைத் தூள் தூளாக்கியிருக்கிறீர்கள்! எங்கள் மக்களுக்கு நம்பிக்கை தந்து உடைத்தெறிந்திருக்கிறீர்கள்! எவ்வளவு பிரதிக்ஞைகள் தந்து ஒன்றையும் காப்பாற்ற முடியாமல் கைவிட்டிருக்கிறீர்கள், தெரியுமா?'' என்று படபடத்தது கிளி.

''உன் நெஞ்சத்தில் ஆழ்ந்த துக்கம் இருப்பதனுல்தான் அது இப்படி உன்னைப் படபடக்க வைக்கிறது. மனிதர்களின் வாழ்வில் சில சமயம் கஷ்டதசை வந்து வார்த்தை மீற நேருகிறது; பிரதிக்ஞைகளைக் காப்பாற்ற முடியாமல் போகிறது. சத்தியமும், வாக்குக் கொடுப்பதும் இரண்டு வெவ்வேறு விதமான பொருள்கள். உன்னுடைய அமரர்கள் இதை எடுத்துச் சொல்லுவார்கள். இந்த அர்ஜுனன் தர்மத்தின் சேவகன்; தர்மம் கண்ணபிரானின் சேவகன்'' என்றது வயது முதிர்ந்த வானரம்.

''யார் உங்கள் தர்மத்தைப் பாலிக்கும் அர்ஜுனன்?'' என்றது கிளி.

''உங்கள் அர்ஜுனன், எங்கள் அர்ஜுனன் என்பவன் வேறு வேறில்லை. பிரயாணம் செய்கிற அர்ஜுனன் உங்கள் தேசத்திலிருந்து எங்கள் தேசத்தில் வந்திருக்கிருன். மயிலும் சகோரமும் வாலியும் கூறியதெல்லாம் உண்மை. நான் சொல்வதும் சத்தியம். நாங்கள் காத்து வருகிற தர்மம் உங்கள் தேசத்திலும் அநுசரிக்கப் படும்போது ரதத்தின் கொடிமேல் நீ உட்கார்ந்துகொள்வாய். அந்தத் தர்மம் உங்கள் தேசத்தில் வழங்காமற் போனுல் அர்ஜுனன் கிளறிவிட்ட எரிமலைத் தீயில் வீழ்ந்து நீ வெந்து போவாய். அப்புறம் என்மீது குற்றம் சொல்லாதே!'' என்றது வயது முதிர்த்த வானரம்.

வானரம் கீழே இறங்கிச் சென்றது. சரஸ்வதிசந்திரன் கிளியின் காதில் படுவது போல் குமுதசுந்தரியிடம் சொன்னுன்.

''பிரிய குமுதா, கவலைப்படாதே! பகவான் நமது தேசத்தின்மீது கருணைகொள்வார். பாண்டுராஜா ஐந்து புத்திரர்களை வேண்டினுர். தர்மபுத்திரரோ தர்மம் வேண்டினுர். அதே தர்மத்தைக் காத்தான் அர்ஜுனன். நம்முடைய தேசம் தரித்திரம் பிடித்த தேசந்தான்; இன்னல்களும் துயரமும் மிக்க தேசந்தான். ஆனுலும் நம்பிக்கையின் சின்னம் தோன்றுவதைப் பார்!''

''எனக்கு ஏதும் நம்பிக்கை இல்லை. தர்மம் முதலில் பிறக்க வேண்டும். பிறகுதான் அர்ஜுனன் தோன்றுவான். அதற்குள் எரிமலையின் கனலில் நாம் எல்லோரும் வெந்து மடிவோம். செத்த பிறகு நம்பிக்கை இருந்து என்ன பயன்?'' என்றாள் குமுதசுந்தரி.

''எதற்காக நீ பயப்பட வேண்டும், குமுதசுந்தரி? நீ பார்த்த அந்த மயிலைவிட எவ்வளவோ அழகாக நமது நாடு தோகை விரித்தாடியிருக்கிறது. மூர்ச்சையடைந்த பாஞ்சாலி எப்படி அறிவாள்? எல்லாம் கனவாகிவிட்டது. நம் சரஸ்வதி நதியின் நீர் எரிமலையின் கனலை அணைத்துவிடும். எல்லோரும் அமைதியில் ஆழ்ந்து போவார்கள். நம்முடைய தேசத்தின் அமரத்துவம் வாய்ந்த குருக்ஷேத்திரத்துக்கு மீண்டும் செல்லுவோம்.''

கனவில் இருவரும் குருக்ஷேத்திரம் அடைந்தார்கள். ''குமுதா! அதோ பார்க்கிறாயா, குருக்ஷேத்திரம்! அங்கிருந்து கம்பீரமான குரல் எழுகிறதே, அதுதான் பகவான் பரசுராமரின் குரல். இராமாவதாரத்தில் இராமபிரான் அவரை வென்றார். அதிலிருந்து உலகத்தைத் துறந்து தேசத்தின் சிகரத்தின்மேல் மேகமென உலவி வருகிறார். ஒவ்வோர் இரவிலும் குருக்ஷேத்திரத்துக்கு வந்து தேசத்தைப்பற்றிச் சிந்தித்து வருகிறார்.''

''குருக்ஷேத்திரத்தின்மீது அவருக்கு ஏன் அவ்வளவு பற்றுதல்?''

''இப்போது நாம் பானிபட்டு என்றழைக்கிறோமே, அது புராதன காலத்தில் குருக்ஷேத்திரமென வழங்கப்பட்டு வந்தது. பதினெட்டு நாட்கள் பாண்டவரும் கௌரவரும் மாபெரும் போரிட்ட இடம் இதுதான். இரண்டாவது தடவையாக, பாபர் பாதுஷா வந்து இப்ராஹிம் லோடியை முறியடித்ததும் இங்கேதான். அக்பர் பாதுஷாவின் பஹேராம்கான் ஹேமுவை தோற்கடித்ததும் இவ்விடத்தில்தான். க்ஷத்திரியர்கள் மடிந்தது இங்கேதான். ஆகவேதான் பரசுராமர் இந்த இடத்தின்மீது அதிகப் பற்று வைத்திருக்கிறார்.''

''வேறு எங்கேயெல்லாம் இந்தச் சாராம்சத்தைக் காண்கிறோம்?''

''பிதாமகபுரத்துக்குக் கீழே கங்கைவெளி இருக்கிறது. அங்கேயிருந்து சற்றே தூரத்தில் பீஷ்மபிதாமகர் இதுநாள்வரை வசித்து வந்தார். நடுவே தூமகேதுபோல் தோன்றுகிறதே அங்கேதான் இன்னுமோர் அமரன்-பித்தம் பிடித்த அசுவத்தாமன் - வசித்து வந்தான். இமயத்திலிருந்து கன்னியாகுமரி வரை

ஓட்டமாக ஓடிவருகிறுன். சில நாள் புத்திசாலியாகவும், சில நாள் பைத்தியக்காரனுகவும் தோன்றுகிறுன்.''

''முதலில் பீஷ்மரிடம் செல்வோம்'' என்று இருவரும் கிளம்பிஞர்கள். கங்கையின் தோற்றுவாய்க்குச் சென்ருர்கள். கங்கை நதி சின்னஞ்சிறிய வடிவம் பூண்டு சின்னஞ்சிறிய துளையிலின்றும் எழுந்து ஓடிக்கொண்டிருந்தாள். சரஸ்வதி சந்திரன் பாறைகளை அகற்றினுன். பெரியதோர் குண்டம் தோன்றியது. ரகசிய கங்கை தோன்றிஞள். ஆதிசேஷ நாகம் பீஷ்மரின் உடலைச் சுற்றிப் படுத்துக்கொண்டிருந்தது. அவருடைய உடலில் எண்ணற்ற துளைகள்; யுகம் யுகங்களுக்கு முன்னர் அர்ஜுனனின் அம்புகள் தைத்த காயங்களின் துளைகள் அவை. சரீரம் காய்ந்து போயிருந்தாலும் அவரது வாயி வழியே கங்கை பாய்ந்துகொண்டிருந்ததால் அமிர்தமயமாக இருந்தது உடல். நாகம் மின்னியது.

''பாண்டவர்கள் தேசத்தைத் துறந்து சென்றதிலிருந்து பீஷ்மர் இங்கேயே இருக்கிறுர். நீங்கள் கண்டீர்களே, அந்த நாகங்களின் ஆதி நாகம் நான். அவை புராதன சம்பிரதாயங்களைக் காத்து வருவதுபோல நானும் பீஷ்மரைக் காத்து வருகிறேன்.''

''பீஷ்மரை நீங்கள் எப்படிக் காத்து வருகிறீர்கள்!'' என்று கேட்டான் சரஸ்வதிசந்திரன்.

''சிறிது தூரத்தில் அசுவத்தாமனைப் பாருங்கள். கண்ண பிரானின் சாபத்தால் அந்த அந்தணன் உன்மத்த தசையில் அல்லலுறுகிறுன்.''

''வேண்டியதுதான். அந்தணரின் புத்தியே தேசத்திலிருந்து பாண்டவர்களை விரட்டியது'' என்றது கிளி.

''நானும் ஓர் அந்தணன்தான். உனது வெறுப்பு அசுவத்தாமன் செய்த புண்ணிய பாவச் செயல்களால்தான் எழுந்திருக்கிறது. பீஷ்மரின் காலத்தில் அந்தணர்களும் க்ஷத்திரியர்களும் பரஸ்பரம் ஒத்துழைத்து யக்ஞத் தீ வளர்த்தார்கள். இந்த அம்புப் படுக்கையில் பீஷ்மர் வீழ்ந்தவுடன்தான் அசுவத்தாமன் அந்த மண்புற்றுக்களைச் சமைத்தான். கிளியே, இதோ உன்மீது தூய கங்கா ஜலத்தைத் தெளிக்கிறேன். உன்னுடைய பந்தமெல்லாம் அகன்றுவிடும்'' என்றது நாகம்.

''அப்படியாஞல் நீங்கள் அசுவத்தாமன்மீது ஏன் நீர் தெளித்து அவனைக் கடைத்தேற்றக் கூடாது?''

''நீரைக் கண்டமாத்திரத்திலே மாற்றம் ஏற்படுவது உண்மை. அசுவத்தாமன் விஷயத்திலும் அப்படியே கங்கையைக் கண்டதுமே அவன் அமரத்துவம் அடைகின்றுன். இந்தக் குருக்ஷேத்

திரத்தில் சில சமயம் அசுவத்தாமன் அந்தணனாகவும், சில சமயம் முஸ்லிமாகவும் காலங் கழிக்கிறான். பாக்கி வேளையில் நீங்கள் பார்த்த மண்புற்றுக்களைச் சமைக்கிறான். மனிதரின் மனத்தைப் பெரும் அளவுக்குக் கலைத்துவிடுகிறான். க்ஷத்திரியர்கள் தமது தர்மத்தை மறந்துவிடுவதும், அந்தணர் தம் குலப்பெருமையை அழித்துவிடுவதும், வணிகர்கள் கொள்ளை லாபத்தில் ஈடுபட்டுப் பொய்யான கணக்கு எழுதுவதும், மற்றவர் பிச்சை எடுப்பதும் ஆகிய எல்லாம் இவனுடைய தீய செயல்களே. பால்ய விவாகமும், பலவான்கள் தமது பலத்தைத் தீய வழியில் செலவழிப்பதும், கல்விமான்கள் பேராசைப்படுவதும் ஆகிய எல்லாம் அசுவத்தாமனின் கொடுமைகளே. பிதாமகரின் பெரும் படைப்பு எங்கே, அசுவத்தாமனின் மண்புற்றுக்கள் எங்கே; பீஷ்மரின் அநுபவம் எங்கே, அசுவத்தாமனின் கொடும்படைப்பான குருட்டு ஜந்துக்களும் அவர்களின் பரிதாபமான வாழ்வும் எங்கே!''

''மண்புற்றுக்களை நாம் உடைத்துவிட்டால் என்ன ஆகும்?'' என்று கேட்டது கிளி.

''எண்ணற்ற ஜந்துக்கள் திரண்டிருக்கும் இடம் மண் புற்றுக்கள். அவைகளை உடைப்பது சிவசக்தியின் லீலையாகும். மனிதர்கள் தமது சக்தியை உபயோகித்தால் விபரீத முடிவே நேரும்; அவைகளின் வாழ்வில் கிலேசந்தான் எழும். மண் புற்றுக்களைக் குரங்குகள் மெதுவாகத் தாக்கிவருகின்றன; இன்னொரு புறம் அசுவத்தாமனின் வாழ்வுக் காலம் முடிவடையப் போகிறது. அப்படி முடிவடைந்தால் மண்புற்றுக்களின் எதிர் காலம் நல்லதாகவே இருக்கும்'' என்றது நாகம்.

''இன்றைய அவல நிலைக்குக் காரணம் இந்த அந்தணன் தானா?''

''இல்லை, இல்லை. அசுவத்தாமன் தனது முந்தைய பிறப்பில் அசுரனாக இருந்தான். தூய்மையான அந்தணர்கள் நாககுலத்தைச் சேர்ந்தவர்கள். நாங்கள் எல்லா உயிரிலும் ஒரே ஆன்மாவைக் கண்டுவருகிறோம் - அன்னை தனது குழந்தையை அதன் இளமைப் பருவத்தில் சர்வ ஜாக்கிரதையுடன் ரட்சிப்பதுபோல.''

''தங்களுடைய நிலைக்கும் பீஷ்மரின் நிலைக்கும் என்ன வேற்றுமை?''

''பீஷ்மரின் உடல் பிரம்மசரியத்தில் புடம்போட்ட தூய உடலாகும். சுவர்க்கத்திலிருந்து உதயமாகும் கங்கையிலிருந்து அவர் பிறந்தார். கங்கையின் புனிதமான பிரவாகத்தால் அவர் வாழ்வு நிறைந்திருக்கிறது. எல்லாச் சாஸ்திரங்களின் நதி ஓட்டமும் அவரது வாழ்வில் சலசலத்து ஓடுகிறது. நாங்கள் இந்த நதிகளைப் போன்றவர்கள். கங்கையின் குமாரரோ கடலைப்

போன்றவர். கடலிலிருந்து மேகம் பிறக்கிறது. சாதாரண பூதங்களுக்காக நதிகள் இருக்கின்றன. ஆனால் எல்லாக் கிணறுகளிலும் தடாகங்களிலும், ஏரிகளிலும், நதிகளின் மூலத்திலும் ரகசிய கங்கை அலை பாய்கிறாள்.

''அசுவத்தாமனின் வாழ்வு முடிவடைந்தபின் அர்ஜுனன் தனது காண்டிவத்துடன் மீண்டும் தேசத்தில் வருவான்; வில்லின் நாதம் எழுந்தவுடன் பீஷ்மரின் காயங்களில் துளைத்துத் தொங்கிக்கொண் டிருக்கும் அம்புகள் தாமாகவே அகலும்; மண்புற்றுக்களின்மீது அவை வீழ்ந்து அவற்றை அழிக்கும். மண் புற்றுக்கள் இருக்கும் இடத்தில் புதிய சிருஷ்டிகள் உருவாகும். பீஷ்மரின் உடல் மீண்டும் இந்தத் தேசத்தில் புதிய இளமையுடன் உயிர் பெற்று எழும். நம்பிக்கைக்கான வித்து இதோ இந்தக் குருக்ஷேத்திரத்தில் இருக்கிறது.'' இப்படி நாகம் சொல்லி முடித்தவுடன் இருவருடைய இறக்கைகளும் கங்கையில் குளித்தெழுந்தன.

மீண்டும் மைதானத்தில் பூமியின்மேல் வந்தார்கள். அசுவத்தாமன் பைத்தியக்காரன்போல் புலம்பியவண்ணம் எதிரே வந்தான்.

''சிரஞ்சீவி, நாங்கள் கங்காஸ்நானம் செய்துவிட்டு வந்திருக்கிறோம்'' என்றான் சரஸ்வதிசந்திரன்.

''அப்படியா, இதோ பாருங்கள் என் படைப்பை! இதில் ஏதாவது புத்திசாலித்தனமாக இருந்தால் என் மனம் பைத்தியமாகும். ஏதாவது பைத்தியக்காரத்தனமாகத் தோன்றினால் என் மனம் நிதானம் அடையும். என்னுடைய படைப்புக்கும் பிரம்மாவின் படைப்புக்கும் வித்தியாசம் இருக்கிறது. பிரம்மா, விஷ்ணு, ருத்திரர் மூவரும் சேர்ந்தே இயங்குகிறார்கள். நானோ தனித்தியங்குகிறேன். இதோ பாருங்கள், என் பராக்கிரமத்தை!'' என்று அசுவத்தாமன் மண்புற்றுக்களின் கீழே மறைந்துபோனான். எல்லா இடங்களிலும் இறைவனின் - பரஞ்சோதியின் - ஒளி சுடர்விட்டது. அசுவத்தாமன் மண்புற்றுக்களில் புகுந்து சூறையாடினான். எல்லாம் அவலநிலை அடைந்து அலங்கோலமாகக் காட்சியளித்தன.

எல்லாவற்றுக்கும் இடையே அசுவத்தாமன் கர்ஜிக்கத் தொடங்கினான். ஜந்துக்கள் யாவும் மீன்களைப்போல தத்தளித்தன. சிறிது நேரத்தில் யாத்திரிகர்களும், ஆரியர்களும், மன்னர்களும், அரசிகளும், அந்தணர்களும், பிச்சைக்காரர்களும் பெண்களும், குழந்தைகளும் சிதறி ஓடினார்கள். அவர்களைச் சுற்றியும் தொடர்ந்தும் ஓடிக்கொண் டிருந்த பெரியதோர் சக்கரமொன்றில் அசுவத்தாமன் வயது நிறைந்த அந்தணர்

ஒருவரின் வேடம் தாங்கி அமர்ந்துகொண்டிருந்தான். அந்த அலங்கோலக் கும்பலின்மேல் பெரியதோர் பலகை மேகம்போல் மிதந்து வந்தது. அதன்மேல் பாஞ்சாலியின் பலவீனமான உடல் மூர்ச்சையுற்றுச் சாய்ந்து கிடந்தது; கண்களிலிருந்து நீர் ஆறுகப் பெருகி மக்கள்மேல் விழுந்துகொண்டிருந்தது. ஆனால் பேதை ஜனங்கள் அதை மேகத்திலிருந்து பொழியும் தூய நீரெனக் கருதிக் குடித்துக்கொண் டிருந்தார்கள். வானரம் ஒன்று பாஞ்சாலியின் உடலின்மீது சாமரம் வீசிக்கொண் டிருந்தது; அதே சமயம் பாஞ்சாலியின் ஒரு நகிலை உறிஞ்சிக் கொண்டிருந்தது. இன்னொரு பக்கம் வயது முதிர்ந்த அந்தணன் இன்னொரு நகலை உறிஞ்சிக்கொண் டிருந்தான். பலகையின் மேல்பக்கம் இரக்கமே உருவான குந்தி அமர்ந்திருந்தாள். தலைமயிர் எல்லாம் நரைத்துப்போய்த் துக்கத்தால் மெலிந்திருந் தாள் அவள்; முலையை உறிஞ்சிக்கொண்டிருந்த வயோதிக அந்தணன்மீது வெறுப்பு நிறைந்த பார்வையுடன் எல்லா வற்றையும் பார்த்துக்கொண் டிருந்தாள். நடுநடுவே தன் மெலிந்த சக்தியால் அவனை விலக்க முயன்றாள்; ஆனால் அவள் பலன் ஏதும் காணவில்லை.

குமுதசுந்தரியால் இவை எவற்றையும் காணச் சகிக்கவில்லை. பாஞ்சாலியின் பாதங்களுக்கு முன்னால் அமர்ந்திருந்த வானரத்தி னிடம் குமுதசுந்தரி தீனமான குரலில் வேண்டினாள்: ''பாஞ் சாலி மாதாவுக்குத் தரும் தொல்லையை நீங்கள் தவிர்க்கக் கூடாதா?''

''பெண்ணே! நான் அர்ஜுனனது கொடியின் காப்போன். எங்களால் முடிந்த அளவுக்கு அண்ணையை ரட்சித்து வரு கிறோம். ஆனால் பழங்களும் கிழங்குகளும் கிடைக்காத இந்த இடத்தில் நாங்களும் வாழவேண்டுமல்லவா? ஆகவேதான் மாதா வின் முலைப்பாலைக் குடிக்கிறோம்.''

''இருந்தாலும், மட்டுமரியாதை வைத்தால் நல்ல தல்லவா?''

''நான் வாயுபுத்திரன்; அர்ஜுனனின் பிரிய மனைவியின் பக்தனுங்கூட. ஆனால் எங்களிடம் பெருகுகிற ஜாடராக்கினி எங்கள் பசியைத் தூண்டிவிடுகிறதே; என்ன செய்வோம்? இது ஆறாத பசியாயிற்றே!''

''சிரஞ்சீவி, உங்கள் தேசத்து வானரங்கள் இவ்வாறு பாலைக் குடித்தால் எங்கள் தேசத்துக் குழந்தைகள் உயிர் வாழ வேண்டாமா? அவர்கள் பசியால் மடிகிறார்களே, தெரியுமா?''

''அது உண்மை. ஆனால் எப்போதெப்போதெல்லாம் பாண்டவர்கள் மீண்டும் தேசத்தில் வருகிறார்களோ அப்போது

அப்போதெல்லாம் வாலியின் பிரிவினர் இந்த இடத்தை விட்டு அகலுவார்கள். மீண்டும் கணவரின் சேர்க்கையால் அவளுடைய உடல் ஆரோக்கியம் பெறும்.''

பாஞ்சாலியின் அந்தப் பலகையிலிருந்து எல்லோரும் கீழே இறங்கினார்கள். உடனே பலகையிலிருந்து கீழே பூமிவரை வலைகளின் உள்ளே அகப்பட்டுச் சிக்கியதோர் பிரம்மாண்டமான ஹநுமானின் உருவம் எழுந்தது. அந்த வலைகளின் கம்பிகள் சமுத்திரம்வரை சென்று பலகையைச் சேர்த்து இழுத்துக் கொண்டிருந்தன. சமுத்திரத்து அலைகளின் மேலே ஓடங்களும் படகுகளும் பெரிய கப்பல்களும் மிதந்து வந்துகொண்டிருந்தன. அவற்றின் தளத்திலே பஞ்சும் பருத்தியும், தேச விதேசப் பொருள்களும் காணப்பட்டன. சமுத்திரக் கரையிலே வானரர்கள் தோட்டங்கள் அமைத்திருந்தார்கள். அவற்றில் மலர்களும், பழவகைகளும், மரங்களும் காணப்பட்டன. ஸம்ஸ்க்ருத அறிவும் ஆங்கில ஞானமும் சூழ்நிலையில் மணம் பரப்பின; அந்த மணம் பாஞ்சாலி படுத்திருந்த பலகை வரை சூழ்ந்தது. வேதத்தின் பொருளும், புராண இதிகாசங்களின் பெருமையும் வானரங்களின் வழியாக மேலைக் காற்றின் அலைகளிலே மிதக்கும் காசி பண்டிதர்களின் காதில் விழ ஆரம்பித்தன. அந்தத் தோட்டத்திலும், அது பரப்பும் சுகந்தத்திலும், கடலலைகளின் பேரோசையிலும், வலைகளின் கம்பிகள் நடுவிலும், இந்தத் தேசத்தின் மாபெரும் பரப்பிலுள்ள மனிதர்கள் வானரர்களால் கவரப்பட்டார்கள். கலைகள் கற்றார்கள்; பொருள் குவிக்கும் வழியை அறியத் தலைப்பட்டார்கள். அரசாங்க அலுவல்கள்பற்றி அறிந்துகொண்டார்கள்.

சரஸ்வதிசந்திரனும் குமுதசுந்தரியும் இந்த அழகிய சித்திரத்தைக் கண்டு வியப்படைந்து போனார்கள்; அசுவத்தாமன் எழுப்பிய துயரத்தை மறந்து போனார்கள்.

ஹநுமான் உற்சாகத்துடன் சொன்னார்:

''இந்தத் தேசமாகிய பாஞ்சாலியின் மகிழ்ச்சிக்காகவும், இந்தப் புராதன கலாசாரம் மிக்க மக்களின் நலனுக்காகவும் இந்த மகாயக்ஞத்தை வானரர்கள் நடத்துகிறார்கள்.'

அதைக் கேட்டுக் கிளி சொன்னது.

''அழகான சித்திரம் தீட்டியிருக்கிறீர்கள்; ஆனால் அரைகுறையான சித்திரம். சித்திரத்தின் வண்ணங்கள் நீரிலும் காற்றிலும் அழிந்து போகின்றனவே!''

ஹநுமான் பதில் சொல்லவில்லை. ஆனால் மேற்குப் புறத்தின் இருளிலிருந்து கடுங்குரல் ஒன்று எதிரொலித்தது:

''நாங்கள் அமரர்கள். எல்லா மகாசாகரங்களிலும் நாங்கள் - வானரர்கள் - கர்ஜித்துக்கொண் டிருக்கிறோம். அர்ஜுனனின் ரதம் செல்லுகிறது. அர்ஜுனன் வானர உலகத்தைச் சேர்ந்தவன். ஆனால் வானரர்கள் அர்ஜுனனைச் சேர்ந்தவர்களல்லர். உன்னைப் போன்ற பறவைகளை அழித்திருக்கிறோம் நாங்கள்.''

ஹநுமானைப் பார்த்துக் கிளி கூறியது:

''இதோ, கேளுங்கள்.''

''உங்களிடம் அசுவத்தாமன் இருப்பதுபோல் துரியோதனன் போன்ற குரங்குகளும் எங்களிடம் இருக்கிறார்கள்; பயனற்ற கர்ஜனை இது'' என்றார் ஹநுமான்.

''பயனற்றதுதான்; ஆனால் எங்கள் காதில் இது நாராசமாக விழுகிறது. எங்கள் இரத்தமெல்லாம் கொதிக்கிறது'' என்றது கிளி.

துரியோதனன் வந்து சொன்னான்.

''பாண்டவர்கள் உலகநலனுக்கு உழைக்கலாம்; ஆனால் உலகத்தை ஆள்வோர் நாங்களே! அர்ஜுனனை நம்பியிருக்கும் மாந்தர்களே, உங்களிடத்தில் ஆயுதமோ, அஸ்திரமோ கிடையாது. பலவீனர்கள் சக்தி வாய்ந்தவர்களுக்கு அடிமையாகிப் பணிபுரிவதுதான் முறையாகும்.''

''துரியோதனனே, கவனமாகப் பேசு. மீண்டும் குருக்ஷேத்திரத்தில் இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறாய்; இன்னும் ஒருமுறை பாஞ்சாலியின் மானபங்கம் நடைபெறுகிறது'' என்றது கிளி.

''துரியோதனா, குருக்ஷேத்திரத்தின் மண் மீண்டும் கிளறப்படும்போது கொட்டப்படும் ரத்தம் உனதாகத்தான் இருக்கும் என்று சொல்லுகிறேன்'' என்றார் ஹநுமான்.

''துரியோதனனுக்கும் வாலிக்கும் என்ன வேற்றுமை?'' என்று கேட்டது கிளி.

''துரியோதனனிடத்தில் அகங்காரமும், மமதையும் மிருக உணர்ச்சியும் இருக்கின்றன. வாலியிடம் அகந்தையும் மமதையும் உள்ளன. கர்ணனிடம் மமதை இல்லை; ஆனால் அகந்தை உண்டு. பாண்டவர்களிடம் இந்த மூன்று துர்க்குணங்களில் எதுவுமே இல்லை'' என்றார் ஹநுமான்.

''குதிரைப் பந்தயத்தில் லட்சியத்தை நோக்கிக் குதிரைகள் ஓடுகின்றன. அவற்றிடம் அகந்தை இல்லாது போனால் பந்தயம் நின்றுவிடும்'' என்றான் துரியோதனன்.

''அகந்தைக்குச் சப்பை கட்டுகிற துரியோதனா! உன்னுடைய தாரை வாலி, சுக்கிரீவன் இருவரில் எவன் வெற்றி காண்கிறானோ அவனை மணக்கிறாள். ஆனால் பாஞ்சாலியோ தர்மத்தையும் அதன் சுற்றத்தையும் சௌபாக்கியத்துடன் மணக்கிறாள். எகிப்தும், கிரேக்க தேசமும், பாபிலோனும், பைஸன்டைனும் ஒளிவீசி மறைந்து போயின. ஆனால் எல்லாவற்றுக்கும் முன்னால் பிறந்து இன்னும் பூரண ஆயுளுடன் அவள் உயிர் வாழ்கிறாள். இறைவனின் இச்சை அது; அதற்கும் காரணம் அவருக்குத்தான் தெரியும்'' என்றார் ஹநுமான்.

வானில் இன்னும் ஓர் ஒளி எழுந்தது. குந்தி பேசினாள்: பாஞ்சாலிக்கு அவள் தைரியமூட்டினாள். பின்பு சகதேவனும் நகுலனும், பீமனும், அர்ஜுனனும், தர்மபுத்திரரும் பாஞ்சாலிக்கு அருகில் வந்து ஆறுதல் சொன்னார்கள். அர்ஜுனன் சொன்னான்: ''பாஞ்சாலி! என்னை அடைவதற்காகக் கலியுக வடிவத்தில் உன் மக்கள் உறங்கிக்கொண் டிருக்கிறார்கள். அவர்களுக்கு விழிப்புத் தந்து உயிர் மூட்டிவிடு. அந்த நாள்வரை நீ தைரியத்துடன் இரு. உன்னுடைய சுயம்வரத்தில் நீ பெற்ற கணவன் விரைந்தோடி வருவான்.''

தர்மபுத்திரர் சொன்னார்: ''பாஞ்சாலி! நான்கு சகோதரர்களும் இங்கே வருவதற்கான ஆதாரம் என்னிடத்தில்தான் இருக்கிறது. நம் இருவரிடையே உள்ள அன்பும் இந்தத் தர்மத்தின் அடிப்படையில்தான். இந்த அறத்தின் அடிப்படை குன்றியதால்தான் உன்னையும் நான்கு சகோதரர்களையும் இமயத்தில் விட்டுவிட்டு நான் முன்னே சென்றேன். உன்னுடைய மக்களை அசுவத்தாமன் அலங்கோலப்படுத்துகிறான்; ஆனால் நான் எப்படி உன்னிடம் வரமுடியும்?

''ஆனால் நீ கவலைப்படாதே! இதோ நீ காண்கிற இந்த நாட்டின் நிலை சீக்கிரம் மாறிவிடும். மேலை நாடுகள் முன்னேறி வருவது உண்மைதான். ஆனால் அவர்கள் என்றும் நிலைத்து நிற்கும் உண்மையை உணராதவர்கள். நித்திய சத்தியத்தை உணர்ந்த நாடு இந்த நாடுதான்; இது சீக்கிரம் விழிப்புப் பெறும். ஆகவேதான் இந்தத் தேசத்தின்மீது எனக்குப் பட்சபாதம். ஆனால் இது விழிப்படையாதவரையில் நான் எப்படி வருவேன்? அறத்தின் வித்து கட்டாந்தரையில் விழுந்தால் எப்படி முளை விடும்?

''பாஞ்சாலி, காட்டிலும் நாட்டிலும் ஏழைகளின் குடில்களிலும் மன்னர்களின் மாளிகைகளிலும் வீரர்களின் வில்லம்புகளிலும் வியாபாரிகளின் வாணிபத்திலும் மகாத்மாக்கள் வாழ்விலும் பாலகர்களின் விநோதத்திலும் தியாகிகளின் தியாகத்திலும்

காமிகளின் போகத்திலும் ஞானேந்திரியத்திலும் கர்மேந்திரியத்திலும் ஆடவர்களிலும் பெண்டிரிடமும் ஆஸ்திகர்களிடத்திலும் நாஸ்திகர்களிடத்திலும் அறவிழிப்பு எப்போது ஏற்படுகிறதோ, அப்போது அவர்களிடம் என்னுடைய உருவத்தைக் காண்பாய். நற்குணங்களே நாட்டின் நலனுக்கும் உலகத்தின் சுகத்துக்கும் அடிப்படையாகும். தர்மசிந்தனையையே மக்களின் வழிபாட்டைவிட இறைவன் அதிகம் விரும்புகிறான். பக்தியைவிட இதையே அவன் போற்றுகிறான்.

''தூய யக்ஞத்தினின்று எழுந்த ராஜபுத்திரியே! செயல் திறன் குன்றிய அரைகுறை ஞானத்திலும், ஞானம் குன்றிய கர்மத்திலும், நீதி பிறழ்ந்த பக்தியிலும், நான் உதயமாவதில்லை. மண்ணும் விண்ணும் ஒருங்கே சேருவதைப் போல, நிறைந்த ஞானத்தில் முளைத்தெழும் நீதி மரத்தில் மலரும் புஷ்பம் நான்; மலருக்குப் பிறகு பழம் கனிவது போல அர்ஜுனனின் செயல்திறன் வெளிப்படும். செயலுக்கு ஆதாரம் நான்தான்.''

குரல் வானவெளியினின்று எழுந்து அடங்கியது. வானத்தில் தர்மபுத்திரரின் முகம் சந்திரனைப் போல் குளிர் நிழல் தந்தது. மற்றப் பாண்டவர்களின் முகங்களும் பளிச்சிட்டன.

சிறிது நேரத்தில் வானவெளியில் உருவம் ஒன்று எழுந்தது. அதைப் பார்த்த சரஸ்வதிசந்திரன் குமுதசுந்தரியிடம்,''குமுதா! எல்லாச் சிரஞ்சீவிகளுக்கும் ஆதாரமான சிரஞ்சீவி ப்ருகுபதி கம்பீரமாக வருகிறார். அவரை இதயத்தால் வணங்குவோம். நம் சிதைந்த நம்பிக்கைகளில் எல்லாம் உயிர் ஊட்டுபவர் அவர்தாம்'' என்றான். விநாடியில் பரசுராமரின் ஒளிவீசும் முகம் பாஞ்சாலியின் அருகில் வந்தது.

''பாஞ்சாலி, நீ சிறிதும் பயப்படாதே! இந்தத் தேசத்தில் தர்மம் மீண்டும் தழைக்கும்; அதனுடன் எல்லா நலன்களுமே வரும். நான்தான் தர்மத்தின் நம்பிக்கை; காலத்தின் சூத்திரதாரன்; சத்தியத்தின் ஸ்வரூபம். குருக்ஷேத்திரத்தில் அர்ஜுனனுக்குத் தேரோட்டியாக வந்த திருமாலின் வயோதிக அவதாரம் நான். கௌரவர்களின் சபையில் உனக்கு அடைக்கலம் தந்தது நான்தான். ஆகவே, நம்பிக்கை கொள். சிரஞ்சீவி வடிவத்தில் இந்த க்ஷேத்திரத்தில் யுகம் யுகங்களாக வாழ்ந்து வருகிறேன். பாஞ்சாலி, நம்பிக்கை கொள். அந்தணர் யுகம் இனி ஆரம்பித்துவிட்டது. இந்த யுகத்தில் அரசர்களின் அஸ்திரங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளும். தூய அந்தணரின் செந்தண்மை சுடர்விடும். இந்த வானரங்கள் உன்னுடைய ஆயுதங்களை எடுத்துக்கொண்டுவிட்டால் என்ன? உனக்குப் பயமே வேண்டாம்.

''பாஞ்சாலி! வானரர்களிடம் பயம் என்றால் இந்தக் குரு க்ஷேத்திரத்தின் ரகசியத்தை மறந்துவிடாதே! ஆயுதமின்றி, அஸ்திரமின்றி வானரர்களிடம் ஆட்சி சென்றுவிட்டது என்றால், அதற்குக் காரணம் அவர்களுடைய தர்மபலமும், அர்ஜுனனின் திறமையுந்தான். அந்தத் தர்மம் உன்னுடைய ஆலயங்களிலும் கோவில்களிலும் இல்லை. அந்தத் தர்மம் பாடலில் உள்ள சோமநாதருக்கும், காசியில் உறையும் விசுவ நாதருக்கும் உதவவில்லை. உன்னுடைய முதல் கணவரான தர்ம புத்திரர் சொன்னதுபோல் மக்கள் நலனுக்கு என இயங்கும் தர்மம் இந்தத் தர்ம க்ஷேத்திரத்தின் தர்மந்தான் என்பதை அறிவாய்.

''வாமனாவதாரத்தில் நான், அந்தணன் தனது அந்தணப் பண்பினால் எவ்வளவு எடுத்துக்கொள்ளலாம் என்பதைக் காண்பித்தேன். இதோ, இந்த அவதாரத்தில், பெருமையால் தலைக் கனம் ஏறிய க்ஷத்திரியர்களுக்குத் தொல்லை தந்து அவர்களை அடக்கினேன். அதே அரசர்கள் திருந்துவதற்கு இராமா வதாரம் பூண்டேன். கிருஷ்ணாவதாரத்தில் ஆயுதம் எடுக்காமல் பாண்டவர்களுக்குத் தேரோட்டினேன். அரசியல் தந்திரமும் ஆட்சி முறையும் வேறு எனக் காட்டினேன்; உபதேசம் செய் தேன். பின்னர் அரசரும் அந்தணரும் முறை தவறினால் வாழ்வை எப்படி நடத்துவது என்று புத்தாவதாரத்தில் நான் காண்பித் தேன். ஆகவே, ஒவ்வொரு யுகத்துக்கும், அந்த யுகத்துக்கு வேண்டிய நீதியை, ஒவ்வோர் அவதாரத்தின்மூலம் காட்டி வந்தேன். இப்போது எல்லா யுகங்களுக்குமான நீதிகளையும் திரட்டி எல்லா அவதாரங்களுக்குமான செயல்களையும் ஒருங்கே ஒரே அவதாரத்தில் செய்யவேண்டும். அதற்காகவே நான் சிரஞ்சீவியாக வாழ்கிறேன்.

''பாஞ்சாலி! மேலை நாட்டிலே கடோத்கசனின் தாய் மாயா தனது குழப்ப வேலையைத் தொடங்கிவிட்டாள். பீமசேனனின் இந்த மாயா நாளுக்கு நாள் வளர்கிறாள். புத்தர் அவதாரத்திலே மனிதகுலம் துக்கங்களினின்றும் விடுதலைபெற நிர்வாணத்தைக் காண்பித்தேன். இனி வாழ்வை ஆனந்த மயத்தில் வைக்க வழி காட்டுவேன். இனி மனிதர் நான்கு வர்ணங்களைக் கடைப்பிடித்து வருவார்கள். உடலிலும், தைரியத்திலும், வீரத்திலும் க்ஷத்திரி யர்களாக இருப்பார்கள். வாழ்வு முறையிலும் உறவுகளிலும் வைசியர்களாக விளங்குவார்கள். லோகசேவையில் சூத்திரர் களாக இயங்குவார்கள். சிந்தனையிலும், கல்வியிலும், தூய்மை யிலும் அந்தணர்களாக இயங்குவார்கள். அரசர்களை நான் அழித் தது உண்மைதான். அவர்களுடைய ஆயுதங்களை நான் எடுத்துக் கொண்டு விட்டேன். இனித் தொடங்கப் போகும் யுகத்தில்

அவை அந்தணர்களுக்கான சாதனங்களாக விளங்கும். அந்தணர் யுகத்தில் கேவலம் ஆயுதங்களுக்குச் சக்தி கிடையாது. அறத்திற்கே அதிகமான சக்தி...இதோ பாஞ்சாலி, உன் கணவர் யுதிஷ்டிரர் உன்னை அடையக் காத்துக்கொண்டிருக்கிறார். உன் மக்களின் உள்ளங்களை அர்ஜுனனின் வீரக் கடலிலும் பீமனின் சக்தி வெள்ளத்திலும் குளித்தெடுத்துக் கடைத்தேற்றுவாய்.

''பாஞ்சாலி! எல்லா ஒளிக்கும் சோதிப் பெருஞ்சுடரில் உன் மக்கள் குளித்தெழுவதைப் பார். புது உடையுடன் புத்துயிர் பெற்று எழுகிறார்கள்; இதோ அவர்கள் புதிய விழிப்புப் பெற்றுவிட்டார்கள். நிஷ்காம்ய யக்ஞத்தை நீ ஆரம்பித்துவிட்டால், இனிப் பரமானந்தமும் எல்லா நலமும் நீ ஏன் பெறக்கூடாது? சத்தியத்தை நீ வளர்ப்பாய். ஒளிமயமான எதிர்காலத்தை நீ ஏன் பெறக்கூடாது? வரும் புதிய யுகத்திற்கு நீ ஆரத்தி எடுத்து வரவேற்பாய்! பாஞ்சாலி, புதிய யுகத்தில் உனக்கு எவ்வளவோ வேலை காத்திருக்கின்றது. எல்லாமே உன் வேலைதான். வானரர்களில் சிலர் சகரர்களைப் போல் உன்மத்தர்களாக இருப்பார்கள். ஆனால் நீயோ இமாசலத்திலிருந்து எழும் கங்கைபோல் அவர்களுக்கு அமைதியும் தண்மையும் தூய்மையும் தந்து மகிழ்விப்பாய். உனது இனிய நீர்ப்பெருக்கால் கங்கையும் யமுனையும் பாய்ந்து பெருவளம் தருவாய்.''

பரசுராமரின் குரல் பேசி முடித்தது. அதனுடன் சந்திரலோகத்திலிருந்து இனிய கானம் எழுந்தது.

தூய காட்சிகள் யாவும் மறைந்து போயின. சரஸ்வதி சந்திரனும் குமுதசுந்தரியும் தென்திசை நோக்கிப் பறந்து சென்றார்கள். கனவு முற்றுப்பெறவே இருவரும் தூக்கத்தில் மூழ்கிப் போனார்கள். நடுவே நித்திரை கலைந்து விழித்துக் கொண்ட குமுதசுந்தரி புலம்பினாள்.

''இரண்டு ஆண்டுகள் என்னைக் காக்கச் செய்துவிட்டீர்களே; எவ்வளவு நீண்ட காலம்! ஆனால் பாஞ்சாலியும் துயருற்றாள்; குந்தியும் இன்னலுற்றாள். அவர்கள் துயரமும் இன்னலும் பெண்குலத்துக்குப் பெரிய எடுத்துக்காட்டுகள். அவையே நமக்கு ஆறுதல் தருகின்றன.''

18. சரஸ்வதிசந்திரனும் குமுதசுந்தரியும்

கனவுக்குப் பிறகு நீண்ட நித்திரையில் ஆழ்ந்த சரஸ்வதி சந்திரன் காலை எட்டு மணிக்கேதான் எழுந்திருந்தான். குமுத

சுந்தரி நியமப்படி எழுந்து தயாராக இருந்தாள். அவள் திரும்புகையில் சொன்னாள்.

''அறிமுகம் அதிகமானால் பிரியம் வளரும் என்பார்கள். ஆனால் நாம் இருவரும் நாளுக்கு நாள் நெருங்கிப் பழக ஆரம்பித்த திலிருந்து விருப்பம் குறைந்துவிட்டது என்றே தோன்றுகிறது.''

''உலகம் போல்தான் மனமும்; மனம்போலத்தான் உலகமும்'' என்றான் சரஸ்வதிசந்திரன்.

''நித்திரையினின்று விழித்த பிறகுதான் கனவின் பொருளும் அதிகமாக விளங்குகிறது. நேற்றுப்போல இன்றும் நாம் கண்ட கனவை விவரித்து எழுதுவீர்களா?''

''நிச்சயம் எழுதுவேன். முந்திய கனவு என்னைப் பெருந் துயரில் ஆழ்த்திவிட்டிருந்தது. இப்போது கண்ட கனவோ மனத்துக்கு தைரியமும் ஆறுதலும் தந்திருக்கிறது. என்னுடைய தர்மம் இனி என்ன என்பதை உணர்த்தி வழிகாட்டியிருக்கிறது. இன்று நான் எங்கேயும் வெளியே போகப் போவதில்லை. கண்ட கனவைப்பற்றியே சிந்திக்கப்போகிறேன். மாலையில் உனக்குச் சிந்தனைகளைப்பற்றிச் சொல்லுவேன்.''

''மாலையிலும் அதற்குப் பின்னும் தீப வழிபாடும் பஜனையும் இருக்கின்றன என்று அறிவீர்கள். ஆகவே, நான் பகலிலேயே வருகிறேன். அப்போது சொல்லுங்கள்.''

''இன்னுமா நமக்குள் பயம் வேண்டும்?''

''இரண்டு இரவுகளைக் காட்டிலும் மூன்றும் இரவை நாம் இருவரும் புனிதமாகக் கழிக்கலாம் என்று அறிவேன். இதோ நான் போகலாமா?''

''குமுதா, கொஞ்சம் இருந்துவிட்டுப் போ!'' - குமுதம் நின்றாள்.

''குமுதா, உன் மனம் திடமாகத்தானே இருக்கிறது?''

''ஏன்? நீங்கள் கேட்ட இந்தக் கேள்வியே என் தைரியத் தைச் சிதைத்துவிடுகிறது.''

''இதோ நான் சொல்லப்போவதை மனத்திண்மையுடன் கேட்கவேண்டும்.''

''என்னுடைய மனவலிமையை நீங்கள் அறிவீர்கள்; அதை நீங்களே பெருக்க முடியும்.''

''உட்கார்; இந்தப் பத்திரிகையைப் படித்துப் பார்.''

குமுதசுந்தரி உட்கார்ந்தாள். பத்திரிகையைப் படிக்கத் தொடங்கினாள். சௌபாக்கிய தேவியின் மரணம், பிரமாததனன் மறைவு, குமுதம் நீரில் மூழ்கிய செய்தி எல்லாவற்றையும் பத்திரிகை தெரிவித்தது. எதிர்பாராத செய்திகளினால் அவள்

ஸ்தம்பித்துப்போனாள். கண்களிலிருந்து நீர் பெருகி ஓடியது. ஆற்றாமையால் அவள் விம்மியழத் தொடங்கினாள்.

''இவ்வளவு பெருஞ் சோகத்தை உன்னால் எப்படித் தாங்க முடியும் என்ற கவலையிலே இது நாள்வரை உனக்குச் சொல்லாமல் இருந்தேன். நம்முடைய அத்வைத உறவில் இந்தப் போலிப் படுதா எதற்கு என்றுதான் உனக்கு தெரிவித்தேன்.''

அளவிட முடியாத துயரவெள்ளத்தில் குமுதசுந்தரி மூழ்கி விட்டிருந்தாள்.

''என் மாமியாரின் மறைவினால் விளைந்திருக்கும் துயரத்தை நீங்கள் அளவிட முடியும். ஆனால் என் கணவர் - அதை நீங்கள் எப்படி அறிவீர்கள்? இனிமையான சுபாவம் அவருக்கு; ஆனால் தலைவிதி அவரைத் துன்மார்க்கத்தில் கொண்டு சென்றது. உங்களைப் போன்று அவருக்குக் கல்வியறிவு இல்லாது போனாலும் நல்ல மனம் உண்டு. ஏன், உங்களிடத்திலும் உங்கள் கல்வி ஞானத்தைக் காட்டிலும் உங்கள் மனத்திலேதான் எனக்கு நம்பிக்கை. உங்களிடத்தில் எனக்கு இரக்கமும் அவரிடத்தில் எனக்கு அன்பும் இருந்தன. அதனாலேயே நான் நீங்கள் பம்பாய் திரும்பிச் சுகித்திருக்கவேண்டும் என்று விரும்பினேன். அவர் மனம் இளகிப்போனால், நானே திரும்பிப் போவதாக இருந்தேன். என் நம்பிக்கைகள் யாவும் மண்ணாகிப் போய்விட்டன. இனி நான் என்ன செய்வேன்? எங்கே போவேன்?''

அவள் கதறினாள். சரஸ்வதிசந்திரனால் அதைத் தாங்க முடியவில்லை. அவளருகில் சென்று ஆறுதல் சொன்னான்.

''உலக தர்மப்படி நான் விதவை ஆகிவிட்டேன். இனிப் புதிய ஆசாரத்தை நான் பின்பற்றவேண்டும். இதோ இந்த வளையல்களை உடைத்தெறிய வேண்டும்.'' அவள் விம்மி விம்மி அழுதாள்.

''விதவைக் கோலம் என்பது சம்சாரத்தில் பற்று உள்ளவர்களுக்குத்தான். நீதான் அதைத் துறந்துவிட்டாயே! துறவிகளிடம் நீ கேள்: உனக்கு உண்மையான வழியைச் சொல்லுவார்கள்'' என்றான் சரஸ்வதிசந்திரன்.

சோகமே உருவாய் அவள் எழுந்தாள். சிலைபோல அவள் நடந்து சென்றதைக் கண்ட அவன் உள்ளம் உருகியது:

'என்ன செய்வேன்! இவளுடைய துயரத்தை என்னாலேயே தாங்க முடியவில்லையே. இதற்காகவே நான் இவளிடம் தெரிவிக்காமல் இருந்தேன். இதோ இன்று இவள் விதவைக் கோலம் பூண்டுவிட்டாள். இந்தத் துயரமே இவளுக்கு எல்லா நலனும் தந்துவிடும். உலகமே, நீ தரும் இன்ப துன்பங்களுக்குக்

கணக்கே இல்லையா? உலக விருட்சத்தின் கிளைகளுக்கு ளெல்லாம் சிக்கிவிட்ட குமுதசுந்தரி மீண்டுவிடுவாளா?'

சாது ஜனங்களுக்கிடையில் அவள் பொம்மைபோல் இயங்கினாள். நீரோடையில் தலை முழுகி எழுந்த அவளுக்குத் துறவிகள் வஸ்திரம் தந்தார்கள். அதை அவள் அணிந்து கொண்டாள். அபலையின் நிலை எல்லோருடைய உள்ளத்திலும் இரக்கத்தை எழுப்பியது.

சரஸ்வதிசந்திரன் அமைதி அடைந்தவனாகச் சிந்திக்க ஆரம்பித்தான். கடந்த இரவில் தான் கண்ட கனவைப்பற்றிய தன் எண்ணங்களை எழுத ஆரம்பித்தான். சிறிது நேரத்தில் ராதேதாஸர் வந்து அறிவித்தார்: ''நாளை தங்களுடைய நண்பர் யதுச்ருங்கத்திற்கு வருகிறாராம். அவருக்கு எங்கே இருப்பிடம் தயார் செய்து தரலாம்?''

''நான் இப்போது எங்கே இருக்கிறேனோ அங்கேயே கொண்டு வாருங்கள்.''

ராதேதாஸர் அகன்றார்.

சரஸ்வதிசந்திரன் தான் எழுதியதைப் படிக்கத் தொடங்கினான்: ''தேசத்தின் நலன் எதில் இருக்கிறது, எதன்மூலம் அதைப் பெறமுடியும் என்று யோசனையில் ஆழ்ந்தான். நீறு பூத்த சாம்பலில் அக்கினி மறைந்து கிடக்கிறது. அதைக் கண்டும் காணவியலாத நிலை. அதுபோல இந்தத் தேசத்தின் ஞானமும் எங்கெங்கேயோ ஒளிந்து குடத்தில் இட்ட விளக்காக மறைந்து ஒளி வீசுகிறது. ஒளியைச் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்வதுதான் என் விருப்பம்; அதுதான் 'மகாயக்ஞத்தில் நான் தப்பிப்போகும் ஆஹுதி' என்று பொருள்படும் கவிதை'' என அதனை உரத்த குரலில் பாடினான். அவனது பின்புறத்திலே சோகமே வடிவாய் வந்து நின்றாள் குமுதசுந்தரி. சரஸ்வதி சந்திரனோ உற்சாகத்துடன் இரைந்து பாடினான்; அவள் வந்து நின்றதை அவன் அறியவில்லை. அவள் கண்களிலிருந்து நீர் வடிந்தது. அவள் பேசவில்லை. அவன் பாடிக்கொண்டிருந்தான். எவ்வளவு நேரம் நின்றுகொண்டிருந்தாளோ? கடைசியில் அவன்முன் வந்து காலடியில் வீழ்ந்தாள்.

சரஸ்வதிசந்திரன் விநாடி நேரம் திகைத்துப் போனான். சமாளித்துக்கொண்டு அவளை இரு கைகளாலும் பிடித்து உயர்த்தினான்.

''சந்திராவளிமையா சொன்னபடி சாதுக்களிடம் பேதமுண்டா? நீயேன் என் காலில் விழவேண்டும்?''

குமுதம் விம்மினாள்.

''எனக்கு நீங்கள் தீட்சை தரவேண்டும். என்னுடைய சோகத்தை முன்னம் ஒரு முறை நீங்கள்தான் போக்கினீர்கள். மீண்டும் எனக்கு நீங்கள்தாம் வழிகாட்ட வேண்டும். இன்னும் உலக வாழ்விலேயே ஈடுபட்டிருக்கிறேன். உங்கள் சரணாரவிந்தங்களிலே சகதர்மிணியாக இருக்கும் பேற்றைக் கனவிலே அடைந்தேன். மீண்டும் ஓர் முறை உங்களைப் பணிகிறேன். சன்மார்க்கத்தை உபதேசியுங்கள். உலகதர்மமும் துறவிகளும் குற்றம் ஏதும் காணாத விழியை எனக்குக் காட்டுங்கள். என்னுடைய விகாரத்தைப் போக்கித் தூய்மை தாருங்கள். வேறு ஏதும் எனக்கு வேண்டாம்.''

''குமுதசுந்தரி, உன்னுடைய சோகம் உனக்கு நலனே தரும். நீ வருந்தாதே! நாளை என் நண்பன் சந்திரகாந்தன் வருகிறான். உன்னுடன் தனித்திருந்து பேசும் வாய்ப்புக் கிடைக்காமல் போய்விடும். ஆகவே, இப்போதுள்ள வாய்ப்பை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.''

''அது சரி; உங்கள் நண்பர் வரட்டும். ஆனால் இப்போது நாம் என்ன பேசவேண்டும் என்பது தோன்றவில்லையே!''

''நீ அமைதியுடன் உட்கார். இனி நாம் எப்படி வாழ வேண்டும், என்ன தர்மத்தைப் பின்பற்றவேண்டும் இவற்றைச் சொல்கிறேன். நாளை சந்திரகாந்தன் வருகிறான், அவனுடன் நான் பேசுவேன். நீ அவனைச் சந்திக்க விரும்புகிறாயா, இல்லை மறைந்திருக்க விரும்புகிறாயா?''

''தங்களுடைய நண்பர் தங்களைப்போலவே தூயவராக இருப்பார் என்று நான் அறிவேன். ஆனாலும் என் நெஞ்சத்தில் உலகத்தின்மீது உள்ள பயம் நீங்கியபாடில்லை. நான் செத்துவிட்டேன் என்று எண்ணியிருக்கும் என் பெற்றோர்கள் நான் உயிரோடிருக்கிறேன் என்று அறிந்தால் என்னைப்பற்றி என்னவெல்லாம் எண்ணுவார்களோ? நீங்கள் தூயவராக இருந்து என்னுள் தூய்மை வளர்க்கிறீர்கள் என்பதை அவர்கள் எப்படி அறிவார்கள்? நமக்கு அடைக்கலம் தந்த துறவிகளுக்கு எத்தகைய அபகீர்த்தி வரும்? - இந்தக் கேள்விகள் என் மனத்தில் எழுந்து என்னை அரிக்கின்றன. என் பெற்றோர்கள் எல்லாம் அறிந்துகொண்டால் எவ்வளவு துக்கித்துப் போவார்கள்? அவர்கள் பெருமையும் எவ்வளவு குன்றிவிடும்? என்னுடைய மாமனார் என்னைப்பற்றித் தெரிந்துகொண்டால் எவ்வளவு வருத்தப்படுவார் என்பதையும் கற்பனை செய்து பார்க்க முடியாது. நான் செத்துவிட்டேன் என்று உலகம் நினைத்துக் கொண்டிருந்தால்தான் எல்லோருக்கும் நல்லது.''

''நீ சொல்லுவது உண்மையே! நீ விரும்பினால் இங்கே ஆசிரமத்திலேயோ, இல்லை சந்திராவளிமையாவுடனேயோ

நாட்களைக் கழிக்கலாம். நாம் இருவரும் தூரத்திலிருந்து வெறும் பார்வையால் நமது அன்பைப் போற்றி வரலாம்.''

''எனக்கு இனி வேறு யார் கதி? நீங்கள் சொல்லுவதையே நான் கேட்பேன்.''

''நீ வேறு, நான் வேறு என்ற உணர்வில் பேசவில்லை. நம்முடைய உண்மைப் பெயர்களல்லாமலே நம்முடைய வாழ்வு இங்கே சுந்தரகிரியில் பிரசித்தமாகிவிட்டது. எப்போது என் உண்மைப் பெயரை இவர்கள் அறிவார்களோ அப்போது உன்னைப்பற்றியும் அவர்கள் தெரிந்துகொண்டுவிடுவார்கள். அப்புறம் உன் பெற்றோர்களுக்கும் செய்தி எட்டிவிடும். பின்னர் நீ என்னுடன் இங்கே வசித்துவந்தாய் என்று அவர்கள் அறிந்து கொண்டால், நீ சொன்னதுபோல அவர்கள் இழுக்கடைவார்கள். துறவிகள் சொல்வதுபோல நம் இருவருக்குமிடையே அத்வைத பாவம் இருக்கிறது; அதை ஒப்புக்கொண்டு இங்கே இரண்டு ஆண்டுகள் வசித்துவிட்டு, பம்பாய் நகரில் எல்லோரும் அறிய வெளிப்படையாய் உன்னை மணந்துகொள்கிறேன். அதைத் தவிர வேறு பிராயச்சித்தம் ஏதும் கிடையாது. இந்த வழி உனக்கும் எனக்கும் இன்பமும் நன்மையும் பயக்கும்.''

''உங்களுடைய ஆசையெல்லாம் வெறும் பிராயச்சித்தத்தைத் தேடுவதில்தானா முடியவேண்டும்?''

''இதோ ஏன் இந்தச் சந்தேகம்? நம்மிடையே உள்ள அத்வைத பாவத்தில் ஏன் துவைத சந்தேகத்தை எழுப்புகிறாய்? ஒரு நாளும் உன் நம்பிக்கையைப் பாழாக்கும்வண்ணம் நான் ஏதும் செய்ததில்லையே?''

''இதோ பாருங்கள், பிராயச்சித்தம் என்ற பேச்சைவிட்டு விடுங்கள். எனக்காக ஒன்று செய்யுங்கள்.''

''சரி, சொல்.''

''இன்றுவரை இரண்டு வருஷங்கள் கழித்து நம்முடைய ஆயுளை எப்படிக் கழிக்கப் போகிறோம் என்று எண்ணி வந்தோம். ஆனால் இன்றோ, இனி எப்படிக் காலத்தைக் கழிக்கப்போகிறோம் என்ற விசாரம் வந்துவிட்டது.''

''நான் எப்போது வெளியே வருகிறேனோ அப்போதே உன்னுடைய தொடர்பும் பிரசித்தமாகிவிடும்.''

''ஆனால் அதை ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றே விரும்புகிறேன். நான் உயிருடன் இருக்கிறேன் என்று உலகம் அறியக்கூடாது. அப்படி அறிந்தால் உங்களருகிலே நான் இறந்துவிடவே விரும்புகிறேன். உயிருடன் இருந்தால் உங்களருகிலே இருக்க விரும்புகிறேன். அப்படி இருப்பது

உலகத்திற்குத் தெரிந்துவிட்டால் அபகீர்த்திதான் நம்மைச் சூழும். பெற்றோர்களும் மாமனும் மிகவும் துக்கம் அடைவார்கள்.''

''பெண்களின்மீது குற்றம் சொல்லுவது என்பது புதிய செய்தியல்ல; பவபூதி போன்றவர்களின் காலத்திலிருந்து வழக்கில் வந்துவிட்ட செய்திதான் அது. அந்தப் பயம் உன்னிடத்தில் இருக்கிறதா?''

''இல்லாமல் எப்படி?''

''காலம் வந்தால் அந்தப் பயத்தைப் போக்கிவிடலாம்.''

''எனக்கு நம்பிக்கை இல்லை.''

''நம்முடைய பெண்குலத்தின் பெருமையை உலகிற்கு எடுத்துரைக்க முயல்வேன்.''

''அப்படி முயன்றால் நாம் பார்த்த மண்புற்றுக்களின் மண்ணோடு மண்ணாகிப் போய்விடுவோம். கனவில் கண்ட அந்த எளிய உபாயங்கள் உண்மை வாழ்வில் கிட்டிவிடுமா? எனக்கு நம்பிக்கை இல்லை.''

''சரி, நீ சொல்: நான் என்ன செய்யவேண்டும்?''

''நான் என்ன சொல்வேன்? எனக்கோ தைரியம் இல்லை. நான் என்ன செய்யமுடியும்? மக்களின் நலனுக்காக நீங்கள் உழைக்கவேண்டும். இதற்காக வெளிப்படையாக நீங்கள் வெளிவரத்தான் வேண்டும். அப்படி நீங்கள் மீண்டும் உலக வாழ்வில் புகுந்தால் என்னைவிட்டு நீங்கள் பிரிந்து மகிழ்ந்திருக்க முடியாது. உங்களுக்கு மனைவி ஒருத்தி இருக்கத்தான் வேண்டும். அவள் என்னைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது. என்னுடன் நீங்கள் வாழ்வு நடத்தினால் மக்களின் நிந்தனைதான் நமக்குப் பலனாகக் கிட்டும். நாம் அணியப்போகும் மலர் மாலை கருநாகங்களின் மாலையாக மாறிவிடும். நீங்கள் மீண்டும் உலக வாழ்வில் மக்கள் நலனுக்காகப் புகவேண்டும். ஆனால் நானில்லாமல் நீங்கள் எப்படி வாழ்வீர்கள்? நானும் நீங்கள் இல்லாமல் எப்படி உயிர் வாழ்வேன்?...நான் எக்கேடு கெட்டுப்போனால் என்ன? உங்கள் சுகமே என் சுகம். பம்பாய் திரும்பிச் செல்லுங்கள். நல்ல மனைவியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். என்னுடைய களங்கமான உடலை இதோ இந்த மலைப்பள்ளத்தாக்கிலோ அல்லது தூரத்திலே தெரிகிற கடலின் ஆழத்திலோ இட்டு உயிர் மாய்த்துக்கொள்வேன்'' என்று கூறிக் கண்ணீர் பெருக்கினாள் குமுதசுந்தரி. சோகத்தில் தன்னை மறந்தவளாய் உடல் குலுங்கினாள். நல்ல வேளையாய்ச் சரஸ்வதி சந்திரன் அவளைப் பிடித்திராவிட்டால் நெடுமரமாய் அவள் சாய்ந்து நிலத்தில் வீழ்ந்திருப்பாள்.

தாரை தாரையாக நீர் கண்களிலிருந்தும் பெருகி ஓடியது; குமுதசுந்தரி தழுதழுத்தாள்.

"என்னை மன்னித்துவிடுங்கள். இதோ இந்தத் துறவிகள் கடைப்பிடித்து வரும் தர்மத்தையே நான் பின்பற்றி வருவேன். அவர்களைத் தொடர்ந்தே இனி வாழ்நாளைக் கழிப்பேன்; நம்முடைய அத்வைத பாவத்தை உணர்ந்து தங்களை என் மனத்தால் கணவராக வரித்துக்கொள்வேன்; நீங்களே என் உள்ளத்தின் கணவர். நோக்குமிடமெல்லாம் உங்களையே காண்பேன்.

"கவலைப்படாதீர்கள். நாளை வரப்போகிற தங்கள் நண்பர் தங்களைப் போலவே தூய மனிதர்; நமக்கு நல்லுரையே வழங்குவார். இனி என்னைப்பற்றிய கவலையெல்லாம் விட்டு விட்டுத் தேசநலனுக்கான சிந்தனைகளில் ஈடுபடுங்கள்; நீங்கள் வளர்க்கப்போகும் வேள்வியில் நான் சகதர்மிணியாக உதவுவேன்."

19. தேசபக்தியின் மனோராஜ்யம்

"இந்த இருள்மிக்க இரவை நாம் இருவரும் ஒரு விநாடி போல் கழித்து விடவேண்டும்" என்றான் சரஸ்வதிசந்திரன்.

"நம்முடைய ஆயுளையும் நாம் கணநேரமாகக் கழித்து விட வேண்டும்" என்றாள் குமுதசுந்தரி.

சரஸ்வதிசந்திரன் காய்ந்த புல் கட்டின்மீது சாய்ந்த வண்ணம் உறங்கிப் போனான். நிலவின் ஒளிக்கதிர்கள் அவன் முகத்தில் விளையாடின. அந்தக் காட்சியைக் கண்ட குமுத சுந்தரியின் உள்ளத்தில் அமைதி நிலவியது.

"என் காதலர் நலம் பெறவேண்டும், அவரால் மக்கள் சுகம் பெறவேண்டும் என்பதே என் விருப்பம். பாஞ்சாலியின் தலைமாட்டில் குந்திதேவி அமர்ந்திருந்தாளே, அது போலவே என் நாயகரின் சேவைசெய்து கண் விழித்திருப்பேன். மன் மதனே, நீ எரிந்து சாம்பலாகிவிட்டாய்! நிலவே, உன்னைக் காட்டிலும் குளிர்நிழல் தருகிறார் என் சந்திரர்."

சிறிதுநேரம் கழிந்தது. சரஸ்வதிசந்திரன் விழித்துக் கொண்டான். குமுதசுந்தரி பேசினாள்:

"என்னைப்பற்றிப் பேசியாகிவிட்டது. இனி நீங்கள் எப்படி வாழ்வைக் கழிக்கப் போகிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள்."

"என்னுடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்க இந்த இடம்மட்டுமா? நீயுந்தான் எனக்கு வழி காட்டியிருக்கிறாய். மதுரி, மீண்டும் ஒருதரம் சொல்லு: என்னுடன் உனக்கு எந்தவிதமான தொடர்பு வேண்டும்? கேவலம் சூட்சுமமான தொடர்பா, இல்லை ஸ்தூலத் தொடர்பா? உனக்கு எது தேவை என்று சொல்லிவிடு. அதன்படியே நான் என் மார்க்கத்தைத் தேடுவேன்.''

''பெண் உள்ளத்தை நீங்கள் அறிவீர்கள். என்னுடைய புத்திக்கு ஏற்றவாறு பல முடிவுகளுக்கு வந்து, கடைசியில் இந்த முடிவை ஏற்றுக்கொண் டிருக்கிறேன். பெண் உள்ளம் தீபத்தைப் போன்றது. எங்களுடைய புத்தியோ உள்ளத்தின் கைகளில். உள்ளத்தின் விளக்கோ காற்றின் கைகளில். எனக்கு உங்கள் மனத்தில் தோன்றும் எல்லா வழிகளையும் சொல்லி விடுங் கள். மேகக்குவியல் போன்ற தங்கள் ஒளிவிடும் முகத்தை ஏழை நிலம்போல் கீழிருந்து வான் நோக்குகிறேன். தயை செய்து படுதாவைக் கிழித்துவிட்டு வெளிவாருங்கள். நான் குமுதமலர்; உங்கள் கருணையை எதிர்நோக்கி நிற்கிறேன்.''

''அப்படியானால் இதோ சொல்லுகிறேன். என்னுடைய தாயாரும், பாட்டியாரும் சேர்த்து வைத்திருக்கும் பொருளைப் பயன்படுத்த விரும்புகிறேன். முதலாண்டிலே பொருளினால் அறி விற் சிறந்த வியாபாரிகளைப் படைக்க எண்ணுகிறேன்; பின்னர் இரண்டாவது ஆண்டில் நாட்டு ஏழை மக்களின் நலனுக்காக என் பொருளைச் செலவழிக்க விரும்புகிறேன். சாலச் சிறந்த வணிகர்கள் அர்ஜுனனுடைய தேர்ப்புரவிகளின் கடிவாளங்களைச் செலுத்த இயலும் என்பது என் நம்பிக்கை. வெறும் வட்டியின்மீதுமட்டும் நாட்டம் செலுத்தாமல் வெளிநாடுகளில் பயணம் செய்து, அந்நாட்டவரின் முன்னேற்ற ரகசியத்தை அறிந்து இந்த நாடான பாஞ்சாலியின் நலனுக்காக அவர்கள் பாடுபடுவார்கள் என்பது என் விருப்பம். செல்வமிக்க அறிவாளிகள், ஏழைப் பண்டிதர்கள் ஆகிய அனைவரும் ஒருங்கே வந்து தேசத்தின் உத்தாரணத்திற்காக உழைப்பார்கள் என்பது என் மகத்தான நம்பிக்கை.''

''உங்களுடைய இந்தப் பெரும் முயற்சியில் நான் எவ்விதம் பங்கு கொள்ளலாம்?''

''வெளிநாட்டுப் பயணத்திலிருந்து ஆயுதங்களைத் தாங்கி வருபவர்களுக்குச் சுபத்திரைகளை வழங்கும் வேலை என்னுடைய குமுதசுந்தரியின் வேலை. அதைப்பற்றிப் பின்னர் விவரமாகச் சொல்லுகிறேன். என்னுடைய பொருளை எப்படிப் பயன் படுத்துவேன் என்பதைக் கூறுகிறேன். வயது முதிர்ந்தவர்

களின் நலன் அவர்களுடைய நாட்டுப் பெண்களின் உபசரணை யில் பொருந்தியிருக்கிறது. குழந்தைகளின் முன்னேற்றம் அவர் களின் பெற்றோர்களுடைய கையில் இருக்கிறது. அரசாங்கத் தின் ஆதாரம் மன்னரின் மதியிலும் வீரத்திலும் அடங்கி யிருக்கிறது. நான்கு ஆசிரமங்களின் உயர்நிலை கிருகஸ்தாசிர மத்திலேதான் இருக்கிறது. எல்லாப் பருவங்களின் முன்னேற்ற மும் இளமைப் பருவத்தில்தான் அடங்கியிருக்கிறது. நாட்டின் சகல முன்னேற்றமும் கல்விமிக்க அறிஞர்களின் ஞானத்திலே தான் அடக்கம். அறிஞர்களின் ஆதாரம் அவர்களுடைய இளமையில் கற்ற கல்வி. அத்தகைய அறிஞர் திருக்கூட்டத்தை வளர்க்க நந்தவனம் அமைப்போம். நம்முடைய சூட்சும வாழ்வின் லோகயாத்திரையை அறிஞர்களின் எளிய குடில் களிலும் பெரிய மாளிகைகளிலும் செய்வோம். நமது ஆண் அறிஞர்களிடையே நானும், பெண் அறிஞர்களிடையே நீயும் உழைப்போம்.

''பெண்டிரிடையே ஞானம் தழைக்கவும், ரசிகத் தன்மை உயரவும், குடும்பநலன் வளரவும், உடல்வலிமை பெறவும், நோயும் பிணியும் அகலவும், அழகு மிளிரவும், குடும்பக் கட்டுக் களிலிருந்து தக்க முறையில் முக்தி பெறவும், முக்தியிலிருந்தும் சுதந்திரத்திலிருந்தும் அறிவற்ற ஆசைகளையும் ஆவேசத்தையும் அழிக்க வழிதேடவும், குடும்பத்தில் உண்மையான மகிழ்ச்சி யையும், உற்சாகத்தையும் எழுப்ப முயலவும், சிறுவர்களுக்குப் போஷணையும் வயது முதிர்ந்தோருக்கு ஆறுதலும் தந்து காக்கவும் மார்க்கம் தேடவேண்டும். அது பெரும் ஆற்றல் மிக்க குணசுந்தரியின் புதல்வியான உன்னையன்றி வேறு யாரால் இயலும்? உன் உதவியில்லாமல் நானும் என் காரியத்தில் சித்தி பெற முடியாது.''

''நான் துறவறம் பூண்டால் உங்கள் காரியம் சித்தி பெருதா?''

''வாழ்வையும் உலகையும் துறந்து ஒதுங்கி நிற்பவர்களின் உறவில் இது நடக்காது. நம்முடைய ஸ்தூல உறவை மறு விவாகம் என்று உலகம் நினைக்கும். அதனுடன் நம்முடைய முயற்சிகள் நாசம் அடையும்வண்ணம் அபகீர்த்தி ஏற்படும். ஆகவேதான் இந்தச் சாதுக்கள் நம்முடைய மனச் சேர்க்கையை விவாக ரூபத்தில் விரும்புகிருர்கள். இந்தச் சேர்க்கையினுல் நம்முடைய குடும்பங்கள் புதிய ஞானமும் புதிய கலைகளும் புத்துயிரும் பெறும். பிதாமகபுரில் கண்ட மணியின் பார்வை கிட்டி அசுவத்தாமன் சமைத்த மண்புற்றுக்கள் கரைந்து போகும். குமுதசுந்தரி, கேவலம் சரஸ்வதிசந்திரனுல் தனித்து இதைச் சாதிக்கமுடியாது. குமுதசுந்தரியின் உதவியும் வேண்டும்.'

''நம் இருவராலும் முழுக்க முழுக்க முடியாது போனாலும் நம்முடைய முயற்சிகளின்மூலம் நம்மைவிடச் சக்தி மிக்கவர்கள் கண்விழித்துக்கொள்வார்கள், நாம் தரும் விழிப்புணர்வால் உலகம் முழுதும் நலம் பெறும். குமுதசுந்தரி, சமுத்திரக் கரையில் ஸூரக்கிராமம் போன்ற கிராமம் ஒன்று நிறுவி அதில் ஆங்கிலஞானம் பெற்றவர்கள், வடமொழிப் பயிற்சியுள்ளவர்கள், அறிவிலிகள் மூவருக்கும் தனித்தனி ஆசிரமங்கள் அமைப்பேன். இங்கே சுந்தரகிரியில் அமைந்துள்ள மடங்கள் போல அவை இயங்கும்.''

''அங்கே வசித்து அவர்கள் என்ன செய்வார்கள்?''

''ஆங்கில அறிஞர்களும் வடமொழிப் பண்டிதர்களும் தங்கள் ஆயுட்காலத்தை இங்கே கழிப்பார்கள். நம்முடைய வேதவேதாந்த சாஸ்திரங்களையும் புராணங்களையும் பழக்க வழக்கங்களையும் ஆராய்வார்கள். பிதாமகர், அசுவத்தாமன் ஆகியோருடைய குணநலன்களையும் ஆராய்வார்கள். மண் குகைகளில் நுழைந்து அவற்றைப் பரிசோதிப்பார்கள். அவற்றினின்றும் ஒளிவீசும் புற்றுக்கள் வழியாக வெளிவருவார்கள். இந்தத் தேசத்தின் பல்வேறு யுகங்களில் நாம் பெற்ற முன்னேற்றத்தைப்பற்றி அவர்கள் தெரிந்துகொள்வார்கள். தற்போதைய காலத்து நிலைமையையும் அவர்கள் அறிந்துகொள்வார்கள்; சமூகப் பிணிகளைப் போக்க அவர்கள் மருந்து தேடுவார்கள். பிற நாட்டுச் சமூக நிலையையும் அவர்கள் உணர்வார்கள். இன்று உலகம் முழுதும் சுற்றிவரும் அர்ஜுனனது ரதத்தின் சக்கரங்கள் எங்கெங்கெல்லாம் சுற்றி வருகின்றனவோ அங்கெல்லாம் அவர்கள் சுற்றிவந்து புதிய கலைகள், புதிய நுட்பங்கள் ஆகியவற்றைக் கற்றறிவார்கள்.

''வித்வான்கள் அர்ஜுனனின் அஸ்திரங்களைப் பெறும் பொருட்டு ஆசிரமங்களில் புத்தகசாலைகள் நிறுவவேண்டும். புதிய கலைகள் பெருக நகுலதேவனின் களஞ்சியத்தையும் அமைப்பேன். வாணிகமும் தொழிலும் வலியுறப் பிறநாட்டு அரும்பொருள்களின் கண்காட்சியையும் ஏற்பாடு செய்வேன்.

''வித்வான்கள் தத்தம் குடும்ப சிந்தனையும் கவலையும் இல்லாமல் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்காக அவர்களின் குடும்பங்களையும், நான் பொருள் உதவியும் மற்ற உதவியும் தந்து காத்து வருவேன். இந்த ஏழைநாட்டின் திரவியம் எல்லாம் ஏனோ வியர்த்தமாகிப் போய்விடுகின்றன! தக்க முறையில் பெருத்த பயன் ஏற்படும் வகையில் பொருளை ஈடுபடுத்த வேண்டும்.''

அவன் பேசிக்கொண்டிருந்தபோது குமுதசுந்தரி நடுவில் குறுக்கிட்டாள்.

''நீங்கள் பேசும்போது உங்கள் தலைக்குமேல் அசுவத்தாமனின் திருந்திய முகத்தையும் பகவான் பரசுராமரின் முகத்தையும் காண்கிறேன்.''

''உன் தலைக்குமேல் குந்தியின் அடைக்கலம் தரும் கரத்தைக் காண்கிறேன்; அவளுடைய இனிய குரலையும் கேட்கிறேன்.''

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்டு மீண்டும் சரஸ்வதி சந்திரன் பேசினான்;

''நாம் கண்ட கனவின் விளைவுகள்தாம் இவை எல்லாம். தருமபுத்திரரின் அறமும், பீமனின் வலிமையும், அர்ஜுனனின் செயல்திறனும், நகுல - சகதேவரின் கலையுணர்வும், ஹநுமானின் ஆன்ம உறவும், குந்தியின் இரக்கமும், தைரியமும் ஆகிய யாவும் தளிர்விட்டுப் பெரிய மரமாகத் தழைத்தோங்க இன்றே விதை நடுவோம்.

''குமுதசுந்தரி, இந்தத் தூய கிராமத்திலிருந்து பெண்டிர்களும் சுதந்திரத்துடன் வெளிவந்து கிராமம் கிராமமாக, வீடு வீடாக நலம் பரப்புவார்கள். பெண்களால் நாட்டிற்கு என்ன பலன் என்று மக்கள் கருதுவது தவறு. பெண்ணில்லை என்றால் வீடு இல்லை. வீடில்லாமல் மக்கள் இல்லை; மக்கள் இன்றி நாடு தழைப்பதில்லை. பெண்களின் முன்னேற்றத்தில்தான் நாட்டின் எல்லா அறங்களும் தழைக்கும். மகிழ்ச்சி நிறைந்த மங்கையரால் இல்லறம் செழிக்கும்; இல்லறம் நல்லறமானால் மக்கள் வளமுறுவர். குடும்ப வாழ்வு சிதைந்தால், ஆவேசம் மிகுந்தால் நாடு தீமையுறும்.

''உலக நலனுக்காக நம்முடைய ஆயுட் காலத்தின் ஒரு பகுதியை ஸ்தூல தர்மத்தில் கழிக்கத்தான் வேண்டும். இதோ நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியிலும் நீ என் பின்னேயே தொடர்ந்து வருகிறாய் என்ற நம்பிக்கையுடன் செல்கிறேன். அதேபோல் நீ செல்லும் இடமெல்லாம் நானும் பின் தொடர்கிறேன்.''

உடல் சிலிர்த்துப் போனான் சரஸ்வதிசந்திரன். உணர்ச்சி வசப்பட்ட அவனுடைய கண்ணிமைகள் துடித்தன; குரல் நின்றது. ஆனால் பார்வையோ மின்னியது. குமுதசுந்தரியும் அதே நிலையை அடைந்தாள். ஸௌமனஸ்ய குகையின் வெளிப்புறத்திலே பேச்சற்று, செயலற்றுப் பதுமைகளாக அமர்ந்திருந்த அவர்கள்மீது நடுநிசியின் முழுநிலவு கதிர்களை வாரியிறைத்து ஒளிமயமாக்கிக்கொண்டிருந்தது.

20. வித்யாசதுரரும் குணசுந்தரியும்

சந்திரகாந்தன் தன்னைச் சந்தித்த சாதுவை மீண்டும் கண்டு பேசினான். அந்தச் சாதுவின் குறிப்புப்படியே சுந்தரகிரிக்குச் செல்லும் பாதையில் ஏறினான். இது போலீசுக்கு எட்டாமற் போகவில்லை.

சந்திரகாந்தன் ரத்னநகரியை விட்டு நீங்கிய அதே நாள் மாலை நேரத்தில் வித்யாசதுரர் குணசுந்தரியை அழைத்துச் சொன்னார்:

''உனக்குத் தெரியுமா? சரஸ்வதிசந்திரன் சந்நியாசியாக மாறி விஷ்ணுதாஸர் மடத்தில் புகுந்திருக்கிறானாம். இனி அவனைப்பற்றிய நம்பிக்கை ஏதும் வைக்கக்கூடாது.''

''தாயில்லாத பிள்ளை அவன். சந்நியாசியாகிவிட்டான் என்பதை என்னால் தாங்கமுடியாது. மீண்டும் சம்சாரத்தில் அவனைப் புகுமாறு செய்ய வேண்டும். குமுதத்தைப்பற்றிய துக்கத்தை மறந்தாற்போல் இருந்தால் குணசுந்தரியைப்பற்றிய கவலை; அது சிறிது குறைந்தாற்போல் இருந்தால் இதோ சரஸ்வதி சந்திரன்; மனம் மிகவும் வேதனைப்படுகிறது. இதோ, ஆக்ஞை தாருங்கள்; மடத்திற்கு நானே சென்று அவனை மீட்டு வருகிறேன்.''

''வீட்டுக்கு அழைத்து வந்தால் என்ன சுகத்தைக் காண்பான்? மடத்தில்தான் அவன் நலமெல்லாம்.''

''நீங்கள் சொல்லுவது எனக்குப் புரியவில்லை.''

''இதோ விசித்திரமான செய்தி ஒன்று சொல்லுவேன்: ஆனால் அதை எப்படிக் கேட்டுச் சகிப்பாய் என்று தெரியவில்லை.''

''எது வேண்டுமானாலும் சொல்லுங்கள்; கேட்டுச் சகித்துக் கொள்வேன். தலைக்குமேல் நீர் நிறைந்த பிறகு முழமானால் என்ன, கஜமானால் என்ன?''

''குமுதம் உயிருடன் இருக்கிறாள்!''

''ஆ!''-அதிர்ச்சி அடைந்தாள் குணசுந்தரி.

''ஆமாம்; அதுவும் சரஸ்வதிசந்திரனுடன்தான்.''

குணசுந்தரி பேரதிர்ச்சியுற்றாள். அவளால் பேச முடியவில்லை; கண்களில் நீர் திரண்டது.

''இந்தச் சமாசாரத்தால் உனக்கு எவ்வளவு துயரம் உண்டாகும் என்பதை அறிந்துதான் தயங்கினேன். இனிமேல் சொல்: சரஸ்வதிசந்திரனின்மேல் உனக்குப் பிரியம் உண்டா? உன் பெண்தான் எப்படி?''

குணசுந்தரியின் கண்களில் நீர் மறைந்துபோயிற்று. கோபம் மிகுந்தவளாய்ச் சிவப்பேறிய கண்களுடன் பேசினாள்:

''யாருடைய பெண்? இனி அவள் உயிருடன் இருந்தால் என்ன, மடிந்தால் என்ன? இந்த இழுக்கு நம்மைச் சார வேண்டாம். இதோ நான் போகிறேன்'' என்று எழுந்து நடந்தாள்.

வித்யாசதுரர் அவளைப் பிடித்து நிறுத்தி நாற்காலியில் அமர்த்தினுள்.

''கோபமுறுவதற்குக் காலமல்ல இது, குணசுந்தரி. இதைப் போன்ற சமயங்களில் சற்றே நிதானம்...''

''வேறு என்ன செய்வது? நம்முடைய பெருமை எல்லாம் குன்றி மண்ணுகிப் போய்விட்டது. வேலையை விட்டு வாருங்கள். காசி, கைலாசம் எங்கேயாவது போய்விடலாம்.''

''எதற்காக இந்த ஏமாற்றம்? விஷ்ணுதாஸ ஸ்வாமியின் ஆசிரமத்தில் அநாசாரம் ஏதும் நிகழ்வதில்லை. உயிர் பிழைத்துத் திரும்பிய குமுதசுந்தரிக்குச் சரஸ்வதிசந்திரன் அடைக்கலம் தருவதில் என்ன தவறு?''

குணசுந்தரி நிதானமுற்றுள்.

''ஆனுல் உலகம் என்ன நினைக்கும்?''

''நாம் நினைப்பதையே உலகமும் நினைக்கச் செய்வோம்.''

''நான் சுந்தரகிரிக்குப் போகட்டுமா? உத்தரவு தாருங்கள்.''

''எதற்காகப் போகவேண்டும்?''

''குஸுமசுந்தரியை அங்கேதானே அனுப்புவதாக இருக்கிறது. அவளை அழைத்துக்கொண்டு சுந்தரகௌரியுடன் செல்கிறேன்.''

''லோகாபவாதம் ஏற்பட்டால்?''

''இனி என்ன? நமக்குத்தான் பெருந் துர்ப்பாக்கியம் ஏற்பட்டுவிட்டதே!''

''அப்படிச் சொல்லக்கூடாது. உனக்குப் பள்ளிப் படிப்பு இல்லாது போனுலும் சுயமான திறனும் ஞானமும் உண்டு. அதன்மேல்தான் என் நம்பிக்கை எல்லாம் வைத்திருக்கிறேன். மந்திரி பதவியை விட்டு விலகிப் பாமரனுக மாறும்போது உன்னையே நான் அறிவுரைக்காக எதிர்நோக்குவேன். அப்படியிருக்கும்போது நீ சுந்தரகிரி சென்றுவிட்டால் என் கதி என்னுவது?''

''பெண்புத்தியை நம்பாதீர்கள். அது பின் புத்திதான்.''

''அதுதானில்லை. உலகம் அப்படி நினைத்து வருவது பெருந் தவருகும். இதோ நம்முடைய வாழ்வில் நாமிருவரும் எவ்வளவு மனமொருமித்து வந்திருக்கிருேம்? எத்தகைய கிலேசங்கள் நிறைந்து துக்கம் சூழ்ந்த காலத்திலும் நீ புன்புறுவலுடன் எனக்கு உறுதுணையாக இருந்திருக்கிருய்! வறுமையால் வாடின

காலத்திலும் பெருந்தன்மையுடன் என் தாய் தந்தையரையும் உடன்பிறந்தோரையும் நீ கண்ணெனக் காத்து வந்திருக்கிருய். இன்று ஏன் என்னைவிட்டுப் பிரிய முயல்கிருய்? நம்முடைய தொடர்புகள் அறுந்துவிட்டனவா? நீ இன்னும் என்னுடையவள்தானே?''

குணசுந்தரியின் குரல் தழுதழுத்தது. அவளால் பேச முடியவில்லை. கணவனைத் தழுவிக்கொண்டாள். அவருடைய தோளின் மேல் முகம் பதித்து விம்மினுள்.

''பிராணநாதரே, மன்னித்துவிடுங்கள். என்னுடைய மனக்கலக்கமெல்லாம் நீங்கள் போக்கிவிட்டீர்கள். உங்களைத் தவிர வேறு யார் எனக்கு வேண்டும்? குமுதசுந்தரியையும் குஸுமசுந்தரியையும் துச்சமாகவே நான் கருதுவேன். ஏதற்காக நீங்கள் திவான் பதவியைத் துறக்கவேண்டும்?''

''இதோ மனம் திறந்து பேசுகிறேன் கேள்: குமுதசுந்தரியைப்பற்றிய அபவாதம் பொய்யானுல் நமக்குத் துக்கம் ஏதும் இல்லை. சுந்தரகௌரி, சந்திரகாந்தன் இவர்களுடன் சரஸ்வதி சந்திரனைச் சந்தித்துவிட்டு வா. குஸுமசுந்தரியின் பாக்கியம் உதயமாகட்டும். சரஸ்வதிசந்திரனின்மீது குமுதசுந்தரியின் ஆசை இன்னும் அகலவில்லை என்ருல், அது நம் தவறுதான். நம் தவறுதலால் விளைந்த பயனை நாம் பெறுவதில் சிறிதும் பயந்து தயங்கக்கூடாது. தற்கொலை செய்ய முயன்று அதில் தோல்வியடைந்துபோன குமுதசுந்தரி சரஸ்வதிசந்திரனிடம் அடைக்கலம் புகுந்து மனம் மகிழ்வாள் என்ருல் நாம் அதற்குத் தடங்கலாக இருக்கக்கூடாது. விதவைக் கோலம் அடைந்துபோன அவளுக்கு நாம் உறுதுணையாக இருக்கவேண்டும்; அதுதான் நமது தர்மம். உலகம் நம்மைப் பிரஷ்டம் செய்யும்; தூற்றும். பிரஜைகளின் தூற்றுதலைப் பெற்றுவிட்டவரைப் பதவியிலிருந்து நீக்குவது என்பது அரசரின் தர்மம். நானும் திவான் பதவியினின்று மனமகிழ்ச்சியுடன் விலகுவேன். அது போலவே குஸுமசுந்தரியின் விருப்பத்தையும் நிறைவேற்றுவேன். அவளுடைய இச்சைப்படியே குமரிக் கோலத்திலேயே விட்டுவிடுவேன். அவளுக்கு எதிராக அவளை எவருக்கும் மணமுடிக்க மாட்டேன். வேண்டுமானுல் பம்பாயிலே அவள் என்றைக்கும் கன்னியாகக் காலம் கழிக்க ஏற்பாடுகள் செய்துவிடுவேன். உலகத்தோடு ஒட்டவொழுகவேண்டும், லோக தர்மம், பரம்பரையைப் பின்பற்றவேண்டும் என்றெல்லாம் எண்ணித்தான் குமுதசுந்தரியைப் பாழுங் கிணற்றில் தள்ளினேம். அதனுல் நமக்கும் அவளுக்கும் என்ன நன்மை விளைந்தது? பெரும்பாவந்தான் நம்மைச் சூழ்ந்திருக்கிறது. குமுதசுந்தரிக்கும் சரஸ்வதிசந்திர

னுக்கும் மணமுடிப்பது தக்க செயல் என்று தோன்றினல் உலகத்தின் தூற்றுதலுக்கு எதிராக இருந்தாலும் அதை நிறைவேற்றி வைப்பேன். அது போலவே குஸுமசுந்தரிக்கும் மணமகன் எவனேயும் தேடாமல் உலகத்தின் அபவாதத்தை ஏற்று அவளேக் குமரியாக வைத்துவிடுவேன்.''

''நீங்கள் சொல்வது உண்மையே. அரசருக்கும் மக்களுக்கும் மகளுக்கும் நீங்கள் செய்யவேண்டிய கடமைகள் இருக்கின்றன என்பதை மறக்கக்கூடாது. ஒரு கடமைக்காக இன்னெரு கடமையை ஏன் பலியிடவேண்டும்?''

''அதுதான் இல்லே. ஒரு கடமையை நிறைவேற்ற இன்னெரு கடமையைத் துறக்க வேண்டும் என்பதை நாம் தர்மமாகக் கருதினல் அது தர்மமே யல்ல; அதர்மமே யாகும். நம்முடைய குழந்தைகளுக்கான கடமை மற்றக் கடமைகளேக் காட்டிலும் சிறியது என்று எண்ணுவது தவறு. மக்கள் நலனுக்காகப் பொய் கூறுவதும் திருடுவதும் ஆகிய அதர்மச் செயல்கள் தர்மரூபம் பெறமாட்டா. ஓர் உயிரின் அதர்மச் செயலால் இன்னெரு உயிர் நலம் பெறும் என்ருல், அந்த உயிரின் நலம் அல்லது தீமையை வளர்க்கிருேம் என்பதையே நாம் உணர வேண்டும். குமுதம் - குஸுமா இருவரின் நலனும் தனித்தனி யானவை. மற்றக் கவலேகளேவிட்டு நாம் அவைபற்றியே தீவிர மாக எண்ண வேண்டும்.''

''பெரியவரின் விருப்பம் என்ன என்பதை நீங்கள் காண முயன்றீர்களோ?''

''தந்தையாரை நான் கலந்தாலோசிக்கவில்லே. ஒவ்வொரு வராக நாம் யோசனே கேட்க ஆரம்பித்தால், அதற்கு முடிவேதும் இல்லாது போகும். எல்லோரையும் நாம் திருப்தி செய்ய முடியாது. குமுதம் செத்துப்போய்விட்டாள் என்று எல்லோரும் எண்ணிவருகிருர்கள். இல்லே, அவள் உயிர் வாழ்கிருள் என்று தெரிவித்து நம்முடைய பிழையை ஏன் மறைக்க வேண்டும்? எல்லோருக்கும் மறைவாக அவள் சரஸ்வதிசந்திரனுடனேயே இருக்கட்டும். நீ என்ன சொல்கிருய்?''

''நான் சொன்னபடியேதான் எங்களே எல்லாம் சுந்தரகிரிக்கு அனுப்பிவிடுங்கள். குமுதசுந்தரி சுய புத்திக்கு வந்தால், அவளேப் புத்திதனரின் வீட்டிற்கு அனுப்பிவிடுவேன். அப்படி முடியவில்லே என்ருல், பெரியவரின் ஆலோசனேயைத்தான் கேட்கவேண்டும்.''

21. வழிகாட்டும் நண்பன்

விடியற்காலையில் எழுந்த குமுதசுந்தரி சரஸ்வதிசந்திரனை எழுப்பக் குரல் கொடுத்தாள். ஆனால் அவன் எழுந்திருக்காது போகவே அவள் அவனது தலையை வருடினாள். சரஸ்வதி சந்திரன் விழித்துக்கொண்டான்; அவனுடைய கரங்களைக் கையில் எடுத்துக்கொண்டாள்.

''இன்று என் கனவில் என் தாய் வந்தாள்; எனது நெற்றியில் மெல்ல வருடினாள். ஏதோ என்னிடம் அவள் சொல்வதாகத் தோன்றியது. உடனே விழித்துக்கொண்டேன்'' என்றான் அவன்.

''ஓ, அப்படியா! இதை நல்ல சகுனமென்றே கொள்ளலாம். இன்றுதானே உங்கள் நண்பர் சந்திரகாந்தர் வருகிறார்? நம்முடைய குடும்பத்தார்பற்றிய செய்தியெல்லாம் சொல்லுவார்.''

அப்போது குகைக்கு வெளியில் இரண்டு சாதுக்களிடையே சந்திரகாந்தன் இவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தான். அவனைத் தூரத்திலிருந்து பார்த்துவிட்ட சரஸ்வதிசந்திரன் மனமகிழ்வோடு, ''ஓ, சந்திரகாந்தன் வந்துவிட்டானே!'' என்று கூவினான்.

''இதோ, ஆக்ஞை தாருங்கள். நான் போகிறேன். நீங்கள் போய் அவரைச் சந்தியுங்கள். நான் யார் கண்களிலும் தென்படக்கூடாது'' என்று எழுந்து விரைந்து சென்றாள் குமுதசுந்தரி.

சரஸ்வதிசந்திரன் குகைக்கு வெளியே நடந்தான்; சந்திரகாந்தனை எதிர்கொண்டழைத்தான். உணர்ச்சிப் பிரவாகம் உருவெடுத்து ஓடியது. நீர்மல்கிய கண்களுடன் சந்திரகாந்தன் சரஸ்வதிசந்திரனை இறுகத் தழுவிக்கொண்டான்.

''ஆருயிர் நண்பனே, உனக்கு என்ன நடந்துவிட்டது? இது என்ன கோலம்? காவியுடையும் துறவறமும் எதற்கு?''

சந்திரகாந்தனின் முகம் பச்சாத்தாபத்தால் வெளிறிட்டது. சாதுக்களைப் பார்த்துச் சொன்னான்:

''இதோ, இவன்தான் என் உயிர்ச் சிநேகிதன். என்ன மறைந்து தோன்றினாலும் நட்பை மறைக்க முடியுமா?''

சரஸ்வதிசந்திரன் நண்பனின் உணர்ச்சிப் பெருக்கில் குளித்து எழுந்தான்.

''சந்திரகாந்தா, நான் எவ்வளவு பேர்களைத் துக்கத்தில் ஆழ்த்திவிட்டேன். நீயும் எனக்காக உன் வேலைகளையெல்லாம் துறந்துவிட்டு, கங்காபாயியையும் பிரிந்து என்னைத் தேடி வந்திருக்கிறாய்? கங்காபாயி சௌக்கியந்தானே?''

''ஒருவேளை உயிருடன் இருக்கலாம், இல்லாவிட்டால் செத்தும் போயிருக்கலாம்.''

''ஏன் இப்படிச் சொல்கிறாய்? உன் மனம் ஏன் இவ்வளவு கல்லாகிவிட்டது? அப்பா எப்படியிருக்கிறார்?''

''ஏன் அவரைப்பற்றிக் கவலைப்பட வேண்டும்? கேட்பதற்குக்கூட உனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?''

''சந்திரகாந்தா, ஏன் இந்தக் கொடூரமான வார்த்தைகளைச் சொல்கிறாய்? பேசுவது நீயா, அல்லது வேறு யாராவதா? என் மனசையெல்லாம் அறிந்தவன்தானே நீ? நீயா இப்படிப் பேசுவது?''

''உன் மனசை நான் அறிந்திருந்தேன் என்கிறாய் நீ; எனக்கு அது நினைவில்லை; நான் மாறிவிட்டேன் என்கிறாய்; எனக்கு அப்படித் தோன்றவில்லை.''

''உன் பேச்சில் தொனிக்கும் கடுமை குமுதசுந்தரியின் பேச்சிலும் இருந்திருந்தால் நான் பாக்கியசாலியாக இருந்திருப்பேன்.''

''குமுதசுந்தரியா?''

''ஆமாம்; நம் இருவரின் அதிர்ஷ்டம் அவள் இன்னும் உயிருடன் இருக்கிறாள். சுந்தரகிரியின் சந்நியாசினிகளுடன் அவள் வாழ்கிறாள். துறவறத்தால் அவள் மலர்ந்து மணம் வீசுகிறாள்.''

''அப்படியா, நான் அவளைப் பார்க்க முடியாதா?''

''நிச்சயமாய்! அவளுடைய தற்போதைய பெயர் மதுரிமையா என்பதாகும். இதோ அவளைச் சந்திக்கலாம். அவளை அழைக்கும்போது மதுரிமையா என்றே அழைக்க வேண்டும்'' என்று கூறிச் சரஸ்வதிசந்திரன் அவனைச் சந்நியாசினிகளிடம் அழைத்துச் சென்றான். அவர்களிடையில் துறவியுடை பூண்டு நின்றிருந்த குமுதசுந்தரியை அறிமுகம் செய்துவைத்தான்.

அவளுடைய எளிய உடையைக் கண்டு சந்திரகாந்தன் பதறிப் போனான். வால்கேசுவரம் பங்களாவில் சரஸ்வதிசந்திரன் மாட்டியிருந்த குமுதசுந்தரியின் உருவப் படத்தைப் பார்த்திருக்கிறான். அவளுடைய அந்த அழகும் இனிமையும் எதிரே எத்தகைய எளிய உடையில் காட்சி தருகின்றன!

''மதுரி, இதோ என் நண்பன் சந்திரகாந்தன்'' என்று நண்பனை அவளுக்கு அறிமுகம் செய்துவைத்தான் சரஸ்வதி சந்திரன்.

குமுதசுந்தரி கரம் கூப்பி வணங்கினாள். சந்திரகாந்தன் நீர் நிறைந்த கண்களுடன் கரம் குவித்தான். அவனால் தாள முடியவில்லை; அவளது காலடியில் நெடுமெனக் கீழே விழுந்தான்.

''மதுரிமையா! கல்மனம் கொண்ட என் நண்பன் உங்களுக்கு எவ்வளவு துக்கம் விளைவித்துவிட்டான்! மன்னிப்பு வேண்டியிருப்பானா என்ன என்பது எனக்குத் தெரியாது. இதோ நான் வேண்டுகிறேன்: தயை செய்து மன்னித்துவிடுங்கள். இனிய நீர் நிறைந்திருந்த தடாகம் உவர்க்கும் நீர் மிகுந்த கடலாகிவிட்டது.''

''சந்திரகாந்தஜீ! துறவிகளின் பரிசோதனையில் வெற்றி கண்டுவிட்டார் உங்களுடைய நண்பர். அவருடைய பெருந்தன்மையினால் என் ஏழை மனமும் அமைதி கண்டுவிட்டது. நிர்மலமாகிவிட்டது அவருடைய உள்ளக்கடல்; மீண்டும் இனிய நீர் நிறைந்துவிட்டிருக்கிறது.''

நாள் முழுவதும் சந்திரகாந்தனும் சரஸ்வதிசந்திரனும் ஸௌமனஸ்ய குகைக்குள் கழித்தார்கள். ஆதியோடந்தமாகத் தனது கதையைச் சொன்னான் சரஸ்வதிசந்திரன். நடுநடுவே குமுதசுந்தரியும் பேச்சில் கலந்துகொண்டாள். நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம்பற்றித் தெரிந்துகொண்ட சந்திரகாந்தன் ஆனந்தமும், கோபமும், குழப்பமும் ஆகிய பல உணர்ச்சிகளை அநுபவித்தான்.

''இனிமேல் செய்வது என்ன?'' என்ற கேள்வி எழுந்தது.

குமுதசுந்தரி சொன்னாள்.

''நீங்கள் செய்யப்போவது இனி என்ன என்பதுபற்றிக் கவலைப்படவேண்டாமென்று சொல்லிவிட்டேன். உங்களுடைய நண்பர் அதைத் தீர்த்துவைக்கும் வழியைச் சொல்லுவார்.''

சந்திரகாந்தன் தான் கொண்டு வந்த கடிதத்தை அவர்களிடம் தந்தான். வித்யாசதுரர் எழுதியிருந்தார்:

> ''என் புத்திரியின் விருப்பத்தை நிறைவேற்றுவதுதான் என் உண்மையான விருப்பம். அதைத் தவிர வேறெதுவும் நான் விரும்பவில்லை. குமுதம் விரும்பினால் அவளைச் சரஸ்வதிசந்திரனுக்கே மண முடித்துவைப்பேன். உலகத்தின் தூற்றுதலையோ, லோகாபவாதத்தையோ நான் பொருட்படுத்தப் போவதில்லை. குஸுமசுந்தரி விவாகம் செய்துகொள்ள

விரும்பவில்லை; ஆகவே, அவளைக் குமரியாகவே வைத்திருப்பேன்...குஸுமசுந்தரியை அழைத்துக்கொண்டு அன்னையும் சித்தியும் சுந்தரகிரி வருகிறார்கள். பாட்டனாரும் உடன் வருகிறார். எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறேன்.''

''சந்திரகாந்தா, அவளுடைய தந்தையாரின் அநுமதி இல்லையே என்ற குறை இந்தக் கடிதத்தால் போய்விட்டது. குமுதசுந்தரி விரும்பினால் அவள் திருப்திக்காக எதுவும் செய்யத் தயார்'' என்றான் சரஸ்வதிசந்திரன்.

''எனது திருப்தி என்ற பேச்சை விடுங்கள். என்னை மீண்டும் அடைவதுதான் அவருடைய பிராயச்சித்தம் என்ற பேச்சையும் தவிருங்கள். சந்திரகாந்தஜீ! அவருடைய வாழ்வின் நோக்கம் நிறைவேற, அவர் துவக்கியிருக்கும் யக்ஞம் பூர்த்தி பெற, நல்ல செயல்கள் யாவும் பூரணமுற என்ன செய்ய வேண்டும் என்பதையே யோசிக்கவேண்டும். அதுவே என் ஆசை. அதைத் தவிர வேறு பாக்கியம் ஏதும் எனக்குத் தேவையில்லை'' என்றாள் குமுதசுந்தரி; துக்கத்தால் தொண்டை அடைத்தது. கண்கள் நீர் வடித்தன.

அதைக் கண்ட சந்திரகாந்தன் உணர்ச்சி வசப்பட்டான். குமுதசுந்தரியின் சோகம் அவனைத் துயரில் மூழ்கடித்தது. இன்னொரு கடிதத்தை அவன் எடுத்தான். குஸுமசுந்தரியின் கையெழுத்து. குமுதசுந்தரி அதை வாங்கி மௌனமாகப் படித்தாள்.

''நீ உயிருடன் மீண்டுவிட்டாய் என்பதில் நம்பிக்கை மீண்டும் தளிர்த்திருக்கிறது. ஆனால் ஒன்று நான் சொல்லிவிடத்தான் வேண்டும்: கண்ணால் கண்டுவிட்டேன்; அதை உன்னிடம் ஏன் நான் மறைக்கவேண்டும்? பிரமாதனனின் துர்ச்செயலால் நீ உயிர் மாய்த்துக்கொண்டுவிட்டாய் என்ற செய்தியைக் காட்டிலும் நீ உயிருடன் இருக்கிறாய் என்ற செய்தியே பரபரப்பும் வெறுப்பும் மூட்டியிருக்கிறது. அதுவும் சுந்தரகிரியில் நீ சரஸ்வதிசந்திரருடன் தங்கியிருக்கிறாய் என்ற செய்தியால் ஆனந்தம் எய்துவதற்குப் பதில் இங்கே கசப்பும் கோபமுமே பரவியிருக்கின்றன. நான் வேறு என்ன எழுதட்டும்?

சரஸ்வதிசந்திரரின் நலத்தையே அம்மா விரும்புகிறாள். ஆனால் அந்த நலம் உன்னால்தான் விளையவேண்டும் என்பதை அம்மா விரும்பவில்லை. அப்பா மனம் திருப்தியடைய அவர் சொல்லுவதையே அம்மா கேட்பாள் என்பது உண்மைதான். ஆனால் நீ மறுமணம் செய்துகொண்டால் என்ன

நடக்கும் என்பதை எண்ணிப் பார்த்தால்..? ஜாதிப் பிரஷ்டமும் அபகீர்த்தியும் நம் எல்லோரையும் சேரும். தந்தை திவான் பதவியைத் துறக்க நேரிடும். தாத்தாவோ நீங்கள் இருவரும் சுந்தரகிரியிலே ஆசிரமத்திலே தங்கிவிடுங்கள் என்று சொல்லுகிறார். சித்தியோ நீ கல்யாணம் செய்து கொண்டால் உன் முகத்தைக்கூடப் பார்க்க மாட்டேன் என்று நிச்சயம் செய்திருக்கிறாள்.

சரஸ்வதிசந்திரரின் தந்தையாருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாம். உங்களிருவரைப்பற்றியுமே எப்போதும் புலம்பிக்கொண்டிருக்கிறாராம். உன் மாமனாரோ சந்நியாசம் வாங்கிக்கொள்ளப் போகிறாராம்.

நான் உனக்கு என்ன சொல்லட்டும்! இந்தத் தொல்லையில் நீ அகப்பட்டுக் கொள்ளாதே என்றுதான் கூறுவேன். நானும் சம்சாரம் என்ற வலையில் விழப்போவதில்லை. நாங்கள் அனைவரும் அங்கே வருகிறோம்.''

கடிதத்தை வாசித்து முடித்த குமுதசுந்தரியின் மனத்தில் விதம்விதமான எண்ணங்கள் எழுந்தன. ''சந்திரகாந்தஜீ, இதைப் படித்துப் பாருங்கள். புதிய யோசனைகள் புலப்படலாம்'' என்றவாறு அதை அவனிடம் தந்தாள். சந்திரகாந்தனும் சரஸ்வதி சந்திரனும் படித்தார்கள். சரஸ்வதிசந்திரன் படித்தவுடன் திகைத்துப்போனான். என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்து நின்றான்.

கங்காவின் கடிதத்தின்மூலம் குமானின் புதல்வன் தன்பாயீ காலமடைந்துவிட்டான் என்ற செய்தியை அறிந்துகொண்டார்கள்.

குமுதசுந்தரி சந்திரகாந்தனைத் தூண்டினாள். அவன் சொன்னான்:

''நீங்கள் இருவரும் கனவு கண்டீர்கள். கனவிலே உங்களிருவரின் சேர்க்கை நிறைவேறுவதைப் பார்த்தீர்கள். இந்தச் சையோகம் நனவில் நிகழுமானால் உலகம் வரவேற்காது; உங்களைப் பிரஷ்டம் செய்யும்; ஒதுக்கிவைக்கும். பொழியும் நீர் கடலில் வியர்த்தமாகி விழுந்துவிடும். அதனால் யாருக்கு என்ன பயன்?

''நீங்கள் இருவரும் விவாகம் செய்துகொள்ளாமல் இருந்தால் நீங்கள் கண்ட தூய கனவு நிறைவேறாது. நிலவின் குளிர் ஒளிக்குப் பதில் அமாவாசையின் இருளே சூழும். பெண்ணின் பயன், சரஸ்வதிசந்திரனின் சாதனைகள் நிறையப்பெறாமற் போய்விடும்.

"ஸ்தூலப் பிரீதியைத் தனித்து ஒதுக்கிவைத்தாலும் வெறும் மனத்தால் நேசத்தைக் காத்தாலும் உலகம் ஒப்புக்கொள்ளாது; அது வம்பளக்கத்தான் செய்யும்.

"இந்த மூன்று வழிகளும் சாத்தியமானவையல்ல. ஒன்றே ஒன்றுதான் முடியக்கூடிய காரியம்: குணசுந்தரி, சுந்தரகௌரி இருவரின் ஆசைகளையும் நிறைவேற்றுவதே; அது அவர்களைத் திருப்தியுறச் செய்வதுதான். சரஸ்வதிசந்திரனும் குஸுமசுந்தரியும் விவாகம் செய்துகொள்ள வேண்டும்; குமுதசுந்தரி இங்கே பெண்களுக்கு என இருக்கும் மடத்தில் புகுந்து வாழ்நாளைக் கழிக்கவேண்டும். இவ்விரண்டும் நடக்குமானால் உலகம் புகழும்; வாழ்த்தும். சரஸ்வதிசந்திரனுக்கு இரண்டு வாழ்க்கைத் துணைவியர் கிட்டுவர். ஆனால் இதிலோ மூன்றுவிதத் தடங்கல்கள் உள்ளன. குஸுமா வாழ்நாளெல்லாம் கன்னியாக இருக்கவேண்டும் என்கிறாள். சரஸ்வதிசந்திரனின் இதயம் பழைய உறவைத் துறக்கத் தயாராகவேண்டும்; புதிய உறவை வரவேற்க முயலவேண்டும். இம்மூன்று முட்டுக்கட்டைகளும் நீங்கினால் என்னுடைய கங்காவைக்காட்டிலும் ரஸிகத்தன்மை மிக்க குஸுமா, சரஸ்வதி சந்திரனின் வாழ்வில் இனிமை கூட்டுவாள்.

"உன்னிடத்தில் பொதுநலத் தொண்டுக்கான ஆவல் தீவிரமாக இருக்கிறது. அந்த ஆவல் நிறைவுபெற நீங்களிருவரும் சேர்ந்தே இயங்கவேண்டும், அதே சமயம் உலகத்தாரின் தூற்றலும் இருக்கக்கூடாது என்றால் இதுதான் வழி: வெளிப்படையாகச் சரஸ்வதிசந்திரனும் குஸுமசுந்தரியும் மணந்துகொள்ளுவது; பின்னர்க் குஸுமசுந்தரியைச் சுதந்திரமாக விட்டுவிடுவது; நீ இருவரின்மேலும் சூட்சுமப் பிரீதியை வைத்துக்கொள்ளலாம்; குஸுமா சுதந்திரமாக இருப்பாள். உலகத்தோரின் கண்களில் பழிச்செயல் ஏதும் நிகழாது. குணசுந்தரியும் மகிழ்வாள்; வித்யாசதுரரும் திருப்தியுறுவார்."

"பொதுநலனுக்காகப் பொதுமக்களை வஞ்சிக்க விரும்பவில்லை நான். கிளியையும் மைனாவையும் கூண்டில் அடைத்து, அவற்றின் நலனைப் பேணுவதை நான் விரும்பவில்லை. குஸுமசுந்தரியை மணந்து தீயை வலம் வந்துவிட்டுப் பிரதிக்ஞைகளை உடைத்தெறிய மாட்டேன்; அவளைத் தனியேவிட்டு என்னை நானே ஏமாற்றிக்கொள்ள மாட்டேன். தர்மந்தான் தலையாயது; அதற்குப் பின்னரே நம் ஆசைகளும் அபிலாஷைகளும்" என்றான் சரஸ்வதிசந்திரன்.

"குமுதசுந்தரி, ஆடவர்களின் புத்தியே இப்படித்தான். நீ என்ன சொல்கிறாய்? எல்லாப் பொறுப்பும் இனி உன்னுடையதுதான்" என்றான் சந்திரகாந்தன்.

குமுதசுந்தரி சிந்தனையில் ஆழ்ந்தாள்; பிறகு சரஸ்வதி சந்திரனை நோக்கி அவள் சொன்னாள்:

''இதோ முன்னமேயே ஒப்புக்கொண் டிருக்கிறீர்கள், நான் என்ன முடிவு செய்கிறேனோ, அதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று. ஞாபகம் இருக்கிறதா?''

''ஓ! நம்முடைய எதிர்காலத்தைப்பற்றி நீ என்ன நிர்ணயம் செய்கிறாயோ அதையே ஒப்புக்கொள்வேன்.''

''சந்திரகாந்தஜீ நாம் சிந்திக்க வேண்டிய வழிகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். நானும் என் தங்கை குஸுமசுந்தரியும் கலந்தாலோசிக்கிறோம். சந்திராவளிமையாவும் எங்களுக்குப் புத்திமதி சொல்லுவாள். அவளையும் நாங்கள் எங்கள் பேச்சில் ஈடுபடச் செய்வோம்.''

இரவில் சந்திராவளி குமுதசுந்தரியைச் சந்தித்தாள். மதுரியின் உண்மையை அறிந்துகொண்டாள். பஞ்சராத்திரியின் அநுபவங்களைத் தெரிந்துகொண்டாள். நடுநிசிவரை இரண்டு நண்பர்களும், சந்திராவளி, குமுதசுந்தரி நால்வரும் ஸௌமனஸ்ய குகையில் பேச்சில் ஈடுபட்டார்கள். பின்பு சந்திராவளியும் குமுதசுந்தரியும் அங்கேயிருந்து அகன்று உறங்கச் சென்றார்கள். உறக்கம் வராமல் நெடுநேரம் விழித்துக்கொண் டிருந்தாள் குமுதசுந்தரி. பொழுது புலர்ந்ததும் அவள் சரஸ்வதி சந்திரனிடம் சென்று கரம்குவித்து வணங்கினாள்.

''இதோ நான் தாயிடம் திரும்பிச் செல்லப் போகிறேன். அதற்காக உங்கள் உத்தரவை வேண்டுகிறேன்: நீங்களும் நேரம் இருந்தால் வாருங்கள்... சந்திரகாந்தஜீ! நீங்கள் காவியுடை அணியாவிடினும் தர்மசீலரே! எல்லாம் அறிந்தவர் நீங்கள். நான் அதிகமாகச் சொல்வானேன்? உங்களுடைய நண்பர் தர்மத்தையே பெரிதெனக் கருதுகிறார். நானோ நட்பையே உயர்ந்ததாக எண்ணுகிறேன். தர்மத்தை உணர்ந்துகொள்ள எனக்குப் புத்தியும் வித்தையும் இல்லை. ஆனால் அவருடைய தர்மமும் என்னுடைய நட்பும் ஒன்றே ஒன்றுதான்; ஒரே சாரத்தைத்தான் தருகிறது... இதோ என் சகோதரியிடம் போகிறேன், இனி என்ன செய்யவேண்டும் என்பதை நிச்சயிக்க. அதற்குள் தங்கள் நண்பரைக் கவனித்துக் காத்து வாருங்கள்'' என்று கூறினாள். அவள் குரல் தழுதழுத்தது. சரஸ்வதி சந்திரனைப் பார்த்து மீண்டும் சொன்னாள்:

''நம்முடைய கனவுகளைப்பற்றியெல்லாம் எழுதி வைத்திருந்தீர்களே அதைத் தருகிறீர்களா? என் தங்கையிடம் நான் காட்டுகிறேன்'' என்று கூறி வாங்கிக்கொண்டதும், குமுதம் அகன்றாள்.

''சரஸ்வதிசந்திரா, இப்போது உன்னுடைய குருவிடம் போகலாமா?'' என்று சந்திரகாந்தன் வினவினன். சரஸ்வதி சந்திரன் ஒப்புக்கொண்டான்.

இருவரும் நடந்தார்கள். ஒரு விநாடி சரஸ்வதிசந்திரன் நின்று ஸௌமனஸ்ய குகையை மனத்தில் வணங்கிக்கொண்டான். அந்தக் குகையில் அவன் கழித்த அந்த நாட்களில் அடைந்த அநுபவத்தை அளவிட முடியுமா?

சித்திரை மாதத்து உச்சி வெயில்; அதனது வெப்பத்தைத் தணிக்குமாறு வீசும் இளங்காற்று; பச்சைப் பசுமை தரும் தண்மை; ஆங்காங்கே அமர்ந்திருக்கும் யோகியரின் நிஷ்டை. எல்லாவற்றையும் கடந்து இரண்டு நண்பர்களும் சென்றார்கள். சரஸ்வதிசந்திரன் புதிய அமைதியை அடைந்தவனுகத் தோன்றினன்.

விஷ்ணுதாஸரைக் கண்டதும் சரஸ்வதிசந்திரன் நமஸ்கரித்தான். அவனைக் கண்டதும் துறவி மகிழ்வுடன் ஆலிங்கனம் செய்துகொண்டார். சரஸ்வதிசந்திரன் சந்திரகாந்தனை அறிமுகம் செய்துவைத்தான்.

விஷ்ணுதாஸர் சொன்னர்:

''நவீனசந்திரா, ஒளிவீசும் யக்ஞத்திற்கு உரிமையாளனுக ஆகிவிட்டாய். உனது அறிவு கதிரவனின் கதிர்கள்போல் பிரகாசிக்கும்போது நாங்கள் எல்லாரும் மிகவும் மகிழ்வோம்.''

மிகுந்த பணிவுடன், ''தங்கள் ஆசியே எல்லா வெற்றிக்கும் வித்து. ஆசியில்லாதுபோனல் எதுவும் நிறைவுபெருது'' என்றுன் சரஸ்வதிசந்திரன்.

22. தாயும் மகளும்

குமுதம் வசந்த குகையினின்று வெளியே வந்த சிறிது நேரத்திற்கு முன்னல் அவளுடைய குடும்பத்தினர் தமக்காக அடிக்கப்பட்டிருந்த கூடாரங்களில் வந்து தங்கினர்கள். மோஹினிமையா அவர்களைச் சந்தித்து தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டாள்.

குணசுந்தரி, ''உங்களுக்கிடையில் மதுரிமையா என்ற பெயருடன் யாராவது பெண் இருக்கிருளா?'' என்று மோஹினி மையாவை வினவினள்.

''ஆமாம், எங்கள் விருந்தாளியாக எங்களிடம் தங்கியிருக்கிருள். எங்களது துறவறத்திலே அவள் ஈடுபாடு காண்பித்

திருக்கிருள். நேற்று முந்திய தினத்திலிருந்து தானுகவே காவி யுடை அணிய முற்பட்டிருக்கிருள்'' என்ருள் மோஹினிமையா.

''என்னுடைய மகள் ஒருத்தி நீரில் மூழ்கி இறந்துவிட்டாள் என்று எண்ணி வருகிறோம். தங்களுடைய ஆசிரமத்திலே தங்கி வரும் மதுரிமையா ஒருவேளை அவளாக இருக்கலாமோ என்று சம்சயப்படுகிறோம்'' என்ருள் குணசுந்தரி.

''எங்களுடைய குமுதசுந்தரி அவ்வாறே சந்நியாசினியாக மாறியிருந்தாலும் நாங்கள் வேண்டிஞல் நீங்கள் திரும்பத் தரு வீர்களோ?'' என்று வினவிஞள் சுந்தரகௌரி.

''அடைக்கலம் என்று வருபவர்களை ஏற்போமே தவிர, பிறருடைய சரணத்தில் எவரையும் இடுவதில்லை'' என்ருள் மோஹினி புன்சிரிப்புடன்.

''ஆ! சித்தி தோற்றுவிட்டாள். குமுதசுந்தரியும் நானும் சந்நியாசினிகளாக ஆஞல் மீண்டும் சம்சாரத்தில் புகமுடியாது என்பது நிச்சயமாகிவிட்டதா?'' என்று கை கொட்டிஞள் குஸும சுந்தரி.

சுந்தரகௌரிக்குச் சினம் பொங்கியது. குணசுந்தரி அவளை மேலே பேசவிடாமல் தடுத்தாள். ''மோஹினிமையா, நீங்கள் சொல்லுவது உண்மைதான். ஆஞல் என்னைப் போன்ற தாயின் உள்ளத்தை மகிழச் செய்ய வேண்டியது உங்களுடைய தர்மந் தானே?'' என்ருள்.

''எதை நீங்கள் தர்மம் என்று கருதுகிறீர்களோ அதையும் தர்மம் என்று கருதுபவள்தான் மோஹினிமையா. ஆஞல் மதுரியை மீண்டும் சம்சாரத்தில் புகுத்தி வேண்டாவெறுப் புடன் அவளை எங்கேயாவது மணமுடித்து வாழ்வைக் குலைக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பிஞல் துறவிகள் மதுரியை ரட்சிப் பார்கள்; உங்கள் விருப்பம் நிறைவேருது. ஆஞல் நீங்கள் தார்மிக நெறியில் மதுரிக்கு வழி காட்டிஞல் இங்குள்ள யாவரும் வரவேற்பார்கள். யதுநந்தனலின் பிரசாதத்தை வழங்கி ஆசீர் வதிப்பார்கள்.''

மோஹினி அகன்ருள்.

அப்போது மானசதுரர் அவ்விடம் வந்து குணசுந்தரியைக் கேட்டார்: ''மோஹினிமையாவிடமிருந்து ஏதாவது செய்தி கிடைத்ததா?''

''சந்திராவளிமையா குமுதசுந்தரியை அழைத்துக்கொண்டு வருவாளாம். அப்போது நம்முடைய கௌரவம் பிழைக்க வேண்டுமா, இல்லை பாழாகவேண்டுமா என்று வழி சொல்லு வாளாம்!''

''ஏன் கௌரவத்தைப்பற்றி மனசை இவ்வளவு துன்புறுத்திக்கொள்ளுகிறாய்? பாவம், அவள் கொள்ளைக்காரர்களிடமிருந்து தப்பி, நீரில் சிக்கி உயிருடன் மீண்டும் வந்து துறவிகளுடன் வசிக்கிறாள். அப்படியே அவளை விட்டுவிடு; உலகத்திற்கு நாம் ஏன் அறிவிக்கவேண்டும்?''

''வெளிக் கௌரவத்தை விட்டுவிடலாம். ஆனால் நம்முடைய உள்ளத்தில் பட்ட காயம் ஆறிவிடுமா? எதை நாம் தர்மமாகக் கருதுகிறோமோ அதைச் சாதுக்கள் அதர்மமாக எண்ணி வருகிறார்கள். உண்மையைச் சொல்லப்போனால் குமுதசுந்தரியின் பெயரை எடுக்கவே தயக்கமாய் இருக்கிறது. அவள் வரட்டும்; அவள் என்ன சொல்லுகிறாள் என்பதைப் பார்ப்போம்.''

''எதற்காக அவள் பெயரில் நாம் குற்றம் காணவேண்டும்? குற்றம் கண்டு என்ன பயன்? அவளுக்குத்தான் நாம் என்ன நன்மை புரிந்தோம்? அவளுடைய மணவாழ்வில் எவ்வளவு துயர்! இதோ, அவள் வரப்போகிறாள்; அவளிடம் குற்றம் ஏதும் கண்டுகொள்ளாமல் இருப்பாய்; அவளை மனத்துயரில் மீண்டும் ஆழ்த்திவிடாதே! இதோ, நான் ஒன்று சொல்லுவேன்: குமுதசுந்தரியிடம் குஸுமசுந்தரியைப் பேசச் சொல். இரு சகோதரிகளும் மனம்விட்டு பேசிக்கொள்வார்கள்... குஸுமசுந்தரி, அக்காவிடம் சொல்: வேறு யார் எந்தப் பக்கம் சென்றாலும் சரி, நான் அவள் கட்சிதான். கொள்ளைக்காரர்களிடமிருந்து அவளை மீட்பதற்காகக் குதிரை ஏறின பாட்டனார் சம்சார துக்கத்திலிருந்து மீட்பதற்காகத் தயாராக இருக்கிறார் என்று சொல்; எதிர் வருகிற உலகத்தின் எதிர்ப்பையும் சமாளிக்கத் தயாராகக் கச்சை கட்டிக்கொண்டு நிற்கிறார் என்று சொல்.''

மானசதுரர் சொல்லிவிட்டு எழுந்து சென்றார். குணசுந்தரி பெருமூச்சு விட்டாள்.

''நான் என்ன செய்யட்டும்? இந்தக் கிழவரும் அவளுடன் சேர்ந்துவிட்டாரே! இதை என்னவென்று சொல்லுவது? மாமியார் உயிருடன் இருந்தால் நிலைமை இப்படியாகுமா?''

சுந்தரகௌரி குஸுமாவை அழைத்துச் சொன்னாள்:

''ஏதோ தாத்தா உத்தரவிட்டாகிவிட்டது. உன் அக்காவைப் பார்த்தால் பேசு. அவள் தோப்புக்கரணம் போடச் சொன்னால் போடவேண்டாமா?''

''சித்தி, ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள்? அவளை நாம் சந்தித்து அவள் என்ன சொல்லுகிறாள் என்பதைக் கொஞ்சங்கூட அறியாமல் ஏன் அவள்மேல் அநாவசியமாகப் பழி சாற்ற

வேண்டும்? ஊரார் பேச்சைக் கேட்டுவிட்டு ஏன் குற்றம் சுமத்த வேண்டும்?''

''இனிமேல் தெரிந்துகொள்ள என்ன இருக்கிறது? நீ, மோஹினி, சந்திராவளி எல்லாரும் சொல்லுவது உண்மை. நான், உன் அம்மா, சொல்வதெல்லாம் தப்பு; போதுமா?''

''சரி, சரி; நான் போகிறேன். நீங்கள் எல்லோரும் குமுத சுந்தரியைக் கைவிட்டீர்கள் என்றால், நானொருத்தியாவது அவள் பக்கம் பேசவேண்டாமா?''

''சரி, போய் வா.'''

குஸுமசுந்தரி நகர்ந்தாள்.

''கலியுகம் உண்மையாகவே வந்துவிட்டது'' என்று முணு முணுத்த சுந்தரகௌரியின் குரல் குஸுமாவின் காதில் படாமல் இல்லை. குஸுமா தனது கூடாரத்தில் சென்று உட்கார்ந்தாள். கூடாரத்தின் வெளியே பார்வையை ஓட்டினாள். பார்வை சென்றவரைக்கும் நெளிந்து சென்ற பாதையின் இரு மருங்கிலும் நெடுமரங்கள்; அவை விரித்த குளிர் நிழல்; கண்ணுக்கினிமை தரும் பசுமை; சிவந்த பாறைகள்; அவற்றின்மீது செறி நிழல் தரும் மரஇலைகள்; அவை காற்றில் சலசலக்கும் இனிய ஓசை - எல்லாம் குஸுமாவுக்கு அமைதி தந்தன.

தூரத்திலே தெரிந்த பாதையின் மைல்கல் ஒன்றின்மீது குத்திட்டவண்ணம் உட்கார்ந்திருந்தார் மானசதுரர்; அவருடைய பார்வை பாதையிலே நிலைத்திருந்தது. யார் யார் வருகிறார்கள் என்பதையே அவருடைய கண்கள் தேடிக்கொண்டிருந்தன.

கடைசியில் பாதையின் கோடியில் சந்திராவளியும் குமுத சுந்தரியும் தோன்றினார்கள். பேசிக்கொண்டே மானசதுரரின் பக்கம் நெருங்கினார்கள். குமுதசுந்தரியின் பார்வை வயோதிகர் மானசதுரரின்மீது பட்டவுடன் பேச்சற்றுத் தடுமாறினாள். சந்திராவளி அதை உணர்ந்தவுடன் என்னவென்று வினவினாள்: ''இல்லை, அதோ அங்கே உட்கார்ந்திருக்கும் அந்த மனிதர் என் பாட்டனார் போலத் தோன்றுகிறது'' என்றாள் குமுத சுந்தரி.

''ஆமாம், அவர்தான். வாழ்க்கையில் அடிபட்டிருக்கும் அவர் ஏதாவது இரண்டு மூன்று கடின வார்த்தைகள் பேசினாலும் நீ பொருட்படுத்தக்கூடாது; கடினமான மலைப்பாறைகள் எதிர்வந்தாலும் தன் வழியே பாயும் தூய கங்கையின் பிரவாகம் போன்ற உன் நோக்கத்தை நீ மறவாதே.''

''பிரளயகாலத்தில் தன்னந்தனியாக விழித்திருக்கும் நாராயணனைப்போல என்னுடைய பிரியமான தாத்தா என்னைப்பற்றித் தான் யோசித்துக்கொண்டிருப்பார்.''

அதற்குள் அவர்கள் இருவரும் மானசதுரரை நெருங்கினர். அவரும் எதிரே வந்து குமுதசுந்தரியை நோக்கி, ''என் அருமைக் குமுதா!'' என்றார்.

குமுதம், ''தாத்தா'' என்று அலறியவண்ணம் அவரைக் கட்டிக்கொண்டாள். அவள் கண்களில் நீர் வடிந்தது.

கரகரத்த குரலுடன் மானசதுரர் அவளை உச்சி மோந்தார்:

''யார் என்ன சொன்னாலும் உன் பக்கந்தான் நான், அம்மா! நீ கொஞ்சங்கூடப் பயப்படாதே! உன் மனம் நோக ஒரு சொல் கூடச் சொல்லமாட்டேன்.''

மானசதுரரின் சோர்ந்த கண்களிலிருந்து கண்ணீர் பெருகி ஓடியது. குமுதசுந்தரி அவரது துயரத்தைக் காணப் பொறுக்காமல் சொன்னாள்:

''தாத்தா, இந்த விதவைக்கோலத்தில் வெள்ளைப் புடைவையைவிடத் துறவிகளின் காவியுடையே சிறந்ததெனக் கருதி உடுத்துக்கொண்டிருக்கிறேன். என்னால் உங்களுக்கு எவ்வளவு துயரம் ஏற்பட்டிருக்கிறது என்று அறிந்து என் மனம் மிகவும் துன்புறுகிறது. என்னுடைய சின்னஞ் சிறு வயசில் என் அன்புக்காக எவ்வளவோ துயரம் தாங்கினீர்கள். இதோ, இந்த முதுமையில் கூட உங்களுக்குச் சாந்தியில்லை. கண் மறைவாக இருந்து என் காலத்தைக் கழிக்கிறேன். தயை செய்து அநுமதி தாருங்கள். இல்லை என்று சொல்லிவிடாதீர்கள்.''

''என் கண்ணே, உன் நன்மைக்காக எதுவும் செய்யத் தயார். ஆனால் உன் கண்ணீரைப் பார்க்க என்னால் சகித்திருக்க முடியாது!''

பேசிக்கொண்டே அவர்கள் கூடாரங்களை நெருங்கினார்கள். குமுதசுந்தரியைப் பார்த்த மாத்திரத்தில் மானைப்போலத் தாவி ஓடிவந்தாள் குஸுமா; அக்காளை ஆசையுடன் அணைத்துக்கொண்டாள்.

''அக்கா! நீ வந்துவிட்டாயா?'' - இருவரும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டார்கள்; அவர்களின் கண்களினின்றும் நீர் தாரை தாரையாக ஓடியது.

''குஸுமா, குமுதசுந்தரியின் காவியுடையைக் களைந்தெறிவதில் தான் உன் சாமர்த்தியம் இருக்கிறது; தெரியுமா?'' என்றார் தாத்தா.

''தாத்தா! உங்களுக்குத் தெரியாதா, எனக்குக் காவியுடையில்தான் பிரியம் என்று. அதே போலத்தான் குமுதசுந்தரிக்கும். நிரந்தரமான காவியுடை அணிவதில்தான் கெட்டிக்காரத்தனம் இருக்கிறது'' என்றாள் குஸுமம்.

நால்வரும் நடந்தார்கள்.

''தாத்தா நீங்கள் சொன்னமாதிரி நாங்கள் இருவரும் இதோ கூடாரம் ஒன்றில் பேசிக்கொண்டிருக்கிறோம். நீங்கள் சந்திராவளிமையாவை அம்மாவிடம் அழைத்துச் செல்லுங்கள். எப்போது வேண்டுமானாலும் சொல்லி அனுப்புங்கள்: நாங்கள் இருவரும் வருவோம்'' என்றாள் குஸுமா.

அப்போது சந்திராவளியைப் பார்த்துக் குமுதசுந்தரி மொழிந்தாள்:

''சந்திராவளிமையா, இதோ குஸுமாவுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருப்பேன். இவர் எனக்குப் புதிய மார்க்கம் ஒன்று சொல்லுவாள் என்று தோன்றுகிறது. என்னைப்பற்றி விதம் விதமான கதைகள் கேட்டு ஒருவேளை மனங் கலங்கியிருக்கும் என் அன்னையைக் கண்டு பேசுங்கள்; ஆதியோடந்தமாய் என்னைப் பற்றிச் சொல்லுங்கள். அவள் அமைதியுறுவாள்....தாத்தா, எனக்கு இருமுறை சந்திராவளிமையாதான் உயிர்ப்பிச்சை தந்தாள். மூன்றாவது முறை என் வாழ்வு வெற்றியடைய வழி காட்டினாள். நான் இதற்குமேல் என்ன சொல்லட்டும்? எனக்கு இனி வாழ்வில் தியாகம் செய்ய என்ன பாக்கி இருக்கிறது? தியாகிகளிடையே நான் வாழ்கிறேன்; அவர்களின் வாழ்வு முறையை நானும் ஒப்புக்கொண்டு விட்டேன். அம்மாவிடம் சொல்லுங்கள்: துறவறம் புகுந்துவிட்ட நான் மிகவும் அமைதியுடன் இருக்கிறேன், இந்தச் சுகமே போதும் எனக்கு என்று அம்மாவிடம் சொல்லுங்கள். எனக்கு வேறு எதுவும் வேண்டாம்.''

மானசதுரர் கலங்கினார். அவரால் பேச முடியவில்லை. வாய் குழறியது. திடப்படுத்திக்கொண்டு சொன்னார்:

''கவலைப்படாதே, குமுதா! உன் துறவறம் நிலைத்து நிற்கட்டும். உன்னுடைய மனத் தைரியத்தைப் பார்த்தால் எனக்கே வெட்கமாக இருக்கிறது. இந்தச் சின்னஞ்சிறு வயதில் காவியுடை அணிந்துகொண்டு விட்டாய்; நானும் துறவியாகி, இதோ இங்கேயே உன்னுடன் தங்கிவிடுகிறேன். இன்றோ நாளையோ என்றிருக்கும் எனக்குமட்டும் வாழ்வில் ஏன் ஆசை!''

ஒரு கூடாரத்தில் மானசதுரர், குணசுந்தரி, சுந்தரகௌரி, சந்திராவளிமையா ஆகியோர் அமர்ந்து பேசினார்கள். சந்திராவளி குமுதசுந்தரியின் கதையைச் சொன்னாள். குணசுந்தரி

அதைக் கேட்டு ஆறுதல் உற்ருள்; மகள் அறநெறியினின்று பிறழவில்லை என்பதை அறிந்து அமைதிகொண்டாள். இனி என்ன என்ற எதிர்கால எண்ணங்களில் ஈடுபட்டாள்.

குமுதசுந்தரி தன்னுடைய கதையில் பாதியைகூடக் குஸுமாவிடம் சொல்லி முடிக்கவில்லை. தானும் சரஸ்வதிசந்திரனும் கண்ட கனவின் அரைப் பகுதியைத்தான் சொல்லியிருந்தாள். அதற்குள் சாப்பிடும் வேளை நெருங்கிவிட்டது. வெளியே சாப்பிட அழைப்பதற்காகச் சுந்தரகௌரி வந்து குரல் கொடுத்தாள். குரலைக் கேட்டு வெளிவந்தாள் குஸுமா.

''சித்தி, இன்னும் எங்கள் பேச்சு முடியவில்லை. எங்கள் சாப்பாட்டை இங்கே அனுப்பிவிட ஏற்பாடு செய்யுங்கள். என் அக்காவை நீங்கள் உயிருடன் இருப்பதாகக் கருதாமல் இருப்பது போல என்னையும் அப்படியே நினைத்துக் கொள்ளுங்கள்.''

''சரி, சரி; சொன்னுல் கேட்கமாட்டாய்! என் பேச்சைக் குமுதசுந்தரிதான் கேட்பாள். நானே வருகிறேன்.''

சுந்தரகௌரி குஸுமாவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தாள். அவளைக் கண்டதும் குமுதம் எழுந்தாள். சுந்தரகௌரி அவளைக் கண்டதும், 'பொலபொல'வென்று நீருகுத்தாள்.

''குமுதா, நாங்கள் உன்னை எவ்வளவு துக்கத்தில் ஆழ்த்திவிட்டோம்! நடந்ததெல்லாம் இனி மறந்துவிடவேண்டும். சாப்பிட வா, அம்மா அழைக்கிருள். இல்லை, அம்மாவையே இங்கே அனுப்பட்டுமா?''

''சித்தி, இல்லை. நான் துறவிகளுடனேயே சாப்பிடுவேன். நான் உயிருடன் இருக்கிறேன் என்பதை எல்லோருக்கும் தெரிவித்து என்ன பலன்?''

''எல்லோருக்கும் தெரியட்டுமே; அதனுல் என்ன? சரி, கிளம்பு.''

''அப்படியே.''

குமுதா கண்ணீரும் கம்பலையுமாகச் சுந்தரகௌரியைத் தொடர்ந்தாள். அவர்களை எதிர்நோக்கி நின்ருள் குணசுந்தரி.

தாயைக் கண்ட மாத்திரத்தில் குமுதசுந்தரியால் தாளவில்லை. துயரம் மடை திறந்து வெளியே பாய்ந்தது; ஓடோடி அவள் சரணங்களில் எண் சாண் கிடையாக விழுந்து கதறினுள்.

தாய் மகளைப் பிடித்து நிறுத்த முயன்ருள்; குமுதசுந்தரி கேட்கவில்லை.

''குமுதா, எழுந்திரு! என் கால்களைப் பிடிப்பதால் என்ன பிரயோஜனம்? நமக்கெல்லாம் வயதில் பெரியவரான தாத்தாவை அல்லவா வணங்கவேண்டும்?''

''அம்மா, நான் தாத்தாவை வரும் வழியிலேயே பார்த்து என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டேன்.''

''அப்படியானால் எழுந்திரு. அவரை வணங்கினால் ஆயிரம் முறை என்னை வணங்கிய மாதிரி.''

ஊஹூம், குமுதம் எழுந்திருக்கவில்லை.

மானசதுரர் முன்வந்து குமுதசுந்தரியைப் பிடித்து எழச் செய்தார்.

''அம்மா, எழுந்திரு!''

23. கங்கையும் யமுனையும்

''குமுதா, உலக வாழ்வைத் துறந்து எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டிருந்த சரஸ்வதிசந்திரருடன் அந்த 'இரவை'க் கண்டாய்? அந்தத் தரிசனத்தினால்தானே இந்தத் துறவறமும் தியாகமும்?''

கூடாரத்தினுள் திரும்ப வந்து நுழைந்த குமுதசுந்தரியிடம் இந்தக் கேள்வியைக் கேட்டாள் குஸுமசுந்தரி.

''ஆமாம்; அந்தத் தரிசனத்தை எழுத்தில் வடித்திருக்கிறார். அந்தக் கட்டுரையை இதோ, நீயே வைத்துக்கொள்'' என்றதும் அவள் தன் தங்கைக்குக் கட்டுரையை நீட்டினாள்.

''எனக்கா? நான் ஏன் வைத்துக்கொள்ளவேண்டும்?''

''ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு நீதான் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.''

''அப்படியென்ன முடிவுக்கு வந்திருக்கிறாய், சொல்லேன்?''

''நிச்சயம் சொல்வேன். அவருடைய உள்ளத்தின் தூய்மையை அறிந்து வந்திருக்கிறேன் என்பது உண்மைதான். ஆனால் அவருடைய அபிலாஷை என்னால்தான் நிறைவேறும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை; அதற்குச் சாட்சி சந்திரகாந்தஜீ தான்.''

''நீ என்ன சொல்கிறாய்? உன்னால் நிறைவேறாமல் போனால்?—யாரால்?''

''இதோ துறவிகளின் பாட்டு. இந்தக் காகிதத்தில் எழுதியிருக்கிறேன்; பாடட்டுமா?

''ஊதும் குழலில் நாதமில்லை
ஓதும் குரலில் வேதமில்லை.''

''சரிதான், என்னால் பாட முடியாது இதை.''

''குஸுமா, அவருடைய இதயத்தில் நிறைந்திருக்கும் நாதம் ஏனோ வெளிவரவில்லை? இதோ அவருடைய எழுத்தில் நீயே காண்பாய். குழலில் கனிந்திடும் கீதம் என்னால் வெளிவராது; எனக்குத் தெரியும்.''

''நீ சொல்லுவதை நான் புரிந்துகொண்டுவிட்டேன். நீ சம்சாரத்தில் புகுந்து எவ்வளவோ துக்கங்களை அநுபவித்து விட்டாய். அதுவே எனக்குப் படிப்பினையாய், எச்சரிக்கையாய் அமைந்துவிட்டது. நீ போன வழியில் நான் செல்லமாட்டேன்.''

''அப்படியானால் நான் காட்டுவழியில் தன்னந்தனியளாய் வழித் துணையின்றித் திக்கில்லாமல் திணறத்தான் போகிறேன். வாழ்வில் நலமுறச் செய்யும் மகாசக்தி வியர்த்தமாய் விழலுக்கு இறைத்த நீராய்ப் போகும். நானோ எவருக்கும் பயனின்றித் தடாகத்தின் அடியிலே மூழ்கிக் கிடப்பேன்; பட்டு நீல வானத்திலே பறித்த பொன் நிலவைப் பார்த்தவண்ணம் வாழ்வை ஏக்கத்துடன் கழிப்பேன். அந்த நிலவுக்கு யார் துணை? அதனது பயணத்திலே யார் உடன் வருவார்? தூரத்திலே, எட்டி நிற்கும் நான் ஏங்கி என்ன பயன்?''

''என்ன செய்வது? அது உன் துர்ப்பாக்கியம்.''

''சுந்தரகிரியில் நிலவு ஒளியின்றி மங்கி மறைந்து ஒளிந்திருப்பதை இந்தக் குமுதம் கண்டு எப்படிச் சகிக்கும்? வாடி வதங்கி மடிந்துவிடும்!''

''அது உண்மைதான்.''

''அப்படியானால், குஸுமா, மறைந்திருக்கும் வெள்ளை மேகங்களை விலக்கி நிலவுக்கு ஒளிதந்து குமுதத்திற்கு நீயல்லவா உயிர் மூட்டவேண்டும்? இந்த மலர் மணம் வாடிவிட்டது என்றாலும், உயிர் நிறைந்திருக்கிறது; சில நாள் வாழும்; பின்னர் உதிர்ந்து போகும். ஆனால் வாழப்போகும் சில நாட்கள் ஏன் வாடி வதங்க வேண்டும்?''

குஸுமா சிந்தனையில் மூழ்கிப்போனாள்.

''குமுதா, நீ சொல்வதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். நீ யொன்றும் களங்கமுறவில்லை; மலரின் மணம் ஒன்றும் வாடி விடவில்லை. அப்படியும் உன்னிடம் களங்கத்தைப் பார்ப்பவருக்கு நீ ஒன்றும் நன்மை புரியவேண்டாம்; அவர் நன்மையுறுவதற்கு அருகதையும் கிடையாது......சரஸ்வதிசந்திரரை மகிழச் செய்ய என்னிடம் சக்தியும் இல்லை. நான் இப்படியே

காலங் கழிப்பேன்; இதுவே எனக்குப் பரம சுகம். பேசுவதானால் வேறு எதைப்பற்றியாவது பேசுவோம்.''

''நான் என்ன வேறு சொல்லட்டும்? என் பேச்சால் நீ சோர்வடைந்துவிட்டாய்! நான் வேறு என்ன சொல்வேன்? என்னுடைய துக்கத்தைத் தீர்க்க நீ மனம் ஒப்ப மறுக்கிறாய்; நான் இனி இங்கே விதவையர் மடத்திலே நாளைக் கழிப்பேன். ஆனால் அவர்! வீடும் வெளியும் துறந்து பொன்னும் மணியும் இழந்து காதலையும் தியாகம் செய்து அல்லலுறுகிறார்; அவருடைய வாழ்வினை நிறைவுபெறச் செய்யச் சகதர்மிணியும் இல்லை. அதனால், சூன்யமான வாழ்வில் உலகிற்கு என்ன நலம் புரிந்திட முடியும் அவர்? இதோ யதுச்ருங்கனின் சந்நிதானத்தில் பிரம்மசாரியாய், நறுமணம் மிக்க இந்த மலர், கொதிக்கும் கருமணலில் கருக வேண்டுமா? நான் வேறு என்ன வழி சொல்லட்டும்?''

''உன் வழியே நான் சென்றால் நீ என்ன செய்வதாக உத்தேசம் செய்திருக்கிறாய்?''

''என்னுடைய கணவர், மாமியார்-இருவரின் மறைவால் துயரமடைந்து சந்நியாசம் எடுத்துக்கொள்ள நிச்சயித்திருக்கும் என் மாமனாரிடம் செல்லுவேன்; அவரது மனத்துயர் ஆறுதல் அடையச் சேவை புரிவேன். என்னுடைய நாத்தி அலக்கிஷோரியுடன் வாழ்வேன்; அவளுடைய வாழ்வில் இன்பம் மலரத் தொண்டு புரிவேன். சில ஆண்டுகள் அம்மாவுடனும், சில ஆண்டுகள் சந்திராவளிமையா, மோஹினிமையா ஆகியவருடனும் கழிப்பேன். உன்னையும் சுவர்ணபுரிக்கு அழைப்பேன். யாவரும் இன்புற்றிருப்பார்கள். அதைவிட வேறு என்ன வேண்டும்?''

''உன்னுடைய திருமணத்தைச் சந்நியாசிகள் மனம் ஒப்பாத மணம் என்றார்கள். நீ எனக்குப் போதிக்கிற திருமணமும் அப்படித்தானே?''

''சரஸ்வதிசந்திரரிடம் உனக்கு நேசமில்லை என்று சொல்லவில்லையே?''

''பொய், பொய்!''

''சந்திரகாந்தஜீ உன்னைப்பற்றி எவ்வளவோ சொல்லியிருக்கிறார். நானும் புரிந்துகொண்டேன். உனக்கு நினைவிருக்கிறதா? என்று அவர் வந்தாரோ, அன்று நீ சின்னஞ்சிறுமியாக இருந்தாய்; உனது உள்ளத்தில் அன்பு விதையை விதைத்து விட்டுப் போய்விட்டார். அது உன்னையும் அறியாமல் தளிர் விட்டிருக்கிறது.''

''சந்திரகாந்தஜீ என்னைப்பற்றி என்ன அறிவார்? ல்லோரும் சரஸ்வதிசந்திரரின் மீது குற்றம் கண்டபோது

நான்மட்டும் அவருக்காகப் பரிந்து பேசினேன்; அது தப்பாகி விட்டது. அவர்மேல் எனக்குப் பிரியம் என்று தப்பர்த்தம் கொண்டுவிட்டார்கள்.''

''சுயநலமில்லாத அன்பு என்றுதான் உன்னுடைய பரிவைக் குறிப்பிடவேண்டும். துறவிகள் இத்தகைய பிரேமையைத்தான் பவித்திரமாகக் கருதுகிறார்கள்.''

''நீயும் உன் துறவிகளும் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். என்னிடத்தில் கொஞ்சங்கூடப் பிரியம் கிடையாது.''

''என்னால் கொஞ்சங்கூட நம்பமுடியாது.''

''சரி, பேச்சை விடுவோம். உள்ளர்த்தம் எல்லாம் கண்டு பிடிக்கக் கற்றுக் கொண்டுவிட்டாய்; துறவிகளுடன் சேர்ந்திருந்த வாசனையோ?''

''இல்லை, பேச்சை நிறுத்திவிடுவோம். ஆனால் ஒன்று: எனக்காக நான் சொன்னவற்றை சற்றே யோசித்துப் பார்.''

''நிச்சயமாய். அத்துடன் அப்பா, அம்மா, சரஸ்வதி சந்திரன் ஆகியவர்களும் நீ சொல்லியிருக்கிற யோசனைபற்றிச் சிந்திக்கட்டும். எல்லாரும் ஒரே மனமாக உனது யோசனையை ஆதரித்தால் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். சரிதானா!''

''ஓ, ரொம்ப சரி.''

''அவ்வளவு நிச்சயம் என்று நினைக்காதே! ஒருவர் சம்மதிக்காது போனாலும் போதும்; உன் யோசனைப்படி நடக்க மாட்டேன்... மறந்துபோய்விட்டேனே, தாத்தாவையும் கேட்க வேண்டும். ஆனால் சித்தியைமட்டும் கேட்கவேண்டாம்.''

''சரி; அப்படியானால் என் இச்சைப்படிதான் நீ நடப்பாய்.''

''ஏன்?''

''இதோ, என்னுடன் வா'' என்றவண்ணம் குஸுமாவைக் குமுதசுந்தரி வெளியே அழைத்துவந்தாள். கூடாரத்தின் வெளிப்பாகத்திலே மலர்ந்திருந்த ரோஜா ஒன்று காற்றில் அசைந்தாடிக்கொண் டிருந்தது.

''குஸும், இதைப் பார்த்தாயா? அதோ வீசிக்கொண்டிருக்கும் சூறைக்காற்றில் பறக்கும் மணலையும் பார். இந்த இரண்டிலும் எதனது வாழ்வு அழகான வாழ்வு?''

குஸுமா பெருமூச்சு விட்டாள்.

''என்னால் கொஞ்சங்கூட யோசிக்கமுடியாது. உன்னுடைய பேச்சே என் புலன்கள் யாவற்றையும் செயலறச் செய்து விட்டது. என்னுடைய மனவேதனையில் இப்போது எனக்கு ஒன்றும் தோன்றவில்லை.''

''இதோ இந்த மணல் சுதந்திரமாகக் காற்றில் பறக்கிறது. இந்த ரோஜாவோ வாழ்வில் அழகு ஊட்ட மலர்ந்திருக்கிறது; ஆனால் முட்களுக்கிடையே அகப்பட்டுத் தவிக்கிறது.''

குஸுமா பேசவில்லை.

''மக்கள் சுதந்திரத்தைத் தேடி அலைகிறார்கள். ஆனால் பயன் என்ன? காற்றில் தன்னிச்சைப்படி பறக்கும் மணலினால் வாழ்வில் என்ன பலன்?....''

''அது உண்மைதான்.''

''சிலர் வாழ்வுச் சிக்கலில் அகப்பட்டு ரோஜாவைப்போல, தாமரை மலர்போல காற்றிலும் நீரிலும் தத்தளிக்கிறார்கள். சரஸ்வதிசந்திரன் சுதந்திரத்தை விரும்பியதில்லை; ஆனாலும் தனிமையையும், ஆன்மநலனையும் விரும்புகிறார். நீயோ துறவியின் சுதந்திரத்தை நாடுகிறாய். உன்னையும் சரஸ்வதி சந்திரனையும் ரோஜாவாகவும் தாமரை மலராகவும் காண விரும்புகிறேன். நீ சுதந்திரமாக இருந்து என்ன செய்வாய்? எதற்காக வாழ்வை நீ தனியாய்க் கழிக்கவேண்டும்?''

''ஸம்ஸ்கிருதம் வாசிப்பேன்; அப்படியே நாட்களைக் கழிப்பேன்.''

''பிறர்க்கும் உன் வாழ்வு நலம் தரவேண்டாமா? வெறும் உன் மனத்திருப்திக்கான வாழ்வு, நிறைந்த வாழ்வாகுமா? இந்தக் கரிய மேகங்களைப் பார். ஸுபத்ரா நதியும் நீலவானும் கூடிக் களித்ததில் விளைந்த இனிய அமுதப் பெருக்கு இந்த மலைச் சிகரங்களை மூடிநிற்கிறது.

''ஸுபத்ரா நதியின் நீர் இனிய நீரானாலும் தான் பாயும் பிரதேசமன்றி மற்றப் பிரதேசத்திற்கு நலன் தருவதில்லை; நலன் தரவும் கூடுவதில்லை. விரைந்தோடிக் கடலில் கலந்தபோதும் கடல் நீரின் உவர்ப்பு நீங்குவதில்லை; இனிப்புப் பெறுவதில்லை. ஆனால் வந்த நீர் உவர்ப்புச் சுவை பெற்றுவிடுகிறது. அதுதான் அத்வைத பாவம். கடலின்மீது பாய்மரக் கப்பல்கள் அலைபாய்ந்து செல்லுகின்றன. அந்தக் கப்பல்களைவிட உயர்ந்து நீலவானுடன் நீர்நிறை கருமேகங்களாக மாறிவிடுகிறது, கடலின் தண்ணீர். குஸுமா, கன்னியாக நீ வாழ்ந்து என்ன பயன்? தனியாகப் பாயும் நீரில் வெறும் மணலே நிறைந்து கலக்கமுறுகிறது; மனிதரின் காலடியிலே பட்டு அசுத்தமடைகிறது; வெயிலில் காய்ந்து உலர்ந்துவிடுகிறது. அதுபோலவே உன் வாழ்வும் பயனற்றதாகிவிடும். ஆகவே, சரஸ்வதிசந்திரன் என்ற கடலில் கலக்கும் ஸுபத்ரா நதியாகி வாழ்வில் நிறைவடைவாய்.

''என்றால் அது முடியாத காரியமாகிவிட்டது. நீதான் கங்கையாக வேண்டும். நான் யமுனை ஆவேன். நீ கங்கையாக மாறாது போனால் யமுனையில் நீர் ஓடாது; அது மணற் படுகை யாகிவிடும். அவருடைய வாழ்வையும், என்னுடைய வாழ்க் கையையும் ஆனந்தமுறச் செய்வது உன் கையில்தான் இருக்கிறது.

''குஸுமா, நான் வேறு ஒன்றும் சொல்லப் போவதில்லை. நீ உன்னுடைய மனவிருப்பத்தை, முடிவைச் சொல்லிவிடு. உன்னை அதிகமாக வற்புறுத்தமாட்டேன். எல்லோரும் ஏகமன தாகத் தீர்மானித்தால் அதன்படி நடக்கத் தயார் என்கிறாய்; ஆனால் உன் மனம் எப்படி முடிவு செய்திருக்கிறது என்றறிய வேண்டாமா? பிறர் கூறுவதால் பணிந்து உன் மனசுக்கெதிராக நீ ஏதும் செய்து மனசைப் புண்படுத்திக் கொள்ளக் கூடாது. துர்ப்பாக்கியவதி குஸுமாவைக் காட்டிலும் துர்ப்பாக்கியவதி குமுதசுந்தரியே தேவலை. தயை செய்து உன் மனசைத் திறந்து காட்டிவிடு. இந்தக் குமுதசுந்தரிதான் துரதிருஷ்டம் வாய்ந் தவள். அவளுடைய கதி உனக்கு ஏன் வரவேண்டும்? அவள் தான் துக்கத்தில் பிறந்தாள்; துக்கத்தில் வாழ்ந்தாள்; துக்கத்தில் மரிப்பாள். நீ வாழ்ந்து வளம் பெறவேண்டும். என்னைப் போல நீ துயருறக் கூடாது. ஆகவே, உன் மனோரதத் தைச் சொல்லிவிடு.''

''குமுதா! நீ சொல்லுவது உண்மையே; அநுபவம் நிறைந்த உன் மொழிகளை ஒப்புக்கொள்கிறேன். என்னுடைய நலனையே நீ விரும்புகிறாய், அதற்காகவே இந்த வழியைக் காட்டுகிறாய் என்பதையும் அறிவேன். அதன்படியே நடப்பேன். ஆனால் என்னுடைய மனவளர்ச்சியை நான் அறியேன். ஆன்ம வளர்ச் சிக்கு என்ன செய்யவேண்டும் என்பதற்கான மருந்தை நீதான் தரவேண்டும்.''

குமுதசுந்தரி அந்தச் சொற்களைக் கேட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்தாள்; ஆசையுடன் தங்கையின் கழுத்தைக் கட்டி அணைத்துக்கொண்டாள். இருவரும் அப்படியே நேரம் போனது தெரியாமல் பேசிக்கொண்டே இருந்தார்கள். கடைசியில் கதிரவன் மலைவாயில் விழுந்தவுடன் குமுதசுந்தரி விடை பெற்றுக் கொண்டாள்.

24. "அடி! என் கண்மணி குஸுமா!"

சரஸ்வதிசந்திரனும் சந்திரகாந்தனும் தனியான பர்ண குடியில் தங்கினார்கள். அவர்கள் இருவருக்கும் பம்பாயிலிருந்து

கடிதங்கள் வந்திருந்தன. புலவர் துரை லக்ஷ்மீநந்தனர், ஹரிதாஸர், உத்தத்லால், தரங்கசங்கர் ஆகியோர் அவனுக்கு எழுதியிருந்தார்கள். எல்லோருக்கும் அவனைப்பற்றிய செய்தி எட்டியிருந்ததால் அவனைச் சந்திக்கச் சுந்தரகிரிக்கு வருவதாக நிச்சயம் செய்திருந்தார்கள்.

அன்று மாலை நண்பர்கள் இருவரும் பம்பாயின் பழைய கதைகளைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தபோது கதவு தட்டப்பட்டது. எழுந்து வெளிவந்தபோது துறவியொருவர் கைவிளக்குடன் நின்றுகொண் டிருந்தார்; உடன் சந்திராவளிமையா நின்றுகொண் டிருந்தாள். இரு நண்பர்களும் அவளை வணங்கினார்கள். பின்னர் எல்லோரும் அமர்ந்தார்கள்.

குணசுந்தரியுடன் தான் பேசியதையும், குமுதசுந்தரி குஸுமசுந்தரி இவர்களின் உரையாடலைப்பற்றியும் சந்திராவளிமையா சரஸ்வதிசந்திரனிடம் விவரமாக எடுத்து உரைத்தாள்.

''இரண்டு சகோதரிகளும் நன்கு ஆலோசித்து எல்லோருக்கும் நன்மை தரக்கூடிய முடிவுக்கு வந்திருக்கிறார்கள். என்னுடைய மதுரிமையா எங்களுடன் தங்கி வாழ்நாளைக் கழிப்பாள். குஸுமசுந்தரி உன்னை வந்தடைவாள், கங்கையைப் போல; குமுதசுந்தரியோ யமுனை போல் தனித்து நீர் பிரவகித்து ஓடுவாள். இருவருடைய உள்ளங்களையும் உணர்ந்து வந்திருக்கிறேன். உங்களுடைய முடிவு என்ன?''

சந்திரகாந்தன் மகிழ்ச்சி அடைந்தான்; திகைத்துப்போன சரஸ்வதிசந்திரனைப் பார்த்துச் சொன்னான்:

''நீ காவியுடை அணிந்திருக்கவேண்டும் என்று இன்னமும் விரும்பினால், குஸுமசுந்தரியும் அவ்வாறே துறவறம் பூண்டு விடுவாள். நாளை உன் தந்தை வர இருக்கிறார். இரண்டு சகோதரிகளின் வேண்டுகோளையும் ஏற்றுக்கொண்டு எல்லோரையும் மகிழ்ச்சியுறச் செய்வாயாக. உன் மனம் கூடாது என்றாலும் மனத்தைப் பலியிட்டுத்தான் ஆகவேண்டும். நீயும் குமுதசுந்தரியும் உங்களிருவரைப்பற்றிய எதிர்காலத்தை நிர்ணயிக்க என்னிடந்தானே பொறுப்பை விட்டீர்கள்? இதோ நான் சொல்வதைக் கேள்: சந்திராவளி இறைஞ்சி நிற்கிறாள். அவளைத் திருப்தியுறச் செய்.''

சந்திராவளி, ''இதைப்பற்றி விஷ்ணுதாஸரின் சீடர்களான ஞானபாரதி, விஹாரகிரி இருவரது எண்ணத்தையும் அறிந்து வந்திருக்கிறேன். நான் சொல்லுவதை அவர்களும் ஆதரிக்கிறார்கள். மடத்திலுள்ள அனைவரும் நீங்களும் இதே முடிவுக்கு வருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்'' என்றாள்.

"ஆமாம்; அவர்கள் என்மீது மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்கள்."

"இதோ திவான் அவர்களின் தந்தையாரும் திவான் அவர்களின் மனைவியாரும் உங்களைப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்களுக்கு என்ன சொல்லட்டும்?"

"மையா, அவர்களிடம் நான் காவியுடை பூண்டுவிட்ட துறவி என்று சொல்லுங்கள். அவர்களுடைய ஒரு புத்திரி என்னால் பாழடைந்து போனாள். இன்னொரு பெண்ணைப்பற்றி, என்னை மறுமுறை வீரனாகக் கொள்ளுமுன்னர் அவர்கள் தீவிர ஆலோசனை செய்யவேண்டும். அதற்குப் பிறகு குமுத சுந்தரியும் குஸுமசுந்தரியும் ஏகமனதாக எது விரும்பினாலும் அதையே ஏற்றுக்கொள்ளுவேன்."

"நல்லது; என்னுடைய பூரண ஆசி உங்களுக்கு உண்டு" என்று மையா கிளம்பினாள். எல்லோரும் எழுந்தார்கள். சரஸ்வதிசந்திரன் கரங் குவித்து அவளை வணங்கினான்.

"சந்திராவளிமையா, தாங்கள் தர்மத்தின் அபூர்வமான உருவம்; தங்களுடைய சந்நிதானத்தில் உபாசகனாக நிற்கிறேன். உங்களிடத்திலே இவ்விரண்டு விளக்குகளும் என்னால் அணையாமல் இருக்க வேண்டும் என்றே ஆசி தாருங்கள்."

"அப்படியே" என்று சந்திராவளி நடந்தாள். நண்பர்கள் இருவரும் இரவு முழுதும் மௌனமாய்க் கழித்தார்கள். ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளவில்லை. சந்திரகாந்தன் பரம அமைதியுடன், கனவு ஏதும் இல்லாமல் நித்திரையில் ஆழ்ந்தான். சரஸ்வதிசந்திரன் நடுநடுவே எழுவதும், தூங்குவதுமாக நேரத்தைக் கழித்தான்.

"பெண்களின் இரக்க உணர்ச்சிக்கு எல்லை ஏதும் இல்லை என்பது எவ்வளவு உண்மை! இல்லாவிட்டால் எதற்காக நீ பதிவிரதா தர்மத்தைத் துறந்து துறவறம் பூணவேண்டும்? என் மீதுள்ள அன்பால், என்னை இந்தக் கதியில் பார்க்கக்கூடாது என்ற விருப்பத்தால்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறாய்."

பொழுது புலர்ந்தது. லக்ஷ்மீநந்தனரும், குமானும் பத்து மணி சுமாருக்கு வருகிறார்கள் என்ற செய்தி கிடைத்தது. முதலில் ஹரிதாஸர் வந்தார். சரஸ்வதிசந்திரனின் உடையைக் கண்டு மனம் கொள்ளாமல் கண்ணீர் உகுத்தார். தந்தை காவியுடையைப் பார்த்தால் மனம் தாளமாட்டார். ஆகவே, காவியுடையைக் களையத்தான் வேண்டும் என அவர் அவனை வற்புறுத்தவே அரைகுறை மனத்துடன் ஒப்புக்கொண்டான். காவியுடையைக் களைந்து சாதாரண உடை அணிந்துகொண்டான்.

''அப்பாவுக்கு முன்னால்தான் இப்படி; மற்றச் சமயங்களில் காவியுடைதான். ஆகவே, இதைப் பத்திரமாக வைத்திருங்கள்'' என்று ஹரிதாஸரிடம் சொன்னான்.

லக்ஷ்மீநந்தனரை எல்லோரும் எதிர்கொண்டழைத்தார்கள். புத்திர சோகத்தால் மெலிந்திருந்த அவர் மகனைக் கண்டதும் பேச்சு மூச்சற்றுப் போனார்; பொலபொலவென்று கண்ணீருகுத்தார். துறவிகள் சரஸ்வதிசந்திரனின் உண்மைக் கதை அறிந்து புதிய குறுகுறுப்புடன் அவனைச் சூழ்ந்துகொண்டார்கள்.

இரண்டு நாட்கள் கழித்து வித்யாசதுரர் வந்து சேர்ந்தார். அவரைத் தொடர்ந்து அடுத்த இரண்டு நாட்களில் புத்திதனரும் வந்தடைந்தார். பம்பாயிலிருந்து நண்பர்கள் கூட்டமும் வந்தது. வித்யாசதுரர் எல்லோருக்கும் தங்க வசதியாகக் கூடாரங்கள் அமைத்திருந்தார்.

சரஸ்வதிசந்திரன் - குஸுமசுந்தரி இவர்களின் விவாகம் துறவிகள் வகுத்திட்ட முறைப்படி நடந்தேறியது; பாக்கிச் சடங்குகள் பெற்றோர்கள் விருப்பப்படி நிகழ்ந்தன.

மணமகள் காவியுடை அணிந்து விஷ்ணுதாஸரைப் பணிந்தாள். லக்ஷ்மீநந்தனர் ஸ்வாமிகளுக்குப் பண முடிப்புத் தந்தார். ஆனால் அந்தப் பணத்தின் பாதியை ஸுரக்கிராமத்தில் உள்ள கோவில் திருப்பணிக்குத் தருமாறு உத்தரவிட்டார் ஸ்வாமிகள். புத்திதனர் பிரமாததனனுக்காகச் சேர்த்து வைத்திருந்த செல்வத்தின் ஒரு பகுதியைக் குஸுமாவிற்கு அன்பளிப்பாக வழங்கினார். பெண் புக்ககம் கிளம்பினபோது குணசுந்தரியும் சுந்தரகௌரியும் கண்ணீர் உகுத்தார்கள். வித்யாசதுரர் மௌனமே உருவாக நீர் நிறைந்த கண்களுடன் காட்சியளித்தார். நிரபராதியாக விடுதலைபெற்ற அர்த்ததாஸனிடமிருந்து மீட்டு விட்ட சரஸ்வதிசந்திரனின் முத்திரை மோதிரத்தைக் குஸுமசுந்தரிக்கு அணிவித்தார்.

குமானிடம் எவ்வளவோ மாற்றம்! தன்னுடைய ஒரே குமாரன் தனநந்தனின் மறைவுக்குப் பிறகு மனம் கனிந்து பச்சாத்தாபம் மேலிட்டுப் போனாள். இனி யார் வாரிசு? ஒரே ஒரு பிள்ளை சரஸ்வதிசந்திரன்தானே!

ரத்னநகரியிலிருந்து கிளம்பியபோது ஒரு பக்கம் குஸுமா; இன்னொரு புறம் வித்யாசதுரர், குணசுந்தரி, சுந்தரகௌரி ஆகியோர் இருசாராரிடமும் மனமுருக்கும் வேதனை. என்ன செய்வது? பிரியா விடைதான். குஸுமாவின் மனம் குமுதசுந்தரியினிடத்தில்தான். குமுதசுந்தரி குஸுமசுந்தரிக்கு உற்சாகமூட்டச் சிறிது தூரம் வண்டியில் உடன் வந்தாள். பின்னர் இறங்கித் திரும்பிச் செல்ல எத்தனித்தபோது குஸுமா

விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். தழுதழுக்கும் குரலில் குமுத சுந்தரி தைரியம் சொன்னாள்.

''குஸுமா, கொஞ்சமும் கவலைப்படாதே! சில நாட்கள் கழித்து உன்னைச் சந்திக்க நானே வருவேன். அற்புதமான ரத்தினத்தை உனக்குத் தந்திருக்கிறேன். உயிருக்கு உயிராய்க் காத்து வா; உன்னுடைய சௌபாக்கியம் நிலைத்து நிற்கட்டும்.''

இரு சகோதரிகளும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டார்கள். குமுதசுந்தரி சரஸ்வதிசந்திரனின் காலடியில் விழுந்து வேண்டினாள்.

''மகாத்மா! மீண்டும் உலக வாழ்க்கையின் மாய வலையில் உங்களைப் புகுத்திவிட்டேன். அதற்காக என்னை மன்னித்துவிடுங்கள். நாம் இருவரும் சேர்ந்து கண்ட கனவு இனி என் சகோதரியின் கனவுமாகும். கனவிலிருந்து விழித்துக்கொண்டபோது தங்கள் சிரத்தை வருடிக்கொண்டிருந்த என்னைத் தாயாகக் கருதினீர்கள். இன்றோ விழித்துக்கொண்டே காணும் கனவில் மீண்டும் அன்னையாகிவிட்டேன்.''

சரஸ்வதிசந்திரன் மெய்ம்மறந்து போனான். அவன் உள்ளம் சிலிர்த்தது.

இரு சகோதரிகளும் மீண்டும் பேசத் தொடங்கினார்கள்:

''குமுதா, நீ அவசியம் பம்பாய்க்கு வரவேண்டும். பெற்றோர்களையும் உன்னையும் விட்டு எப்படித் தனியாக இருப்பேன்?''

''குஸுமா, கணவரைத் தவிர வேறு யார் கதி? அவரே பெண்களுக்கு எல்லாம். உனக்குக் கிடைத்துள்ள மகாத்மாவின் இருதயத்தில் குடிகொண்டு சதா சேவை செய்; அவருடைய மகா யக்ஞத்தில் சகதர்மிணியாகி ஆகுதி ஊற்று. அவரிடமே தாயும் தந்தையும் உற்றவரும் உறவினரும் குடிகொண்டிருப்பதாக மனத்தில் கற்பித்துக்கொள். அவருக்கு நீ தீப ஆரத்தி எடுக்கும்போது உன் இதயத்தில் நான் ஆலயமணியாய் ஒலி எழுப்புவேன்.''

* * *

குஸுமசுந்தரியை அழைத்துக்கொண்டு சரஸ்வதிசந்திரன் பம்பாய் வந்து ஓர் ஆண்டு கழிந்தது. குணசுந்தரியின் கடிதங்கள் அடிக்கடி வந்துகொண்டிருந்தன; மகளும் மருமகனும் நிறைந்த மணவாழ்வு நடத்துகிறார்கள் என்றறிந்து மட்டற்ற மகிழ்ச்சியினால் மனம் பூரித்திருந்தாள். அந்த மகிழ்ச்சியெல்லாம் கடிதங்கள் வாயிலாக வெளிப்பட்டுக் குஸுமசுந்தரியைத் திருப்தியுறச் செய்தன. அரசாங்க அலுவல்களில் ஈடுபட்டிருந்த வித்யாசதுரருக்கு அடிக்கடி கடிதம் எழுத நேரம் இல்லாதுபோன

லும் முடிந்தமட்டும், எழுதும் கடிதங்களில் அநுபவமிக்க நல்லுரையை வழங்கி வந்தார். சுந்தரகெளரியும் குஸுமசுந்தரியும் பழைய மாதிரியே வேடிக்கை விநோதமாகக் கடிதப் போக்குவரத்து வைத்திருந்தார்கள். சரஸ்வதிசந்திரனுக்குச் சில சமயம் அவற்றை வாசித்து அவனை அவள் மகிழச் செய்தாள். சரஸ்வதி சந்திரனிடத்தில் அறிஞர் கூட்டம் மீண்டும் வந்தடைந்தது. அதன்மூலம் குஸுமசுந்தரியின் ஞானமும் கலையுணர்வும் பெருகி மனவளர்ச்சி ஏற்பட்டது. குஸுமா அந்தப் பேரநுபவத்தை அக்காவிற்கும் அம்மாவிற்கும் விவரித்து எழுதிக்கொண் டிருந்தாள்.

குமுதசுந்தரி சுவர்ணபுரி சென்ற பிறகு புத்திதனர் சந்நியாசம் வாங்கிக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டார். மீண்டும் வீட்டுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு குமுதம் அதை நிர்வகித்தாள். புத்தகங்கள் படிப்பதிலும் அக்கம் பக்கத்திலுள்ள பெண்களுக்குக் கல்வி புகட்டுவதிலும் காலம் கழித்தாள். சில நாட்கள் குணசுந்தரியிடம் சென்று தங்கிவிட்டு வந்தாள்; அதேபோல் சுந்தரகிரி சென்று சில காலமும், சந்திராவளியிடம் சில நாட்களும் தங்கிவிட்டு வந்தாள். சில சமயம் அலக்கிஷோரியிடமும் தங்கினாள்.

குஸுமசுந்தரி - சரஸ்வதிசந்திரன் விவாகம் நடந்து ஒரு வருஷகாலம் ஓடிவிட்டது. பம்பாய் சென்று தங்கிவிட்டு வரலாம் என்ற எண்ணம் எழுந்தது குமுதாவுக்கு. குஸுமசுந்தரியிடமிருந்தும் சரஸ்வதிசந்திரனிடமிருந்தும் கடிதங்கள் வந்தவண்ணம் இருந்தன. சரஸ்வதிசந்திரன் உடல் தேறி மன அமைதிபெற்றுத் தனது மனோராஜ்யத்தை நிறைவேற்றுவதாகவும் அவள் அறிந்துகொண்டாள். கல்யாணக் கிராமம் என்ற ஒன்றை அவன் நிறுவ இருப்பதாகவும், அதில் அறிஞர்கள் குடும்பம் வாழப்போவதாகவும் கடிதங்களின்மூலம் தெரிந்துகொண்டாள். அந்த விழாவில் குமுதசுந்தரி கலந்துகொள்ள நிச்சயித்தாள்; உடன் அலக்கிஷோரியும் வர முடிவு செய்தாள்.

பம்பாயில் சரஸ்வதிசந்திரன் கல்யாணக் கிராமம் அமைக்க அறிஞர்களையெல்லாம் அழைத்திருந்தான். விஹாரபுரி, ஞானபாரதி மூலமாக விஷ்ணுதாஸ ஸ்வாமிகளின் ஆலோசனையையும் கேட்டறிந்தான். அந்த ஆலோசனைக் கூட்டத்தில் பெண்களும் குழுமியிருந்தார்கள். குஸுமசுந்தரி தனது கல்வியறிவாலும், கலையுணர்வாலும் எல்லோரையும் கவர்ந்தாள்.

சரஸ்வதிசந்திரனின் வால்கேசுவரம் பங்களாவில் குமான் மிகுந்த அக்கறைகொண்டு அதை விதம்விதமாக அலங்கரித்தாள். பங்களாவின் ஒவ்வோர் அறையையும் அழகுறச் சிங்காரித்தாள்.

புதிய மருமகள் வந்ததன் அதிர்ஷ்டம், வாழ்வு லக்ஷ்மீகரமாக விளங்கியது.

ஆனால் லக்ஷ்மீநந்தனர் ஒன்றில்மட்டும் அதிருப்திகொண்டார். வால்கேசுவரம் பங்களாவில் குமுதசுந்தரியின் உருவப் படத்திற்கு முன்னால் காவியுடை அணிந்து சரஸ்வதிசந்திரன் அடிக்கடி கண்ணீர் உகுப்பதை அவரால் காணச் சகிக்க முடியவில்லை. சில நாட்கள் கழித்துக் குஸுமாவிற்கும் காவியுடை அணிவித்து, காவியுடை அணிந்த குமுதசுந்தரியின் புது உருவப் படத்திற்கு முன்னால் தானும் மனைவியுமாக வணங்கி வருகிறான் சரஸ்வதிசந்திரன் என்பதும் அவர் காதில் படாமல் இல்லை. அதனால் அவர் சற்றே மனம் வருந்தினார்.

கல்யாணமாகி ஓராண்டு ஆனபிறகு வால்கேசுவரம் பங்களாவில் சத்தியநாராயண பூஜைக்கு ஏற்பாடு செய்தான் குமான். நண்பர்களும் உறவினர்களும் வந்து சூழ்ந்தார்கள். அன்று குமுதசுந்தரியும் அலக்கிஷோரியும் வருவதாக இருந்தார்கள். ரெயில் நிலையத்திற்கு அவர்களை எதிர்கொண்டழைக்கக் குஸுமசுந்தரியும் ஹரிதாஸரும் சென்றார்கள்.

கல்யாணக் கிராமத்தில் தரங்கசங்கரரும் வீரராவும் தம் குடும்பங்களுடன் வந்து தங்க முடிவு செய்தார்கள். சந்திரகாந்தனும் அதை நிர்வகிக்க முடிவு செய்தான். உத்தத்லால் சரஸ்வதிசந்திரனின் யோசனைக்கு இணங்க இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் சென்றுவர நிச்சயம் செய்தார்.

குமுதசுந்தரியையும் அலக்கிஷோரியையும் அழைத்துக் கொண்டு திரும்பினார்கள் குஸுமசுந்தரியும் ஹரிதாஸரும். அவர்கள் வருகைக்காகப் பாண்டு வாத்தியம் ஏற்பாடு செய்திருந்தான் குமான். வாத்திய இசை முழங்கியது. சரஸ்வதிசந்திரன் வாயிற்படியில் அவர்களை வரவேற்றான்; குமுதசுந்தரியின் நலனைக் கேட்டறிந்தான்.

பங்களாவின் பலப்பல அறைகளில் விதம்விதமான ஏற்பாடுகள். ஒன்றில் ஹரிகதை; இன்னொன்றில் பஜனை; மற்றொன்றில் கோலாட்டமும் கும்மியும் - இப்படியாகப் பலவற்றில், கூடியிருந்தவர்கள் அனைவரும் ஈடுபாடு காட்டினார்கள். சரஸ்வதிசந்திரன் மாடியில் சமுத்திரத்தை நோக்கியிருந்த பலகணியைத் திறந்து சாய்வு நாற்காலியில் சற்றே கண்ணயர்ந்தான். அவனுடைய கனவில் சுந்தரகிரி எழுந்தது; அங்கே குஸுமசுந்தரியுடன் பேசினான்:

''இந்த உலகம் வறுமையில் வாடுகிறது. உடுக்க உடையும் உண்ண உணவும் இல்லாமல் தவிக்கும்போது நமக்குச் சித்திரான்னங்களும் பளபளக்கும் உடைகளும் எதற்கு?'' - அவன் அப்படிச்

சொன்னமாத்திரத்தில் இருவருடைய உடைகளும் காவி உடைகளாக மாறின.

கீழே இறை வழிபாடு முடிந்தது. ஆரத்தியையும் பிரசாதத்தையும் கணவனுக்கு எடுத்துச்செல்லுமாறு குமான் குஸுமாவை அனுப்பினாள். அவ்வாறே குஸுமா மாடிக்கு வந்தபோது சரஸ்வதி சந்திரன் உறங்கிக்கொண்டிருந்ததைக் கண்டு நின்றாள். அவள் வந்ததையும் உணராமல் ஆழ்ந்த நித்திரையில் மூழ்கியிருந்த அவனது முகத்தின் அமைதியில் மெய்ம்மறந்து நின்றாள்.

அழகான, இனிய முகம்! குஸுமா தன்னை மறந்து தெய்வத்திற்கு ஆரத்தி எடுப்பதுபோல் தனது கண்ணான கண்கண்ட தெய்வத்திற்குத் தீப ஆராதனை செய்தாள்.

'எங்கே குஸுமா, மாடிக்குப்போனவள் இன்னும் வரவில்லையே!' என்று குமான் தானாகவே மாடிக்கு வந்தாள். அங்கே கண்ட அந்த அற்புதமான காட்சியால் ஆனந்தம்கொண்டு கணவரான லக்ஷ்மீநந்தனரிடம் செய்தி தெரிவிக்க விரைந்தோடினாள்.

குஸுமா ஒரு வேளை தனியாக இருக்கலாமோ என்று எண்ணி மாடிமேல் வந்த குமுதசுந்தரி தான் கண்ட காட்சியால் பேரானந்தம் அடைந்தாள். தனது முயற்சி பூரண வெற்றிபெற்றுவிட்டது என மனப் பூரிப்படைந்தாள்.

குஸுமசுந்தரிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? இன்னும் உணர்வு வரவில்லையா? தீப ஆராதனையுடன் அவள் பாடினாள், கண்ணபிரானைக் கொஞ்சும் கோபியர் போல.

வெளியே கடல் அலைகள் முழங்கின; அதிலே இனிமை. காற்றுத் தவழ்ந்தது; அதிலே இனிமை. எங்கும் இனிமை!

குமுதசுந்தரியின் உள்ளம் இனிமையால் நிறைவுபெற்றது. அவளுடைய உதடுகள் முணுமுணுத்தன: ''அடி என் கண்மணி குஸுமா!''

முற்றும்